
# 1975 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் - 57

**09.01.1975 எதிர்பார்த்திருப்பதற்குப் பதிலாக ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!**

**16.01.1975 ஜுவாலா ரூப நிலை!**

**18.01.1975 சாட்சாத்கார மூர்த்தி மற்றும் ஃபரிஷ்தா ஆவதற்கான அழைப்பு!**

**23.01.1975 சுயமரியாதையின் ஆசனத்தில் அமர்ந்திருந்து காரியம் செய்பவர் தான் மகான் ஆவார்!**

**29.01.1975 பகுத்தறியும் சக்தியின் உபயோகத்தினால் வெற்றி!**

**30.01.1975 ஒரு நொடியில் வியக்கத்திலிருந்து அவ்யக்தம் ஆவதின் வேகம்!**

**01.02.1975 ஈஸ்வரனின் துணையின் மற்றும் அன்பு நிறைந்த ஆழ்ந்த நினைவு அக்னியின் அனுபவம்!**

**02.02.1975 சுயசிந்தனையாளர், நற்சிந்தனையாளர் மற்றும் உலகை மாற்றம் செய்பவர்!**

04.02.1975 ஞானத்தை தன்னுள் நிரப்புவதினால் தான் விலைமதிக்க முடியாத முத்து மற்றும் அளவில்லா சக்தியின் பிராப்தி ஆகிறது!

05.02.1975 தூய்மை பிரத்யக்ஷதாவின் முன்னோடி மற்றும் தனித்தன்மையின் (பர்சனாலிட்டி) பிறப்பிடமாகும்!

07.02.1975 திருப்தி தான் சம்பூர்ண நிலையின் அடையாளம் ஆகும்!

08.02.1975 நிச்சயம் என்ற ஆசனத்தில் ஆடாத நிலை!

09.02.1975-1 ஆன்மீக சக்திகள் மூலமாக உலக மாற்றம் ஏற்படுவது எப்படி?

09.02.1975-2 அபகாரத்தை உபகாரமாக மாற்றம் செய்யுங்கள்!

10.02.1975 அனைத்து சக்திகளுடன் சேவையில் சமர்ப்பணம்!

11.02.1975 மாயாவுடன் யுத்தம் செய்யும் பாண்டவர்களுக்கான தாரணைகள்!

**02.08.1975 வெளிநாடுகளில் ஈஸ்வரிய சேவைக்கான மகத்துவம்!**

**03.08.1975 சிவசக்தி மற்றும் பாண்டவ சேனை தயாராக வேண்டும் என்பதற்கான எச்சரிக்கை!**

**29.08.1975 இப்பொழுது விதியின் நிலையைக் கடந்து சித்தி சொரூபம் ஆக வேண்டும் (ஜென்மாஷ்டமி -கிருஷ்ண ஜெயந்தி அன்று)!**

**01.09.1975 சமீபம் மற்றும் சமமான நிலையின் நுண்ணியம் மற்றும் மகான்தன்மை!**

**02.09.1975 இதயம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் தான் சத்யுக உலக இராஜ்ய அதிகாரி ஆவார்!**

**05.09.1975 ஃபரிஷ்தா சொரூபத்தின் நிலை!**

**06.09.1975 மூன்று இணைந்த சொரூபம்!**

**09.09.1975 இகழ்ச்சியை புகழ்ச்சி என்று புரிந்து கொண்டு இரக்கமனம் உடையவர் ஆகுங்கள்!**

**10.09.1975 ஞானம் நிறைந்த மற்றும் சக்தி நிறைந்த ஆத்மா தான் வெற்றி அடைவார்!**

**13.09.1975 உலக மாற்றம் தான் பிராமண வாழ்க்கையின் முக்கியமான கடமை ஆகும்!**

**14.09.1975 அழியாத ஆசனதாரி மற்றும் மகாகாலனாகி ஒருங்கிணைந்து தயாராகும் சக்தியை உபயோகப்படுத்துங்கள்!**

**18.09.1975 மாயாவின் சுழல்களிலிருந்து விலகியிருந்து, சுயதரின சக்கரதாரியானவர் தான் எதிர்காலத்தில் வெண் கொற்றக் கொடையுடையவர் (ராஜா) ஆகிறார்!**

**19.09.1975 சக்திகள் மற்றும் பாண்டவர்களின் விசேஷங்கள்!**

**20.09.1975 சக்தியிருந்தபோதிலும் வாழ்க்கையில் வெற்றி மற்றும் திருப்தி ஏன் இருப்பதில்லை!**

**21.09.1975 ஃபரிஷ்தா என்றால் யாருக்கு ஒரு தந்தையைத் தவிர மற்ற ஆத்மாக்களுடன் எந்த ரிஷ்தாவும் (உறவும்) இல்லை என்பதாகும்! (டீச்சர் சகோதரிகளுடன்).**

**22.09.1975 சுவமானத்தில் (சுயகௌரவத்தில்) நிலைத்திருப்பது தான் அனைத்து பொக்கிஷங்கள் மற்றும் குஷியின் சாவி ஆகும்!**

**27.09.1975 எல்லையற்ற வைராகி, தியாகி, சேவாதாரி தான் விஷ்வ மகாராஜன்!**

**30.09.1975 முழு கல்பத்திலும் விசேஷ (வாழ்க்கை) பங்கைச் செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களின் விசேஷங்கள்!**

**01.10.1975 ஏகாந்தம், ஏகாக்ரத நிலை மற்றும் திட எண்ணத்தினால் ஸித்தியின் பிராப்தி! (2)**

**03.10.1975 விசால ரூபத்தில் சேவை செய்வதற்காக விசால புத்தி உடையவர் ஆகுங்கள்!**

**04.10.1975 ஃபரிஷ்தா நிலையின் அனுபவம் செய்வதற்காக தன்னை அவதரித்த ஆத்மா என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். மேலும் உறுதியான எண்ணம் என்ற தீக்குச்சியினால் பலஹீனங்கள் என்ற இராவணனை எரித்து விடுங்கள்!**

**07.10.1975 அனைத்து அதிகாரம் மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் தான் இராஜரிஷி ஆவார்! (2)**

**08.10.1975 மாஸ்டர் ஞான சொரூபம் ஆவதற்கான பிரேரணை (தூண்டுதல்)! (2)**

**11.10.1975 அந்த்வாஹனம் என்றால் அவ்யக்த ஃபரிஷ்தா ரூபத்தில் வலம் வருவது! (2)**

**12.10.1975 புகார்களை முடிவுகட்டி முழுமையாக ஆவதற்கான பிரேரணை (தூண்டுதல்)!**

**13.10.1975 சங்கம யுகத்தில் சேர்ந்தே இருப்பது என்பது முழு கல்பத்திற்கும் ஆதாரம் ஆகி விடுகிறது!**

**15.10.1975 ஆத்மாவை வதை செய்யும் மகாபாவியாக ஆகாமல் இரட்டை அஹிம்சைவாதியாக ஆவதற்கான யுக்திகள்! (2)**

**16.10.1975 எண்ணத்தின் சக்தியைக் கட்டுப்படுத்தி சித்தி சொரூபம் (வெற்றி நிறைந்தவர்) ஆவதற்கான யுக்திகள்! (2)**

**19.10.1975 விருக்ஷபதி கல்ப-விருக்ஷத்தினுடைய அவல நிலையைப் பார்த்தார்! (2)**

**20.10.1975 பத்தியம் இருப்பதன் மூலம் சங்கமயுகத்தின் அனைத்து சுகங்களின் அனுபவம்! (2)**

**21.10.1975 எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு தான் உலக மாற்றத்திற்கான ஆதாரம்!**

**23.10.1975 எதிர்பார்த்திருத்தலை விட்டு விட்டு ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!**

**24.10.1975 ஒவ்வொரு பிரம்மா வாய் வழி ஞானம் பெற்ற பிராமணரும் சைத்தன்ய சாலிகிராமத்தின் கோயில் ஆவார்! (2)**

**25.10.1975 எல்லையற்ற ஆசிரியர் என நினைத்து வைராக்கிய உள்ளுணர்வை தாரணை செய்யுங்கள்!**

**26.10.1975 விகார உடல் என்ற பாம்பு மூலம் அனைத்து வருமானத்தின் அழிவு!**

**27.10.1975 கேள்வி, திருத்துதல் மற்றும் உவமானம் கூறுதல் காரணமாக முயற்சி செய்வதில் தொய்வு நிலை! (2)**

**28.10.1975 நூறு பிராமணர்களை விட உத்தம கன்யா ஆவதற்கான தாரணைகள்! (2)**

**31.10.1975 மகாரதியினுடைய எல்லா விசேஷங்களையும் இந்த வருடத்தில் தாரணை செய்யுங்கள்!**

**06.12.1975 ஆன்மீக விளக்கில் ஆன்மீக விட்டில் பூச்சிகளாகி பலி ஆகி விடுங்கள்!**

**08.12.1975 குழந்தைகளின் விதவிதமான நிலைகள்! (சம்பூர்ணத்தின் அடையாளங்கள்!) (2)**

**09.12.1975 மகாவீர் என்றால் விசேஷ ஆத்மாக்களின் விசேஷங்கள்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 09.01.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எதிர்பார்த்திருப்பதற்குப் பதிலாக ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!

நிராகாரி (உடலற்ற நிலை), ஆகாரி (ஒளிவடிவமான உடல்) மற்றும் சாகாரி (ஸ்தூல உடலில் இருக்கும் நிலை) இந்த மூன்று நிலைகளையும் சமமாக ஆக்கியிருக்கிறீர்களா? எவ்வளவு சாகார ரூபத்தில் நிலைத்திருப்பது சுலபமாக அனுபவம் செய்கிறீர்களோ அந்தளவே ஆகார சொரூபம் அதாவது தன்னுடைய சம்பூர்ண நிலையில் மற்றும் தன்னுடைய அனாதி சொரூபமாகிய நிராகாரி நிலையில் நிலைத்திருப்பதும் சுலபமாக அனுபவம் ஆகிறதா? சாகார சொரூபம் ஆதி சொரூபம் ஆகும் மற்றும் நிராகார நிலை அனாதி சொரூபம் ஆகும். அப்படியானால் ஆதி சொரூபம் சுலபமாக இருக்கிறதா அல்லது அனாதி சொரூபத்தில் நிலைத்திருப்பது சுலபமாக இருக்கிறதா? அது அழியாத சொரூபம் மற்றும் சாகார சொரூபம், மாற்றமாகும் சொரூபம் ஆகும். அப்படியானால் சுலபமானதாக எது இருக்க வேண்டும்? சாகார சொரூபத்தின் நினைவு இயல்பாக இருக்கிறதா அல்லது நிராகார சொரூபத்தின் நினைவு இயல்பாக இருக்கிறதா அல்லது நினைவைக் கொண்டு வர வேண்டியதாக இருக்கிறதா? நான் என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் அதை நினைவில் கொண்டு வருவதற்கான அவசியம் என்ன இருக்கிறது? இதுவரையிலும் நினைவு சொரூபமானவராக ஆகவில்லையா? இது கடைசி நிலையா அல்லது வெகுகாலத்து பயிற்சி உள்ளவர் தான் இந்த நிலையை பிராப்தி செய்து கௌரவமாக தேர்ச்சி பெறுபவராக ஆக முடியுமா? தற்சமயம் முயற்சி செய்பவர்களின் மனதில் கடைசியில் வெற்றியாளராக ஆவோம் மற்றும் கடைசியில் தடையற்றவராக மற்றும் தடையை அழிப்பவராக ஆவோம் என்ற இந்த எண்ணம் உருவாகியிருக்கிறது. இந்த எண்ணம் தான் இராயல் ரூபத்தின் அலட்சியம் ஆகும் அதாவது இது இராயல் மாயாவாகும். இது சம்பூர்ணம் ஆவதில் தடை ஏற்படுத்துகிறது. இந்த அலட்சியம் தான் வெற்றி அடைபவராக மற்றும் சமமாக ஆகுபவராக

ஆகவிடுவதில்லை. இரண்டாவது எண்ணம் - விநாஷம் எப்பொழுது ஏற்படும் என்று எண்ணிக் கொண்டே இருக்கிறீர்கள் இல்லையா? என்னவாகும். எப்படி ஆகும் அல்லது ஆகுமா, ஆகாதா? என்று யோசித்துக் கொண்டே இருக்கிறீர்கள். இது சரியான சொரூபம் இல்லை, இது சந்தேகத்தின் ரூபம் ஆகும். எனவே தான் நேரடி வார்த்தை கூறாமல் எப்படி ஆகும். என்னவாகும் என்று இராயல் வார்த்தைகளில் கூறுகிறார்கள். இந்த சொரூபத்தில் இருந்து யோசிக்கிறீர்கள். நேரம் எவ்வளவு அருகில் வந்து கொண்டிருக்கிறதோ அந்த அளவு தன்னை சத்யுகத்தின் தேவி தேவதைகளின் விசேஷங்களின் அருகில் இருப்பவராக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்களா? விநாஷம் எதற்காக இருக்கும், யாருக்காக இருக்கும்? இதைத் தெரிந்திருக்கிறீர்களா? தீவிரமாக முயற்சி செய்பவர்கள் மற்றும் சம்பூர்ணமாகும் ஆத்மாக்களைப் பொருத்தவரை சம்பூர்ண உலகம் மற்றும் சதோபிரதான இயற்கையின் சுகத்தை அனுபவிப்பதற்காக விநாஷம் ஏற்பட வேண்டும். அப்படியானால் விநாஷம் எப்பொழுது ஏற்படும் என்று கணக்கு பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமா? அல்லது தன்னை சம்பூர்ண சதோபிரதானம் ஆக்குவதற்காக தந்தைக்குச் சமமான தகுதிகளை அடிக்கடி எண்ணிக் கொண்டே இருக்க வேண்டுமா?

விநாஷத்தின் நேரத்திற்காக காத்திருப்பதற்குப் பதிலாக தன்னை இப்பொழுதிலிருந்தே சம்பன்னம் (முழுமை) ஆக்குவதில் மற்றும் தந்தைக்குச் சமமாக ஆவதற்கான ஏற்படுகளில் இருக்க வேண்டும் ஆனால் காத்திருப்பதில் அதிகமாக இருக்கிறீர்கள், பிராப்தியை அனுபவம் செய்பவர்களே இந்த காத்திருத்தலில் இருக்கிறார்கள். மேலும் மற்ற ஆத்மாக்கள் யார் சாதாரண பிராப்தியை அடைபவர்களோ அவர்கள் வரை கூட சூட்சும எண்ணத்தை அனுப்பி வைக்கிறீர்கள். இதன் விளைவாக பெரும்பான்மையான ஆத்மாக்கள் விநாஷம் எப்பொழுது ஏற்படுமோ அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்ற இந்த வார்த்தையைத் தான் கூறுகிறார்கள். பொறுப்பாளராகியிருக்கும் ஆத்மாக்களின் இந்த எண்ண அலைகள் மற்றவர்களை பலஹீனம் ஆக்குவதற்கும், பாக்கியம் இல்லாதவராக ஆக்குவதற்கும் காரணமாகி விடுகிறது. இந்த நேரம் உங்கள் அனைவருக்கும் ஜகத்மாதா மற்றும் ஜகத்பிதாவின் மற்றும் மாஸ்டர் படைப்பவரின் நிலை இருக்கிறது. அப்படி படைப்பவரின் ஒவ்வொரு எண்ணம் மற்றும் உள்ளுணர்வின்

எண்ண அலைகள் தானாகவே படைப்பின் மேல் வந்து விடுகிறது. எனவே தற்சமயம் என்ன காரியம் நான் செய்வேனோ என்னைப் பார்த்து அனைவரும் செய்வார்கள் என்ற இந்த கவனம் மட்டும் வைக்கக்கூடாது ஆனால் கூடவே நான் என்ன எண்ணத்தை வைப்பேனோ, எப்படி என்னுடைய உள்உணர்வு இருக்குமோ அதே போல் சுற்றியிருக்கும் சூழ்நிலையில் மற்றும் மற்ற ஆத்மாக்களின் எண்ண அலைகளில் பரவும். இந்த சுலோகனையும் நினைவில் வைத்துக் கொள்வது அவசியமாகும். இல்லையென்றால் படைப்பவர்களாகிய உங்களுடைய படைப்பு பலஹீனமானவராக அதாவது குறைந்த பதவி அடைபவராக ஆகி விடுவார்கள். படைப்பவரின் குறை படைப்பிலும் தெளிவாகத் தென்படும் எனவே தன்னுடைய பலஹீனமான எண்ணங்களையும் இப்பொழுது பலம் நிரம்பியதாக ஆக்குங்கள். எண்ணத்தின் மூலம் உலகம் படைக்கப்பட்டது என்ற இந்த பழமொழி இந்த நேரத்திற்கான விஷயம் ஆகும். எப்படி எண்ணமோ அப்படி தன்னுடைய படைப்பை படைப்பதற்கான பொறுப்பாளர் ஆவார்கள். எனவே ஒவ்வொரு நட்சத்திரத்திலும் தனித்தனி உலகம் இருக்கிறது என்று வர்ணனை செய்கிறார்கள்.

தன்னுடைய ஆதாரத்தை அனேக ஆத்மாக்களுக்காக நினைவில் வைத்து நடந்து கொள்கிறீர்களா? அல்லது இது பாப்தாதாவின் வேலையா? உங்களுடைய வேலையா அல்லது தந்தையின் வேலையா? பிராப்தியை அடைவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமா? அல்லது தந்தை செய்ய வேண்டுமா? எப்படி பிராப்தியைப் பெறுவதில் கொஞ்சம் கூட குறை வைக்க விரும்புவதில்லை அல்லது பெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் தன்னை யாரையும் விட குறைந்தவராக நினைப்பதில்லை. மாறாக எனக்கும் உரிமை இருக்கிறது என்று நினைக்கிறீர்கள். அதே போலவே ஒவ்வொரு விஷயத்தைச் செய்வதிலும் தன்னை அதிகாரியாக நினைக்கிறீர்களா? அல்லது செய்ய வேண்டிய நேரத்தில் தன்னை சிறியவர்கள் என்றும், இதுவோ பெரியவர்களின் வேலை என்று நினைக்கிறீர்களா? மேலும் பெற வேண்டிய நேரத்தில் சிறியவர்கள் நாங்களும் குறைந்தவர்கள் இல்லை, சிறியவர்களுக்கும் அனைத்து அதிகார உரிமைகளும் இருக்க வேண்டும். சிறியவர்களையும் பெரியவர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும் மற்றும் ஆக வேண்டும் என்று நினைக்கிறீர்களா? யார் செய்வாரோ அவர் அடைவாரா அல்லது

யார் யோசிக்கிறார்களோ அவர்கள் அடைவார்களா? நியமம் என்ன? யோசிப்பது, சொல்வது மற்றும் செய்வது - இந்த மூன்றையும் ஒரே சமமாக ஆக்குங்கள். யோசிப்பது மற்றும் சொல்வது மிக உயர்ந்ததாக இருந்து செய்வது ஒன்றுமே இல்லை என்றால் அவர்கள் யோசிப்பது மற்றும் சொல்வதிலேயே நேரத்தைக் கழித்து விடுவார்கள் மேலும் செய்வதினால் என்ன அடைய வேண்டுமோ அதை அடைய முடியாது. தன்னை உயர்ந்த பிராப்தியிலிருந்து வஞ்சிக்கச் செய்தே விடுவார்கள். தன்னுடைய படைப்பையும் வஞ்சித்து விடுவார்கள் எனவே சொல்வது குறைவு மற்றும் செய்வது அதிகமாக இருக்க வேண்டும். கடினமாக உழைத்து அடைவோம் என்ற இந்த லட்சியத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். என்னையும் மகாரதி மற்றும் சேவைக்குத் தகுதியானவர் என்று புரிந்து கொள்ள வேண்டும், எனக்கும் அதிகாரம் கொடுக்க வேண்டும், அன்பு மற்றும் சகயோகம் கொடுக்க வேண்டும் என்று இது கேட்பதற்கான பொருள் அல்ல. உயர்ந்த காரியம், உயர்ந்த உள்உணர்வு மற்றும் உயர்ந்த எண்ணத்தின் சித்தி ரூபத்தில் இந்த அனைத்து விஷயங்களும் இயல்பாகவே பிராப்தி ஆகிறது எனவே இந்த சாதாரண எண்ணங்களில் அல்லது வீணான எண்ணங்களிலும் நேரத்தை வீணாக இழக்காதீர்கள். புரிந்ததா,

அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக குணம் நிறைந்த மற்றும் காரியம் செய்யக்கூடியவர்களுக்கு, ஒவ்வொரு எண்ணத்திலும் பொறுப்பை உணரக்கூடியவர்களுக்கு, எண்ணத்தில் கூட அலட்சியத்தை அகற்றக்கூடியவர்களுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக தந்தையின் துணைவனாகி துணையை வைத்துக் கொள்ளக்கூடிய, ஒவ்வொரு பங்கையும் சாட்சியாக இருந்து செய்யக்கூடிய அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.01.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஜுவாலா ரூப நிலை!

தன்னை கண்களில் மூழ்கியிருக்கும், கண்களின் மணி மற்றும் கண்களின் ரத்தினமாக நினைக் கிறீர்களா? தன்னை பாப்தாதாவின் கண்களின் நட்சத்திரங்கள் என்று நினைக்கிறீர்களா? கண்களின் எதிரில் இருக்கிறீர்களா அல்லது கண்களிலேயே அடங்கியிருக்கிறீர்களா? இரண்டு விதமான நட்சத்திரங்கள் இந்த நேரம் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. நாம் எந்த விதமான நட்சத்திரம் என்று ஒவ்வொருவரும் தன்னிடம் கேளுங்கள். மூழ்கியிருப்பவர்களின் தகுதி மற்றும் எதிரில் இருப்பவர்களின், இந்த இரண்டின் நடுவில் மூன்றாமவர் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது அதாவது ஏதாவது ஒரு தடை நிரந்தரத்தில் வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும் ஆனால் யார் கண்களிலேயே மூழ்கியிருப்பவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் தந்தைக்குச் சமமானவர்களாக இருக்கிறார்கள். எந்தவொரு சூழ்நிலை, இயற்கை அதாவது ஐந்து தத்துவங்களும் தந்தையிடமிருந்து அவர்களை தனியாகப் பிரிக்க முடியாது அதாவது அவர்கள் எப்பொழுதும் வெற்றியடைபவராக நிரந்தரமாக ஒரே சீரான மற்றும் ஒருவரின் நினைவிலேயே மூழ்கியிருப்பவர்களாக இருப்பார்கள். ஒரு தந்தை மற்றும் தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் ஈஸ்வரிய சேவையில் இருப்பார்கள். இதைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் தென்படாது. அவர்களுடைய பார்வை, உள்உணர்வு மற்றும் நினைவு இந்த மூன்றுமே எப்பொழுதும் சக்தி நிறைந்ததாக இருக்கிறது அதாவது வீணானது முடிவடைந்து விடுகிறது. அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா அல்லது ஆக வேண்டுமா?

உலக மாற்றத்திற்கு ஆதாரமான நீங்கள் தன்னை மாற்றம் செய்ததாக அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை ஆதாரமானவர்கள் சம்பூர்ண பரிவர்த்தனையில் இப்பொழுது தன்னில் இன்னும் குறை இருப்பதையே உணருகிறார்கள் என்றால் பின்பு உலக மாற்றம் எப்படி ஏற்படும்?

ஆதாரமானவர்கள் சுயம் தனக்காக கொஞ்ச நேரம் அவசியம் இருக்கிறது என்று நினைக்கிறார்களா அல்லது உலக மாற்றத்திற்காக இப்பொழுது நேரம் வேண்டுமா? இந்த எண்ணம் உருவாகிறதா? ஆதாரமானவர்களின் உறுதியான எண்ணத்தில் எப்பொழுதாவது குழப்பம் நிறைந்த எண்ணமும் இருக்கிறது என்றால், வினாசத் திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களில் சில நேரம் ஆவேசம் மற்றும் சில நேரம் தெளிவான நிலை வந்து விடுகிறது. ஆதாரமான ஆத்மாக்களின் எண்ணம் தான் வினாசத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் தூண்டுதலுக்கு ஆதாரமாகும். அப்படியானால் தூண்டுதல் செய்யும் சக்தி சேனையின் எண்ணம் திடமானதாக, நிச்சயபுத்தி உடையதாக இருக்கிறதா மேலும் சுயம் அவரே எவரெடியாக இருக்கிறாரா? என்று தன்னைத் தானே கேளுங்கள். எப்படி யக்ஞத்தை படைப்பதற்கான பொறுப்பாளராக பிரம்மாபாபாவுடன் பிராமணர்களும் ஆனார்கள் என்றால் யக்ஞத்திலிருந்து வெளிப்படும் இந்த வினாஷ ஜூவாலை. இதற்காகவும் எதுவரை நீங்கள் ஜுவாலா ரூபம் ஆகவில்லையோ அது வரை இந்த வினாஷத்தின் ஜுவாலையும் சம்பூர்ண ஜுவாலா ரூபத்தை எடுப்பதில்லை. இது எரிய ஆரம்பிக்கிறது பின்பு சீதளமாகி விடுகிறது. இதற்கான காரணம் என்ன? ஏனென்றால் ஜுவாலா ரூபமானவர்கள் மற்றும் தூண்டுதல் செய்வதற்கு ஆதாரமான ஆத்மாக்கள் இப்பொழுது அவர்களே கூட இன்னும் ஜுவாலா ரூபமாக ஆகவில்லை. ஜுவாலா ரூபம் ஆவதற்கான திட எண்ணம் நினைவில் இருப்பதில்லை. ஜூவாலா ரூபம் ஆவதற்கான முக்கியமான மற்றும் சுலபமான முயற்சி எது? (என்னுடையவரோ ஒரே ஒரு சிவபாபா இந்த நினைவு எப்பொழுதுமே இருக்க வேண்டும், இதற்காகக்கூட என்ன முயற்சி செய்ய வேண்டும்? இப்பொழுது கடைசி விசேஷமான முயற்சி இன்னும் என்ன செய்ய வேண்டியது இருக்கிறது? (விடுபட்ட நிலை) இதுவோ ரிசல்ட் ஆகும் ஆனால் அதற்காகவும் என்ன முயற்சி செய்ய வேண்டும்? (விலகியிருக்கும் நிலை) விலகியிருக்கும் நிலையும் எதனால் வரும். எந்தவொரு மனநிலையிலேயே இருப்பதினால் வரும்? இப்பொழுது வீடு செல்ல வேண்டும். செல்ல வேண்டும் என்றால் விடுபட்ட நிலை. செல்ல வேண்டும் - எங்கு செல்ல வேண்டுமோ அந்த மாதிரியான முயற்சி இயல்பாகவே இருக்கிறது. தன்னுடைய நிராகார வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்றால், அந்த மாதிரி தன்னுடைய வேஷத்தை உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே இந்த புது

வருடத்தின் விசேஷ முயற்சியாக இது தான் இருக்க வேண்டும். 'திரும்பிச் செல்ல வேண்டும், அனைவரையும் அழைத்துச் செல்ல வேண்டும். இந்த நினைவினால் இயல்பாகவே அனைத்து உறவுகள், அனைத்து இயற்கையின் கவர்ச்சியிலிருந்து விடுபட்ட நிலை அதாவது சாட்சியாகி விடுவீர்கள். சாட்சி ஆவதினால் சுலபமாகவே தந்தையின் உடன் இருப்பவர்கள் ஆகி விடுவீர்கள் மற்றும் தந்தைக்குச் சமமானவர் ஆகி விடுவீர்கள். அனைவருக்கும் எப்பொழுதும் ஜுவாலா ரூபமாகத் தென்படுவீர்கள், அப்பொழுது தான் இந்த வினாஷ ஜுவாலையும், உங்களுடைய ஜுவாலா ரூபத்தின் கூடவே தெளிவாகத் தென்படும். எவ்வளவு ஸ்தாபனைக்கு பொறுப்பாளர் ஆகியிருப்பவர்கள் ஜுவாலா ரூபமாக இருப்பார்களோ அந்த அளவே வினாஷம் ஜுவாலா ரூபத்தில் பிரத்யக்ஷம் ஆகும். இந்த உறுதியான எண்ணத்தின் தீக்குச்சியை ஏற்றினீர்கள் என்றால் அப்பொழுது தான் வினாஷ ஜுவாலை எரிய ஆரம்பிக்கும். இப்பொழுது சீதள ரூபத்தில் இருக்கிறது ஏனென்றால் ஆதாரமானவர்களும் முயற்சியில் சீதளமாக இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக ஜுவாலா ரூபம் உலகின் வினாஷ காரியத்தை நிறைவுபெறச் செய்யும். அற்ப ஆத்மாக்களின் திட எண்ணம் அற்ப காலத்திற்காக அங்கங்கே வினாஷ ஜுவாலை எரிவதற்கான காரணம் ஆகின ஆனால் மகாவினாஷம் மற்றும் உலக மாற்றம் ஒற்றுமையின் ஒரு உயர்ந்த எண்ணம் இல்லாமல் நிறைவு பெற முடியாது. எனவே இந்த வருடத்தில் தன்னுடைய கடைசி நிலை, அனைத்து கர்ம பந்தனங்களிலிருந்து விடுபட்ட கர்மாதீத் நிலை, விலகியிருந்து அன்பாக இருப்பதின் சமநிலை ஆகியவை எப்பொழுதும் சரியாக இருக்கட்டும். அந்த மாதிரி நிராகார நிலையை கூட்டாக ரூபத்தில் உருவாக்குங்கள். அப்பொழுது தான் வினாஷத்தின் காட்சிகள் மற்றும் கூடவே புது உலகத்தின் காட்சிகள் தெளிவாகத் தென்படும். இந்த வருடம் அனைவருக்கும் இந்த முயற்சி செய்ய வேண்டும். இந்தக் கடைசி முயற்சியினால் தான் தன்னுடைய மற்றும் வினாஷத்தின் வேகம் அதிகரிக்கும்.

எண்ணம் ஓடுகிறதா அல்லது முடிவடைந்து விட்டதா? என்னவாகும். எப்படி ஆகும் என்று பயப்படவில்லையே? 'ஒருவேளை' மற்றும் 'ஆனால்' போன்ற வார்த்தைகள் வரவில்லையே? ஒருவேளை ஆகவில்லை என்றால்? என்று சிலர் கூறுகிறார்கள் ஆனால் ஆகத்தான் வேண்டும்

என்று சிலர் ஆனால் என்று கூறுகிறார்கள் ஆனால் என்னவாகும்? பாபாவோ அவ்யக்தம் ஆகி விட்டார். வியக்தத்தில் எதிர்நோக்குபவர்களோ நாம் தான் என்று சிலர் நினைக்கிறார்கள் ஆனால் நீங்களும் அவ்யக்தம் ஆகி விடுங்கள் அதாவது யாராவது எதிரில் வந்தார் என்றால் வியக்த உணர்வின் விஷயம் அவருக்கு தென்பட வேண்டாம் அல்லது செய்வதற்கான தைரியம் வேண்டாம். மற்றவர்களையும் வியக்த உணர்விலிருந்து விலக்கக்கூடிய அவ்யக்த பரிஷ்தா ஆகி விடுங்கள். அந்த மாதிரி அவ்யக்த நிலை மற்றும் வாயுமண்டலம் அதாவது பாண்டவர்களின் கோட்டை உருவானது என்றால் இந்தக் குழப்பம் முடிவடைந்து விடும். பாப்தாதா கடைசி வரை உங்களுடன் இருக்கிறார். மேலும் எப்பொழுதும் குழந்தைகளின் மேல் அன்பு மற்றும் சகயோகம் குடைநிழலுக்குச் சமமாக இருக்கிறது. எனவே பயப்படாதீர்கள். பாப்தாதா முதுகெலும்பாக இருக்கிறார். எதிர்கொள்வதற்காக எந்தவொரு நபர் மூலமாகவும் தேவையான நேரத்தில் பிரத்யக்ஷமாக ஆகி விடுவார். மேலும் இப்பொழுதும் ஆகிக் கொண்டிருக்கிறார். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் தைரியம் மற்றும் உற்சாகத்தில் இருக்கக்கூடிய, ஒவ்வொரு சூழ்நிலையிலும் உயர்ந்த நிலையில் இருக்கக்கூடிய, இயற்கையின் அனைத்து கவர்ச்சிகளிலிருந்தும் விலகியிருக்கக்கூடிய, ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் கவர்ச்சியிலிருக்கக்கூடிய, ஆன்மீகக் கவர்ச்சி செய்பவர்களுக்கு, எப்பொழுதும் கவலையற்றும் மற்றும் நிச்சயபுத்தி உள்ள எப்பொழுதும் தந்தையின் துணைவர்களாக இருக்கும் அனைவருக்கும், எப்பொழுதும் அன்பான மற்றும் சகயோகி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்,

**வரதானம்: எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் ஆன்மீகப் போதையை அனுபவம் செய்யும் மற்றும் செய்விக்கக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஆகுக!**

சங்கமயுகத்தில் குழந்தைகள் நீங்கள் அனைவரையும் விட அதிக அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். ஏனென்றால் சுயம் பகவான் உங்களை விரும்பிவிட்டார். எல்லைக்கப்பாற்பட்ட அதிபதி ஆகி விட்டீர்கள்.

## 1975 அவ்யக்த முரளி

பகவானின் அகராதியில் யார் என்னவாக இருக்கிறார் என்பதில் உங்களுடைய பெயர் இருக்கிறது. எல்லைக்கப்பாற்பட்ட தந்தை கிடைத்திருக்கிறார், எல்லைக்கப்பாற்பட்ட இராஜ்ய பாக்கியம் கிடைத்திருக் கிறது. எல்லைக்கப்பாற்பட்ட பொக்கிஷம் கிடைத்திருக்கிறது. இதே போதை எப்பொழுதும் இருக்கிறது என்றால் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கும். இது தான் எல்லைக்கப்பாற்பட்ட ஆன்மீக போதை இதை அனுபவம் செய்து கொண்டே மற்றும் செய்வித்துக் கொண்டே இருங்கள். அப்பொழுது தான் அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று கூறுவோம்.

**சுலோகன்: சாதனங்களை தன்னை ஓய்வு விரும்பியாக ஆக்குவதற்கு பதிலாக சேவைக்காக உபயோகியுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.01.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சாட்சாத்கார மூர்த்தி மற்றும் ஃபரிஷ்தா ஆவதற்கான அழைப்பு!

அனைத்து அன்பான குழந்தைகளுக்கும் அன்பின் பிரதிபலனை அன்பாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவிற்கு குழந்தைகள் அணிவித்த கண்களின் மணி முத்து மற்றும் கழுத்தின் மாலை ஆகிய வற்றிற்குப் பிரதிபலனாக ஞான ரத்தினங்களின் மாலையை பாப்தாதா கொடுக்கிறார். இன்று அமிர்தவேளையில் ஒவ்வொரு அன்பான குழந்தைகளின் எண்ணம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்தது. ஒவ்வொருவருவரின் ஆன்மீக உரையாடல், ஒவ்வொருவரின் நல்ல எண்ணம், ஒவ்வொருவர் செய்த உறுதிமொழி வந்து சேர்ந்தது. அனைத்து ஆன்மீக உரையாடலுக்குப் பதிலாக பாப்தாதா அவரே அவ்யக்தத்திலிருந்து வியக்தத்தில் வந்து சந்தித்துக் கொண்டிருக்கிறார். தந்தையை குழந்தைகள் விபக்தத்தில் (பௌதீக உலகில்) அழைக்கிறார்கள். மேலும் தந்தை குழந்தைகளை அவ்யக்த வதனத்திற்கு அழைக்கிறார். அவ்யக்த வதனவாசியான தந்தைக்குச் சமமாக அவ்யக்தம் ஆக வேண்டும் - இது தான் குழந்தைகள் மற்றும் தந்தையின் நல்விருப்பமும் ஆகும். இப்பொழுது கூறுங்கள் எவ்வளவு காலத்தில் அவ்யக்த வதனத்திற்கு வருவீர்கள்? அவ்யக்த வதனத்தின் சந்திப்பு எவ்வளவு அழகானது அதைத் தெரிந்திருக்கிறீர்களா?

பாப்தாதாவும் குழந்தைகள் இல்லாமல் திரும்பி வீடு செல்ல முடியாது. வீடு செல்வதற்கு முன்பு அவ்யக்த ஃபரிஷ்தாக்களின் சபை அவ்யக்த வதனத்தில் கூடும். அந்த சபைக்கு அனைத்து அன்பான குழந்தைகளை பாப்தாதா வரவேற்றுக் கொண்டிருக்கிறார். குழந்தைகள் தந்தையை பழைய உலகத்தில் வாருங்கள் என்று அழைக்கிறார்கள் ஆனால் தந்தை குழந்தைகள் உங்களை ஃபரிஷ்தாக்களின் உலகிற்கு அழைக்கிறார். அங்கிருந்து சேர்ந்தே ஆத்மாக்களின் உலகிற்கு செல்லலாம். இந்த ஆன்மீக அவ்யக்த அழைப்பு உணர்வில் வருகிறதா? ஒருவேளை

வருகிறது என்றால் வியக்த ரூபம், வியக்த உணர்வை மறக்கத் தெரியாதா? தந்தைக்குச் சமமாக நிரந்தரமாக ஃபரிஷ்தாவாக ஆகத் தெரியாதா? ஒரு நொடியின் எண்ணத்தை நிரந்தரமான உறுதியானதாக ஆக்கத் தெரியாதா? ஆகத்தான் வேண்டும், செல்லத்தான் வேண்டும் அந்த மாதிரி ஒரு நொடியின் எண்ணத்தின் பயணச் சீட்டை வாங்கத் தெரியாதா? சக்தி என்ற பொக்கிஷம் இருந்த போதிலும் இந்தப் பயண சீட்டை முன்பதிவு செய்ய முடியாதா? உலகின் அனைத்து ஆத்மாக்களுக்கும் பார்வையால் நன்மை செய்வித்து அவர்களையும் தன்னுடன் முக்தி, ஜுவன்முக்தி என்ற ஆஸ்தியை தந்தையிடமிருந்து பெறச் செய்ய முடியாதா? தந்தையின் அல்லது தன்னுடைய பக்தர்களை அவர்களுடைய அலைவதிலிருந்து விரைவாக விடுவிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் தீவிரமாக உற்பத்தி ஆகிறதா? இரக்க மனம் உடைய தந்தையின் குழந்தைகள் நீங்கள், துக்கம் அமைதியின்மையில் துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களைப் பார்த்து சகித்துக் கொள்ள முடியாதா? இரக்கம் வரவில்லையா? அனேக விதமான அழியும் சுகம், சாந்தியில் ஒரு நிலை கொள்ள முடியாமல் ஆகியிருக்கும் ஆத்மாக்கள், யார் தந்தை மற்றும் தன்னையும் மறந்து இருக்கிறார்களோ, அந்த மாதிரி மறந்திருக்கும் ஆத்மாக்கள் மேல் நன்மை செய்யும் பாவனை மூலமாக அவர்களுக்கும் அடைய வேண்டிய யதார்த்த லட்சியத்தை கூறி அழியாத பிராப்தியை அடைய செய்வதற்கான எண்ணம் உருவாகவில்லையா?

இப்பொழுதோ நேரத்திற்கு தகுந்தாற்போல் ஒரு வார பாடத்திற்குப் பதிலாக தன்னுடைய வரதானங்கள் மூலமாக, தன்னுடைய அனைத்து சக்திகளின் மூலமாக ஒரு நொடிக்கான பாடத்தை எடுங்கள், அப்பொழுது தான் அனைத்து ஆத்மாக்களையும் ஆத்மாக்களின் உலகிற்கு தந்தையுடன் திருப்பி அழைத்துச் செல்ல முடியும். அசரீரி ஆகுக, நிராகாரி, நிரகங்காரி மற்றும் நிர்விகாரி ஆகுக என்பதின் வரதானம் வரமளிக்கும் வள்ளல் மூலமாக பிராப்தி கிடைத்துள்ளது தான் இல்லையா? இப்பொழுது அந்த மாதிரி வரதானத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். அதாவது தன்னை ஞானம் நிறைந்த, நினைவு நிறைந்த, குணம் நிறைந்த மற்றும் சாட்சாத்கார மூர்த்தியாக ஆக்குங்கள். யார் எதிரில் வந்தாலும் அவர்களுக்கு நெற்றி மூலமாக நெற்றியின் மணி தென்படட்டும். கண்கள் மூலமாக ஒளி தென்படட்டும் மற்றும் வாய் மூலமாக வரதானத்தின் வார்த்தைகள் வெளிப்பட்டுக்

கொண்டிருப்பதாக தென்படட்டும். எப்படி இதுவரையிலும் பாப்தாதாவின் மகாவாக்கியங்களுக்கு நடைமுறை சொரூபம் கொடுப்பதற்காக பொறுப்பாளர் ஆகி வந்திருக்கிறீர்கள். இப்பொழுது இந்த சொரூபத்தை நடைமுறைப்படுத்துங்கள். பாப்தாதா குழந்தைகளின் அன்பு, சகயோகம் மற்றும் சேவைக்காக அடிக்கடி திருப்தியின் மலரை தூவிக் கொண்டிருக்கிறார். கடின உழைப்பிற்காக நன்றி கூறுகிறார். கூடவே எதிர்காலத்திற்காக, இப்பொழுது விரைவில் அதிவேகமாக இன்னும் மிச்சமிருக்கும் ஈஸ்வரிய சேவையை செய்து முடியுங்கள் அதாவது தன்னை தந்தைக்குச் சமமானவராக ஆக்குங்கள். தந்தையின் அழைப்பு என்ற விரிந்திருக்கும் கைககளில் உள்ளடங்கி விடுங்கள் மற்றும் சமமாக ஆகி விடுங்கள். அன்பின் பிரத்யக்ஷ சொரூபம் சமமாக ஆகி விடுவது ஆகும்.

இன்றே பாப்தாதாவுடன் செல்வீர்களா? அந்த மாதிரி எவரெடியாக இருக்கிறீர்களா அல்லது இன்னும் மீதமிருக்கும் சேவையின் சுப சம்மந்தம் இழுக்கிறதா? அனைத்து காரியங்களையும் செய்து முடித்தாகி விட்டதா அல்லது இன்னும் மீதம் இருக்கிறதா? அதை பின்பு சூட்சும வதனத்தில் இருந்து செய்வீர்களா? ஒரு நொடியில் அனைத்து சம்மந்தம், அனைத்து சேவையின் காரியத்தை நிறைவேற்ற முடியும் என்றால். வாருங்கள் போகலாம். முறையீடு செய்து கொண்டிருக்கிறீர்கள், ஆனால் தந்தையோ உடன் அழைத்துச் செல்வதற்குத் தயாராக இருக்கிறார். அனைத்து கணக்கு வழக்குகளையும் முடித்தாகி விட்டதா? தந்தை தயாராக இருக்கிறார் - வாருங்கள் போகலாம். பின்பு திரும்ப வேண்டியதில்லை. நல்லது.

அன்பு மற்றும் சகயோகம் இரண்டிலும் இருக்கக்கூடிய, தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் துணைவனை துணையாக அனுபவம் செய்யக்கூடிய, அனைத்து எண்ணங்களை நடைமுறை ரூபத்தில் கொண்டுவரக்கூடிய, நெருக்கமான நட்சத்திரங்களுக்கு, நெற்றிமணிகளுக்கு, கழுத்தில் மாலையின் மணியாக உருளக்கூடியவர்களுக்கு, வெற்றிமாலையின் வெற்றி ரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம். ஓம் சாந்தி.

# பரிவர்த்தனை ஆவதற்காக உறுதிமொழி! மதுபனை என்ன மகிமை செய்கிறீர்கள்?

இது பரிவர்த்தனை செய்யும் பூமி என்று கூறுகிறீர்கள். நீங்கள் அனைவரும் பரிவர்த்தனை பூமியில் அல்லது வரதான பூமியில் வந்திருக்கிறீர்கள். தன்னில் மற்றும் மற்றவர்களில் வரதானத்தின் அனுபவத்தை செய்கிறீர்களா? இங்கு வருவது என்றால் வரதானத்தை அடைவது, பரிவர்த்தனை செய்வது. இப்பொழுது என்ன பரிவர்த்தனை (மாற்றம்) செய்ய வேண்டும்? விசேஷமாக எந்த பலஹீனம் மற்றும் எந்த சம்ஸ்காரம் அவ்வப்பொழுது தடை ரூபமாக ஆகிறது, அந்த மாதிரி சம்ஸ்காரம் மற்றும் பலஹீனத்தை இங்கு பரிவர்த்தனை செய்து செல்ல வேண்டும். அப்பொழுது தான் தன்னில் பரிவர்த்தனை கொண்டு வந்திருக்கிறார் என்று கூறுவோம். விசேஷ ஊக்கம், உற்சாகம் மற்றும் முழு ஈடுபாட்டோடு இங்கு வரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள் என்றால், இங்கு மதுபன்னில் தன்னுடைய முழு ஆர்வம் மற்றும் ஈடுபாட்டை அந்த மாதிரி அக்னி ரூபமாக ஆக்குங்கள். அந்த அக்னியில் அனைத்து வீணான எண்ணம், அனைத்து பலஹீனங்கள், இன்னும் விலகாமல் இருக்கும் பழைய சம்ஸ்காரங்கள் பஸ்பம் ஆகி விடட்டும்.

மதுபன்னை அஸ்வமேத ருத்ர ஞான மகா யக்ஞம் என்று கூறப்படுகிறது. யக்ஞத்தில் என்ன செய்யப்படுகிறது? ஸ்வாஹா செய்யப்படுகிறது. நீங்கள் குழந்தைகளும் தினசரி எழுந்து அமிர்தவேளையில் முழு ஈடுபாட்டின் அக்னியின் யக்ஞத்தைப் படைக்கிறீர்கள். அந்த ஈடுபாடு என்ற அக்னியில் தன்னுடைய பலஹீனத்தை ஸ்வாஹா செய்கிறீர்கள் ஆனால் இது மகா யக்ஞமாகும், மதுபனில் வருவது என்றால் மகா யக்ஞத்தில் வருவது. மதுபனை ஏன் மகா யக்ஞம் என்று கூறினோம். ஏனென்றால் இங்கு அனேக ஆத்மாக்களின் முழு ஈடுபாட்டின் அக்னியின் கூட்டம் இருக்கிறது. எப்படி அனேக தடவைகள் சுயம் தானே உறுதிமொழி எடுக்கிறீர்கள், எண்ணத்தை உருவாக்குகிறீர்கள், அதே போலவே மதுபனில் நீங்களும் அந்த மாதிரி உறுதிமொழி எடுக்கிறீர்களா, எண்ணத்தை உருவாக்குகிறீர்களா? என்ன

நினைக்கிறீர்கள்? வரும் காலங்களில் அது முற்றிலுமே இல்லாமல் போய்விடும் அளவிற்கு அந்த மாதிரி ஆஹுதி போடுகிறீர்களா. மகா யக்ஞத்தில் மகா ஆஹுதி (அர்ப்பணமாக) போட வேண்டும். சாதாரண ஆஹுதி அல்ல. அனேக ஆத்மாக்களின் முழு ஆர்வம் மற்றும் ஈடுபாட்டின் அக்னி இருக்கும் பொழுது ஆஹுதி போட்டீர்களா? இங்கிருந்து செல்கிறீர்கள். போட்டு விட்டு செல்கிறீர்களா அல்லது இப்பொழுது மீண்டும் திருப்பி எடுத்துக் கொண்டீர்களா அல்லது எந்த விதமான எள்ளையும், எண்ணெயையும் போடுவது என்று யோசிக்கிறீர்களா? எத்தனை தடவை மகா யக்ஞத்தில் வருகிறீர்களோ அத்தனை தடவை மகா யக்ஞத்தில் ஆஹுதி போட்டிருக்கிறேனா என்று சோதனை செய்கிறீர்களா?

சம்பூர்ண சமர்ப்பணம் ஆகியிருக்கிறீர்களா அல்லது திருப்பி எடுத்துச் செல்கிறீர்களா? ஆஹுதி சம்பூர்ண சமர்ப்பணம் ஆகி விடுகிறதா அல்லது உங்களிடமே இருந்து விடுகிறதா? இது பழைய உலகத்தில் உபயோகமாக இருக்கும் என்று அந்த மாதிரி யோசிக்கவில்லையே? ஆனால் அந்த மாதிரி ஆகுகிறது, பலஹீனமானவர் கையை பின்னுக்கு இழுத்து விடுகிறார். ஒருவேளை ஆஹுதி போடுவதில் பலஹீனமானவராக இருக்கிறீர்கள் என்றால், வெப்பம் இருக்கும் காரணத்தினால் பாதி ஆஹுதி வெளியிலும், பாதி ஆஹுதி உள்ளும் விழுந்து விடுகிறது. இங்கே இருக்கும் போதும், செய்யலாமா அல்லது வேண்டாமா என்று யோசிக்கிறீர்கள். ஆகுமா அல்லது ஆகாதா, செய்ய முடியுமா அல்லது செய்ய முடியாதா? என்று புத்தி என்ற கையை முன்னுக்கும், பின்னுக்கும் கொண்டு சென்று கொண்டே இருக்கிறீர்கள். எனவே சம்பூர்ண ஸ்வாஹா ஆவதில்லை, ஒரு ஓரமாக இருந்து விடுகிறது சிதறி விடுகிறது. எப்பொழுது சம்பூர்ண ஸ்வாஹா ஆகவில்லை என்றால் சம்பூர்ண வெற்றி ஏற்படுவதில்லை. அதிகமாக யோசிக்கிறீர்கள், குறைவாகச் செய்கிறீர்கள் என்றால் பலனும் குறைவாகக் கிடைக்கும். முதலில் தைரியம் குறைவாக இருக்கிறது, எண்ணம், சக்திசாலியானதாக இல்லை என்றால் காரியத்தில் பலமும் இருப்பதில்லை. எனவே பலனும் குறைவாகவே இருக்கும். பிறகு என்ன செய்கிறீர்கள்? பாதி இங்கேயும், பாதி அங்கேயும் சிதற விடுகிறீர்கள். அப்படியானால் வெற்றி ஏற்படவில்லை இல்லையா? இப்பொழுது உங்கள் அனைவரின் ரிசல்ட்டாக என்ன ஆகியிருக்கிறது? வெற்றி

ஏற்பட்டதா? யக்ஞத்தில் சம்பூர்ண ஆஹுதி இடப்பட்டதா? அல்லது சிதறி விட்டதா? இப்பொழுதோ, என்ன யோசிக்கிறீர்களோ அதை நடைமுறையில் இன்றிலிருந்து இந்த பலஹீனம் மீண்டும் வராது என்று நிரப்பிச் செல்ல வேண்டும். சம்பூர்ண சமர்ப்பணம் செய்வதற்கு துணிச்சல் இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா? விநாஷம் ஏற்படவில்லை என்றால்? சொர்க்கம் வரவில்லை என்றால்? சென்றடைவோமா அல்லது இல்லையா? பின்பு மனிதர்கள் என்ன சொல்வார்கள்? அந்த மாதிரி புத்திசாலியாக ஆகாதீர்கள். அனைவருக்கும் இந்த நிலைமை தான். முதலில் கையை முன்னுக்கு கொண்டு வருகிறார்கள், பின்பு வெப்பம் வருகிறது என்றால் கையை பின்னுக்கு இழுத்து விடுகிறார்கள். தைரியம் வருகிறது, ஆனால் கொஞ்சம் தடை வருகிறது என்றால் அடிகள் பின்னால் எடுத்து வைத்து விடுகிறார்கள். அந்த மாதிரியானவர் களின் நிலை என்னவாகும்? கதி, சத்கதியையும் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா?

ஞானம் நிறைந்தவராக இருந்தபோதிலும் ஒருவேளை யாராவது செய்யவில்லை என்றால் என்னவென்று கூறுவது? இதைத் திருப்பி எடுத்துக் கொண்டார் என்றால் என்ன நிலைமை ஏற்படும்? வேண்டுமென்றே ஒருவேளை செய்யவில்லை என்றால் அவரை என்னவென்று கூறலாம்? லைட் மற்றும் மைட் ரூபம் இருந்த போதிலும் ஏன் செய்ய முடிவதில்லை? என்ன காரணம்? ஞானம் உங்களுடைய புத்தி வரை இருக்கிறது, விவேகம் வரை இருக்கிறது. தெரிந்திருக்கிறீர்கள் - அது சரி தான், ஆனால் ஞானத்தை நடைமுறையில் கொண்டு வருவது மற்றும் உள்ளே நிரப்புவது எப்படி என்று தெரிவதில்லை. உணவு இருக்கிறது, சாப்பிடவும் செய்கிறீர்கள் ஆனால் சாப்பிடுவது வேறு விஷயம், சாப்பிட்டு அதை ஜீரணம் செய்வது வேறு விஷயம் ஆகும். உள்ளே நிரப்புவதில்லை, ஜீரணம் ஆவதில்லை, ரத்தமாக ஆவதில்லை மேலும் சக்தி கிடைப்பதில்லை. நாக்களவில் சாப்பிட்டீர்கள் என்றால் ரத்தமாக ஆகாது, சக்தி கிடைப்பதில்லை. உள்ளே நிரப்பிய பிறகு தான் சக்தியின் ரூபம் ஆகிறது. உள்ளே நிரப்பவில்லை என்றால் நாக்கின் ரசனையோடு இருந்து விடுகிறது. உள்ளே நிரப்பினால் சக்தி ஆகும். கேட்பதில் ஆர்வம் வந்தது, புரிந்து கொண்டது, புரிந்து கொண்டீர்கள் ஆனால் உள்ளே நிரப்பவில்லை, நடைமுறையில் கொண்டு வரவில்லை. எவ்வளவு தாரணையில் வந்ததோ, சம்ஸ்காரம் ஆகி விடுகிறதோ

அப்பொழுது தான் நடைமுறையில் வெற்றியின் சொரூபம் தென்படும். ஞானம் நிறைந்த நிலையின் அர்த்தம் என்ன? ஞானம் நிறைந்ததின் அர்த்தம் ஒவ்வொரு கர்ம இந்திரியங்களில் ஞானம் நிரம்பி விட வேண்டும். என்ன செய்ய வேண்டும் மற்றும் என்ன செய்யக்கூடாது என்றிருந்தால் ஏமாற்றம் அடையும் விஷயம் இருக்கும். எப்பொழுது ஆத்மாவில் ஞானம் வந்து விடுகிறது என்றால் கண்களும் மற்றும் உள்உணர்வும் ஏமாற்றம் கொடுக்காது. பிறகு அனைத்து இந்திரியங்களில் ஞானம் நிரம்பி விடுகிறது. எப்படி உணவினால் சக்தி நிரம்பி விடுகிறது. பின்பு சக்தியின் ஆதாரத்தினால் காரியம் நடக்கிறது. இப்பொழுது ஞானத்தை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு கர்ம இந்திரியத்தையும் ஞானம் நிறைந்ததாக ஆக்குங்கள்.

ஒவ்வொரு வருடமும் வருகிறீர்கள். இப்பொழுது செய்வோம் என்று கூறி உறுதிமொழி கொடுத்து செல்கிறீர்கள். இப்பொழுது இந்த உறுதிமொழி எப்பொழுது நிறைவேறும்? என்ன நினைக்கிறீர்களோ மற்றும் என்ன காரியம் செய்கிறீர்களோ இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்திற்கான காரணம் என்ன? முழுமையாகச் செய்ய வேண்டும் என்று யோசிக்கிறீர்கள் மேலும் நடப்பது பாதி, இவ்வளவு வித்தியாசம் ஏற்படுவதற்கான காரணம் என்ன? திட்டத்தையும் அதிகமாக உருவாக்குகிறீர்கள், ஊக்கத்தையும் அதிகமாகக் கொண்டு வருகிறீர்கள். மேலும் புரிந்து உறுதிமொழி செய்கிறீர்கள். அனைத்து விஷயங்களும் வரத்தான் செய்யும் ஆனால் நடைமுறை மற்றும் புரிந்து கொண்டதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது இதற்கான காரணம் என்ன? சம்ஸ்காரங்களை ஆஹுதியாக போட்டு விட்டுச் செல்கிறீர்கள். பின்பு எங்கிருந்து வந்தது? ஸ்வாஹா செய்து செல்கிறீர்கள் என்றால் பிறகு ஏன் வருகிறது? தேக அபிமானம், அலட்சியம் மீண்டும் ஏன் திரும்பி வருகிறது, இதற்கான காரணம் என்ன? காரணம் என்னவென்றால் ஸ்வாஹா செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை செய்து செல்கிறீர்கள் ஆனால் எண்ணத்தின் கூடவே (எப்படி விதை விதைக்கிறீர்கள், பின்பு அதை பராமரிக்கிறீர்கள்) ஆனால் இதில் என்ன பராமரிப்பு தேவையோ அந்த பராமரிப்பை செய்வதில்லை. நேரத்திற்கு ஏற்றபடி அதன் அவசியத்தை வைக்க வேண்டும், நீங்கள் விதை விதைத்து விட்டு அலட்சியமானவராக ஆகி விடுகிறீர்கள். பாபாவிற்கு கொடுத்தாகி விட்டது, இப்பொழுது பாபாவிற்குத் தான் தெரியும், இது பாபாவின்

வேலையாகும் என்று யோசிக்கிறீர்கள். நீங்கள் அதனை பாலனை செய்வதில்லை. எனவே வார்த்தைகள் மற்றும் மனதின் மேல் கவனம் வேண்டும். எப்படி விதை விதைத்து, விதை உறுதியாக வளர வேண்டும் என்று தண்ணீர் விடுகிறீர்கள். விதைக்கு தினசரி தண்ணீர் விடவேண்டியது இருக்கிறது, அதே போலவே எண்ணம் என்ற விதையை மீண்டும் சோதிக்க வேண்டும். அதில் குறை ஏற்பட்டு விடுகிறது, மேலும் அதைப் பற்றி கவலைப்படாதவர்களை என்னவென்று கூறலாம்? ஓய்வு விரும்பியாக ஆகி விடுகிறீர்கள். ஓய்வு விருப்பத்தின் சம்ஸ்காரம் இருப்பதில்லை, ஆனால் சிந்தனையின் எண்ணம் இருக்க வேண்டும். ஒவ்வொரு சம்ஸ்காரத்தின் கவலை இருக்க வேண்டும். முயற்சி செய்வதில் இருக்கும் ஒரு குறையின் கறை கூட மிகப் பெரியதாகத் தென்படும். பின்பு மிகச் சிறிய கறை தன்னுடைய மதிப்பை குறைத்து விடும் என்ற எண்ணம் எப்பொழுதும் வருகிறது. சிந்தனை கவலையின் ரூபத்தில் இருக்க வேண்டும். அது இல்லை என்றால் அலட்சியத்தன்மை இருக்கிறது. சொல்கிறீர்கள் ஆனால் செய்வ தில்லை. எது பிற்காலத்தின் யுக்தியாக இருக்கிறதோ அதை நடைமுறையில் கொண்டு வாருங்கள், ஓய்வு விரும்பி தேவதை நிலையின் சம்ஸ்காரம் ஆகும். அது அதிகமாக இருக்கிறது. சங்கமயுகத்தின் பிராமண சம்ஸ்காரமாக தியாகம் செய்பவராக இருப்பது அது குறைவாக வெளிப்படுகிறது. தியாகம் இல்லாமல் பாக்கியம் உருவாவதில்லை. சரி செய்து விடலாம், அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்ற இது ஓய்வு விரும்பியின் சம்ஸ்காரம் ஆகும். "அவசியம் செய்வேன்' என்ற இது பிராமணனின் சம்ஸ்காரம் ஆகும். வெளியுலகப் படிப்பில் யாருக்கு கவலை இருக்கிறதோ அவர் தேர்ச்சி பெற்று விடுவார். அவருடைய தூக்கம் கலைந்து விடும். யார் ஓய்வு விரும்பியாக இருப்பாரோ அவர் எப்படி தேர்ச்சி அடைவார்? நடை முறையில் செய்ய வேண்டும் என்று இப்பொழுது நினைக்கிறீர்கள். கவலை ஏற்பட வேண்டும். நற்சிந்தனை இருக்க வேண்டும். சம்பூர்ணம் ஆவதற்கான கவலை, பலஹீனத்தை அகற்றுவதற்கான கவலை மற்றும் பிரத்யக்ஷ பலனை கொடுப்பதற்கான கவலை இருக்க வேண்டும்.

**வரதானம்: தன்னுடைய சக்திகள் மற்றும் குணங்கள் மூலமாக பலமற்றவரை சக்தி நிறைந்தவராக ஆக்கக்கூடிய உயர்ந்த வள்ளல் மற்றும் சகயோகி ஆகுக!**

## 1975 அவ்யக்த முரளி

உயர்ந்த நிலை உள்ள உண்மையான குழந்தைகளின் அனைத்து சக்திகள் மற்றும் அனைத்து குணங்கள் தேவையான நேரத்தில் எப்பொழுதும் சகயோகியாக இருக்கின்றன. தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் குணங்கள் மற்றும் சக்திகளை அஞ்ஞான ஆத்மாக்களுக்கு தானமாகக் கொடுப்பது மற்றும் பிராமண ஆத்மாக்களுக்கு சகயோகம் கொடுப்பது தான் அவர்களுடைய சேவையின் விசேஷ சொரூபம் ஆகும். பலமற்றவரை சக்தி நிறைந்தவராக ஆக்குவது என்ற இது தான் உயர்ந்த தானம் மற்றும் சகயோகம் ஆகும். எப்படி வார்த்தைகள் மூலமாக மற்றும் மன சக்தி மூலமாக சேவை செய்கிறீர்களோ, அது போன்றே கிடைத்திருக்கும் குணங்கள் மற்றும் சக்திகளின் சகயோகத்தை மற்ற ஆத்மாக்களுக்கு கொடுங்கள், பிராப்தி செய்வியுங்கள்.

**சுலோகன்: யார் திட நிச்சயத்துடன் பாக்கியத்தை நிச்சயம் செய்து விடுகிறாரோ அவர் தான் எப்பொழுதும் கவலையின்றி இருக்கிறார்!**

**இந்த முரளியின் விசேஷமான ஞான முத்துக்கள்:**

1. அழிவற்ற ருத்ர ஞான மகா யக்ஞும் மதுபன் ஆகும். இந்த மகா யக்ஞத்தில் உங்களின் ஆர்வத்தை அக்னியாக மாற்றுங்கள். அந்த அக்னியில் அனைத்து வீணான எண்ணங்கள், அனைத்து பலவீனங்கள் மற்றும் அனைத்து மீதமுள்ள பழைய சம்ஸ்காரங்கள் முற்றிலும் சாம்பல் ஆக வேண்டும்.

2. புத்தியில் ஞானம் இருக்கிறது, ஆனால் ஞானம் நிறைந்தவர் ஆகவில்லை. ஒவ்வொரு கர்மேந்திரியங்களிலும் ஞானம் நிறைந்திருக்க வேண்டும் என்பது தான் ஞானம் நிறைந்தவர் ஆவது. எனவே உணவை உண்பதோடு, கூடவே ஒன்று கலந்து அதாவது ஜீரணம் ஆவதின் மூலம் தான் உடலில் சக்தி வருகிறது. அதுபோல ஆத்மாவாகிய நம்மிடம் சக்தி வருகிறது.

3. எந்தளவு ஞானம் தாரணையில் வருகிறதோ, அது சம்ஸ்காரம் ஆகி விடுகிறது, அப்பொழுது தான் நடைமுறையில் வெற்றியின் சொரூபம் தென்படும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.01.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயமரியாதையின் ஆசனத்தில் அமர்ந்திருந்து காரியம் செய்பவர் தான் மகான் ஆவார்!

எப்படி பாப்தாதாவின் மகத்துவத்தை மிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்களோ, அது போலவே இந்த சங்கமயுக பிராமண ஜென்மத்தை மற்றும் உயர்ந்த ஆத்மா மற்றும் தன்னுடைய உயர்ந்த பங்கை இந்த அளவே மிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்களா? எப்படி தந்தை மகானாக இருக்கிறார். அதே போலவே தந்தையுடன் எந்த ஆத்மாவிற்கு ஒவ்வொரு அடியிலும் மற்றும் ஒவ்வொரு சரித்திரத்தினுடன் சம்மந்தம் மற்றும் பங்கு இருக்கிறதோ அவரும் மகான் தான் ஆவார். இந்த மகான் நிலையை மிக நன்றாகத் தெரிந்து ஒவ்வொரு அடியை எடுத்து வைப்பதினால் ஒவ்வொரு அடியிலும் பல கோடி மடங்கு பிராப்தி இயல்பாகவே ஏற்பட்டே விடுகிறது. ஏனென்றால் முழு ஆதாரமும் நினைவின் மேல் இருக்கிறது. நினைவு எப்பொழுதும் சக்திசாலியாக மற்றும் மகான் ஆக இருக்கிறதா அல்லது சில நேரம் மகானாகவும் மற்றும் வேறு சில நேரம் சாதாரணமானதாகவும் இருக்கிறதா? யார் எப்படி இருக்கிறாரோ அப்படியே அவர் எப்பொழுதும் தன்னைத் தானே புரிந்து கொண்டு நடக்கிறார். அவர் ஒருபொழுதும் நினைவு மற்றும் நினைவு மறந்த நிலையில் வருவதில்லை. அதே போலவே நீங்கள் உயர்ந்த பிராமணனாக இருக்கிறீர்கள், உலகில் அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்கள் மற்றும் விசேஷமான பங்கைச் செய்பவர்களாக இருக்கிறீர்கள், இருந்தும் தன்னுடைய இந்தக் கடைசி ஜென்மத்தின் இந்த ரூபத்தின், தன்னுடைய பதவியின் மற்றும் தன்னுடைய தொழிலின் (கடமை) நினைவு சில நேரம் விசேஷமானதாகவும் மற்றும் சில நேரம் சாதாரணமானதாகவும் ஏன் இருக்கிறது? அடிக்கடி இறங்குவது மற்றும் ஏறுவது ஏன் ஆகிறது? அதன் காரணத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? தன்னுடைய சொரூபம்

உண்மையாக இருக்கிறது மற்றும் ஜென்மமே மகானாக இருக்கிறது என்றால், தன்னுடைய வாழ்க்கையின் மற்றும் ஜென்மத்தின் அந்த மகான் தன்மையை ஏன் மறக்கிறீர்கள்? எப்பொழுது பங்கைச் செய்வதற்காக தற்காலிகமான உருவத்தை உருவாக்கப்படுகிறது என்றால் அப்பொழுது மறப்பது என்பது இருக்கும். உண்மையான ரூபம் இல்லாத காரணத்தினால் அடிக்கடி நினைவு நினைவு மறந்தநிலை ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இங்கு ஏன் மறப்பது என்பது ஏற்படுகிறது? தேக அபிமானத்தின் காரணத்தினால் தான். தேக அபிமானம் ஏன் வருகிறது? இந்த அனைத்து காரணங்களையும் வெகுகாலமாகத் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? தெரிந்திருந்த போதிலும் நிவாரணம் செய்ய முடிவதில்லை. இதற்கான காரணம் சக்தியின் குறைவு அல்லது திடத்தன்மை இல்லை. இதையும் வெகு காலமாகத் தெரிந்திருக்கிறீர்கள் இருந்தும் ஏன் நிவாரணம் செய்ய முடிவதில்லை? அதே விஷயம் அடிக்கடி அனுபவத்தில் வரும் காரணத்தினால் பரிவர்த்தனை செய்வதோ சுலபம் மற்றும் நிரந்தரமாக இருக்க வேண்டும் இல்லையா?

எப்படி லௌகீக முறையிலும் இந்த விஷயத்தின் காரணமாக நஷ்டம் ஏற்படுகிறது, முடிவு நல்லதாக வருவதில்லை என்று தெரிந்து விட்டது என்றால் ஒரு தடவை ஏமாற்றம் அடைந்த பிறகு தன்னைத் தானே சமாளித்துக் கொள்வார்களேயன்றி அடிக்கடி ஏமாற்றம் அடைவார்களா? தேக அபிமானத்தின்காரணமாக மற்றும் எந்தவொரு பலஹீனத்தின் வசம் ஆவதினால் விளைவாக என்னவாகும்? இந்த விஷயத்தின் அனுபவியாக அனேக தடவைகள் ஆகியிருக்கிறீர்கள். அனுபவி ஆன பிறகும் ஏமாற்றம் அடைகிறீர்கள் என்றால் அந்த மாதிரியானவரை என்னவென்று கூறுவது? இதிலிருந்து தன்னுடைய மகான் நிலையைத் தானே தெரிந்து எப்பொழுதும் நடந்து கொள்வதில்லை என்பது நிரூபணம் ஆகிறது. தன்னுடைய மகான் தன்மையை ஏன் மறக்கிறீர்கள்? காரணம் என்ன? ஏனென்றால் விக்ன விநாஷக், அனைத்து சூழ்நிலைகளையும் அகற்றக்கூடியவர், சுயநிலை மற்றும் பதவியின் உயர்ந்த ஸ்தானம் மற்றும் கவமானத்தின் இருக்கையாக பாப்தாதா சங்கமயுகத்தில் என்ன கொடுத்திருக்கிறாரோ அந்த இருக்கையில் ஏன் அமர்ந்து கொள்வதில்லை? தன்னுடைய இருக்கையை விட்டு விட்டு அடிக்கடி கீழே வந்து விடுகிறீர்கள். இருக்கையில் இருப்பதினால்

சுயகௌரவத்தின் நினைவு தானாக இருக்கிறது. லௌகீக முறையிலும் ஏதோ சாதாரண ஆத்மாவிற்கு சீட் கிடைத்து விட்டது என்றால் சுயகௌரவமே அதிகரித்து விடுகிறது, அந்த போதையில் இயல்பாகவே நிலைத்து விடுவார். அதே போலவே எப்பொழுதும் தன்னுடைய இருக்கையில் இருந்தீர்கள் என்றால் நிரந்தரமாக சுயகௌரவம் நினைவில் இருக்க வேண்டும். புரிந்ததா?

இருக்கையின் கீழே வருவது என்றால் நினைவிலிருந்து கீழே நினைவு மறந்த நிலையில் வருவது உயர்ந்த இருக்கையில் இருப்பதற்கான சோதனை செய்யுங்கள். இருக்கையில் அமர்வதினால் இயல்பாகவே அந்த சம்ஸ்காரம் மற்றும் கர்மம் பரிவர்த்தனையில் வந்தே விடும். புரிந்ததா? பலஹீனமான வார்த்தைகள் பிராமணர்களின் பாஷையிலேயே இல்லை. சூத்திரர்களின் பாஷையை ஏன் உபயோகப்படுத்து கிறீர்கள். தன்னுடைய தேசம் மற்றும் தன்னுடைய பாஷைக்கான போதை இருக்கிறது இல்லையா? தன்னுடைய பாஷையை மறந்து மற்றவர்களின் பாஷையை ஏன் கூறுகிறீர்கள்? எனவே இப்பொழுது அதை பரிவர்த்தனை செய்யுங்கள். முதலில் சோதனை செய்யுங்கள். பின்பு கூறுங்கள். சீட்டில் செட்டாகிக் கொண்டே பிறகு எண்ணத்தை உருவாக்குங்கள். பிறகு காரியம் செய்யுங்கள். இந்த இருக்கையில் இருப்பதினால் இயல்பாகவே மகான் நிலைக்கான வரதானம் பிராப்தி ஆகி விடுகிறது. அப்படியானால் வரதானி இருக்கையை விட்டு விட்டு கடின உழைப்பு ஏன் செய்கிறீர்கள். கடின உழைப்பு செய்து செய்து பின்பு களைப்பும் அடைந்து விடுகிறீர்கள். மேலும் மனமுடைந்தும் போய் விடுகிறீர்கள். எனவே இப்பொழுது சகஜ சாதனத்தைக் கடைபிடியுங்கள். நல்லது.

**வரதானம்: பணிவுத்தன்மை மூலமாக புதிய படைப்பை படைக்கக்கூடிய அவநம்பிக்கை மற்றும் அபிமானத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

ஒருபொழுதும் முயற்சி செய்வதில் நம்பிக்கையிழப்பவர் ஆகாதீர்கள், செய்யத் தான் வேண்டும். நடக்கத்தான் வேண்டும், வெற்றி மாலை என்னுடைய நினைவுச்சின்னம் ஆகும். இந்த நினைவின் மூலம் வெற்றி அடைபவர் ஆகுங்கள். ஒரு விநாடி மற்றும் ஒரு நிமிடத்திற்குக் கூட

அவநம்பிக்கைக்கு தன் உள்மனதில் இடம் கொடுக்காதீர்கள். அபிமானம் மற்றும் நம்பிக்கையின்மை இவை இரண்டும் ஒருவரை மிகப் பெரிய பலம் பொருந்தியவராக ஆகவிடுவதில்லை. அபிமானம் உள்ளவர்களுக்கு அவமான உணர்வு மிக அதிகமாக வரும். எனவே இந்த இரண்டு விஷயங்களிலிருந்து விடுபட்டு பணிவானவர் ஆகுங்கள், மேலும் புது உலகைப் படைப்பு காரியத்தை செய்து கொண்டே இருங்கள்.

**சுலோகன்: உலக சேவையின் சிம்மாசனதாரியாக ஆனீர்கள் என்றால் உலக இராஜ்ய சிம்மாசனதாரியாக ஆவீர்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 29.01.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பகுத்தறியும் சக்தியின் உபயோகத்தினால் வெற்றி!

இன்றைய இந்த சபை இராஜரிஷிகளின் சபையாகும். எப்படி மதுபன் என்ற வார்த்தை இரண்டு விஷயங்களை நிரூபிக்கிறது. ஒன்று மதுரமானது (இனிமையானது) மற்றும் இன்னொன்று எல்லைக்கப் பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு, அதே போலவே இராஜரிஷி என்ற வார்த்தையின் அர்த்தமானது இராஜ்யம் செய்யக்கூடியவர்கள். ஒன்றும் இல்லாதவரிலிருந்து (யாசிப்பவர்) அனைத்தும் நிறைந்தவர் (இளவரசன்) ஆவது. எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ அந்த அளவே அனைத்தையும் தியாகம் செய்த நிலை. அனைத்தையும் தியாகம் செய்தவர் என்றால் நேரத்தின் மீது, எண்ணத்தின் மீது சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தின் மீது அதிகாரத்தை பெறக்கூடியவர். எப்படி விரும்புகிறீர்களோ அப்படி தன்னுடைய நேரம், சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தை பரிவர்த்தனை செய்ய முடிய வேண்டும் அதாவது நேரத்திற்கு ஏற்றபடி தன்னுடைய சொரூபம் மற்றும் ஸ்திதியை, (மனநிலையை) தாரணை செய்ய முடிய வேண்டும். அந்த மாதிரி இராஜரிஷியாக அதாவது அனைத்தின் அதிகாரி மற்றும் சர்வ தியாகியாக ஆகியிருக்கிறீர்களா? ஜென்மம் எடுத்தவுடனேயே காரியத்திற்கு ஏற்றபடி, உயர்ந்த சுயகௌரவத்தின்படி பாப்தாதா மூலமாக இராஜரிஷியின் பதவி பிராப்தி ஆகியிருக்கிறது இல்லையா? அனைத்தின் அதிகாரிகளாக ஆகி விட்டீர்களா அல்லது இப்பொழுது தான் ஆக வேண்டுமா? என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் அனைவரின் விசேஷமான கோஷம் எது? எப்பொழுது பிறப்புரிமையாக இருக்கிறது என்றால் ஜென்மம் எடுப்பதினாலேயே பிராப்தி ஆகிறது என்றால் அதிகாரியாகவோ ஆகியே விட்டீர்கள் அல்லவா?

ஞானம் நிறைந்தவர் என்றால் மாஸ்டர் ஞானக்கடல் ஆவார். எப்பொழுது மாஸ்டர் ஞானக்கடலாக ஆகி விட்டீர்கள் என்றால் ஞானம் அதாவது

அறிவின் காரணமாக அதிகாரம் பிராப்தி ஆகிறது. அறிவு குறைவாக இருக்கிறது என்றால் அதிகாரமும் குறைவு தான். ஞானம் நிறைந்தவராகவோ இருக்கிறீர்கள் தானே? இப்பொழுது கடைசி நிலை என்னவாக இருக்கிறது? அதைத் தெரிந்திருக்கிறீர்களா? கர்மாதீத் ஆவதின் நிலையின் அடையாளம் என்னவாக இருக்கிறது? எப்பொழுதும் வெற்றி அடைபவர். நேரமும் பயனுள்ளதாக்கப்பட்டது, எண்ணமும் பயனுள்ளதானது, உறவு நெருக்கமும் எப்பொழுதும் பயனுள்ளதாக இருக்கிறது என்றால் இதைத் தான் வெற்றி அடைபவர் என்று கூறுவது. அந்த மாதிரி வெற்றி அடைபவராக ஆவதற்காக தற்சமயத்திற்கேற்றபடி விசேஷமாக எந்த சக்தியின் அவசியம் இருக்கிறது அதன் மூலம் அனைத்து விஷயங்களில் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆகி விடலாம்? அது எந்த சக்தி? அனைத்து சக்திகளும் பிராப்தி ஆகின்றன இருந்தாலும் தற்சமயத்திற்கேற்றபடி விசேஷமாக பகுத்தறியும் சக்தியின் அவசியம் இருக்கிறது.

ஒருவேளை பகுத்தறியும் சக்தி மிக நன்றாக இருக்கிறது என்றால் விதவிதமான வழிகளில் வந்திருக்கும் தடைகள், எவை முழு ஈடுபாட்டில் தடை ஏற்படுத்துகிறது, அந்த தடைகளை முன்பாகவே தெரிந்து அவை மூலமாக தாக்குதல் ஏற்படுவதற்கு முன்பே அவற்றை அழித்து விடுவார்கள். இதன் காரணமாக நேரம் வீணாகச் செல்வதற்கு பதிலாக சக்திசாலியில் சேமிப்பாகி விடுகிறது. அதே போலவே சேவையில் ஒவ்வொரு ஆத்மாவின் முக்கியமான விருப்பம் மற்றும் அதனுடைய முக்கியமான சம்ஸ்காரத்தை தெரிந்திருக்கும் காரணத்தினால், அதன் பிரகாரம், அந்த ஆத்மாவிற்கு அதையே பிராப்தி செய்விக்கும் காரணத்தினால் சேவையிலும் எப்பொழுதும் வெற்றி அடைபவர்களாக இருக்கிறார்கள்.

மூன்றாவது விஷயம் மற்றவர்களின் சம்மந்தத்தில் வருவதற்கான முக்கியமான பாடமாக என்ன இருக்கிறதோ அதிலும் ஒவ்வொரு ஆத்மாவின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை தெரிந்து கொண்டே, அதன்படியே அவரை எப்பொழுதும் திருப்தியாக வைத்திருப்பார்.

நான்காவது விஷயம் நேரத்தின் வேகம். எந்த நேரம் எப்படிப்பட்ட சூழ்நிலை மற்றும் வாயுமண்டலம் இருக்கிறது. மேலும் என்ன இருக்க

வேண்டும் என்ற இதை பகுத்தறியும் காரணத்தினால் நேரத்திற்கு ஏற்றபடியே தன்னையும் மற்றும் மற்ற ஆத்மாக்களையும் அதிவேகத்தில் கொண்டு வர முடியும் மேலும் எப்படி நேரமோ அப்படி சொரூபத்தை தாரணை செய்வதற்காக ஊக்கம் மற்றும் உற்சாகத்தை நிரப்ப முடியும். மேலும் நேரத்திற்குத் தகுந்தாற்போல் ஞானம் நிறைந்த மற்றும் லாஃபுல் (நீதிநிறைந்த) அல்லது லவ்ஃபுல் (அன்பு நிறைந்தவராகவும்) ஆக முடியும் மற்றும் ஆக்க முடியும். மேலும் இந்த விதமாக எப்பொழுதும் வெற்றியாளர் ஆக முடியும். ஏனென்றால் சில நேரம் லாஃபுல் ஆக வேண்டும் மற்றும் சில நேரம் லவ்ஃபுல்லாகவும் ஆகி மேலும் மற்றவர்களையும் அந்த மாதிரி ஆக்க வேண்டும். மேலும் இந்த விதமாக எப்பொழுதும் வெற்றி அடைய முடியும் ஏனென்றால் சில நேரம் லாஃபுல் ஆக வேண்டும் மற்றும் சில நேரம் லவ்ஃபுல்லாக ஆக வேண்டும் எனவே இதை பகுத்தறியும் காரணத்தினால் எப்பொழுதும் சுலபமாகவே வெற்றி அடைபவராக இருப்பார்.

அந்த மாதிரி வெற்றி அடைபவரின் எதிரில் இயற்கை மற்றும் சூழ்நிலையும் தாசியாகி விடுகிறது அதாவது அவர் இயற்கை மற்றும் சூழ்நிலையின் மேல் எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆகிறார். அவர் இயற்கை மற்றும் சூழ்நிலையின் வசம் ஆகுபவராக ஆவதில்லை. அந்த மாதிரி வெற்றியாளரைத் தான் எப்பொழுதும் வெற்றி அடைபவர் என்று கூறப்படுகிறது. இதற்காக மூன்று சொரூபங்களினால் தந்தை கூறிய விஷயங்களை நினைவில் வையுங்கள். மூன்று சொரூபங்கள் என்றால் நிராகார, ஆகார மற்றும் சாகார சொரூபங்கள். எப்படி மூன்று சம்மந்தங்களினால் சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர் மற்றும் சத்தியமான குருவின் அறிவுரைகளை நினைவில் வைக்கிறீர்கள். அதே போலவே மூன்று சொரூபங்களினால் மூன்று முக்கிய விஷயங்களை நினைவில் வையுங்கள்.

இந்த மூன்று சொரூபங்களினால் விசேஷமான மூன்று வரதானங்கள் யாவை? நிராகார சொரூபத்தின் முக்கிய அறிவுரைக்கான வரதானம் எது? கர்மாதீத் ஆகுக. ஆகார சொரூபம் மற்றும் ஃபரிஷ்தா நிலைக்கான வரதானம் எது? டபுள் லைட் ஆகுக. டபுள் லைட் என்றால் அனைத்து கர்ம பந்தனங்களிலிருந்து லேசாக இருப்பது மற்றும் லைட் என்றால் எப்பொழுதும் பிரகாச சொரூபத்தில் நிலைத்திருப்பவர். அப்படி ஆகார

சொரூபத்தின் விசேஷ வரதானம் டபுள் லைட் ஆகுக என்பதாகும். இதன் மூலமாகத்தான் இரட்டை கிரீடம் அணிந்தவராகவும் ஆவீர்கள். சாகார சொரூபத்தின் விசேஷ வரதானம் எது? சாகார சொரூபத்தின் விசேஷ வரதானம் சாகார பாபாவிற்கு சமமாக நிர்அகங்காரி மற்றும் நிர்விகாரி ஆகுக. இந்த மூன்று வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைப்பதினால் நிரந்தரமாக சுலபமாகவே வெற்றி அடைபவராக ஆகி விடுவீர்கள். புரிந்ததா?

பாப்தாதாவை விடவும் குழந்தைகள் சக்திவான்கள் ஏனென்றால் அவர்கள் சர்வ சக்திவானை பிரத்யக்ஷம் செய்வதற்கு பொறுப்பாளர் ஆகி இருக்கிறார்கள். அவர்கள் அதிகம் சக்தி நிறைந்தவர்கள் இல்லையா என்ன? சர்வ சக்திவானை அனைத்து சம்மந்தங்களினால் தன்னுடையவர் ஆக்கி விடுவது மற்றும் தன்னுடைய அன்பின் கயிறில் கட்டிப்போடுவது என்றால் அதிக சக்தி நிறைந்தவர்கள் ஆக வில்லையா என்ன? மாறாக அதிகாரம் நிறைந்தவரை உலக சேவகனாக ஆக்கி விடுவது இதற்கான காரணமானவர்கள் யார்? நெருக்கமான மற்றும் சகயோகி குழந்தைகள் தான்.

அந்த மாதிரி அனைவரையும் விட உயர்ந்த எப்பொழுதும் பாப்தாதாவை ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு அடி மூலமாக வெளிப்படுத்தக்கூடியவர்களுக்கு, ஒவ்வொரு ஆத்மாவையும் தந்தையுடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்கு பொறுப்பாளர் ஆகியிருப்பவர்களுக்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் சேவையில் அன்புடன் ஐக்கியமாகியிருப்பவர்களுக்கு, லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக ஆக்கக்கூடியவர்களுக்கு, சாட்சாத் தந்தைக்குச் சமமானவர் ஆகி அனைவருக்கும் தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்கக்கூடியவர்களுக்கு, அந்த மாதிரி லாஃபுல் மற்றும் லவ்ஃபுல் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.01.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒரு நொடியில் வியக்கத்திலிருந்து அவ்யக்தம் ஆவதின் வேகம்!

அனைவரும் இந்த நேரம் ஒரே ஒரு ஈடுபாட்டில், ஒரே ஒரு எண்ணத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அந்த ஒரே எண்ணம் மற்றும் ஈடுபாடு எது? தந்தையை வரவழைப்பது மற்றும் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு கொண்டாட்டத்தை கொண்டாடுவது. எப்பொழுது சர்வ சக்திவான் தந்தையின் அழைப்பை அன்பு மற்றும் உறுதியான எண்ணத்தினால் செய்ய முடியும் என்றால் தன்னுள் எந்த சக்தியின் குறை அல்லது பலஹீனத்தை உணருகிறீர்களோ அந்த சக்தியை தனக்குள் வரவழைக்க முடியாதா? எப்பொழுது தந்தையை அவ்யக்தத்திலிருந்து வியக்தமாக ஆக்க முடிகிறது. நினைவினால், அன்பின் பலத்தினால் அதிகாரம் பிராப்தியாகியிருக்கும் பலத்தினால் மற்றும் நெருக்கமான சம்மந்தத்தினால் மட்டும் செய்ய முடிகிறது என்றால் அதே போலவே ஒவ்வொரு சக்தியை மற்றும் தன்னையும் வியக்கத்திலிருந்து அவ்யக்தமாக ஆக்க முடியாதா? எப்பொழுது தந்தையை அவ்யக்கத்திலிருந்து வியக்தத்தில் கொண்டு வருவது சுலபமாக இருக்கிறது என்றால் தன்னை அவ்யக்தம் ஆக்குவதில் கடினம் ஏன் இருக்கிறது?

கை தட்டுவதினால் பொருட்கள், நபர்கள் ஆஜராகி விடுகிறார்கள் மற்றும் தேவதைகள் பிரத்யக்ஷம் ஆகி விடுகிறார்கள் என்று பழைய காலத்து கதைகள் பிரசித்தமானவை. இந்த தேவி, தேவதைகளின் கதை பிரசித்தமானது. இந்த கதைகள் யாரைப் பற்றியது. ஞான தேவிகள் மற்றும் மூன்று உலகத்தில் பறக்கக்கூடிய தேவிகள் யார்? நான் தான் என்று புரிந்து கொள்கிறீர்கள் இல்லையா? ஞானம் மற்றும் நினைவின் இரண்டு இறக்கைகளும் இருக்கின்றன தான் இல்லையா? இப்பொழுது ஞானம் மற்றும் நினைவின் பலத்தினால் ஒரு நொடியில் அதாவது இந்த இறக்கைகளின் ஆதாரத்தினால் சாகார உலகத்திலிருந்து நிராகார

உலகம் வரை சென்றடைந்து விடுகிறீர்கள் இல்லையா? அந்த மாதிரி ஃபரிஷ்தாக்களுக்கு சமமான தேவிகளை ஒரு நொடியில் எந்த சக்தியின் அவசியம் இருக்கிறதோ அதை நினைத்தீர்கள் மற்றும் வரவழைத்தீர்கள் மேலும் அந்த சக்தி சொரூபத்தில் வந்து விட வேண்டும். அந்த மாதிரி கைத்தட்ட தெரியுமா? யாருக்கு ஒவ்வொரு கல்பத்திலும் மகிமை ஏற்பட்டுக் கொண்டே வந்திருக்கிறதோ அந்த மாதிரியான பரிகளாக (தேவதைகளாக) ஆகியிருக்கிறீர்களா?

தற்சமயத்து முயற்சி செய்வது ஒரு நொடியின் வேகமுடையதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் நேரம் மற்றும் சுயம் இரண்டின் வேகமும் சமமாக இருக்கிறது என்று கூறுவோம். இதைத் தான் அதிவேக அல்லது முதல் நிலை என்று கூறப்படுகிறது. சங்கமயுகத்தில் அனைத்து சக்திகளும் அந்த மாதிரி தன்னுடைய அதிகாரத்தில் இருக்க வேண்டியது இருக்கிறது. எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது காரியத்தில் கொண்டு வர முடியும் அளவிற்கு தன்னுடைய ஆயுதத்திற்கு சமமாக சக்திகள் இருக்கட்டும், புரிந்ததா. நல்லது.

பணிவானவராகி புது உலகப் படைப்பைச் செய்யுங்கள் சேவையில் சகஜமாக மற்றும் எப்பொழுதும் வெற்றி அடைவதற்கான மூல ஆதாரம் பணிவு நிறைந்தவராக ஆவது ஆகும். பணிவானவர் ஆவது தான் சுயகௌரவம் ஆகும் மற்றும் அனைவர் மூலமாக மரியாதையைப் பெறுவதற்கான சுலபமான வழியாகும். பணிவானவர் ஆவது என்றால் தலைவணங்குவது இல்லை ஆனால் அனைவரையும் தன்னுடைய விசேஷங்கள் மற்றும் அன்பினால் தலைவணங்க வைப்பது. மகான் நிலையின் அடையாளம் பணிவு ஆகும். எவ்வளவு பணிவாக இருக்கிறீர்களோ அந்த அளவு அனைவரின் உள்ளத்தில் மகானாக இயல்பாகவே ஆகி விடுவீர்கள். பணிவுத்தன்மை அகங்காரமற்றவராக சுலபமாகவே ஆக்கி விடுகிறது. பணிவு என்ற விதை மகான்தன்மை என்ற பழத்தை இயல்பாகவே பிராப்தி செய்விக்கிறது. பணிவுத்தன்மை அனைவரின் உள்ளத்தின் ஆசீர்வாதங்களை பெறுவதற்கான சுலபமான சாதனமாகும். உள் உணர்வு, பார்வை, வார்த்தை, உறவு நெருக்கம் அனைத்திலும் பணிவுத்தன்மை என்ற குணத்தை தாரணை செய்தீர்கள் என்றால் மகான் ஆகி விடுவீர்கள். எப்படி மரம் வளைந்து கொடுப்பதினால் சேவை செய்கிறது. அதே போல் பணிவானவர் ஆவது

அதாவது வளைந்து கொடுப்பது தான் சேவாதாரி ஆவது. எனவே ஒரு பக்கம் மகான் நிலை இருக்கட்டும் என்றால் இன்னொரு பக்கம் பணிவான நிலை இருக்கட்டும். யார் பணிவாக இருக்கிறாரோ அவர் அனைவர் மூலமாக மரியாதையை பெறுகிறார். தானே பணிவானவர் ஆனீர்கள் என்றால் மற்றவர்கள் மரியாதை கொடுப்பார்கள். யார் அபிமானத்தில் இருக்கிறாரோ அவருக்கு யாரும் மரியாதை கொடுப்பதில்லை, அவரிடமிருந்து தூரமாக விலகி விடுவார்கள். யார் பணிவாக இருக்கிறாரோ அவர் அனைவருக்கும் சுகம் கொடுக்கிறார். எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அது சுகம் நிறைந்ததாக இருக்கும். அவருடைய உறவு நெருக்கத்தில் யார் வந்தாலும் அவர் சுகத்தை அனுபவம் செய்வார். சேவாதாரியின் விசேஷமே ஒரு பக்கம் மிகவும் பணிவு, உலக சேவகன் மற்றும் இன்னொரு பக்கம் ஞானத்தின் அதிகாரம். எவ்வளவு பணிவோ அந்த அளவே எதைப் பற்றியும் கவலைப்படாத மகாராஜா. பணிவு மற்றும் அதிகாரம் இரண்டின் சமநிலை இருக்கட்டும். பணிவான உணர்வு, பொறுப்புணர்வு, எல்லைக்கப்பாற்பட்ட உணர்வு இது தான் சேவையின் வெற்றிக்கான விசேஷ ஆதாரமாகும் ஆனால் எவ்வளவு சுயகௌரவமோ அந்த அளவே பிறகு பணிவானவராகவும் இருக்க வேண்டும். சுயகௌரவத்தின் அபிமானம் இருக்க வேண்டாம். நாமோ உயர்ந்தவர்கள் ஆகி விட்டோம். மற்றவர்கள் சிறியவர்கள் அல்லது அவர்களுக்காக வெறுப்புணர்வு இருக்கிறது என்று அப்படி இருக்கக்கூடாது. எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் இரக்கப்பார்வையுடன் பாருங்கள். அபிமானத்தின் பார்வையினால் இல்லை. அபிமானமும் இருக்க வேண்டாம், அவமானமும் வேண்டாம். இப்பொழுது பிராமண வாழ்க்கையில் இந்த மாதிரி நடத்தை இருக்கக்கூடாது. ஒருவேளை அபிமானம் உடையவராக இல்லை என்றால் அவமானம், அவமானமாக அனுபவத்தில் வராது. அவர் எப்பொழுதும் பணிவானவராக இருப்பார். மேலும் உருவாக்கும் காரியத்தில் பிஸியாக இருப்பார்.

சுப பாவனை மற்றும் சுப விருப்பங்களின் விதையே பொறுப்புணர்வு மற்றும் பணிவு உணர்வு ஆகும். எல்லைக்குட்பட்ட மரியாதை இல்லை ஆனால் பணிவானவராக இருக்க வேண்டும். பண்பற்ற நிலையின் அடையாளம் பிடிவாதம் மற்றும் பண்பின் அடையாளம் பணிவாகும். பணிவானவராகி பண்பு நிறைந்து விவகாரம் செய்வது தான் பண்பு

மற்றும் சத்தியம் நிறைந்த நிலையாகும். பணிவானவராகி மற்றும் சரி. சரி என்று சொல்லிச் செய்யும் ஆத்மாவைப் பொறுத்தளவில் சில நேரம் தவறாகப் புரிந்து கொள்வதினால் மற்றவர்களுக்கு தோல்வியின் ரூபம் தென்படும் ஆனால் உண்மையிலேயே அவருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அந்த நேரம் மட்டும் மற்றவர்கள் சொல்வதினால் அல்லது சூழ்நிலையில் சுயம் தான் நிச்சயபுத்தியிலிருந்து மாறி சந்தேகமுடையவராக ஆக வேண்டாம். இது தோல்வியா அல்லது வெற்றியா என்று தெரியவில்லை என்று இந்த சந்தேகத்தை வைக்காமல் தனது நிச்சயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். எதை இன்று மற்றவர்கள் தோல்வி என்று கூறுகிறார்களோ நாளை அவர்கள் சபாஷ், சபாஷ் என்று மலர்கள் தூவுவார்கள்.

சம்ஸ்காரங்களில் பணிவு மற்றும் உருவாக்கும் விசேஷங்கள் எஜமானத்தன்மையின் அடையாளங்கள் ஆகும். கூடவே அனைத்து ஆத்மாக்களின் நெருக்கத்தில் வருவது, அன்பானவர் ஆவது, அனைவரின் உள்ளத்தில் அன்பின் ஆசீர்வாதம் அதாவது சுபபாவனை அனைவரின் உள்ளத்திலிருந்து அந்த ஆத்மாவிற்காக வெளியாகட்டும். தெரிந்திருந்தாலும், தெரிந்திருக்காவிட்டாலும், தூரத்தின் உறவு, நெருக்கமாக இருந்தாலும் யார் பார்த்தாலும் அவர் அன்பின் காரணமாக இவர் நம்முடையவர் என்று அந்த மாதிரியே அனுபவம் செய்யட்டும். எனவே எவ்வளவு தான் குணங்களின் தாரணையினால் நிரம்பியவர், குணங்கள் என்ற பலன் சொரூபமாக ஆகிறீர்களோ அந்த அளவே பணிவானவராக ஆகுங்கள். பணிவான நிலை மூலமாக ஒவ்வொரு குணத்தையும் பிரத்யக்ஷம் செய்தீர்கள் என்றால் அப்பொழுது தர்ம சக்தி உடைய மகான் ஆத்மா என்று கூறுவோம்.

பிரம்மாபாபா தன்னை எவ்வளவு தாழ்த்திக் கொண்டார். குழந்தைகளின் கால்களைப் பிடித்து விடும் அளவிற்கு பணிவானவராகி சேவாதாரி ஆனார். குழந்தைகள் என்னை விட முன்னுக்கு இருக்கிறார்கள், குழந்தைகள் என்னையும் விட நன்றாக சொற்பாழிவு நிகழ்த்த முடியும் என்ற உணர்வில் இருந்தார். முதலில் நான்" என்று ஒருபொழுதும் சொன்னதில்லை. முதலில் குழந்தைகள், குழந்தைகள் மூன்னுக்கு இருக்க வேண்டும். பெரிய குழந்தைகள் என்று கூறி தன்னை தாழ்த்திக் கொள்வது தாழ்ந்து விடுவது அல்ல ஆனால் உயர்வாகச் செல்வது.

அப்படி இதைத் தான் உண்மையான நம்பர் ஒன் தகுதியான சேவாதாரி என்று கூறுவது. மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பது சுயம் தான் பணிவானவர் ஆவது இது தான் பரோபகாரம் ஆகும். இந்த கொடுப்பது தான் நிரந்தரமாக பெறுவதாகும். அற்பகாலத்து அழியும் மரியாதையை தியாகம் செய்து சுயகௌரவத்தில் நிலைத்திருந்து பணிவானவர் ஆகி மரியாதையை கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். இந்த கொடுப்பது தான், பெறுவதாக ஆகி விடுகிறது. மரியாதை கொடுப்பது என்றால் அந்த ஆத்மாவை ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வந்து முன்னுக்கு வைப்பதாகும். இது நிரந்தரமான ஊக்கம் உற்சாகம் அதாவது குஷியின் அல்லது தன்னுடை சகயோகத்தின் பொக்கிஷம் ஆத்மாவை நிரந்தரமாக புண்ணிய ஆத்மா ஆக்கி விடுகிறது. நல்லது.

**தனிப்பட்ட சந்திப்பு -பணிவானவராகி புது உலகப் படைப்பைச் செய்யுங்கள்!** சேவையில் சகஜமாக மற்றும் எப்பொழுதும் வெற்றி அடைவதற்கான மூல ஆதாரம் பணிவு நிறைந்தவராக ஆவது ஆகும். பணிவானவர் ஆவது தான் சுயகௌரவம் ஆகும் மற்றும் அனைவர் மூலமாக மரியாதையைப் பெறுவதற்கான சுலபமான வழியாகும். பணிவானவர் ஆவது என்றால் தலைவணங்குவது இல்லை ஆனால் அனைவரையும் தன்னுடைய விசேஷங்கள் மற்றும் அன்பினால் தலைவணங்க வைப்பது. மகான் நிலையின் அடையாளம் பணிவு ஆகும். எவ்வளவு பணிவாக இருக்கிறீர்களோ அந்த அளவு அனைவரின் உள்ளத்தில் மகானாக இயல்பாகவே ஆகி விடுவீர்கள். பணிவுத்தன்மை அகங்காரமற்றவராக சுலபமாகவே ஆக்கி விடுகிறது. பணிவு என்ற விதை மகான்தன்மை என்ற பழத்தை இயல்பாகவே பிராப்தி செய்விக்கிறது. பணிவுத்தன்மை அனைவரின் உள்ளத்தின் ஆசீர்வாதங்களை பெறுவதற்கான சுலபமான சாதனமாகும். உள் உணர்வு, பார்வை, வார்த்தை, உறவு நெருக்கம் அனைத்திலும் பணிவுத்தன்மை என்ற குணத்தை தாரணை செய்தீர்கள் என்றால் மகான் ஆகி விடுவீர்கள். எப்படி மரம் வளைந்து கொடுப்பதினால் சேவை செய்கிறது, அதே போல் பணிவானவர் ஆவது அதாவது வளைந்து கொடுப்பது தான் சேவாதாரி ஆவது. எனவே ஒரு பக்கம் மகான் நிலை இருக்கட்டும் என்றால் இன்னொரு பக்கம் பணிவான நிலை இருக்கட்டும். யார் பணிவாக இருக்கிறாரோ அவர் அனைவர் மூலமாக மரியாதையை பெறுகிறார். தானே பணிவானவர் ஆனீர்கள் என்றால்

மற்றவர்கள் மரியாதை கொடுப்பார்கள். யார் அபிமானத்தில் இருக்கிறாரோ அவருக்கு யாரும் மரியாதை கொடுப்பதில்லை. அவரிடமிருந்து தூரமாக விலகி விடுவார்கள். யார் பணிவாக இருக்கிறாரோ அவர் அனைவருக்கும் சுகம் கொடுக்கிறார். எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அது சுகம் நிறைந்ததாக இருக்கும். அவருடைய உறவு நெருக்கத்தில் யார் வந்தாலும் அவர் சுகத்தை அனுபவம் செய்வார். சேவாதாரியின் விசேஷமே ஒரு பக்கம் மிகவும் பணிவு, உலக சேவகன் மற்றும் இன்னொரு பக்கம் ஞானத்தின் அதிகாரம். எவ்வளவு பணிவோ அந்த அளவே எதைப் பற்றியும் கவலைப்படாத மகாராஜா. பணிவு மற்றும் அதிகாரம் இரண்டின் சமநிலை இருக்கட்டும். பணிவான உணர்வு, பொறுப்புணர்வு, எல்லைக்கப்பாற்பட்ட உணர்வு இது தான் சேவையின் வெற்றிக்கான விசேஷ ஆதாரமாகும். ஆனால் எவ்வளவு சுயகௌரவமோ அந்த அளவே பிறகு பணிவானவராகவும் இருக்க வேண்டும். சுயகௌரவத்தின் அபிமானம் இருக்க வேண்டாம். நாமோ உயர்ந்தவர்கள் ஆகி விட்டோம், மற்றவர்கள் சிறியவர்கள் அல்லது அவர்களுக்காக வெறுப்புணர்வு இருக்கிறது என்று அப்படி இருக்கக்கூடாது. எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் இரக்கப் பார்வையுடன் பாருங்கள். அபிமானத்தின் பார்வையினால் இல்லை. அபிமானமும் இருக்க வேண்டாம், அவமானமும் வேண்டாம். இப்பொழுது பிராமண வாழ்க்கையில் இந்த மாதிரி நடத்தை இருக்கக்கூடாது. ஒருவேளை அபிமானம் உடையவராக இல்லை என்றால் அவமானம், அவமானமாக அனுபவத்தில் வராது, அவர் எப்பொழுதும் பணிவானவராக இருப்பார். மேலும் உருவாக்கும் காரியத்தில் பிஸியாக இருப்பார். சுப பாவனை மற்றும் சுபவிருப்பங்களின் விதையே பொறுப்புணர்வு மற்றும் பணிவு உணர்வு ஆகும். எல்லைக்குட்பட்ட மரியாதை இல்லை ஆனால் பணிவானவராக இருக்க வேண்டும். பண்பற்ற நிலையின் அடையாளம் பிடிவாதம் மற்றும் பண்பின் அடையாளம் பணிவாகும். பணிவானவராகி பண்பு நிறைந்து விவகாரம் செய்வது தான் பண்பு மற்றும் சத்தியம் நிறைந்த நிலையாகும். பணிவானவராகி மற்றும் சரி, சரி என்று சொல்லிச் செய்யும் ஆத்மாவைப் பொறுத்தளவில் சில நேரம் தவறாகப் புரிந்து கொள்வதினால் மற்றவர்களுக்கு தோல்வியின் ரூபம் தென்படும் ஆனால் உண்மையிலேயே அவருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அந்த நேரம் மட்டும் மற்றவர்கள் சொல்வதினால் அல்லது சூழ்நிலையில் சுயம்

தான் நிச்சயபுத்தியிலிருந்து மாறி சந்தேகமுடையவராக ஆக வேண்டாம். இது தோல்வியா அல்லது வெற்றியா என்று தெரியவில்லை என்று இந்த சந்தேகத்தை வைக்காமல் தனது நிச்சயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். எதை இன்று மற்றவர்கள் தோல்வி என்று கூறுகிறார்களோ நாளை அவர்கள் சபாஷ், சபாஷ் என்று மலர்கள் தூவுவார்கள். சம்ஸ்காரங்களில் பணிவு மற்றும் உருவாக்கும் விசேஷங்கள் எஜமானத்தன்மையின் அடையாளங்கள் ஆகும். கூடவே அனைத்து ஆத்மாக்களின் நெருக்கத்தில் வருவது. அன்பானவர் ஆவது, அனைவரின் உள்ளத்தில் அன்பின் ஆசீர்வாதம் அதாவது சுப்பாவனை அனைவரின் உள்ளத்திலிருந்து அந்த ஆத்மாவிற்காக வெளியாகட்டும், தெரிந்திருந்தாலும், தெரிந்திருக்காவிட்டாலும், தூரத்தின் உறவு, நெருக்கமாக இருந்தாலும் யார் பார்த்தாலும் அவர் அன்பின் காரணமாக இவர் நம்முடையவர் என்று அந்த மாதிரியே அனுபவம் செய்யட்டும். எனவே எவ்வளவு தான் குணங்களின் தாரணையினால் நிரம்பியவர், குணங்கள் என்ற பலன் சொரூபமாக ஆகிறீர்களோ அந்த அளவே பணிவானவராக ஆகுங்கள். பணிவான நிலை மூலமாக ஒவ்வொரு குணத்தையும் பிரத்யக்ஷம் செய்தீர்கள் என்றால் அப்பொழுது தர்ம சக்தி உடைய மகான் ஆத்மா என்று கூறுவோம். பிரம்மாபாபா தன்னை எவ்வளவு தாழ்த்திக் கொண்டார். குழந்தைகளின் கால்களைப் பிடித்து விடும் அளவிற்கு பணிவானவராகி சேவாதாரி ஆனார். குழந்தைகள் என்னை விட முன்னுக்கு இருக்கிறார்கள், குழந்தைகள் என்னையும் விட நன்றாக சொற்பாழிவு நிகழ்த்த முடியும் என்ற உணர்வில் இருந்தார். "முதலில் நான்" என்று ஒருபொழுதும் சொன்னதில்லை. முதலில் குழந்தைகள். குழந்தைகள் முன்னுக்கு இருக்க வேண்டும், பெரிய குழந்தைகள் என்று கூறி தன்னை தாழ்த்திக் கொள்வது தாழ்ந்து விடுவது அல்ல ஆனால் உயர்வாகச் செல்வது, அப்படி இதைத் தான் உண்மையான நம்பர் ஒன் தகுதியான சேவாதாரி என்று கூறுவது. மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பது சுயம் தான் பணிவானவர் ஆவது இது தான் பரோபகாரம் ஆகும். இந்த கொடுப்பது தான் நிரந்தரமாக பெறுவதாகும். அற்பகாலத்து அழியும் மரியாதையை தியாகம் செய்து சுயகௌரவத்தில் நிலைத்திருந்து பணிவானவர். ஆகி மரியாதையை கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். இந்த கொடுப்பது தான். பெறுவதாக ஆகி விடுகிறது. மரியாதை கொடுப்பது என்றால் அந்த ஆத்மாவை ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வந்து முன்னுக்கு

வைப்பதாகும். இது நிரந்தரமான ஊக்கம் உற்சாகம் அதாவது குஷியின் அல்லது தன்னுடை சகயோகத்தின் பொக்கிஷம் ஆத்மாவை நிரந்தரமாக புண்ணிய ஆத்மா ஆக்கி விடுகிறது. நல்லது.

**வரதானம்: தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலமாக பாக்கியத்தின் ரேகையை காண்பிக்கக்கூடிய உயர்ந்த பாக்கியம் நிறைந்தவர் ஆகுக!**

பிராமணக் குழந்தைகள் உங்களுக்கு நேரடியாக அனாதி (அழிவற்ற) தந்தை மற்றும் ஆதி தந்தை (பிரம்மா) மூலமாக இந்த ஆன்மீக ஜென்மம் பிராப்தியாகி இருக்கிறது. யாருடைய ஜென்மமே பாக்கியத்தை உருவாக்குபவர் மூலமாக ஆகியிருக்கிறது என்றால் அவர் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவராக ஆனார். தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே மகிழ்ச்சி நிறைந்து இருங்கள். ஒவ்வொரு நடத்தை மற்றும் முகத்தில் இந்த நினைவு சொரூபம் பிரத்யக்ஷ ரூபத்தில் தனக்கும் அனுபவம் ஆகட்டும் மேலும் மற்றவர்களுக்கும் தென்படட்டும். உங்களுடைய நெற்றியின் நடுவே இந்த பாக்கியத்தின் ரேகை பிரகாசித்துக் கொண்டிருப்பதாக தென்படட்டும் அப்பொழுது தான் உயர்ந்த பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று கூறப்படுவீர்கள்.

**சுலோகன்: யார் உள்நோக்குமுகமுடையவர் ஆகி லைட் - மைட் ரூபத்தின் அனுபவம் செய்கிறாரோ அவர் தான் யோகம் நிறைந்த ஆத்மா ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஈஸ்வரனின் துணையின் மற்றும் அன்பு நிறைந்த ஆழ்ந்த நினைவு அக்னியின் அனுபவம்!

யார் நெருக்கத்தில் இருக்கிறார்களோ அவர்கள் தான் சமமானவர்கள் ஆகிறார்கள். எப்படி சாகார ரூபத்தில் நெருக்கத்தில் இருக்கிறீர்கள், அதே போலவே அன்பு நிறைந்த ஆழமான நினைவிலும் (லகனிலும்) பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரியாக இருக்கிறீர்களா? எப்படி உடலால் அருகில் இருக்கிறீர்களோ அதே போல் மனதாலும் அருகில் இருக்கிறீர்களா? எப்படி வெளி நாட்டில் இருப்பவர்கள் உடலால் தூரமாக இருந்த போதிலும் மனதால் எப்பொழுதும் அருகில் இருக்கிறார்கள், பாப்தாதாவின் துணைவர்களாகவோ எப்பொழுதும் இருக்கவே இருக்கிறார்கள். அதாவது ஒவ்வொரு நேரமும் துணைவர்களாகி துணையின் அனுபவம் செய்கிறார்கள். அதே போல் எப்பொழுதும் நீங்களும் சாட்சியாக ஆவது மற்றும் துணைவனோடு இருக்கும் அனுபவத்தைச் செய்கிறீர்களா? எப்படி பந்தனத்தில் இருக்கும் கோபியர்கள் ஒவ்வொரு மூச்சு, ஒவ்வொரு எண்ணத்திலும் பாபா, பாபா என்று கூறி அதிலேயே தன்னை மறந்து இருக்கிறார்கள், எப்படி வெளியில் இருப்பவர்களுக்கு (பாபாவை) சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு இருக்கிறது. அதே போலவே ஒவ்வொரு நேரமும் நினைவின் துடிப்பில் இருக்கிறீர்களா அல்லது சாதாரண நினைவில் இருக்கிறீர்களா? நாமோ பாபாவினுடையவர்களாக இருக்கவே இருக்கிறோம், நாம் நெருக்கத்தில் தான் இருக்கிறோம். நாமோ சமர்ப்பணமாகவே ஆகியிருக்கிறோம், எங்களுக்கு இருப்பதோ ஒரு பாபா மட்டும் தான் என்ற இந்த எண்ணங்களினால் மட்டும் திருப்தியாகி விடவில்லையே?

# 1975 அவ்யக்த முரளி

அன்பு நிறைந்த ஆழமான நினைவு (லகன்) அக்னியில் தன்னுடைய கடந்த கால சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் மேலும் மற்ற ஆத்மாக்களின் துக்கம் நிறைந்த சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை பஸ்பம் செய்யும் அளவிற்கு தன்னுடைய லகனின் அக்னி உணர்வில் வருகிறதா? ஞானம் மூலமாக மற்றும் நெருக்கம் மூலமாக காரத்தின் மாற்றத்தையோ செய்கிறீர்கள். ஆனா அதில் காலம் எடுக்கிறது. அழிக்கப்பட்ட சம்ஸ்காரம் சில நேரம் மீண்டும் பிரத்யக்ஷம் ஆகி விடுகிறது ஆனால் இப்பொழுது லகனின் அக்னியில் பஸ்பம் செய்வதற்கான நேரம் ஆகும். அதன் மூலம் அந்த சம்ஸ்காரத்தின் பெயர் அடையாளமே இருக்க வேண்டாம்.

இந்த முக்திக்கான யுக்தி எது? அதாவது இந்த லகனின் அக்னியை உருவாக்குவதற்கான யுக்தி மற்றும் தீக்குச்சி எது? தீக்குச்சியினால் நெருப்பை எரிய வைக்கிறார்கள் இல்லையா? அப்படி இந்த அக்னியை சுடர்விடச் செய்வதற்கான தீக்குச்சி எது? அந்த ஒரு வார்த்தை எது? உறுதியான எண்ணம் என்றால் இறந்து விடுவோம். அழிந்து விடுவோம் என்பதாகும் ஆனால் செய்தே ஆக வேண்டும். செய்யத் தான் வேண்டும். ஆகத் தான் வேண்டும். செய்து கொண்டே இருக்கிறோம். ஆகியே விடும். கவனமோ இருக்கிறது, மேலும் உணரவும் செய்கிறோம் என்று இப்படி யோசிப்பதும் ஒருவிதத்தில் அணைந்து விட்ட தீக்குச்சி ஆகும். அடிக்கடி கடின உழைப்பும் செய்கிறீர்கள், நேரத்தையும் ஈடுபடுத்துகிறீர்கள் ஆனால் அக்னி சுடர்விட்டு எரிவதில்லை. இதற்கான காரணம், எண்ணம் என்ற விதை உறுதி என்ற சாரம் நிறைந்ததாக இல்லை அதாவது காலியாக இருக்கிறது. இதன் காரணமாக பழத்தின் எதிர்பார்ப்பாக என்ன வைக்கிறீர்களோ மற்றும் எதிர்காலத்தை யோசிக்கிறீர்களோ அது நிறை வேறாமல் ஆகி விடுகிறது மேலும் உழைப்பு அதிகம், பிராப்தியை குறைவாகப் பார்க்கிறீர்கள் என்றால் மனமுடைந்து மற்றும் அலட்சியமானவர்களாக ஆகி விடுகிறீர்கள். அதனால் தான் "செய்யத் தான் செய்கிறோம் ஆனால் கிடைப்பதில்லை என்றால் என்ன செய்வது, எங்களுடைய பங்கே அந்த மாதிரி" என்று கூறுகிறீர்கள். இது மனமுடைந்து போவது மற்றும் அலட்சியத்தின் பலன் கொடுக்காத எண்ணம் ஆகும்.

மற்ற ஆத்மாக்களுக்கு சங்கமயுகத்தின் விசேஷமாக நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? அனைவருக்கும் அசம்பவத்தை சம்பவமாக்கும்

சங்கமயுகம் என்று கூறுகிறீர்கள். எந்த விஷயத்தை முழு உலகமும் அசம்பவம் என்று நினைக்கிறதோ அதைச் சம்பவம் ஆக்குவதற்கான யுகம் இது தான். எனவே தனக்கும் எது கடினம் மற்றும் அசம்பவமாக அனுபவம் ஆகிறதோ அதை ஒரு நொடியில் சம்பவம் ஆக்குவது என்ற இது தான் உறுதியான எண்ணம் ஆகும். சுலபமாக மற்றும் சம்பவமாகுவதை நடைமுறையில் கொண்டு வருவது ஒன்றும் பெரிய விஷயமில்லை ஆனால் அசம்பவத்தை சம்பவமாக்குவது, அதுவும் உறுதியான எண்ணத்தினால் செய்வது, இது தான் கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவரின் அடையாளமாகும். இப்பொழுது இந்தப் புதுமையைச் செய்து காண்பியுங்கள். அப்பொழுது தான் இந்த புதுமைக்காக மதிப்பெண்கள் தருவோம். எப்படி மாணவன் ஒவ்வொரு வருடத்தின் ஒவ்வொரு பாடத்திலும் எத்தனை சதவிகிதம் பெற்று இருக்கிறேன் என்று மொத்த ரிசல்ட்டையும் பார்க்கிறார். அதே போல எந்த விஷயத்தில் ஏறும் கலை இருந்தது, எந்த முயற்சியின் ஆதாரத்தில் ஏறும் கலை இருந்தது மற்றும் எந்தப் பாடத்தில் குறை இருந்தது என்ற தன்னுடைய ரிசல்ட்டைப் பாருங்கள், அந்த முழுக் கணக்கையும் எடுங்கள். பாராட்டுக்களையும் பாப்தாதா எப்பொழுதும் கொடுக் கிறார் ஏனென்றால், உலகின் விசேஷமான நாளே இது தான் இல்லையா? இயற்கை தாசி ஆகிறது, ஆனால் தாசியின் தாசியாக ஒருபொழுதும் ஆகாதீர்கள். மேலும் தாசனாவதற்கான அடையாளமாக உதாசி அதாவது சோர்வு இருக்கும். ஏதாவது சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தின் தாசனாக ஆகிறீர்கள் என்றால் அப்பொழுது உதாஸ் அதாவது சோர்வுற்றவராக ஆகிறீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயசிந்தனையாளர், நற்சிந்தனையாளர் மற்றும் உலகை மாற்றம் செய்பவர்!

இன்று பாப்தாதா முழு சேனையின் தற்சமயத்து ரிசல்ட்டைப் (முடிவை) பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த ரிசல்ட்டை விசேஷமாக மூன்று விஷயங்களில் பார்த்தோம். எப்படி முக்கியமான நான்கு பாடங்கள் இருக்கின்றன, அதே போலவே இந்த நான்கு பாடங்களின் ரிசல்ட்டை மூன்று நிலைகளில் பார்த்தோம். அந்த மூன்று நிலைகள் யாவை? முதல் நிலை தனக்காக சுயசிந்தனையாளராக எவ்வளவு ஆகியிருக்கிறார்? இரண்டாவது நிலை -நெருங்கிய உறவு மற்றும் தொடர்பில் நற்சிந்தனையாளராக எவ்வளவு ஆகியிருக்கிறார்? மூன்றாவது நிலை உலக சேவையைப் பற்றி. அதில் உலகை மாற்றம் செய்பவராக எதுவரை ஆகியிருக்கிறார்? பரிவர்த்தனையின் நிலை மற்றும் சதவிகிதம் எவ்வளவு பிரத்யக்ஷ ரூபத்தில் ஆகியிருக்கிறது?

இந்த மூன்று நிலைகளின் ரிசல்ட்டினால் நான்கு பாடங்களின் ரிசல்ட்டும் தெளிவாகி விடுகிறது. முக்கியமானதோ முதல் நிலையாகும். சுயசிந்தனையாளராக எவ்வளவு ஆகியிருக்கிறார்? இதன் மேல் தான் மூன்று பாடங்களின் ரிசல்ட் ஆதாரமாக இருக்கிறது. முழு நாளும் சுயசிந்தனையாளராக எவ்வளவு இருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள்? எப்படி உலகை மாற்றம் செய்பவர் என்ற காரணத்தினால் உலகை மாற்றுவதற்கான திட்டங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறீர்கள். நேரத்தையும் நிச்சயம் செய்து கொண்டே இருக்கிறீர்கள், விதி மூலமாக புத்தியின் விதவிதமான திட்டங்கள் மற்றும் எண்ணமும் ஓடிக் கொண்டே இருக்கிறது அதே போல் சுயசிந்தனையாளராகி, சம்பூர்ணம் ஆவதற்கான விதியை ஒவ்வொரு நாளும் புதிய ரூபத்தில், புதிய வழிகளினால் யோசிக்கிறீர்களா? ரிசல்ட்டின் படி மூன்றாவது

நிலையின் திட்டங்களை அதிகமாக உருவாக்குகிறீர்கள். முதல் நிலையின் திட்டங்களுக்காக சில நேரம் ஊக்கம் மற்றும் உற்சாகத்தில் செல்கிறீர்கள். மேலும் சில நேரம், நேரம் கவனத்தை ஈர்க்கிறது மற்றும் ஏதாவது பிரச்சனை, ஏதாவது பாடத்தின் ரிசல்ட் கவனத்தை ஈர்க்கிறது, ஆனால் அந்த கவனம் தீவிர வேகத்தின் சொரூபத்தில் அற்பகாலம் இருக்கிறது.

இரண்டாவது நிலை நற்சிந்தனையாளரின் ரிசல்ட்டில் சுயசிந்தனையாளரை விட தற்சமயம் சதவிகிதம் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது ஆனால் வெற்றி மற்றும் காரியம் நிறைவேறுவது. மேலும் சுயத்தின் நிலையின் சம்பூர்ண நிலை எது வரை முதல் நிலை வேகமான ரூபத்தின் ரிசல்ட் வரை சென்றடையவில்லையோ அது வரை ஆக முடியாது. அதற்காக தனக்காக தன்னுடைய திட்டத்தை உருவாக்குங்கள். நிகழ்ச்சிகள் மூலம் நிகழ்ச்சிகள் உருவாகின்றன, அற்ப காலத்து முன்னேற்றம் அவசியம் ஏற்படுகிறது ஆனால் நிரந்தரமான முன்னேற்றத்திற்கான சாதனம் சுயசிந்தனையாளர் ஆவது.

தற்சமயத்திற்கு ஏற்றபடி முயற்சி செய்வதின் வேகம் சிந்தனை செய்வதற்குப் பதிலாக கவலைப் படும் சொரூபத்தில் இருக்க வேண்டும். சேவைக்கான விசேஷ நிகழ்ச்சிகளையோ உருவாக்குகிறீர்கள், எப்படி வெற்றியடையச் செய்வது, அதற்காகவும் இரவையும் பகலையும் சமமாக்கி விடுகிறீர்கள். கவலையும் இருக்கிறது ஆனால் இந்தக் கவலை சுக சொரூபமான கவலை ஆகும். அனேக விதமான கவலைகளை அகற்றக்கூடியது இந்தக் கவலை ஆகும். எப்படி அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபடுவதற்காக ஒரு நல்ல பந்தனத்தில் தன்னை கட்டிப்போடுகிறீர்கள். இந்த பந்தனத்தின் பெயர் பந்தனம் என்று இருந்தாலும் அது பந்தனமற்றவராக ஆக்கி விடுகிறது. அதே போலவே இதனுடைய பெயர் கவலை ஆகும் ஆனால் இதனுடைய பிராப்தி தந்தை மூலமான ஆஸ்திக்கானது. அதே போலவே இந்தக் கவலையிலிருந்து எப்பொழுதும் திருப்தியாக, மகிழ்ச்சியாக மற்றும் எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக இருப்பதற்கான நிலை மற்றும் ஸ்டேஜ் சுலபமாக ஆகி விடுகிறது.

எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இல்லை என்று தற்சமயம் எண்ணமோ உருவாகிறது மேலும். இந்தக் கவலையோ இருக்கவே இருக்கிறது. இது நடக்க வேண்டும், இதைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்யலாமா, இதைச் செய்யலாமா, இதுவோ கவலைக்கான ரூபம் ஆகும் ஆனால் கவலைக்கான சொரூபம் நடப்பது மற்றும் செய்வதாக இருக்கிறது, ஆவது மற்றும் ஆக்குவதாக இருக்கிறது. ஆக வேண்டும் என்ற இது கவலைக்கான சொரூபம் இல்லை. எதுவரை தனக்காக விசேஷ விதியை கடைபிடிக்கவில்லையோ அது வரை அது கவலைக்கான சொரூபமாக இருக்காது. அந்த விசேஷ விதி எது? இதைத் தெரிந்திருக்கிறீர்களா? எந்த புது விஷயத்தை சொல்வீர்கள்? விதியின் சித்தி தென்படுகிறதா? பழைய விதியை செய்து செய்து விதியின் ரூபமாகவே இருக்கவில்லை. மற்றபடி இன்னும் என்ன செய்ய வேண்டியது இருக்கிறது? செய்யும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அலட்சியம் ஏன் ஏற்படுகிறது? எதுவரை நேரத்தின் முடிவடையும் விஷயம் புத்தியில் நிச்சயமாக இல்லை என்பது தான் முக்கியமான விஷயம் ஆகும். நிச்சயமாக நடக்காத காரணத்தினால் கவலையற்று இருக்கிறீர்களா? அப்படி சேவைத் திட்டத்தில் நேரத்தை நிச்சயம் செய்கிறீர்களா? அப்பொழுதிலிருந்து கவலையற்று இருப்பது முடிவடைந்து விடுகிறது. அது போலவே தன்னுடைய சுய முன்னேற்றத்திற்காகவும் ஒருவேளை நேரத்தை நிச்சயம் செய்கிறீர்கள் என்றால் அதனுடைய விசேஷ ரிசல்ட்டை அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? எப்படி விசேஷமாக ஒரு மாதத்தில் நினைவு யாத்திரையின் புரோகிராமை நிச்சயம் செய்கிறீர்கள் என்றால் நாலாபுறத்திலும் விசேஷமான வாயுமண்டலம் மேலும் ரிசல்ட், விதியின் சித்தி சொரூபமாக உடனடி பலனின் ரூபத்தில் பார்த்தீர்கள். அதே போலவே தன்னுடைய முன்னேற்றத்திற்காக எதுவரை இவ்வளவு நேரத்திற்குள் ஒவ்வொரு விசேஷத்தின் வெற்றி சொரூபமாக ஆகத்தான் தான் வேண்டும் என்று நேரத்தை நிச்சயம் செய்யவில்லையோ மற்றும் நேரத்தின் சூழ்நிலை மூலம் சுயசிந்தனையின் கூடவே நற்சிந்தனையாளராகவும் ஆகத்தான் வேண்டும். அதுவரை வெற்றி சொரூபமானவராக எப்படி ஆவீர்கள்? எனவே தனக்கு. தானே ஆசிரியராகி எதுவரை தன்னை இந்த பந்தனத்தில் கட்டிப்போடவில்லையோ அது வரை மற்ற ஆத்மாக்களையும் அனைத்து பந்தனங்களிலிருந்தும் நிரந்தரமாக விடுதலை செய்ய முடியாது.

புரிந்ததா இப்பொழுது என்ன செய்வீர்கள்? எப்படி சேவையில் விதவிதமான தலைப்புகளின் வாரம் மற்றும் மாதத்தை கொண்டாடுகிறீர்கள். அதே போலவே சேவையின் கூடவே தனக்காக விதவிதமான யுக்திகளின் ஆதாரத்தில் நேரத்தை நிச்சயம் செய்யுங்கள்.

இந்த வருடம் பிரத்யேகமாக இந்த முயற்சி செய்வதற்கானது. நேரமோ இப்பொழுதும் குறைந்து கொண்டே செல்கிறது ஆனால் அதே போலவே இன்னும் வரும் நாட்களில் தனக்காக விசேஷமாக நேரம் இன்னும் குறைவாகவே கிடைக்கும். பின்பு என்ன செய்வீர்கள்? எப்படி இன்றைய மனிதர்களும் முன்போ இருந்தாலும் நேரம் கிடைத்தது, ஆனால் இப்பொழுதோ அந்த நேரமும் கிடைப்பதில்லை என்று கூறுகிறார்கள். அதே போல் தனக்காக தன்னுடைய இந்த முறையீடு இருந்து விட வேண்டாம். தனக்காக என்ன செய்ய வேண்டுமோ அதையோ செய்யவில்லை, ஏனென்றால், நேரம் எவ்வளவு அருகில் வந்து கொண்டிருக்கிறதோ அதன் பிரகாரம் இவ்வளவு உலகின் ஆத்மாக்களுக்கு மகாதானம் மற்றும் வரதானத்தின் பிரசாதத்தை கொடுப்பதிலேயே நேரம் சென்றுவிடும். எனவே சுயசிந்தனையாளர் ஆவதற்கான நேரம் அதிகம் இல்லை. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் மகாதானி, அனைத்து வரதானி, சுயசிந்தனையாளர் மற்றும் நற்சிந்தனையாளர், உலகின் ஒவ்வொரு ஆத்மாவிற்காக எப்பொழுதும் இரக்கமனமுடைய மாஸ்டர் சர்வ சக்திகளின் கடல், எண்ணம் மற்றும் ஒவ்வொரு வார்த்தை மூலமாக உலக நன்மைக்கான காரியத்திற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு, வெற்றி ரத்தின ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: பொறுப்புணர்வின் பயிற்சி மூலமாக தன்னுடைய மற்றும் அனைவரின் வளர்ச்சியை செய்யக்கூடிய விலகிய மற்றும் அன்பானவர் ஆகுக!**

பொறுப்பானவர் ஆவதற்கான பங்கு விலகியவர் மற்றும் அன்பானவராக ஆக்குகிறது. ஒருவேளை பொறுப்புணர்விற்கான பயிற்சி இயல்பாகவும் மற்றும் சுலபமாகவும் இருக்கிறது என்றால் எப்பொழுதும் தன்னுடைய

வளர்ச்சி மற்றும் அனைவரின் வளர்ச்சி ஒவ்வொரு அடியிலும் அடங்கியிருக்கிறது. அந்த ஆத்மாக்களின் பாதம் பூமியில் இல்லை, ஆனால் மேடையில் இருக்கிறது. பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களுக்கு உலகின் எதிரில் தந்தைக்குச் சமமாக ஒரு உதாரணமாக இருக்கிறேன் என்ற நினைவு சொரூபத்தில் எப்பொழுதும் இருக்கிறார்கள்.

**சுலோகன்: சுக வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் சுகத்தின் ஊஞ்சலிலேயே ஆடிக் கொண்டிருங்கள், துக்கத்தின் அலைகளில் வராதீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 04.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞானத்தை தன்னுள் நிரப்புவதினால் தான் விலைமதிக்க முடியாத முத்து மற்றும் அளவில்லா சக்தியின் பிராப்தி ஆகிறது!

அனைத்து சங்கமயுக உயர்ந்த ஆத்மாக்கள் இந்த நேரம் சாதகப் பறவைகளுக்குச் சமமாக இருக்கிறார்கள், எப்படி ஒரு துளி நீரை தன்னுள் நிரப்புவதினால் அதை முத்தாக்கி விடுகிறது என்று நத்தையைப் பற்றிக் கூறுகிறார்கள், அதே போல் நீங்கள் அனைவரும் ஞானத்தின் மகாவாக்கியங்களை கேட்கிறீர்கள் மற்றும் தாரணை செய்கிறீர்கள், கேட்கும் அந்த ஒவ்வொரு வார்த்தையும் என்னவாகி விடுகிறது? நீங்களும் அதை முத்தாக்கி விடுகிறீர்கள். மேலும் இங்கு ஒவ்வொரு வார்த்தையும் பல கோடி மடங்கு செல்வம் நிறைந்தவராக ஆக்குவதாக ஆகி விடுகிறது. ஒவ்வொரு வார்த்தையும் எப்பொழுது அதை தாரணை செய்கிறீர்களோ அப்பொழுது அது விலைமதிக்க முடியாததாக ஆகி விடுகிறது. எப்படி சாதகப் பறவைகள் நீர்த்துளியை ஏற்று விழுங்கி விடுகின்றனவோ, அதே போல் நீங்களும் இந்த ஞானத்தைக் கேட்டு உள்ளடக்கிக் கொள்கிறீர்கள். உள்ளடக்கியதற்கான பிரத்யக்ஷ சொரூபமாக என்ன தென்படுகிறது? அந்த மாதிரியான ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு செயல் பலகோடி மடங்கு சேமிப்பதற்கான ஆதாரம் ஆகி விடுகிறது. அதாவது ஒவ்வொரு விநாடி கேட்கும் வார்த்தையால் அந்த ஆத்மா பல மடங்கு செல்வம் நிறைந்து தென்படுகிறது. ஸ்தூல் செல்வத்தின் போதை மற்றும் குஷி கூட முகத்தில் பிரகாசமாகத் தென்படும் ஆனால் அது அற்ப காலத்திற்காகத் தான் இருக்கிறது. மாறாக ஞான சாதகப் பறவைகளின் முகத்தில் குஷியின் ஜொலிப்பு எப்பொழுதும் தென்படுகிறதா?

தன்னுடைய கண்ணாடியில், மூன்றாவது கண் மூலமாக தன்னுடைய அந்த ஜொலிப்பை ஒவ்வொரு நேரமும் பார்க்கிறீர்களா? ஒவ்வொரு விநாடியின் சேமிப்பு கணக்கை சோதனை செய்கிறீர்களா? எவ்வளவு சேமிப்பு ஆகிறது மற்றும் எவ்வளவு நஷ்டம் ஆகிறது என்று அப்படி தன்னுடைய தெளிவான கணக்கை வைத்துக் கொள்ளும் பயிற்சி உடையவராக ஆகியிருக்கிறீர்களா? விசேஷமாக நேரத்தை எடுத்து வரவு செலவு கணக்கைப் பார்க்கிறீர்களா? இந்த நேரம் வருமானம், அடுத்த நேரம் நஷ்டம் இந்த ஏற்றம், இரக்கம் ஒருவேளை அதிகமாக இருக்கிறது என்றால் யோசிப்பதற்கு, பார்ப்பதற்கு மற்றும் செய்வதற்காக விசேஷமாக நேரத்தை எடுக்க வேண்டியதாக இருக்கும். ஒருவேளை ஒரே சீரான வருமானம் இருக்கிறது, சேமிப்பே ஆகிக் கொண்டிருக்கிறது, அடிக்கடி நஷ்டத்திற்கான எந்த விஷயமும் இல்லை, அதாவது கணக்கு தெளிவாக இருக்கிறது என்றால் எந்த நேரம் விரும்பினாலும் ஒரு நொடியில் கணக்கைப் பார்க்க முடியுமா? முடிவாக என்னவாக பார்க்கிறீர்கள்? இப்பொழுதோ அனேக ஆத்மாக்களின் அனேக ஜென்மங்களாக உருவாக்கப்பட்ட கணக்கு, பாவ கர்மத்தின் கணக்கு என்று எவை கூறப்படுகிறதோ, அதை அழிக்கச் செய்விக்கக்கூடியவர்கள் நீங்கள், நீங்களே உங்களுடைய கணக்கை அந்த மாதிரி உருவாக்க முடியாது. இதுவோ பழைய கணக்கு ஆகும். நீங்களோ பழைய கணக்கை முடித்து விட்டு புதிய ஜென்மம், புதிய கணக்கை உருவாக்குபவர்கள் ஆவீர்கள். பழைய கணக்கு அனைத்தும் முடிந்து கொண்டிருக்கின்றன என்று அப்படி அனுபவம் ஆகிறதா? ஒருவேளை பழைய கணக்கை முழுமையாக முடிக்கும் யுக்தி தெரியவில்லை என்றால் கொஞ்சம் மிச்சமிருக்கும் இந்த கணக்கு அடிக்கடி மனதை உருத்திக் கொண்டே இருக்கும்.

இங்கேயும் ஒருவேளை மாயாவின் ஏதாவது கடன் இருக்கிறது என்றால் கடன்காரன் அடிக்கடி தொந்தரவு செய்வான். அந்த மாதிரியான கடனை சுமை என்று கூறப்படுகிறது. இங்கேயும் மாயாவின் ஏதாவது பழைய கடன் இருந்து விட்டது என்றால், மாயா அடிக்கடி தொந்தரவு செய்கிறது, மேலும் ஏதாவது மனது சம்மந்தப்பட்ட கடன் ரூபத்தில் தொந்தரவு செய்கிறது. இந்தக் கடனை அடைக்க வேண்டியதாக இருக்கும். எனவே ஏதாவது மீதமிருக்கும் கடன், எண்ணம் மற்றும் சம்ஸ்காரத்தின் ரூபத்தில் அல்லது சுபாவத்தின் ரூபத்திலோ இன்னும் பாக்கி இருந்து

விடவில்லையே என்று தன்னுடைய கணக்கை சோதனை செய்யுங்கள். எப்படி உடல் நோய் மற்றும் கடன் புத்தியை ஒருமுகப்படுத்த விடுவதில்லை, விரும்பாவிட்டாலும் அடிக்கடி தன் பக்கம் இழுத்து விடுகிறது, அதே போலவே இந்த மனம் சம்மந்தப்பட்ட கடன் புத்தியின் நினைவை ஒருமித்திருக்க விடுவதில்லை. மாறாக தடை ரூபம் ஆகி விடுகிறது.

இப்பொழுதோ நேரத்தின் முடிவின் அருகாமை என்றால் தன்னுடைய அனைத்து கணக்கை சோதனை செய்யுங்கள் மற்றும் முடித்து விடுங்கள். கணக்கு பார்க்கத் தெரியும் இல்லையா? மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக இருக்கிறீர்கள் இல்லையா? பழைய கணக்கின் கடன் வீணான எண்ணம், தீய எண்ணத்தின் ரூபத்தில் இருக்கும் அல்லது ஏதாவது சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தின் ரூபத்தில் இருக்கும். எண்ணம் ஒன்றாக இருக்கிறதா என்று இந்த விஷயங்களையும் சோதனை செய்யுங்கள். ஒருவரைத் தான் நினைவு செய்கிறார்கள், மேலும் ஒருவரைத் தான் நினைவு செய்ய விரும்புகிறார்கள், நடப்பதோ வேறொன்றாகும். தன் பக்கம் எது இழுக்கிறது, ஏன் இழுக்கிறது? ஏதாவது சுமை இருக்கிறதா அது தன் பக்கம் இழுக்கிறதா? லேசான பொருள் ஒருபொழுதும் கீழே வராது அது பறக்கும் கலையில் தான் இருக்கும். எந்த விதமான சுமை எவ்வளவு தான் உயரே செல்ல வேண்டும் என்று விரும்பினாலும் மேலே செல்லாது, மாறாக கீழே தான் வரும். அதுபோலவே முழு நாளின் எண்ணம், சொல், செயலில், உறவு நெருக்கத்தில் மற்றும் சேவையில் இந்த விஷயங்களை சோதனை செய்யுங்கள்.

சேவையில் கூட, திட்டம் மற்றும் நடைமுறையில், எண்ணம் மற்றும் காரியத்தில் ஏன் வித்தியாசம் இருக்கிறது? அந்த வித்தியாசத்தின் காரணத்தை யோசித்தீர்கள் என்றால், ஏதாவது குறை இருக்கும் காரணத்தினால் திட்டம் மற்றும் நடைமுறையில் வித்தியாசம் இருக்கிறது என்று தெளிவாகத் தென்படும். எப்படி போர்வீரன் போர்க்களத்தில் அனைத்து ஆயுதங்களையும் ஏந்திச் செல்லவில்லை என்றால், தேவையான நேரத்தில் ஏதாவது சாதாரண ஆயுதத்தின் தேவை ஏற்பட்டு விடுகிறது என்றால், அந்த சாதாரண ஆயுதத்தின் குறை கூட மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்தி விடும். இங்கேயும் அனைத்து சக்திகளும் அதாவது அனைத்து ஆயுதங்களும் தேவையாக இருக்கிறது. தன்னுடைய புத்தியால் இது சாதாரண விஷயம் என்று ஒருவேளை

நிர்ணயம் செய்யலாம், ஆனால் அந்த சாதாரண விஷயம் தான் அந்த நேரத்தில் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுக்கும். எனவே உங்களுடைய பட்டமே மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகும். தந்தை சர்வ சக்திவானாக இருக்கிறார் மற்றும் குழந்தைகள் மாஸ்டர் சர்வ சக்திவான்கள். வெற்றி அடைவதின் அர்த்தமே அனைத்து ஆயுதங்களையும் ஏந்தியவர். சோதனை செய்வதின் கூடவே ஏன் மாற முடிவதில்லை. எப்பொழுது அனைத்து சக்திகளும் தனக்குள் அடங்கியிருக்குமோ அப்பொழுது மாற்றம் ஏற்படும். அதாவது ஞானம் நிறைந்ததின் கூடவே சக்தி நிறைந்த நிலை இரண்டிற்கும் சமநிலை வேண்டும். ஒருவேளை ஞானம் நிறைந்த நிலை 75 சதவிகிதமும், சக்தி நிறைந்த நிலையில் 3-4 மதிப்பெண்கள் குறைவாக இருக்கிறது என்றாலும், சமநிலை சரியானதாக வேண்டும். ஞானம் நிறைந்த நிலையின் ரிசல்ட் திட்டமிடுவது. சக்திநிறைந்த நிலையின் ரிசல்ட் நடைமுறைப்படுத்துவது. ஞானம் நிறைந்த நிலையின் ரிசல்ட் எண்ணம் மற்றும் சக்தி நிறைந்த நிலையின் ரிசல்ட் சொரூபத்தில் வருவது. இரண்டின் அருகாமை மற்றும் சமநிலை தான் இரண்டும் சமமான ரூபம் ஆவது அதாவது சம்பூர்ணம் ஆவது. யோகா மற்றும் சேவையில் எவ்வளவு நேரம் தன்னை பிஸியாக வைப்பீர்களோ அப்பொழுது இயல்பாகவே பலஹீனம் வருவதற்கான தைரியம் மற்றும் வாய்ப்பு கிடைக்காது. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 05.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தூய்மை பிரத்யக்ஷதாவின் முன்னோடி மற்றும் தனித்தன்மையின் (பர்சனாலிட்டி) பிறப்பிடமாகும்!

இன்று தந்தை அனைத்து தேவர்களுக்கும் தேவரான, அனைத்து ராஜாக்களுக்கும் ராஜாவாக ஆக்கக்கூடிய படைப்பவரின் படைப்பு அதாவது உயர்ந்த ஆத்மாக்களின் உயர்ந்த பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையை விட உயர்வானவர்களாக ஆகக்கூடிய ஆத்மாக்கள் நீங்கள். இன்று அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களின் இரண்டு முக்கியமான விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவை யாவை? ஒன்று ஆன்மீக ராயல்டி. இன்னொன்று. பெர்சனாலிட்டி உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்த குழந்தையாக இருக்கும் உங்கள் எதிரில் தேவதைகள் கூட உயர்ந்தவர்கள் என்று மகிமை செய்யப்படுவதில்லை, ராஜாக்களும் காலடியில் வணங்குகிறார்கள். மேலும் அனைத்து பெயர், புகழ் பெற்ற ஆத்மாக்களும் பிச்சைக்காரனாகி ஈஸ்வரிய பிரசாதத்தை பெறுவதற்காக ஆர்வத்துடன் வரக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்றால், அந்த மாதிரி அனைத்து ஆத்மாக்களின் பொறுப்பாளர் ஆகியிருக்கும் நீங்கள் அனைவரும் மாஸ்டர் ஞான வள்ளல் மற்றும் வரமளிக்கும் வள்ளல் ஆவீர்கள். அப்படியானால் அந்த மாதிரி ராயல்டி இருக்கிறதா? உண்மை யிலேயே தூய்மை தான் ராயல்டி ஆகும். மேலும் தூய்மை தான் பெர்சனாலிட்டி ஆகும். இப்பொழுது எவ்வளவு சதவிகிதம் தூய்மை தாரணை செய்யப்பட்டிருக்கிறது என்று தன்னைத் தானே பாருங்கள். ஒவ்வொருவரின் ராயல்டி மற்றும் பெர்சனாலிட்டி மூலமாக அவர்களது தூய்மையை அறிந்து கொள்ள முடிகிறது.

ராயல்டி எது? ராயல் ஆத்மாவிற்கு எல்லைக்குட்பட்ட அழியும் பொருள் மற்றும் நபர் மீது ஒருபொழுதும் ஈர்ப்பு இருக்காது. எப்படி லௌகீக

முறையில் ராயல் பெர்சனாலிட்டி உள்ள ஆத்மாவிற்கு சிறு சிறு பொருட்கள் மீது அவருடைய பார்வை செல்லாது, யார் மூலமாக கீழே விழுந்த எந்த ஒரு பொருளை எடுத்துக் கொள்வதற்கான ஆசை இருக்காது. அவருடைய கண் எப்பொழுதும் நிரம்பியிருக்கும் போதையில் இருக்கின்றன, அதாவது கண்கள் கீழே பார்ப்பதில்லை. அவர்களுடைய வார்த்தைகள் இனிமையானதாக மற்றும் விலைமதிக்க முடியாததாக அதாவது மிகக் குறைந்ததாக இருக்கும். மேலும் அவருடைய நெருக்கத்தில் மகிழ்ச்சி அனுபவம் ஆகும். அதே போலவே ஆன்மீக ராயல்டி அதையும் விட பல மடங்கு உயர்ந்ததாகும். அந்த மாதிரி ராயல்டியில் இருக்கும் ஆத்மாக்களின் பார்வை ஒருபொழுதும் ஒவ்வொருவரின் அவகுணங்கள்.அல்லது பலஹீனங்களின் பக்கம் செல்ல முடியாது. எதை மற்றவர் விட்டுக் கொண்டிருக்கிறார் அதாவது அகற்றுவதின் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார், அந்த மாதிரி விடப்படும ஒன்றை அதாவது வீழ்ச்சியில் கொண்டு வரும் ஒன்றை மற்றும் கீழே விழுந்துள்ள ஒன்றை ஆன்மீக ராயல்டி உள்ளவரின் எண்ணத்திலும் தாரணை ஆக முடியாது மற்றும் மற்றவர்களின் பொருளின் பக்கம் ஒருபொழுதும் பார்வையும் செல்லமுடியாது. அப்படி இந்த பழைய கீழ்த்தரமான சுபாவம், சம்ஸ்காரம் மற்றும் பலஹீனங்கள் சூத்திரர்களினுடையதே அன்றி பிராமணனர்களினுடையது அல்ல. சூத்திரர்களின் பொருளின் பக்கம் எண்ணம் எப்படி போக முடியும்? ஒருவேளை தாரணை செய்கிறீர்கள் என்றால், எப்படி பழமொழி இருக்கிறதோ -சிறிய பொருளை திருடும் பழக்கம் இருந்தால் பெரிய பொருளையும் திருடுவார் என்று, அப்படி இதுவும் நொடி அளவில், எண்ண அளவில் சிறிது தாரணை செய்தாலும் அந்த ஆத்மாக்கள் ராயல் என்று அழைக்கப்படுவதில்லை. ஆன்மீக ராயல்டியில் உள்ள ஆத்மாக்களின் வார்த்தைகள் மகாவாக்கியமாக இருக்கும். இந்த வாக்கியங்கள் பொன்மொழிகளாக இருக்கும். அதைக் கேட்பவர்களும் பொற்காலத்திற்கு அதிகாரி ஆகி விடுகிறார்கள். ஒவ்வொரு வார்த்தையும் இரத்தினத்திற்குச் சமமாக மதிப்புள்ளதாக இருக்கும். அவை துக்கம் கொடுக்கக்கூடியதாக, கீழே இறக்குவதாக அல்லது கல்லுக்குச் சமமான வார்த்தைகளாக இருப்பதில்லை, சாதாரணமானதாகவும், வீணானதாகவும் இருப்பதில்லை, சக்தி நிறைந்த மற்றும் அன்பான வார்த்தைகளாக இருக்கும். முழு நாளும் உச்சரிக்கப்பட்ட வார்த்தைகள் அந்த மாதிரி உயர்ந்ததாக இருக்கும்.

கணக்கெடுத்துப் பார்த்தால் இன்று அந்த மாதிரி இத்தனை வார்த்தைகள் சொல்லியிருக்கிறார் என்று நினைவில் வர முடியும். ராயல்டி உள்ளவரின் அடையாளம் மற்றும் விசேஷமானது 50-வார்த்தைகள் பேசக்கூடிய விஸ்தாரத்திற்குப் பதிலாக பத்து வார்த்தைகள் சாரம் நிறைந்ததாகப் பேசுவார்கள். அளவைக் குறைத்து தரத்தில் கொண்டு வருவார்கள். ஆன்மீக ராயல்டி உள்ளவர்களின் நெருக்கத்தில் எந்த ஆத்மா வந்தாலும் அவருக்கு சற்று நேரத்திலேயே அந்த ஆத்மாவின் வள்ளல் தன்மை மற்றும் வரமளிக்கும் தன்மையின் அனுபவம் ஏற்படும். சீதளத்தன்மை மற்றும் சாந்தியின் அனுபவம் ஏற்படும். ஒவ்வொருவரின் மனதிலும் யார் இந்த ஃபரிஷ்தா! என்னுடைய நெருக்கத்தில் வந்தார் என்று குணமகிமை செய்வார்கள். சிறிது நேரத்தில் கூட அம்மாதிரி துடித்துக் கொண்டிருக்கும் மற்றும் அலைந்து கொண்டிருக் கும் ஆத்மாவிற்கு வெகு காலத்து தாகம் தீர்வதற்கான சாதனம் மற்றும் புகலிடம் தென்பட ஆரம்பிக்கும். இதைத் தான் பாரஸ் (தங்கம்) உடன் சேர்ந்த இரும்பும் பாரஸ் (தங்கம்) ஆகி விடும் என்று கூறுவது அதாவது ஆன்மீக ராயல் ஆத்மாக்களின் ஆன்மீக பார்வையினால் நன்மை அடைந்து விட வேண்டும். அந்த மாதிரி ராயல்தன்மையை அனுபவம் செய்கிறீர்களா?

இப்பொழுது சேவையின் வேகம் தீவிரமாக வேண்டியது இருக்கிறது. அது எப்பொழுது ஆகும் என்றால், எப்பொழுது அந்த மாதிரி ஆன்மீக ராயல் தன்மை உங்களுடைய முகத்தில் இருந்து தென்படுமோ அப்பொழுது. அப்பொழுது தான் அனைத்து ஆத்மாக்களின் வேண்டுதல்களை நிறைவேற்ற முடியும். நெற்றி மூலமாக சுத்தமான ஆத்மா மற்றும் உயர்ந்த ஆத்மா என்று தென்பட வேண்டும் அதாவது அனுபவம் செய்ய முடிய வேண்டும், கண்கள் மூலமாக சகோதரன் - சகோதரனின் உள்உணர்வு அதாவது சுத்தமான, உயர்ந்த உள்உணர்வு மூலமாக சூழ்நிலையை மற்றும் அதிர்வலைகளை மாற்ற முடிய வேண்டும். அந்த மாதிரியான தூய்மையின் பெர்சனாலிட்டி இருக்க வேண்டும். லௌகீக பெர்சனாலிட்டி உள்ள ஆத்மா கூட தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்த முடியும் என்றால், தூய்மையின் பெர்சனாலிட்டி ஆத்மாக்கள் எவ்வளவு பிரபாவம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். சுத்தமான நினைவு மூலமாக பலமற்ற ஆத்மாக்களை சக்தி நிறைந்த சொரூபமானவர்களாக ஆக்க முடியுமா? அந்த மாதிரியான

ராயல்தன்மையை மற்றும் தனித்தன்மையை தன்னில் பிரத்யக்ஷ ரூபத்தில் கொண்டு வாருங்கள். அப்பொழுது தான் தன்னை மற்றும் தந்தையை பிரத்யக்ஷம் செய்ய முடியும். இப்பொழுது விசேஷமாக இரக்க மனமுடையவர் ஆகுங்கள். தன் மேலும் மற்றும் அனைவர் மேலும் இரக்க மனமுடையவர் ஆக வேண்டும். அப்பொழுது சுலபமாகவே அனைவரின் அன்பிற்குரிய மற்றும் சகயோகியாக ஆகி விடுவீர்கள். புரிந்ததா? அந்த மாதிரி பாக்கியத்தின் நட்சத்திரம் ஜொலித்துக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? அந்த மாதிரி பூமியின் நட்சத்திரங்களை ஜொலித்துக் கொண்டிருப்பதாக அனைவரும் பார்க்க விரும்புகிறார்கள்.

நல்லது. பொன்மொழிகள் மூலமாக பொற்காலத்தை கொண்டு வரக்கூடிய, அனைவர் மேலும் எப்பொழுதும் இரக்கமனமுடைய, அனைத்து குணங்களினால் நிரம்பிய, அனைத்து பிராப்தி செய்யக்கூடிய, ஒரு ஆத்மாவைக் கூட வஞ்சிக்கப்படாது ஆக்கக்கூடிய, அந்த மாதிரி எப்பொழுதும் வள்ளலாக இருப்பவருக்கு, ஆன்மீக ராயல்டி மற்றும் பெர்சனாலிட்டியில் (தனித்தன்மையில்) இருக்கக்கூடிய, எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: எல்லைக்குட்பட்ட ஆசைகளை தியாகம் செய்து நல்லவர் ஆவதற்கான விதி மூலமாக அனைத்து பிராப்தி நிரம்பியவர் ஆகுக!**

யார் எல்லைக்குட்பட்ட ஆசைகள் வைக்கிறார்களோ அவர்களுடைய ஆசைகள் ஒருபொழுதும் முடிவுக்கு வராது. நல்லவர்களாக ஆகக்கூடியவர்களின் அனைத்து நல் ஆசைகளும் தானாகவே நிறைவேறி விடுகிறது. வள்ளலின் குழந்தைகளுக்கு எதையும் கேட்பதற்கான அவசியமே இருக்காது. கேட்பதினால் எதுவும் கிடைக்காது. கேட்பது என்றால் ஆசை, எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் எண்ணம் எல்லைக்குட்பட்ட ஆசை இல்லாமல் இருக்கிறது என்றால், அது அவசியம் நிறைவேறும் - எனவே எல்லைக்குட்பட்ட ஆசை வைப்பதற்குப் பதிலாக நல்லவர் ஆவதற்கான விதியைக் கடைபிடித்தீர்கள் என்றால், அனைத்து பிராப்திகளினால் நிரம்பியவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: நினைவு மற்றும் சுயநலமற்ற சேவை மூலமாக மாயாவை வென்றவர் ஆவது தான் வெற்றியாளர் ஆவதாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திருப்தி தான் சம்பூர்ண நிலையின் அடையாளம் ஆகும்!

அனைவரும் இந்த நேரம் தன்னுடைய தோற்றம் மற்றும் எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ள முடியுமா? எவ்வளவிற்கு எவ்வளவு நேரத்தின் அருகில் சென்று கொண்டிருக்கிறீர்களோ, நேரத்திற்கு ஏற்றபடி தன்னுடைய சம்பூர்ண நிலையின் அடையாளங்கள் அனுபவத்தில் வருகிறதா? சம்பூர்ண நிலையின் முக்கியமான அடையாளங்கள் யாவை? ஆத்மா சம்பூர்ண நிலையை அடைந்து கொண்டிருக் கிறது என்பது முக்கியமாக எந்த விஷயத்தில் அனைவருக்கும் அனுபவம் ஆகிறது? முக்கியமான விஷயம் இது தான், அந்த மாதிரி ஆத்மா எப்பொழுதும் தன் மேல் அனைத்து பாடங்களிலும் திருப்தியாக இருப்பதற்கான அனுபவம் செய்வார். மேலும் கூடவே மற்ற ஆத்மாக்களும் அவர் மேல் எப்பொழுதும் திருப்தியாக இருப்பார்கள். அப்படி திருப்தி தான் சம்பூர்ணத்தின் அடையாளம் ஆகும். எவ்வளவிற்கு எவ்வளவு அனைத்து ஆத்மாக்களின் திருப்தியின் ஆசீர்வாதம் மற்றும் சூட்சும அன்பு மேலும் சகயோகத்தின் பிரதிபலன் ஒவ்வொரு நேரமும் கிடைக்கிறதோ அந்த அளவு சம்பூர்ண நிலையின் அருகில் வந்திருக்கிறோம் என்று இதிலிருந்து புரிந்து கொள்ளுங்கள், யார் எப்படிப்பட்ட சம்ஸ்காரம் உள்ளவராக இருந்தாலும், திருப்தி இல்லாமல் இருக்கக்கூடிய ஆத்மா நெருக்கத்தில் வந்தாலும், அவரும் நான் என்னுடைய சம்ஸ்காரங்களின் காரணமாகத் தான் அதிருப்தியாக இருக்கிறேன் என்று அனுபவம் செய்யட்டும் ஆனால் இந்த விசேஷ ஆத்மாக்களிடமிருந்து எனக்காக அன்பு, சகயோகம் மற்றும் இரக்கமனதின் சுபபாவனை இருப்பதாக எப்பொழுதும் பார்க்கத் தென்படுகிறது, இவ்வாறு அவர் தன்னுடைய பலஹீனத்தை உணரட்டும். இது தான் அதிசயம் ஆகும். இந்த பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள், ஆத்மா என்னை திருப்தி செய்ய முடியாது என்ற இந்த புகார் எழ வேண்டாம். அனைத்து ஆத்மாக்கள் மூலமாக அந்த மாதிரி திருப்தியானவர் என்ற சான்றிதழ் கிடைக்க வேண்டும். அப்பொழுது

தான் இவர் சம்பூர்ண நிலையின் அருகில் இருக்கிறார் என்று கூறுவோம். எவ்வளவு சம்பூர்ண நிலை நிரம்பிக் கொண்டிருக்குமோ அந்த அளவே அனைத்து ஆத்மாக்களின் திருப்தியும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். அனைவரையும் திருப்திபடுத்துவதற்கான முக்கியமான சாதனம் எது? (ஒவ்வொருவரும் கூறினார்கள்) இந்த அனைத்து விஷயங்களும் அவசியம் தான். இந்த அனைத்து விஷயங்களும் சூழ்நிலையில் நடைமுறையில் கொண்டு வருவதற்கானவை. எப்படி நேரமோ எப்படி சூழ்நிலையோ எந்த விதமான ஆத்மா எதிரில் இருக்கிறதோ அந்த மாதிரி தன்னை வளைத்துக் கொள்ள முடிய வேண்டும் என்பது தான் முக்கியமான விஷயம் ஆகும். தன்னுடைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தின் வசமானவராகவும் ஆக வேண்டாம். சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் அந்த மாதிரி அனுபவம் ஆக வேண்டும். ஸ்தூல ரூபத்தில் எப்படி நேரமோ அப்படி ரூபம், எப்படி தேசமோ அப்படி வேஷத்தை உருவாக்குகிறார்கள் - அந்த மாதிரி சுலபமாக அனுபவம் ஆகிறதா? அந்த மாதிரி தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரத்தையும் நேரத்திற்கு ஏற்றபடி பரிவர்த்தனை செய்ய முடியுமா? எந்தவொரு கடுமையான பொருளும் வளைய முடியாது. கடுமையான சம்ஸ்காரமும் நேரத்திற்கு ஏற்றபடி வளைந்து கொடுக்க முடியாது. எனவே எப்படி நேரமோ அப்படி உருவாக்க முடியும் அளவிற்கு ஈஸியான சம்ஸ்காரமாக இருக்கட்டும். இந்த பயிற்சி இருக்க வேண்டும். என்னிடமும் ஏதோ சம்ஸ்காரம் இருக்கிறது. ஏதோ சுபாவம் இருக்கிறது என்று எண்ணத்திலும் வர வேண்டாம். எது அனாதி ஆதி சம்ஸ்காரமாக இருக்கிறதோ அதுவே சொரூபத்திலும் இருக்கட்டும்.

சம்ஸ்காரங்களின் பரிவர்த்தனை அனாதி காலத்திலிருந்தே இருக்கிறது அதாவது காலச்சக்கரத்தில் வருவதினாலேயே பரிவர்த்தனையில் வந்து கொண்டே இருக்கிறார்கள். அப்படி ஆத்மாவில் சம்ஸ்கார பரிவர்த்தனையின் பயிற்சி இயல்பாகவே இருக்கிறது. சில நேரம் சதோபிரதானம், சில நேரம் சதோ, ரஜோ மற்றும் தமோ சம்ஸ்காரம் நேரத்திற்கு ஏற்றபடி மாறிக் கொண்டே இருக்கிறது. இப்பொழுது நீங்கள் ஞானம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள் என்றால், உயர்ந்ததிலும் உயர்ந்த மேடையில் நடிகனாகி உங்களுடைய பங்கைச் செய்து கொண்டிருக்கிறீர்கள், சக்தி நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள், ஆனந்தம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். சர்வ சக்திவானின்

ஆஸ்தியின் அதிகாரியாகவும் இருக்கிறீர்கள் என்றால் சுபாவம், சம்ஸ்காரத்தை நேரத்திற்கு ஏற்றபடி, சேவைக்கு ஏற்றபடி, யாருக்காவது நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக மற்றும் சுயத்தின் முன்னேற்றத்திற்காக பரிவர்த்தனை செய்வது மிகச் சுலபமாக அனுபவம் ஆக வேண்டும் -இது தான் விசேஷ ஆத்மாக்களின் கடைசி விசேஷ முயற்சி ஆகும். அந்த மாதிரி முயற்சி செய்வதின் அனுபவியாக இருக்கிறீர்களா? அந்த மாதிரி சம்பூர்ண தங்கமாக ஆகி விட்டீர்களா? இதன் மூலம் தன்னுடைய வரிசை எண்ணை சோதனை செய்ய முடியுமா மற்றும் தன்னுடைய சங்கமயுக எதிர்காலத்தின் ரிசல்ட்டை தெரிந்து கொள்ள முடியுமா? பொறுப்பாளர் ஆகியிருக்கும் விசேஷ ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? சுபாவம், சம்ஸ்காரத்தை தன்னுடைய ஆயுதத்தின் சொரூபத்தில் உபயோகிக்க முடியுமா அல்லது கடினமா? என்று இதனுடைய சதவிகிதத்தைப் பாருங்கள். இந்த விஷயத்தில் வெற்றியின் எத்தனை சதவிகிதம் இருக்கிறது. தூரமாக இருப்பவர் குஷியாக இருப்பார் என்று ஒதுங்குபவராக இருக்க வேண்டாம். நெருக்கத்தில் வந்தும், உறவில் வந்தும் தானே தன்னுடைய உறவு நெருக்கத்தை அதிகரித்து வெற்றி அடைபவராக ஆக வேண்டும் அப்பொழுது தான் வரிசை எண்ணை முன்னுக்குப் பெற முடியும். எல்லைக்கு அப்பாற்பட்ட அதிபதியின் எல்லைக்கு அப்பாற்பட்ட சம்மந்தம் தேவையில்லையா? அது எப்படி ஏற்படும்? வாய்ப்பு கிடைப்பதில்லை ஆனால் ஒவ்வொரு காரியத்தின் தகுதி மற்றும் தன்னுடைய தகுதிகள் தானாகவே பொறுப்பாளர் ஆக்கி விடுகிறது. எப்படி சாகார பாபாவின் விசேஷத்தைப் பார்த்தீர்களோ அந்த மாதிரியான விசேஷங்களை இந்த வருடத்தில் காண்பியுங்கள். ஒவ்வொருவரின் உள்ளத்தில் என்னுடைய பாபா என்ற ஓசை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கட்டும். யாராக இருந்தாலும் அவரும் "என்னுடைய பாபா" என்ற இந்த அனுபவம் ஒவ்வொருவருக்கும் இருக்கட்டும். அந்த மாதிரி அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்காக எதுவரை அனைத்து ஆத்மாக்கள் மூலமாக இந்த அன்பிற்கான மற்றும் அதிகாரத்திற்கான தன்னுடையவர் என்ற ஓசை எழவில்லையோ அதுவரை உலகத்தின் அதிபதியின் சிம்மாசனதாரியாக ஆக முடியாது என்று புரிந்து கொள்ளுங்கள். அந்த மாதிரி வெற்றியின் அடையாளம் தென்படட்டும். ஒவ்வொருவரும் இவர்கள் உலக நன்மை காரியத்திற்கான விசேஷ ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்யட்டும். இது தான் சம்பூர்ண நிலையின் அடையாளம். நல்லது.

எப்பொழுது நான்கு விஷயங்களிலுமே சம்பூர்ண நிச்சயபுத்தி இருக்கிறது என்றால் பிறகு இந்த எண்ணம் உருவாக முடியுமா? இருப்பதே நன்மையே செய்யும் யுகம், நன்மை செய்யும் தந்தையின் ஸ்ரீமத்படி நடக்கக்கூடிய ஆத்மாக்கள் என்றால், நன்மையைத் தவிர முன்னேறும் கலையைத் தவிர வேறு எந்த எண்ணத்தையும் செய்ய முடியாது. அவருடைய ஒவ்வொரு நேரம், ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு காரியத்திற்காக வீணானதாக இல்லாமல் சக்திசாலியான எண்ணமாக இருக்கும். பயப்படவில்லையே? எதிர்நோக்க வேண்டியது இருக்கும். சோதனையை சந்திப்பது என்றால், முன்னேறிச்செல்வது அதாவது சம்பூர்ண நிலையின் மிக அருகில் வருவது. இப்பொழுது இந்தப் பரீட்சை வரப்போகிறது நீங்கள் தெளிவான புத்தி உடையவராக இருந்தீர்கள் என்றால் மற்றவர்களுக்கும் தெளிவுபடுத்த முடியும். அதற்காக இது நடக்கப்போவதில்லை என்று நினைக்கவில்லையே? நாடகத்தில் அவ்வப்போது என்னென்ன நடந்து வந்திருக்கிறதோ, அதில் வெண்ணையிலிருந்து முடி எடுப்பது போலத்தான் இல்லையா? ஏதாவது கடினமாக இருந்ததா? பாப்தாதா கண்களில் அமர்த்தி இதய சிம்மாசனத்தில் அமர்த்தி அக்கரைக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார் இல்லையா? வேறு யாராவது கடைசி வரை துணையாக இருந்து அனைத்து சூழ்நிலைகளையும் கடக்க வைப்பதற்கான உறுதிமொழியோ மற்றும் காரியத்தையோ செய்வார்களா என்ன? தந்தையோ உடன் அழைத்தே தான் செல்ல வேண்டும் இல்லையா? சர்வ சக்திவான் துணைவனாக இருந்த போதிலும் ஏதாவது எண்ணம் உருவாகிறது என்றால் இதை என்னவென்று கூறலாம்? அந்த மாதிரி வீணான எண்ணத்தை முடிவு செய்து, எந்த ஸ்தாபனைக் காரியத்திற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களோ, பாப்தாதாவின் உதவியாளராக இருக்கிறீர்களோ அந்தக் காரியத்தில் முழுமையாக ஈடுபட்டிருங்கள். தன்னுடைய ஈடுபாட்டின் அக்னியை இன்னும் தீவிரமாக்குங்கள். இந்த ஈடுபாட்டின் அக்னி மூலமாகத் தான் விநாஷத்தின் அக்னி அதிவேக மான சொரூபத்தை தாரணை செய்யும். தன்னால் படைக்கப்பட்ட அழியாத ஞான யக்ஞத்தின் பொறுப்பாளாராக பிராமணர்கள் நீங்கள் ஆகியிருக்கிறீர்கள். இந்த யக்ஞத்தில் முதலில் தன்னுடைய பலஹீனங்கள் மற்றும் குறைகளின் ஆகுதியை போடுங்கள் அப்பொழுது

தான் முழு உலகின் ஆகுதி விழுந்த பிறகு முடிவு ஏற்படும். இப்பொழுது திடமான எண்ணத்தின் தீக்குச்சியைப் பற்ற வையுங்கள். அப்பொழுது தான் இது நிறைவேறும். நல்லது.

அந்த மாதிரி ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக்கூடிய, எப்பொழுதும் நிச்சயம் என்ற ஆசனத்தில் நிலைத்திருந்து காரியம் செய்யக்கூடிய, ஒவ்வொரு சூழ்நிலையில் ஆடாத அசையாதவராக இருக்கக்கூடிய, எப்பொழுதும் பாப்தாதாவின் நெருக்கமாக சகயோகியாக இருப்பவருக்கு, அந்த மாதிரி அன்பிற்குரிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: பணிவுத்தன்மையின் விசேஷம் மூலமாக சுலபமாக வெற்றியை அடையக்கூடிய அனைவரின் மரியாதைக்குரியவர் ஆகுக!**

அனைவர் மூலமாக மரியாதையைப் பெறுவதற்கான சுலபமான சாதனம் பணிவானவர் ஆவதாகும். எந்த ஆத்மாக்கள் தன்னை எப்பொழுதும் பணிவு என்ற விசேஷத்தினால் நடத்திக் கொண்டிருக்கிறார் களோ அவர்கள் சுலபமாக வெற்றியை (பிராப்தி) அடைகிறார்கள். பணிவானவர் ஆவது தான் சுயகௌரவம் ஆகும். பணிவானவர் ஆவது என்றால், தலைவணங்குவது இல்லை ஆனால் அனைவரையும் தன்னுடைய விசேஷம் மற்றும் அன்பினால் தலைவணங்க வைப்பது. தற்சமயத்திற்கு ஏற்றபடி எப்பொழுதும் மற்றும் சுலபமாக வெற்றியை அடைவதற்கான மூல ஆதாரம் இது தான். ஒவ்வொரு காரியம், உறவு மற்றும் நெருக்கத்தில் பணிவானவர் ஆகுபவர் தான் வெற்றி ரத்தினமாக ஆகுகிறார்.

**சுலோகன்: ஞானத்தின் சக்தியை தாரணை செய்து விட்டீர்கள் என்றால், தடை உங்களை எதிர்ப்பதற்குப் பதிலாக தோல்வி அடைந்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 08.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிச்சயம் என்ற ஆசனத்தில் ஆடாத நிலை!

அனைவரும் தன்னை நிச்சயம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? நிச்சயத்தின் ஆசனம் எப்பொழுதாவது ஆடவில்லையே? எந்த விதமான பாதக சூழ்நிலை அல்லது இயற்கை அல்லது யாராவது நபர் நிச்சயத்தின் ஆசனத்தை எவ்வளவு தான் அசைக்க முயற்சி செய்தாலும், அவரால் அசைக்க முடியாத அளவு என்று அந்த மாதிரி ஆடாத அசையாத ஆசனமாக இருக்கிறதா? நிச்சயத்தின் ஆசனத்தில் எப்பொழுதும் ஆடாமல் இருப்பவர்கள் தான் நிச்சயபுத்தி உள்ள வெற்றி அடைபவர்கள் என்று வர்ணனை செய்யப்படுகிறார்கள். அப்படி ஆடாமல் இருப்பதற்கான அடையாளம் - ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியத்தில் எப்பொழுதும் வெற்றியுடையோர். அந்த மாதிரி வெற்றி ரத்தினம் என்று தன்னை அனுபவம் செய்கிறீர்களா? எந்தவொரு விஷயத்திலும் அசைபவர்களாக இல்லையே? எப்பொழுதாவது எந்த விஷயத்திலும் குழப்பம் ஏற்பட முடியும் அல்லது எந்த விதமான எண்ணமும் உருவாக முடியும் என்று யார் நினைக்கிறார்களோ அந்த மாதிரி முயற்சி செய்பவர்கள் கையை உயர்த்துங்கள். அந்த மாதிரி யாராவது உங்களில் இருக்கிறார்களா, ஆம்! அந்த மாதிரி நடக்க முடியும் என்று யார் நினைக்கிறீர்கள்? ஒருவேளை கையை உயர்த்தவில்லை என்றால் பெரிய கடுமையான சோதனை வரப்போகிறது, பிறகு என்ன செய்வீர்கள்? ஏதாவது கடினமான சோதனை வந்து அதில் அனைவருமே தேர்ச்சி பெறுபவர்களாக இருக்கிறீர்கள் என்றால் சோதனைக்கான தேதியை அறிவிக்கலாமா? அனைவரும் அந்த மாதிரி தயாராக இருக்கிறீர்களா? பின்பு அந்த நேரம் இந்த விஷயத்தையோ புரிந்திருக்கவில்லை, யோசித்திருக்கவும் இல்லை, இது ஏதோ புதிய விஷயம் வந்து விட்டது என்று கூறமாட்டீர்களே? எந்த விஷயங்களை சம்பவம் நடக்கக்கூடும் என்று

நினைக்கிறீர்களோ அது அசம்பவத்தின் ரூபத்தில் சோதனையாகி வரும் பிறகும் ஆடாமல் இருப்பீர்களா? இது தான் நிச்சயத்தின் பரீட்சை ஆகும்.

நிச்சயபுத்தி உடையவர் ஆவதற்காக முக்கியமாக நான்கு விஷயங்கள் இருக்கின்றன. நான்கிலும் முழுமையான சதவிகிதம் வேண்டும். அந்த நான்கு விஷயங்களை தெரிந்தும் இருக்கிறீர்கள் மேலும் அதன்படி நடந்து கொண்டும் இருக்கிறீர்கள். முதல் விஷயம் 1) தந்தை மேல் நிச்சயம் - யாராக இருக்கிறார், எப்படி இருக்கிறார், எந்த சொரூபத்தில் தன்னுடைய பங்கை செய்து கொண்டிருக்கிறார், அதை அப்படியே தெரிந்து கொள்வது மற்றும் ஏற்றுக் கொள்வது. தந்தை மூலமாக பிராப்தியாகி 2) யிருக்கும் ஞானத்தை அனுபவம் மூலமாக தெளிவாகத் தெரிந்து கொள்வது மற்றும் ஏற்றுக் கொள்வது. 3) தன்னையும், என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் அதாவது தன்னுடைய ஆன்மீக ஜென்மத்தின் உயர்ந்த வாழ்க்கையை மற்றும் உயர்ந்த பிராமண வாழ்க்கையை, தன்னுடைய உயர்ந்த பங்கை, தன்னுடைய உயர்ந்த நிலை மற்றும் ஸ்தானத்தின் மகத்துவம் எப்படி இருக்கிறது அப்படி சுயத்தின் மகத்துவத்தை தெரிந்து கொள்வது, ஏற்றுக் கொள்வது மற்றும் அதன் பிரகாரம் நடப்பது. 4) தற்சமயத்து உயர்ந்த, புருஷோத்தம, நன்மை செய்யும், உயரும் கலையின் நேரத்தைத் தெரிந்து கொள்வது மற்றும் தெரிந்து கொண்டு ஒவ்வொரு அடியையும் எடுத்து வைப்பது. இந்த நான்கு விஷயங்களிலும் முழுமையான நிச்சயம் நடைமுறை வாழ்க்கையில் இருக்க வேண்டும். இதைத் தான் நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைவார் என்று கூறப்படுகிறது.

நான்கு விஷயங்களிலும் சதவிகிதமும் தேவை. நிச்சயம் இருக்கிறது. இந்த விஷயத்தில் மட்டும் குஷி அடையக்கூடாது ஆனால் சதவிகிதமும் உயர்ந்ததாக இருக்கிறதா? ஒருவேளை சதவிகிதம் ஏதாவது ஒரு விஷயத்தில் குறைவாக இருந்தாலும் நிச்சயத்தின் ஆசனம் எந்த நேரமும் மற்றும் எந்தவொரு சிறிய சூழ்நிலையிலும் ஆட்டம் காண முடியும். எனவே சதவிகிதத்தை சோதனை செய்யுங்கள். ஏனென்றால், இப்பொழுது சம்பன்னம் ஆவதற்கானரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. அப்படி சிறிய குறை கூட அந்த நேரத்தில் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்த முடியும். ஏனென்றால், எவ்வளவிற்கு எவ்வளவு மிகத் தூய்மையாக சதோபிரதானமாக ஆகிக் கொண்டிருக்கிறீர்களோ,

## 1975 அவ்யக்த முரளி

மிகத் தூய்மையான நிலையில் இன்று எது எது சிறிய குறையாகத் தெரிகிறதோ மற்றும் சாதாரண கரையாக அனுபவம் ஆகிறதோ, அவை மிகப் பெரியதாக தென்படும். எனவே இப்பொழுதிலிருந்தே அந்த மாதிரி சூட்சும சோதனை செய்யுங்கள் மற்றும் குறையை நிரப்புவதற்கான தீவிர முயற்சி செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் எவ்வளவு உயர்ந்தவராக ஆகிக் கொண்டே இருக்கிறீர்களோ அந்த அளவு உலகின் ஒவ்வொரு ஆத்மாக்களின் நடுவே பிரசித்தி ஆகிக் கொண்டே இருக்கிறீர்கள். அனைவரின் பார்வை உங்கள் பக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இப்பொழுது அனைவரின் மனதிலும் எப்பொழுது ஸ்தாபனைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் இவர்கள் சுகம், சாந்தி நிறைந்த புது உலக ஸ்தாபனைக்கான காரியத்தை நிறைவேற்றுவார்கள், அதன் ஆதாரத்தில் துக்கம் நிறைந்த இந்த உலகம் மாறிவிடும் என்ற காத்திருத்தலில் இருக்கிறார்கள். அவருடைய பார்வை ஸ்தாபனை செய்பவர்களின் மேல் இருக்கிறது. மேலும் ஸ்தாபனை செய்பவர்களின் உங்கள் பார்வை எங்கு இருக்கிறது? தன்னுடைய காரியங்களிலேயே மூழ்கியிருக்கிறீர்களா அல்லது விநாஷம் செய்பவர்களின் பக்கம் பார்வையை வைத்திருக்கிறீர்களா? விநாஷத்தின் சாதனங்களின் செய்திகளை கேட்பதின் ஆதாரத்திலேயே சென்று கொண்டிருக்கவில்லையே? அவர்கள் தொய்வானார்கள் என்றால் நீங்களும் தொய்வாகி விடுகிறீர்களா? ஸ்தாபனையின் ஆதாரத்தில் விநாஷம் ஆக வேண்டுமா அல்லது விநாஷத்தின் ஆதாரத்தில் ஸ்தாபனை ஆக வேண்டுமா? ஸ்தாபனை செய்பவர்கள் விநாஷத்தின் ஜுவாலையை பிரகாசமாக எரிய வைப்பதற்காக பொறுப்பாளர்களேயன்றி விநாஷம் செய்பவர்கள் ஸ்தாபனை செய்பவர்களின் முயற்சியின் ஜுவாலையை பிரகாசிக்கச் செய்வதற்கான பொறுப்பாளர்களல்ல.

ஸ்தாபனை செய்பவர்கள் ஆதாரமானவர்கள். அந்த மாதிரி ஆதாரமானவர்கள் இந்த விநாஷத்தின் செய்தியைக் கேட்டு அசைந்து கொடுக்கவில்லையே? குழப்பத்தில் வரவில்லையே? ஆகுமா அல்லது ஆகாதா? மக்கள் என்ன கூறுவார்கள் மற்றும் மக்கள் என்ன செய்வார்கள்? இந்த வீணான எண்ணம் நிச்சயத்தின் ஆசனத்தை அசைத்து விடவில்லையே? அனைவரும் நிச்சயபுத்தி உடையவர்கள் என்று கையை உயர்த்தி இருக்கிறீர்கள் இல்லையா? நிச்சயம் என்றால்

எந்த விஷயத்திலும் ஏன், என்ன மற்றும் எப்படி என்பதின் எண்ணம் கூட உருவாகவில்லை, ஏனென்றால் சந்தேகத்தின் ராயல் ரூபம் எண்ணத்தின் ரூபமாக இருக்கிறது. சந்தேகமில்லை, ஆனால் எண்ணம் உருவாகிறது என்றால் அந்த எண்ணம் எதனுடைய வம்சத்தின் அம்சமாகும்?

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.02.1975-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக சக்திகள் மூலமாக உலக மாற்றம் ஏற்படுவது எப்படி?

தன்னை அசரீரி ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? இந்த உடல் மூலமாக என்ன விரும்பு கிர்களோ அதே காரியத்தை செய்விக்கக்கூடிய சக்திசாலியான ஆத்மா நீங்கள் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? நீங்கள் இந்த உடலின் அதிபதி கர்மேந்திரிடங்கள் மூலமாக காரியம் செய்விப்பவர், இந்த கர்மேந்திரியங்களிலிருந்து எப்பொழுது விரும்புகிறீர்களே அப்பொழுது விலகிய சொரூபத்தின் நிலையில் நிலைத்திருக்க முடியுமா? அதாவது இராஜயோகத்தின் சித்தியான -கர்மேந்திரியங்களின் ராஜா ஆவதற்கான சக்தியை பிராப்தி செய்திருக்கிறீர்களா? ராஜா மற்றும் எஜமானன் ஒருபொழுதும் கர்மேந்திரியங்களின் வசமாக முடியாது வசமாகுபவர்களை எஜமானன் என்று கூறுவதில்லை. உலகின் எஜமானனின் குழந்தையாக இருக்கும் காரணத்தினால், எப்பொழுது தந்தை உலகின் எஜமானனாக இருக்கிறார் மற்றும் குழந்தைகள் தன்னுடைய கர்மேந்திரியங்களின் எஜமானனாக இல்லை என்றால் என்னவென்று கூறுவது? எஜமானனின் சூழந்தை என்று கூறலாமா? பெயரோ மாஸ்டர் சர்வ சக்திவான் மேலும் தான் எஜமானன் என்று புரிந்து நடந்து கொள்ள முடியவில்லை என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆனாரா என்ன? நான் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவேன் -இதுவோ உறுதியாக நிச்சயம் இருக்கிறது இல்லையா, அல்லது இந்த நிச்சயம் கூட இப்பொழுது தான் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறதா? நிச்சயத்தில் அதிகம், குறைவு என்ற சதவிகிதம் இருக்குமா என்ன? தந்தையின் குழந்தையாகவோ இருக்கவே இருக்கிறீர்கள் இல்லையா? 90-சதவிகிதம் இருக்கிறேன் மற்றும் 10-சதவிகிதம் இல்லை என்று அப்படியா இருக்கும். அந்த மாதிரியான குழந்தையை எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா? நிச்சயம் என்றால் 100-சதவிகிதம் நிச்சயம். அந்த மாதிரி 100-சதவிகிதம் நிச்சயபுத்தி உள்ள குழந்தைகளின் முதல் அடையாளமாக என்ன இருக்கும்?

நிச்சயபுத்தியின் முதல் அடையாளம் -வெற்றி. நிச்சயபுத்தி உள்ளவர் வெற்றி அடைவார் என்ற பழமொழியும் இருக்கிறது. வெற்றி எப்படி கிடைக்கும்? நிச்சயத்தினால், அப்படியானால் நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இந்த நிச்சயத்தின் நினைவு நிரந்தரமாக இருக்கிறதா? நினைவின்றி பலம் எப்படி வரும்? வெற்றி அடைவதற்கான ஆதாரம் நினைவு ஆகும். ஒருவேளை நினைவு பலஹீனமாக இருக்கிறது நிரந்தரமாக இல்லை மேலும் நினைவு சக்திசாலியாக இல்லை என்றால் எப்படி வெற்றி அடைய முடியும்? எனவே முதலில் இந்த நிச்சயத்தை எப்பொழுதும் நினைவு சொரூபமாக ஆக்க வேண்டியதாக இருக்கிறது.

எப்படி நாள் முழுவதுமான நடவடிக்கைகளின் இடையே லௌகீக தொழில் மற்றும் லௌகீக சம்மந்தம் எப்பொழுதுமே நினைவில் இருக்கத்தான் செய்கிறது இல்லையா? அந்த நினைவின் மூலம் நாம் அந்த மாதிரி குடும்பத்தைச் சேர்ந்தவன், அந்த மாதிரி தொழில் செய்டவன் என்று பலம் வருகிறது. அதே போலவே இந்த மர்ஜீவா பிராமண ஜென்மத்தின் சம்மந்தம், தொழில் மற்றும் தன்னுடைய சொரூபமாக என்ன இருக்கிறதோ அது எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். நினைவு பலஹீனமாக ஆகும். காரணத்தினால் வெற்றி தென்படுவதில்லை, வெற்றி ஏற்படட்டும் என்று அதை எதிர்ட்டார்த்துக் கொண்டு மட்டும் நேரத்தை இழக்காதீர்கள், மாறாக வெற்றி அடைவதற்கான என்ன அஸ்திவாரம் இருக்கிறதோ அதை உறுதியாக வையுங்கள். மார்க்கத்தை முடிவு செய்வதற்கு முன்பு முதலில் இலக்கை சென்று அடைந்து விடலாம் என்று யாராவது நினைத்தார்கள் என்றால் இது நடக்க முடியுமா? மார்க்கத்தையோ அவசியம் முடிவு செய்ய வேண்டும் அப்படி இலக்கு தான் வெற்றி மற்றும் மார்க்கம் நிரந்தர நினைவு, அப்படியானால் இந்த மார்க்கத்தை முடிவு செய்கிறீர்களா அல்லது இலக்கு தென்பட்டுமே என்று எதிர்பார்ப்பில் இருக்கிறீர்களா? கிடைத்திருக்கும் இறை லாட்டரியை ஒருவேளை முழுமையாக காரியத்தில் கொண்டு வரவில்லை என்றால் குஷி மற்றும் சக்தியின் அனுபவத்தை எப்படி செய்வோம்? என்று எப்பொழுதும் யோசிக்க வேண்டும். லாட்டரியோ கிடைத்திருக்கிறது ஆனால் அதை உபயோகிப்பது அதாவது வாழ்க்கையில் கொண்டு வருவது என்ற இது இல்லாமல் சுகத்தின் ஆனந்தம் மற்றும் வெற்றியடைபவர் ஆவதற்கான குஷியின் அனுபவத்தை செய்ய முடியாது. அனுபவியாக ஆக வேண்டும்

இல்லையா? அனுபவம் வாழ்க்கையின் முக்கியமான பொக்கிஷம் ஆகும். லௌகீகத்திலும் கூட அனுபவி ஆத்மா முக்கியமானவராக வர்ணிக்கப்படுகிறார். இந்த ஈஸ்வரிய மார்க்கத்திலும் அனுபவி ஆத்மாவாக ஆக வேண்டும். என்ன சொன்னீர்களோ அந்த அனுபவத்தை செய்தீர்களா? நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று நினைக்கிறீர்கள் ஆனால் இதன் அனுபவமும் செய்தீர்களா? அனுபவமோ ஆகியே விடும். முன்னேறிச் சென்று கொண்டு தான் இருக்கிறோம் என்று அப்படியில்லை. எது வரை ஏதாவது காரியம் செய்வதற்கான தேதியை நிர்ணயம் செய்யவில்லையோ அது வரை முயற்சி தீவிரமானதாக ஆக முடியாது.

எந்தவொரு லௌகீக மற்றும் அலௌகீக காரியத்தின் தேதி நிச்சயிக்கப்பட்ட பிறகு தானாகவே பலம் வந்து விடுகிறது. இந்த தேதிக்குள் காரியத்தை முடிக்க வேண்டும் என்று தெரியும். தேதியை நினைவில் வைப்பதினால் காரியத்தின் வேகமும் அதே மாதிரி இருக்கிறது. நாளை முடிக்க வேண்டும். என்றால் வேகம் அந்த மாதிரியே இருக்குமா? இந்த ஞானத்தின் முக்கியமான சுலோகனே இப்பொழுது இல்லையேல் ஒருபொழுதும் இல்லை. இதனுடைய தேதி நாளை அல்லது மறுநாளோ ஆவதில்லை. அதனுடைய தேதி இப்பொழுதே நிச்சயிக்கப்படுகிறது. ஒரு மணி நேரத்திற்குப் பிறகு கூட இல்லை. எனவே இதை "செய்து தான் ஆக வேண்டும்" என்று எவ்வளவு நிச்சயம் வைப்பீர்களோ, செய்வோம், செய்யத் தானே வேண்டும் என்று அப்படியில்லை. இது தான் உறுதியான எண்ணம் ஆகும். உறுதியான எண்ணமின்றி உறுதித்தன்மை வராது மேலும் முயற்சி செய்வதற்கான நேரமோ இன்னும் எவ்வளவு குறைவாக இருக்கிறது. அதிகமான நேரம் தென்படுகிறதா என்ன? நேரத்தின் சிந்தனையோ வைக்க வேண்டும் இல்லையா? பிராப்தி எவ்வளவு காலத்திற்கானது என்று இதையும் யோசியுங்கள். இரண்டு யுகங்களுக்கான பிராப்தி இல்லையா? இந்த முயற்சியின் பிராப்திக்கான நேரம் எவ்வளவு குறைவாக இருக்கிறது. இது எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும்.

வெகு காலத்தின் பிராப்தியை அடைய வேண்டும் என்றால் முயற்சியும் வெகு காலத்தினுடையது. தேவையாக இருக்கிறது. ஒருவேளை கடைசி நேரத்தில் முயற்சி செய்தீர்கள் என்றால் பிராப்தியும் கடைசியினுடையது

தான் கிடைக்கும். முதலில் முயற்சி இல்லை மற்றும் பிராப்தி முதலானது வேண்டுமா? கடைசியில் மிச்சம் மீதம் இருப்பது கிடைப்பதினால் என்னவாகும். எப்படி பிராப்தி அடைவதின் லட்சியம் முதல் நிலையை அடைவதாக இருக்கிறதோ அதே போல் முயற்சியும் அப்படி செய்யுங்கள். ஏதாவது விஷயம் எதிரில் வருகிறது என்றால் எப்படி வழியில் சென்று கொண்டிருக்கும் போது அனேக சைட் சீன்கள் (கடந்து செல்லும் காட்சிகள்) வருகிறது அதே போல் இதையும் சைட் சீன் (கடந்து செல்லும் காட்சிகள்) என்று நினைத்துக் கொள்ளுங்கள் ஆனால் யார் இலக்கை அடைபவராக இருப்பாரோ அவர் இவற்றைப் பார்ப்பதே இல்லை, அவருடைய பத்தியில் இலக்கை அடைவதின் பிராப்தி மட்டும் தான் இருக்கும். அப்படி இங்கேயும் புத்தியில் லட்சியத்தை வைக்க வேண்டுமேயன்றி அந்த விஷயங்களை அல்ல. ஒருவேளை சின்னஞ்சிறு விஷயத்தைப் பார்ப்பதிலேயே நேரத்தை இழந்தீர்கள் என்றால் சரியான நேரத்தில் இலக்கை சென்றடைய முடியாது. எனவே இப்பொழுது திடத்தன்மையைக் கொண்டு வருவதற்கான நேரம் ஆகும். இல்லை என்றால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டியது இருந்ததோ அதைச் செய்யவில்லை என்று இந்த நேரத்தையும் நினைவு செய்ய வேண்டியதாக இருக்கும். பின்னால் யோசிப்பதற்கு முன்பு ஏன் நேரத்தை மாற்றி விடக்கூடாது. உலகின் மாற்றத்திற்கு, நீங்கள் பொறுப்பாளராக இருக்கிறீர்கள். எது தந்தையின் காரியமாக இருக்கிறதோ, அதனுடன் தன்னையும் பொறுப்பாளர் என்று புரிந்து கொள்ளுங்கள். உலகில் சுயம் நீங்களும் இருக்கிறீர்கள் இல்லையா? உலகை மாற்றம் செய்பவர்களுக்கு முதலில் தன்னை மாற்றம் செய்ய வேண்டியதாக இருக்கும். எப்பொழுது நான் இருப்பதே உலகை மாற்றம் செய்யும் காரியத்திற்கு பொறுப்பாளர் என்றால் தன்னை மாற்றம் செய்வது என்ன பெரிய விஷயம்? அப்படி உடனேயே மாற்றம் செய்வதற்கான சக்தி வந்து விடும். எப்படி ஆகும், என்னவாகும், ஆகுமா அல்லது ஆகாதா என்ற இந்தக் கேள்விகள் எழாது.

அடுத்த விஷயம் இந்த உலக மாற்றத்தின் காரியத்தை எத்தனை தடவைகள் செய்திருக்கிறேன்? என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எண்ண முடியாத தடவைகள் செய்திருக்கிறேன் என்ற இதுவோ உறுதியாக இருக்கிறது இல்லையா? தந்தையுடன் சேர்ந்து நானும் அனேக தடவைகள் பொறுட்டாளர் ஆகியிருக்கிறேன். அனேக

தடவைகள் செய்திருக்கும் விஷயமாக இருக்கிறது என்றால் அது கடினமாக அனுபவம் ஆகுமா என்ன? மிகப்பழைய விஷயத்தை கருவியாகி மட்டும் செய்ததை மீண்டும் அதே போல் செய்து கொண்டிருக்கிறீர்கள். செய்ததை மீண்டும் அதே போல் செய்வது சுலபமாக இருக்குமா அல்லது கடினமா? அப்படி இதுவும் நினைவில் இருக்க வேண்டும். ஏதாவது கொஞ்சமாவது கடினமான எண்ணம் வருகிறது என்றால் இந்த தைரியத்தின் விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அனேக தடவைகள் செய்த விஷயத்தின் நினைவு மீண்டும் வருவதினால் சக்தி வந்து விடும்.

நான் தந்தைக்குச் சமமாக சக்திகளின் சொரூபத்தை காண்பிக்கக்கூடியவன் அதாவது சக்தி சொரூப மானவன் என்ற இந்த வரதானத்தை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும் சம்மந்தம் இருப்பதினால் இது வரை வந்தடைய முடியும் ஆனால் இப்பொழுது தந்தையின் அன்பு, தந்தையின் காரியத்தின் மேல் அன்பு மற்றும் தந்தையின் ஞானத்தின் மேல் அன்பு என்ற இந்த மூன்றின் சமநிலை வையுங்கள். இப்பொழுது சமநிலையில் தந்தையின் அன்பு அதிகமாக இருக்கிறது. மீதமுள்ள இரண்டு பக்கமும் குறைவாக இருக்கிறது. ஞானத்தின் மூலம் சக்தி வரும். ஒவ்வொரு மகாவாக்கியமும் பல கோடி மடங்கு செல்வந்தன் ஆக்கக்கூடியது. இந்த அளவு மகத்துவத்தை வைத்துக் கொண்டே அந்த மகாவாக்கியங்களை தாரணை செய்தீர்கள் என்றால் மகத்துவத்தின் மேல் அன்பு ஏற்படும். எதுவரை மகத்துவத்தை தெரிந்திருக்க வில்லையோ அதுவரை அன்பு ஏற்படுவதில்லை. மகத்துவத்தை தெரிந்தீர்கள் என்றால் அன்பு இயல்பாகவே இருக்கும்.

நிச்சயபுத்தியுள்ள வெற்றி அடைபவர்களாக இருக்கிறீர்களா? ஆன்மீக ஜென்மம் கிடைத்தது. நான் தந்தையின் குழந்தை ஆவேன் என்ற நிச்சயபுத்தி ஏற்பட்டது. அப்படி தந்தையின் ஆஸ்தி தான் வெற்றி ஆகும். மாஸ்டர் சர்வ சக்திவானின் ஆஸ்தியாக என்ன இருக்கும்? சக்திகள். அப்படி குழந்தை ஆவது என்றால் வெற்றி அடைபவர் ஆவது. வெற்றியின் திலகம் இயல்பாகவே இடப்பட்டு விடுகிறது. இட வேண்டியது இல்லை, மேலும் அது அழியாதது. அதிகாரியாக ஆகி விட்டீர்கள் இல்லையா? அன்பிற்குரியவராக மற்றும் சகயோகி ஆவதற்கான அதிர்ஷ்டம் நன்றாக இருக்கிறது. முழு பரிவாரமும்

ஒற்றுமையாகி விட்டது என்றால் இதுவும் அதிர்ஷ்டத்தின் அடையாளம் ஆகும். பரிவாரத்தில் இருக்கும் அனைவரும் முயற்சி செய்யும் பந்தயத்தில் ஒருவர் இன்னொருவருக்கு முன்பு செல்வதற்கான முழு ஈடுபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தைரியம் வைப்பதினால் உதவி தானாகவே பிராப்தி ஆகிறது (அகமதாபாத்தைச் சேர்ந்த வீரச்சந்த் குடும்பத்தினரைப் பார்த்து) இது பற்றுதலை வென்ற பரிவாரம் ஆகும். இந்த மாதிரி பற்றுதலை வென்ற குடும்பம் எத்தனை உருவாகியிருக்கிறது? உயர்ந்த லட்சியத்தை வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அந்த மாதிரி பரிவாரங்களின் பூச்செண்டை தயார் செய்யுங்கள். ஒருவேளை இந்த மாதிரியான பரிவாரம் 10-11 உருவாகி விட்டன என்றால் அகமதாபாத்தின் எண் முன்னுக்குச் சென்று விடும். குஜராத்திற்கு குடும்பங்களை நடத்துவதற்கான வரதானம் நாடகப்படி கிடைத்திருக்கிறது ஆனால் பற்றுதலை வென்ற குடும்பம், மேலும் அனைவரும் ஒரே ஈடுபாட்டில் உயர்ந்த முயற்சி செய்வதின் வரிசையில் இருக்கட்டும். அந்த மாதிரியான பூச்செண்டை தயாரியுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.02.1975-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அபகாரத்தை உபகாரமாக மாற்றம் செய்யுங்கள்!

யாராவது தன்னுடைய சம்ஸ்காரம் அல்லது சுபாவத்தின் காரணமாக உங்கள் எதிரில் பரீட்சையின் ரூபத்தில் வருகிறார் ஆனால் நீங்கள் ஒரு நொடியில் தன்னுடைய உயர்ந்த சம்ஸ்காரம், ஒருவரின் நினைவின் மூலம் அந்த மாதிரியான ஆத்மாவிற்காகவும் இரக்க மனதின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை தாரணை செய்யுங்கள். இது தான் உபகாரம் செய்வது. யாருக்கு உணர்வு உங்கள் மேல் நல்உணர்வு இருக்கிறதோ அவருக்காக நீங்களும் நல்உணர்வு வைக்கிறீர்கள், உபகாரம் செய்பவர்கள் மேல் உபகாரம் செய்கிறீர்கள் என்ற இதுவொன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் யாராவது உங்களை அடிக்கடி விழச்செய்வதற்கு முயற்சி செய்கிறார் உங்களுடைய மன நிலையை மேலே கீழே போகச் செய்கிறார் என்றால், நீங்கள் ஒருநொடியில் அபகாரத்தை உபகாரத்தில் பரிவர்த்தனை செய்து விடுங்கள். அப்பொழுது அதை அதிசயம் என்று கூறுவோம். யாராவது தேக உணர்வின் பார்வையுடன் உங்கள் எதிரில் வருகிறார் என்றால், நீங்கள் ஒரு நொடியில் அவருடைய பார்வையை ஆத்மீக பார்வையில் பரிவர்த்தனை செய்து விடுங்கள். சிலர் கீழே தள்ளிவிடும் உணர்வோடு மற்றும் தன்னுடைய தீய சேர்க்கையில் கொண்டு வருவதற்கான பார்வையோடு எதிரில் வருகிறார் என்றால், நீங்கள் அவரை எப்பொழுதும் உயர்ந்த சேர்க்கையின் ஆதாரத்தினால், தீய சேர்க்கையிலிருந்து விடுவித்து உயர்ந்த சேர்க்கையில் இருப்பவராக ஆக்கி விடுங்கள். இந்த மாதிரி பரிவர்த்தனை செய்வதற்கான வழி தெரிவதினால் ஒருபொழுதும் தடையினால் தோல்வி அடைய மாட்டீர்கள். நெருக்கத்தில் வருபவர்கள் உங்களுடைய இந்த சூட்சும உயர்ந்த சேவையின் மேல் பலியாகி விடுவார்கள். யாராவது தினசரி உங்களை நிந்தனை செய்கிறார், அவர் எப்பொழுதும் தீமை செய்து கொண்டிருக்கிறார், நீங்கள் அவரிடமிருந்து விலகிச் செல்வதற்குப்

பதிலாக அவருக்கும் நன்மை செய்து கொண்டே இருங்கள், இது தான் ஞானம் நிறைந்த ஆத்மா உங்களுடைய கடமை ஆகும்.

எப்படி தந்தையின் மகிமையில் விசேஷமாக இரக்க மனமுடையவர் என்று மகிமை செய்யப் பட்டிருக்கிறது. பாரதத்திலும் வெளிநாட்டிலும் தந்தையின் எதிரில் சென்றால் இரக்கம் நிறைந்தவர், கருணை நிறைந்தவர் என்று கூறுவார்கள். அப்படி நீங்கள் அனைவரும் மாஸ்டர் இரக்க மனமுடையவர்கள். அந்த மாதிரி இரக்க மனமுடையவராகி அனைவருக்கும் உபகாரம் செய்யுங்கள். சங்கடனில் குழுவில்) மற்றவர்களின் தவறை தன்னுடைய தவறு என்று புரிந்து கொள்வது, இது தான் ஒற்றுமையை உறுதியாக்குவதாகும். எப்பொழுது ஒருவர் இன்னொருவர் மேல் நம்பிக்கை இருக்கிறதோ அப்பொழுது இது நடக்கும். இதில் உள்ளடக்கும் சக்தியும் அவசியம் தேவையாக இருக்கிறது. பார்த்தீர்கள் மற்றும் கேட்டீர்கள் அதை முற்றிலும் உள்ளடக்கி அதே ஆத்மீக பார்வை மற்றும் நன்மை நிறைந்த மற்றும் ஒவ்வொருவருக்காகவும் இரக்க பாவனை இருக்கட்டும். அப்பொழுது தான் சக்திசாலியான ஒற்றுமையான குழு தயாராகும், அந்த மாதிரியான ஒற்றுமையில் வெற்றி ஏற்படும். இப்பொழுது நீங்கள் வெற்றியை வரவழைக்கிறீர்கள், ஆனால் பின்பு உங்கள் எதிரில் வெற்றி அதுவே தலைவணங்கும். மிக பாவ ஆத்மா, மிகவும் அபகாரி ஆத்மா, கொக்கு போன்றவர் மீதும் கூட வெறுப்பு இருக்க வேண்டாம், மரியாதை அளிக்காதவராக ஆக வேண்டாம் ஆனால் உலகிற்கு நன்மை செய்பவர் என்ற நிலையில் நிலைத்திருந்து இரக்க மனமுடையவர் ஆகி கருணையின் பாவனை வைத்துக் கொண்டே சேவையின் சம்மந்தம் என்று புரிந்து சேவை செய்யுங்கள். இவ்வளவு நம்பிக்கை இழந்தவர்களுக்கு சேவை செய்தீர்கள் என்றால் அந்தளவே உயர்ந்த பரிசுக்கான அதிகாரி ஆவீர்கள், மேலும் பெயர், புகழ் பெற்று உலகிற்கு நன்மை செய்பவர் என்று பாராட்டப்படுவீர்கள். அமைதியை ஸ்தாபனை செய்பவர் என்ற பரிசும் கிடைக்கும்.

யோகி வாழ்க்கையின் உயர்ந்த லட்சியத்தை பிராப்தி செய்யக்கூடிய ஆத்மா இகழச்சியை புகழ்ச்சியில், நிந்தனையை பாராட்டுதலில், எட்டி உதைப்பதை மரியாதையில், அவமானத்தை சுயஅபிமானத்தில், அபகாரத்தை உபகாரத்தில் மாற்றம் செய்து தந்தைக்குச் சமமான

எப்பொழுதும் வெற்றி அடையும் அஷ்ட ரத்தினங்கள், பக்தர்களின் இஷ்டமானவர்களாகி விடுகிறார்கள்.

**வரதானம்: பாக்கியத்தை உருவாக்கும் தந்தை மூலம் கிடைத்திருக்கும் பாக்கியத்தை அனைவருக்கும் கொடுக்கக்கூடிய மற்றும் அதிகரிக்கக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஆகுக!**

பாக்கியத்தை உருவாக்கும் தந்தை என்னை தன்னுடைய குழந்தையாக ஆக்கி விட்டார் என்ற இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய அதிர்ஷ்டம் ஆகும். பகவானின் ஒரு நொடியின் பார்வை என் மேல் பட்டு விடட்டும் என்று உலகத்தினர் துடிக்கிறார்கள். மேலும் நீங்கள் எப்பொழுதும் கண்களிலேயே அடங்கியிருக்கிறீர்கள். இதைத்தான் அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று கூறுவது. பாக்கியம் உங்களுடைய ஆஸ்தி ஆகும். முழுக் கல்பத்தில் அந்த மாதிரியான பாக்கியம் இப்பொழுது தான் கிடைக்கிறது, எனவே பாக்கியத்தை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். அதிகரிப்பதற்கான சாதனம் அனைவருக்கும் கொடுப்பது. எவ்வளவு மற்றவர்களுக்குக் கொடுப்பீர்களோ அதாவது பாக்கியவானாக ஆக்குவீர்களோ அந்த அளவு பாக்கியம் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

**சுலோகன்: தடையற்ற மேலும் ஒரே சீரான ரசனையின் அனுபவம் செய்ய வேண்டும் என்றால் ஒருமுகப்படுத்தும் பயிற்சியை அதிகரியுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 10.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து சக்திகளுடன் சேவையில் சமர்ப்பணம்!

இன்றைய இந்த சங்கடன் (சபை) ஞான சொரூப ஆத்மாக்களினுடையது. அந்த மாதிரியான ஞான சொரூப ஆத்மாக்கள் மற்றும் யோகி ஆத்மாக்கள் பாப்தாதாவிற்கும் மிகப் பிரியமானவர்கள் மேலும் உலகிலும் கூட மிகவும் பிரியமானவர்கள். அந்த மாதிரி ஞான சொரூப மற்றும் யோக சொரூப ஆத்மாவின் மகிமையும், பூஜையும் பக்தி மார்க்கத்தில் நடந்து கொண்டே இருக்கிறது. தற்சமயத்திலும் கூட அந்த ஆத்மாக்கள் வணக்கத்திற்குரிய மற்றும் மகிமைக்குத் தகுதியானவர்களாக இருக்கிறார்கள். வணக்கத்திற்குரிய ஆத்மா என்றால் உயர்ந்த ஆத்மாக்கள் மற்றும் மகிமைக்குத் தகுதியான ஆத்மாக்கள் என்றால் அந்த ஆத்மாக்களின் குணங்களின் மகிமை மற்றும் வர்ணனையை இப்பொழுது கூட அனைவரும் செய்கிறார்கள். எதிர்காலத்தின் மகிமை மற்றும் பூஜைக்கான ஆதாரம் தற்சமயத்தின் மேல் இருக்கிறது. எதிர்காலத்தில் அதாவது பக்தியில் யார் எவ்வளவு மகிமை மற்றும் பூஜைக்குத் தகுதியானவர்களாக ஆவார்கள் என்பதை புத்தியின் பலத்தின் மூலமாக யார் வேண்டுமானாலும் இப்பொழுது பார்க்க முடியும். இந்த நேரத்தில் கூட அனைத்து ஆத்மாக்களும், தன்னுடைய பிராமண குலத்தைச் சேர்ந்த ஆத்மாக்கள் மற்றும் கூடவே அஞ்ஞானி ஆத்மாக்கள் யார் யார் நெருக்கத்தில் வருகிறார்களோ அவர்கள் அனைவரும் ஆத்மா என்னை உயர்ந்த அதாவது வணக்கத்திற்குரிய பார்வையோடு பார்க்கிறார்களா? என்று ஒவ்வொருவரும் தன்னைத் தானே பார்க்க வேண்டும். வணக்கத்திற்குரியவர்கள் என்று பெரியவர்களைக் கூறப்படுகிறது. அப்படியானால் அனைத்து ஆத்மாக்களும் அந்தப் பார்வையோடு என்னை பார்க்கிறார்களா மற்றும் புரிந்து கொள்கிறார்களா? ஒருவேளை அற்ப ஆத்மாக்கள் வணக்கத்திற்குரியவர் என்று அனுபவம் செய்கிறார் என்றால் தற்சமயத்தின் ஆதாரம் முழு எதிர்காலத்தின் மேல் உள்ளது.

அதே போலவே எந்தெந்த ஆத்மாக்கள் துணைவர்களாக ஆகிறார்கள் மற்றும் சம்மந்தத்தில் வருகிறார்களோ அவர்களுக்கு விசேஷமாக ஆத்மா என தன்னுடைய குணம் அனுபவத்தில் வருகிறதா? ஒருவேளை ஏதாவது ஆத்மாவின் குணம் அனுபவத்தில் வருகிறது என்றால் இப்பொழுது கூட அந்த ஆத்மாக்கள் மனதிலேயே மற்றும் வார்த்தைகள் மூலமாகவும் அந்த மாதிரி ஆத்மாக்களின் குணங்களை அவசியம் மகிமை செய்வார். எந்த குணமாக இருந்தாலும் அது தன்னுடைய பிரபாவத்தை அவசியம் ஏற்படுத்தும். குணம் மறைந்திருக்க முடியாது. எனவே அந்த மாதிரி வணக்கத்திற்குரிய குண மகிமை செய்விக்கப்படக்கூடிய ஞானி ஆத்மாக்கள் மற்றும் யோகி ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? அற்ப ஆத்மாக்களுக்காக மற்றும் அனைவருக்காகவும் அனைத்து குணங்களின் மகிமை செய்கிறீர்களா அல்லது கொஞ்ச குணங்களை மட்டும் மகிமை செய்கிறீர்களா? குணங்களின் மகிமையின் தராசின் தட்டு பாரமாக இருக்கிறதா மற்றும் சாதாரண நடத்தையின் தராசின் தட்டு பாரமாக இருக்கிறதா?

நேரத்திற்கு ஏற்றாற்போல் இப்பொழுது தன்னுடைய அனைத்து பாடங்களின் கணக்கை எவ்வளவு சேமித்திருக்கிறேன் மற்றும் எண்ணம், சொல், செயல் மூலமாக எதுவரை பாடங்களை முடித்திருக்கிறேன்? என்று சோதனை செய்யுங்கள். அனைத்து குணங்கள் நிரம்பியவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது குணம் நிரம்பியவராக மட்டும் ஆகியிருக்கிறீர்களா? நன்மை செய்பவராக ஆகியிருக்கிறீர்களா மற்றும் உலக நன்மை செய்பவராக ஆகியிருக்கிறீர்களா? ஒருவேளை சோதனை செய்தீர்கள் என்றால், சோதனை செய்த பிறகு நிறைவேற்றுவதற்காக இப்பொழுது கொஞ்ச காலம் இருக்கிறது ஆனால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு நிறைவேற்றுவதற்கான காலமும் முடிவடைந்து விடும், பின்பு என்ன செய்வீர்கள்? சம்பன்னமாகியிருக்கும் ஆத்மாக்களைப் பார்க்கக் கூடியவர்களாக ஆகி விடுவீர்கள். ஆசனத்தை தனதாக்கிக் கொள்பவராக ஆக முடியாது. எனவே சாட்சாத்கார மூர்த்தி ஆக வேண்டுமா அல்லது சாட்சாத்காரம் பார்ப்பவராக ஆக வேண்டுமா?

அந்த மாதிரி சாட்சாத்கார மூர்த்தி ஆவதற்காக சார ரூபத்தில் மூன்று விஷயங்களை தனக்குள் பாருங்கள்: 1. அனைத்து விதத்திலும் அதிகாரியாக ஆகி இருக்கிறேனா? 2. பரோபகாரியாக ஆகி

இருக்கிறேனா? 3. அனைவருக்கும் மரியாதை கொடுப்பவனாக ஆகி இருக்கிறேனா? அதாவது அனைவருக்கும் மரியாதை கொடுப்பது மற்றும் பெறுவதற்குத் தகுதியானவனாக ஆகியிருக்கிறேனா? மரியாதை கொடுப்பது தான் பெறுவதாகும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த மூன்று விஷயங்களின் ஆதாரத்தினால் தான் உலகின் எதிரில் உலகிற்கு நன்மை செய்பவர் பிரசித்தியாவார். அதனுடைய தெளிவான விளக்கத்தை நன்கு தெரிந்திருக்கிறீர்களா?

அனைத்து அதிகாரி என்றால் அனைத்து கர்மேந்திரியங்கள் மேல் அதிகாரம் இருப்பது ஆகும். கூடவே எப்படி இந்த உடலின் விதவிதமான சக்திகள் கை, கால் ஆகியவை இருக்கின்றன, அது போலவே ஆத்மாவிற்கும் மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரம் என்ற சக்திகள் இருக்கின்றன. இந்த சூட்சும சக்திகளின் மேலும் அதிகாரி ஆகியிருக்கிறீர்களா? தன்னுடைய படைப்பாகிய இயற்கையின் மேல் அதிகாரி ஆகியிருக்கிறீர்களா? ஏதாவது இயற்கையின் தத்துவம் தன்னுடைய பக்கம் ஈர்க்கவில்லையே? எப்பொழுது அறிவியல் மூலமாக இயற்கை மற்றும் பூமியின் ஈர்ப்பிலிருந்து விலகிய நிலை வரை சென்றடைந்து விடுகிறார்கள் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான் இயற்கையின் கவர்ச்சியிலிருந்து விலகி அதாவது பௌதீக உணர்விலிருந்து விலகி அவ்யக்தம் மற்றும் அனைத்து சக்திகள் நிறைந்த அதிகாரத்தின் நிலையை அடைவது கடினமாக அனுபவம் ஆகிறது என்கிற இது நன்றாகவே இல்லை. அதே போலவே தந்தை மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் அனைத்து சக்திகள் அவற்றிலிருந்து கொஞ்சம் மாதிரி ரூபத்தில் படமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது, அப்படி ஆஸ்தியில் பிராப்தியாகியிருக்கும் சக்திகள் அதாவது தன்னுடைய சொத்தின் மேல் தன்னுடைய அதிகாரம் இருக்கிறதா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது எந்த சக்தி மூலமாகவும் தன்னை வெற்றி அடைபவராக ஆக்க முடிய வேண்டும். எப்படி ஸ்தூல சொத்தின் மேல் அதிகாரம் இருக்கும் காரணத்தினால் எந்த நேரம் விரும்புகிறீர்களோ அந்த நேரம் அதே பொருளை காரியத்தில் உபயோகிக்க முடியும். ஏனென்றால் தன்னுடைய சொத்தாகும். அதே போலவே ஈஸ்வரிய சொத்தை எந்த நேரம் விரும்புகிறீர்களோ மேலும் எந்த சக்தியை விரும்புகிறீர்களோ அதை காரியத்தில் ஈடுபடுத்த

முடியுமா? இந்த சொத்திற்கும் அதிகாரியாக இருக்கிறீர்களா? இதைத் தான் அனைத்து விதத்திலும் அதிகாரி என்று கூறுவது.

ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் எப்பொழுதும் உபகாரம் அதாவது சுபபாவனை மற்றும் உயர்ந்த விருப்பங்கள் இருக்கட்டும். ஒவ்வொரு ஆத்மாவையும் பார்த்து இந்த அனைத்து ஆத்மாக்களும் தந்தையின் அன்பிற்குரியவராக மற்றும் சகயோகியாக ஒவ்வொரு நேரமும் ஆவதற்காக தன்னை தியாகம் செய்து விடுகிறார்கள் என்று அனுபவம் ஆகட்டும். அந்த மாதிரி தியாகம் செய்பவர்களாக ஏன் ஆகிறார்கள்? ஏனென்றால் தந்தை அனைவரின் எதிரில் அவரே பலியாகிறார். அனைவரின் எதிரில் தன்னை அனைத்து சக்திகளுடன் சேவையில் சமர்ப்பணம் செய்திருக்கிறீர்களா? தன்னுடைய நேரத்தை, சுகங்களை, பிராப்தியின் இச்சையை அனைவருக்கும் கொடுக்கும் பெரும் வள்ளலாகியிருக்கிறீர்களா? அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் தன்னுடைய பெயர், புகழ், மதிப்பு, மரியாதை அனைத்து பிராப்திகளின் இச்சையை தியாகம் செய்யக்கூடியவர்கள் தான் பரோபகாரி ஆக முடியும். பெற வேண்டும் என்ற இச்சையை விட்டு விடும் பெரும் வள்ளல் தான் பரோபகாரி ஆக முடியும். அதே போலவே மரியாதை கொடுப்பவராகவும், அனைவருக்காகவும் மரியாதை நிறைந்த பாவனையும் இருக்கட்டும். மரியாதை கொடுப்பவராக ஆவதற்காக தன்னை அனைவரின் சேவாதாரி என்று புரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. சேவாதாரியின் அர்த்தம் கூட மிகவும் ஆழமானது. ஸ்தூலமான சேவை மற்றும் வாய்மொழி மூலமான சேவை, நெருக்கத்தின் மூலமான சேவை, இல்லாததை பிராப்தி செய்விப்பதின் மூலமாக சேவை மற்றும் பலவிதமான சாதனங்கள் மூலமாக சேவை செய்வது என்பது மட்டுமின்றி தன்னுடைய ஒவ்வொரு குணம் மூலமாக தானம் செய்வது மற்றும் மற்றவர்களையும் குணம் நிறைந்தவராக ஆக்குவது, தன்னுடைய தொடர்பின் பாதிப்பை ஏற்படுத்துவது என்ற இது தான் உயர்ந்த சேவை ஆகும். அவகுணத்தை பார்த்தும் பார்க்காமல் இருப்பது, சுயத்தின் குணங்களின் சக்தி மூலமாக மற்றவர்களின் அவகுணங்களை அகற்றி விடுவது அதாவது, பலமற்றவரை பலம் நிறைந்தவராக ஆக்குவது, பலமற்றவரைப் பார்த்து விலகி ஒதுங்கி விடக் கூடாது மற்றும் களைப்படையக்கூடாது ஆனால் நம்பிக்கை இழந்தவர்களையும் தன்னுடைய சேவையின் மூலமாக தன்னுடைய

## 1975 அவ்யக்த முரளி

உயர்ந்த சுயகௌரவத்தில் நிலைத்திருந்து மரியாதை கொடுப்பதின் மூலமாக அனைவருக்கும் மரியாதைக் கொடுப்பவராக ஆக முடியும். எனுடைய தியாகம் மூலமாக மற்றவர்களுக்கும் மரியாதை கொடுத்துக் கொண்டே தன்னுடைய பாக்கியத்தை உருவாக்க வேண்டும். சிறியவர்கள், பெரியவர்கள், மகாரதிகள் (யானைப்படை) மாதிரி வேகமாக முன்னேறிச் செல்பவர்களையும் மற்றும் காலாட்படை மாதிரி மெதுவாக செல்பவர்களையும் மரியாதை நிறைந்த பார்வையோடு பாருங்கள். மரியாதை கொடுக்காதவருக்கும் மரியாதை கொடுப்பவராக, எட்டி உதைப்பவருக்கும் புகலிடம் கொடுப்பவராக, நிந்தனை செய்பவரையும் மகிமை செய்பவராக ஆக வேண்டும். அந்த மாதிரியானவரைத் தான் அனைவருக்கும் மரியாதைக் கொடுப்பவர் என்று கூறுவது.

அப்படி இந்த வருடம் இரண்டு விதமான விசேஷ சேவை நடக்க வேண்டும். ஒன்று தன்னை சம்பன்னம் ஆக்குவது, இதற்காக இந்த வருடத்தில் நாலாபுறங்களில் முக்கியமான இடங்களில் முன்னேற்றத்திற்கான சாதனம், யோக பட்டிக்கான சாதனம் மற்றும் தாரணைக்கான பட்டி நடக்க வேண்டும். அந்த மாதிரி ஒவ்வொரு இடத்திலும் நாலாபுறங்களிலும் ஒவ்வொரு குரூப்பிற்காக பட்டியின் நிகழ்ச்சி வையுங்கள். ஒவ்வொருவரையும் சுதந்திரமாக்கி பட்டியின் அனுபவம் செய்வியுங்கள். எப்படி சென்ற வருடத்தில் யோக பட்டியின் நிகழ்ச்சி வைத்திருந்தீர்கள், அதே போல் தாரணை மற்றும் நினைவு இரண்டு பாடங்களிலும் தன்னை சம்பன்னமாக்குவதற்கான பட்டி இருக்கட்டும். அந்த மாதிரியான நிகழ்ச்சியை அனைவரும் ஒன்றாகக் கூடிச் சேர்ந்து உருவாக்குங்கள்.

இன்னொரு விஷயம் உலக சேவைக்கானது அதற்காக ஒவ்வொரு சேவை நிலையமும் தன்னுடைய அக்கம் பக்கத்திலிருக்கும் இடங்களில் செய்தி கொடுக்கும் நிகழ்ச்சியை அதிவேகமாக செய்ய வேண்டியதாக இருக்கும். அக்கம் பக்கத்திலிருக்கும் எந்தவொரு இடமும் செய்தி கொடுப்பதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விட வேண்டாம். இல்லையென்றால் வஞ்சிக்கப்பட்டு தங்கிப்போகும் ஆத்மாக்களின் சுமை பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களின் மேல் வந்து விடும். எனவே சக்கரவர்த்தி ஆகுங்கள். மகாதானி என்றால் மகா தானம் செய்து முன்னேறிச்

செல்வது. ஒவ்வொரு பொறுப்பாளர் ஆகியிருக்கும் உயர்ந்த ஆத்மாவிற்கு இரண்டு, மூன்று இடங்கள் மட்டும் இல்லை, ஆனால் அக்கம் பக்கத்தில் உள்ள அனைத்து இடங்களில் சுற்றி வரும் பொறுப்பாளர் ஆக வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் தனக்கு சமமான பொறுப்பாளரை உருவாக்கிக் கொண்டே இருங்கள் மற்றும் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். அதே இடத்தில் உட்கார்ந்து விடாதீர்கள். அப்படி இந்த வருடம் சுற்றி வந்து விசேஷமாக இந்த சேவை செய்ய வேண்டும். செய்தி கொடுத்து தனக்குச் சமமாக பொறுப்பாளரை உருவாக்கி முழு உலகம் மற்றும் தன்னுடைய அக்கம் பக்கத்தினருக்கு செய்தி கொடுக்க வேண்டும். இப்பொழுது கரங்களை உருவாக்கும் காரியம் செய்யுங்கள். நேரத்திற்குத் தகுந்தாற்போல் எப்படி நேரம் அதிவேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. அதே மாதிரி சேவையின் ரிசல்ட்டின் உடனடி பலனாக ஏற்கனவே தயாராகி இருக்கும் பொறுப்பாளராக ஆகக்கூடிய ஆத்மாக்கள் சுலபமாகவே வெளிவர முடியும். லட்சியம், தைரியம் மற்றும் பகுத்தறிவது மட்டும் வேண்டும். பாண்டவர்கள் அம்பை எய்தார்கள் மேலும் தண்ணீர் வந்தது என்ற சென்ற கல்பத்தின் மகிமை இருக்கிறது அதாவது முயற்சி செய்தார்கள் மற்றும் பலன் கிடைத்தது. இப்பொழுது உடனடி பலனுக்கான நேரம் ஆகும். சீசன் ஆகும், நேரத்திற்கு வரதானம் கிடைக்கிறது. இதனுடைய லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தன்னுடைய சாதனங்கள் மற்றும் தனக்காக நேரம் மற்றும் செல்வத்தை தியாகம் செய்தால் தான் இந்த உடனடி பலனின் பாக்கியத்தை அடைய முடியும். தன்னுடைய ஓய்விற்காக, தன்னுடைய நலன் கருதி சேவைக்காக அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் செல்வங்கள் மூலம் ஒருபொழுதும் வெற்றி கிடைக்காது. எப்படி சேவையின் தொடக்கத்தில் தன்னுடைய வயிற்றைக் கட்டியும், உணவைக் குறைத்தும் ஒவ்வொரு பொருளை சேவையில் ஈடுபடுத்தியதினால் அதனுடைய பிரத்யக்ஷ பலனாக ஆத்மாக்கள் நீங்கள் இருக்கிறீர்கள். இடைக்காலத்தில் தந்தையும் நாடகமும் சாதனங்களை சகஜமாக தனக்காகப் பயன்படுத்தும் அனுபவத்தையும் செய்வித்தார் ஆனால் இப்பொழுது கடைசியில் இயற்கை தாசி (வேலை) ஆள்) ஆன பிறகும், அனைத்து சாதனம் கிடைத்திருந்தும் தனக்காக இன்றி சேவைக்காகப் பயன்படுத்துங்கள். ஏனென்றால் வரும் நாட்களில் அனேக ஆத்மாக்கள் சாதனங்கள் மற்றும் செல்வத்தை உங்கள் எதிரில் அதிகத்திலும் அதிகமாக அர்ப்பணம் செய்வார்கள் ஆனால் தனக்காக

ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். தனக்காக ஏற்றுக் கொள்வது என்றால் தன்னை உயர்ந்த பதவியிலிருந்து வஞ்சித்து விடுவது. எனவே அந்த மாதிரி தியாகம் செய்பவராகி சேவையில் பிரத்யக்ஷ பலனைக் கொண்டு வாருங்கள். புரிந்ததா? இப்பொழுது பொறுப்பாளர் ஆகக்கூடிய வாரிசுகளை மற்றும் சேவையில் சகயோகி ஆகக்கூடியவர்களின் பூச்செண்டை தந்தையின் எதிரில் அர்ப்பணித்தீர்கள் என்றால் அப்பொழுது தான் உலகிற்கு நன்மை செய்பவரிலிருந்து உலக இராஜ்ய அதிகாரி என்று கூறுவோம். இதன் மேல் பரிசு கிடைக்கும். சென்ற தடவை கூட பரிசு கொடுக்கும் மாதிரி எந்த ரிசல்ட்டும் வரவில்லை. எனவே இந்த தடவை முயற்சி செய்து மீண்டும் இரட்டை பரிசைப் பெறுங்கள். நல்லது.

அந்த மாதிரி உயில் எழுதக்கூடிய, முதல் நம்பரில் வரக்கூடிய, உடனடி பலனைக் கொடுக்கக்கூடிய, தந்தையை வெளிப்படுத்தக்கூடிய, சக்தி சேனை மற்றும் பாண்டவ சேனையின் கொடியை பறக்க விடக்கூடிய மற்றும் உலகின் எதிரில் பாப்தாதாவின் வெற்றி முழக்கத்தை செய்வதற்கு பொறுப்பாளர் ஆகக்கூடிய வெற்றி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

**வரதானம்: பரந்த மனமுடையவராகி துக்கமான அமைதியற்ற ஆத்மாக்களுக்கு குஷியின் தானம் கொடுக்கக்கூடிய மாஸ்டர் இரக்க மனம் உடையவர் ஆகுக!**

தற்சமயம் மனிதர்களுக்கு மற்ற அனைத்தும் கிடைக்க முடியும், ஆனால் உண்மையான குஷி கிடைக்க முடியாது. எனவே அந்த மாதிரி நேரத்தில் துக்கமான அமைதியற்ற ஆத்மாக்களுக்கு குஷியின் அனுபவம் செய்து விட்டீர்கள் என்றால் அவர்கள் உள்ளப்பூர்வமாக ஆசீர்வாதங்களைக் கொடுப்பார்கள். நீங்கள் வள்ளலின் குழந்தைகள் என்றால் பரந்த மனதோடு குஷியின் பொக்கிஷத்தை அனைவருக்கும் கொடுங்கள், இரக்க மனதின் குணத்தை வெளிப்படுத்துங்கள். இவரோ கேட்பவர் இல்லை என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். யாராவது எதிர்ப்பு தெரிவித்தாலும் கூட நீங்கள் இரக்க பாவனையை விடக்கூடாது, இரக்க பாவனை, சுபபாவனை அவசியம் பலன் கொடுக்கும்.

**சுலோகன்: ஞானம், யோகத்தின் பாலனை தான் ஆன்மீக பாலனை ஆகும். இந்த பாலனையினால் சக்திசாலியாக ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.02.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாயாவுடன் யுத்தம் செய்யும் பாண்டவர்களுக்கான தாரணைகள்!

சென்ற கல்பத்தில் பாண்டவர்களைப் பற்றி என்ன வர்ணனை செய்யப்பட்டிருந்ததோ அந்த அனைத்து விசேஷங்களும் தற்சமய வாழ்க்கையில் அனுபவம் ஆகிறதா? அவர்கள் மலை உயரத்தில் சென்று தன்னைத் தானே உருக்கிக் கொண்டார்கள் என்று வர்ணிக்கப்பட்டு இருக்கிறது, இதனுடைய ரகசியம் என்ன? எந்த விஷயத்தில் உருக்கினார்கள்? சூட்சும விஷயத்தின் நினைவுச்சின்னம் தான் ஸ்தூல ரூபத்தில் இருக்கிறது. எப்படி சைத்தன்யத்தின் நினைவுச்சின்னம் ஸ்தூலத்தில் இருக்கிறதோ, அதே போலவே சூட்சுமத்தைத் தெளிவுப்படுத்துவதற்காக உதாரணம் கொடுக்கப்படுகிறது. தன்னை வெற்றியடைபவராக ஆக்குவதற்கு முயற்சி செய்பவர்களின் முயற்சியில் என்ன தடைகள் எதிரில் வருகிறதோ அந்த தடைகளின் காரணமாக தன்னை வெற்றியாளர்களாக ஆக்க முடியாதா? அடிக்கடி அதே சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தின் காரணமாக, தோல்வி ஏற்படுகிறதா? எதை இயற்கையான சம்ஸ்காரம் மற்றும் இயல்பு என்று கூறப்படுகிறதோ அந்த மாதிரி தன்னுடைய சம்ஸ்காரங்களை உருக்குவது என்பதுதான் தன்னை உருக்குவதாகும், அதன் மூலம் பார்ப்பவர்கள் அல்லது நெருக்கத்தில் வருபவர்கள் இந்த ஆத்மா தன்னையே உருக்கிக் கொண்டார் என்று உணர வேண்டும். இதில் தான் வெற்றி இருக்கிறது.

நாடகப்படி எவ்வளவு சகஜயோகி, உயர்ந்த யோகி மற்றும் வெற்றி அடைபவராக ஆவதற்கான உதவி பிராப்தி ஆகியிருக்கிறதோ அந்த அளவு பிரதிபலனையும் கொடுத்திருக்கிறீர்களா? சூழ்நிலைகளை சாதகமாக மாற்றுவதிலும் உதவி கிடைத்திருக்கிறது என்றால் அதனுடைய பிரதிபலனாக சூழ்நிலையை சக்திசாலியாக ஆக்கி வைப்பதிலும் உங்கள் உதவியை பிரதிபலனாகக் கொடுங்கள். கூடவே

உயர்ந்த தொடர்பில் (சங்கத்தில்) இருக்கிறீர்கள். இதுவும் உதவி தான் என்றால் எந்தெந்த ஆத்மாக்கள் தன்னுடைய பாக்கியத்தை அடைவதற்காக வருகிறார்களோ அவர்களுக்கும் உங்களுடைய தொடர்பின் (சங்கத்தின்) உயர்ந்த நிலை அனுபவம் ஆக வேண்டும். இது தான் பிரதிபலன் கொடுப்பதாகும். இந்த அனைத்து ஆத்மாக்களும் உயர்ந்த தொடர்பின் வர்ணத்தினால் வர்ண மயமாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அனுபவம் செய்யட்டும். உயர்ந்தவர்களாக ஆன்மீகத் தொடர்பினால் மற்றும் தன்னுடைய சரித்திரங்களினால் ஆவீர்கள். அப்படி தன்னுடைய கர்மயோகியின் நிலை மூலமாக மற்றும் தன்னுடைய குணம் நிறைந்த சொரூபத்தின் மூலமாக வரக்கூடிய ஆத்மாக்களுக்காக ஒரு உதாரணமாகி, சாதனம் ஆகி அவர்களுடைய சகஜ பிராப்திக்கான கருவி ஆகி விடுங்கள். உங்களுடைய நடைமுறை ஸ்தூலமான சொரூபத்தின் முன்மாதிரியைப் பார்த்து அவர்களிடம் விசேஷமாக ஊக்கம் உற்சாகம் பிறக்கட்டும். ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு நடைமுறை நிரூபணத்திற்கு முன்பும் நான் ஒரு சாம்பிள் ஆக (முன்மாதிரியாக) இருக்கிறேன் என்று எப்பொழுதும், ஒவ்வொரு விஷயத்திலும் இந்த எண்ணத்தைத் தான் வைக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் நான் முன்மாதிரியாக இருக்கிறேன் என்ற லட்சியத்தை எப்பொழுது வைப்பீர்களோ அப்பொழுது தான் முயற்சியின் வேகத்தை தீவிரமாக்க முடியும். ஓய்விற்கான சாதனங்கள் கிடைத்திருந்த போதிலும், ஓய்வு விரும்பியாக ஆகி விடாதீர்கள். முயற்சி செய்வதிலும் ஓய்வு விரும்பியாக ஆகக்கூடாது. அதாவது அலட்சியமானவர் ஆகக்கூடாது. ஓய்விற்கான சாதனங்களின் லாபத்தை நிரந்தரமான பிராப்தியின் தடையாக ஆக்கக்கூடாது. இந்த கவனம் வைக்க வேண்டும். ஒருவேளை எந்த விதமான சித்தி (வெற்றி) மற்றும் பிராப்தியை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் அங்கே (சத்யுகத்தில்) குறைந்து விடும். சாதனம் கிடைத்திருந்தும் அதனுடைய தியாகம் இருக்க வேண்டும். பிராப்தி இருந்த போதிலும் தியாகம் செய்வது என்ற இதைத் தான் உண்மையான தியாகம் என்று கூறுவது. பிராப்தியே இல்லை என்கின்ற போது, நான் தியாகம் செய்தேன் என்றால் இது நிர்பந்தமேயன்றி தியாகம் இல்லை. இவ்வளவு கவனம் தன் மேல் வைக்கிறீர்களா மேலும் சகஜயோகாவிற்கான அர்த்தம் சகஜ சாதனங்கள் மூலமாக யோகி ஆவதாகும் என்பதை புரிந்திருக்கிறீர்களா? அல்லது ஒவ்வொரு

விஷயத்திலும் அது குறைந்து கொண்டிருக்கிறதா, அதிகரித்துக் கொண்டிருக்கிறதா என்ற கவனம் இருக்க வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 02.08.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## வெளிநாடுகளில் ஈஸ்வரிய சேவைக்கான மகத்துவம்!

பாப்தாதாவின் எதிரில் எந்த மாதிரிக் குழந்தைகள் எப்பொழுதும் இருக்கிறார்கள்? எப்பொழுதும் எதிரில் இருக்கும் குழந்தைகளின் விசேஷம் என்னவாக இருக்கிறது? அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்காக பாப்தாதாவிற்கு விசேஷ ரூபத்தில் சந்திக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த மாதிரி குழந்தைகளை கண்ணின் மணிகள் மற்றும் உலகின் ஒளி என்று கூறப்படுகிறது. ஸ்தூல உடலில் அனைத்தையும் விட விசேஷமாக மற்றும் எப்பொழுதும் அவசியமான அங்கமாக கண் இருக்கிறது. கண் இல்லை என்றால் உலகமே இல்லை. இதே விதமாக அந்த மாதிரிக் குழந்தைகள் இவ்வளவு விசேஷம் நிறைந்தவர்கள் என்று வர்ணனை செய்யப்படுகிறார்கள். அந்த மாதிரிக் குழந்தைகள் சேவைக்கு தகுதியானவர்களாக இருக்கும் காரணத்தினால் உலகிற்காக கண் அதாவது பிரகாசம் மற்றும் ஜோதிக்குச் சமமானவர்கள். எப்படி வாழ்க்கைக்காக கண் அவசியமாக இருக்கிறதோ அது போலவே உலகிற்காக ஒளி அவசியமாக இருக்கிறது. ஒருவேளை அந்த மாதிரியான ஆத்மாக்கள் பொறுப்பாளராக ஆகவில்லை என்றால் உலகம் காடாக ஆகி விடும் அதாவது உலகம், உலகமாக இருப்பதில்லை. அந்த மாதிரி எப்பொழுதும் தன்னையும் நட்சத்திரம் என்று புரிந்தே காரியம் செய்கிறார்கள். நட்சத்திரத்தில் கூட பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம். அந்த மாதிரிக் குழந்தைகள் தான் பாப்தாதாவின் கண்களில் நிரம்பியிருக்கும் அதாவது தந்தையின் நினைவில் எப்பொழுதும் மூழ்கியிருப்பவர்கள். கூடவே அவர்களுடைய கண்களிலும் பாப்தாதா எப்பொழுதும் நிரம்பியிருப்பவராக இருக்கிறார். அந்த மாதிரியான கண்களின் மணி தந்தையைத் தவிர வேறு எந்த மனிதன் மற்றும் பொருட்களைப் பார்த்தும் பார்க்காமல் இருப்பார். அந்த மாதிரியான நிலை உருவாகி விட்டதா? அல்லது இதுவரையிலும் கூட வேறு ஏதாவது தென்படுகிறதா?

எதிலேயாவது அம்சம் மாத்திரம் கூட ஏதாவது ரசனை தென்படுகிறதா? சுவையற்ற உலகமாக அனுபவம் ஆகிறதா? இவர்கள் அனைவரும் இறந்தே கிடக்கிறார்கள் என்று அந்த மாதிரி புத்தி மூலமாக அனுபவம் ஆகிறதா? பிணத்திலிருந்து ஏதாவது கிடைக்கும் என்ற ஆசை இருக்க முடியுமா? ஏதாவது உறவின் அனுபவம் ஆக முடியுமா? அந்த மாதிரி ஆசை யென்றால் என்னவென்று அறியாத நிலை, எப்பொழுதும் ஒருவரின் ரசனையில் இருக்கக்கூடிய, ஒரே சீரான நிலை உள்ளவர்களாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது இதுவரையிலும் கூட பிணத்திலிருந்து ஏதாவது பிராப்தியாகும் என்ற ஆசை அல்லது ஏதாவது அழியக்கூடிய ரசனை தன் பக்கம் கவர்ந்திழுக்கிறதா? எதுவரை ஏதாவது பிராப்தியின் ஆசை மற்றும் விருப்பங்கள் இருக்கிறதோ அல்லது ஏதாவது ரசனையின் ஈர்ப்பு இருக்கிறதோ அதுவரை பாப்தாதாவின் கண்களின் நட்சத்திரங்களாக ஆக முடியாது மற்றும் கண்களில் எப்பொழுதும் பாப்தாதா நிரம்பி இருக்க மாட்டார். ஒன்று, அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்கள், யாரை கண்களின் மணிகள் மற்றும் கண்களின் நட்சத்திரங்கள் மற்றும் உலகின் ஒளி என்று கூறப்படுகிறதோ. அப்படி முதல் நம்பரில்தான் கண்களின் மணிகள் இருக்கிறார்கள்.

இரண்டாம் நம்பர் எது? எப்படி கண்களின் மணி பிரசித்தியாக இருக்கிறதோ, உலகிற்கே ஒளியாக இருக்கிறார்கள், இந்த விதமாக இரண்டாம் நம்பரில் இருப்பவர்கள் எந்த ரூபத்தில் பிரசித்தியாக இருக்கிறார்கள். புஜங்களின் ரூபத்தில் பிரசித்தியாக இருக்கிறார்கள். பிரம்மாவிற்கு அனேக புஜங்கள் இருப்பதாகக் காண்பிக்கிறார்கள், இதிலும் இரண்டாம் நம்பர் புஜங்களும் அவசியம் இருக்கிறார்கள், அதாவது சகயோகி ஆத்மாக்கள்.

அப்படி தன்னை முதல் நம்பரில் இருப்பதாக நினைக்கிறீர்களா? அல்லது இரண்டாவது நம்பரிலா? லண்டனின் குரூப் எந்த நம்பரில் இருக்கிறது? இரட்டை வெளிநாட்டினரின் குரூப் விசேஷமாக பாப்தாதாவை வரவழைத்திருக்கிறார்கள். வெளிநாட்டினரோ அனைவரும் தான் ஆனால் இவர்கள் இரட்டை வெளிநாட்டினர். அப்படி இரட்டை வெளிநாட்டினருக்கு விசேஷ ரூபத்தில் பாப்தாதாவை வெளிப்படுத்த வேண்டும். எப்பொழுது கண்களின் மணிகளாக ஆவீர்களோ. (புஜங்களாக அல்ல) அப்பொழுது தான் அதைச் செய்ய முடியும்.

## 1975 அவ்யக்த முரளி

வெளிநாட்டினருக்கு சேவைக்காக புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். எப்படி பாரதத்தில் வசிக்கும் சேவைக்குத் தகுதியான ஆத்மாக்கள் புதுப்புது கண்டுபிடிப்புகளை செய்கிறார்களோ அதே போல் இரட்டை வெளிநாட்டினர் என்ன கண்டுபிடிப்பு செய்திருக்கிறார்கள்? எப்படி பாரதத்தில் உருவான கண்டுபிடிப்புகளை வெளிநாடுகளிலும் செய்கிறீர்களோ அதே போல் வெளிநாட்டின் கண்டுபிடிப்பு பாரதத்தில் இருக்கட்டும். எப்படி கண்காட்சி, மகாநாடு, புரொஜக்டர் ஷோ மற்றும் கீதா பாடசாலைகள் இவை அனைத்தும் பாரதத்தில் வசிப்பவர்களின் கண்டுபிடிப்பாகும். அதே போல் வெளிநாட்டினர் என்ன கண்டுபிடிப்பு செய்திருக்கிறார்கள் (மொரீஷியஸில் பிரதம மந்திரியை அழைத்தோம்) யாரையாவது அழைப்பது அதுவும் இங்கிருந்து தான் தொடங்கியது ஆனால் அதை நடைமுறையில் அங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள். அதுவும் சரி தான். என்னென்ன செய்திருக்கிறீர்களோ அதற்காக பாப்தாதா நன்றி கூறுகிறார் ஆனால் அங்கிருந்து ஏதாவது புதிய கண்டுபிடிப்பை செய்திருக்கிறீர்களா? வெளிநாட்டினருக்கு அந்த மாதிரி விஸ்தாரமான மார்க்கத்தின் சேவையின் கண்டுபிடிப்பை வெளிநாட்டு சூழ்நிலையின் பிரமானம் உருவாக்க வேண்டும். அதன் மூலம் கொஞ்ச காலத்திற்குள் வெளிநாட்டில் செய்தி சென்றடைய வேண்டும். டி.வி மற்றும் ரேடியோவில் உங்களுடைய நிகழ்ச்சி வந்து கொண்டிருக்கிறது, இதுவோ அங்கே சாதாரண விஷயமாகும். எப்படி உங்களுடையது வருகிறதோ அதே போல் மற்றவர்களுடையதும் வந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் இது பெரிய விஷயமாகும் ஆனால் இதே விஷயம் அனேக இடங்களில் சாதாரணமானதாகும். யார் எவ்வளவு முயற்சி செய்தாரோ, கொஞ்ச காலத்தில் தைரியம், ஊக்கம் உற்சாகம் காண்பித்து சேவையை முன்னேறச் செய்திருக்கிறாரோ, அதற்காக பாப்தாதா லாஸ்ட் இஸ் ஃபாஸ்ட் என்ற பட்டம் கொடுக்கவோ செய்கிறார் ஆனால் இப்பொழுது வெளிநாட்டினர் அனைவரும் ஒன்றாகக் கூடி வெளிநாட்டில் மிக சக்திசாலியான சப்தம் (ஒலி) பாரதவாசிகளை வந்து சேரும் அளவிற்கு அந்த மாதிரி புது கண்டுபிடிப்பைச் செய்யுங்கள். வெளிநாட்டு சேவையின் மூல அஸ்திவாரமே வெளிநாட்டில் எழும் ஓசை மூலமாக பாரதத்தின் கும்பகர்ணர்களை விழித்தெழச் செய்வதுதான் வெளிநாட்டு சேவையின் லட்சியமே இது தான். வெளிநாட்டினுடையதை வெளிநாட்டில் காண்பித்தீர்கள், இதுவொன்றும் பெரிய விஷயம் இல்லை. அந்த லட்சியத்தின் மூலம் வெளிநாட்டின் சேவை டிராமாவில்

அடங்கியிருக்கிறது. மேலும் இதுவரையிலும் ஏதாவது கண்டுபிடிப்பின் ஓசை வெளிநாட்டிலிருந்து தான் வந்திருக்கிறது. கண்டுபிடிப்பு பாரதத்தினுடையது தான் ஆனால் பாரதவாசிகள் பாரதத்தின் கண்டுபிடிப்பை வெளிநாட்டினரின் மூலமாகத் தான் ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போலவே இந்த ஈஸ்வரிய பிரத்யக்ஷதாவின் ஓசை வெளிநாட்டு சேவை தான் பாரதத்தின் பெயரை நாலாபுறமும் பரப்பும். அப்படி வெளிநாட்டினர் இந்தக் காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள். எனவே இப்பொழுது அந்த மாதிரி கண்டுபிடிப்பைச் செய்யுங்கள், யாராவது அந்த மாதிரி ஆத்மாவை பொறுப்பானவர் ஆக்குங்கள், அவருடைய அனுபவம் நிறைந்த ஓசை எழட்டும். வெறும் வாயளவு சப்தமாக இன்றி அனுபவத்தின் சப்தம் வெளிநாட்டிலிருந்து பாரதம் வரை வந்தடைய வேண்டும். கடைசி நேரத்தில் வெளிநாட்டு சேவைக்கு இவ்வளவு மகத்துவம் ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது, அங்கு செல்லக்கூடியவர்களுக்கும் இந்த மாதிரி பாதகமான மற்றும் நேரத்தின் அருகாமை இருக்கும் பொழுது வெளிநாட்டில் ஏன் அனுப்பப்படுகிறோம் என்ற எண்ணமும் உருவாகிறது. எப்பொழுது கடைசியில் வெளிநாட்டிலிருந்து பாரதத்திற்குத் தான் வர வேண்டும், இருந்தும் வெளிநாட்டு சேவை முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. நல்ல நல்ல உதவிக் கரங்கள் வெளிநாட்டு சேவைக்காக அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது பாரதத்திலும் தேவையாக இருக்கிறது. அழைப்பு இருக்கிறது இருந்தும் ஏன் அனுப்பப்படுகிறார்கள். மேலும் மற்ற கொள்கை உள்ளவர்கள் சொர்க்கத்தில் வருவதற்கான பங்கே இல்லை என்ற இதுவும் தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் யார் மாறிச் சென்றுவிட்டார்களோ அந்த ஆத்மாக்களை ஆதி தர்மத்தில் கொண்டு வருவதற்காக அனுபப்படுகிறார்கள். மேலும் அவர்கள் மிகக் குறைந்தவர்கள். இதனுடைய மூல ஆதாரம் மற்றும் வெளிநாட்டு சேவையின் குறிக்கோளே வெளிநாடு மூலமாக பாரதம் வரை சப்தம் வந்தடையும் இரகசியம் டிராமாவில் அடங்கியிருக்கிறது. எனவே வெளிநாட்டு சேவைக்கு முதல் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. மற்றபடி கீதா பாடசாலைகள் திறந்தீர்கள் மற்றும் டி.வியில் பேசினீர்கள் என்ற இதுவொன்றும் குறிக்கோள் அல்ல. குறிக்கோளை சென்றடைவதற்காக இவை அனைத்தும் சாதனம் ஆகும். புரிந்ததா? எனவே வெகுவிரைவில் பாரதம் வரை எப்படி சப்தத்தைப் பரப்புவது என்று உங்களுக்குள் கருத்து

பரிமாற்றம் செய்யுங்கள். வெளிநாடு மூலமாக பாரதத்தில் எப்படி ஓசை எழும்பும்?

இன்று முக்கியமாக வெளிநாட்டினர்களுக்காக பாப்தாதாவிற்கும் வெளிநாட்டினராக ஆக வேண்டியது இருந்தது. பாப்தாதா வெளிநாட்டினர் ஆகவில்லை என்றால் சந்திக்கவும் முடியாது. வெளிநாட்டு விசேஷ ஆத்மாக்கள், யார் விசேஷ காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்கள், அந்த மாதிரியான குரூப்பை பார்ப்பதற்காக மற்றும் சாகார ரூபத்தில் சந்திப்பதற்காக நிராகாரமானவர் மற்றும் ஆகாரமானவருக்கும் சாகார ரூபத்தின் ஆதாரத்தை எடுக்க வேண்டியதாக இருந்தது. அந்த மாதிரியான விசேஷ ஆத்மாக்கள் எப்பொழுதும் தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து கொண்டு எண்ணம், சொல், செயல் மூலமாக விசேஷ எண்ணம், சொல், செயலை செய்து கொண்டே இருங்கள். இரண்டு பக்கங்களிலிருந்தும் நல்ல குரூப்கள் இருக்கிறார்கள். உங்கள் காரணமாக மற்ற ஆத்மாக்களுக்கும் வாய்ப்பு கிடைத்து விட்டது. மேலும் அனைத்து ஆத்மாக்கள் அதிலேயும் விசேஷமாக மதுபன் நிவாசிகள் தன்னை எப்பொழுதும் மிக அதிர்ஷ்டம் நிறைந்தவர் என்று புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் பாப்தாதா மதுபன்னைத் தவிர வேறு எங்கேயும் சந்திப்பைச் செய்ய முடியாது (லுசாகாவில் ஏன் வருவதில்லை). ஆகார ரூபத்தில் இங்கு அங்கு செல்ல முடியும். எப்பொழுது யாருடைய சரியான, நல்ல நேரம் வந்து விடுகிறதோ சூழ்நிலைகள் மற்றும் நேரம் எளிதாக இயல்பாகவே அங்கு அழைத்துச் செல்கிறது. நல்லது.

தன்னை மற்றும் நேரத்தை தெரிந்திருக்கக்கூடிய, எப்பொழுதும் அனைத்து ரசனைகளிலிருந்து விடுபட்டு ஒரு ரசனையில் இருக்கக்கூடிய, பாப்தாதாவை எப்பொழுதும் கண்களில் நிரப்பி வைத்திருக்கும் பாப்தாதாவின் கண்களின் நட்சத்திரங்களுக்கு, எப்பொழுதும் தன்னை ஜோதி சொரூப நட்சத்திரம் என்று புரிந்து நடந்து கொள்ளக்கூடியவர்களுக்கு, விலகிய மற்றும் அன்பான ஆத்மாக்களுக்கு மேலும் மிக உயர்ந்த ஆத்மாக்களின் கூடவே விசேஷமாக இரட்டை வெளிநாட்டு ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: என்பதின் அதிகாரத்தை முடிவுகட்டி கோபம் மற்றும் அபிமானத்தின் மேல் வெற்றியடையக்கூடிய கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

எங்கு இது என்னுடையது என்பதின் அதிகாரத்தை வைக்கிறீர்கள் என்றால் கோபம், அபிமானம் அல்லது பற்றுதல் வந்து விடுகிறது ஆனால் இது சேவையின் துணைவர்களேயன்றி என்னுடையதின் அதிகாரம் இல்லை. எப்பொழுது என்னுடையது இல்லை என்றால் கோபம் மற்றும் பற்றுதலின் கர்ம பந்தனம் இல்லை. கர்மபந்தனத்திலிருந்து விடுபடுவதற்காக ஒரு தந்தையை தன்னுடைய உலகமாக ஆக்கிக் கொள்ளுங்கள். "ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை" ஒரு தந்தையே உலகமாகி விட்டார் என்றால் எந்த ஈர்ப்பும் இல்லை, ஏதாவது பலஹீனமான சம்ஸ்காரங்களின் பந்தனமும் இல்லை. அனைத்து என்னுடையது என்னுடையது என்பது ஒரு என்னுடைய தந்தையில் அடங்கி விடுகிறது.

**சுலோகன்: யார் நேரத்திற்குத் தகுந்தாற்போல் ஒவ்வொரு குணம், ஒவ்வொரு சக்தியை காரியத்தில் ஈடுபடுத்துகிறாரோ அவர் தான் மாஸ்டர் சர்வ சக்திவான்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 03.08.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிவசக்தி மற்றும் பாண்டவ சேனை தயாராக வேண்டும் என்பதற்கான எச்சரிக்கை!

அனைவரும் யோகயுக்த் (யோகம் நிறைந்த) மற்றும் யுக்தியுக்த் (சமயத்திற்கேற்ற சாதுர்யம் நிறைந்த) நிலையில் நிலைத்திருந்து கொண்டே தன்னுடைய காரியத்தை செய்து கொண்டிருக்கிறீர்களா? ஏனென்றால், தற்சமயத்திற்கேற்றபடி எண்ணம், சொல் மற்றும் செயல் இந்த மூன்றும் யுக்தியுக்த் ஆக இருக்க வேண்டும். அப்பொழுது தான் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆக முடியும். நாலாபுறத்தின் சூழ்நிலை யோகயுக்த் மற்றும் யுக்தியுக்தாக இருக்கட்டும். எப்படி யுத்த மைதானத்தில் எப்பொழுது போர்வீரன் யுத்தம் செய்வதற்காக எதிரியின் எதிரில் நின்று கொண்டிருக்கிறார் என்றால் அவருக்கு தன் மேல் மற்றும் தன்னுடைய ஆயுதங்கள் மேல் அதாவது தன்னுடைய சக்திகளின் மேல் எவ்வளவு கவனம் இருக்கிறது. இப்பொழுதோ நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது, யுத்த மைதானத்தில் எதிரில் வருவதற்கான நேரமாகும் என்று புரிந்து கொள்ளுங்கள். அந்த மாதிரி நேரத்தில் நாலாபுறத்திலும் தன் மேல் அனைத்து சக்திகளின் கவனம் இருக்க வேண்டும். ஒருவேளை கொஞ்சமாவது கவனம் குறைவாக இருக்கிறது என்றால், எப்படி நேரத்திற்கு தகுந்தாற்போல் நாலாபுறங்களிலும் டென்ஷன் (மன அழுத்தம்) அதிகரித்துக் கொண்டிருக்கிறதோ, அது போலவே நாலாபுறங்களிலும் டென்ஷனின் சூழலின் பாதிப்பு யுத்தத்தில் இருக்கும் ஆன்மீக பாண்டவ சேனை மீதும் ஏற்பட முடியும். எப்படி நாளாக நாளாக சம்பூர்ண நிலையின் நேரம் அருகில் வந்து கொண்டே இருக்கிறது என்றால், உலகில் டென்ஷன் இன்னும் அதிகரிக்கும், குறையாது. நாலாபுறங்களிலும் இழுபறியின் வாழ்க்கை அனுபவமாகும். நாலாபுறத்திலிருந்தும் இழுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக அனுபவம் ஆகும். ஒரு பக்கத்திலிருந்து

இயற்கையின் சிறு சிறு ஆபத்துக்கள் மற்றும் நஷ்டத்தின் டென்ஷன், இன்னொரு பக்கம் இந்த உலக அரசாங்கத்தின் கடுமையான சட்டங்களின் டென்ஷன், மூன்றாவது பக்கம் தொழிலில் மந்தம் ஏற்படுவதின் டென்ஷன் மற்றும் நான்காவது பக்கம் லௌகீக உறவினர்கள் ஆகியவர்களுக்கு அன்பு மற்றும் சுதந்திரம் இருக்கும் காரணத்தினால் குஷியின் உணர்வு அற்ப காலத்திற்காக இருக்கிறது. அதுவும் முடிவடைந்து பயத்தின் அனுபவத்தின் டென்ஷன், அந்த மாதிரி நாலாபுறங்களின் டென்ஷன் மனிதர்களில் அதிகரிக்கும். நாலாபுறங்களின் டென்ஷனில் ஆத்மாக்கள் துடிப்பார்கள். எங்கு சென்றாலும் அங்கு டென்ஷன் இருக்கும். எப்படி உடலில் கூட ஏதாவது நரம்பு இழுத்துக் கொள்கிறது என்றால் எவ்வளவு வேதனை இருக்கிறது. மூளை அழுத்தப்பட்டதாக இருக்கிறது. அந்த மாதிரியான சூழ்நிலை அதிகரித்துக் கொண்டே இருக்கும். ஏதாவது புகலிடமே தென்படவில்லை என்ன செய்வது என்ற மாதிரி இருக்கும். ஒருவேளை சரி என்று சொன்னாலும் டென்ஷன், இல்லை என்று சொன்னாலும் டென்ஷன், சம்பாதித்தாலும் கடினம், சம்பாதிக்காவிட்டாலும் கடினம். சேர்த்து வைத்தாலும் கடினம், சேர்த்து வைக்கா விட்டாலும் கடினம். அந்த மாதிரியான சூழ்நிலை உருவாகிக் கொண்டே இருக்கும். அந்த மாதிரியான நிலையில் நாலாபுறத்திலும் உள்ள டென்ஷனின் பாதிப்பு ஆன்மீக பாண்டவ சேனை மேல் இருக்க வேண்டாம். தான் டென்ஷனில் வருவதற்கான பிரச்சனையே இருக்க வேண்டாம் ஆனால் சூழ்நிலையின் பாதிப்பு பலஹீனமான ஆத்மாவில் சுலபமாகவே ஏற்பட்டு விடும். என்னவாகும்? எப்படி ஆகும் என்ற பயத்தின் சிந்தனை போன்ற இந்த விஷயங்களின் பாதிப்பு இருக்க வேண்டாம். அதற்காக இடையிடையே ஈஸ்வரிய நினைவு யாத்திரைக்கான ஏதாவது விசேஷ புரோகிராம் (நிகழ்ச்சிகள்) மதுபன் மூலமாக அதிகாரப்பூர்வமாக சென்று கொண்டே இருக்க வேண்டும். அதன் மூலம் ஆத்மாக்களின் கோட்டை உறுதியாக இருக்கும்.

இன்றைய நாட்களில் சேவையும் மிகவும் அதிகரிக்கும் ஆனால் சேவை அதிகரிப்பதின் கூடவே யுக்தியுக்தும் மிக அதிகமாக வேண்டும். இன்றைய நாட்களில் யாரும் ஞான சொரூப ஆத்மாவாக ஆவதற்காக வருவதில்லை. ஒரு ரகமானது தந்தைக்குச் சமமாக ஆகுபவர்கள், தந்தைக்குச் சமமாக மாஸ்டர் ஆகி விடுகிறார்கள். அப்படி முதல்

தரமானது தந்தைக்குச் சமமாக ஆவது, இரண்டாவது தரம் தந்தையின் சம்மந்தத்தில் மட்டும் இருப்பவர்கள் மற்றும் மூன்றாவது தரம் தந்தை மற்றும் சேவையின் நெருக்கத்தில் மட்டும் இருப்பவர்கள். இன்றைய நாட்களில் உறவு மற்றும் நெருக்கத்தில் வருபவர்கள் அதிகமாக வருவார்கள். சொரூபம் ஆகுபவர்கள் குறைவாக வருவார்கள். அனைவரும் ஒரே மாதிரியாக உருவாக மாட்டார்கள். நாளாக நாளாக பலஹீனமான தரமுள்ள ஆத்மாக்கள் அதாவது பிரஜைகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் அவர்களுக்கு ஒரு விஷயம் மட்டும் தான் பிடித்தமானதாக இருக்கும். இரண்டு விஷயங்கள் பிடித்தமானதாக இருக்காது. அனைத்து விஷயங்களிலும் நிச்சயம் இருக்காது. அப்படி நெருக்கத்தில் வருபவர்களுக்கும் அவர்களுக்கு என்ன வேண்டுமோ அதன் பிரகாரம் அவர்களை நெருக்கத்தில் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். எப்படி நேரம் மிகவும் மென்மையானதாக வந்து கொண்டே இருக்குமோ அப்படி பிரச்சனைக்கு ஏற்றபடியும் அவர்களுக்கு வழக்கமான மாணவர்கள் ஆவதும் கடினமாக இருக்கும் ஆனால் நெருக்கத்தில் மிக அதிகமானவர்கள் வருவார்கள், ஏனென்றால் கடைசி நேரம் இல்லையா? அப்படி கடைசி போஸ் (தோற்றம்) எப்படி இருக்கும்? எப்படி முதலில் துடிப்பு, ஊக்கம், உற்சாகம் இருந்ததோ, அம்மாதிரி கோடியில் ஒருவருக்குத் தான் கிடைக்கும். பெரும்பாண்மையோர் உறவு. நெருக்கத்தில் இருப்பவர்களாக வருவார்கள். அப்படி இந்த கவனம் வேண்டும். நெருக்கத்தில் வரும் ஆத்மாக்களை பகுத்தறிந்து கொள்ளாமல் நெருக்கத்திலிருந்து அவர்களை வஞ்சித்து (தடுத்து) விடக் கூடாது. வெறும் கையோடு யாரும் போக வேண்டாம். நியமங்கள்படி நடக்க முடியாவிட்டாலும் அவர் அன்பில் இருக்க விரும்புகிறார் என்றால், அந்த மாதிரி ஆத்மாக்கள் மீதும் கூட அவசியம் கவனம் வைக்க வேண்டும். இந்த குரூப் மூன்றாவது நிலையில் உள்ளவர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும், அவர்களுக்கும் அதற்கேற்றபடி கையாளுதல் (வளர்ப்பு) கிடைக்க வேண்டும், அப்படி நேரத்திற்கு தகுந்தாற்போல் சூழ்நிலையை சக்தி நிறைந்ததாக ஆக்குவதின் அவசியம் இருக்கிறது.

பிராமண குழந்தைகளின் தினசரி நடவடிக்கைகள் சாதாரண முறையில் கழிந்தது என்பது இன்றைய நாட்களில் நேரத்திற்கு தகுந்தாற்போல் இருக்கக்கூடாது. இல்லையென்றால், அதன் பிரபாவம் ஏற்பட்டு விடும். எனவே விசேஷமாக சூழ்நிலையை நினைவு யாத்திரை மூலம்

சக்திசாலியாக ஆக்குவதில் அனைத்து குழந்தைகளின் கவனத்தை ஈர்க்க வேண்டும். தன்னை அந்த உலகின் சூழ்நிலைகளிலிருந்து எப்படிக் காப்பாற்ற முடியும்? அந்த நிலை எது? கர்மயோகியாக இருந்தபோதிலும் எதை யோகி நிலை என்று கூறுவது? இந்த விதமான பாயிண்டுகளின் (விஷயங்களின்) மேல் இப்பொழுது விசேஷ கவனம் கொடுக்க வேண்டும். இப்பொழுது நினைவு யாத்திரை என்ற விஷயத்தின் மேல் அதிக கவனம் கொடுக்க வேண்டும். வரக்கூடியவர்களில் பலம் நிறைந்து விடும் அளவிற்கு ஒவ்வொரு சென்டரிலும் ஏதாவது நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்க வேண்டும். அந்த மாதிரி நேரத்தில் அவர்களும் விலகியிருப்பவர்களாக இருக்கட்டும், சாட்சியாகி பிரச்சனைகளை எதிர்கொள்ளட்டும். அதற்காக நினைவின் பலம் தேவையாக இருக்கிறது. பிராமணர்களை எச்சரிக்கை உள்ளவர்களாகவும் திறமைசாலியாகவும் ஆக்குவதற்காக மற்றும் சுயத்தின் பாதுகாப்பிற்காக அந்த மாதிரி ஏதாவது கருத்துக்கள் மற்றும் வகுப்புகளின் நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள். அதன் மூலம் எங்களுக்கு மதுபன் லைட் ஹவுஸிலிருந்து விசேஷமாக லைட் வந்து கொண்டிருக்கிறது என்று அனைவரும் புரிந்து கொள்ளட்டும். நல்லது.

நாடகப்படி காரிய நடவடிக்கைகளோ சரியாக நடந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுதைய காரிய நடவடிக்கைகள் மூலம் இராஜ்யத்தை நடத்தும் சம்ஸ்காரம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது இல்லையா? இராஜ சிம்மாசனம் மற்றும் இது இராஜ ஆசனம். இராஜ்யம் செய்பவராகி பின்பு அந்த சிம்மாசனத்தில் அமர்வீர்கள். இராஜ்யம் செய்பவர் என்றால் அதிகாரி ஆகி விட்டீர்கள். எந்தவொரு கவர்ச்சியின். கர்மவினையை அனுபவிப்பதின் அல்லது கர்மேந்திரியங்களின் அடிமைத் தனம் இருக்க வேண்டாம். அதிகாரி ஆக வேண்டும். இப்பொழுது இராஜ ஆசனம் இருக்கிறது. யோகாவிற்காக ஆசனம் இருக்கிறது இல்லையா, ஆசனத்தில் அமர்ந்திருப்பார்கள். ஆசனம் இருப்பதே அமர்வதற்காக, நிலைத்திருப்பதற்காக. அப்படி நிலையில் நிலைத்திருப்பது என்றால் ஆசனத்தில் அமர்வது. அப்படி எவ்வளவிற்கு எவ்வளவு ஆசனத்தில் அமர்வதற்கான பயிற்சி இருக்குமோ அந்த அளவே இராஜ சிம்மானசத்தில் அமர்வதற்கான பிராப்தி ஆகும். பயிற்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது தான் இல்லையா! இயற்கையான ரூபத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது. செய்ய வேண்டியதாக

இருப்பதில்லை ஆனால் ஆகியே விடுகிறது. அதே போலவே இதுவும் சுபாவம் ஆகி விடும். அதிகாரியாக இருப்பதற்கான சுபாவம். யோகா செய்வதற்கான எண்ணத்தை உருவாக்கினீர்கள் மற்றும் நடந்தது. பாபா என்று கூறினீர்கள் மற்றும் யோகா ஏற்பட்டது. இது தான் அருகாமையின் நிலையாகும். அமர்வதே ஆசனத்தில் தான். எப்படி சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் நான் ராஜா என்பதை ஒருபொழுதும் மறக்க முடியாது. அதே போலவே ஆசனத்தில் அதாவது இந்த நிலையில் நிலைத்திருப்பவர் நான் அதிகாரி என்பதை மறக்க முடியாது,

அனைவரும் யதார்த்தமாகவும் மற்றும் யுக்தி யுக்தாக இருக்கிறீர்களா? கொஞ்சம் கொஞ்சம் நடக்கத் தான் செய்யும், மேலும் நடக்கவும் வேண்டும். இல்லை என்றால் கடைசி பரீட்சைகள் எப்படி நடக்கும்? இதுவும் நடைமுறைப் பயிற்சி தான். இந்தப் பரீட்சைகள் தான் மதிப்பெண்களை சேமிப்பு செய்விக்கிறது. மதிப்பெண்கள் சேமிப்பு ஆகி ஆகி கௌரவமாகத் தேர்ச்சி பெற்றவரின் பட்டியலில் வந்து விடுவீர்கள். என்னென்ன நடக்கின்றனவோ அவை அனைத்தும் பரீட்சையில் மதிப்பெண்கள் சேமிப்பாவதற்காக நடக்கின்றன. அனைத்து விஷயங்களில் சேமிப்பாக வேண்டும், நினைவு யாத்திரையில் மட்டுமல்ல, நான்கு பாடங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும் அப்பொழுது தான் கௌரவத்துடன் தேர்ச்சி பெற்றவர் ஆவீர்கள்.

ஒவ்வொரு காரியத்தில் வெற்றியோ ஏற்கனவே அடங்கியிருக்கிறது. அது திரைச்சீலைக்கு உள்ளே இருந்தாலும் சரி அல்லது வெளியில் இருந்தாலும் சரி. சில சூழ்நிலைகளில் திரைச்சீலைக்கு உள்ளே வெற்றி இருக்கிறது மற்றும் வேறு சூழ்நிலைகளில் வெளிப்படையாக வெற்றி இருக்கிறது. இரண்டு சூழ்நிலைகளிலுமே வெற்றி மற்றும் பிரத்யக்ஷதா தான். கொஞ்ச காலம் வெளியில் தெரியாமல் இருப்பதையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. மறைந்து இருப்பது வெளிப்படுவதில் கொஞ்ச காலம் ஆகிறது. நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: பாபாவைப் பின்பற்றி (Follow Father) செய்து கொண்டே உண்மையானவராகி ஒவ்வொரு காரியத்திலும் பலனை நிரூபணமாக காண்பிக்கக்கூடிய வெற்றி சொரூபமானவர் ஆகுக!**

யார் பாபாவைப் பின்பற்றக்கூடிய குழந்தைகளாக இருக்கிறார்களோ அவர்கள் தான் சமமானவர்கள். ஏனென்றால் எது தந்தையின் அடியோ அது உங்களுடைய அடியாகும். யார் ஒவ்வொரு காரியத்தில் நிரூபணம் கொடுக்கிறாரோ அவரைத் தான் பாப்தாதா உண்மையானவர் என்று கூறுகிறார். உண்மையானவர் என்றால் எப்பொழுதும் தந்தையின் ஸ்ரீமத் என்ற கையையும் துணையையும் அனுபவம் செய்பவர். எங்கு தந்தையின் ஸ்ரீமத் மற்றும் வரதானத்தின் கை இருக்கிறதோ அங்கு வெற்றி இருக்கவே இருக்கிறது. எனவே எந்தக் காரியம் செய்து கொண்டிருக்கும் பொழுதும் தந்தையின் வரதான கை என் மேல் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு வாருங்கள்.

**சுலோகன்: வைரத்திற்குச் சமமான உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து செய்யும் காரியங்கள் தான் மதிப்பு நிறைந்த காரியங்கள் ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 29.08.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இப்பொழுது விதியின் நிலையைக் கடந்து சித்தி சொரூபம் ஆக வேண்டும் (ஜென்மாஷ்டமி -கிருஷ்ண ஜெயந்தி அன்று)!

இன்று எந்த சபை கூடியிருக்கிறது? இந்த நேரம் தன்னை எந்த சொரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஒருவகையில் எப்படி பாப்தாதா பஹுரூபியாக (பல்வேறு ரூபத்தில்) இருக்கிறார், அதே போல் நீங்கள் அனைவரும் பஹுரூபி ஆவீர்கள் ஆனால் இந்த நேரம் எந்த சொரூபத்தை தாரணை செய்து இந்த சபையில் அமர்ந்திருக்கிறீர்கள்? இன்றைய சபை யாருடையது என்று தெரிந்திருக்கிறீர்களா? தற்சமயம் உலகத்து மனிதர்கள் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களை எந்த சொரூபத்தில் ஆவாஹனம் செய்து (வரவழைத்துக்) கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுங்கள் பார்க்கலாம். அனைத்து உயர்ந்த ஆத்மாக்களும் உங்களை ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்களா அல்லது ஒரு ஆத்மாவையா? யாரை ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள்? தற்சமயம் உங்களுடைய எந்த சொரூபத்தை ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள்? இப்பொழுது உலகில் எந்த நேரம் நடந்து கொண்டிருக்கிறது? ஆவாஹனம் யாருடையது நடந்து கொண்டிருக்கிறது? தற்சமயம் இரண்டு ரூபங்களில் ஆவஹானம் செய்து கொண்டிருக்கிறார்கள். உங்களைத் தான் ஆவஹானம் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாருங்களேன், உங்களுக்கு தெரியவே இல்லை!

இந்த நேரம் மிக அதிகமாக வரதானி (வரமளிப்பவர்) மற்றும் விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்) வள்ளல் ரூபத்தில் உயர்ந்த ஆத்மாக்கள் உங்கள் அனைவரின் ஆவஹானம் நாலாபுறங்களிலும்

நடந்து கொண்டிருக்கிறது, ஏனென்றால் பக்தி மார்க்கம் மூலமாக மற்றும் பக்தியின் ஆதாரத்தினால் சக்திக்கேற்றபடி உயர்ந்த காரியங்கள் மூலமாக என்னென்ன அற்பகாலத்து சாதனம் மற்றும் பொருட்கள் இன்றைய உலகில் கிடைக்கிறதோ அந்த அனைத்து அற்பகாலத்து பிராப்தியின் சிம்மாசனம் ஆடத் தொடங்கி விட்டது. எப்பொழுது யாருடையவாவது ஆதார ரூப சிம்மாசனம் ஆடத் தொடங்குகிறது என்றால் அந்த நேரம் என்ன நினைவு வருகிறது? அந்த நேரம் நிரந்தரமாக பிராப்தி செய்விக்கக்கூடிய மற்றும் சுகம், நிம்மதி கொடுக்கக்கூடிய தந்தை மற்றும் கூடவே சிவசக்திகள் மேலும் மகாதானி, வரதானி, தேவிகள் தான் நினைவில் வருகிறார்கள், ஏனென்றால் தேவிகள் மற்றும் மாதர்களின் இதயம் அன்பானதாகவும், இரக்க மனமுடையதாக இருக்கும் காரணத்தினால் தற்சமயம் தாயின் ரூபத்தில் பூஜை மற்றும் ஆவாஹனம் அதிகமாக செய்கிறார்கள். சித்தி சொரூபம் (வெற்றி சொரூபம்) அதாவது அனைத்து காரியங்களைச் சித்தி அடையச் செய்ய கூடிய ஆத்மாக்களின் ஆவாஹனம் செய்வது தற்சமயம் அதிகமாக இருக்கிறது.

இன்றைய நாட்களில் அனைத்து பிரச்சனைகளினால் நொந்து போய் இருக்கும் பலமற்ற ஆத்மாக்கள், இலக்கை தேடக்கூடிய ஆத்மாக்கள் மற்றும் சுகம், சாந்தியின் பிராப்திக்காக துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் முயற்சி செய்வதின் விதியை விரும்புவதில்லை மாறாக விதிக்குப் பதிலாக சகஜ சித்தியை (நினைத்துக் காரியத்தில் வெற்றியை) விரும்புகிறார்கள். சித்திக்குப் பிறகு விதியின் மகத்துவத்தை தெரிந்து கொள்ள முடியும். அந்த மாதிரி ஆத்மாக்களுக்கு உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாக்கள் உங்களுடைய எந்த சொரூபம் தேவையாக இருக்கிறது? தற்சமயம் அன்பு சொரூபம் தேவையாக இருக்கிறது. விதி நிறைந்த நிலை அல்ல, ஆனால் அன்பு நிறைந்த நிலை. முதலில் அன்பைக் கொடுங்கள், பின்பு விதியைச் சொல்லுங்கள். அவர்கள் அன்பிற்குப் பிறகு விதியையும் அன்பின் சாதனமாக அனுபவம் செய்வார்கள். ஏனென்றால், வெளி ரூபத்தில் மின்னிக் கொண்டிருக்கும் உலகில் மற்றும் விஞ்ஞான யுகத்தில் விஞ்ஞானத்தின் சாதனம் அதிகமாக இருக்கவே இருக்கிறது ஆனால் எவ்வளவு விதவிதமான அற்ப காலத்தின் பிராப்தியின் சாதனங்கள் உருவாகின்றனவோ அந்த அளவே உண்மையான அன்பு, சுயநலம் இல்லாத அன்பு முடிவடைந்து

கொண்டே இருக்கிறது. ஆத்மாக்களின் மேல் உள்ள அன்பு முடிந்து சாதனங்கள் மேல் அன்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எனவே அனேக விதமான பிராப்தி இருந்தபோதிலும் அன்பின் பிராப்தியின்மையின் காரணமாக திருப்தியாக இல்லை. மேலும் ஒவ்வொரு நாளும் இந்த அதிருப்தி அதிகரிக்கும். இந்த சாதனம் நாம் அடையும் லட்சியத்திலிருந்து நம்மை தூரமாகக் கொண்டு செல்லக்கூடியது, அலைக்கழிக்கக்கூடியது என்று உணருவார்கள். இது ஆத்மாவை துடிக்க வைக்கக்கூடியது அதாவது எப்படி சென்ற கல்பத்தின் வர்ணனையாக குருடனின் குழந்தை குருடன் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கானல் நீருக்குச் சமமாக அனைத்து பிராப்திகளிலிருந்து வஞ்சிக்கப்பட்டே இருந்து விடுவார்கள். அந்த மாதிரி அனுபவத்தை நேரத்திற்கு ஏற்றபடி நாலாபுறங்களிலும் செய்வார்கள். அந்த மாதிரி நேரத்தில் அப்படிப்பட்ட ஆத்மாக்களின் அனைத்து மன விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய மற்றும் மனம் விரும்பிய உடனடி பலனை கொடுக்கக்கூடியதற்கு பொறுப்பாளராக யார் ஆவார்கள்? யார் அவரே சித்தி சொரூபமாக, மேலும் இரவு பகலாக தடைகளை அகற்றக்கூடிய விதியிலேயே இல்லாதவராக, சுயம் பாப்தாதா மூலமாக கிடைத்திருக்கும் பிரத்யக்ஷ பலனான அதீந்திரிய சுகம் மற்றும் அனைத்து சக்திகளின் வரதானம் பிராப்தி ஆகியிருக்கும் வரதானி மூர்த்தி ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்கள் தான். பாபா இதைச் செய்து விடுங்கள். இதைக் கொடுத்து விடுங்கள் என்று அவரே கூக்குரல் இடுபவராக இருக்க மாட்டார். இராயல் ரூபத்தில் கேட்பதின் அம்சமும் இருக்காது. பாபா இது உங்களுடையவைகள் நீங்களோ கண்டிப்பாகச் செய்வீர்கள் அப்படி அவராகவே செய்பவருக்கு நினைவூட்டி தனக்கு சமமான மனிதனாகவும் ஆக்க மாட்டார். ஏனென்றால் சொல்வதினால் செய்பவரை "மனிதன்" என்று எடுத்துக் கொள்ளப்படும். சொல்லாமலே செய்பவரை "தேவதை" என்று எடுத்துக் கொள்ளப்படும். தேவதைகளை படைப்பவராக இருப்பவரையும் என்னவாக்கி விடுகிறீர்கள்? அந்த மாதிரி மாஸ்டர் சர்வ சக்திவான் அனைத்து அதிகாரங்கள் நிரம்பிய ஆத்மாக்கள் மற்றவர்களுக்கும் சுலபமாக சித்தியை பிராப்தி செய்விக்க முடியும்.

தன்னை சோதனை செய்யுங்கள் அதுவும் சாதாரண சோதனை இல்லை. சோதனை கூட நேரத்திற்குத் தகுந்தாற்போல் சூட்சும ரூபத்தில் இருக்க

வேண்டும். தற்சமயத்திற்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு பாடத்தில் விதி சொரூபம் எவ்வளவு இருக்கிறது மற்றும் சித்தி சொரூபம் எவ்வளவு இருக்கிறது என்று இதைச் சோதனை செய்யுங்கள். அதாவது ஒவ்வொரு பாடத்தில் (விஷயத்தில்) விதியில் எவ்வளவு நேரம் செல்கிறது மற்றும் சித்தி எவ்வளவு நேரம் அனுபவம் ஆகிறது? நான்கு பாடங்களிலும் எண்ணம், சொல், செயல் மூன்று ரூபத்தில் எந்த நிலை வரை வந்தடைந்திருக்கிறேன்? இந்த சோதனை செய்ய வேண்டும். இப்பொழுது மகாரதிகளுக்கு விதிக்கான நேரம் இல்லை மாறாக சித்தி சொரூபத்தின் அனுபவம் செய்வதற்கான நேரமாகும். இல்லையென்றால் தற்சமயத்து அனேக் பிரச்சனைகள் இதுவரை விதியில் மூழ்கியிருக்கக்கூடிய ஆத்மாக்களை அவர்களுடைய நிலையிலிருந்து பிரச்சனைகளின் பாதிப்பில் சுலபமாகக் கொண்டு வரும். எனவே பாண்டவர்கள் கடைசி நேரத்தில் உயர்ந்த மலையில் உருகி மறைந்து விட்டார்கள் என்ற வர்ணனை இருக்கிறது அதாவது சுயம் தேக அபிமானம் மற்றும்துக்கமான உலகத்தின் பிரபாவத்திலிருந்து விலகிய உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கிறார்கள். உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து கீழே இருப்பவர்களைப் பார்வையாளராகி காட்சியாகப் பாருங்கள். அந்த மாதிரி நிலையில் இருப்பவர் தான் பிரச்சனை சொரூபமாக இல்லாமல் சமாதான சொரூபம் ஆகி விடுவார். எனவே தற்சமயம் அந்த மாதிரியான நிலை தேவையாக இருக்கிறது. அந்த மாதிரி இருக்கிறதா? என்னவாகும், எப்படி ஆகும், எனக்கு என்ன ஆகும்? என்று கொஞ்சம் கூட குழப்பத்தில் வரவில்லையே? ஆடாத சொரூபமுடையவராக இருக்கிறீர்கள் இல்லையா? ஆடாத நிலையில் கொஞ்சம் கூட ஆட்டம் வேண்டாம். அந்த மாதிரி நிலை உள்ளவர்கள் தான் வெற்றி ரத்தினம் ஆவார்கள்.

பாப்தாதா இன்று குழந்தைகளின் கட்டளைப்படி, கட்டளைப்படி நடப்பவரின் பங்கை செய்து கொண்டிருக்கிறார். நிகழ்ச்சிப்படி வரவில்லை, அப்படி நீங்களும் தந்தையைப் பின்பற்றி நடப்பவர் ஆகுங்கள். நாளை ஆத்மாக்களின் ஆவாஹனம் இருக்கிறது, தந்தையினுடையது அல்ல. நீங்கள் அனைவரும் கூட தன்னுடைய உலக மகாராஜன் சொரூபத்தை மற்றும் உலக எஜமான நிலையின் குழந்தை சொரூபத்தில் மிக நன்றாக நிலைத்திருங்கள். அதன் மூலம்

உங்களுடைய அவரவர்களின் பக்தர்கள் அற்ப காலத்தின் தரிசனத்தைக் கண்டு கூட மகிழ்ச்சி அடைந்து விடுவார்கள். மேலும் அனைவரும் முழு நாளில் எத்தனை பக்தர்களுக்கு தந்தை மூலமாக பக்தியின் பலனைக் கொடுத்தீர்கள் என்று பின்பு அனுபவம் கூறுங்கள். தன்னுடைய பக்தர்களை திருப்தியோ படுத்துவீர்கள் இல்லையா? ஒருவரின் நினைவுச்சின்னம் மட்டுமல்ல, ஒருவரின் கூடவோ நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள். அப்படி நாளை உங்கள் அனைவரின் ஜென்மாஷ்டமியை கொண்டாடுவோம். அனைவரும் கிருஷ்ணனுக்குச் சமமாக தேவதை சொரூபத்திலோ இருப்பீர்கள் இல்லையா? உங்கள் அனைவரின் தேவதை சொரூபத்தின் நினைவு நாளாகும். உலகத்தினர் கொண்டாடுவார்கள், மேலும் நீங்கள் என்ன செய்வீர்கள்? அவர்கள் கொண்டாடுவார்கள். நீங்கள் கொண்டாடுபவர்களுக்காக மகாதானி மற்றும் வரதானி ஆவீர்கள். நல்லது.

அப்படி கடலையும் கூட அன்புக் கடலில் மூழ்கச் செய்யக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக அனைத்து சித்தி சொரூபமானவர்களுக்கு, ஒவ்வொரு விநாடி அனைவருக்காகவும் விஷ்வ கல்யாணகாரி, வரதானியாக இருக்கக்கூடியவர்களுக்கு, சுயம் தன் மூலமாக தந்தையின் சாட்சாத்காரம் செய்விக்கக்கூடிய சாட்சாத் தந்தை சொரூபமான சாட்சாத்காரம் செய்விப்பவர்களுக்கு, எப்பொழுதும் நிராகாரி, மற்றும் எப்பொழுதும் நல்லொழுக்கமுள்ள உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

எப்படி வெளிநாட்டில் லௌகீக வாழ்க்கை மிக வேகமானதாக இருக்கிறதோ அதே போல் ஆத்மாவின் முயற்சி செய்வதின் வேகமும் அதிகமாக இருக்கிறதா? நீங்கள் சேவாதாரி தான் இல்லையா? சேவையைத் தவிர வேறொன்றும் இல்லை. எழுந்தாலும் சேவை, தூங்கினாலும் சேவை, கனவு கண்டாலும் சேவாதாரியின் ரூபத்தில் காண்கிறீர்கள் அந்த மாதிரி சேவாதாரி தானே? ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு மூச்சும் தனக்காக இல்லை, சேவைக்காக இருக்கிறது. தன்னுடைய ஓய்வுக்காக இன்றி, தன்னுடைய முயற்சி வரை இன்றி, தன்னுடையதனுடன் மற்றவர்களின் முயற்சி இந்த மாதிரியானவரைத் தான் சேவாதாரி என்று கூறுவது, அந்த மாதிரி சேவைக்குத் தகுதியானவர் என்ற லேபிள் (சீட்டு) நெற்றியில் ஒட்டப்பட்டு

இருக்கிறதா? சேவைக்குத் தகுதியானவரின் நெற்றியில் என்ன அடையாளம் இருக்கும்? ஆத்மா என்ற மணி. நெற்றியின் மணி அது பிரகாசமாக இருப்பதாகத் தென்பட வேண்டும். இது தான் சேவைக்குத் தகுதியானவரின் லேபிள் ஆகும். நல்லது.

**வரதானம்: எல்லைக்கப்பாற்பட்ட சம்பூர்ண அதிகாரத்தின் நிச்சயம் மற்றும் ஆன்மீக போதையில் இருக்கக்கூடிய மிக உயர்ந்த, செல்வந்தர் ஆகுக!**

தற்சமயம் குழந்தைகள் நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த சம்பூர்ண அதிகாரி ஆகிறீர்கள். அதன் மூலம் சர்வ சக்திகள் நிறைந்தவரின் மேல் உங்களின் அதிகாரம் இருக்கிறது. பரமாத்மா அதிகாரி குழந்தைகள் அனைத்து உறவுகளின் மற்றும் அனைத்து செல்வத்தின் அதிகாரத்தை பிராப்தி செய்து விடுகிறார்கள். இந்த நேரம் தான் தந்தை மூலமாக அனைத்து உயர்ந்த செல்வங்கள் நிறைந்தவர் ஆகுக என்ற வரதானம் கிடைக்கிறது. உங்களிடம் அனைத்து குணங்களின், அனைத்து சக்திகளின் மற்றும் உயர்ந்த ஞானத்தின் அழியாத செல்வம் இருக்கிறது, எனவே உங்களைப் போன்ற செல்வந்தர் வேறு யாரும் இல்லை.

**சுலோகன்: எப்பொழுதும் விழிப்போடு இருந்தீர்கள் என்றால், கவனக்குறைவு முடிவடைந்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமீபம் மற்றும் சமமான நிலையின் நுண்ணியம் மற்றும் மகான்தன்மை!

அனைவரும் தன்னை கர்மாதீத் நிலையின் அருகாமையை அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்களா? கர்மாதீத் நிலையின் அருகில் சென்றடைவதின் அடையாளம் என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா?

# 1975 அவ்யக்த முரளி

அருகாமையின் அடையாளம் சமநிலை ஆகும். எந்த விஷயத்தில்? சப்தத்தில் வருவது மற்றும் சப்தத்திலிருந்து விலகிச் செல்வது, சாகார சொரூபத்தில் கர்மயோகி ஆவது மற்றும் சாகார நினைவிலிருந்து விலகி நிராகார நிலையில் நிலைத்திருப்பது, கேட்பது மற்றும் சொரூபம் ஆவது, சிந்தனை செய்வது மற்றும் மூழ்கியிருப்பது, ஆன்மீக உரையாடலில் வருவது மற்றும் ஆன்மீக நிலையில் நிலைத்து விடுவது, யோசிப்பது மற்றும் செய்வது, கர்மேந்திரியங்களில் வருவது என்றால் கர்மேந்திரியங்களின் ஆதாரத்தை எடுப்பது மற்றும் கர்மேந்திரியங்களிலிருந்து விலகி இருப்பது, இயற்கை மூலமாக பிராப்தியாகியிருக்கும் சாதனங்களை தனக்காக காரியங்களில் ஈடுபடுத்துவது மற்றும் இயற்கையின் சாதனங்களிலிருந்து நேரத்திற்குத் தகுந்தாற்போல் அதன் ஆதாரமற்றவராக ஆவது, பார்ப்பது, நெருக்கத்தில் வருவது மற்றும் பார்த்தும் பார்க்காமல் இருப்பது, நெருக்கத்தில் வந்தும் தாமரை மலருக்குச் சமமாக இருப்பது, இந்த அனைத்து விஷயங்களிலும் சமநிலை வேண்டும். இதைத் தான் கர்மாதீத் நிலையின் அருகாமை என்று கூறுவது.

அந்த மாதிரி நுண்ணிய (மஹீன்) மற்றும் மகான் நிலையைக் கொண்டு வந்திருக்கிறீர்களா? கடைசி பரீட்சையில் நாலாபுறங்களிலும் குழப்பம் இருக்கும். ஒருபக்கம் சுற்றுப்புறச் சூழ்நிலையின் குழப்பம். இன்னொரு பக்கம் மனிதர்களின் குழப்பம், மூன்றாவது பக்கம் அனைத்து உறவுகளின் குழப்பம் மற்றும் நான்காவது பக்கம் தேவையான சாதனங்கள் இல்லாமையின் குழப்பம். அந்த மாதிரி நான்கு புறங்களின் குழப்பத்தின் இடையே ஆடாமல் இருப்பதற்கான கடைசி பரீட்சை இருக்கிறது. எந்தவொரு ஆதாரம் மூலமாக அதிகாரம் நிறைந்த நிலையில் நிலைத்திருப்பது, அந்த மாதிரி முயற்சி கடைசி பரீட்சையின் நேரத்தில் வெற்றி அடைபவராக ஆக விடாது. சூழ்நிலை சாதகமாக இருந்தால் நினைவு யாத்திரை இருக்கும், பிரச்சனைகள் இல்லாமல் இருந்தால் தான் மனநிலை நன்றாக இருக்கும் அதாவது பிரச்சனைகளின் ஆதாரத்தில் நிலை மற்றும் எந்தவிதமான சாதனம் இருந்தால் வெற்றி இருக்கும் என்ற மாதிரியான முயற்சி கடைசி பரீட்சையில் தோல்வி அடையச் செய்து விடும். எனவே தன்னை தந்தைக்குச் சமமாக ஆக்குவதின் அதிவேகத்தைக் கொண்டு வாருங்கள்.

கடைசி பரீட்சை விரைவாக நடந்து விட்டால் சூர்ய வம்சத்து பிராப்தியை அடைந்து விடலாம் என்று உங்களை நீங்களே நினைக்கிறீர்களா? பரீட்சைக்காக தயாராக இருக்கிறீர்களா? அல்லது தயாராகத் தான் வேண்டும் மற்றும் ஆகியே விடுவோம் என்று அப்படி இருக்கிறதா? மேலும் நேரம் செய்வித்து விடும் என்ற அந்த மாதிரி அலட்சியத்தின் எண்ணம், உங்களை சக்தி நிறைந்தவராக ஆக விடாது. சக்தி நிறைந்த எண்ணத்தின் எதிரில் இந்த பலவிதமான வீணான மற்றும் அலட்சியத்தின் எண்ணம் அழிந்து விடும். அலட்சியமோ இல்லை தானே ! எச்சரிக்கையானவர்கள் மற்றும் புத்திசாலிகள் தான் நீங்கள். எவரெடி என்றால் இப்பொழுது எந்தவிதமான சூழ்நிலையிலும் ஒரு நொடியில் அனைத்து கர்மேந்திரியங்களின் அடிமைத்தனத்திலிருந்து விலகி கர்மேந்திரியங்களை வென்றவராக ஆகி ஒரு சக்திசாலியான எண்ணத்தில் நிலைத்து விடுங்கள் என்றால் ஸ்ரீமத் கிடைத்தவுடனேயே, கிடைத்தது மற்றும் நிலைத்து விடுவது என்பது சேர்ந்தே ஆகி விட வேண்டும், இது தான் எவரெடி நிலையாகும். சமநிலைக்கான எந்த விஷயத்தை முன்பு கூறினோமோ அதன் மூலம் அருகாமையின் நிலை உருவாகிறது. அந்த மாதிரி அனைத்து விஷயங்களில் எதுவரை சமமானவராக ஆகியிருக்கிறோம்? என்ற இந்த சோதனையை செய்யுங்கள். வழிகாட்டுதலை நடைமுறையில் கொண்டு வருவதில் ஒரு நொடிக்குப் பதிலாக ஒரு விநாடி ஆகி விடுகிறது என்று அந்த மாதிரி இருக்க வேண்டாம். ஒரு விநாடிக்குப் பதிலாக ஒரு நிமிடமும் ஆனது என்றால் ஃபர்ஸ்ட் டிவிசனில் தேர்ச்சி பெற மாட்டார், ஏறி, இறங்குவதில் மற்றும் தன்னை ஒரு நிலைப் படுத்துவதிலேயே ஃபர்ஸ்ட் டிவிசனின் சீட்டை இழந்து விடுவார். எனவே எப்பொழுதும் எவரெடி. எவரெடி மட்டும் இல்லை எப்பொழுதும் எவரெடியாக இருக்க வேண்டும். இதுவரை ரிசல்ட்டாக என்ன தென்படுகிறது என்பதைத் தெரிந்திருக்கிறீர்களா? தீவிர முயற்சி செய்பவர்களின் வரிசையில் பாண்டவர்கள் இருக்கிறார்களா அல்லது சக்திகளா? தீவிர முயற்சி செய்பவர்களின் வரிசையில் பெரும்பான்மையாக யார் இருக்கிறார்கள்? அனைத்து பாண்டவர்களும் சக்திகளுக்கு ஒட்டு கொடுக்கிறார்கள் ஆனால் முயற்சியின் கணக்குப்படி பாண்டவர்களும் சக்தி ரூபத்தில் இருக்கிறார்கள். சர்வ சக்திவானின் அனைத்து சக்திகளும் இருக்கின்றன. பாப்தாதாவோ பாண்டவர்களின் பக்கம்

சார்ந்திருக்கிறார். ஒருவேளை பாண்டவர்களை முன்னுக்கு வைக்கவில்லை என்றால் சக்திகளின் எதிரில் வேட்டைப்பொருளை எப்படிக் கொண்டு வருவார்கள்? எனவே பாண்டவர்களுக்கு விசேஷமாக பிரம்மாபாபாவின் இனத்தைச் சேர்ந்தவர்களின் காரணத்தினால் முயற்சி செய்வதில் தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். பாண்டவர்கள் லௌகீக பொறுப்பை எடுத்துக் கொள்வதிலும் முன்னுக்கு இருக்கிறார்கள். லௌகீக பொறுப்பை மட்டும் எடுப்பதற்குப் பதிலாக உலக நன்மை செய்வதற்கான பொறுப்பையும் எடுக்க வேண்டும். எப்படி எல்லைக்குட்பட்ட வருமானம் செய்வதின் ஆர்வத்தைத் தெரிந்திருக்கிறீர்கள். அதே போல் எல்லைக்கப்பாற்பட்ட வருமானத்தின் ஆர்வத்தில் மூழ்கி விடுங்கள். சம்பாத்தியத்திற்கு பின்னால் தன்னுடைய சுகத்தின் சாதனங்களை தியாகம் செய்வதிலும் அனுபவிகளாக இருக்கிறீர்கள் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட வருமானத்திற்காக தேகத்தின் சுகங்களையும் தியாகம் செய்வது மற்றும் தேகத்தின் நினைவை தியாகம் செய்வது என்ன பெரிய விஷயம். எனவே பாண்டவர்கள் தீவிர முயற்சி செய்பவர்களின் வரிசையில் நம்பர் ஒன் பெற வேண்டும். புரிந்ததா? பின்னால் இருக்காதீர்கள். ஒருவேளை சக்திகளின் பின்னால் இருந்து விட்டீர்கள் என்றால், பிரம்மாபாபாவின் இனத்தைச் சேர்ந்தவர்கள் தந்தையின் மரியாதையைக் காப்பாற்றவில்லை என்றால், இது நன்றாக இருக்கிறதா? எனவே இந்த வருடத்திலேயே, அடுத்த வருடத்திற்காக காத்துக் கொண்டிருக்காமல், இந்த வருடத்திலேயே நம்பர் ஒன் பெற வேண்டும்.

சக்திகள் நாங்கள் இரண்டாம் நம்பரில் ஆகி விடுவோமா என்று யோசிக்கலாம். சக்திகள் இல்லாமலோ சிவபாபாவின் ஒரு காரியமும் நடக்க முடியாது. நடக்க முடியுமா? சக்திகளுக்கு இதில் தியாகம் செய்ய வேண்டும், சக்திகளின் தியாகம் பூஜை செய்யப்படுகிறது. யார் தியாகம் செய்கிறாரோ அதன் பாக்கியம் இயற்கையாகவே உருவாகிறது. எனவே இருவருமே சகோதரன் சகோதரனின் ரூபத்தில் தீவிர முயற்சி செய்யுங்கள். செய்தியின் ஆதாரத்தில் முயற்சி செய்யாதீர்கள். உங்களுடைய முயற்சியின் மூலமாகத் தான் விநாஷத்தின் செய்தி நாலாபுறங்களிலும் பரவும். முதலில் முயற்சி பின்னால் செய்தி என்பதன்றி, முதலில் செய்தி மற்றும் பின்னால் (புருஷார்த்தம்) முயற்சி என்பதல்ல. நல்லது.

## 02.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இதயம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் தான் சத்யுக உலக இராஜ்ய அதிகாரி ஆவார்!

குழந்தைகள் நீங்கள் உங்களை திரிமூர்த்தி (மூன்று) ஆசனதாரிகள் என்று நினைக்கிறீர்களா? இன்றைய இந்த சபை திரிமூர்த்தி ஆசனதாரிகளினுடையது. தன்னுடைய திரிமூர்த்தி ஆசனத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? ஒன்று அழியாத ஆத்மாவின் இந்த இரு புருவ மத்தி என்ற ஆசனம். இரண்டாவது உலக இராஜ்யத்தின் ஆசனம். மூன்றாவது அனைத்தையும் விட உயர்ந்த பாப்தாதாவின் இதயம் என்ற ஆசனம். அந்த மாதிரி ஒவ்வொருவரும் தன்னை மூன்று ஆசனங்களிலும் அமர்ந்திருப்பவராக அனுபவம் செய்கிறீர்களா? அல்லது தெரிந்து மட்டும் இருக்கிறீர்களா? நீங்கள் ஞான சொரூபமானவர்களா அல்லது அனுபவ சொரூபமாகவும் இருக்கிறீர்களா? நான் உயர்ந்த ஆத்மா அனேக தடவை இந்த ஆசனதாரியாக ஆகியிருக்கிறேன் என்று அந்த மாதிரி அனேக தடவையின் நினைவு தெளிவான ரூபத்தில் மற்றும் சகஜ ரூபத்தில் இப்பொழுது நடந்த விஷயம் மாதிரி உணர்வு ஏற்படுகிறதா? எப்பொழுதோ நடந்த விஷயமல்ல ஆனால் இப்பொழுதைய விஷயம். அந்த மாதிரி அனுபவம் செய்யக்கூடியவர்கள் பாப்தாதாவின் மிக அன்பிற்குரிய மற்றும் மிக நெருக்கமாக இருப்பவர்கள்.

இந்த அனைத்து ஆசனங்களின் ஆதாரம் பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி ஆவதாகும். அதற்காக முக்கியமான சாதனம் எது என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா?. சுலபமான சாதனம் தான் இல்லையா? எந்த சாதனம் அது? இதய சிம்மாசனம், யார் அவரே ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருக்கிறாரோ அவர் பாப்தாதாவிற்கு அனைவரையும் விட பிரியமானவராக எந்தக் குழந்தையால் இருக்க

முடியும் என்று நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். உலகத்தினர் பகவானை என்னவென்று நினைக்கிறார்கள்? காட் இஸ் ட்ரூத், சத்தியத்தை தான் பகவான் என்று கூறுகிறார்கள். பாப்தாதாவும் சத்திய நாராயணனின் கதையைத் தான் கூறுகிறார். மேலும் சத்யுகத்தைத் தான் ஸ்தாபனை செய்கிறார். அப்படி தந்தையை யார் சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்குருவின் நடைமுறை (நடிப்பின்) பங்கை செய்கிறார் என்றால் அந்த சத்தியமான தந்தைக்கு எது பிரியமானதாக இருக்கிறது? உண்மை. எங்கு உண்மை இருக்கிறது அதாவது சத்தியம் எங்கு இருக்கிறதோ அங்கு தூய்மை மற்றும் சுத்தம் அவசியம் இருக்கும். உண்மையான உள்ளத்தில் தந்தை திருப்தியாக இருக்கிறார் என்று மகிமையும் இருக்கிறது. இதய சிம்மாசனதாரிகள் அவசியம் சேவைக்குத் தகுதியானவர்களாக இருக்கிறார்கள் ஆனால் சேவைக்குத் தகுதியானவர்களின் அடையாளம் உறவு நெருக்கத்தில் உண்மை மற்றும் சுத்தமாக இருப்பது, அவர்களுடைய ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு வார்த்தையில் தென்படும். அது போன்ற இதய சிம்மாசனத்திற்குரிய மேன்மையான ஆத்மாவின் ஒவ்வொரு எண்ணமும் சத்தியமானதாக இருக்கும், ஒவ்வொரு சொல்லும் சத்யமானதாகவே இருக்கும். சத்யம் என்றால் சத்யமும் மற்றும் பயனளிப்பதாகவும் இருக்கும் அதாவது எந்தவொரு எண்ணமோ, வார்த்தையோ வீணானதாகவோ சாதாரணமானதாகவோ இருக்காது. அப்படிப்பட்ட சேவாதாரிகளுடைய ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு சமயத்தின் பார்வையில் அதாவது திருஷ்டியில் அனைத்து ஆத்மாக்களுக்காக தன்னலமற்ற சேவையே சேவைதான் காணப்படும். தூங்கினாலும் சேவை, விழித்திருந்தாலும் சேவை மேலும் நடந்து கொண்டிருக்கும் போதும் சேவை. கனவில் கூட சேவையைத் தவிர வேறு எந்த விஷயமும் இருக்காது. அந்த மாதிரி சேவாதாரி யார் அசையாதவராக மற்றும் களைப்பற்றவராக இருப்பாரோ அதே போலவே பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரிகளாக இருப்பார்கள். அடையாளம் என்னவாக இருக்கும் என்று புரிந்து கொண்டீர்களா? அந்த மாதிரி இதயசிம்மாசனதாரிகளுக்கு உலக இராஜ்யத்தின் ஆசனத்தை பிராப்தி செய்வது நிச்சயிக்கப்பட்டது. எப்படி இருக்கை முன்பதிவு செய்யப்படுகிறது அதே போல் ஒவ்வொரு கல்பத்திற்கும் ராஜசிம்மாசனம் நிச்சயிக்கப்பட்டு விடுகிறது.

## 1975 அவ்யக்த முரளி

இயற்கையை அடிமையாக்கி வெற்றி அடையக்கூடிய குழந்தைகள் உலக இராஜ்யத்தின் அதிகாரியாக ஆவார்களா அல்லது மாட்டார்களா? என்ற இது எண்ணத்தில் கூட எழ முடியாது. இயற்கை அந்த மாதிரி தன்னுடைய வெற்றி அடைந்த எஜமானனின் எதிரில் முன்பாகவும் பின் தொடர்ந்தும் தாசிக்கு சமமாக அடிபணிந்து நடந்து கொண்டிருக்கும் அல்லது நமஸ்காரம் செய்து கொண்டிருக்கும். அனைத்து நேரமும் சேவாதாரியாக இருக்கும் உயர்ந்த ஆத்மாக்களின் எதிரில் சேவாதாரியாகி இருப்பார்கள். அந்த மாதிரி தன்னுடைய உயர்ந்த சொரூபம் தென்பட்டுக் கொண்டிருக்கிறதுதானே? இப்பொழுதோ இயற்கை சேவைக்காக தன்னுடைய அந்த மாதிரியான எஜமானன் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. கடலும், பூமியும் அந்த மாதிரி உலகின் எஜமானனின் சேவைக்காக தன்னை இப்பொழுது சம்பண்ணம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். கடலும், பூமியும் கூட அம்மாதிரியான உலகத்தின் எஜமானருக்கு சேவை செய்வதற்காக இப்பொழுது சுயம் சம்பண்ணம் ஆகிக் கொண்டிருக் கின்றன. அவர்களுடைய ஏற்பாடுகளை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? எப்படி பக்தர்கள் மிகவும் தனக்கு பிடித்தமான தூக்கத்தையும் தியாகம் செய்து தேவிகளின், தேவதைகளின், சக்திகளின், சாலிகிராம ரூபத்தில் பூஜை செய்து கொண்டே மிக பலத்த ஒலியோடு ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள் எப்பொழுதாவது தன்னுடைய வரதானி மகாதானி ஆத்மாக்கள் மற்றும் தன்னுடைய இஷ்ட தேவதை, தன்னுடையதையும் கேட்கட்டுமே, பிராப்தியின்மையிலிருந்து பிராப்தி செய்து விடட்டுமே என்று கதறி கதறி உங்கள் அனைவரையும் ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போலவே இப்பொழுது நேரம் அருகில் இருக்கும் காரணத்தினால் பக்தர்களையும் சேர்த்து இயற்கையும் எப்பொழுது தன்னுடைய சதோபிரதான எஜமானன் என் மேல் திருப்தி ஆவார் என்று உங்களை வரவேற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் இராஜ்யம் செய்வீர்கள் மற்றும் இயற்கையும் சதோபிரதான உடலை தாரணை செய்யும், இயற்கையின் ஆவாஹனம், பக்தர்களின் ஆவாஹனம் தென்படுகிறதா, உங்கள் காதுகளில் கேட்கின்றதா? இவர்களுடைய ஆவாஹனத்தின் கூடவே இன்னொரு பக்கம் பாப்தாதாவும் நீங்கள் சமமானவராக மற்றும் சம்பூர்ணமானவராக ஆகி சூட்சும வதன நிவாசி ஃபரிஷ்தாவாக ஆகி தந்தையுடன் வீடு செல்லுங்கள் என்று ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார். செல்ல

வேண்டுமா அல்லது சங்கமயுகம் அதிகமாக இருக்க வேண்டும் என்ற விருப்பமா? எவரெடியாக ஆகி விட்டீர்களா? எங்கு அமர வைக்கப்படுகிறோமோ, எந்த ரூபத்தில் அமர வைக்கப்படுகிறோமோ மேலும் எவ்வளவு நேரம் அமர வைத்தாலும் தயார் என்ற அந்த உறுதிமொழியில் எப்பொழுதும் ஸ்திரமாக இருக்கிறீர்களா? கடைசி கட்டளை ஆன்மீக இராணுவத்திற்கு எப்பொழுது கிடைக்கும்? ஒரு நொடிக்கான கட்டளையாக இருக்கும். ஒரு மணி நேரத்திற்கு முன்பு அறிவிப்பு இருக்காது, அப்பொழுது தான் எட்டு இரத்தினங்கள் உருவாகுவார்கள். தேதியை நிச்சயம் செய்து அறிவித்து பரீட்சை இருக்காது அதாவது டிராமாவில் நிச்சயிக்கப்பட்ட கடைசி தேதி மற்றும் நேரம் அறிவிக்கப்படாது. இதுவோ உத்தேசமாக கூறப்படுகிறது ஆனால் கடைசி பரீட்சை ஒரே ஒரு கேள்விக்கானதாக மற்றும் ஒரு நொடிக்கானதாக இருக்கும் எனவே குழந்தைகள் எவரெடி ஆக வேண்டும்.

உள்ளடக்கும் சக்தி மற்றும் எதிர்நோக்கும் சக்தி இந்த இரண்டு சக்திகளில் சம்பண்ணம் ஆகி விட்டோமா என்று ஒவ்வொரு நேரமும் தன்னை சோதனை செய்யுங்கள். உள்ளடக்கத்தில் கொண்டு வரும் சக்தியை வெகுகாலமாக காரியத்தில் கொண்டு வருவதற்கான பயிற்சி தேவையாக இருக்கிறது. கடைசி நேரத்தில் உள்ளடக்கத்தில் கொண்டு வருவதைத் தொடங்காதீர்கள், அதிலேயே நேரம் சென்று விடும். உள்ளடக்கத்தில் கொண்டு வரும் காரியமோ இப்பொழுது சம்பண்ணம் ஆகியிருக்க வேண்டும். அப்பொழுது தான் ஒரு பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை மற்றும் நிரந்தரமாக உன்னோடு தான் சாப்பிடுவேன், உன்னோடு தான் அமருவேன், உன்னோடு தான் பேசுவேன் மற்றும் உன்னிடமிருந்து தான் கேட்பேன் என்று செய்யப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்ற முடியும். எட்டு மணி நேரம் உன்னோடு பேசுவேன், உன்னிடமிருந்து கேட்பேன், மற்ற நேரங்களில் ஆத்மாக்களுடன் பேசுவேன் மற்றும் கேட்பேன் என்று அந்த மாதிரி இருக்க வேண்டாம். இது நிரந்தரமான உறுதிமொழி ஆகும். இதில் சாதுர்யமானவராக ஆகாதீர்கள். தந்தையால் கொடுக்கப்பட்ட ஞான பாய்ன்டுகளை (துளிகளை) தந்தையின் எதிரில் வக்கீல் ரூபத்தில் வைக்காதீர்கள். சிலர் அமிர்தவேளையில் வக்கீலாகி விடுகிறார்கள். சத்யுகத்தில் வழக்குகள் என்பது இருக்காது. எனவே, பாப்தாதாவிற்கு முன்பாக இது போன்ற

குறும்புத் தனங்களை செய்யாதீர்கள். வக்கீலுக்குப் பதிலாக நீதிபதி ஆகுங்கள் ஆனால் யாருக்கு? நீதிபதி ஆகுங்கள், மற்றவர்களுக்கு அல்ல. பாப்தாதாவிற்கு முழு நாளில் அமிர்தவேளையின் நேரத்தில் தனக்கே குழந்தைகளின் விசித்திரமான காட்சிகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. அந்த நேரம் ஒவ்வொருவரின் புகைப்படம் எடுப்பதற்கு தகுதியான போஸ் மற்றும் பொசிஷன் இருக்கிறது. சாட்சியாகி நீங்கள் ஒரு நாள் பார்த்தாலும் அதிகமாக சிரிப்பீர்கள். சிலர் போர்வீரனாகியும் வருகிறார்கள். தந்தையால் கொடுக்கப்பட்ட ஆயுதங்களை, "நீங்கள் அப்படிக் கூறினீர்கள். ஞானம் அந்த மாதிரி கூறுகிறது" என்று தந்தைக்கு எதிராக உபயோகிக்கிறார்கள். தந்தை புன்முறுவலிட்டுக் கொண்டு காட்சி களைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். போர்வீரனுக்கு பதிலாக வெற்றி அடைபவர் ஆகுங்கள். அப்பொழுது தான் திரிமூர்த்தி ஆசனதாரியாக ஆக முடியும். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி அடையும், அனைத்து உறுதிமொழிகளையும் நிறைவேற்றக் கூடிய, பாப்தாதாவின் மிக அன்பிற்குரிய மற்றும் நெருக்கமான, இயற்கையை தாசியாக்கக்கூடிய மற்றும் அனைத்து ஆத்மாக்களின் அனைத்து மனவிருப்பங்களை நிறைவேற்றக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 05.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஃபரிஷ்தா சொரூபத்தின் நிலை!

ஃபரிஷ்தா சொரூபத்தின் நிலையில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறீர்களா? ஃபரிஷ்தா சொரூபத்தின் ஒளியில் மற்ற ஆத்மாக்களுக்கு ஒளி தான் தென்படும். எல்லைக்குட்பட்ட நடிகர்கள் எப்பொழுது எல்லைக்குள் தன்னுடைய நடிப்பை செய்து கொண்டிருப்பதாகத் தென்படுகிறார்களோ (செயற்கை) ஒளியின் காரணமாக மிக அழகான சொரூபமாகத் தென்படுவார்கள். அதே நடிகர், சாதாரண வாழ்க்கையில் சாதாரண வெளிச்சத்தில் தன்னுடைய பங்கைச் செய்து கொண்டு இருக்கும்பொழுது எப்படி தென்படுகிறார்கள்? இரவு பகலுக்கான வித்தியாசம் தென்படுகிறது அல்லவா? லைட்டின் ஃபோகஸ் (மின் ஒளியின் குவிப்பு) அவருடைய முகத்தோற்றத்தையே மாற்றம் செய்து விடுகிறது. அதே போலவே எல்லைக்கப்பாற்பட்டநாடகத்தின் கதாநாயக, கதாநாயகி நடிகர்கள் நீங்கள் அவ்யக்த நிலையின் ஒளியின் உள்ளேஒவ்வொரு நடிப்பையும் செய்வதினால் என்னவாகத் தென்படுவீர்கள்? ஆன்மீக ஃபரிஷ்தாக்களாகத் தென்படுவீர்கள். ஸ்தூலமான உடலுக்குப் பதிலாக சூட்சும வதனவாசியாகத் தென்படுவீர்கள். உடலில் இருப்பவராக இருந்தபோதிலும் ஒளி வடிவமான உடலின் அனுபவம் ஆகும். ஒவ்வொரு நடிப்பும் ஒவ்வொருவரையும் இயல்பாகவே கவர்ந்திழுக்கக்கூடியதாக இருக்கும்.

எப்படி இன்றைய எல்லைக்குட்பட்ட சினிமா அல்லது நாடகம் கலியுக மனிதர்களை கவரும் முக்கிய கேந்திரமாக இருக்கிறது. தவிர்த்து விட விரும்பினாலும் மற்றும் பார்க்க விரும்பாவிட்டாலும் கூட எல்லைக்குட்பட்ட நடிகர்களின் நடிப்பு தன் பக்கம் இழுத்து விடுகிறது ஆனால் அதற்கான ஆதாரம் ஒளி ஆகும். அதே போலவே இந்தக் கடைசி நேரத்தில் மாயாவின் கவர்ச்சி மிக அதிக அளவு ஆன பிறகு முடிவு ஏற்படும் பொழுது, எல்லைக்கப்பாற்பட்ட கதாநாயக நடிகர்கள், யார்

# 1975 அவ்யக்த முரளி

எப்பொழுதும் புள்ளி சொரூபத்தில் நிலைத்திருந்து புள்ளி வடிவமான தந்தையுடன் ஒவ்வொரு பங்கையும் நடிப்பவர்கள் மற்றும் தெய்வீக ஜோதி சொரூபமானவர்கள், அவர்களுடைய மனநிலையும் லேசானது மேலும் மேடையில் ஒவ்வொரு நடிப்பின் பங்கும் லைட்டில் (ஒளியில்) தான் இருக்கிறது அதாவது யார் டபுள் லைட் ஃபரிஷ்தாக்களாக இருக்கிறார்களோ அவர்கள் ஒவ்வொரு ஆத்மாவையும் இயல்பாகவே தன் பக்கம் கவருவார்கள். இன்றைய உலகில் டிராமாவைத் தவிர ஃபரிஷ்தாக்களின் கண்களைப் போல கவரக்கூடியவை என்று சொல்லும் அளவிற்கு வேறு என்ன இருக்கிறது? டி.வி. எப்படி டி.வி மூலமாக இவ்வுலகின் பல தரப்பட்ட காட்சிகளை பார்த்துக் கொண்டிருப்பதால் அனேகர் அவற்றில் கவரப்படுகிறார்கள் அதாவது கீழே விழும் கலையில் செல்கிறார்கள், அதே போலவே ஃபரிஷ்தாக்களின் கண் தெய்வீக தொலைக்காட்சியின் காரியத்தைச் செய்யும். ஒவ்வொருவரின் கண்கள் மூலமாக இந்த உலகத்தை மட்டுமில்லாமல் மூன்று உலகின் தரிசனம் செய்வார்கள். அதே போலவே ஃபரிஷ்தாக்களின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணி ஆத்மாக்களை சர்ச் லைட் மற்றும் லைட் ஹவுசிற்கு சமமாக தன்னுடைய சொரூபம், சுயமார்க்கம் மற்றும் உயர்ந்த இலட்சியத்தின் தெளிவான காட்சிகளை காண்பிப்பார்.

அந்த மாதிரி பரிஷ்தாக்களின் யுக்தி நிறைந்த வார்த்தை அதாவது விலைமதிக்க முடியாத வார்த்தைகள் ஒவ்வொரு யாசிக்கின்ற (வேண்டுதல்) ஆத்மாக்களின் பையை இரத்தினங்களினால் நிரப்பி விடும். தேவதைகள் கூட பக்தர்களின் மேல் மகிழ்ச்சி அடைந்து பூக்களின் மழை பொழிகிறார்கள் என்ற வர்ணனை இருக்கிறது. அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள் உங்கள் மூலமாக உலகின் ஆத்மாக் களுக்காக அனைத்து சக்திகள், அனைத்து குணங்கள் மற்றும் அனைத்து வரதானங்களின் மலர் மழை அனைவருக்காகவும் பொழியும். அதனால் தான் உங்கள் அனைவரையும் தேவதை அதாவது (விரும்புவதை) கொடுப்பவர் என்று புரிந்து பக்தர்கள் துவாபர யுகத்திலிருந்து தேவதைகளின் மகிமை மற்றும் பூஜை செய்தே வந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் கடைசி நேரம் அனைத்து ஆத்மாக்கள் விசேஷமாக பாரதவாசி ஆத்மாக்கள் தேவதை தர்மத்தின் கடைசி காலத்தில் வரக்கூடிய ஆத்மாக்கள் யாரும் சத்யுகத்தில்

உங்களுடைய தேவதை ரூபத்தின் பாலனையை எடுக்க மாட்டார்கள். மாறாக பிற்காலத்தில் இந்த தர்மத்தின் வளர்ச்சி அடையும் நேரத்தில் தொடங்கி கடைசி வரையிலான நேரத்தில் உங்களுடைய தேவதை ரூபம், வள்ளல் ரூபம் மற்றும் வரமளிக்கும் ரூபத்தை அனுபவம் செய்வார்கள். உங்களுடைய கடைசி தேவதை ரூபத்தின் அனேக பிராப்திகளின் சம்ஸ்காரம் மற்றும் நினைவுகள் அனைத்து ஆத்மாக்களில் உள்ளடங்கி இருக்கிறது அதாவது நிரம்பியிருக்கிறது. இந்தக் காரணத்தினால் நடைமுறை ரூபத்தில் சத்யுக உலகில் வராவிட்டாலும் துவாபரயுகத்தில் உலக மேடையில் வந்தவுடனேயே தேவதை சொரூபத்தின் பிராப்தியின் நினைவு வெளிப்பட்டு விடுகிறது. மேலும் மகிமை, பூஜைகள் செய்து கொண்டே இருக்கிறார்கள். இப்படி தன்னுடைய கடைசி ஃபரிஷ்தா சொரூபத்தை புரிந்து கொண்டீர்களா? அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட நடிகர்கள் தானாகவே தன் பக்கம் கவர மாட்டார்களா? இதுவும் டபுள் லைட் நிலை உங்கள் அனைவரையும் மற்றும் தந்தையையும் பிரத்யக்ஷம் செய்யும். ஜீரோ மற்றும் ஹீரோ இருவரும் பிரத்யக்ஷம் ஆவார்கள். புரிந்ததா. (கரன்ட் இல்லாமல் ஆகி விட்டது), பின்பு பாபா கூறினார் இப்பொழுதும் பாருங்கள் கரன்ட் மூலமாக எவ்வளவு காரியம் நடக்கிறது. இப்பொழுது கூட உங்கள் அனைவரையும் கவரக்கூடிய பொருள் லைட் அதாவது கரன்டின் ஆதாரத்தில் இருக்கிறது. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் ஜீரோவுடன் ஹீரோ பங்கை செய்யக்கூடிய, எப்பொழுதும் கொடுக்கக்கூடிய தேவதா சொரூபம், உலகில் தன்னையும் மற்றும் தந்தையையும் வெளிப்படுத்தக்கூடிய உலகின் அனைத்து ஆத்மாக்களின் அனைத்து மனவிருப்பங்களை நிறைவேற்றக்கூடிய அந்த மாதிரி ஃபரிஷ்தாக்களின் உலகில் இருப்பவர்களை மற்றும் ஃபரிஷ்தாக்களின் உலகிலிருந்து விலகி இருக்கக்கூடிய குழந்கைளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: தன்னுடைய ஆக்குபேஷனின் (தொழிலின்) நினைவு மூலமாக மனதை கட்டுப்படுத்தக்கூடிய இராஜயோகி ஆகுக!**

அமிர்தவேளை மற்றும் முழு நாளில் இடையிடையே தன்னுடைய தொழிலை நினைவில் கொண்டு வாருங்கள். இராஜயோகியின்

ஆசனத்தில் அமரக்கூடியவராக இருங்கள். இராஜயோகி என்றால் இராஜா அவரிடத்தில் கட்டுப்படுத்தும் மற்றும் ஆளுமை சக்தி இருக்கிறது. அவர் ஒரு நொடியில் மனதைக் கட்டுப்படுத்த முடியும். அவர்கள் ஒருபொழுதும் தன்னுடைய எண்ணம், வார்த்தை, செயலை வீணானதாக இழக்க முடியாது. ஒருவேளை விரும்பியபோதும் வீணானது வந்து விடுகிறது என்றால் அவரை ஞானம் நிறைந்தவர் மற்றும் ராஜா என்று கூற மாட்டோம்.

**சுலோகன்: சுயத்தின் மேல் இராஜ்யம் ஆளுமை செய்பவர் தான் உண்மையான சுய இராஜ்ய அதிகாரி!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 06.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மூன்று இணைந்த சொரூபம்!

ஒவ்வொருவரும் தன்னுடைய மூன்று ரூபங்களின் இணைந்த ரூபத்தை தெரிந்திருக்கிறீர்களா? ஒன்று அனாதி (பரந்தாமத்தில்) இணைந்த ரூபம், இரண்டாவது சங்கமயுக இணைந்த ரூபம் மற்றும் மூன்றாவது எதிர்காலத்தின் இணைந்த ரூபம் - இந்த மூன்று ரூபங்களையும் தெரிந்திருக்கிறீர்களா?

மனித ஆத்மாக்கள் உங்களுடைய அனாதி இணைந்த ரூபம் எது? புருஷ் (ஆத்மா) மற்றும் இயற்கை என்று கூறினாலும் சரி அல்லது ஆத்மா மற்றும் உடல் என்று கூறினாலும் சரி. இந்த அனாதி இணைந்த ரூபம், இந்த அனாதி நாடகத்தில் அடங்கியிருக்கிறது. எதிர்கால இணைந்த ரூபம் எது? நான்கு கைகள் உள்ள விஷ்ணு. சங்கமயுகத்தின் இணைந்த ரூபம் எது? சிவன் மற்றும் சக்தி. சக்தி, சிவனின்றி எதுவும் செய்ய முடியாது. மேலும் தந்தை சிவனும் கூட சக்திகள் இன்றி எதுவும் செய்ய முடியாது. அப்படி சங்கமயுகத்தின் அனைவரின் இணைந்த ரூபம் சிவசக்தி. மாதர்களினுடையது மட்டுமின்றி பாண்டவர்களும் சக்தி சொரூபம் தான். நினைவு ரூபத்தில் இன்றைய சத்குருக்களும் உங்களுடைய இணைந்த ரூபமான சிவசக்தியின் பூஜை செய்து வருகிறார்கள்.

எனவே நாமே தான் இணைந்த சிவசக்தி என்ற நினைவு எப்பொழுதும் இருக்க வேண்டும். எப்பொழுதும் இருப்பதே இணைந்த ரூபம் என்றால் மறக்க முடியுமா என்ன? பிறகு ஏன் மறக்கிறீர்கள்? தன்னை தனியானவர் என்று நினைக்கிறீர்கள். எனவே மறந்தும் விடுகிறீர்கள். சென்ற கல்பத்தின் நினைவு சின்னத்திலும் அர்ஜுனனுக்கு எப்பொழுது தந்தையின் துணை மறந்து விடுகிறது அதாவது எப்பொழுது அவர் சாரதியை (தேர் ஓட்டியை) மறந்து விடுவாரோ அப்பொழுது என்னவாகி விடுகிறார்? பலமற்றவராக, கோழை என்றும் கூறலாம். மேலும்

# 1975 அவ்யக்த முரளி

எப்பொழுது என்னுடன் இருப்பவர் என்னுடைய ஓட்டுநர் தந்தை என்று நினைவுக்கு வருகிறது என்றால் வெற்றி அடைபவராக ஆகி விடுகிறார். நிரந்தரமாக சுலபமான நினைவிற்கான சுலபமான யுக்தி ஒன்றே ஒன்று தான் அது தன்னுடைய இணைந்த ரூபத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் நினைவில் வைத்தீர்கள் என்றால் ஒருபொழுதும் பலஹீனமான எண்ணமும் என்ன. கனவும் வர முடியாது. விழித்துக் கொண்டும். தூங்கிக் கொண்டும் இணைந்த ரூபம் இருக்கட்டும்.

எப்பொழுது தந்தை அவரே குழந்தைகளுடன் துணையாக இருப்பதற்கான உறுதி கொடுக்கிறார் மற்றும் அப்படி நடந்தும் கொள்கிறார் என்றால் உறுதிமொழியின் லாபத்தை எடுக்க வேண்டும். அந்த மாதிரியான துணை மற்றும் துணைவன் பின்பு எப்பொழுது கிடைப்பார். பல ஜென்மங்களாக ஆத்மாக் களுடன் துணையை வைத்து துக்கத்தின் அனுபவம் செய்தும் இப்பொழுதும் கூட ஆத்மாக்களின் துணை பிடித்திருக்கிறதா என்ன? தந்தையின் துணையை மறந்து மற்றவர்களின் துணையில் சென்று விடுகிறீர்களா? ஏதாவது ஒரு சாதனத்தின் மற்றும் ஏதாவது ஒரு நபரை துணைவனாக ஆக்கிக் கொள்கிறீர்கள் அதாவது அந்த துணையில் இருப்பதிலேயே அந்த மாதிரி மூழ்கி விடுகிறீர்கள், தந்தையிடம் செய்த உறுதிமொழியையும் மறந்து விடுகிறீர்கள். அந்த நேரம் எந்த மாதிரியான விளையாட்டை செய்கிறீர்கள் என்று தெரியுமா? விளையாடும் நேரத்திலோ மிகவும் மகிழ்ச்சியாகி விடுகிறீர்கள், இப்பொழுது மறந்து விட்டீர்கள். அந்த வித்தைக்காரர்கள் வெளிப்படுத்தும் விளையாட்டை விட மிகுந்த ரமணீகரமாக விளையாடுகிறீர்கள். யார் அதுபற்றி கூறுகிறாரோ அவர் வித்தைகாட்டி விளையாடுபவராக இருப்பார் என்று அப்படிக் கூற முடியாது. அதைப் பார்ப்பவர்கள் கூட சொல்ல முடியுமே! உங்களுடைய இந்த உலகத்தில் ஆண் குரங்கு மற்றும் பெண் குரங்கின் விளையாட்டைக் காண்பிக்கிறார்கள். பெண் குரங்கை, ஆண் குரங்கோடு நிச்சயதார்த்தம் செய்வதற்காகப் பிடித்துக் கொண்டு வருகிறார்கள் மற்றும் பெண் குரங்கு குறும்புத்தனமாக முந்தாணையை எடுத்து மூடி முகத்தை அந்தப் பக்கம் திருப்பி விலகிச் சென்று விடுகிறது. ஆண் குரங்கு முன்னேறி வந்தால் இது பின்னோக்கிச் செல்கிறது. அப்படி அந்த ரமணீகரமான விளையாட்டுகளை பொழுதுபோக்கிற்காகக்

காண்பிக்கிறார்கள் என்றால் குழந்தைகளும் அதே போல் அந்த நேரம் அந்த மாதிரி குறும்பைச் செய்கிறார்கள். தந்தை எதிரில் வருகிறார் மேலும் குழந்தைகள் பார்த்தும் பார்க்காமல் இருக்கிறார்கள், கேட்டும் கேட்காமல் இருக்கிறார்கள். அந்த மாதிரி விளையாட்டை இப்பொழுது செய்யாதீர்கள். தன்னுடைய மூன்று இணைந்த ரூபத்தை நினைவில் வைத்தீர்கள் என்றால் தான் நிரந்தரமாக எப்பொழுதும் துணைவனோடு அந்த துணையை அனுபவம் தன்னைத் தனியாக இருப்பதாக நினைப்பதினால் காலப்போக்கில் வாழ்க்கையில் சோர்வு வந்து விடுகிறது. அதீந்திரிய சுகம் நிறைந்த வாழ்க்கை, அனைத்து உறவுகள் நிரம்பிய வாழ்க்கை மற்றும் அனைத்து பிராப்திகளினால் நிரம்பிய வாழ்க்கையை அந்த நேரம் ரசனையற்று மற்றும் முற்றிலும் சாரமேயில்லாது அனுபவம் செய்கிறீர்கள். திரிநேத்ரியாக இருந்தபோதிலும் எந்த வழியும் தென்படுவதில்லை. என்ன செய்வேன் எங்கு செல்வேன், ஒன்றுமே புரிவதில்லை. ஜீவன்முக்தியின் கதவைத் திறக்கக்கூடிய அவர்களுக்கே ஒரு புகலிடமும் பார்வையில் தென்படுவதில்லை. மூன்று காலத்தையும் தெரிந்தவராக இருந்தபோதிலும் தன்னுடைய நிகழ்காலத்தைத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. இந்த அதிசயச் செயலைச் செய்கிறீர்கள் இல்லையா? அந்த மாதிரி அதிசயத்தை தினசரி ஏதாவது குழந்தைகள் செய்து காண்பித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

அந்த மாதிரி நேரத்தில் பாப்தாதா என்ன செய்கிறார்? மிகவும் திருப்திப்படுத்தி சந்தோஷம் அடையச் செய்கிறார் இருந்தும் குழந்தைகள் மிகவும் குறும்புத்தனம் செய்கிறார்கள், பின்பு நேரம் கடந்து சென்ற பிறகு தந்தையை சந்தோஷப்படுத்துகிறார்கள். குழந்தைகளும் மிகவும் சாதுர்யமானவர்களாக இருக்கிறார்கள். ஞான சொரூபமானவருக்கு நினைவூட்டுகிறார்கள். என்ன செய்கிறார்கள் என்று அதையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் மன்னிக்கும் கடல், கிருபை நிறைந்தவர், தயா நிறைந்தவர், இரக்க மனமுடையவர் அந்த மாதிரி பல விஷயங்களினால் சந்தோஷப்படுத்துகிறார்கள். பின்பு தந்தை என்ன செய்கிறார்? தந்தை பின்பு அன்பு (Love) மற்றும் சட்டத்தின் (Law) சமநிலை வைக்கிறார். இந்தக் கதை குழந்தைகள் மற்றும் தந்தையினுடையது. கதை கேட்பதில் அனைவரும் குஷி அடைகிறார் கள் ஆனால் இந்தக் கதை மாற்றத்தில் கொண்டு வர வேண்டும். எப்படி

## 1975 அவ்யக்த முரளி

தந்தை மிகப் பணிவான சேவகனாகி சேவையில் இருக்கிறார், அதே போலவே ஒவ்வொரு தந்தையின் துணைவர்கள் மற்றும் சகயோகி குழந்தைகளும் தந்தைக்குச் சமமாக பணிவான சேவகன் ஆக வேண்டும். பணிவான சேவகன் சோர்வானவராக இருப்பதில்லை. இரவு, பகலாக சேவையில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பார். எப்படி தந்தை குழந்தைகளின் எதிரில் நம்பிக்கைக்குரியவர் என்ற சொரூபத்தை செய்து கொண்டிருக்கிறார், அதே போலவே குழந்தைகளுக்கும் கட்டளைப்படி நடப்பவர் அதாவது ஒவ்வொரு ஆணைப்படி நடப்பவராகி துணையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அந்த மாதிரி நிரந்தரமாக துணைவன் ஆக வேண்டும். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் உண்மையான துணைவர்களுக்கு, ஒவ்வொரு ஆணையின் மேல் தன்னை பலிகொடுக்கக்கூடிய, நம்பிக்கைக்குரிய, தந்தையின் கட்டளைப்படி நடக்கக்கூடிய, தந்தைக்குச் சமமாக உயர்ந்தவர்கள் ஆகக்கூடிய, அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இகழ்ச்சியை புகழ்ச்சி என்று புரிந்து கொண்டு இரக்கமனம் உடையவர் ஆகுங்கள்!

தன்னுடைய ஜொலித்துக் கொண்டிருக்கும் அதிர்ஷ்ட நட்சத்திரத்தைப் பார்க்கிறீர்களா? அதிர்ஷ்ட நட்சத்திரம் எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டிருக்கிறதா அல்லது சில நேரம் ஜொலிக்கிறது மற்றும் சில நேரம் ஜொலிப்பு குறைந்து விடுகிறதா அதாவது நிகழ்வுகள் என்ற மேகத்தின் நடுவே மறைந்து விடுகிறதா? அல்லது சில நேரம் இந்த ஸ்தூல நட்சத்திரங்களுக்குச் சமமாக, எப்படி ஸ்தூல நட்சத்திரங்கள் இடத்தை மாற்றுகின்றன அதே போல நிலை மாறுவதோ இல்லையே? அல்லது அதிர்ஷ்டத்தின் ரேகை இப்பொழுது ஏறும் கலை மற்றும் அடுத்த நேரம் நிற்கும் கலை அல்லது இறங்கும் கலை அந்த மாதிரி மாறவோ இல்லையே? ஏனென்றால் சங்கமயுகத்தில் அதிர்ஷ்ட ரேகையை மாற்றக்கூடிய தந்தை நேர் எதிரில் தன் பங்கை செய்து கொண்டிருக்கிறார். அந்த மாதிரி அதிர்ஷ்டத்தை உருவாக்கும் தந்தையின் நேரடிக் குழந்தைகள் - அவர்களுடைய அதிர்ஷ்டம் உயர்ந்ததாகவும் மற்றும் அழியாததாகவும் இருக்க வேண்டும். அந்த மாதிரி அதிர்ஷ்டத்தை வேறெந்த ஆத்மாவும் உருவாக்க முடியாது. அதிர்ஷ்டம் நிறைந்தவனாக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குபவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? தெரிந்திருக்கிறீர்களா? அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஒவ்வொரு எண்ணத்தில், ஒவ்வொரு வார்த்தையில், காரியத்தில் தந்தையைப் பின்பற்றி நடப்பவராக இருப்பார். எண்ணம் கூட தந்தைக்குச் சமமாக உலக நன்மையின் சேவைக்காக இருக்கும். ஒவ்வொரு வார்த்தையில் பணிவு மற்றும் மென்மை மேலும் அந்த அளவு மகான் நிலை இருக்கும். நினைவு சொரூபத்தில் ஒரு பக்கம் எல்லைக்கப்பாற்பட்ட எஜமானத்தன்மை, இன்னொரு பக்கம் உலகின்

சேவாதாரி ஆத்மா என்று இருக்கும். ஒரு பக்கம் அதிகாரத்தன்மையின் போதை இன்னொரு பக்கம் அனைவருக்கும் மரியாதை கொடுப்பவர், ஒவ்வொரு ஆத்மாவிற்காக தந்தைக்குச் சமமாக வள்ளல் மற்றும் வரமளிப்பவர், அவர் எதிரியாக இருந்தாலும், இந்த ஜென்மத்தின் கணக்கு வழக்கை முடிப்பதற்கான காரணமானவராக இருக்கும் ஆத்மாவாக இருந்தாலும், அந்த மாதிரி உயர்ந்த நிலையிலிருந்து கீழே இறக்குவதற்கு காரணமாகியிருக்கும் ஆத்மாக் களுக்கும், சம்ஸ்காரங்களின் மோதல் செய்யும் ஆத்மாக்களுக்கும், வெறுப்புணர்வு கொள்ளும் ஆத்மாக்களுக்கும் அனைத்து ஆத்மாக்களுக்காக வள்ளல் மற்றும் வரமளிப்பவராகி, துச்சமாக உதறித் தள்ளுபவருக்கும் நன்மை செய்யும் ஆத்மா என்று அனுபவம் செய்யட்டும், நிந்தனையின் வார்த்தைகள் மற்றும் அவமரியாதையின் வார்த்தைகள் கூட மகிமை மற்றும் புகழ் பாடுவதற்கு தகுதியானதாக அனுபவம் ஆகட்டும். மேலும் நிந்தனை மகிமையாக அனுபவம் ஆகட்டும். எப்படி துவாபர யுகத்தில் நீங்கள் அனைவரும் தந்தையை நிந்தனை செய்தீர்கள் ஆனால் தந்தை நிந்தனையையும் மகிமை என்று புரிந்து ஏற்றுக் கொண்டார். மேலும் நிந்தனையின் பிரதிபலனாக, பக்தியின் பலன் ஞானம் கொடுத்தாரேயன்றி வெறுப்பு அல்ல. இன்னும் இரக்கமனம் உடையவராக ஆனார். அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் தான் உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்த உயர்ந்தவர் ஆகிறார்கள். எப்படி தந்தையிடம் இருந்து பிரிந்து சென்ற ஆத்மாக்களையும் தன்னுடையவர் ஆக்கி தன்னை விட உயர்ந்த பிராப்தி செய்விக்கிறார் - அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகள் தந்தைக்குச் சமமாக ஒவ்வொரு ஆத்மாவையும் தன்னையும் விட முன்னேறிச் செல்வதற்கான சுபபாவனை வைத்துக் கொண்டே உலகிற்கு நன்மை செய்பவராக ஆவார்கள். இதைத் தான் நிரந்தர யோகி நிலையின் லட்சணம் என்று கூறப்படுவது.

அந்த மாதிரி உயர்ந்த லட்சியத்தை அடையக்கூடியவர்கள் யார் வார்த்தை மற்றும் உணர்வை மாற்றம் செய்து விட்டார் அதாவது இகழ்ச்சியையும் புகழ்ச்சியில் மாற்றிவிட்டு, நிந்தனையை மகிமையில் மாற்றம் செய்து விட்டு துச்சமாக உதைப்பதை மரியாதையில் மாற்றம் செய்து, அவமானத்தை சுய அபிமானத்தில் மாற்றம் செய்து, மற்றும் அபகாரத்தை உபகாரத்தில் மாற்றம் செய்து, மாயாவின் தடைகளை

தந்தையின் நினைவில் மூழ்கியிருக்கும் சாதனமாகப் புரிந்து மாற்றிவிடட்டும். அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் வெற்றி பெறுபவர்களாக 8-ரத்தினங்கள் ஆகிறார்கள். மேலும் பக்தர்களின் இஷ்ட தேவி தேவதைகளாக ஆகிறார்கள். அந்த மாதிரி நிலை வரை வந்தடைந்திருக்கிறீர்களா? அல்லது அன்பான ஆத்மாக்களுக்கு மட்டும் சகயோகி ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? நம்பிக்கை இழந்தவர்களை நம்பிக்கை நட்சத்திரமாக ஆக்குவது தான் அதிசயக் காரியம் ஆகும், அந்த மாதிரி அதிசயம் காண்பிப்பவர்களாக ஆகி இருக்கிறீர்களா? அல்லது தந்தையின் அதிசயக் காரியத்தை மட்டும் பார்த்து மகிழ்ச்சி அடைபவர்களாகி இருக்கிறீர்களா? எப்பொழுது தந்தையை பின்பற்றி நடப்பவர் என்றால் அதிசயம் செய்பவராக ஆக வேண்டுமேயன்றி பார்த்து மகிழ்ச்சி அடைபவராக அல்ல. புரிந்ததா? இதைத் தான் தந்தையைப் பின்பற்றி நடப்பது என்று கூறுவது,

எப்படி நேரமோ அப்படி அடியெடுத்து வைக்க வேண்டும். எப்பொழுது இது கடைசி நேரம் என்று புரிந்து கொண்டீர்களோ அதே போல் தன்னுடைய நிலையையும் கடைசி சம்பூர்ண நிலை என்று புரிந்து கொள்கிறீர்களா? நேரம் கடைசி மற்றும் முயற்சியின் வேகம், நிலை இடைப்பட்டதாக இருக்கிறது என்றால் முடிவு என்னவாகும்? சொர்க்கத்தின் சுகத்தின் பிராப்தி இடைப்பட்ட முயற்சி செய்பவர்களுக்கு சத்யுகத்தின் இடைப்பட்ட காலத்தில் பிராப்தி ஆகும். அந்த மாதிரி லட்சியம் கொண்டிருக்கவில்லை இல்லையா? லட்சியம் முதல் ஜென்மத்தில் வருவதற்கானதாக இருக்கிறது என்றால் லட்சணமும் முதல் தரமானதாக வேண்டும். நேரத்திற்கு ஏற்றபடி மற்றும் லட்சியத்திற்கு ஏற்றபடி முயற்சி செய்வதை சோதனை செய்யுங்கள்.

நல்லது, அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக அனைவரின் மரியாதைக்குரிய, தந்தையின் ஆஸ்தியின் அதிகாரி, ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு அடியில் தந்தையைப் பின்பற்றி நடக்கக்கூடிய, உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்கக்கூடிய அதிர்ஷ்ட நட்சத்திரங்களுக்கு, நிரந்தரமாக தந்தையின் நினைவு மற்றும் சேவையில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் வெற்றி அடையும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பயனுள்ளதாக்குங்கள் மற்றும் வெற்றி சொரூபமாக ஆகுங்கள்!**

எப்படி பிரம்மாபாபா நிச்சயத்தின் ஆதாரத்தில், ஆன்மீக போதையின் ஆதாரத்தில் நிச்சயம் நடக்கும் என்ற ஞானம் உடையவராகி ஒரு நொடியில் அனைத்தையும் பயனுள்ளதாக்கி விட்டார். தனக்காக வைத்துக் கொள்ளவில்லை, சேவையில் பயனுள்ளதாக்கினார். இதனுடைய வெளிப்படை நிரூபணமாக கடைசி நாள் வரை உடல் மூலமாக, கடிதங்கள் மூலமாக சேவை செய்தார், வாய் மூலமாக மகாவாக்கியங்களை உச்சரித்தார். கடைசி நாளில் கூட நேரம், எண்ணம், உடலை பயனுள்ளதாக்கினார். அப்படி பயனுள்ளதாக ஆக்குவதின் அர்த்தமே சிரேஷ்டத்தின் (உயர்ந்த) பக்கம் ஈடுபடுத்துவது, அந்த மாதிரி யார் பயனுள்ளதாக ஆக்குகிறார்களோ அவர்களுக்கு வெற்றி இயல்பாகவே கிடைக்கிறது. வெற்றி அடைவதற்கான விசேஷ ஆதாரம் ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு மூச்சு, ஒவ்வொரு பொக்கிஷத்தையும் பயனுள்ளதாக ஆக்குவது. எண்ணம், சொல், செயல், உறவு நெருக்கம் எதிலேயும் வெற்றி அனுபவம் செய்ய விரும்புகிறீர்கள் என்றால் தனக்காகவோ அல்லது மற்றவர்களுக் காகவோ பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டே இருங்கள். வீணாகிப் போய் விட அனுமதிக்காதீர்கள். பின்பு இயல்பாகவே வெற்றியின் குஷியின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள், ஏனென்றால் பயனுள்ளதாக ஆக்குவது என்றால் தற்சமயத்திற்காக வெற்றி அடைபவராக ஆவது மற்றும் எதிர்காலத்திற்காக சேமிப்பது,

**இந்த பிராமண வாழ்க்கையில் -**

1) யார் நேரத்தை பயனுள்ளதாக்குகிறார்களோ அவர் நேரத்தை பயனுள்ளதாக ஆக்கியதின் பலன் சொரூபமாக இராஜ்ய பாக்கியத்தின் முழு காலத்திலும் இராஜ்ய அதிகாரி ஆகிறார்கள்.

2) யார் மூச்சை பயனுள்ளதாக ஆக்குகிறார்களோ அவர் அனேக பிறவிகளுக்கு எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கிறார். ஒருபொழுதும் மூச்சு நிற்காது. இதயம் நின்று போகாது.

3) யார் ஞான பொக்கிஷத்தைப் பயனுள்ளதாக ஆக்குகிறார்களோ அவர் அந்த மாதிரி அறிவாளி ஆகிவிடுகிறார், அதனால் எதிர்காலத்தில் அனேக மந்திரிகளின் அறிவுரைகளைக் கேட்க வேண்டியதில்லை. அவரே அறிவு நிறைந்தவராகி இராஜ்யத்தை நடத்துவார்.

4) யார் அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தை பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அதாவது அவற்றை காரியத்தில் ஈடுபடுத்துகிறாரோ அவர் அனைத்து சக்திகள் நிரம்பியவர் ஆகிவிடுகிறார். அவருடைய எதிர்கால இராஜ்யத்தில் எந்த சக்தியின் குறையும் இருப்பதில்லை. அனைத்து சக்திகளும் இயல்பாகவே குறைவில்லாத இடைவிடாத தடையற்று காரியத்தின் வெற்றியை அனுபவம் செய்விக்கும்.
5) யார் அனைத்து குணங்களின் பொக்கிஷத்தை பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அவர் அந்த மாதிரி குணம் நிறைந்தவர் ஆகிவிடுகிறார் அவருக்கு இந்தக் கடைசி நேரத்தில் கூட அவருடைய ஜடச் சிலைகளின் மகிமையாக 'அனைத்து குணங்கள் நிரம்பிய தேவதை'யின் ரூபத்தில் இருக்கும்.
6) யார் ஸ்தூல செல்வத்தின் பொக்கிஷத்தை பயனுள்ளதாக ஆக்குகிறாரோ அவர் 21-ஜென்மங் களுக்காக அனைத்து செல்வங்கள் நிரம்பியவர் ஆகிவிடுகிறார். எனவே பயனுள்ளதாக ஆக்குங்கள். வெற்றி அடைபவர் ஆகுங்கள்.
(7) எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆவதற்கான வழி ஒரே பலம் மற்றும் ஒரே ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை; நிச்சயம் எப்பொழுதுமே கவலையற்றவராக ஆக்குகிறது. மேலும் கவலையற்ற நிலை உள்ளவர் என்ன காரியம் செய்தாலும் அதில் வெற்றி அவசியம் இருக்கும். எப்படி பிரம்மாபாபா உறுதியான எண்ணத்தினால் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியை அடைந்தார். உறுதித்தன்மை வெற்றியின் ஆதாரமாக ஆனது. அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி நடங்கள். ஒவ்வொரு பொக்கிஷத்தையும், குணத்தையும், சக்திகளையும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் அதிகரித்துக் கொண்டே இருக்கும். சேமிப்பதின் விதியை கடைபிடித்தீர்கள் என்றால் வீணான கணக்கு தானாகவே மாறி பயனுள்ளதாகி விடும். தந்தை மூலமாக என்னென்ன பொக்கிஷங்கள் கிடைத்திருக்கிறதோ அவற்றை தானம் செய்யுங்கள். ஒருபொழுதும் கனவில் கூட தவறாகக்கூட பிரபுவால் கொடுக்கப்பட்டதை தன்னுடையது என்று நினைக்காதீர்கள். என்னுடைய இந்த குணம், என்னுடைய சக்தி இந்த என்னுடையது என்று வருவது என்றால் பொக்கிஷத்தை இழப்பது. நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: முன்று காலங்களையும் உணர்ந்த (ஸ்திதி) நிலை மூலமாக குழப்பம் அடையும் சூழ்நிலைகளை ஆனந்தத்தில் மாற்றம் செய்யக்கூடிய கர்மயோகி ஆகுக!**

எந்தக் குழந்தைகள் மூன்று காலங்களையும் தெரிந்தவர்களோ அவர்கள் ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் குழப்பமடைய முடியாது. ஏனென்றால் அவர்களின் எதிரில் மூன்று காலங்களும் தெளிவாக இருக்கிறது. எப்பொழுது இலட்சியம் மற்றும் பாதை தெளிவாக இருக்கிறது என்றால் யாரும் குழப்பம் அடைவதில்லை. மூன்று காலங்களையும் தெரிந்த ஆத்மாக்கள் ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் மகிழ்ச்சியைத் தவிர வேறு எதையும் அனுபவம் செய்வதில்லை. சூழ்நிலை குழப்பம் அடையச் செய்வதாக இருந்தாலும், பிராமண ஆத்மா அதையும் மகிழ்ச்சியில் மாற்றி விடும். ஏனென்றால் எண்ணிலடங்காத தடவை அந்த பங்கை செய்திருக்கிறார். இந்த நினைவு கர்மயோகி ஆக்கி விடுகிறது. அவர் ஒவ்வொரு காரியத்தையும் மகிழ்ச்சியோடு செய்கிறார்.

**சுலோகன்: அனைவரின் மரியாதையைப் பெற வேண்டும் என்றால் ஒவ்வொருவருக்கும் மரியாதை கொடுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 10.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞானம் நிறைந்த மற்றும் சக்தி நிறைந்த ஆத்மா தான் வெற்றி அடைவார்!

எப்பொழுதும் ஒவ்வொரு ஸ்திதியில் (நிலையில்) மாஸ்டர் ஞானம் நிறைந்தவன், சக்தி நிறைந்தவன் மற்றும் வெற்றி அடைபவன் என்று தன்னை அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் ஞானம் மற்றும் சக்தி நிறைந்த ஆத்மாவின் ரிசல்ட் தான் வெற்றி நிறைந்த நிலை. தற்சமயம் இந்த இரண்டு பாடங்கள், நினைவு அதாவது சக்தி நிறைந்தது மற்றும் ஞானம் இந்த இரண்டு பாடங்களின் நோக்கமே வெற்றி அடைவது தான். இதைத் தான் பிரத்யக்ஷ பலன் என்று கூறுவது. இந்த நேரத்து பிரத்யக்ஷ பலன் உங்களுடைய எதிர்காலத்து பலனை வெளிப்படுத்தும். எதிர்கால பலனின் ஆதாரத்தில் இப்பொழுதைய பிரத்யக்ஷ பலனை அனுபவம் செய்வதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுவார்கள் என்று அப்படி கிடையாது. தற்சமயம் ஒன்றும் தென்படுவதில்லை, அனுபவம் ஆவதில்லை மற்றும் பிராப்தி ஆவதில்லையே என்று அப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள், இந்தப் படிப்பு இருப்பதோ எதிர்காலத்திற்காகத் தான், என்னுடைய எதிர்காலம் மிகவும் ஒளிமயமானது. இப்பொழுது நான் மறைவாக (குப்தமாக) இருக்கிறேன், கடைசியில் நான் வெளிப்பட்டு விடுவேன் ஆனால் எதிர்காலத்தின் பொலிவு, எதிர்காலத்தின் பிராப்தி மற்றும் கடைசி நேரத்தில் பிரசித்தியாகக்கூடிய ஆத்மாவின் ஜொலிப்பு இப்பொழுதிலிருந்தே அனைவருக்கும் அனுபவம் ஆக வேண்டும். எனவே முதலில் பிரத்யக்ஷபலன் மற்றும் கூடவே எதிர்கால பலன். பிரத்யக்ஷ பலன் இல்லை என்றால் எதிர்கால பலனும் இல்லை. தன்னைத் தானே அவர் பிரத்யக்ஷம் செய்யவில்லை ஆனால் அவருடைய நெருக்கம், அன்பு மற்றும் சகயோகம் அந்த மாதிரியான ஆத்மாவை இயல்பாகவே பிரசித்தி ஆக்கி விடும்.

தன்னை எந்த வகையிலாவது நிரூபணம் செய்பவர் ஒருபொழுதும் பிரசித்தி ஆக முடியாது என்பது ஈஸ்வரிய நியமம் ஆகும். எனவே நான் என்னை தெரிந்திருக்கிறேன், நான் சரியாகத் தான் இருக்கிறேன், மற்றவர்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை மற்றும் அறிந்து கொள்ளவில்லை. கடைசியில் தெரிந்து கொள்வார்கள் மற்றும் வரும் நாட்களில் பாருங்கள் என்னவாகிறது என்று இந்த மாதிரி யாராவது நினைத்தால் இதுவும் ஞான சொரூப, நினைவு சொரூபமான அந்த ஆத்மா தன்னையே ஏமாற்றக்கூடிய, அலட்சியம் கலந்த இனிமையான தூக்கமே ஆகும். அந்த மாதிரி அற்ப காலத்திற்கு ஓய்வு கொடுக்கக்கூடிய மற்றும் அற்ப காலத்திற்காக தன் மனதிற்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய மாயாவின் தூக்கம் அனேக விதமானவை எந்த விஷயத்திலும் தன்னுடைய பிராப்தியை மற்றும் பிரத்யக்ஷ பலனின் பிராப்தியை இழக்கிறீர்கள் என்றால் அவசியம் அனேக விதமான தூக்கத்தில் தூங்குகிறீர்கள், எனவே தான் அமிர்தவேளையில் யார் தூங்குகிறாரோ அவர் அனைத்து பிராப்திகளையும் இழக்கிறார் என்ற பழமொழி இருக்கிறது. அப்படி இழப்பது தான் தூங்குவது, அந்த மாதிரியானவர் ஒருபொழுதும் தேவையான நேரத்தில் வெற்றி அடைய முடியாது. அதாவது வெற்றி நிறைந்தவர் ஆக முடியாது.

முழு கல்பத்தில் நாடகப்படி இந்த சங்கமயுகத்திற்கு மட்டும் தான் வரதானம் இருக்கிறது. என்ன வரதானம்? சங்கமயுகத்திற்கு என்ன வரதானம் இருக்கிறது? பிரத்யக்ஷ பலனின் வரதானம் சங்கமயுகத்திற்கு மட்டும் தான் இருக்கிறது. இப்பொழுது கொடுப்பது, இப்பொழுதே அடைவது. முதலில் பார்க்கிறீர்கள் பின்பு செய்கிறீர்கள். சரியான வியாபாரிகள் தான் நீங்கள். சங்கமயுகத்தின் விசேஷமே இந்த யுகத்தில் தான் தந்தையும் பிரத்யக்ஷம் ஆகிறார், உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமணர்களும் பிரத்யக்ஷம் ஆகிறார்கள். உங்கள் அனைவரின் 84 ஜென்மங்களின் கதையும் பிரத்யக்ஷம் ஆகிறது. உயர்ந்த ஞானமும் பிரத்யக்ஷம் ஆகிறது. இந்த காரணத்தினால் தான் பிரத்யக்ஷ பலன் கிடைக்கிறது. பிரத்யக்ஷ பலனின் அனுபவம் செய்கிறீர்களா? பிரத்யக்ஷ பலன் பிராப்தியாகும் நேரத்தில் எதிர்கால பலனைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவை எந்த விதமான ஆத்மா என்று கூறலாம்? அந்த மாதிரியான ஆத்மாவை மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் என்று

கூறுவோமா அல்லது இதுவும் ஒரு அஞ்ஞானமா? எந்த விதமான அஞ்ஞானமாக இருந்தாலும் அதை அஞ்ஞான தூக்கம் என்று கூறுகிறார்கள். ஏதேனும் அஞ்ஞானத் தூக்கத்தில் தூங்கிக் கொண்டு இருக்கவில்லை தானே என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள்.

எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக ஆகியிருக்கிறீர்களா? எரிவதின் அடையாளம் எரிவது என்றால் அடைவது. அப்படியானால் அனைத்து பிராப்தியை செய்யக்கூடிய எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக ஆவதற்காக முக்கியமாக எந்த தாரணை இருக்கிறது என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? அது சாகார பாபாவிடம் விசேஷமாக இருந்தது அதைக் கூறுங்கள். சாகார பாபாவில் விசேஷ தாரணையாக என்ன இருந்தது? எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக ஆவதற்காக களைப்பற்றவராக இருப்பதின் முக்கிய தாரணை தேவையாக இருக்கிறது. களைப்பு ஏற்படுகிறது என்றால் தூக்கம் வருகிறது. சாகார பாபாவின் களைப்பற்ற நிலையின் விசேஷத்தை எப்பொழுதும் அனுபவம் செய்தீர்கள். அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி நடக்கக்கூடியவர்கள், எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக ஆகிறார்கள். நடைமுறையில் ஏதாவது ஒருவித களைப்பு அஞ்ஞான தூக்கத்தில் தூங்க வைத்து விடவில்லையே என்று இதையும் சோதனை செய்யுங்கள். எனவே சென்ற கல்பத்தின் நினைவுச் சின்னத்திலும் தூக்கத்தை வெல்வதின் விசேஷ குணம் வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. அனேக விதமான தூக்கத்திலிருந்து விடுபட்டு தூக்கத்தை வென்றவர் ஆகுங்கள். எந்த விதமான தூக்கம், தன்னை தூக்கத்தை வென்றவர் ஆக விடுவதில்லை என்ற இந்த பட்டியலையும் எடுங்கள். எப்படி தூக்கத்தில் செல்வதற்கு முன்பு தூக்கத்தின் அடையாளங்கள் தென்டுகிறது, அந்த தூக்கத்தின் அடையாளம் கொட்டாவி மேலும் அஞ்ஞான தூக்கத்தின் அடையாளம் சோர்வு இந்த விதமாக அடையாளங்களையும் எடுங்கள். இதன் இரண்டு முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று சோம்பேறித்தனம், இன்னொன்று அலட்சியம். முதலில் இந்த அடையாளங்கள் வருகின்றன. பின்பு தூக்கத்தின் போதை ஏறுகிறது. எனவே இதன் மேல் நன்றாக சோதனை செய்யுங்கள். சோதனையின் கூடவே மாற்றமும் செய்ய

வேண்டும். சோதனை மட்டும் செய்ய வேண்டாம். சோதனை மற்றும் மாற்றத்தின் இரண்டையும் செய்ய வேண்டும். புரிந்ததா?

நல்லது. அந்த மாதிரி தன்னுடைய மாற்றம் மூலமாக உலகை மாற்றம் செய்யக்கூடிய, தந்தைக்குச் சமமான எப்பொழுதும் களைப்பற்ற, ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் செயலில் பிரத்யக்ஷ பலனை அனுபவம் செய்யக்கூடிய, அனைத்து பிராப்தி சொரூப விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.
❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக மாற்றம் தான் பிராமண வாழ்க்கையின் முக்கியமான கடமை ஆகும்!

உலகத்தைப் படைப்பவர் தந்தை இன்று தன்னுடைய சகயோகி, உலகமாற்றம் செய்யும் உயர்ந்த ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி தந்தை உலகை மாற்றுவதற்காக பொறுப்பில் இருக்கிறாரோ அது போலவே நீங்கள் அனைவரும் தன்னை இதே காரியத்திற்குப் பொறுப்பாளர் என்று நினைத்து எப்பொழுதும் நடந்து கொள்கிறீர்களா? நான் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்ற இந்த நினைவு எப்பொழுதுமே நிலைத்திருக்கிறதா? உலகை மாற்றம் செய்பவர்கள் முதலில் தன்னை மாற்றம் செய்கிறார்கள். யார் தன்னை ஏதாவது விஷயத்தில் மாற்றிக் கொள்ள முடியவில்லையோ அவர் உலக மாற்றத்தின் காரியம் செய்வதற்காக பொறுப்பாளராக எப்படி ஆக முடியும்? இப்பொழுது ஒரு நொடியில் தன்னுடைய நினைவை மாற்றம் செய்து விடுங்கள். அதாவது தன்னை உடல் அல்ல ஆத்மாவின் சொரூபத்தில் நிலைத்திருந்து பாருங்கள் என்று பாப்தாதா டைரக்ஷன் கொடுக்கிறார் என்றால்

1) தன்னுடைய நினைவை ஒரு நொடியில் மாற்றம் செய்ய முடியுமா?

2) தன்னுடைய உள்உணர்வை ஒரு நொடியில் மாற்றம் செய்ய முடியுமா?

3) தன்னுடைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தை ஒரு நொடியில் மாற்றம் செய்ய முடியுமா?

4) தன்னுடைய ஆத்மாவின் எந்தவிதமான தொடர்புகளையும் (நெருக்கத்தை) ஒரு நொடியில் மாற்றம் செய்ய முடியுமா?

5) தன்னுடைய எண்ணத்தை வீணானதிலிருந்து சக்தி நிறைந்ததாக ஒரு நொடியில் மாற்றம் செய்ய முடியுமா?

6) தன்னுடைய முயற்சி செய்யும் வேகத்தை ஒரு நொடியில் சாதாரணத்திலிருந்து தீவிரமானதாக ஆக்க முடியுமா?

7) தன்னை ஒரு நொடியில் பௌதீக உலகத்திலிருந்து விலக்கிச் சென்று நிராகார பரந்தாமவாசியாக ஆக்க முடியுமா?

இதைத் தான் பரிவர்த்தனை சக்தி என்று கூறுவது. சங்கமயுகத்தில் முக்கியமான விஷயமே பரிவர்த்தனைக்கானது ஆகும். எப்படி மற்ற சக்திகளை தன்னுள் சோதனை செய்கிறீர்களோ அதே போலவே பரிவர்த்தனை செய்யும் சக்தி மேலே கூறிய அனைத்து விஷயங்களிலும் எவ்வளவு வந்திருக்கிறது என்ற இதை சோதனை செய்கிறீர்களா? முயற்சி செய்வதில் தடை ரூபம் இன்னும் வருகிறது என்றால், பரிவர்த்தனை சக்தியின் குறை உள்ளது.

அனைத்து பிராப்திகளின் ஆதாரம் பரிவர்த்தனை சக்தி ஆகும். தன்னை பரிவர்த்தனை செய்ய முடியாத காரணத்தினால் எவ்வளவு உயர்ந்த லட்சியத்தை வைக்கிறீர்களோ அந்த லட்சியத்தை பிராப்தி செய்ய முடிவதில்லை. பரிவர்த்தனை செய்யும் சக்தி இல்லாத காரணத்தினால் விரும்பிய போதும், சாதனத்தை உபயோகித்த போதும் உயர்ந்த தொடர்பை ஏற்படுத்திய போதும், சக்திக்கேற்றபடி நியமங்களின்படி நடந்து கொண்ட போதிலும், மேலும் தன்னை பிராமணன் என்று கூறிக் கொள்ளும்போதிலும் தன் மேலேயே தான் திருப்தியாக இல்லை. ஒரு பரிவர்த்தனை செய்யும் சக்தி சர்வ சக்திவான் தந்தை மற்றும் அனைத்து உயர்ந்த ஆத்மாக்களின் அருகில் செல்வதற்கான சாதனம் ஆகி விடுகிறது. பரிவர்த்தனை சக்தி இல்லை என்றால் ஒவ்வொரு பிராப்தியிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டு ஒரு ஓரமாக நின்று கொண்டிருப்பதாக தன்னை எப்பொழுதும் அனுபவம் செய்வீர்கள். அனைத்து விஷயங்களையும் தூரத்திலிருந்து பார்ப்பவராக மற்றும் கேட்பவராக தன்னை அனுபவம் செய்வீர்கள். எப்பொழுதும் அன்பு, சகயோகம் மற்றும் சக்தியின் அனுபவம் செய்வதின் தாகம் உள்ளவராக இருப்பீர்கள். தனக்காக அனேக விதமான ஆசைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பங்களின் விஸ்தாரம் புயலுக்குச் சமமாக வந்து கொண்டே இருக்கும். இந்தப் புயலின் காரணமாக பிராப்தியின் இலக்கு எப்பொழுதும் தூரத்திலிருப்பதாகத் தென்படும்.

இன்று அந்த மாதிரி உலகை மாற்றம் செய்யும் குழந்தைகளின் காட்சியைப் பார்த்தோம். பௌதீக உலகத்தில் தண்ணீரின் புயல்

வந்திருக்கிறது, அதனுடைய காட்சிகளைக் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். கேட்டு மகிழ்ச்சி வருகிறதா அல்லது இரக்கம் வருகிறதா அல்லது பயமும் வருகிறதா? என்ன ஆகிறது? சில நேரம் பயம் ஏற்படுகிறதா, சில நேரம் இரக்கம் வருகிறதா? பாண்டவர்களுக்கு பயம் ஏற்படுகிறதா? இரக்கம் வருகிறதா அல்லது மகிழ்ச்சி வருகிறதா? பயமோ இருக்கக்கூடாது. அந்த நேரத்தில் நான் பெண் என்ற இந்த எண்ணம் வருவது கூடத் தவறாகும். தன்னை ஒருபொழுதும் தனியாக இருப்பதாக நினைக்கவே கூடாது. தன்னுடைய இணைந்த ரூபம் சிவசக்தியின் ரூபத்தின் நிலையில் இருக்க வேண்டும். சக்தி என்று மட்டுமில்லாமல், சிவசக்தி என்று இருக்க வேண்டும். இணைந்த ரூபத்தின் நிலை மூலமாக எப்படி ஸ்தூலமாக இருவரைப் பார்த்து தாக்குவதற்காக தயக்கம் ஏற்படும். அதே போலவே இணைந்த நிலையின் பிரபாவம் அந்த நேரத்து இயற்கை மற்றும் நபரின் மேல் ஏற்படும். அதாவது ஏதேனும் தாக்குதல் செய்வதில் தயக்கம் ஏற்படும். நபர் மட்டுமல்லாமல், இயற்கையின் தத்துவமும் தயக்கம் காட்டும் அதாவது அதுவும் தாக்குதல் செய்ய முடியாது. ஒரு அடியின் தூரத்தில் கூட பாதுகாப்பாக இருந்து விடுவீர்கள். ஆயுதங்கள் இருந்த போதிலும், ஆயுதம் சக்திசாலியானதாக இருந்த போதிலும் அவர்கள் பலமற்றவர்களாக ஆகி விடுவார்கள் ஆனால் அந்த நேரம் ஒரு நொடியில் நான் தனியாக இல்லை, நான் பெண் அல்ல, சிவசக்தியாக இருக்கிறேன். மேலும் இணைந்த ரூபத்தில் இருக்கிறேன் என்று பரிவர்த்தனை செய்யும் சக்தியை உபயோகப்படுத்துங்கள். இதிலேயும் பரிவர்த்தனை சக்தி தேவை தான் இல்லையா? தன்னுடைய சக்திசாலியான நினைவு மற்றும் உள்உணர்வினால் நபர்களை மற்றும் இயற்கையை பரிவர்த்தனை செய்து விட வேண்டும். இப்பொழுதோ இது இரண்டாவது, மூன்றாவது கணக்கு அல்லது இரண்டாவது மூன்றாவது. வகுப்பின் பரீட்சை ஆகும். கடைசி பரீட்சையின் வடிவமோ இதைவிட பல மடங்கு பயங்கரமான ரூபத்தில் இருக்கும். பின்பு என்ன செய்வீர்கள்? என்ன அது என்று அனேகருக்கு எண்ணம் எழுகிறது. சிலர் அன்பு மற்றும் உரிமையில் கூறுகிறார்கள். இந்தக் காட்சிக்கு முன்பாகவே எங்களை அழைத்து விடுங்கள், நாங்களும் வதனத்திலிருந்து பார்ப்போம் என்று கூறுகிறார்கள் ஆனால் சக்தி சொரூபத்தின் நடைமுறை பங்கு மற்றும் சக்தி அவதாரத்தின் பிரத்யக்ஷத்தின் பங்கு, தன் மூலமாக சர்வ சக்திவான் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான பங்கு அந்த மாதிரி

சூழ்நிலையில் தான் ஏற்படும். எனவே அந்த மாதிரியான காட்சிகளை, அகால மரணங்களின் ஒலங்களைப் பார்ப்பது மற்றும் கேட்பதற்காக பரிவர்த்தனை சக்தியை அதிகரியுங்கள். ஒரு நொடியில் பரிவர்த்தனை செய்யுங்கள், ஏனென்றால் காட்சியே ஒரு நொடியின் ஆதாரத்தில் தான் இருக்கும்.

அந்த மாதிரி நேரத்தில் ஒரு பக்கம் ஒன்றும் புதிதல்ல என்ற பாடத்தின் நினைவு இருக்க வேண்டும். அதன் மூலம் எவ்வளவு அதிக வேட்டையாடப்பட்டதோ அவ்வளவு அதிகமான குஷி வேட்டைக்காரனுக்கு இருக்கும் என்ற அந்த மாதிரியான நிலை இருக்கும் என்றால் சாட்சியாக இருக்கும் நிலை அதாவது பார்ப்பதில் மகிழ்ச்சியும் வரும். மேலும் கூடவே உலக நன்மை செய்பவரின் நிலை எதில் இரக்கமும் இருக்கும். இரண்டின் அதாவது சாட்சியாக இருக்கும் நிலை மற்றும் உலக நன்மை செய்பவரின் நிலை சமமாக இருக்க வேண்டும். புரிந்ததா? இது என்ன நடந்தது அது சாகார உலகத்தின் செய்தி, ஆகார உலகத்தின் செய்தி என்னவென்றால் பரிவர்த்தனை சக்தியின் குறையின் காரணமாக அனேக் விதமான விருப்பங்களின் புயல் என்ன தென்படுகிறதோ அதனுள் பெரும்பாண்மையான குழந்தைகள் வரிசைக்கிரமமாக தென்படுகிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அவர்களுடைய கூக்குரல் என்னவாக ஒலிக்கிறது? நாங்கள் விரும்புகிறோம், பின்பு ஏன் நடப்பதில்லை? இது நடக்க வேண்டும் ஆனால் டப்பதில்லை, மிகுந்த முயற்சியும் செய்தாகி விட்டது. அந்த மாதிரி அனேக விதமான மனதின் ஓசை நட காதில் விழுகிறது. எனவே இந்தப் புயலை அகற்றுவதற்கான சாதனம் பரிவர்த்தனை சக்தியை அதிகரித்தீர்கள் என்றால் பிரத்யக்ஷ பலனின் பிராப்தி செய்ய முடியும். எப்பொழுதும் இதை நினைவில் வையுங்கள் நான் தந்தையின் சகயோகி, உலகை மாற்றம் செய்பவன், நான் உலகை மாற்றம் செய்பவனாகத் தான் இருக்கிறேன். பரிவர்த்தனை செய்வது தான் என்னுடைய காரியம் ஆகும். அதாவது இந்தக் காரியத்திற்காகத் தான் பிராமண வாழ்க்கை கிடைத்திருக்கிறது எனவே தன்னுடைய உண்மையான காரியத்தை நினைவில் வைத்துக் கொண்டே நடந்து கொள்ளுங்கள். நல்லது. அந்த மாதிரி ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு நொடி தந்தையுடன் இருக்கும் சகயோகி ஆத்மாக்களுக்கு, இயற்கை மற்றும் சூழ்நிலை மற்றும் நபர்களை பரிவர்த்தனை செய்யக்கூடிய, எப்பொழுதும் தந்தைக்குச் சமமான,

# 1975 அவ்யக்த முரளி

மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற சுயகௌரவத்தில் நிலைத்திருக்கக்கூடிய, தனக்காகவும் மற்றும் மற்றவர்களுக்காகவும் எப்பொழுதும் நன்மை பயக்கும் பாவனை வைக்கக்கூடிய, அந்த மாதிரி உலக நன்மை செய்யும், உலக மாற்றம் செய்யும் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: டிரஸ்டி நிலையின் நினைவு மூலம் பொறுப்பில் இருப்பவன் என்று புரிந்து கொண்டு, ஒவ்வொரு காரியத்தையும் செய்யக்கூடிய டபுள் லைட் ஆகுக!**

பொறுப்பில் இருப்பவன் என்ற உணர்வு சுமையை சுலபமாக அகற்றிவிடும். என்னுடைய பொறுப்பு, நான் தான் கவனிக்க வேண்டும், நான் தான் யோசிக்க வேண்டும் என்றால் சுமை ஏற்படுகிறது. பொறுப்பு தந்தையினுடையது. மேலும் தந்தை டிரஸ்டி அதாவது பொறுப்பில் இருப்பவர் (கருவி) ஆக ஆக்கியிருக்கிறார் என்ற இந்த நினைவினால் டபுள் லைட் ஆகி பறக்கும் கலையின் அனுபவம் செய்து கொண்டே இருங்கள். எங்கு என்னுடையது என்பது இருக்கிறதோ அங்கு சுமை இருக்கும் எனவே எப்பொழுதாவது எந்தக் காரியத்திலாவது சுமையை உணருகிறீர்கள் என்றால், எங்காவது உன்னுடையது என்பதற்குப் பதிலாக என்னுடையது என்று சொல்லவில்லை தானே என்பதை சோதனை செய்யுங்கள்.

**சுலோகன்: ஒவ்வொரு வார்த்தையிலும் ஆத்மீக உணர்வு மற்றும் சுபபாவனை இருக்கிறது என்றால் ஒரு வார்த்தை கூட வீணாகச் செல்ல முடியாது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 14.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அழியாத ஆசனதாரி மற்றும் மகாகாலனாகி ஒருங்கிணைந்து தயாராகும் சக்தியை உபயோகப்படுத்துங்கள்!

தன்னை ஒவ்வொரு சூழ்நிலையையும் கடந்து செல்லும் சக்திசாலியான நிலையில் அனுபவம் செய்கிறீர்களா? சக்திசாலியான சூழ்நிலைகளை மாஸ்டர் சர்வ சக்திவான் நிலை உள்ளவர்கள் தான் சுலபமாகக் கடந்து செல்ல முடியும். வரக்கூடிய ஒவ்வொரு நாளிலும் இயற்கை மூலமாக விக்ரால் (பயங்கரமான) ரூபத்தின் சூழ்நிலைகள் தென்பட்டுக் கொண்டே இருக்கும். இதுவரையிலும் இருப்பவை சாதாரண சூழ்நிலைகளே ஆகும். விக்ரால் ரூபத்தை இயற்கை இனிமேல்தான் எடுக்கும் அதில் விசேஷமாக ஆபத்துக்களின் தாக்குதல் திடீரென்று தான் இருக்கும். இப்பொழுதோ கொஞ்ச நேரத்திற்கு முன்பு தெரிய வந்து விடுகிறது ஆனால் இயற்கையின் அதிபயங்கர ரூபமாக என்ன இருக்கும்? ஒரே நேரத்தில் இயற்கையின் அனைத்து தத்துவங்களும் ஒன்றாகச் சேர்ந்து மேலும் திடீரென்று தாக்குதல் செய்யும். எந்தவிதமான இயற்கையின் சாதனமும் காப்பாற்றுவதற்கு உதவ முடியாது. சாதனம் இன்னும் அதிகப் பிரச்சனையின் ரூபமாக ஆகி விடும். அந்த மாதிரி நேரத்தில் இயற்கையின் விக்ரால் ரூபத்தை எதிர்கொள்வதற்காக எந்த விஷயத்தின் அவசியம் இருக்கும்? தன்னுடைய அகாலதக்த் நஷீன் (அழியாத ஆசனதாரி), அகாலமூர்த் (அழியாத ஆத்மா) ஆவதினால் மஹாகாலன் தந்தையின் கூடவே மாஸ்டர் மஹாகாலன் சொரூபத்தில் நிலைத்திருந்தீர்கள் என்றால் தான் எதிர்கொள்ள முடியும். மஹா விநாஷத்தைப் பார்ப்பதற்காக மாஸ்டர் மஹாகாலன் ஆக வேண்டியதாக இருக்கும். மாஸ்டர் மஹாகாலன் ஆவதற்கான சுலபமான விதி எது? அகாலமூர்த் ஆவதற்கான விதி -

ஒவ்வொரு நேரமும் அகாலதக்த் நஷீன் ஆக (அழியாத ஆசனதாரியாக) இருப்பது. கொஞ்சமாவது தேக உணர்வு இருக்கும் என்றால் அகாலமரணத்திற்குச் சமமாக திடீரென்ற தாக்குதலில் தோல்வி ஏற்பட்டு விடும்.

எப்படி இயற்கையின் ஐந்து தத்துவங்கள் விக்ரால் ரூபத்தை எடுக்கும். அதே போலவே ஐந்து விகாரங்களும் தன்னுடைய சக்திசாலியான ரூபத்தை எடுத்து கடைசி தாக்குதலை மிக சூட்சும ரூபத்தில் முயற்சி செய்யும். அதாவது மாயா மற்றும் இயற்கை இரண்டுமே தன்னுடைய முழு சக்தியுடன் கடைசி முயற்சியை செய்யும். எப்படி ஏதாவது ஸ்தூலமான யுத்தத்தில் கூட கடைசிக் காட்சி பயத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கும், மேலும் தைரியத்தை அதிகரிக்கக்கூடியதாகவும் இருக்கும். அதே போலவே பலஹீன ஆத்மாக்களை பொறுத்தவரை பயத்தை உருவாக்கும் காட்சியாக இருக்கும் மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களுக்காக அது தைரியம் மற்றும் உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய காட்சியாக இருக்கும்.

அந்த மாதிரி நேரத்தில் எப்படிப்பட்ட நிலை இருக்க வேண்டும் என்று மேலே கூறினோமோ அதற்காக விசேஷமாக எந்த சக்தியின் அவசியம் இருக்கும்? ஒரு நொடியில் வெற்றி அல்லது தோல்வி என்ற காட்சியில் எந்த சக்தியின் தேவை இருக்கிறது? அந்த மாதிரி நேரத்தில் சாரத்தில் சக்தியின் அவசியம் இருக்கிறது. யார் தன்னுடைய தேக அபிமானத்தின் எண்ணத்தை, உடல் சம்மந்தப்பட்ட உலகின் சூழ்நிலைகளின் எண்ணத்தை, என்னவாகுமோ என்ற எண்ணம் ஆகிய இந்த குழப்பமான எண்ணத்தையும் சுருக்கத்தில் அதாவது சாரமாக ஆக்க வேண்டும். உடல் மற்றும் உடலின் அனைத்து நெருக்கத்தில் உள்ள பொருட்களையும் மற்றும் தன்னுடைய தேவைக்கான சாதனங்கள் கிடைக்க வேண்டுமே என்ற எண்ணத்தையும் உள்ளடக்க வேண்டும். வீடு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு எந்த எண்ணத்தின் விஸ்தாரமும் இருக்க வேண்டாம், நான் இப்பொழுது வீடு செல்கிறேன் என்ற இந்த எண்ணம் மட்டும் இருக்கட்டும். உடலின் எந்த சம்மந்தமும் மற்றும் நெருக்கமும் கீழே கொண்டு வந்து விட வேண்டாம். எப்படி இந்த நேரம் சாட்சாத்காரத்தில் செல்பவர்கள், சாட்சாத்காரத்தின் ஆதாரத்தினால் நான் ஆத்மா இந்த ஆகாய தத்துவத்தையும் கடந்து பறந்து சென்று

கொண்டிருக்கிறேன் என்று அனுபவம் செய்கிறார்கள், அதே போலவே ஞானி மற்றும் யோகி ஆத்மாக்கள் அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். அந்த நேரம் டிரான்ஸில் செல்வதற்கான உதவி கிடைக்காது. ஞானம் மற்றும் யோகத்தின் ஆதாரம் தேவையாக இருக்கும். இதற்காக இப்பொழுதிலிருந்தே அகால தக்த் நஷீன் ஆவதற்கான பயிற்சி தேவையாக இருக்கிறது. எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அசரீரி நிலையின் அனுபவம் செய்ய முடிய வேண்டும், புத்தி யோகத்தின் மூலமாக எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது உடலின் ஆதாரத்தில் வர வேண்டும். "அசரீரி ஆகுக" என்ற வரதானத்தை தன்னுடைய காரியத்தில் இப்பொழுது ஈடுபடுத்துங்கள்.

அந்த மாதிரி நேரத்தில் எப்படி ஸ்ரீமத்தை பெறுவீர்கள்? டெலிபோன் மூலமாகவா அல்லது டெலிகிராம் மூலமாகவா? அல்லது வயர்லஸ் செட் மூலமாகவா? தேவையோ வயர்லஸ் தான் ஆனால் செட் (சரியான இயக்கத்தில்) இருக்கிறதா? வயர்லஸின் செட்டிங் எப்படி இருக்கும்? முற்றிலும் வைஸ்லஸ் அதாவது பாவமற்ற நிலை ஆவது தான் வயர்லஸ் செட்டின் செட்டிங் ஆகும். கொஞ்ச அளவு அம்சத்தின் அம்சம் மாத்திரமான விகாரம் கூட வயர்லஸ் செட்டை உபயோகமற்றதாக ஆக்கி விடும். எனவே நுண்ணிய ரூபத்தில் தன்னுடைய சோதனையாளராக தானே ஆகுங்கள் அப்பொழுது தான் இயற்கை மற்றும் ஐந்து விகாரங்களின் இறுதி விடைபெறுவதின் தாக்குதலில் வெற்றியாளராகி எதிர்கொள்ள முடியும். இதே இயற்கை தாக்குவதற்குப் பதிலாக பாராட்டு தெரிவிக்கும் காட்சிகளை எதிரில் கொண்டு வரும். நாலாபுறங்களிலும் வெற்றி முழக்கத்தின் மங்கள இசை ஒலிக்கும். மேலும் பாப்தாதாவின் வெற்றி மாலையின் மணிகள் உலகின் நடுவே பிரசித்தி ஆவார்கள். முழு உலகமும் "அமர் பவ" என்ற கோஷம் எழுப்பும். அந்த மாதிரியான நேரத்திற்காக தயாராக இருக்கிறீர்களா? நேரம் உங்களை தயார் செய்யுமா அல்லது நீங்கள் நேரத்தை வரவழைப்பீர்களா? சரியான நேரத்தில் விழித்தெழுபவர்களுக்கு என்ன பட்டம் கொடுக்கலாம்? ஒருவேளை சரியான நேரத்தில் எழுவீர்களா அல்லது நேரம் தயார் செய்து விடும் என்று யோசிப்பீர்களா அல்லது சமயம் வரும்போது ஆகி விடும் என்று நினைத்தீர்கள் என்றால், பிராமண வம்சத்திற்குப் பதிலாக சத்திரிய வம்சத்தினர் ஆகி விடுவீர்கள் எனவே இந்த ஆதாரத்தையும் எடுக்காதீர்கள். புரிந்ததா?

இப்பொழுது என்ன நடக்கும். விநாஷம் ஆகுமா அல்லது ஆகாதா என்று கேள்வி கேட்கிறார்கள்? விநாஷ ஜுவாலையை வெளிப்படுத்தக்கூடியவர்கள் இந்த குழப்பத்தில் இருந்தார்கள் என்றால், விநாஷத்தை நடத்த பொறுப்பாளர் ஆகியிருக்கும் அந்த விநாஷம் செய்யும் ஆத்மாக்கள் (அறிவியலார்) உருவாக்கியிருக்கும் திட்டத்திலும் குழப்பம் ஏற்பட்டு விடும். தார்மீகப் பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் ஆகுமா அல்லது ஆகாதா, இப்பொழுது ஆகுமா அல்லது எப்பொழுது ஆகும் என்று யோசிக்கிறார்கள் என்றால். அதே போலவே விநாஷம் செய்யும் ஆத்மாக்கள் இப்பொழுது செய்யலாமா அல்லது எப்பொழுது செய்யலாம், செய்யலாமா அல்லது செய்ய வேண்டாமா என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள். எப்படி நினைவுச் சின்ன ரூபத்தில் கலியுக மலையைத் தூக்குவதற்கு ஒரு விரல் கொடுக்க வேண்டும், அது போலவே விநாஷம் செய்விப்பதற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் அனைத்து ஆத்மாக்களின் உள்மனதில் இது நடந்து தான் ஆகும் என்ற எண்ணம் உறுதியாக இருக்கட்டும். இந்த எண்ணம் என்ற விரல் எல்லோருடையதும் ஒன்றாக எதுவரை இல்லையோ அதுவரை விநாஷ காரியம் நின்று கொண்டிருக்கிறது. இந்த விரல் மூலமாகத் தான் கலியுக மலை அழிய வேண்டும். நல்லது.

அந்த மாதிரி விக்ரால் ரூபத்தை மாஸ்டர் மஹாகாலன் நிலை மூலம் எதிர்கொள்ளக்கூடிய, எப்பொழுதும் அகால தக்த் நஷீன், இயற்கையை அடிமையாக்கக்கூடிய, தந்தையின் அனைத்து பிராப்திகளின் அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாயாவின் சுழல்களிலிருந்து விலகியிருந்து, சுயதரின சக்கரதாரியானவர் தான் எதிர்காலத்தில் வெண் கொற்றக் கொடையுடையவர் (ராஜா) ஆகிறார்!

இன்று பாப்தாதா அனைத்து பிராமண குழந்தைகளின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டை யும் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் சுயதரிசன சக்கரதாரியாக இருப்பவர்கள் சத்தரதாரிகளாக (குடைபிடிக்கப்படும் ராஜாக்களாக) ஆபவர்கள். தற்சமயத்தில் சக்கரதாரி மேலும் எதிர்காலத் தில் சத்தரதாரி. சத்தரதாரியாக இல்லை என்றால் சக்கரதாரியாகவும் இல்லை. எந்தக் குழந்தைகளுக்கு இந்த சங்கமயுகத்தின் மிகக்குறைந்த விலைமதிக்க முடியாத நேரத்தில் நிரந்தரமாக எப்பொழுதும் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறதோ அதாவது அழியாத சக்கரதாரியாக இருக்கிறாரோ அதே ஆத்மாக்கள் தான் சதா காலத்திற்கு சத்தரதாரி ஆக முடியும். சக்கரதாரி ஆகும் குழந்தை எப்பொழுதும் மாயா மேல் அதிகாரம் உள்ளதாக இருக்கும். மாயாவின் அதிகாரி ஆத்மாக்கள் தான் தந்தையின் எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தியின் அதிகாரி ஆகிறார்கள். அதாவது சுயதரிசன சக்கரதாரியாக இருப்பவர் தான் சத்தரதாரியாக ஆகிறார். எப்பொழுதும் சக்கரம் மற்றும் சத்ரம் (குடை) தென்படுகிறதா?

சக்கரதாரி ஆத்மாக்களின் அடையாளங்களாக என்ன தென்படும்? உங்களுடைய அடையாளங் களை நீங்கள் அனைவரும் பார்த்திருக்கிறீர்களா? சக்கரதாரியாக இருப்பவர் இப்பொழுதும் ஒளியின் சத்தரதாரியாக தென்படுவார். சக்கரத்தின் அடையாளமாக ஒளிச்சக்கரம் தென்படும். அந்த மாதிரி சக்கரதாரி எப்பொழுதும் அனேக

விதமான மாயாவின் சுழல்களிலிருந்து விடுபட்டிருப்பார். எப்படி தன்னுடைய தேகத்தின் நினைவின் அனேக வீணான எண்ணங்களின் சுழல்களிலிருந்து, லௌகீக மற்றும் அலௌகீக உறவுகளின் சுழல்களிலிருந்து தன்னுடைய அனேக ஜென்மங்களின் சுபாவ, சம்ஸ்காரங்களின் சுழல்களிலிருந்து மற்றும் இயற்கையின் அனேக விதமான கவர்ந்து ஈர்க்கும் சுழல்களிலிருந்து அவர் எப்பொழுதும் விடுபட்டிருப்பார். சுயதரிசன சக்கரத்தினைத் தவிர அவர் வேறு எந்த சக்கரத்திலும் அதாவது சுழலிலும் வர முடியாது. மற்ற ஆத்மாக்களையும் தந்தையிடமிருந்து பிராப்தியாகியிருக்கும் சக்திகளின் மூலமாக அனேக சுழல்களிலிருந்து அதாவது பிரச்சனைகளிலிருந்து சுலபமாக விடுவித்து விடுவார்.

மாயாவின் அனேக விதமான சுழல்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? சக்கரதாரி ஆத்மா ஒளிகிரீடம் அணிந்திருப்பவராக இருப்பார் மேலும் தந்தையின் ஆஸ்தியின் அதிகாரியாக இருப்பார் அதே போல் அனேக விதமான சுழல்களில் வருபவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? எப்படி அவர்களின் தலையில் ஒளியின் கிரீடம் இருக்கிறது. அதே போல் இவர்களின் தலை மேல், கிரீடம் அல்ல, அனேக விதமான தடைகளின் சுமை இருக்கும். எப்பொழுதும் ஏதாவது விதமான சுமை அவர்கள் தலை மேல் அதாவது புத்தியில் உணரப்படும். அந்த மாதிரியான ஆத்மா எப்பொழுதும் கடனாளியாக மற்றும் சுமை உள்ளவராக இருப்பார். அவருடைய நெற்றியில், முகத்தில் எப்பொழுதும் கேள்விக்குறி இருக்கும். ஒவ்வொரு விஷயத்திலும் ஏன், என்ன மற்றும் எப்படி என்ற கேள்வி இருக்கும். ஒரு விநாடி கூட புத்தி ஒருநிலைப்பட்டதாக அதாவது முற்றுப்புள்ளியில் இருக்காது. முற்றுப்புள்ளியின் அடையாளம் புள்ளி இருக்கும். அதாவது எண்ணத்திலும் புள்ளி சொரூபத்தின் நிலை இருக்காது. சொல் மற்றும் செயலிலும் கடந்தது கடந்ததாகி விட்டது. ஒன்றும் புதிதல்ல, என்ன நடக்கிறதோ அது நன்மைக்கே என்று அந்த மாதிரி முற்றுப்புள்ளி அதாவது புள்ளி வைக்கத் தெரியாது. கேள்விக்குறி பார்ப்பதற்கு வளைந்து நெளிந்திருப்பதாகத் தென்படும். புள்ளி வைப்பது சுலபமாகும், புள்ளி வைப்பதை விட கேள்விக்குறி எழுதுவது கொஞ்சம் கடினமாக இருக்கும். அப்படி தன் மேலேயோ. மற்றவர்களிடமோ அல்லது

தந்தையிடமோ அனேக கேள்விகளை எழுப்பும் இந்த அடையாளம் உள்ள ஆத்மா சுயதரிசன சக்கரதாரியிலிருந்து சத்தரதாரியாக ஆகுபவர் அல்ல.

அந்த மாதிரியான ஆத்மா ஒவ்வொரு எண்ணத்திலும் எப்பொழுதும் நான் வெற்றி அடைபவனாக ஆக முடியுமா என்று எப்பொழுதும் தன்னிடமே கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பார். நான் அனைவரின் ருக்கத்தில் வெற்றி அடைந்து நெருக்கமான ஆத்மாவாக ஆவேனா? நான் அனைவரின் சுபாவ சம்ஸ்காரங்களினிடையே இருக்க முடியுமா? அனைவரையும் திருப்திப்படுத்த முடியுமா? அந்த மாதிரி அனேக விதமான கேள்விகள் தனக்காகவும் இருக்கும் மற்றும் மற்றவர்களுக்காகவும் இருக்கும். இவர் என்னோடு ஏன் இப்படி நடந்து கொள்கிறார், எனக்கு விசேஷமாக சகயோகம் ஏன் கிடைப்பதில்லை, என்னுடைய பெயர், மரியாதை ஏன் ஏற்படுவதில்லை? இந்த விதமாக மற்றவர்களுக்காக கேள்விகள் இருக்கும். அதே போலவே தந்தைக்காகவும் கேள்விகள் இருக்கும். எப்பொழுது தந்தை சர்வ சக்தி வானாக இருக்கிறார் என்றால் என்னுடைய புத்தியை ஏன் திருப்பவில்லை? பார்வையாலேயே நன்மை செய்யக்கூடியவர் என் பக்கம் ஏன் பார்வையை வைக்கவில்லை? தந்தையாக இருக்கிறார் என்றால் நான் எப்படி இருந்தாலும், என்னவாக இருந்தாலும் அவருடையவள் தான். என்னை கரை சேர்ப்பது அவருடைய பொறுப்பு - அவர் வள்ளலாக இருக்கிறார் என்றால் நான் என்ன விரும்புகிறேனோ அதை ஏன் கொடுப்பதில்லை? திரிகாலதரிசியாக இருக்கிறார். என்னுடைய மூன்று காலங்களையும் தெரிந்திருக்கிறார் என்றால் அவரே தன்னுடைய சக்தி மூலம் எனக்கு உயர்ந்த பதவியை ஏன் கொடுப்பதில்லை? அந்த மாதிரி இனிமையான புகார்களை தந்தையின் எதிரில் வைக்கிறார்கள். ஒரு பக்கம் பல ஜென்மங்களின் சுமை, இன்னொரு பக்கம் தந்தையின் குழந்தையாக ஆன காரணத்தினால், தந்தை மூலமாக பிராப்தி ஆகியிருக்கும் அனைத்து அதிகார உரிமைகளின் பிரதிபலனை திரும்ப கொடுப்பதற்கான கடமையை செய்யாத காரணத்தினால் அதாவது தன்னுடைய கடமையை சரிவர செய்யாத காரணத்தினால் அது கடனாகி விடுகிறது. கடனின் சுமை ஆத்மாவின் அனைத்து பலஹீனங் களின் சுமையின் ரூபத்தை எடுத்துக் கொள்கிறது. அந்த மாதிரி இரட்டை சுமையுள்ளவர்கள் சுயதரிசன சக்கரதாரியாக எப்படி ஆக முடியும்?

ஒன்று சக்கரதாரி, இன்னொன்று சுமைதாரி. அந்த மாதிரி சுமையுள்ள ஆத்மாக்கள் இரட்டை ஒளி உள்ளவர்களாக எப்படி ஆக முடியும்? எனவே அவர்களிடமிருந்து அனுபவம் ஆவதில்லை என்ற வார்த்தைகள் தான் அடிக்கடி வெளியாகிறது. கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இந்த வாழ்க்கையில் இருந்து கொண்டும் இருக்கிறார்கள், ஆனால் பிராப்தியின் லட்சியம் பார்வையில் தென்படு வதில்லை. மிகவும் கடினமானது என்று அந்த மாதிரியான வார்த்தையை தந்தை கேட்டு மேலும் அந்த மாதிரியான குழந்தைகளை பார்க்கிறார் என்றால் தந்தை என்ன செய்ய முடியும்? புன்முறுவலிட்டுக் கொள்வார். வேறு என்ன செய்ய முடியும். இருந்தாலும் இரக்க மனமுடைய தந்தையின் உறவின் காரணத்தினால் நீங்கள் குழந்தைகள் தான் அனேக தடவைகள் வெற்றி அடைந்திருக்கிறீர்கள், தைரியம் உங்களுடையது இருக்கிறது என்றால் தந்தையின் உதவி அவசியம் இருக்கும் என்று அடிக்கடி தைரியம் மற்றும் உற்சாகம் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். இருந்தாலும் சென்று கொண்டே இருங்கள், நிற்காதீர்கள். சென்ற கல்பத்தைப் போன்று மீண்டும் வெற்றி அடைபவர்கள் ஆகி விடுவீர்கள். ஒரு நொடியாவது உண்மையான உள்ளத்தோடு, அனைத்து உறவுகளினால் நினைவு செய்தீர்கள் என்றால் அந்த ஒரு நொடியின் சந்திப்பின் அனுபவம் மற்றும் பிராப்தி முழு நாளில் அடிக்கடி அனைத்து பக்கங்களிலிருந்தும் விலக்கி தந்தையின் பக்கம் ஈர்த்துக் கொண்டே இருக்கும். எவ்வளவு தான் பலமற்றவராக இருந்தாலும் ஒரு விநாடியின் நினைவு இந்த அளவாவது செய்ய முடியும். அந்த மாதிரி பலமற்ற ஆத்மாக்களுக்கு ஒரு நொடிக்கான நினைவு வைத்ததின் தைரியத்தின் பிரதிபலனாக தந்தை ஆயிரம் மடங்கு உதவியாளர் ஆவார். இதை விட சுலபமானதாக வேறு என்ன செய்ய முடியும். அல்லது உங்களுக்காக யோகாவையும் தந்தையே செய்ய வேண்டுமா? மிகவும் மென்மையான குழந்தைகள் இல்லையா? மென்மையானகுழந்தைகள் தந்தையிடமும் இந்த மாதிரி மென்மைக் காரியங்கள் செய்கிறார்கள், எனவே மென்மை நிறைந்தவர்களாக ஆகாதீர்கள் ஆனால் ரகசியம் அறிந்து நடந்து கொள்பவர்களாக, யுக்தி தெரிந்து நடந்து கொள்பவர்களாக ஆகுங்கள். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி சக்கரதாரியிலிருந்து சத்தரதாரி ஆகும், தன்னை மற்றும் அனைவரையும் பலமற்ற நிலையிலிருந்து மிகப் பெரிய பலம்

பொருந்தியவர்களாக ஆக்கக்கூடிய, அனைத்து பலஹீனங்களையும் ஒரு நொடியின் எண்ணத்தில் பலி கொடுக்கக்கூடிய, அந்த மாதிரி மஹாபலி கொடுக்கக்கூடிய மஹாபலம் பொருந்திய அதாவது மாஸ்டர் அனைத்து சக்திகளை ஆயுதத்திற்குச் சமமாக காரியத்தில் கொண்டு வரக்கூடிய அந்த மாதிரி கர்மயோகி, சகஜயோகி ஆத்மாக்களுக்காக பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: உலகிலிருந்து இருளை விலக்கி வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடிய மாஸ்டர் ஞானசூரியன் ஆகுக!**

யார் உலகிலிருந்து இருளை நீக்கி வெளிச்சத்தை கொடுப்பவரோ அவர் தான் மாஸ்டர் ஞான சூரியன். அவர் சுயம் தானே பிரகாச சொரூபம், லைட், மைட் ரூபத்தில் இருக்கிறார். மேலும் மற்றவர்களுக்கும் லைட், மைட் கொடுப்பவர், எங்கு எப்பொழுதும் வெளிச்சம் இருக்குமோ அங்கு இருள் இருப்பதற்கான கேள்விக்கே இடம் இருப்பதில்லை, இருள் இருக்க முடியாது. யார் உலகிற்கே வெளிச்சம் கொடுப்பவராக இருப்பாரோ அவர் தானே இருளில் இருக்க முடியாது. சம்பூர்ண தூய்மை என்றால் வெளிச்சம். அவரிடம் இருள் அதாவது விகாரங்களின் அம்சமும் இருக்க முடியாது.

**சுலோகன்: சுபாவம், சம்ஸ்காரம், சம்மந்தம், தொடர்பில் லேசாக இருப்பது தான் அனைவருடன் நெருக்கத்தில வருபவர் ஆவது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 19.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சக்திகள் மற்றும் பாண்டவர்களின் விசேஷங்கள்!

இன்று அமிர்தவேளையில் அனைத்து சேவை நிலையங்களை சுற்றி வந்தோம். அந்த சுற்றி வந்த செய்தியைக் கூறுகிறோம். என்ன பார்த்தோம் ஒவ்வொரு குழந்தைகள் ஆத்மாக்கள் ஆத்மா தங்களுக்கு, ஆறுதல் கொடுப்பதற்காக, சந்திப்பை ஏற்படுத்துவதற்காக, ஆன்மீக உரையாடல் செய்வதற்காக மேலும் தனது உள்ளத்தின் விஷயங்களை திலாராம் (உள்ளத்தில் நிரம்பியிருக்கும்) தந்தையின் எதிரில் வைத்துக் கொண்டே தனக்கு டபுள் லைட்டின் வரதானத்தை கொடுத்துக் கொண்டும் இருந்தார்கள் மற்றும் எடுத்துக் கொண்டும் இருந்தார்கள். சில சில குழந்தைகள் விஷ்வ கல்யாணி (உலகிற்கு நன்மை செய்பவர்) சொரூபத்தில் நிலைத்திருந்து தந்தை மூலமாகக் கிடைத்திருக்கும் அனைத்து சக்திகளின் வரதானம் மற்றும் மகாதானத்தை அனேக ஆத்மாக் களுக்காக கொடுத்துக் கொண்டிருந்தனர். மூன்று விதமான ரிசல்ட்டைப் பார்த்தோம். ஒரு வகையினர் பெறுபவர்களாக, இன்னொரு வகையினர் சந்திப்பை ஏற்படுத்துபவர்களாக மற்றும் மூன்றாவது வகையினர் பெற்று கொடுப்பவர்களாக அதாவது சம்பாதிப்பவர்களாக இருந்தனர். அந்த மாதிரி மூன்று விதமான குழந்தைகளை நாலாபுறங்களிலும் பார்த்தோம்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டே இதற்கு பிறகு இறை மாணவர்களின் ரூபத்தில் பார்த்தோம். ஒவ்வொருவரும் மாணவரின் ரூபத்தில் இறை ஞானத்தை படிப்பதற்காக ஊக்கம் மற்றும் உற்சாகத்தோடு அவரவர்களின் ஆன்மீக பல்கலைகழகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் அனைவரும் அவர்களுடைய படிப்பில் ஈடுபட்டிருந்தனர். ஒவ்வொரு சேவை நிலையத்தின் ஆன்மீக நடவடிக்கைகள் வேறு வேறாக இருந்தது. அதிலேயும் மூன்று விதங்களைப் பார்த்தோம். ஒரு வகையினர்

கேட்பவர்களாக மட்டும் இருந்தனர் அதாவது கேட்டுக் கேட்டு மகிழ்ச்சி அடைபவர்கள், இரண்டாவது வகையினர் கேட்டு தனக்குள் நிரப்புபவர்களாக இருந்தனர் மற்றும் மூன்றாவது விதத்தினர் தந்தைக்குச் சமமாக ஞானம் நிறைந்தவராகி மற்றவர்களையும் ஆக்குபவர்களாக இருந்தார்கள்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டே பிறகு மூன்றாவது நிலையையும் பார்த்தோம் - அது கர்மயோகியின் நிலை. மூன்றாவது நிலையில் என்ன பார்த்தோம்? ஒரு வகையினர் தாமரை மலராகவும், இரண்டாவது வகையினர் ஆன்மீக ரோஜாவாகவும் மற்றும் மூன்றாவது வகையினர் வகை வகையான மலர்களாக இருந்தார்கள். அந்த வகை வகையான மலர்களிலும் அதிகமானவர்கள் சூரியகாந்தி மலர்களாக இருந்தார்கள். எந்த நேரம் ஞான சூரியனின் எதிரில் இருக்கிறார்களோ அந்த நேரம் மலர்ந்திருந்தார்கள். மேலும் பிறகு எப்பொழுதாவது ஞான சூரியன் தந்தையிடமிருந்து விலகி விடும் காரணத்தினால் மலர்களுக்கு பதிலாக மொட்டுக்கள் ஆகி விட்டனர் அதாவது வடிவம் மற்றும் வண்ணம் மாறி விடுகிறது. தாமரை மலர் போன்றவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அனைத்துக் காரியங்களையும் செய்து கொண்டே, அனைத்து உறவுகளின் நெருக்கத்தில் வந்து கொண்டே விலகியவராக மற்றும் கூடவே தந்தையின் அன்பிற்குரியவர்களாக இருந்தார்கள். சூழ்நிலை மற்றும் அசுர தொடர்பு, அனேக விதமான உள்உணர்வு உள்ள ஆத்மாக்களின் எண்ண அலைகளின் இடையில் காரியம் செய்து கொண்டிருந்தாலும், காரியம் மற்றும் யோகா இரண்டின் சமநிலையில் நிலைத்திருந்தனர். அனேக விதமான குழப்பத்திலும் ஆடாதவர்களாக இருந்தார்கள் ஆனால் அந்த மாதிரியான ஆத்மாக்கள் எத்தனை பேர் இருந்தார்கள்? 25 சதவிகிதத்தினர் அதிலேயும் பெரும்பான்மையோர் சக்திகள் (பெண்கள்) இருந்தனர். அப்படி ஏன் என்று பாண்டவர்கள் யோசிக்கிறார்கள். பாண்டவர்களின் விசேஷத்தையும் கூறுகிறோம். கொஞ்ச நேரத்திற்கு தைரியம் மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். பாண்டவபதியின் இனத்தைச் சேர்ந்த பாண்டவர்களுக்கும் மகிமை இருக்கிறது.

தாமரை மலருக்கு எதிரில் ஆன்மீக ரோஜாவாக யார் இருந்தார்கள்? ஆன்மீக ரோஜா யார் எப்பொழுதும் தன்னுடைய ஆன்மீகத்தின்

நிலையில் நிலைத்திருந்து கொண்டே அனைவரையும் ஆன்மீகப் பார்வையினால் பார்க்கக்கூடிய, எப்பொழுதும் நெற்றியின் மணியை பார்ப்பவர்களாக இருந்தார்கள். கூடவே தன்னுடைய ஆன்மீகத் தின் நிலை மூலமாக எப்பொழுதும் அதாவது ஒவ்வொரு நேரமும் அனைத்து ஆத்மாக்களை தன்னுடைய நினைவு, பார்வை மற்றும் உள்உணர்வினால் ஆன்மீகமாக ஆக்கும் நல்எண்ணங்களில் இருப்பவர்கள் அதாவது ஒவ்வொரு நேரமும் யோகம் நிறைந்த ஆத்மா, சேவாதாரி ஆத்மாவாகி நடந்து கொள்ளக்கூடியவர்கள் அந்த மாதிரி ஆன்மீக ரோஜாவை நாலாபுறங்களின் பூந்தோட்டங்களின் இடையே மிகக்குறைவாக சில இடங்களில் பார்த்தோம். இந்த சதவிகிதம் குறைவாக இருந்தது. 10-சதவிகித பலவகையான மலர்களுக்கிடையில் ஒரு வகையினர் சூரியகாந்தி என்று ஏற்கனவே கூறியிருந்தோம், இரண்டாவது வகையினர் ஒவ்வொரு பருவத்திலும் மிக அழகாக வண்ணங்கள் நிரம்பிய பூக்கள் இருக்கின்றன அவைகள் மேல் பருவத்தின் காரணமாக வடிவம் மற்றும் வண்ணத்தின் செழிப்பு மிக நன்றாக இருந்தது. பூந்தோட்டத்தின் அழகை அதிகரிக்கக்கூடியவர்கள். அந்த மாதிரி பருவகாலத்தின் பல வித வண்ணங்களிலான மலர்களின் காட்சியை அதிகமாகப் பார்த்தோம். வண்ணம் மற்றும் வடிவம் - இங்கேயும் வடிவம் பிரம்மா குமாரி மற்றும் பிரம்மா குமாரினுடையது, வண்ணம் ஞானத்தின் வண்ணம் போடப்பட்டிருந்தது. அப்படி வண்ணமும் இருந்தது, வடிவமும் இருந்தது ஆனால் ஆன்மீகத்தன்மையின் குறை இருந்தது. ஆன்மீகப் பார்வை மற்றும் உள்உணர்வின் நறுமணம் இல்லை என்பதற்கு சமமாக இருந்தது. இப்பொழுது பருவத்திற்கு ஏற்றமாதிரி அதாவது கொஞ்ச காலத்திற்காக மலர்ந்திருந்திருப்பார்கள் மேலும் கொஞ்ச காலத்திற்கு பிறகு வாடிப்போனதாக பார்க்கத் தென்படுவார்கள். எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் இல்லை. அந்த மாதிரி பல வண்ணங்கள் நிறைந்த மலர்கள் பருவகாலத்தில் தான் மலர்வார்கள், அவர்கள் அதிகமானவர்களாக இருந்தார்கள்.

தற்சமயம் ஆன்மீகப் பார்வை மற்றும் உள்உணர்வின் பயிற்சியின் மிக அவசியம் இருக்கிறது. 75-சதவிகிதத்தினர் இந்த ஆன்மீகப் பயிற்சியில் பலஹீனமாக இருக்கிறார்கள். அதிகமானோர் ஏதாவது விதத்தின் இயற்கையின் கவர்ச்சிக்கு வசமாக ஆகியே விடுகிறார்கள். நபர்கள்

மற்றும் சாதனங்கள் எப்பொழுதாவது தன்னுடைய வசப்படுத்தி விடுகிறது. அதிலேயும் மனதில் எழும் எண்ணங்களின் குழப்பத்தில் நிலை குலைபவர்கள் அதிகமானவர்கள் இருந்தார்கள். இந்த நிலை குலைதலின் காரணமாக தன் மேல் மனமுடைந்தும் போய்விடுகிறார்கள். உண்மையில் பிராமண ஆத்மா ஒருவேளை எண்ணத்தில் விகார பார்வை மற்றும் உள்உணர்வை வைக்கிறது அதாவது இந்த தோலை பார்க்கிறது. தோல் என்றால் உடல் மூலமாக விகார பாவனை வைக்கிறார்கள் என்றால் அந்த மாதிரி பாவனை வைப்பவர்களும் மகாபாவிகளின் பட்டியலில் வந்து விடுகிறார்கள். பிராமண வாழ்க்கையில் மிகப் பெரிய பாவம் மற்றும் கரை என்று இந்த விகார பாவனையைத் தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பிராமணன் என்றால் தெய்வீக புத்தியின் வரதானம் பெற்றவர். தெய்வீக கண்ணின் வரதானம் பெற்றவர், அந்த மாதிரி தெய்வீக புத்தி மற்றும் தெய்வீ கண் உடையவர்கள் புத்தியின் எண்ணம் மூலமாக, தெய்வீக கண்ணில் ஒரு விநாடி கூட பார்வை மூலமாக இந்த தோலை மற்றும் உடலை தொடக்கூட முடியாது. தெய்வீக புத்தியின், தெய்வீக கண்ணின் சுத்தமான ஆகாரம் மற்றும் விவகாரம் சுத்த எண்ணம் ஆகும். ஒருவேளை தன்னுடைய சுத்த எண்ணம் என்ற ஆகாரம் அதாவது உணவை விட்டு விட்டு அசுத்த ஆகாரத்தை சுவீகாரம் செய்கிறார்கள் அதாவது எண்ணத்தின் வசமாகி விடுகிறார்கள் என்றால் அந்த மாதிரி அசுத்தமான உணவை அருந்துபவர்கள் அசுத்த ஆத்மா என்று கூறப்படுவார்கள் அதாவது மகாடாவி, ஆத்மாவை கொல்பவர் என்று கூறப்படுவார்கள். எனவே இந்த மகாபாவத்தை எண்ணத்தில் இருந்தும் கூட தன்னை எப்பொழுதும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். இல்லையென்றால் இந்த மகாபாவத்தின் தண்டனையை மிகக் கடுமையான ரூபத்தில் அனுபவிக்க வேண்டியதாக இருக்கும். எனவே தெய்வீக புத்தி உள்ள மற்றும் எப்பொழுதும் சுத்த ஆகாரம் அருந்துபவராக ஆகுங்கள். புரிந்ததா.

பாண்டவர்களின் விசேஷமாக என்ன பார்த்தோம்? சேவையை பொறுத்தவரை கடுமையாக உழைப்பவர்கள், திட்டமிடும் புத்தி உள்ளவர்கள், களைப்பற்றவராகி சேவையின் மேடையில் ஒவ்வொரு நேரமும் தயார் லயில் இருப்பவர்கள். சேவையின் விஷயத்தில் மைதானத்தில் வருபவர்கள் அதிகமானோர் பாண்டவர்கள் ஆவார்கள்.

## 1975 அவ்யக்த முரளி

இந்த விசேஷத்தில் பாண்டவர்கள் முன்னுக்கு இருக்கிறார்கள். மேலும் இந்த சேவையின் பிரதிபலனாக தைரியம் மற்றும் உற்சாகத்தை அனுபவம் செய்து கொண்டே இருக்கிறார்கள். பாண்டவர்கள் சூழ்நிலைகளின் விகார வைப்ரேஷனின் இடையில் அதிகமாக இருக்கிறார்கள் எனவே அந்த மாதிரி சூழ்நிலையில் இருந்து கொண்டே விலகியிருப்பவராகவும், பிரியமானவர்களாகவும் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இந்த வெற்றிக்காக சக்திகளை விட அதிகமாக மதிப்பெண் கிடைக்கிறது ஆனால் இந்த லாட்டரியை இன்னும் அதிகமாக காரியத்தில் கொண்டு வாருங்கள் மேலும் அந்த மாதிரி பொன்னான வாய்ப்பை இன்னும் அதிகமாக எடுக்க வேண்டும். இன்றைய சுற்றி வந்ததின் செய்தியை கேட்டீர்களா? நல்லது.

அந்த மாதிரி சமிக்ஞையினால் புரிந்து கொள்ளக்கூடிய விவேகம் நிறைந்தவர்களுக்கு, ஸ்தூலம் மற்றும் சூட்சுமம் சுத்த ஆகாரம் அருந்தபவர்களுக்கு, எப்பொழுதும் உயர்ந்த விவகாரம் உள்ள ஒவ்வொரு எண்ணத்தில் உலக நன்மைக்கான பாவனை வைக்கக்கூடிய விஷ்வ கல்யாணி ஆத்மாக்களுக்காக பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சக்தியிருந்தபோதிலும் வாழ்க்கையில் வெற்றி மற்றும் திருப்தி ஏன் இருப்பதில்லை!

எப்படி தந்தை அனைத்து குணங்களின் கடலாக இருக்கிறார், அதே போல் நீங்கள் உங்களை மாஸ்டர் கடல் என்று நினைக்கிறீர்களா? கடல் துண்டுபடாத, ஆடாத மற்றும் உறுதியானதாக இருக்கும். கடலில் விசேஷமாக இரண்டு சக்திகள் எப்பொழுதுமே பார்க்கத் தென்படும் - ஒன்று உள்ளடக்கும் சக்தி, எவ்வளவு உள்ளடக்கும் சக்தி இருக்கிறதோ அந்தளவே எதிர்கொள்ளும் சக்தியும் இருக்கிறது. அலைகள் மூலமாக எதிர்கொள்ளவும் செய்கிறது, மேலும் ஒவ்வொரு பொருள் மற்றும் நபரை தன்னுள் உள்ளடக்கி விடுகிறது. அப்படி மாஸ்டர் கடல் ஆன காரணத்தினால் இந்த இரண்டு சக்திகளும் எனக்குள் எந்த அளவு வந்திருக்கிறது என்று தன்னிலும் பாருங்கள். அதாவது எத்தனை சதவிகிதத்தில் வந்திருக்கிறது? இரண்டு சக்திகளையும் தேவையான நேரத்தில் உபயோகம் செய்ய முடியுமா? சக்திகளின் மூலமாக வெற்றியின் அனுபவம் ஆகிறதா?

சில குழந்தைகள் அனைத்து சக்திகளை தன்னுள் அனுபவமும் செய்கிறார்கள் மேலும் என்னுள் இந்த சக்திகள் இருக்கின்றன என்று நினைக்கவும் செய்கிறார்கள் ஆனால் சக்திகள் இருந்தபோதிலும் சில நேரம் அவர்கள் வெற்றியை அனுபவம் செய்வதில்லை. ஞானம் நிறைந்தவர், ஆனந்தம். அன்பு, சுகம் மற்றும் அமைதி நிறைந்தவர் என்று தன்னை புரிந்து கொண்டபோதிலும் தன் மேல் எப்பொழுதும் திருப்தியாக இருப்ப தில்லை மேலும் முயற்சி இருந்தபோதிலும் பிராப்தியின் உடனடி பலன் ரூபத்தில் என்ன அனுபவம் ஆக வேண்டுமோ அதை சில நேரம் மட்டும் தான் செய்ய முடிகிறது. அனைத்து நியமங்களை கடைபிடிக்கவும் செய்கிறார்கள். இருந்த போதிலும்

தன்னை எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவராக அனுபவம் செய்வதில்லை. கடுமையாக உழைக்கிறார்கள் ஆனால் பலனின் அனுபவத்தை குறைவாகச் செய்கிறார்கள். மாயாவை தாசியாகவும் ஆக்குகிறார்கள் ஆனால் இருந்தபோதிலும் சில நேரம் சோர்வையும் உணர்கிறார்கள். இதற்கான காரணம் என்ன? சக்திகளும் இருக்கின்றன, கூடவே ஞானமும் இருக்கிறது, நியமங்களை கடைபிடிக்கவும் செய்கிறார்கள். பின்பு அவர், அவர் மேலேயே குழப்பமாக இருப்பதற்கான எந்த விஷயத்தில் குறை இருக்கிறது. பிராப்தி செய்திருக்கும் சக்தியை மற்றும் ஞானத்தின் விஷயத்தை எந்த நேரம் எந்த முறையோடு காரியத்தில் ஈடுபடுத்த வேண்டுமோ அந்த நேரம் அந்த முறையோடு உபயோகிக்கத் தெரியாது. இது தான் குறை ஆகும். தந்தை மேல் அன்பு இருக்கிறது. ஞானத்தின் மேலும் அன்பு இருக்கிறது, தெய்வீக குணங்கள் நிறைந்த வாழ்க்கை மேலும் அன்பு இருக்கிறது ஆனால் அன்பின் கூடவே முறை தெரியாது மற்றும் முறையின் கூடவே அன்பு வருவதில்லை. எனவே விலைமதிக்க முடியாத பொருளும் சாதாரண பிராப்திக்கான ஆதாரம் ஆகி விடுகிறது. எப்படி ஸ்தூலத்திலும் எவ்வளவு தான் பெரிய இயந்திரம் மற்றும் விலைமதிக்க முடியாத பொருள் உடன் இருந்தபோதிலும் உபயோகிக்கும் முறை தெரியாது என்றால் அதன் மூலம் என்ன பிராப்தி ஆக வேண்டுமோ அதைச் செய்ய முடிவதில்லை, அதே போலவே ஞானம் நிறைந்த குழந்தைகளும் ஞானம் மற்றும் சக்திகளின் மூலமாக என்ன பிராப்தி ஆக வேண்டுமோ அதைச் செய்ய முடிவதில்லை. அந்த மாதிரி ஆத்மாக்கள் மேல் பாப்தாதாவிற்கும் இரக்கம் வருகிறது.

இப்பொழுது அந்த முறை தெரியாத காரணத்தினால் பிராப்தியை அனுபவம் செய்ய முடிவதில்லை. அந்த முறை எப்படி தெரிய வரும்? இதில் நிர்ணய சக்தியின் அவசியம் இருக்கிறது. நிர்ணய சக்தி இல்லாத காரணத்தினால் எங்கு உள்ளடக்கும் சக்தியை உபயோகிக்க வேண்டுமோ அங்கு எதிர்கொள்ளும் சக்தியை உபயோகித்து விடுகிறார்கள். எங்கு சாரத்தில் கொண்டு வரும் சக்தியை உபயோகிக்க வேண்டுமோ அங்கு விஸ்தாரம் செய்வதற்கான சக்தியை உபயோகித்து விடுகிறார்கள். எனவே வெற்றி அடைவதற்கான எண்ணம் இருக்கிறது ஆனால் சொரூபத்தில் மற்றும் பிராப்தியில் எண்ணத்திற்கு ஏற்றபடி வெற்றி ஏற்படுவதில்லை. விசேஷமாக சக்தியின் பிராப்திக்கான

முக்கிய ஆதாரம் என்ன? நிர்ணய சக்தியை அதிகப்படுத்துவதற்காக எந்த விஷயத்தின் அவசியம் இருக்கிறது? எந்தவொரு இயந்திரமும் தெளிவான நிர்ணயம் செய்ய முடிவதில்லை என்றால் அதற்கான காரணம் என்னவாக இருக்கிறது? நிர்ணய சக்தியை அதிகரிப்பதற்காக தன்னுடைய உயர்ந்த நிலை - நிராகாரி, நிர்அகங்காரி, நிர்விகாரி மற்றும் நிர்விகல்பம் (தீய எண்ணமற்ற நிலை) தேவையாக இருக்கிறது. ஒருவேளை இந்த நான்கில் ஏதாவது ஒரு விஷயத்தின் குறை இருந்து விடுகிறது என்றால் இந்த உயர்ந்த தாரணை இல்லாத காரணத்தினால் தெளிவு நிலை ஏற்படுவதில்லை. உயர்வானது தான் தெளிவாக இருக்கும். இந்த குழப்பம் புத்தியை தூய்மையாக ஆக்க விடுவதில்லை. தூய்மை தான் உயர்ந்த நிலை எனவே தன்னுடைய நிர்ணய சக்தியை அதிகப்படுத்துங்கள். அப்பொழுது தான் தந்தைக்குச் சமமாக அனைத்து குணங்களின் மாஸ்டர் கடலின் அனுபவம் செய்ய முடியும்.

எப்படி கடல் அனேக பொருட்களினால் நிரம்பியதாக இருக்கிறது. அதே போல் தன்னையும் அனைத்து சக்திகளினால் நிரம்பிய சொரூபத்தின் அனுபவம் செய்யுங்கள். ஏனென்றால் நிரம்பிய நிலையின் வரதானம் சங்கமயுகத்தில் தான் கிடைக்கிறது. நிறைந்த சொரூபத்தின் அனுபவத்தை சங்கமயுகத்தைத் தவிர வேறு எப்பொழுதும் அனுபவம் செய்ய முடியாது. உங்களுடைய தெய்வீக வாழ்க்கைக்குத் தான் அனைத்து குணங்கள் நிரம்பியது என்று மகிமை இருக்கிறது. 16-கலைகள் நிரம்பியதின் மகிமை இருக்கிறது ஆனால் நிரம்பியதின் சொரூபமாக என்ன இருக்கிறது? குணம் மற்றும் கலைகளின் ஞானம் இந்த ஈஸ்வரிய வாழ்க்கையில் தான் இருக்கிறது எனவே நிரம்பியவர் ஆனதற்கான ஆனந்தம் இந்த ஈஸ்வரிய வாழ்க்கையில் தான் பிராப்தி செய்ய முடியும்.

முறையை கற்றுக் கொள்வதற்காக, தந்தை மூலமாக என்னென்ன பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறதோ, அது ஞானம், சக்திகள் எதுவாக இருந்தாலும் இவற்றை நேரத்திற்கு ஏற்றாற்போல் காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே செல்லுங்கள். மிக நல்ல விஷயங்கள் மேலும் மிக நல்ல பொருள் என்று புரிந்து மட்டும் உள்ளே அடக்கி விடாதீர்கள். அதாவது புத்தியை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து விடாதீர்கள். பேங்கில் சேமிப்பை மட்டும் செய்து கொண்டே இருக்காதீர்கள் அல்லது

சில வயோதிகர்கள் மாதிரி முடித்து போட்டு உள்ளே வைத்து விடாதீர்கள், கேட்பதற்கும் மற்றும் வைப்பதற்குமான ஆனந்தத்தை மட்டும் எடுக்காதீர்கள் ஆனால் அடிக்கடி தனக்காகவும் மற்றும் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் காரியத்தில் ஈபடுத்திக் கொண்டே இருங்கள், ஏனென்றால் இந்த நேரத்தில் என்ன பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறதோ, இந்த பிராப்திகளை உபயோகம் செய்வதினால் ஈஸ்வரிய நியமப்படி எவ்வளவு உபயோகிப்பீர்களோ அவ்வளவு அது வளரும், எப்படி தானத்திற்காக இப்படி கூறப்படுகிறது - செல்வத்தை கொடுத்தால் செல்வம் குறையாது. அதாவது கொடுப்பது தான் அதிகரிப்பது, அதே போலவே இந்த ஈஸ்வரிய பிராப்திகளை அனுபவத்தில் கொண்டு வருவதினால் பிராப்தி குறைவாக ஆகாது மாறாக இன்னும் அதிகமாகும். பிராப்தி சொரூபத்தின் அனுபவம் செய்வீர்கள். அடிக்கடி உபயோகிப்பதில் தான், எப்படி நேரமோ அப்படி தன்னுடைய சொரூபத்தை உருவாக்க முடியும் மற்றும் எந்த நேரம் எந்த சக்தியை உபயோகிக்க வேண்டுமோ அந்த சக்தியை அந்த முறையில் உபயோகிக்க முடியும். அந்த நேரத்தில் ஏமாற்றம் அடைவதிலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள். ஏமாற்றப்படுவதிலிருந்து பாது காப்பாவது என்றால் துக்கத்தில் இருந்து பாதுகாப்பாவது. அப்படியானால் என்னவாகி விடுவீர்கள்? எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த அதாவது எப்பொழுதும் சுகமானவர்களாக குஷி நிறைந்தவர்களாக ஆகி விடுவீர்கள். எனவே இப்பொழுது தன் மேல் இரக்கம் வைத்து, பிராப்திகளை உபயோகம் செய்து மேலும் பிராப்தியின் கூடவே முறையையும் தெரிந்து, எப்பொழுதும் மாஸ்டர் ஞானக்கடல் ஆகுங்கள், சக்தியின் கடல் ஆகுங்கள் மற்றும் அனைத்து பிராப்திகளின் கடல் ஆகுங்கள். நல்லது.

அந்த மாதிரி அனைத்து அனுபவங்களினால் நிரம்பிய மாயாவை வென்ற உலகை வென்றவர்களுக்கு, தன்னுடைய அனுபவங்கள் மூலமாக அனைவரையும் அனுபவி ஆக்கக்கூடிய பாப்தாதாவின் குழந்தையாக இருந்து எஜமானன் ஆகக்கூடிய, அந்த மாதிரி தந்தையின் எஜமானன் மற்றும் உலகின் எஜமான ஆத்மாக் களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: சாதனங்களின் வசமாவதற்கு பதிலாக அதை உபயோகம் செய்யக்கூடிய மாஸ்டர் படைப்பவர் ஆகுக!**

அறிவியலின் சாதனங்கள் எவை உங்களுடைய காரியத்திற்கு உதவுகின்றன. நாடகப்படி தந்தைக்கு எப்பொழுது அவசியமாக இருக்கிறதோ அப்பொழுது அவர்களுக்கும் (விஞ்ஞானிகளுக்கும்) புத்தியில் உணர்வு வந்தது ஆனால் இந்த சாதனத்தை உபயோகித்துக் கொண்டே அதன் வசமாகி விடாதீர்கள். ஒருபொழுதும் ஏதாவது சாதனம் தன் பக்கம் இழுத்து விட வேண்டாம். மாஸ்டர் படைப்பவராகி படைப்பிலிருந்து லாபத்தை எடுங்கள். ஒருவேளை அவற்றின் வசமாகி விட்டீர்கள் என்றால் அவை துக்கம் கொடுக்கும் எனவே சாதனத்தை உபயோகித்துக் கொண்டும் சாதனா (இடைவிடாத பயிற்சி) நிரந்தரமாக நடந்து கொண்டே இருக்கட்டும்.

**சுலோகன்: நிரந்தர யோகி ஆக வேண்டும் என்றால் எல்லைக்குட்பட்ட நான் மற்றும் எனதை எல்லைக்கப்பாற்பட்டதில் பரிவர்த்தனை செய்து விடுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 21.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஃபரிஷ்தா என்றால் யாருக்கு ஒரு தந்தையைத் தவிர மற்ற ஆத்மாக்களுடன் எந்த ரிஷ்தாவும் (உறவும்) இல்லை என்பதாகும்! (டீச்சர் சகோதரிகளுடன்).

ஆஹா! நான்! என்ற போதை இருக்கிறதா? அந்த நாள். அந்த ஜொலிப்பு மற்றும் பொலிவு நினைவில் வருகிறதா? அந்த போதையின் நாள் ஆன்மீகமாக இருந்தது. அந்த போதையின் நாள் நினைவில் வந்தவுடனேயே போதை ஏறி விடுகிறது இவ்வளவு போதை, இவ்வளவு குஷி ஸ்தூல கால்களும் சென்று கொண்டிருக்கும்போதே நிகழ்ச்சிக்காக நடனம் ஆடாமல் இயற்கையாகவே நடனம் ஆடுகின்றன. மனமும் ஆடுகிறது மற்றும் உடலும் இயற்கையாகவே ஆடிக் கொண்டே இருக்கிறது. இந்த இயற்கையான நடனமோ நிரந்தரமாக இருக்க முடியும், கண்களால் பார்ப்பது, கைகள் அசைவது மற்றும் கால்கள் நடப்பது அனைத்தும் குஷியில் இயற்கையான நடனம் ஆடுகின்றன. அதை பரிஷ்தாக் களின் நடனம் என்று கூறுவது. அந்த மாதிரி இயற்கையான நடனம் நடந்து கொண்டே இருக்கிறதா? பரிஷ்தாக்களின் கால்கள் தரையில் படுவதில்லை என்று கூறுகிறார்கள். அதே போல் பரிஷ்தாவாக ஆகக்கூடிய ஆத்மாக்களும் இந்த உடல் அதாவது பூமியில் கால் வைப்பதில்லை. எப்படி அந்த பூமி மண்ணால் ஆனது அதே போல் இந்த உடலும் மண் தான் இல்லையா? அப்படி பரிஷ்தாக்களின் கால்கள் பூமியில் இருப்பதில்லை, அதாவது பரிஷ்தா ஆகக்கூடிய ஆத்மாக்களின் கால் அதாவது புத்தி இந்த உடல் என்ற பூமியில் இருப்பதில்லை. இது தான் பரிஷ்தா நிலையின் அடையாளம் ஆகும். எவ்வளவு பரிஷ்தா நிலையின் அருகில் சென்று கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு உடல் என்ற பூமியிலிருந்து கால்கள் தானாகவே மேலே செல்லும்.

ஒருவேளை மேலே இல்லாமல் பூமியில் இருக்கிறது என்றால் சுமை என்று புரிந்து கொள்ளுங்கள். சுமையுள்ள பொருள் மேலே இருக்க முடியாது. லேசான தன்மை இல்லை, சுமை இருக்கிறது என்றால் இந்த உடல் என்ற பூமி மேல் அடிக்கடி கால் வந்து விடும். பரிஷ்தாவாக அதாவது லேசாக ஆக மாட்டார்கள். பரிஷ்தாக்களின் கால்கள் பூமியிலிருந்து இயல்பாகவே உயரே இருக்கும், உயரே வைப்பதில்லை. யார் லேசாக இருக்கிறாரோ அவரைப் பற்றி இவரோ காற்றில் பறந்து கொண்டே இருக்கிறார், நடப்பதில்லை பறக்கிறார் என்று கூறுவார்கள். போல் பரிஷ்தாக்களும் உயர்ந்த நிலையில் மேலே பறக்கிறார்கள். அந்த மாதிரி பரிஷ்தாக்களின் அதே இயற்கையான நடனத்தைப் பார்ப்பதிலும், மேலும் செய்வதிலும் மகிழ்ச்சி வருகிறது. மகாரதி டீச்சர்கள் இந்த இயற்கையான பரிஷ்தாக்களின் நடனத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? (எதிரில் அமர்ந்திருக்கும் டீச்சர்களுடன் பாப்தாதா கேட்டபொழுது, பாபா மாயாவின் கையை வெட்டி விடுங்கள் என்று யாரோ கூறினார்). ஒருவேளை தந்தை மாயாவின் கையை வெட்டி விட்டார் என்றால் யார் வெட்டினாரோ அவர் அடைவர். தந்தையோ அனைத்தையும் செய்ய முடியும். இதுவோ ஒரு நொடிக்கான கட்டளை ஆகும் ஆனால் எதிர்காலத்தை உருவாக்கக்கூடியவர்களின் எதிர்காலம் எப்படி உருவாகும்? தந்தை அனைவருக்காகவும் செய்து விடட்டுமா அல்லது உங்களுக்கு மட்டும் செய்ய வேண்டுமா? பின்போ இன்றைய உலகில் லஞ்சம் வாங்குபவர்கள் இருக்கிறார்கள். அதே போல் இதுவும் அந்தப் பட்டியலில் வந்து விடும். எனவே எப்படி நேபாளிலும் சின்னக் குழந்தைகளின் கையில் கத்தியை கொடுக்கிறார்கள். செய்வது அவர்கள் தான் ஆனால் கை குழந்தைகளினுடையதை வைக்கிறார்கள். இந்த அளவு செய்ய முடியும் ஆனால் தைரியம் என்ற கையை நீங்கள் அவசியம் வைக்க வேண்டும். இந்த அளவு செய்ய வேண்டும் இல்லையா? முழு நாளில் எவ்வளவு நேரம் பரிஷ்தா நிலையில் இருக்கிறோம் மற்றும் எவ்வளவு நேரம் ஃபரிஷ்தாக்களுக்குப் பதிலாக மரண உலகத்தின் மனிதனாக இருக்கிறோம்? என்ற இது டீச்சர்களின் தலைப்பு ஆகும். தெய்வீக பரிவாரத்தின் உறவுகளில் கூட பரிஷ்தாக்கள் வருவதில்லை. அவர்களோ எப்பொழுதுமே விலகியிருக்கிறார்கள். அனைத்து உறவுகளும் யாருடன் இருக்கிறது? ஒருவேளை யாரையாவது தோழியாக ஆக்கினீர்கள் என்றால், தந்தையிடமிருந்து அந்த தோழியின்

உறவு குறைந்து விடும். எந்தவொரு உறவும் சகோதரியின், சகோதரனின் அல்லது வேறு ஏதாவது ஒரு உறவை ஏற்படுத்தினீர்கள் என்றால் அந்த ஒருவருடன் (பாபாவுடன்) அவசியம் அந்த உறவு லேசாகிவிடும், ஏனென்றால் பகிரப்படுகிறது அல்லவா? இதயம் துண்டு துண்டாக ஆகிவிட்டது என்றால் உடைந்த இதயமாகிவிட்டது. உடைந்த இதயத்தை தந்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. இதுவும் ஆழமான உறவுகளின் தத்துவம் ஆகும். ஒருவரைத் தவிர வேறு யாருடனும் எந்த உறவும் இல்லை - தோழனின், தோழியின், சகோதரனின், சகோதரியின் எந்த உறவும் இல்லை. அப்படியில்லை என்றால் அந்த உறவில் கூட ஆத்மா தான் நினைவு வரும். ஃபரிஷ்தா என்றால் யாருக்கு ஆத்மாக்களுடன் எந்த ரிஷ்தாவும் (உறவும்) இல்லையோ அவர் தான். அன்பை இணைத்துக் கொள்வது சுலபம், ஆனால் அதன்படி நடப்பது கடினமாகும். அப்படி நடப்பதில் தான் வரிசை எண் உருவாகிறது. இணைப்பதில் அப்படி ஆவதில்லை, அதன்படி நடப்பது சிலருக்குத் தெரிகிறது, அனைவருக்கும் தெரிவதில்லை. அன்பை கடைப்பிடிப்பவர்களின் வரிசை மாறிக் கொண்டே இருக்கிறது. லட்சியம் ஒன்றாக இருக்கிறது. மேலும் லட்சணம் இன்னொன்றாக ஆகிவிடுகிறது எனவே சிலர் அதன்படி நடக்கிறார்கள், சிலர் இணைக்க மட்டும் செய்கிறார்கள். பக்தர்களும் இணைக்கிறார்கள் ஆனால் அதன்படி நடக்க முடிவதில்லை. குழந்தைகள் அதன்படி நடக்கிறார்கள் ஆனால் அதிலேயும் வரிசைக்கிரமம் இருக்கிறது. கோடியில் சிலர் மற்றும் சிலரிலும் சிலர் தான் அப்படி நடக்க முடிகிறது. ஏதாவது ஒரு உறவில் கூட ஒருவேளை அந்த உறவின்படி நடந்து கொள்வதில் குறை இருக்கிறது, உதாரணமாக 75-சதவிகிதம் சம்மந்தம் தந்தையோடு இருக்கிறது, சில நேரம் 25-சதவிகிதம் வேறு யாருடைய துணையையோ எடுத்தீர்கள் என்றாலும், அதன்படி நடப்பவர்கள் பட்டியலில் வர முடியாது. அதன்படி நடப்பது என்றால் நடப்பது. இதுவும் ஆழமான விளைவுகள் ஆகும். எண்ணத்தில் கூட எந்த ஆத்மாவும் வர வேண்டாம். இதைத் தான் முழுமையாக அதன்படி நடப்பது என்று கூறுவது. எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் மனதின் உடலின் அல்லது நெருக்கத்தினுடையதாக இருந்தாலும் எந்தவொரு ஆத்மாவும் எண்ணத்தில் வர வேண்டாம். எண்ணத்தில் கூட ஏதாவது ஆத்மாவின் நினைவு வருகிறது என்றால் அந்த விநாடியின் கணக்கும் உருவாகிறது. அதனால் தான் 8-பேர்கள் பாஸ் ஆகிறார்கள். முக்கியமாக 8-பேரின் மகிமை இருக்கிறது.

அப்படியானால் அவசியம் அந்த அளவு ஆழமான விளைவுகள் இருக்கும். மிகக் கடுமையான சோதனை ஆகும். அப்படி யாருடைய எண்ணத்தில் கூட யாரும் இல்லையோ அவரைத் தான் பரிஷ்தா என்று கூறுவது. எந்த சூழ்நிலையிலும், நிர்பந்தத்திலும் இருக்க வேண்டாம். ஒரு விநாடிக்காகக் கூட எண்ணத்திலும் இருக்க வேண்டாம். நிர்பந்தமான சூழ்நிலையிலும் உறுதியாக இருந்தீர்கள் என்றால் பரிஷ்தா என்று கூறலாம். உயர்ந்த லட்சியமாகும் ஆனால் இதில் எந்தவொரு நஷ்டமும் இல்லை. சுலபம், ஆனால் பிராப்தி பலகோடி மடங்காகும். எது தந்தையின் உறவினால் பிராப்தி ஆகிறதோ அது அந்த நேரத்தில் நினைவில் இருப்பதில்லை, மறந்து விடுகிறார்கள். அதனால் வேறு யாரையாவது ஆதாரமாக எடுத்துக் கொள்கிறார்கள். பிராப்தி ஏதாவது குறைவா என்ன? கடினத்திலிருந்து சுலபமாக்கக்கூடிய தந்தைக்குத் தான் மகிமை இருக்கிறதேயன்றி வேறு எந்த ஆத்மாவிற்கும் அல்ல. எனவே கடினமான நேரத்தில் தந்தையின் ஆதரவை எடுக்க வேண்டுமேயன்றி எந்த ஆத்மாவின் ஆதரவை எடுக்கக் கூடாது ஆனால் அந்த நேரம் அந்த பிராப்தி மறந்து விடுகிறது, பலஹீனமானவர் ஆகிவிடுகிறார்கள். எப்படி மூழ்கிக் கொண்டிருப் பவருக்கு ஒரு சிறு மரத்துண்டு கிடைத்து விட்டது என்றால் அதன் ஆதாரத்தை எடுத்துக் கொள்கிறார். அந்த நேரம் மிகவும் பிரச்சனையின் காரணமாக ஒரு சிறு மரத்துண்டு எதிரில் வந்தாலும், ஆதாரமாக எடுத்துக் கொள்கிறார்கள், ஆனால் அதிலிருந்தும் ஆதாரமற்றவர்களாகி விடுவோம் என்று இந்த நினைவில் இருப்பதில்லை. நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 22.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுவமானத்தில் (சுயகௌரவத்தில்) நிலைத்திருப்பது தான் அனைத்து பொக்கிஷங்கள் மற்றும் குஷியின் சாவி ஆகும்!

இன்றைய சபை சுவமானத்தில் (சுயகௌரவத்தில்) நிலைத்திருக்கக்கூடிய, அனைவரையும் சுயபாவனையில் பார்க்கக்கூடிய மற்றும் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் நல்விருப்பங்கள் வைக்கக் கூடியவர்களினுடையது. இந்த மூன்று விஷயங்களுமே அதாவது தனக்காக சுவமானம், மற்றவர்களுக்காக சுயத்தின் பாவனை மற்றும் எப்பொழுதும் நல்விருப்பங்கள் வைத்திருக்கும் அந்த மாதிரியான நிலை எப்பொழுதும் சகஜமாக இருக்கிறதா? சகஜமாக அதில் நிலைத்திருப்பது மற்றும் கஷ்டப்பட்டு அந்த நிலையில் நிலைத்திருப்பது என்பதின் வித்தியாசத்தையோ தெரிந்தே இருக்கிறீர்கள். தற்சமயம் இந்த நிலை எப்பொழுதும் சகஜமாக மற்றும் இயல்பாக இருக்க வேண்டும். எப்பொழுதும் மற்றும் இயல்பாகவே ஏன் அந்த நிலை இருப்பதில்லை என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். இதற்கான மூல காரணம் சுவமானத்தில் நிலைத்திருப்பதில்லை. சுவமானம் என்ற ஒரு வார்த்தை நடைமுறை வாழ்க்கையில் தாரணை ஆகி விட்டது என்றால் சுலபமாகவே சம்பூர்ண நிலையை அடைய முடியும். சுவமானத்தில் நிலைத்திருப்பதினால் இயல்பாகவே அனைவருக்காகவும் சுயத்தின் பாவனை மற்றும் நல்விருப்பங்கள் ஏற்பட்டு விடும். இந்த சுவமானத்தில் நிலைத்திருப்பது முதல் பாடமாகும்.

சுவமானத்தில் நிலைத்திருப்பது தான் வாழ்க்கையின் விடுகதைக்கு தீர்வு காண்பதற்கான சாதனம் ஆகும். தொடக்கத்திலிருந்து இதுவரை

"நான் யார்" என்ற இந்த விடுகதைக்கு பதில் கண்டுபிடிப்பதிலேயே ஈடுப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆரம்பத்தில் எப்பொழுது ஸ்தாபனையின் காரியம் தொடங்கியதோ அப்பொழுது அனைவருக்கும் என்ன கூறினீர்கள், ஹூ ஆம் ஐ அதாவது நான் யார்? இவர்கள் அனைவருடைய ஒரே பாடம் வாட் ஆம் ஐ என்பது தான் என்று அனைவரும் தெரிந்திருந்தார்கள், இந்த விஷயம் அந்த அளவிற்கு உறுதியாக நினைவில் இருந்தது. அதே ஒரு பாடம் இதுவரையிலும் நடந்து கொண்டிருக்கிறது. எனவே இதை விடுகதை என்று கூறுவது. இந்த இவ்வளவு சிறிய விடுகதையே உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமணர்களையும் தோல்வி அடையச் செய்து விட்டது. பிரமிப்படையச் செய்தது அதாவது சம்பூர்ண முறையில் தீர்வு காண முடியவில்லை. சுவமானத்திற்குப் பதிலாக தேக அபிமானம் மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காக அபிமானத்தின் பார்வை ஏற்பட்டு விடுகிறது என்றால், என்னவென்று கூறுவது. இந்த விடுகதைக்குத் தீர்வு கிடைத்து விட்டதா அல்லது இதுவரையிலும் தீர்வைக் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறீர்களா? "நான் யார்" என்ற இந்த ஒரு வார்த்தையின் மேல் அனைத்து ஞானமும் அடங்கியிருக்கிறது. இந்த ஒரு வார்த்தை தான் குஷியின் பொக்கிஷம், அனைத்து சக்திகளின் பொக்கிஷம், ஞான செல்வத்தின் பொக்கிஷம், மூச்சு மற்றும் நேரத்தின் பொக்கிஷத்தின் சாவி ஆகும். சாவியோ கிடைத்து விட்டது தான் இல்லையா? எந்த நாள் உங்களுடைய ஜென்மம் ஏற்பட்டதோ அப்படி அனைத்து பிராமணர்களின் பிறந்த நாள் அன்று பரிசு கிடைக்கிறது தான் இல்லையா? அப்படி தந்தை கொடுத்திருக்கும் இந்த பிறந்த நாள் பரிசை எப்பொழுதும் உபயோகம் செய்து கொண்டே இருங்கள். அப்பொழுது நிரந்தரமாக அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவராக ஆக முடியும். அந்த மாதிரி அனைத்து பொக்கிஷங் களினால் நிரம்பிய ஆத்மாவின் உள்ளத்திலிருந்து ஒவ்வொரு நேரமும் குஷியின் ஊக்கத்தில் எந்த ஓசை வெளியாகிறது? வாயின் ஓசை இல்லை ஆனால் உள்ளத்தின் ஓசையாக என்ன வெளியாகிறது? தொடக்கத்தில் பிரம்மாபாபாவின் உள்ளத்தின் ஓசையாக என்ன இருந்தது? ஆஹா நான் ஆஹா ! ஆஹா ! என்று எப்படி மற்றவர்களை பாராட்டுகிறோம் இல்லையா? அதே போல் ஆஹா நான் | இது சுவமானத்தின் வார்த்தையாகுமேயன்றி, தேக அபிமானத்தின் வார்த்தை அல்ல.

நான் யார் என்ற சாவியை ஒன்று, போடத் தெரியவில்லை அல்லது வைத்துக் கொள்ளத் தெரிய வில்லை. எனவே தேவையான நேரத்தில் நினைவு வருவதில்லை. இந்த சாவியைத் திருடுவதற்காக மாயாவும் இவருக்கு ஒரு நொடிக்கான கவனக்குறைவின் தூக்க கலக்கம் வந்தால் சாவியைத் திருடிவிடலாம் என்று நாலாபுறங்களும் சுற்றி வருகிறது. எப்படி இன்றைய நாட்களின் கொள்ளைக்காரர்கள் முதலில் மயக்கமடையச் செய்கிறார்கள். அதே போல் மாயாவும் சுவமானத்தின் உணர்வை அதாவது நினைவைப் போக்கி மயக்கமடையச் செய்து விடுகிறது. எனவே எப்பொழுதும் சுவமானத்தின் உணர்வில் இருங்கள். அமிர்தவேளையில் உங்களுக்கு நீங்களே இந்தப் பாடத்தை உறுதி செய்வியுங்கள். அதாவது நான் யார் என்பதை மீண்டும் ரிவைஸ் செய்யுங்கள். அமிர்தவேளையிலிருந்தே இந்தச் சாவியை தன்னுடைய காரியத்தில் ஈடுபடுத்துங்கள், மேலும் என்னென்ன கஜானாக்கள் கூறியிருந்தோமோ அவற்றை என்னென்ன பொக்கிஷம் கிடைத்திருக்கிறது என்று அடிக்கடி பாருங்கள். மேலும் தேவைக்கேற்றபடி இந்த அனைத்து பொக்கிஷங்களையும் தன்னுடைய வாழ்க்கையில் உபயோகியுங்கள். வங்கி கணக்கின் இருப்பை மட்டும் உருவாக்காதீர்கள் ஆனால் அதைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். அப்பொழுது சுலபமாகவே எப்படி நினைவோ அப்படி நிலை ஏற்பட்டு விடும். எப்படி சென்ற கல்பத்தின் நினைவுச்சின்னமான சாஸ்திரத்தில் தந்தைக்காக எழுதியிருக்கிறார்கள். நான் யார் என்றால் அனைவரையும் விட உயர்ந்தவர் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதே போலவே எப்படி தந்தையின் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானின் மகிமை இருக்கிறது என்றால் பகவானாகிய தந்தை என்ன மகிமை செய்கிறார் - உயர்ந்ததிலும் உயர்ந்த குழந்தைகள். அந்த மாதிரி தன்னுடைய உயர்ந்த அதாவது சிரேஷ்டமான சுவமானத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். உயர்ந்த தந்தையின் குழந்தையிலிருந்து அதிபதி ஆகுபவர். சுயம் தந்தை உயர்ந்த ஆத்மாக்கள் நம்முடைய மாலையை உருட்டுகிறார். தந்தையின் மகிமையை ஆத்மாக்கள் செய்கிறார்கள் ஆனால் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய மகிமையை சுயம் தந்தை செய்கிறார். மிக உயர்ந்த ஆத்மாக்களின் சகயோகமின்றி தந்தையும் ஒன்றும் செய்ய முடியாது. அப்படி நீங்கள் அந்த மாதிரி உயர்ந்த சுவமானம் உடையவர்கள். தந்தையை அனைத்து சம்மந்தங்களினால் வெளிப்படுத்தக்கூடிய மற்றும் தந்தையின் அறிமுகம் கொடுக்கக்கூடிய

உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் ஆவீர்கள். ஒவ்வொரு கல்பத்திலும் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையுடன், உயர்ந்ததிலும் உயர்ந்த பாகத்தைச் செய்யக்கூடியவர்கள். சங்கமயுகத்தில் தந்தையையும் தன்னுடைய அன்பு மற்றும் உறவு என்ற கயிறுகளால் கட்டிப்போடுபவர்கள் என்ற இந்த சுவமானம் தான் அனைத்தையும் விட மிக உயர்ந்த சுவமானம் ஆகும். தந்தையையும் சாகாரத்தில் தனக்குச் சமமாக ஆக்கக்கூடியவர்கள். தந்தை நிராகார ரூபத்தில் தனக்குச் சமமாக ஆக்குகிறார், மேலும் நீங்கள் நிராகாரமானவரையும் சாகாரத்தில் வருவதில் அவரை உங்களுக்குச் சமமாக ஆக்குகிறீர்கள். மேலும் சுயம் நீங்கள் தந்தையின் அனைத்து மகிமைக்கும் சமமானவர்களாக ஆகிறீர்கள். எனவே தந்தையும் நீங்கள் மாஸ்டர் என்று கூறுகிறார். அப்படி "நான் யார்" என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் என்று அப்படியே தன்னைத் தெரிந்து கொள்வதினால் எப்பொழுதும் சுவமானத்தில் இருப்பீர்கள். மேலும் தேக அபிமானத்திலிருந்து இயல்பாகவே விலகி இருப்பீர்கள். சுவமானத்தின் எதிரில் தேக அபிமானம் வரவே முடியாது. எனவே தன்னுடைய பிறந்த நாள் பரிசை எப்பொழுதும் தன்னிடம் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். அலட்சியத்தில் மறந்து விடாதீர்கள். இதன் மூலமாகத் தான் இயல்பாக சகஜமாக மற்றும் நிரந்தரமாக அனைவருக்காகவும் சுயத்தின் பாவனை மற்றும் சுயவிருப்பங்கள் இருக்கும். புரிந்ததா? விடுகதையோ சுலபமானது தான் இல்லையா? புத்திசாலிக்காக சுலபமானது மேலும் அலட்சியமான ஆத்மாக்களுக்காக ஆழமானது. நீங்கள் அனைவருமே எல்லைக்கப்பாற்பட்ட புத்திசாலி குழந்தைகள் தான் இல்லையா? புத்திசாலிகள் மட்டும் இல்லை ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட புத்திசாலிக் குழந்தைகள் ஆவீர்கள். நல்லது.

அந்த மாதிரி விஷால புத்தி, அனைத்து விஷயத்திலும் எல்லைக்கப்பாற்பட்ட புத்தியை தாரணை செய்யக்கூடிய, அனைத்து ஆத்மாக்களை அனேக விதமான எல்லைக்குட்பட்ட விஷயங்களிலிருந்து விடுவிக்கக்கூடிய அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட புத்தியுடைய, எல்லைக்கப்பாற்பட்ட புத்திசாலி, எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு உடைய, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் மற்றும் இடத்தில் இருக்கக்கூடிய அந்த மாதிரி மிக உயர்ந்த

# 1975 அவ்யக்த முரளி

ஆத்மாக்களுக்கு எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: தந்தையின் அன்பின் பாலனை மூலமாக சகஜயோகி வாழ்க்கையை உருவாக்கக்கூடிய நினைவிலிருப்பவரிலிருந்து சக்திசாலியான சொரூபமானவர் ஆகுக!**

முழு உலகத்தின் ஆத்மாக்கள் பரமாத்மாவை தந்தை என்று கூறுகிறார்கள் ஆனால் பாலனை மற்றும் படிப்பிற்கு உரியவர்களாக ஆவதில்லை. முழுக் கல்பத்தில் நீங்கள் மிகக்குறைந்த ஆத்மாக்கள் இப்பொழுது தான் இந்த பாக்கியத்திற்கு பாத்திரமானவர்களாக ஆகிறீர்கள், அப்படி இந்த பாலனையின் நடைமுறை சொரூபம் சகஜயோகி வாழ்க்கை ஆகும். தந்தை குழந்தைகளின் எந்தவொரு கஷ்டமான விஷயத்தைப் பார்க்க முடியாது. குழந்தைகள் அவர்களே யோசித்து யோசித்து கஷ்டமாக்கி விடுகிறார்கள் ஆனால் நினைவு சொரூபத்தின் சம்ஸ்காரங்களை வெளிப்படுத்தினீர்கள் என்றால் சக்தி வந்து விடும்.

**சுலோகன்: எப்பொழுதும் கவலையற்ற நிலையின் அனுபவம் செய்ய வேண்டும் என்றால், ஆத்ம சிந்தனை மற்றும் பரமாத்மா சிந்தனையைச் செய்யுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 27.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லையற்ற வைராகி, தியாகி, சேவாதாரி தான் விஷ்வ மகாராஜன்!

ஆத்மாவுடைய ஆன்மீக சந்திப்பு வார்த்தைகள் மூலம் நடக்கிறதா அல்லது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டு ஆன்மீக சந்திப்பு நடக்கிறதா? ஜொலிப்பைக் காட்டுங்கள் என பாடப்பட்டிருக்கிறதுதானே, அது கண்களின் மூலம் நெற்றி மணியினுடைய மகிமை. நீங்கள் ஒவ்வொருவரும் 'லைட் ஹவுஸ்' (lighthouse), 'மைட்ஹவுஸ்'ன் (mighthouse) ஸ்திதியில் இருந்தீர்கள் என்றால் ஒரே இடத்தில் இருந்தவாறே உலகின் நாலா பக்கமும் தனது ஒளி மற்றும் சக்தி கொடுக்கின்ற கடமையைச் செய்ய முடியும். இதிலும் விஷ்வ-மகாராஜன் ஆகக்கூடியவரே 'லைட்ஹவுஸ்', 'மைட்ஹவுஸ்' ஆக இருப்பார். ராஜ பதவி பெறக்கூடியவரின் தொடர்பில் வரக்கூடிய பணக்காரர்கள் அல்லது பிரஜைகள் 'லைட்ஹவுஸ்' ஆக இருக்க மாட்டார்கள் ஆனால் 'லைட்' சொரூபத்தில் இருப்பார்கள். லைட் மற்றும் மைட் ஹவுஸ் இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது. விஷ்வ மகாராஜன் ஆவதற்காக எது வரை விஷ்வ சேவாதாரி ஆகவில்லையோ அது வரை விஷ்வ மகாராஜன் ஆக முடியாது. விஷ்வ மகாராஜன் ஆவதற்காக மூன்று நிலைகளைக் கடக்க வேண்டியிருக்கும். முதல் நிலை, ஒரு நொடியில் எல்லையற்ற தியாகி -யோசித்துக் கொண்டே நேரத்தை வீணாக்குபவர் அல்ல, ஆனால் உடனே மற்றும் ஒரே அடியில் தந்தை மீது பலியாகக் கூடியவர்கள். இரண்டாவது நிலை, எல்லையற்ற நிரந்தர களைப்பற்ற சேவாதாரி மற்றும் மூன்றாவது நிலை, சதா எல்லையற்ற வைராக்கிய உள்ளுணர்வு உடையவர்கள். எல்லையற்ற தியாகி, எல்லையற்ற சேவாதாரி, எல்லையற்ற வைராகி! இம்மூன்று நிலைகளையும் கடப்பவரால்தான் விஷ்வ மகாராஜன் ஆக முடியும். கூடவே இறுதியில் 'லைட்ஹவுஸ்', 'மைட்ஹவுஸ்' ஆக முடியும். தன்னைத்தானே சோதனை செய்யுங்கள், மூன்று நிலைகளிலும் எந்த நிலை வரை அடைந்துள்ளேன்? என. தனக்குத் தானே நீதிபதி ஆகுங்கள். தர்மராஜ்புரி செல்வதற்கு முன்பாக யார் தானாகவே, தனக்காக நீதிபதி

ஆகிறாரோ அவர் தர்மராஜ்புரியின் தண்டனையிலிருந்து தப்பித்து விடுவார்.

தந்தையும் குழந்தைகளை தர்மராஜ்புரியில் பார்க்க விரும்பவில்லை. தர்மராஜ்புரியின் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக சகஜ உபாயம் என்ன என்பது தெரியுமா? இப்போதும்கூட ஒரு பழமொழி வழக்கத்தில் உள்ளது -சிந்தித்து செயல்படுங்கள்! என்பது. முதலில் சித்திப்பது, பின்பு செயலில் வருவது அல்லது பேசுவது! ஒருவேளை சிந்தித்து காரியங்கள் செய்தீர்கள் என்றால் வீணான செயலுக்குப் பதிலாக ஒவ்வொரு செயலும் சக்திசாலியானதாக இருக்கும். செய்வதற்கு முன்பு சிந்திப்பது என்றால் எண்ணம் எழுகிறது, இந்த எண்ணம்தான் விதை! ஒருவேளை விதை அதாவது சங்கல்பம் சக்திசாலியாக இருந்தது எனில் சொல்லும் செயலும் தானகவே சக்திசாலி ஆகி விடும். ஆதலால் தற்சமயத்தினுடைய முயற்சியில் ஒவ்வொரு சங்கல்பமும் சக்திசாலியாக வேண்டும். சங்கல்பம் தான் வாழ்க்கையின சிரேஷ்ட பொக்கிஷம்! எப்படி பொக்கிஷங்கள் மூலம் என்ன வேண்டுமோ, எவ்வளவு வேண்டுமோ, அந்தளவு பெற முடிகின்றது, அது போல சிரேஷ்ட சங்கல்பம் மூலம் தான் சதா காலமும் சிரேஷ்ட பலன் அடைய முடியும். சதா இந்த சிறிய ஸ்லோகனை நினைவில் வையுங்கள் -சிந்தித்து செயல்பட வேண்டும், பேச வேண்டும் அப்போது சதா காலத்திற்கும் சிரேஷ்ட வாழ்க்கையை உருவாக்க முடியும் மற்றும் தர்மராஜ்புரியில் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்! நீதிபதியின் காரியம், சிந்தித்து, புரிந்து கொண்டு தீர்ப்பு வழங்குவது. ஒவ்வொரு சங்கல்பத்திலும் தனக்கே நீதிபதி ஆகுங்கள். இதனால் சொர்க்கத்திலும் விஷ்வ மகாராஜன் பதவியை அடைய முடியும். நல்லது!

இன்று விசேஷமாக புதுப்புது குழந்தைகளைச் சந்திப்பதற்காக பாப்தாதாவிற்கும் பழைய இயற்கையை ஆதாரமாக்க வேண்டியிருக்கிறது. பலியான புதுக் குழந்தைகள், தந்தையையும் கூட தங்களுக்குச் சமமாக ஆக்கி விடுகிறீர்கள். பாப்தாதாவும் இத்தகைய காணாமல் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஒவ்வொருவருடைய ஈடுபாடு, சிநேகம் மற்றும் சந்திப்பைக் கொண்டாடுகின்ற ஒலி பாப்தாதாவிடம் சதா சென்றடைந்து

கொண்டிருக்கின்றது. ஆதலால் பிரதிபலன் அளிப்பதற்காக பாப்தாதாவும் வர வேண்டியிருக்கிறது. நல்லது!

அத்தகைய சிநேகி, காணாமல் கண்டெடுக்கப்பட்ட, சதா ஒருவரது ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக்கூடிய, 'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட், ஃபாஸ்ட் ஸோ ஃபர்ஸ்ட்' (last so fast, fast so first) பிரிவில் வரக்கூடிய தீவிர புருஷார்த்தி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு, நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.09.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முழு கல்பத்திலும் விசேஷ (வாழ்க்கை) பங்கைச் செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களின் விசேஷங்கள்!

முழு கல்பத்தினுள் அனைத்து ஆத்மாக்களை விட உயர்ந்த வாழ்க்கைப் பங்கைச் செய்யக்கூடிய விசேஷ ஆத்மா என்று தன்னை நினைக்கிறீர்களா? விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய விசேஷங்கள் தொடக்கத்திலிருந்து கடைசி வரை என்னென்ன இருக்கின்றன மற்றும் நீங்கள் எந்த விசேஷப் பங்கைச் செய்தீர்கள் என்பதைத் தெரிந்திருக்கிறீர்களா? ஒன்று விசேஷ காரியம் செய்ததின் காரணமாக விசேஷ ஆத்மா என்று கூறப்படுவது, இன்னொன்று விசேஷ குணங்களின் பிரபாவத்தின் காரணமாக விசேஷ ஆத்மா என்று கூறப்படுவது. மூன்றாவது பதவி மற்றும் தகுதியின் காரணமாக மற்றும் நான்காவது உறவு மற்றும் நெருக்கம் மூலமாக அனேகர்களுக்கு விசேஷ பிராப்தி செய்விக்கும் காரணமாக. இந்த அனைத்து விசேஷங்களை எதிரில் வைத்து இந்த நான்கு விதமான விசேஷங்கள் எந்த நிலை வரை வந்திருக்கிறது மற்றும் எத்தனை சதவிகிதத்தில் வந்திருக்கிறது என்று பாருங்கள்.

சத்யுகத்தின் தொடக்கத்தில் விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய முதல் நிலை என்னவாக இருக்கிறது? அந்த விசேஷத்தை இன்று வரை பக்தர்கள் பாடிக் கொண்டே இருக்கிறார்கள். அதில் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணத்தின் மகிமை இருக்கிறது, அதுவோ அனைவரின் நினைவில் இருக்கிறது தான் இல்லையா? இப்பொழுது மேலே செல்லுங்கள். சத்யுகத்திற்கு பிறகு எங்கே வருகிறீர்கள்? - (திரேதாயுகம்) அங்குள்ளதின் விசேஷம் என்ன? அங்குள்ள விசேஷமும் இந்தளவே பிரசித்தியானது. அதை இன்றுவரை கலியுக தலைவர்கள் அந்த மாதிரி தான் இருக்க வேண்டும் என்று அதே இராஜ்யத்தின் கனவை பார்த்துக்

கொண்டே இருக்கிறார்கள். ஏதாவது திட்டத்தை யோசித்தாலும் கூட உங்களுடைய இரண்டாவது நிலையை மிக விசேஷமானது என்று நினைத்து அதை எதிரில் வைக்கிறார்கள். இன்னும் மேலே செல்லுங்கள். திரேதாயுகத்திற்கு பிறகு எங்கே வருகிறீர்கள்? (துவாபரயுகம்) ஆனால் துவாபரயுகத்திலும் எங்கே வந்தடைந்திருக்கிறீர்கள்? துவாபரயுகத்திலும் இராஜ்ய சக்தியும் இருக்கிறது தான் இல்லையா? அங்கே தர்ம சக்தி மற்றும் இராஜ்ய சக்தி இரண்டு துண்டாகப் பிரிந்து விடுகிறது. எனவே துவாபரயுகம் ஆகி விடுகிறது. தோ புர் (இரண்டு ஊர்கள்) ஆகி விட்டன இல்லையா. ஒன்று இராஜ்ய சக்தி, இன்னொன்று தர்ம சக்தி. இருந்தாலும் விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய விசேஷ சம்ஸ்காரம் மறைந்து விடுவதில்லை. மற்ற தர்ம தந்தைகள், தர்ம சக்தியின் ஆதாரத்தில் தர்மத்தை ஸ்தாபனை செய்கிறார்கள் ஆனால் உங்களுடைய விசேஷங்களின் பூஜை, மகிமை மற்றும் வந்தனம் தொடங்கி விடுகிறது. நினைவுச் சின்னங்களாக விசேஷ ஆத்மாக்கள் உங்களுடையதைத்தான் உருவாக்குவார்கள். குணத்தின் மகிமை, விசேஷ ஆத்மாக்கள் உங்களுக்குத் தான் இருக்கிறது. இராஜ்ய துறையிலும், இராஜ்யம் செய்யும் பதவி மற்றும் இராஜாங்க சக்தி மற்றும் கம்பீரம் இருக்கிறது. உங்களுடைய விசேஷங்களின் நினைவுச் சின்னமாக சாஸ்திரங்கள் உருவாகி விடுகின்றன. உங்களுடைய விசேஷங்கள் நினைவு வருகிறதா? நல்லது. இதையும் விட மேலே செல்லுங்கள். எங்கே வந்து விட்டீர்கள் (கலியுகம்). அதன் விசேஷம் என்ன? விசேஷ ஆத்மாக்கள் உங்கள் பெயரால் அனைத்துக் காரியங்களும் தொடங்குகின்றன. ஒவ்வொரு காரியத்தின் விதியிலும் உங்களுடைய விசேஷங்களின் வெற்றி செய்யப்படுகிறது. உங்களுடைய பெயரால் அனேக ஆத்மாக்களின் வாழ்க்கை நடந்து கொண்டிருக் கிறது. பெயரின் மகிமை இது கலியுகத்தின் விசேஷம் ஆகும். உங்களுடைய பெயர் அனைத்து ஸ்தூல சூட்சும பிராப்திகளின் ஆதாரம் ஆகி விடுகிறது. இந்த விசேஷத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? நல்லது. இன்னும் மேலே செல்லுங்கள். எங்கே வந்தடைந்து விட்டீர்கள்? (சங்கமயுகம்) எங்கு இருக்கிறீர்களோ அங்கே வந்தடைந்து விட்டீர்கள்.

சங்கயுகத்தின் விசேஷங்களையோ சுயம் இப்பொழுது அனுபவம் செய்து கொண்டுதானிருக்கிறீர்கள். முழுக் கல்பத்தின் விசேஷங்களை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே எப்பொழுதும்

# 1975 அவ்யக்த முரளி

விசித்திரமான ஆன்மீக நடனம் செய்து கொண்டே இருக்கிறீர்கள். கோப கோபியர்களின் நடனமோ மிகவும் பிரசித்தியானது தான். அப்படியானால் நிரந்தரமாக நடனம் ஆடிக் கொண்டிருக்கிறீர்களா, அல்லது நிகழ்ச்சி இருந்தால் தானா? இது உற்சாகத்தின் நடனம் ஆகும் ஆனால் இந்த நடனத்தில் சம்பூர்ண பௌர்ணமியின் நடனம் பிரசித்தியானது. இதன் இரகசியம் என்ன? பௌர்ணமி என்றால் அதில் சம்பூர்ணத்தின் அடையாளம் வர்ணிக்கப்படுகிறது. இந்த நடனத்தின் விசேஷங்களை இன்று வரை வர்ணனை செய்து கொண்டிருக்கிறார்கள். அது எந்த விசேஷங்கள்? அந்த நேரத்து கோபர்கள்.

கோபியர்களின் விசேஷமாக என்ன இருந்தது? உங்களுடையவே விசேஷம் தான் இல்லையா? முக்கிய விசேஷமாக என்ன இருந்தது? இதில் மூன்று விஷயங்களைக் கூறுங்கள். ஒரு விசேஷம் இரவு பகலாக்கப்பட்டிருந்தது. பகல் என்றால் ஒவ்வொரு கோபர், கோபியரின் வாழ்க்கையில் சதோபிரதான நிலையின் சூரியன் உதயமாகியிருந்தது. மனிதர்களைப் பொறுத்தவரை கும்பகர்ணனின் தூக்கத்தின் இரவு இருந்தது, அதாவது தமோபிரதான நிலை இருந்தது. இரண்டாவது விசேஷம் முழு நேரமும் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும் ஜோதியாக இருந்தார்கள். ஒரு எண்ண ரூபத்தில் கூட மாயா வர முடியாமல் இருந்தது. மாயா மயக்கமுற்று இருந்தது, மேலும் உணர்விழந்து இருந்தது. ஏனென்றால், அனைத்து பிரகாசமான ஜோதிகள் நிரந்தரமாக தந்தையின் நினைவிலேயே மூழ்கியிருந்தார்கள். மூன்றாவது விசேஷம் அனைவரின் கையோடு கை கோர்க்கப்பட்டிருந்தது. மேலும் தாளத்தோடு தாளம் சேர்ந்திருந்தது அதாவது சம்ஸ்காரம் ஒத்துப்போயிருந்தது. அன்பு மற்றும் சகயோகத்தின் குழுவாக இருந்தது. நடனத்தில் வட்ட வடிவத்தில் ஆடுவார்கள் தான் இல்லையா? வட்டம் என்றால் சக்கரம். இது சக்தி சொரூபம். இயற்கை மற்றும் மாயாவை சூழ்ந்து முற்றுகையிடுவதற்கான கோட்டையின் அடையாளமாகும். இவைகள் தான் விசேஷங்கள். எனவே இந்த நடனத்திற்கு விசேஷ மகத்துவமாக வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. இது தான் சங்கமயுகத்து விசேஷத்தின் மகிமை. எனவே அந்த மாதிரியான நடனம் நிரந்தரமாக இருக்க வேண்டும். எத்தனை தடவைகள் இந்த நடனத்தை செய்திருக்கிறீர்கள்? அனேக தடவைகள் செய்திருக்கிறீர்கள். பிறகு ஏன் சில நேரம் மறந்து விடுகிறீர்கள். சம்ஸ்காரம் ஒத்துப்போவது என்றால்

தாளத்தோடு தாளம் இணைந்திருப்பது ஆனால் எப்பொழுது அந்த மாதிரி ஏதாவது சூழ்நிலை வருகிறது என்றால் என்ன கூறுகிறீர்கள்? அந்த நேரம் பக்தன் அதாவது பலஹீனமானவர் ஆகி விடுகிறீர்கள். சம்ஸ்காரத்தோடு ஒத்துப் போக வேண்டியதாக இருக்கிறது, இறக்க வேண்டியதாக இருக்கும். பணிந்து போக வேண்டியது இருக்கும், கேட்க வேண்டியதாக இருக்கும், மேலும் சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும் - இது எப்படி முடியும்? அந்த மாதிரி கூறுவதினால் பக்தனாகி விடுகிறீர் எனவே இப்பொழுது அந்த பக்த நிலையின் அம்சத்தின் வம்சத்தையும் அழித்து விடுங்கள். அப்பொழுது தான் இந்த நடன மண்டலத்திற்குள் நுழைய முடியும். இல்லையென்றால் பார்ப்பவர்களாக ஆகி விடுவீர்கள். எந்த மகிழ்ச்சி, செய்வதில் இருக்கிறதோ அது பார்ப்பதில்லை. அப்படி தன்னுடைய அனைத்து விசேஷங் களையும் கேட்டீர்கள் இல்லையா? அந்த மாதிரி அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? அந்த மாதிரி அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களுக்காக பாப்தாதாவிற்கும் வர வேண்டியதாக இருக்கிறது. நல்லது.

அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்கள் யார் பாப்தாதாவையும் விருந்தினராக ஆக்கக்கூடியவர்களாக இருப்பவர்களுக்கு, அந்த மாதிரி ஆத்மாக்கள் யாருடைய ஒவ்வொரு எண்ணமும் அனேகரை மகானாக ஆக்கக்கூடியதாக இருக்கிறது, அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவர்களுக்கு, யாருடைய நெற்றியில் அதிர்ஷ்டத்தின் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறதோ, மேலும் அந்த மாதிரி பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

ராசி ஒத்துப்போகுபவர்கள் தான் மாலையின் மணிகள் ஆவார்கள். அந்த மாதிரி நடனம் ஆடுபவர்கள் தயாராகி இருக்கிறீர்களா? சம்ஸ்காரங்களை ஒத்துப்போக வைப்பது என்றால் நடனத்தோடு நடனம் ஒருங்கிணைந்து இருப்பது. நடனத்தில் ஒருவேளை யாருடைய கையாவது மேலே இருக்கிறது, யாருடைய கையாவது கீழே இருக்கிறது என்றால், அந்த நடனத்தைப் பார்ப்பதில் மகிழ்ச்சி வராது. நடனம் என்றால் ராசி ஒத்துப்போவது. எப்படி ஏதாவது தொடர்பை இணைக்கிறார்கள் (திருமணம் மற்றும் சேர்க்கிறார்கள் என்றால் ராசி

ஒத்துப்போகிறதா என்று பார்ப்பார்கள் இல்லையா?. ஒருவேளை ராசி ஒத்துப்போகவில்லை என்றால் ஜோடியாக ஆக்குவதில்லை. ஒருவர் இன்னொருவரின் ராசி ஒத்துப்போவது என்றால் சுபாவம், சம்ஸ்காரம், குணம் மற்றும் சேவை அனைத்தும் சேர்ந்தே ஒத்துப்போவதாகத் தென்பட வேண்டும். சமமாகவோ இருக்க முடியாது. வரிசைக்கிரமமோ இருக்கும், ஆனால் கொஞ்ச வித்தியாசம் ன்ன இருக்கிறதோ அதுவும் இல்லை என்பதற்குச் சமமாக தென்பட வேண்டும், அந்த மாதிரி ராசி ஒத்துப்போபவர்கள் எத்தனை பேர் தயாராகி இருக்கிறீர்கள்? பாதி மாலை உருவாகி இருக்கிறதா? எவ்வளவு தயாராகி இருக்கிறீர்களோ, ஆகத் தான் வேண்டும். ஏற்கனவே தயாராகி இருக்கிறது. முக்காடுக்கு உள்ளே மட்டும் இருக்கிறது. நல்லது.

**வரதானம்: கவலையில்லா மகாராஜாவின் நிலையிலிருந்து வாயுமண்டலத்தில் தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்தக் கூடிய மாஸ்டர் படைப்பவர் ஆகுக!**

எப்படி தந்தைக்கு இவ்வளவு பெரிய குடும்பம் இருக்கிறது இருந்தும் கவலையில்லா மகாராஜாவாக இருக்கிறார், அனைத்தையும் தெரிந்து கொண்டும், பார்த்துக் கொண்டும் கவலையில்லாதவர். அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி நடங்கள். வாயுமண்டலத்தில் தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்துங்கள், வாயுமண்டலத்தின் பிரபாவம் உங்கள் மேல் ஏற்பட வேண்டாம். ஏனென்றால் வாயுமண்டலம் படைப்பாகும் மற்றும் நீங்கள் மாஸ்டர் படைப்பவர் ஆவீர்கள். படைப்பவருக்கு படைப்பின் மேல் பிரபாவம் இருக்கட்டும். எந்த விஷயம் வந்தாலும் நான் வெற்றி அடையும் ஆத்மா ஆவேன் என்று நினைவு செய்தீர்கள் என்றால் எப்பொழுதும் கவலையில்லாமல் இருப்பீர்கள், பயப்படமாட்டீர்கள்.

**சுலோகன்: பிரசன்னத்தின் (மகிழ்ச்சி) நிழல் மூலமாக குளுமையை அனுபவம் செய்தீர்கள் என்றால் நிர்மலமாக மற்றும் பணிவாக இருப்பீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஏகாந்தம், ஏகாக்ரத நிலை மற்றும் திட எண்ணத்தினால் ஸித்தியின் பிராப்தி!

இன்று பாப்தாதா சில விசேஷ ஆத்மாக்களை ஏதோ காரியத்திற்காக இந்த சபையிலிருந்து தேர்ந்தெடுக்கிறார். எந்தக் காரியத்திற்காக தேர்ந்தெடுக்கிறார் என்று தெரிந்திருக்கிறீர்களா? இன்று பாப்தாதா உலகத்தைச் சுற்றி வருவதற்காக புறப்பட்டார் -ஒன்றோ முக்கியமாக வெளிநாட்டுக் குழந்தைகள் மூலமாக நடக்கும் வெளிநாட்டு சேவை மற்றும் விதவிதமான வகையில் மதம் மாறிச் சென்றிருக்கும் குழந்தைகளைப் பார்ப்பதற்காக புறப்பட்டார். சேவை நிலையம் மற்றும் சேவாதாரி குழந்தைகள் யாருடைய மனதில் இரவு பகலாக பிரத்யக்ஷம் செய்வோம் என்ற வார்த்தையை நிறைவேற்றுவதற்கான ஒரே எண்ணம் இருந்தது. அந்த மாதிரி சேவாதாரிகள் களைப்பற்று முழு ஈடுபாட்டுடன் இரவு பகலாக கடுமையான உழைப்பில் இருந்தார்கள். குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். புதுப்புது குழந்தைகளின் வேகமான ஈடுபாட்டின் உற்சாகத்தின், சந்திப்பதற்காக துடித்துக் கொண்டிருக்கும் நிலையை, பறக்கும் பட்டத்திற்கு சமமாக தந்தைக்கும் மேலாக உயரே தாண்டி வருவதற்கான முகத்தை மற்றும் நடவடிக்கைகளைப் பார்த்தோம். மலர்ச்செண்டு மிக நன்றாக இருந்தது, விதவிதமான பூக்களின் அழகு நன்றாக இருந்தது, விதவிதமான மொட்டுக்கள், இலைகளையும் பார்த்தோம், இனிமையான புகார் கூறும் ஆத்மாக்களையும் பார்த்தோம். சில ஆத்மாக்கள் சந்திப்பின் குஷியில் முத்துக்களின் மாலையை பாப்தாதாவிற்காக அணிவித்துக் கொண்டிருப்பதையும் பார்த்தோம். அந்த மாதிரி தெரிந்த அடிக்கடி சந்திப்பின் பாடலை பாடும் முகங்களும் இருந்தன. பின்பு வெளிநாட்டினை சுற்றி வலம் வந்தோம்.

அடுத்தது, நாலா புறங்களிலும் உள்ள அஞ்ஞானி மற்றும் பக்த ஆத்மாக்களையும் சுற்றி வந்த வலம் அதில் என்ன பார்த்தோம்? ஒரு

பக்கம் அனேக ஆத்மாக்கள் தன்னுடைய உடல் நிர்வாகத்திற்காக, வாழ்க்கையின் சாதனங்களுக்காக ஏதாவது இயந்திரங்களினுடன் அவர்கள் பிஸியாக இருந்தார்கள். கூடவே சில ஆத்மாக்கள் விநாஷத்திற்காக இயந்திரங்களை இன்னும் தரமுள்ளதாக ஆக்குவதில் பிஸியாக இருந்தார்கள். இன்னொரு பக்கம் அனேக இல்லறத்தில் இருப்பவர்கள் மற்றும் பக்த ஆத்மாக்கள் தன்னுடைய மந்திரங்களின் மூலம் தன்னுடைய பாவனையின் பலனை பெறுவதற்காக மற்றும் அற்பகாலத்து பலனை பிராப்தி அடைவதற்காக அவரவர்களின் காரியத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இந்த அனைத்திலும் விசேஷமாக பாரதம் மற்றும் சில வெளிநாடுகளிலும் சித்தியை (வெற்றியை) அடைய வேண்டும் என்ற விருப்பத்தோடு தேவிகளை விசேஷமாக ஆவாஹனம் செய்து கொண்டிருந்தார்கள். பெரும்பான்மையோர் சித்தி அடைய வேண்டும் என்பதற்காக அதிகமாக பிஸியாக இருந்தார்கள். சித்தி அடைவதற்காக தன்னை சமர்ப்பணம் செய்வதற்கும் தயாராகி விடுகிறார்கள். சித்தியின் விதியில் முக்கியமாக இரண்டு விஷயங்களைப் பேசுகிறார்கள். எந்தவொரு சித்திக்காக ஒன்றோ ஏகாந்தம், இன்னொன்று ஏகாக்ரதா (ஒருமுனைப்பட்ட நிலை) இந்த இரண்டின் விதி மூலமாக சித்தியை அடைகிறார்கள்.

அப்படி இன்று பாப்தாதா சித்தி சொரூப குழந்தைகளை தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார். அவர்களுடைய நினைவுச் சிலைகள் மூலமாகவும் இன்று வரை அனேகர்களுக்கு அனேக சித்திகள் பிராப்தி ஆகிக் கொண்டிருக்கிறது. அந்த நேரம் சித்தியின் பிராப்தியின் காட்சி பார்ப்பதற்குரியது. எப்படி உங்களுக்கு நினைவு மூலமாக அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஆகிறது, அதே போலவே பக்தர்களுக்கும் சித்தி அடையக்கூடிய நேரத்தின் அற்ப கால சுகம் அந்த நேரத்தில் ஒன்றும் குறைவாக அனுபவம் ஆவதில்லை. அந்த மாதிரி சுற்றி வந்த பிறகு சாகார சொரூபதாரி குழந்தைகளிடம் என்ன பார்த்தோம்? பக்தர்கள் எந்த தேவிகள் மூலமாக சித்தியை அடைந்து கொண்டிருக்கிறார்களோ அதே தேவிகள் சில நேரம் அவர்களே சித்தி அடைவதற்கான எண்ணத்தை வைக்கிறார்கள். இது ஏன்? நடைமுறையில் கடுமையாக உழைத்தும் கூட சித்தி ஏன் பிராப்தி ஆவதில்லை என்ற எண்ணம் அவசியம் உற்பத்தி ஆகிறது. நேரத்திற்குத் தகுந்தாற்போல் சம்பூர்ண நிலையின் வெளிப்பாட்டில் ஏன் குறை இருக்கிறது? தந்தையும் ஏன் என்று கேள்வி

கேட்கிறார்? சித்தி சொரூபத்தின் முக்கியமான விஷயம் எதைக் கடைபிடிக்க வேண்டியதிருக்கிறது? எப்படி சென்ற கல்பத்தில் பாண்டவர்களின் மகிமையாக, ஒரு நொடியில் எங்கு அம்பு எய்தார்களோ, அங்கு கங்கை உற்பத்தியாகியது. அதாவது அசம்பவம் கூட ஒரு நொடியில் சம்பவமானது. பிரத்யக்ஷ பலனின் ரூபத்தில் தென்பட்டது. இதைத் தான் சித்தி (வெற்றி) என்று கூறுவது ஆனால் இது ஏற்படுவது இல்லை, ஏனென்றால் உடனடி பலனின் பிராப்திக்காக ஒவ்வொரு விநாடியும் தன்னுடைய சம்பூர்ண, அனைத்து சக்திகள் நிரம்பிய சொரூபத்தின் நினைவு வெளிப்படையான எண்ண ரூபத்தில் இருப்பதில்லை. நான் முயற்சியாளன், முழுமையாக ஆகியே விடுவேன். அவசியம் ஆக வேண்டும். வரிசைக்கிரமமாக ஆகத்தான் வேண்டும். நம்முடைய வேலை முயற்சி செய்வது, அதை சக்திக்கேற்றபடி செய்து கொண்டுதானிருக்கிறோம் -இந்த ஒவ்வொரு விநாடியின் எண்ணம் என்ற விதை அனைத்து சக்திகள் நிரம்பியோ ஆக விடுவதில்லை. அந்த நேரத்து எண்ணத்தில் ஆகியே விடும் என்கிற அதாவது எதிர்காலத்தின் எண்ணம் நிரம்பியிருப்பதாக இருக்கும். திட நிச்சயம் மற்றும் பிரத்யக்ஷ பலனின் ரசனையின் பலம் நிரம்பியிருப்பதாக இல்லாத காரணத்தினால் சித்தியும் பிரத்யக்ஷமாக இருப்பதில்லை ஆனால் இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, ஒரு மணிநேரத்திற்குப் பிறகு அல்லது சில நாட்களுக்குப் பிறகு எதிர்காலத்தின் பிராப்தி ஆகி விடுகிறது என்றால் இதற்கான காரணத்தைப் புரிந்து கொண்டீர்களா? உங்களுடைய எண்ணம் என்ற விதையின் காரணமாகத் தான் பிரத்யக்ஷ சித்தி ஆவதில்லை. அனேக விதமான சாதாரண எண்ணம் இருக்கிறது. கடைசியிலோ எட்டு பேர் தான் ஆவார்கள். அந்த மாதிரி எதிர்காலத்து ஞானத்தின் சாதாரண எண்ணம் உங்களுடைய விதையை பலஹீனம் ஆக்கி விடுகிறது. மேலும் இதே எதிர்கால எண்ணத்தை உபயோகிக்கக்கூடாது, ஆனால் அந்த நேரம் யோசிக்காமலேயே உபயோகித்து விடுகிறார்கள், இதன் காரணமாக பிரத்யக்ஷ பலன் கூட எதிர்கால பலன் சொரூபத்தில் மாறி விடுகிறது. அப்படி பிரத்யக்ஷ பலனை அடைவதற்காகத் தான் எண்ணம் என்ற விதையை திட நிச்சயம் என்ற தண்ணீரால் இது கண்டிப்பாக நடக்கும், நடக்கத் தான் வேண்டும் என்று சக்திசாலியாக ஆக்குங்கள். அப்பொழுது தான் பிரத்யக்ஷமாக வெற்றி சொரூபம் ஆகி விடுவீர்கள். எப்படி உங்களுடைய நினைவுச் சிலைகள் மூலமாக சித்தி பிராப்தி அடைபவர்களின் விசேஷ இரண்டு

விஷயங்களின் விதி கூறப்பட்டிருக்கிறது ஒன்று ஏகாந்தவாசி, இன்னொன்று ஏகாக்ரதா. இதே விதியை சென்ற கல்பத்தில் உபயோகித்தது போல் சாகாரத்தில் கடைப்பிடியுங்கள். ஏகாக்ரதாவின் குறை ஏற்படுவதன் காரணமாகத் தான் திட நிச்சயத்தின் குறை ஏற்படுகிறது. ஏகாந்தவாசியின் குறை இருக்கும் காரணத்தினால் தான் சாதாரண எண்ணம் விதையை பலஹீனமாக்கி விடுகிறது. எனவே இந்த விதி மூலமாக சித்தி சொரூபமாக ஆகுங்கள், யார் சிங்கம் மேல் அமர்ந்திருப்பதைப் பார்த்தாலும் நீங்கள் அது தானே என்று பார்க்கட்டும். அப்படி நினைவுச்சின்ன ரூபத்தை இப்பொழுது நினைவு ரூபமாக ஆக்குங்கள். பாண்டவர்களின் நினைவுச்சின்னத்திலிருந்தும் பக்தர்கள் சித்தியை வேண்டுகிறார்கள். நல்லது.

அந்த மாதிரி அனேக ஆத்மாக்களுக்கு சித்தி பிராப்தி செய்விக்கக்கூடிய அனைத்து சித்தி சொரூப, மாஸ்டர் படைப்பவர் மற்றும் வரமளிப்பவர்களுக்கு, தன்னுடைய ஒவ்வொரு சங்கல்பம் மூலமாக அனேகர்களின் அனேக விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய அனைத்து பிராப்தி சொரூப அனைத்து மகான் ஆத்மாக்களுக்கு வெளிநாட்டு ஆத்மாக்களையும் சேர்த்து அனைவருக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# தனிப்பட்ட சந்திப்பு: மாயாவை வென்ற, இயற்கையை வென்ற சக்திகளின் அடையாளம்!

சக்திகள் தன்னுடைய சக்தி சொரூபம். எப்பொழுதும் ஆயுதம் தரித்த, எப்பொழுதும் பயமற்ற, அனைத்து அசுர சம்ஸ்காரங்களை சம்ஹாரம் செய்யக்கூடிய மற்றும் இயற்கை மற்றும் மாயாவை வெல்பவராக ஆகக்கூடிய -அந்த மாதிரி தன்னுடைய சுபாவத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறீர்களா? சக்திகளின் நினைவுச்சின்னத்தில் மாயாவை அடையாளமாக ஆயுதம் மற்றும் ஒளிக்கிரீடம் மேலும் இயற்கையை வென்றதின் அடையாளமாக சிங்கம் மேல் சவாரி செய்வதாக காண்பித்திருக்கிறார்கள். இந்த பறவைகள், மிருகங்கள் ஆகியவை

## 1975 அவ்யக்த முரளி

இயற்கையின் அடையாளம். இயற்கையின் தத்துவம் சொரூபமானவரைப் பயம் காட்ட முடியாது. இயற்கையின் மேலும் சவாரி அதாவது அதிகாரம். இயற்கையும் அவருடைய தாசியாக ஆகி விட்டது அதாவது அவருக்கு மரியாதை கொடுக்கிறது. அந்த மாதிரி எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருக்கிறீர்களா? நிரந்தர சுமங்கல்யத்தின் அடையாளமாகத் திலகம் வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது -யார் எப்பொழுதும் தந்தையுடன் இருக்கிறாரோ அவர் எப்பொழுதும் வெற்றித் திலகத்தை தன்னுடைய நெற்றியில் இட்டுக் கொண்டே இருப்பார். நினைவில் இருப்பது என்றால் திலகம் இடுவது. நான் இப்பொழுது மட்டுமல்ல ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்தவன் என்ற இந்த நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். இதற்கு முன்பு மயக்கமுற்றிருந்தீர்கள், மயக்கம் என்றால் யாருக்கு தன்னுடைய உணர்வு இல்லையோ. நான் யார் என்ற இதுவும் தெரியவில்லை என்றால் மயக்கம் அடைந்திருக்கிறார் இல்லையா? இப்பொழுதோ மயக்கம் தெளிந்து விட்டீர்கள். மயக்கம் தெளிந்தவர்கள் ஒருபொழுதும் தந்தையை மறக்க முடியாது. நான் தான் எப்பொழுதும் வெற்றி அடைபவன் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நல்லது.

**வரதானம்: நேரம் மற்றும் வாயுமண்டலத்தைப் பகுத்தறிந்து தன்னை பரிவர்த்தனை செய்யக்கூடிய அனைவரின் அன்பிற்குரியவர் ஆகுக!**

யாரிடம் பரிவர்த்தனை சக்தி இருக்கிறதோ அவர் அனைவருக்கும் பிரியமானவராக ஆகுகிறார், அவர் கருத்துக்களிலும் சகஜமாக இருப்பார். அவரிடம் வளைந்து கொடுப்பதற்காள் சக்தி இருக்கும். அவர் இது என்னுடைய கருத்து, என்னுடைய சேவை இவ்வளவு நல்லதாக இருந்தபோதிலும் என்னுடையது ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஒருபொழுதும் கூற மாட்டார். இந்த என்னுடையது என்பது வந்தது என்றால் கலப்படம் ஆகி விட்டது. எனவே நேரம் மற்றும் வாயுமண்டலத்தைப் பகுத்தறிந்து திட்டம், என்னுடைய தன்னை பரிவர்த்தனை செய்தீர்கள் என்றால், அனைவரின் அன்பிற்குரிய நம்பர்-1 வெற்றி அடைபவராக ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: பிரச்சனை சொரூபமாக ஆகாமல் பிரச்சனைகளை அகற்றுபவராக ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசால ரூபத்தில் சேவை செய்வதற்காக விசால புத்தி உடையவர் ஆகுங்கள்!

அனைவரும் தன்னை படைப்பவர் தந்தை மூலமாக சட்டம் மற்றும் விதியைத் தெரிந்தவர்கள் என்று நினைக்கிறீர்களா? சட்டம் மற்றும் விதியைத் தெரிந்திருப்பவர் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு காரியத்தில் சித்தி (வெற்றி) சொரூபம் ஆகிறார். அந்த மாதிரி தன்னை அனுபவம் செய்கிறீர்களா? சித்தி சொரூபம் என்றால் துக்கமற்ற ஊரின் மகாராஜா. எதிர்காலத்து இராஜ்ய பாக்கியத்தை அடைவதற்கு முன்பு தற்சமயத்திலும் துக்கமில்லா ஊரின் மகாராஜாவாக இருக்கிறீர்கள் அதாவது எண்ணத்தில் கூட துக்கத்தின் உணர்வுகள் இருக்க வேண்டாம். ஏனென்றால் துக்கமான உலகலிருந்து விடுபட்டு இப்பொழுது சங்கமயுகத்தில் இருக்கிறீர்கள். அந்த மாதிரி சங்கமயுகத்தைச் சேர்ந்த துக்கமற்ற ஊரின் மகாராஜா என்று தன்னை நினைக்கிறீர்கள் தான் இல்லையா? கவலையற்ற ஊரின் மகாராஜா என்றால் அனைத்து குஷிகளின் பொக்கிஷத்தின் அதிபதி. குஷிகளின் பொக்கிஷம் பிராமணர்களின் பிறப்புரிமை ஆகும். இந்த உரிமையின் காரணமாகத்தான் நீங்கள் உயர்ந்த ஆத்மாக்களின் பெயர் மற்றும் உருவத்திற்கு மரியாதை ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. அந்த மாதிரி துக்கமற்ற ஊரின் மகாராஜா, அவருடைய பெயரைச் சொல்வதினாலேயே அனேக ஆத்மாக்களின் துக்கம் அற்பகாலத்திற்காக விலகி விடுகிறது. அவர்களுடைய சிலைகள், படங்களைப் பார்த்து சரித்திரங்களை மகிமை செய்கிறார்கள் மற்றும் துக்கமான ஆத்மா குஷியை அனுபவம் செய்யத் தொடங்குகிறது. அந்த மாதிரி சைத்தன்யமான கவலையற்ற ஊரின் மகாராஜாவாக சுயம் நீங்கள் இருக்கிறீர்களா? தன்னுடைய பொக்கிஷங்களைத் தெரிந்திருக்கிறீர்களா? அனைத்து பொக்கிஷங்களை நினைவில்

வைத்துக் கொண்டே எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த அதாவது எப்பொழுதும் இயற்கை மற்றும் 5-விகாரங்களின் கவர்ச்சியிலிருந்து விலகியிருப்பவர். இதே குஷியின் பொக்கிஷங்களின் நிரம்பிய சொரூபம் "ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை" என்று அனுபவம் செய்கிறீர்களா? பொக்கிஷங்களின் சாவியை உறுதியாக வைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சாவியைத் தொலைந்து போக விடுவதில்லையே? நேரத்தின் மற்றும் நேரத்திற்கு ஏற்றபடி ஆத்மாக்களின் சூட்சும அழைப்பு காதில் விழுகிறதா? அல்லது தன்னிலேயே எப்பொழுதும் பிஸியாக இருக்கிறீர்களா? சென்ற கல்பத்து உங்களுடைய பக்த ஆத்மாக்கள் அவரவர்களின் இஷ்ட தேவதைகளை ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள். வந்து விடுங்கள், வந்து விடுங்கள்" என்று குரல் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். நாளாக நாளாக தன்னுடைய கூக்குரலை இசை வடிவமாக்கி அதாவது இசைக்கருவிகளை இசைத்து மிக உயர்ந்த குரலில் அழைக்கத் தொடங்குகிறார்கள். உங்கள் அனைவரையும் திருப்திப்படுத்துவதற்காக அனேக சாதனங்களை உபயோகிக் கிறார்கள். அப்படி சைத்தன்யத்தில் குப்த ரூபத்தில் கேட்டுக் கொண்டே, பார்த்துக் கொண்டே இரக்கம் வரவில்லையா? மற்றும் இதுவரையிலும் தன் மேலேயே இரக்கம் காட்டுவதில் பிஸியாக இருக்கிறீர்களா? விஷ்வ கல்யாணகாரி, மகாதானி, வரதானி சொரூபத்தில் நிலைத்திருப்பதினால் தான் இரக்கம் வரும். தன்னை ஜெகத்மாதா மற்றும் ஜெகத்பிதாவின் சொரூபத்தில் அனுபவம் செய்வதால்தான் இரக்கம் உண்டாகும். ஆத்மாக்களின் துக்கத்தை அலைகழிக்கப்படுவதை சகித்துக் கொள்ள முடியாது ஆனால் இந்த சொரூபத்தில் குறைந்த நேரம் மட்டுமே இருக்கிறீர்கள். நேரத்திற்கு ஏற்றபடி சேவையின் சொரூபம் எல்லைக்கப்பாற்பட்ட மற்றும் விசாலமானதாக இருக்க வேண்டும். எல்லைக்கப்பாற்பட்ட சொரூபம் என்பது எது? இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதை எல்லைக்கப்பாற்பட்டது என்று கூற முடியுமா? மகாநாடு எல்லைக்கப்பாற்பட்டதாக ஆனதா? தொடக்கத்தில் இருந்ததை ஒப்பிடும் போது இப்பொழுது எல்லைக்கப் பாற்பட்டது என்று நினைக்கிறீர்கள் ஆனால் கடைசி எல்லைக்கப்பாற்பட்ட சொரூபம் எது?

நேரத்தின் வேகத்திற்கு ஏற்றபடி, செய்தி கொடுக்கும் காரியத்தில் இதுவரை எத்தனை சதவிகிதத்தினருக்கு செய்தி

கொடுத்திருக்கிறீர்கள். சத்யுகத்தின் தொடக்கத்தின் 9-லட்சம் பிரஜைகள் உங்கள் எதிரில் தென்படுகிறார்களா? தொடக்கத்தின் பிரஜைகளுக்கும் கொஞ்சம் விசேஷங்கள் இருக்கும் இல்லையா? அந்த மாதிரி விசேஷம் நிறைந்த ஆத்மாக்கள் அனைத்து சேவை நிலையங்களிலும் தென்படுகிறதா அல்லது அதுவும் கூட இப்பொழுது திரைச்சீலைக்கு பின்னால் தான் இருக்கின்றனரா? 16-ஆயிரத்தின் மாலை தென்படுகிறதா? டீச்சர்கள் 16-ஆயிரத்தின் மாலையை தயார் செய்திருக்கிறீர்களா? திரைச்சீலையை அகற்றுவதற்கான தேதி எது? நேரத்திற்கு ஏற்றபடி இப்பொழுது நடக்கத்தான் வேண்டும் ஆனால் அந்த மாதிரியும் புரிந்து கொண்டு அலட்சியமானவராக ஆகாதீர்கள். இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட திட்டங்களை உருவாக்குங்கள். எல்லைக்கப்பாற்பட்ட திட்டங்கள் என்றால், எந்த ஆத்மாக்களுக்கு நீங்கள் சேவை செய்கிறீர்களோ அந்த ஒவ்வொரு ஆத்மாவும் அனேக ஆத்மாக்களை உருவாக்குவதற்கு பொறுப்பாளர் ஆகட்டும். ஒவ்வொரு ஆத்மாவும் எல்லைக்கப்பாற்பட்ட ஆத்மாக்களின் சேவைக்காக பொறுப்பாளர் ஆகட்டும். இதுவரையில் நீங்கள் சுயம் ஒவ்வொரு ஆத்மாவிற்காகத்தான் நேரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அந்த மாதிரியான ஆத்மாக்களுக்கு சேவை செய்யுங்கள், அந்த ஆத்மாக்களே அனேக ஆத்மாக்களின் சேவைக்காக பொறுப்பாளர் ஆகி விடட்டும். அவருடைய பெயரினாலேயே சேவை நடக்கட்டும், எப்படி அனேக ஆத்மாக்கள் தன்னுடைய உறவு நெருக்கம் மற்றும் சேவையின் ஆதாரத்தில் அனேகருக் கிடையில் பிரசித்தி ஆகிறார்கள். அதாவது அவருடைய குணங்கள் மற்றும் காரியத்தின் முத்திரை அனேகர்களுக்காக முதலிலேயே இருக்கிறது. இதில் செல்வந்தர்களின் விஷயம் மட்டும் இல்லை மற்றும் பதவியின் விஷயம் மட்டும் இல்லை ஆனால் அனேக சாதாரணமானவர்களும் தன்னுடைய குணம் மற்றும் சேவையின் ஆதாரத்தில் அவரவர்களின் சேத்திரத்தில் பிரசித்தியாக இருக்கிறார்கள். அரசியல்வாதி யானாலும் அல்லது ஆன்மீகவாதியானாலும் பிரபாவசாலியானவராக இருக்கட்டும். அந்த மாதிரி ஆத்மாக்களைத் தேர்ந்தெடுங்கள் அவர்கள் உங்கள் தரப்பிலிருந்து சேவைக்காக பொறுப்பாளர் ஆகிக் கொண்டே இருக்கட்டும். அந்த மாதிரி தரமுள்ள சேவை இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

பெயரால் பிரசித்தியானவர்கள் இரண்டு விதமானவர்கள் இருக்கிறார்கள். ஒன்று பதவியின் காரணமாக, இன்னொன்று குணம் மற்றும் காரியத்தின் ஆதாரத்தினால் பிரசித்தியானவர்கள். பதவியின் ஆதாரத்தினால் பெயர் உள்ளவர்களின் பிரபாவம் அற்ப காலத்திற்காக ஏற்படும். குணம் மற்றும் காரியத்தின் ஆதாரத்தில் ஆத்மாக்களின் பிரபாவம் நிரந்தரமாக ஏற்படும். எனவே ஆன்மீக சேவைக்கு பொறுப்பாளராக அந்த மாதிரி பிரசித்தி பெற்ற ஆத்மாக்களை கண்டுபிடித்தெடுங்கள். அப்பொழுது தான் குறைந்த நேரத்தில் எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்ய முடியும். இதைத் தான் விஹங்க மார்க்கம் (விசால ரூபம்) என்று கூறுவது. இதில் ஒருவர் மூலமாக அனேகருக்கு அம்பு பாய்ந்து விட வேண்டும். அந்த மாதிரி ஆத்மாக்களின் வருகையினால் அனேக ஆத்மாக்கள் வருவது தானாக ஏற்பட்டு விடும். எனவே இப்பொழுது அந்த மாதிரி சேவைக்கான வடிவமைப்பை உருவாக்குங்கள். அந்த மாதிரி சேவைக்கு பொறுப்பாளர் ஆகும் ஆத்மாக்கள் இறை மாணவர்கள் உங்களைப் போல் இடைவிடாது வரும் மாணவர்களாக ஆக மாட்டார்கள். அவர்களுடைய உறவு மற்றும் நெருக்கம் மட்டும் அன்பு நிறைந்ததாக இருக்கும். அந்த மாதிரி ஆத்மாக்களை விசால புத்தி உடையவர்களாக ஆக்கி அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி, அவர்களின் பிராப்திக்கான ஆதாரத்தை புரிந்து கொண்டு, அவர்களின் அனுபவம் மூலமாக அனேகர்களின் சேவைக்கு பொறுப்பாளர் ஆக்க வேண்டியதாக இருக்கும். இந்த எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்காக பகுத்தறியும் சக்தியின் அவசியம் இருக்கிறது. எனவே இப்பொழுது அந்த மாதிரி விசாலபுத்தி உடையவராக ஆகி சேவைக்கான விசால திட்டத்தை உருவாக்குங்கள். அந்த மாதிரி விசால சேவை செய்ததற்கான நிரூபணத்தை எந்த உண்மையான குழந்தைகள் கொடுக்கிறார்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். அந்த மாதிரி சேவைக்கு பொறுப்பாளர் ஆகுபவர்கள் இராஜபதவிக்கான அதிகாரிகள் ஆகிறார்கள். எந்த மண்டலம் (ஸோன்) நம்பர் ஒன்-ல் செல்கிறது என்ற இந்த ரிசல்ட் மூலம் தெரிய வந்து விடும். நல்லது.

அந்த மாதிரி சேவைக்குத் தகுதியான, எல்லைக்கப்பாற்பட்ட விசாலபுத்தி உடையவர்களுக்கு, எண்ணம் மூலமாகவும் அனேக ஆத்மாக்களுக்கு சேவை செய்யக்கூடிய, அந்த மாதிரி தந்தைக்குச் சமமான எப்பொழுதும்

களைப்பற்ற சேவாதாரிகளுக்கு, நிரூபணம் கொடுக்கக்கூடிய உண்மையான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: நேரம் மற்றும் வாயுமண்டலத்தைப் பகுத்தறிந்து தன்னை பரிவர்த்தனை செய்யக்கூடிய அனைவரின் அன்பிற்குரியவர் ஆகுக !**

யாரிடம் பரிவர்த்தனை சக்தி இருக்கிறதோ அவர் அனைவருக்கும் பிரியமானவராக ஆகுகிறார், அவர் கருத்துக்களிலும் சகஜமாக இருப்பார். அவரிடம் வளைந்து கொடுப்பதற்கான சக்தி இருக்கும். அவர் இது என்னுடைய கருத்து, என்னுடைய திட்டம், என்னுடைய சேவை இவ்வளவு நல்லதாக இருந்தபோதிலும் என்னுடையது ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஒருபொழுதும் கூற மாட்டார். இந்த என்னுடையது என்பது வந்தது என்றால் கலப்படம் ஆகி விட்டது. எனவே நேரம் மற்றும் வாயுமண்டலத்தைப் பகுத்தறிந்து தன்னை பரிவர்த்தனை செய்தீர்கள் என்றால், அனைவரின் அன்பிற்குரிய நம்பர் ஒன் வெற்றி அடைபவராகி விடுவீர்கள்.

**சுலோகன்: பிரச்சனை சொரூபமாக ஆகாமல் பிரச்சனைகளை அகற்றுபவராக ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 04.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஃபரிஷ்தா நிலையின் அனுபவம் செய்வதற்காக தன்னை அவதரித்த ஆத்மா என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். மேலும் உறுதியான எண்ணம் என்ற தீக்குச்சியினால் பலஹீனங்கள் என்ற இராவணனை எரித்து விடுங்கள்!

தன்னை ஃபரிஷ்தாக்களின் சபையில் அமர்ந்திருக்கும் ஃபரிஷ்தா என்று நினைக்கிறீர்களா? ஃபரிஷ்தா என்றால் யாருக்கு அனைத்து சம்மந்தம் மற்றும் அனைத்து ரிஷ்தாக்கள் (உறவுகள்) ஒருவருடன் இருப்பது மற்றும் எப்பொழுதும் அந்த ஒருவரின் இரசனையின் நிலையிலேயே நிலைத்திருப்பது. ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு வார்த்தை, ஒருவரின் நினைவிலேயே இருந்து ஒருவரின் சேவைக்காக போகும் பொழுதும், வரும் பொழுதும் மட்டும் இருப்பது. பார்த்துக் கொண்டும் பேசிக் கொண்டும், காரியங்களைச் செய்து கொண்டே உடல் மற்றும் உலகிய உணர்வுகளிலிருந்து விலகி, இந்த உடல் என்ற பூமியின் நினைவிலிருந்து புத்தி என்ற கால்கள் எப்பொழுதும் மேலே இருப்பது அதாவது விலகியிருப்பது எப்படி தந்தை ஈஸ்வரிய சேவைக்காக, குழந்தைகளை உடன் அழைத்துச் செல்லும் சேவைக்காக மற்றும் உண்மையான பக்தர்களுக்கு வெகு காலத்து பக்தியின் பலனைக் கொடுப்பதற்காக விலகி இருப்பவராக மற்றும் உடலற்றவராக இருந்த போதிலும் அற்ப காலத்திற்காக ஆதாரம் எடுக்கிறார். மேலும் அவதரிக்கிறார். அதே போலவே ஃபரிஷ்தா என்றால் விலகிய மற்றும்

அன்பானவர், தந்தைக்குச் சமமாக தன்னை அவதரித்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா? அதாவது ஈஸ்வரிய சேவைக்காக மட்டும் இந்த பிராமண வாழ்க்கை கிடைத்திருக்கிறது. தர்ம ஸ்தாபகர்கள் தர்மத்தை ஸ்தாபனை செய்யும் பாகத்தைச் செய்வதற்காக வருகிறார்கள். அப்படி உங்களுடைய பெயருமே சக்தி அவதாரம் - இந்த நேரம் அவதாரமாக இருக்கிறேன். தர்ம ஸ்தாபகனாக இருக்கிறேன். தர்மத்தை ஸ்தாபனை செய்யும் காரியத்தைத தவிர்த்து வேறு எந்தக் காரியமும் பிராமணர்கள் உங்களுக்கு அதாவது அவதரித்திருக்கும் ஆத்மாக்களுக்கு இல்லவே இல்லை. எப்பொழுதும் இதே நினைவில் இருந்து இதே காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களைத் தான் ஃபரிஷ்தா என்று கூறுவது. ஃபரிஷ்தா டபுள் லைட் ரூபமானவர்கள். லைட் என்றால் ஒன்று எப்பொழுதும் ஜோதி சொரூபமானது. லைட் என்றால் இன்னொன்று பழைய கணக்கு வழக்கின் சுமையிலிருந்து விடுபட்டு அதாவது லேசாக இருப்பது. அந்த மாதிரி டபுள் லைட் சொரூபத்தில் தன்னை அனுபவம் செய்கிறீர்களா?

இந்த பிராமண வாழ்க்கை ஈஸ்வரிய காரியத்தைத் தவிர வேறு எந்தக் காரியத்திற்காவது, ஸ்ரீமத்திற்கு புறம்பாக ஆத்மாக்களின் வழிப்படி மற்றும் தன்னுடைய மனம் சொல்லும் வழிப்படி வேறு ஏதாவது காரியத்திற்கு உபயோகப்படுத்தவில்லையே? இந்த பிராமண வாழ்க்கையும் தந்தை மூலமாக ஈஸ்வரிய சேவைக்காக கிடைத்திருக்கும் அவருடைய சொத்தாகும். அவருடைய சொத்தில் ஏதாவது ஏமாற்றுதல் செய்யும் காரியத்தையோ செய்யவில்லையே? எண்ணம் மூலமாகவும் கூட இந்த பிராமண வாழ்க்கையின் ஒரு மூச்சைக்கூட வேறு எந்தக் காரியத்திலும் ஈடுபடுத்த முடியாது. எனவே தான் பக்தியில் மூச்சுக்கு மூச்சு நினைவு செய்வது என்பது இதன் நினைவாகக் கடைபிடிக்கப்பட்டு வந்திருக் கிறது. நீங்கள் நிரந்தரமான ஃபரிஷ்தாவா அல்லது அற்ப காலத்து ஃபரிஷ்தாவா? எப்படி பக்தியில் கூட தானமாக கொடுக்கப்பட்ட பொருள் மற்றும் அர்ப்பணம் செய்யப்பட்ட பொருளை வேறு எந்தக் காரியத்திலும் ஈடுபடுத்த முடியாது என்ற நியமம் இருக்கிறது. அப்படி நீங்கள் அனைவரும் பிராமண வாழ்க்கையில் பாப்தாதாவிடம் முதல் உறுதிமொழியாக என்ன செய்திருக்கிறீர்கள்? நினைவு இருக்கிறதா? அல்லது அதையும் மறந்து விட்டீர்களா? தந்தையின் எதிரில் உடல், மனம், பொருள் அனைத்தும் உங்கள் எதிரில் சமர்ப்பணம் செய்கிறோம் என்பது

தான் உங்களுடைய முதல் உறுதிமொழியாக இருந்தது. எப்பொழுது அனைத்தையும் சமர்ப்பணம் செய்திருக்கிறீர்கள் என்றால், அனைத்தும் என்றால் எண்ணம், சொல், செயல், மூச்சு, சம்மந்தம், அனைத்து நபர்கள், வைபவம், சம்ஸ்காரம், சுபாவம் உள்உணர்வு, பார்வை மற்றும் நினைவு அனைத்தையும் அர்ப்பணம் செய்தீர்கள். இதைத் தான் சமர்ப்பணம் என்று கூறுவது. சமர்ப்பணத்தையும் விட மேலான மற்றும் சக்திசாலியான வார்த்தையாக தன்னை சர்வஸ்வ தியாகி (அனைத்தையும் தியாகம் செய்தவர்) என்று கூறுகிறீர்கள்.

அனைவரும் சர்வஸ்வ தியாகியா? அல்லது தியாகியா? சர்வஸ்வ தியாகி என்றால் என்னென்ன தியாகம் செய்திருக்கிறீர்கள் உறவு. நெருக்கம், உணர்வுகள், சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் இவை அனைத்தையும் கடந்த காலத்து 63-ஜென்மங்களின் கணக்கு வழக்கின் மீதமிருக்கும் அம்சத்தையும் வம்சத்தோடு தியாகம் செய்திருக்கிறீர்கள். எனவே சர்வஸ்வ தியாகம் என்று கூறப்படுவது. அந்த மாதிரி சர்வஸ்வ தியாகி யாருக்கு பழைய கணக்கு வம்சத்துடன் முடிந்து விட்ட அந்த மாதிரியான சர்வஸ்வ தியாகி நிலை இது. என்னுடைய கடந்த கால சுபாவம், சம்ஸ்காரம் என்று அந்த மாதிரி ஒருபொழுதும் நினைக்கவும் முடியாது. பழைய கணக்கு இதுவரை எப்பொழுதாவது இழுக்கிறதா, கர்ம பந்தனத்தின் சுமை, கர்ம சம்மந்தத்தின் சுமை, ஏதாவது நபர் மற்றும் சாதனத்தின் ஆதாரத்தின் சுமை ஆத்மா என்னை தன் பக்கம் ஈர்க்கிறதா? இந்த மாதிரியான எண்ணம் மற்றும் வார்த்தை சர்வஸ்வ தியாகியினுடையது அல்ல. சர்வஸ்வ தியாகி அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்டு, அனைத்து சுமைகளிலிருந்தும் விடுபட்டு, ஒவ்வொரு எண்ணத்தில் பாக்கியத்தை உருவாக்கக்கூடிய பலகோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவராக இருப்பார். அந்த மாதிரியானவருக்கு ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கின் வருமானம் இயல்பாகவே ஏற்படுகிறது. அந்த மாதிரி சர்வஸ்வ தியாகிகளாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? வார்த்தையின் அர்த்தத்தின் சொரூபத்தில் நிலைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சொல்பவர்கள் இல்லை ஆனால் செய்பவர்கள் மற்றும் அனேகர்களை செய்விக்கக்கூடியவர்கள் தான் இல்லையா? கடினமாகத் தோன்றவில்லையே? கடினமாகத் தோன்றுவதற்கான கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால் பிராமண வாழ்க்கையின் தாரணை மற்றும்

காரியமே இது தான். எது வாழ்க்கையின் உண்மையான காரியமாக இருக்குமோ அது ஒருபொழுதும் யாருக்கும் கடினமாக இருக்காது. எப்பொழுது தன்னை அவதரித்திருக்கும் ஆத்மா அதாவது சக்தி அவதாரம் என்று புரிந்து கொள்ளவில்லையோ அப்பொழுது கடினமாகத் தோன்றுகிறது. நான் அவதாரம் ஆவேன் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்காக தர்ம ஆத்மாவாக இருக்கிறேன். தர்மம் என்றால் ஒவ்வொரு எண்ணமும் இயல்பாகவே தர்மத்திற்காகவே இருக்கும் புரிந்ததா? அந்த மாதிரியானவரை ஃபரிஷ்தா என்று கூறுவது. இப்பொழுது என்ன செய்வேன்? எப்படி செய்வேன்? ஆவதில்லை, தெரிவதில்லை. மேலும் விரும்பாவிட்டாலும் அப்படி நடந்து விடுகிறது என்று அந்த மாதிரி வார்த்தைகளை ஒருபொழுதும் கூறாதீர்கள். இந்த வார்த்தைகளை யார் கூறுவார்கள்? ஃபரிஷ்தா கூறுவார்களா அல்லது சர்வஸ்வ தியாகி கூறுவார்களா? மாஸ்டர் சர்வ சக்திவானாக இருந்து கொண்டு இந்த வார்த்தைகளா? இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் இந்த வார்த்தைகளைப் பேச முடியுமா? அனேகர்களை பந்தனத்தில் இருந்து விடுவிக்கும் ஆத்மா இந்த மாதிரி வார்த்தைகளைப் பேச முடியுமா? இது பந்தனத் திலிருந்து விடுபட்ட ஆத்மாக்களின் வார்த்தையா? ஆனால் நீங்கள் அனைவருமோ பந்தனத்திலிருந்து விடுபட்ட ஆத்மாக்களா? இன்றிலிருந்து அந்த மாதிரி எண்ணம் மற்றும் வார்த்தைக்கு நிரந்தரமாக முடிவு கட்டுங்கள். உறுதியான எண்ணத்தின் தீக்குச்சி மூலம் இன்று இந்த பலஹீனங்கள் என்ற இராவணனை எரித்து விடுங்கள். அதாவது தசரா கொண்டாடுங்கள். ஐந்து விகாரங்களின் வம்சத்தையும் மற்றும் ஐந்து தத்துவங்களின் அனேக விதமான கவர்ச்சியையும் இந்த பத்து விஷயங்களில் வெற்றி அடைபவர் ஆனீர்கள் என்றால் விஜயதசமி கொண்டாடுவதாகும். நல்லது.

அவ்வாறு விஜயதசமி கொண்டாடக்கூடிய வெற்றி ரத்தினம் நெற்றியில் வெற்றியின் அடையாளம் இடப்பட்டுள்ள, அத்தகைய அழியாத திலகதாரி, சதா அழியாத சிம்மாசனதாரி, அழியாத மூர்த்தி, சர்வ ஆத்மாக்களையும் பந்தன்-முக்த் ஆக்கக்கூடிய, யோக-யுக்த், ஸ்நேக-யுக்த், யுக்தி-யுக்த், சர்வ சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

'

இன்றிலிருந்து தீதி, தாதியிடம் யாரும் செல்லாதீர்கள். ஆன்மீக சந்திப்பை செய்வதற்காக மட்டும் செல்லுங்கள் ஆனால் இந்த விஷயங்களைப் பேசுவதற்காகச் செல்லாதீர்கள். ஏதாவது வாங்குவதற்காகச் செல்லுங்கள் ஆனால் எந்தப் புகாரையும் எடுத்துக் கொண்டு செல்லாதீர்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து அதிகாரம் மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் தான் இராஜரிஷி ஆவார்!

இன்று பாப்தாதா எந்த சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார்? இது இராஜரிஷிகளின் சடையாகும். தன்னை இராஜரிஷி என்று புரிந்து எப்பொழுதும் நடந்து கொள்கிறீர்களா? ஒரு பக்கம் இராஜ்யம், இன்னொரு பக்கம் ரிஷி. இரண்டின் லட்சணமும் வேறு வேறு, அது பாக்கியம் ஆகும், இது தியாகம் ஆகும். அது அனைத்து அதிகாரம் நிறைந்தது மற்றும் இது ரிஷி என்றால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர். அனைத்து அதிகாரம் நிறைந்தவர் மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர். அவர் அனைவருக்கும் பிரியமானவர் மற்றும் இவர் அனைவரிடமிருந்தும் விலகியவர். இரண்டு லட்சணமும் வார்த்தைகள் மற்றும் காரியத்தில் எப்பொழுதும் சேர்ந்தே தென்படுகிறதா? தற்சமயம் சுயராஜ்யம் அதாவது இந்த அனைத்து கர்மேந்திரியங்கள் மேல் சுயத்தின் இராஜ்யம். இதைத் தான் சுயராஜ்யம் என்று கூறுவது மற்றும் அது எதிர்காலத்தின் இரட்டை இராஜ்யம் அதாவது சுயத்தின் மேல் இராஜ்யம் மற்றும் உலகின் மேல் இராஜ்யம். அந்த மாதிரி இரட்டை இராஜ அதிகாரியாக இருக்கிறீர்களா? இரட்டை இராஜ்யத்தின் போதை எப்பொழுதும் இருக்கிறதா? எவ்வளவு இராஜ்யத்தின் போதையோ அந்த அளவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் அதாவது ரிஷி ரூபம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறதா? இரண்டின் சமநிலை இருக்கிறதா? அல்லது ஒரு சொரூபம் நினைவு இருக்கிறது மற்றும் இன்னொன்று மறந்து விடுகிறதா? இந்தப் பழைய உடல் மற்றும் உடலின் உலகத்திலிருந்து எல்லைக்கப் பாற்பட்ட வைராக்கியம் உடையவர்களாக ஆகி விட்டீர்களா? அல்லது இப்பொழுது கூட இந்தப் பழைய உடல் மற்றும் உலகம் தன் பக்கம் கவர்ந்திழுக்கிறதா? இந்த உலகம் சுடுகாடு என்று அனுபவம் ஆகிறதா?

# 1975 அவ்யக்த முரளி

அனைவரும் நினைவிழந்து கிடக்கும் ஆத்மாக்களாகத் தென்படுகிறார்களா? அல்லது வார்த்தை அளவில் மட்டும் தானா? இவர்கள் அனைவரும் இறந்து கிடக்கிறார்கள் அதாவது சுடுகாடாக இருக்கிறது. என்று எதுவரை அனுபவம் ஆகவில்லையோ அதுவரை எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக ஆக முடியாது. இன்றைய உலகில் கூட எல்லைக்குட்பட்ட வைராக்கியம் உடையவர்கள் காட்டிற்கு அல்லது சுடுகாட்டிற்குச் செல்கிறார்கள். எனவே தான் சுடுகாட்டு வைராக்கியம் என்று வர்ணிக்கப்பட்டு இருக்கிறது. அப்படி எதுவரை இந்த உலகம் சுடுகாடு என்று அனுபவம் ஆகவில்லை என்றால் நிரந்தரமாக எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் எப்படி அனுபவம் ஆகும்.

நான் ரிஷியாக ஆகியிருக்கிறேனா? என்று உங்களை நீங்களே கேளுங்கள். அந்த மாதிரி நிச்சயபுத்தி உடையவர், வைராக்கியத்தின் கூடவே அதிகாரத்தின் குஷியிலும் இருப்பார் என்றால் இராஜரிஷி ஆவதற்காக எவ்வளவு இராஜ்யத்தின் போதையோ அந்த அளவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராகத் தென்படுவார். இரண்டும் சேர்ந்தே அனுபவம் ஆகும். எவ்வளவு சுடுகாடு என்று அனுபவம் ஆகுமோ அந்த அளவே சொர்க்கம் எதிரில் தென்படும். தியாகத்தின் கூடவே பாக்கியமும் தெளிவாக எதிரில் தென்படும். சம்பூர்ண இராஜரிஷியின் நிலை என்றால் போதை மற்றும் அடையக்கூடிய லட்சியம் இரண்டுமே தெளிவாக இருக்கும். லட்சியம் என்றால் சம்பூர்ண நிலை. அந்த மாதிரி போதையில் இருக்கக்கூடியவர்களின் எதிரே எப்படி ஸ்தூல கண்களின் எதிரில் ஸ்தூல பொருட்கள் தெளிவாகத் தென்படுகிறதோ அந்த அளவு அருகில் இருக்கும். எப்பொழுது எதிரில் தென்படுகிறது என்றால் இந்தப் பொருள் இருக்கிறதா அல்லது இல்லையா, என்ன மற்றும் எப்படி என்று எந்த எண்ணமும் எழாது. அந்த மாதிரியே சம்பூர்ண நிலையின் லட்சியம் எதிரில் தென்படும் காரணத்தினால் நான் ஆவேனா அல்லது ஆக மாட்டேனா மற்றும் சம்பூர்ண நிலை என்று எதைக் கூறுவது என்ற கேள்விகள் முடிவடைந்து விடும். தன்னுடைய சம்பூர்ண நிலையின் அடையாளங்கள் தன்னுள் தெளிவாகத் தென்படும். அந்த அடையாளங்கள் என்னவாக இருக்கும் அதைத் தெரிந்திருக்கிறீர்களா மற்றும் அனுபவம் செய்கிறீர்களா?

முதல் அடையாளம் பழைய உலகின் எந்தவொரு நபர் அல்லது சாதனத்தின் மேல் எண்ண அளவில் மற்றும் கனவு அளவில் கூட பற்றுதல் இருக்காது. எப்பொழுதும் தன்னை கலியுக உலகிலிருந்து விலகி வந்த சங்கமயுகத்தைச் சேர்ந்தவர் என்று புரிந்து கொள்வார்கள். முழு உலகின் அசுர குணம் உள்ள ஆத்மாக்களை நன்மை பயக்கும் மற்றும் இரக்கம் நிறைந்த பார்வையோடு பார்ப்பார்கள். எப்பொழுதும் தன்னை தந்தைக்குச் சமமான சேவாதாரியாக அனுபவம் செய்வார்கள். ஒவ்வொரு சூழ்நிலை மற்றும் சோதனையில் எப்பொழுதும் தன்னை வெற்றி அடைபவர் என்று அனுபவம் செய்வார்கள். வெற்றி என்னுடைய பிறப்புரிமை அப்படி உரிமை சொரூபம் என்று புரிந்து ஒவ்வொரு காரியமும் செய்வார்கள். எப்பொழுதும் திரிமூர்த்தி ஆசனதாரியாக அனுபவம் செய்வார்கள். மூன்று காலத்தையும் தெரிந்த நிலையின் நினைவு சொரூபம் இருக்கும் காரணத்தினால் ஒவ்வொரு காரியத்தின் மூன்று காலங்களை தெரிந்திருக்கும், ஒவ்வொரு காரியத்தையும் உயர்ந்த காரியமாகவும், நல்ல காரியமாகவும் ஆக்குவார்கள். பாவ கணக்கு முடிந்து விட்டதாக அனுபவம் ஆகும். ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு எண்ணமும் அவசியம் வெற்றி அடையும் என்று எப்பொழுதும் அனுபவம் செய்வார்கள். பழைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்திலிருந்து விலகியிருப்பதாக அனுபவம் செய்வார்கள். எப்பொழுதும் பார்வையாளரின் இருக்கையில் அமர்ந்திப்பதாக தன்னை அனுபவம் செய்வார்கள். இது தான் அடையாளங்கள் மற்றும் லட்சியமும் கூட. அந்த மாதிரியானவரை இராஜரிஷி என்று கூறுவது, அந்த மாதிரி இராஜரிஷியாக ஆகியிருக்கிறீர்களா? இராஜரிஷியின் பட்டமோ கிடைத்திருக்கிறது தான் இல்லையா? எது பட்டமோ அதுவே நடைமுறையிலும் இருக்கிறது தான் இல்லையா.

பிராமணன் என்றால் கூறுவது மற்றும் செய்வது, நினைப்பது மற்றும் பேசுவது, கேட்பது மற்றும் சொரூபத்தில் கொண்டு வருவது ஒரே சமமாக இருக்க வேண்டும். நீங்கள் அனைவரும் பிராமணர்கள் தான் இல்லையா? ஒரு நொடியில் தன்னை எங்கு விரும்புகிறீர்களோ அந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? அந்த மாதிரி எவரெடியாக ஆகியிருக்கிறீர்களா? எப்படி உடலில் வருவது மிகவும் சுலபமாக மற்றும் இயல்பாக அனுபவம் ஆகிறதோ அதே மாதிரி அசரீரி ஆவதற்கான

பயிற்சியும் அந்த அளவே சரளமாக அனுபவம் ஆகிறதா? நீங்கள் ஆன்மீக இராணுவத்தினர் தான் இல்லையா? இராணுவத்தினர் ஒவ்வொரு நேரமும் கட்டளையை ஒரு நொடியில் நடைமுறையில் கொண்டு வருபவர்கள். இப்பொழுதே அசரீரி ஆகுக என்ற கட்டளை கிடைக்கிறது என்றால் எவரெடியாக இருக்கிறீர்களா அல்லது ரெடியாக வேண்டியதாக இருக்குமா? ஒருவேளை இராணுவம் தயார் ஆவதில் நேரம் எடுக்கிறது என்றால் வெற்றி கிடைக்குமா? அந்த மாதிரி எப்பொழுதும் எவரெடியாக இருப்பதற்கான பயிற்சியை செய்யுங்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அனைத்து அதிகாரங்களின் போதையில் இருக்கக்கூடிய சங்கமயுகத்து உயர்ந்த பிராமணர்களுக்கு, சுயராஜ்யம் மற்றும் உலக இராஜ்யத்தின் போதையில் இருக்கக்கூடிய, அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

## சில முக்கிய சகோதர சகோதரிகளுடன்: அமிர்தவேளையில் ஆன்மீக உரையாடல் செய்கிறார்கள் எனினும், மகாரதியின் உரையாடல், சந்திப்பிற்கும் மற்ற அனேக ஆத்மாக்களின் உரையாடல், சந்திப்பிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாகி விடுகிறது என்ற வர்ணனை இருக்கிறது இல்லையா? இந்த பழமொழி இந்த ரூபத்தில் தவறானது! ஏனென்றால், இடையிலிருந்து ஒரு வார்த்தையை எடுத்து விட்டார்கள். ஐக்கியம் என்ற வார்த்தை மட்டும் அல்ல, ஆனால் அன்பில் ஐக்கியமாவது ஒரு வார்த்தை ஐக்கியமாவது. இன்னொரு வார்த்தை

அன்பில் ஐக்கியமாவது. யாராவது மிக அன்போடு சந்திக்கிறார்கள் என்றால் அந்த நேரம் அன்பின் சந்திப்பின் வார்த்தையாக என்ன கூறுகிறார்கள்? இவர்களோ ஒருவர் இன்னொருவரில் கலந்து விட்டது மாதிரி இருக்கிறார்கள் அல்லது இருவரும் சேர்ந்து ஒன்றாகி விட்டார்கள் என்று கூறுவார்கள். அந்த மாதிரி அன்பின் வார்த்தைகளை அவர்கள் இந்த ரூபத்தில் எடுத்து விட்டார்கள். ஒருவர் இன்னொருவரில் கலந்து ஒன்றாகி விட்டார்கள் என்ற வர்ணனை இருக்கிறது இல்லையா? இது தான் மகாரதிகளின் சந்திப்பு. தந்தையில் ஒன்றரக் கலந்து விட்டார்கள் என்றால் தந்தையின் சொரூபமாகி விட்டார்கள். அந்த மாதிரி சக்திசாலியான அனுபவம் மகாரதிகளுக்கு அதிகமாக இருக்கும். மற்றபடி பிற ஆத்மாக்கள் பாபாவிடமிருந்து அன்பு, சக்தியை இழுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள், யுத்தம் செய்து செய்து நேரத்தை முடித்து விடுவார்கள் ஆனால் மகாரதி அமர்ந்தார் மற்றும் ஒன்றரக் கலந்து விட்டார். அவர்களுடைய அன்பு இவ்வளவு சக்திசாலியானது, அவர்கள் தந்தையை தன்னுள் அடக்கி விடுகிறார்கள். தந்தை மற்றும் குழந்தை சமசொரூபத்தின் நிலையில் இருப்பார்கள். எப்படி தந்தை நிராகாரமாக இருக்கிறாரோ அதே போல் குழந்தையும் இருப்பார். எப்படி தந்தையின் குணமோ அதே போல் மகாரதி குழந்தைகளின் குணமும் சமமானதாக இருக்கும். மாஸ்டர் ஆகி விட்டார்கள் இல்லையா? அப்படி மகாரதி குழந்தைகளின் சந்திப்பு என்றால் அன்பில் ஐக்கியமாவது. தந்தையில் கலந்து விடுவது. கலந்து விடுவது என்றால் சமமான சொரூபத்தின் அனுபவம் செய்வது. அந்த நேரம் தந்தை மற்றும் மகாரதி குழந்தைகளின் சொரூபம் மற்றும் குணங்களில் வித்தியாசம் அனுபவம் செய்ய மாட்டார்கள். சாகாரத்தில் இருந்தபோதிலும் நிராகார சொரூபத்தின் அன்பில் மூழ்கியிருப்பார்கள் என்றால் சொரூபமும் தந்தைக்குச் சமமாக ஆகி விட்டது அதாவது தன்னுடைய நிராகார சொரூபம் நடைமுறை நினைவில் இருக்கிறது. எப்பொழுது சொரூபம் தந்தைக்குச் சமமானது என்றால் குணமும் தந்தைக்குச் சமமானது. எனவே மகாரதிகளின் சந்திப்பு என்றால் தந்தையுடன் கலந்து விடுவது. எப்படி நதி, கடலில் கலந்து கடல் சொரூபம் ஆகி விடுகிறது அதாவது தந்தையின் அனைத்து குணமும் தன்னில் அனுபவம் ஆகும். பிரம்மாபாபாவின் எந்த அனுபவம் சாகாரத்தில் இருந்ததோ அது மகாரதிகளுக்கும் இருக்கும். அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? கடலில் கலந்து விடுவது என்றால் தன்னுடைய சம்பூர்ண நிலையின் அனுபவம்

செய்வது. இந்த அனுபவம் இப்பொழுது அதிகமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணத்தில் வரதானி, பார்வையில் வரதானி, பார்வையால் நன்மை செய்பவர். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெருக்கத்தைப் பார்க்கிறார். நெருக்கம் என்றால் கலந்து விடுவது. அமிர்தவேளையின் நேரம் விசேஷமாக அந்த மாதிரி சக்திசாலியான அனுபவம் செய்வதற்கானது. அந்த மாதிரி அனுபவத்தின் பிரபாவம் முழு நாளும் இருக்கும். எது மிக அன்பிற்குரிய ஒன்றோ அது எப்பொழுதும் மனதில் உள்ளடங்கி இருக்கும். இது தான் அமிர்தவேளையில் மகாரதிகளின் சந்திப்பு. பாப்தாதாவும் யார் யார் எவ்வளவு நெருக்கத்தில் இருக்கிறார்கள் என்று சோதனையும் செய்கிறார். எப்படி கோவிலில் தரிசனம் செய்வதற்காக திரைச்சீலையை அகற்றுகிறார்களோ அதே போல் அமிர்தவேளையின் காட்சியும் இருக்கும். ஒவ்வொரு குழந்தையும் அமிர்தவேளையின் சந்திப்பை ஏற்படுத்துவதற்காக, தான் முதலில் சந்திப்பைச் செய்ய வேண்டும் என்ற ஓட்டப்பந்தயத்திலேயே மும்முரமாக இருப்பார். தந்தை காந்தம் இல்லையா? எனவே இயற்கையாகவே யார் மிகவும் தூய்மையாக இருக்கிறார்களோ அவர்கள் அருகில் வருகிறார்கள். வெளிமுகமாக யார் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும், காந்தத்தின் பக்கம் ஈர்க்கப்படுபவர்கள் சுத்தமான ஆத்மாக்கள் தான் இருக்கிறார்கள். அந்தக் காட்சி பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகும். சாட்சியாக இருந்து காட்சியை பார்ப்பதில் மிகுந்த மகிழ்ச்சி வரும். தந்தை வதனத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று குழந்தைகளுக்கு எண்ணம் உருவாகிறது. பிரம்மாபாபா சாகார ரூபத்தை விட அவ்யக்த ரூபத்தில் இப்பொழுது இரவு பகலாக சேவையில் அதிகமாக சகயோகி ஆகும் பங்கை செய்து கொண்டிருக்கிறார், ஏனென்றால் இப்பொழுது தந்தைக்குச் சமமாக பிறப்பு இறப்பிலிருந்து விடுபட்டு, கர்ம பந்தனத்தில் இருந்து விடுபட்டு கர்மாதீத் நிலையில் இருக்கிறார். சித்தி சொரூபமாக இருக்கிறார். இந்த நிலையில் ஒவ்வொரு எண்ணத்திலும் சித்தி பிராப்தி ஆகிறது. என்ன நினைத்தாரோ அது சத்தியமாகிறது. எனவே நாலாபுறங்களிலும் எண்ணத்தின் சித்தி (வெற்றி) ரூபத்தினால் சகயோகியாக இருக்கிறார். வாய்மொழியை விட எண்ணத்தின் வேகம் அதிகமாக இருக்கிறது. சாகாரத்தை விட ஆகாரத்தின் வேகம் அதிகமாகும். அப்படி எண்ணத்தினால் சேவையின் பங்கு நடந்து கொண்டிருக்கிறது அதுவும் சத்தியமான எண்ணம், சுத்தமான எண்ணம் ஆகும். உங்களுடையது

அதிகமாக வாய்மொழி மூலம் சேவை, மனம் மூலமாகவும் இருக்கிறது ஆனால் அதிகமாக வாய்மொழி மூலமாக இருக்கிறது. மேலும் பிரம்மாபாபாவில் சத்திய எண்ணத்தின் சேவை இப்பொழுது இருக்கிறது. அப்படியானால் அதிவேகம் இருக்கும் இல்லையா? அப்படி இப்பொழுது சேவையின் பங்கு தான் நடந்து கொண்டிருக்கிறது. சேவையின் பந்தனத்திலிருந்து விடுபடவில்லை. கர்மபந்தனத்திலிருந்து விடுபட்டிருக்கிறார். நல்லது.

**வரதானம்: தன்னுடைய மன்னிக்கும் சொரூபம் மூலமாக பாடம் கற்பிக்கக்கூடிய மாஸ்டர் மன்னிக்கும் கடல் ஆகுக!**

ஒருவேளை ஏதாவது ஒரு ஆத்மா உங்களுடைய நிலையை அசைப்பதற்கு முயற்சி செய்தால், நன்மையின்மையின் உள்உணர்வை வைத்தால் அதையும் நீங்கள் உங்களுடைய நன்மை பயக்கும் உள்உணர்வினால் மாற்றம் செய்யுங்கள் அல்லது மன்னியுங்கள். மாற்றம் செய்யமுடியவில்லை என்றால் மாஸ்டர் மன்னிக்கும் கடல் ஆகி மன்னியுங்கள். உங்களுடைய மன்னிப்பு அந்த ஆத்மாவிற்காக படிப்பினை ஆகி விடும். இன்றைய நாட்களில் அறிவுரை கூறுவதினால் புரிந்து கொள்பவர்கள் ஒருவரும் இல்லை ஆனால் மன்னியுங்கள் அதாவது சுபபாவனையின் ஆசீர்வாதங்களைக் கொடுங்கள், சகயோகத்தைக் கொடுங்கள்.

**சுலோகன்: யார் எப்பொழுதும் குஷி நிறைந்தவராக இருக்கிறாரோ அவர் தான் தனக்கும் மற்றும் அனைவருக்கும் பிரியமானவராக இருக்கிறார்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 08.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாஸ்டர் ஞான சொரூபம் ஆவதற்கான பிரேரணை (தூண்டுதல்)!

தன்னை பாப்தாதாவின் அலங்காரம், பிராமண குலத்தின் அலங்காரம், உலகத்தின் அலங்காரம், தன்னுடைய வீட்டின் அலங்காரம் என்று நினைக்கிறீர்களா? குழந்தைகளை தந்தையின் தலையின் கிரீடம். கழுத்தின் மாலை என்று கூறுவார்கள். எனவே பாப்தாதாவின் அலங்காரமாக இருக்கிறீர்களா? தன்னுடைய வீடு பரந்தாமம் மற்றும் சாந்திதாமத்திலும் அனைத்து ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் மாதிரி இருக்கும் ஆத்மாக்களிடையிலும் விசேஷமாக பிரகாசமாக ஜொலிக்கும் நீங்கள் வீட்டின் அலங்காரம், சாகார உலகம் அதாவது உலக நாடகத்திற்குள் கதாநாயக பாத்திரம் என்ற விசேஷ பங்கைச் செய்யும் விசேஷ ஆத்மாக்கள் நீங்கள், அதாவது உலகின் அலங்காரமாக இருக்கிறீர்களா? அப்படி தன்னை உயர்ந்த அலங்காரம் என்று நினைத்து நடந்து கொள்கிறீர்களா? இன்று பாப்தாதா தன்னுடைய அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதில் என்ன பார்த்தார்? அனைவரையும் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருக்கும் மணிகள் ரூபத்தில் பார்த்தார். அனைவரின் ரூபம் பிரகாசமாக ஜொலிக்கும் மணிகளாக இருந்தது ஆனால் அவசியம் வரிசைக்கிரமம் இருக்கவே இருந்தது. இன்று மணிகளை மூன்று ரூபங்களின் அலங்காரத்தில் பார்த்தோம்.

முதல் அலங்காரம் தலையின் கிரீடத்தில், நெற்றியின் நடுவில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணிகளைப் பார்த்தோம். அனைவரின் ரூபம் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணிகளுடையதாக இருந்தது. இப்பொழுது இந்த மூன்று விதமான மணிகளில் அவரவர்களின் விசேஷத்தைப் பார்த்தோம். முதல் நம்பரின் மணிகள் அதாவது கிரீடத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணிகளின் விசேஷமாக, இந்த அனைத்து மணிகளும் தந்தைக்குச் சமமாக, மாஸ்டர் ஞான

சூரியனுக்குச் சமமாக பிரகாசித்துக் கொண்டு இருந்தன என்பதைப் பார்த்தோம். எப்படி சூரியனின் கிரணங்கள் உலகை ஒளிமயமாக ஆக்குகிறது, நாலாபுறங்களிலும் இருளை அகற்றுகிறது, அந்த மாதிரி மாஸ்டர் ஞான சூரிய சொரூபமான மணிகள் ஒவ்வொருவரும் தன்னுடைய அனைத்து சக்திகள் என்ற கிரணங்களை நாலாபுறங்களிலும் பரப்புவதாகப் பார்த்தோம். ஒவ்வொருவரின் ஒவ்வொரு சக்தி என்ற கிரணங்கள் எல்லைக்கப்பாற்பட்ட உலகம் வரை சென்றடைந்து கொண்டிருந்தது எல்லைக்குட்பட்ட வரை இல்லை, ஒருவர் வரை இல்லை, அற்ப ஆத்மாக்கள் வரை இல்லை ஆனால் முழு உலகம் வரையிலும் இருந்தது. கூடவே தந்தைக்குச் சமமாக அனைத்து குணங்களின் மாஸ்டர் கடலாக இருந்தன. இதன் அடையாளமாக ஒவ்வொரு மணியினுள் அனைத்து வண்ணங்கள் நிரம்பியிருந்தது. ஒன்றில் அனைத்து வண்ணங்களின் ஜொலிப்பு இருந்தது. அந்த மாதிரி மாஸ்டர் குணக்கடல் தன்னுடைய அனைத்து வண்ணங்களினால் வண்ணமயமாக்கப்பட்டுப் பிரகாசித்துக் கொண்டே கிரீடத்தின் உயர்ந்த ஒரு அலங்காரமாக இருந்தது. கிரீடத்தினுள் நெற்றியின் இடையில் தொங்கிக் கொண்டிருக்கும் அந்த மணிகள் பாப்தாதாவின் விசேஷ அலங்கார ரூபத்தில் தென்பட்டன.

இந்த விசேஷ மணிகள் நெற்றியின் இடையில் தொங்குவதற்கும் இரகசியம் இருக்கிறது. இந்த விசேஷ மணிகள் எப்பொழுதும் சாகார ரூபத்தில் நெற்றியின் இடையே பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணி அதாவது ஆத்ம சொரூபத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்கிறார்கள். சாகார உலகத்தில் இருந்து கொண்டே புத்தி எப்பொழுதும் தந்தையின் நினைவு, வீட்டின் நினைவு, இராஜ்யத்தின் நினைவு மற்றும் ஈஸ்வரிய சேவையின் நினைவில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே இவற்றின் ஸ்தானமும் உயர்ந்த நிலையின் அடையாளமாக நெற்றியின் இடையில் தொங்கிக் கொண்டிருப்பதாகத் தென்படுகிறது. மேலும் விசேஷமாக அந்த மாதிரி ஆத்மாக்கள் எப்பொழுதும் உயர்ந்த நினைவு, உயர்ந்த உள்உணர்வு, உயர்ந்த பார்வை மற்றும் உயர்ந்த இல்லறத்தில் இருக்கின்றன. எனவே இவர்களுக்கு உயர்ந்த ஸ்தானம் அதாவது தலையின் கிரீடம் பிராப்தியாகியிருக்கிறது. அனைத்தையும் விட உயர்ந்த அலங்காரம் கிரீடம் ஆகும். கிரீடம் உயர்ந்த நிலையில் இருப்பதின் அடையாளமும் தான். கூடவே எஜமான நிலையின்

அடையாளமும் மேலும் அனைத்து பிராப்திகளின் அடையாளம், அதிகாரத்தன்மைக்கும் அடையாளம் ஆகும். அந்த மாதிரி நெற்றி மணிகள் மற்றும் கிரீடத்திலிருக்கும் மணிகளின் விசேஷத்தைக் கேட்டீர்களா? அந்த மாதிரி விசேஷ மணிகள் மிகக்குறைவாகத் தென்பட்டனர். இது தான் முதல் நம்பரின் மணிகள் மற்றும் முதல் நம்பரின் அலங்காரம் ஆகும்.

இரண்டாம் நம்பரின் அலங்காரம் பாப்தாதாவின் கழுத்தின் மாலை ஆகும். அவர்களின் விசேஷம் என்னவாக இருந்தது மற்றும் ஆதாரம் என்னவாக இருந்தது? அந்த அனைத்து மணிகளும் தன்னுடைய ஜொலிப்பை நாலாபுறங்களிலும் பரப்பிக் கொண்டிருந்தார்கள் ஆனால் வித்தியாசம் என்னவாக இருந்தது? முதல் நம்பரின் மணிகளின் சக்தியின் கிரணங்கள் நாலாபுறங்களிலும் சமமாகப் பரவியிருந்தது ஆனால் கழுத்தின் மாலையின் மணிகளின் கிரணங்கள் அனைத்தும் சமமாக இருக்கவில்லை. சில சிறியவை களாகவும், சில பெரியவைகளாகவும் இருந்தன. சில கிரணங்கள் எல்லைக்கப்பாற்பட்டது வரை, சில எல்லைக்குட்பட்டது வரை இருந்தன. அதாவது தந்தையின் அருகில் இருந்தன ஆனால் தந்தைக்குச் சமமாக இருக்கவில்லை. அனைத்து குணங்களின் வர்ணம் நிரம்பி இருந்தது.ஆனால் அனைத்து வர்ணங்களும் தெளிவாக இருக்கவில்லை. பாப்தாதாவின் மேல் அன்பு மற்றும் சகயோகத்தின் காரணத்தினால் பலியாகி இருந்தார்கள். எனவே கழுத்தின் மாலையாக இருந்தார்கள். அந்த மாதிரி ஆத்மாக்களின் ஆதாரமாக எப்பொழுதும் வாய் மூலமாக, தொண்டையின் ஒலி மூலமாக தந்தையின் மகிமை, தந்தையின் அறிமுகம் கொடுத்து தந்தையின் அருகில் கொண்டு வருவது அதாவது வாய்மொழிப் பாடத்தில் முழுமையாக தேர்ச்சி பெற்றிருந்தார்கள். மனசேவையின் பாடத்தில் முழுமையான தேர்ச்சியடைந்த நிலை இல்லை, ஆனால் வாய்மொழிப் பாடத்தில் முழுமையான தேர்ச்சி பெற்றிருந்தார்கள். எப்பொழுதும் நினைவு சொரூபமாக இருக்கவில்லை, ஆனால் எப்பொழுதும் நினைவூட்டும் சொரூபமாக இருந்தார்கள். இந்த ஆதாரத்தினால் தந்தையின் அருகில், தந்தையின் கழுத்தின் மாலையாக ஆகிறார்கள். இந்த எண்ணிக்கை அதிகமாக இருந்தது. மாலையிலோ அதிகமாக இருப்பார்கள்

இல்லையா? அப்படி கழுத்தின் மாலையின் மணிகள் கிரீடத்தின் மணிகளை விட மிக அதிகமாக இருந்தனர்.

மூன்றாவது அலங்காரம் கைகளின் கங்கணமாக இருந்தது. அவற்றின் விசேஷம் மற்றும் ஆதாரம் என்னவாக இருந்தது? கைகள் சகயோகத்தின் மற்றும் உதவியாளர் ஆவதற்கான அடையாளம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கைகளின் மாலை மற்றும் கங்கணம் என்றால் ஒன்று தான். கங்கணத்தை கைகளின் மாலை என்று கூறுவோம் இல்லையா? இவற்றின் விசேஷமாக என்ன பார்த்தோம்? கிரணங்களின் ஜொலிப்பு எல்லையில்லாத நிலையில் இல்லை ஆனால் எல்லைக்குபட்டதாக இருந்தது. அனைத்து குணங்களின் வர்ணங்கள் இல்லை, சில சில குணம் என்ற வர்ணம் பிரகாசித்துக் கொண்டிருப்பதாகத் தென்பட்டது. இவர்களுடைய விசேஷம் ஒவ்வொரு சேவையின் காரியத்தில் எப்பொழுதும் சகயோகி, உடல் மூலம் செய்யும் சேவை என்ற பாடத்தில் முழுமையாகத் தேர்ச்சி பெற்ற நிலை. சேவைக்காக உடல், மனம், பொருளால் எப்பொழுதும் எவரெடி, தந்தையின் அன்பு என்ற கைகளுக்குள் எப்பொழுதும் உள்அடங்கியிருக்கும் மற்றும் பாப்தாதாவின் கையை எப்பொழுதும் தன் மேல் இருப்பதாக அனுபவம் செய்யக்கூடியவர்கள். எப்பொழுதும் உடன் இருப்பவர்கள் இல்லை ஆனால் தன் மேல் கை இருப்பதாக அனுபவம் செய்பவர்கள். இந்த எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. இவர்கள் தான் சகயோகி ஆத்மாக்கள், அவர்கள் (நெற்றியின் மணிகள் சமமான ஆத்மாக்கள் மற்றும் இவர்கள் (கழுத்தின் மாலை) நெருக்கமான ஆத்மாக்கள். இது தான் மூன்று விதமான அலங்காரம் என்று புரிந்து கொண்டீர்களா? அப்படி இன்று மூன்று ரூபத்தின் அலங்கார ரூபத்தில் அனைத்து குழந்தைகளையும் பார்த்தோம். இப்பொழுது நான் யார் என்று உங்களை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். இது தான் இன்றைய செய்தியாக இருந்தது. சூட்சும வதனத்தின் செய்தி கேட்பதற்கு ஆர்வம் இருக்கிறது தான் இல்லையா? நல்லது.

அந்த மாதிரி வரிசைக்கிரமமான அனைத்து அலங்காரத்தின் மணிகளுக்கு, பாப்தாதாவின் நினைவில் எப்பொழுதும் இருக்கும் சக்திசாலியான ஆத்மாக்களுக்கு மற்றும் எப்பொழுதும் அனைவருக்காக

நற்சிந்தனையுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# தனிப்பட்ட சந்திப்பு: சுயம் திருப்தி ஆவதற்கும் மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்குமான விதி!

உங்களுக்கு உங்களுடைய சங்கமயுகத்தின் மற்றும் எதிர்காலத்தின் சொரூபம் தெளிவாகத் தென்படுகிறதா? எதிர்காலம் தெளிவாகத் தென்படுவதினால் முயற்சியும் சரியாக இருக்கும். சொரூபமே மகாகாளியினுடையது தான் அதாவது அசுர சம்ஸ்காரங்களை அழிக்கக்கூடியவர். எனவே கடைசி உங்களுக்கு நான் மகாகாளி சொரூபமானவள் என்பதை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். எனவே உங்களில் இப்பொழுது எந்தவொரு அசுர சம்ஸ்காரமும் இருக்கக்கூடாது. பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் நீங்கள் நான் தீவிர முயற்சி செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் கவனம் இருக்க வேண்டும். தீவிர முயற்சியின் சுலோகன் எது? (என்ன காரியம் நான் செய்வேனோ, என்னைப் பார்த்து மற்றவர்களும் அப்படியே செய்வார்கள்). இதுவோ மத்திய நிலையில் உள்ள முயற்சியின் சுலோகன் ஆகும். தீவிர முயற்சிக்கான சுலோகன் எப்படி எண்ணத்தை நான் உருவாக்கு வேனோ என்னுடைய எண்ணத்தின் சுற்றுப்புறமும் அந்த மாதிரியே ஆகும். எண்ணத்தின் ஆதாரமும் சுற்றபுறத்தின் மேல் இருக்கிறது மற்றும் சுற்றுப்புறத்தின் ஆதாரம் முயற்சி செய்வதின் மேல் இருக்கிறது. நீங்கள் என்ன எண்ணம் வைப்பீர்களோ அதை அனைவரும் பின்பற்றி நடப்பார்கள். செய்யும் காரியமோ பொதுவான விஷயம், ஆனால் எண்ணத்தின் மீதும் கவனம் வேண்டும். எண்ணத்தையும் சாதாரண விஷயம் என்று நினைக்காதீர்கள். ஏனென்றால் எண்ணம் தான் விதை ஆகும். எண்ணம் என்ற விதை பலஹீனமாக இருக்கும் என்றால் ஒருபொழுதும் சக்திசாலியான பலனை அனுபவம் செய்ய முடியாது. ஒரு எண்ணம் வீணாகச் செல்வது கூட தவறாகும். எப்படி வாய்மொழியில் ஏற்பட்ட தவறு உணரப்படுகிறது. அதே போல் எண்ணத்தின் தவறு கூட உணரப்பட வேண்டும். எப்பொழுது அந்த

மாதிரி சோதனை செய்வீர்களோ அப்பொழுது தான் முன்னேறிச் செல்ல முடியும். இல்லையென்றால் பொறுப்பாளர் ஆவதற்கான வாய்ப்பு என்ன கிடைத்திருக்கிறதோ அதன் லாபத்தை எடுக்க முடியாது. இப்பொழுதோ ஆழமான நுண்ணியமான முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது மேலோட்டமான முயற்சியின் நேரம் முடிவடைந்து விட்டது. செய்யும் காரியத்தில் மற்றும் வார்த்தையில் தவறுகள் ஏற்படுவது குழந்தைத்தனம் ஆகும். இப்பொழுது உயர்ந்த நிலையின் முயற்சி இருக்க வேண்டும். ஒருவேளை இப்பொழுது கூட குழந்தைத் தனமான முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்றால், அதிர்ஷ்டம் அதாவது பாக்கியத்தின் லாட்டரியை இழந்து விடுவீர்கள். சில நேரம் முகம் மலர்ந்து, சில நேரம் முகம் சோர்ந்து, சில நேரம் தீவிர முயற்சி மற்றும் சில நேரம் மத்தியமான முயற்சி இருப்பது என்ற இது விசேஷ ஆத்மாவின் அடையாளம் இல்லை. இதுவோ சாதாரண ஆத்மாவினுடையது. இப்பொழுதோ உங்கள் அனைவரிடமும் விசேஷமாக விலகியிருக்கும் (பற்றற்று) தன்மை இருக்க வேண்டும். தன்னுடைய சக்திசாலியான நினைவினால் பலஹீனமான ஆத்மாக்களின் மனநிலையை சக்திசாலியாக ஆக்கி விட வேண்டும். திருப்தியாக இல்லாத காரணத்தினால் சேவை தடைப்பட்டு இருக்கிறது. எனவே இப்பொழுது திருப்தியாக இருக்கவும் வேண்டும் மற்றும் அனைவரையும் திருப்திப்படுத்தவும் வேண்டும் என்ற இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அந்த்வாஹனம் என்றால் அவ்யக்த ஃபரிஷ்தா ரூபத்தில் வலம் வருவது!

தற்சமயம் இந்த பழைய உலகத்தில் விசேஷமாக என்ன நடந்து கொண்டிருக்கிறது? தற்சமயம் விசேஷமாக உங்களுடைய ஆவஹானம் (வரவழைப்பது) நடந்து கொண்டிருக்கிறது. பின்பு ஆவஹானத்திற்கு பதில் காரியம் செய்கிறீர்களா? பக்தர்கள் என்ன விரும்புகிறார்கள்? தேவிகள் சைத்தன்ய ரூபத்தில் பிரகடணம் ஆகி விட வேண்டும் என்பது தான் பக்தர்களின் ஆசை ஆகும். ஜடச்சிலைகளிலும் கூட சைத்தன்ய சக்திகளை ஆவஹானம் செய்கிறார்கள். சைத்தன்ய ரூபத்தில் வரம் அளிப்பவராகி வரதானம் கொடுத்து விடட்டுமே என்ற இந்த பக்தர்களின் ஆசை எப்பொழுது நிறைவேறும்? பக்தியின் முழுமையான வலிமை இப்பொழுது நாலாபுறங்களிலும் தென்படுகிறது. அதிலும் எப்படி நடைமுறையில் தந்தை குப்தமாக இருக்கிறார் மற்றும் சக்திகள் பிரத்யக்ஷ ரூபத்தில் இருக்கிறார்கள், அதே போலவே பக்தியிலும் முதலில் தந்தையை அதிகமாக அழைக்கிறார்கள், 'ஹே பகவான் என்று கூறி அழைக்கிறார்கள் ஆனால் இப்பொழுது அதிகமாக பகவதியின் பூஜை நடக்கிறது. பக்தர்களின் பாவனையை நிறைவேற்றுவதற்காக சக்திகள் தான் பொறுப்பாளர் ஆகிறார்கள். எனவே ஆவாஹனம் கூட சக்திகளுக்குத் தான் அதிமாக இருக்கிறது. எனவே இப்பொழுது சக்திகளில் இரக்கத்தின் சம்ஸ்காரம் வெளிப்பட வேண்டும். இப்பொழுது அனைவருள்ளும் இரக்கத்தின் சம்ஸ்காரம் வெளிப்படவில்லை, உள்ளடங்கி இருக்கிறது.

எப்படி தந்தை நாலாபுறங்களிலும் வலம் வருகிறார், அதே போல் நீங்களும் பக்தர்களை நாலாபுறங்களிலும் வலம் வருகிறீர்களா? எப்பொழுதாவது வலம் வரச் செல்கிறீர்களா? அவர்களுடைய குரல்கள் கேட்கின்றதா, அல்லது முயற்சி செய்வதில்லையா? தந்தையுடன் சேர்ந்து சக்திகளுக்கும் தங்களுடைய பங்கை செய்ய வேண்டும். எப்படி

அந்த்வாஹனம் (இறுதி வாகனம்) சூட்சும உடல் மூலமாக வலம் வருகிறார்கள் என்று சக்திகள் மகிமை செய்யப்படுகிறார்கள். அப்படி தந்தையும் அவ்யக்த ரூபத்தில் வலம் வருகிறார். அந்த்வாஹனம் என்றால் அவ்யக்த ஃபரிஷ்தா சூட்சும ரூபத்தில் வலம் வருவது. இதன் பயிற்சியும் வேண்டும். மேலும் இது அனுபவம் ஆகும். எப்படி அறிவியலின் சாதனம் தொலைகாட்சி மூலமாக தூரத்தில் இருக்கும் காட்சியை அருகில் பார்க்கிறீர்கள். அதே போலவே நினைவின் கண் மூலமாக தன்னுடைய ஃபரிஷ்தா தன்மையின் நிலை மூலமாக தூரத்து காட்சிகளை எப்படி ஸ்தூல கண்கள் மூலமாக ஏதாவது காட்சி தென்படுகிறதோ அதே போலவே அனுபவம் செய்வீர்கள். முற்றிலும் தெளிவாகத் தென்படும் அதாவது அனுபவம் ஆகும். அறிவியலின் முக்கியமான ஆதாரம் லைட் (மின்சாரம்). லைட்டின் ஆதாரத்தினால் தான் அறிவியலின் பிரமிக்கச் செய்யும் காட்சிகள் தென்படுகிறது. அவை லைட் அதாவது மின்சாரத்தின் சக்தி தான். அதே போலவே அமைதி சக்தியின் ஆதாரம் டிவைன் இன்சைட் அதாவது தெய்வீக உள்நோக்குப் பார்வை. இதன் மூலமாக அமைதியின் சக்தியின் அதிசயமான அனுபவங்களை மிக அதிகமாகச் செய்ய முடியும். இந்த அனுபவமும் ஆகும். எப்படி ஸ்தூல சாதனங்கள் மூலமாக சுற்றி வலம் வர முடியும். அதே போலவே எப்பொழுது விரும்புகிறீர்களோ, எங்கு விரும்புகிறீர்களோ அங்கே அனுபவம் செய்ய முடியும். உங்களுக்கு மட்டும் அனுபவம் ஆகிறது என்றில்லாமல், ஆனால் எங்கு நீங்கள் சென்றடைகிறீர்களோ அவர்களுக்கும் நடைமுறையில் சந்திப்பு ஏற்பட்ட மாதிரி அனுபவம் ஆகும். இது தான் வெற்றி மூர்த்தியின் சித்தி ஆகும். வெளியுலக ஆத்மாக்களுக்கும் கூட சித்தி பிராப்தி ஆகிறது. ஒரே நேரத்தில் அனேக இடங்களில் தன்னுடைய ரூபத்தை பிரகடனம் செய்ய முடியும், மேலும் அனுபவமும் செய்விக்க முடியும். அதுவோ அற்ப காலத்தின் சித்தி ஆகும் ஆனால் இது ஞானம் நிறைந்த சித்தி ஆகும். அந்த மாதிரி அனுபவமும் அதிகமாக இருக்கும் வரும் நாட்களில் அனேக புது விஷயங்களும் நடக்கும் இல்லையா? எப்படி தொடக்கத்தில் வீட்டில் அமர்ந்து கொண்டிருக்கும் போதே பிரம்மா உருவத்தின் சாட்சாத்காரம் ஏற்பட்டது. அது நடைமுறையில் யாரோ பேசிக் கொண்டிருக்கிறார். சைகை கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பது அனுபவம் ஆனது. அதே போலவே கடைசியிலும் பொறுப்பாளர் ஆகியிருக்கும் சக்திசேனையின் அனுபவம் ஆகும். இப்பொழுது ஏதாவது புதுமை நடக்க வேண்டும்

என்பது தான் அனைத்து மகாரதிகளின் எண்ணமாகும். எனவே அந்த மாதிரியான புதுப்புது காட்சிகள் இப்பொழுது தென்பட்டுக் கொண்டே இருக்கும் ஆனால் இதற்கு முதலில் மிக லேசான நிலை வேண்டும். எந்த விதமான சுமை புத்தியில் இருக்க வேண்டாம் மற்றும் இரண்டாவது முழு நாள் நடவடிக்கை தந்தைக்கு சமமானதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் பிரம்மாபாபாவிற்குச் சமமாக தொடக்கத்திலிருந்து கடைசி வரையிலான காட்சிகளின் அனுபவம் செய்ய முடியும். புரிந்ததா?

இப்பொழுது மகாரதிகள் என்ன செய்ய வேண்டும்? யோகா மட்டும் அல்ல, சேவையின் ரூபத்தை பரிவர்த்தனை செய்ய வேண்டும். மகாரதிகளின் யோகா மற்றும் நினைவு இப்பொழுது தனக்காக அன்றி சேவைக்காக இருக்க வேண்டும். அப்பொழுது தான் மகாதானி என்றும் மகாஞானி என்றும் கூறப்படுவார்கள். நல்லது.

நேரத்தின் முடிவின் அடையாளமாக என்ன இருக்கும்? எப்பொழுது நாங்கள் வெற்றி அடைந்து விட்டோம். வெற்றி எங்களுடைய பிறப்புரிமை மற்றும் எங்களுடைய கழுத்தின் மாலை என்று முழு குழுவின் ஒரே ஓசை. ஒரே முழக்கம் இருக்கிறதோ அப்பொழுது தான். அந்த மாதிரி நடைமுறையில் அனுபவம் ஆகட்டும். சொல் அளவில் மட்டுமின்றி, போதை இருக்க வேண்டும். எப்பொழுதும் எதிரில் தென்பட வேண்டும். அந்த மாதிரி வெற்றியின் அடையாளம் தென்படுகிறதா? நல்லது. ஓம் சாந்தி.

# தனிப்பட்ட சந்திப்பு -பாப்தாதாவிடம் மூன்று குழுவினர் கேட்ட கேள்வி பதில்கள்:

**1) வெற்றியாளர் ஆவதற்காக எந்த ஒரு முக்கிய தாரணை அவசியமாகிறது?**

கவனத்துடன் இருப்பது அவசியம்! கவனமாக இருப்பவர் மற்றும் கவனக்குறைவாக இருப்பவர். யார் சதா கவனத்துடன் இருக்கிறாரோ

அவர் ஒருபோதும் மாயாவிடம் தோல்வி அடைய மாட்டார் ஆனால் சதா வெற்றியாளர் ஆவார்.

**2) 108'ன் மாலை மற்றும் 16000'ன் மாலையில் வருவதற்கான அடையாளம் என்ன?**

யார் சதா வெற்றியாளராக இருக்கிறாரோ அவர் வெற்றி மாலையில் வருவார். எனவே வைஜயந்தி மாலை மகிமை செய்யப்பட்டுள்ளது. யார் எப்போதாவது வெற்றி அடைகிறாரோ அவர் 16,000'ல் வருவார்.

**3) எந்த லட்சியம் வைப்பதால் சதா வெற்றியாளராக முடியும்?**

நான் இப்போது வெற்றி பெறவில்லை ஆனால் கல்ப கல்பமாக பல முறை வெற்றி பெற்றவன். எந்த விஷயம் அநேக முறை செய்யப்படுகிறதோ அது சுபாவ சம்சாரத்தில் தானாகவே வந்து விடும். எவ்வாறு இன்றைய உலகில் செய்யக்கூடிய கூடாததை செய்த பின் கூறுகின்றனர் இதுவோ என் சம்ஸ்காரம் ஆகி விட்டது. எனில் இங்கும் கூட அநேக முறை வெற்றி பெற்றதன் நினைவு வெற்றி என்னுடைய சம்ஸ்காரம் ஆகி விடும்.

**4) வீணானதை சக்திசாலி ஆக்கக்கூடிய தீவிர மெஷினரி எது?**

இயந்திரம் சக்தி சாலை ஆனதாக இருந்தால் வேலையும் மிக சீக்கிரமாக ஆகி விடுகிறது. அதேபோல் இங்கும் வீணானதை சக்திசாலியான சங்கல்பமாக மாற்ற இயந்திரத்தை சக்திசாலி ஆக்குங்கள், பவர்ஹவுஸ் உடன் தொடர்பு சரியாக இருந்தால்தான் புத்தியும் சக்திசாலியாக இருக்கும். இங்கோ 'கனெக்சன்' விடுபடுவது கிடையாது ஆனால் நிச்சயம் 'லூஸ்' (தளர்ந்து) விடுகிறது ஆனால் இப்போது லூஸ் ஆகக்கூடாது அப்போதுதான் வீணானது சக்திசாலி ஆகும்.

**5) பிராமண வாழ்வின் முக்கிய கடமை என்ன?**

தந்தையின் நினைவில் சதா நினைவு சொரூபமாக இருப்பது! கல்கண்டு எப்படி இனிப்பின் ரூபமாக இருக்கிறதோ அதே போல நினைவு சொரூபம் ஆக வேண்டும். ஒருவேளை தந்தையின் நினைவு இல்லையெனில் வேறு என்னை நினைவு இருந்தது? சரீரத்திலிருந்து ஆத்மா பிரிந்து சென்று விட்டது எனில் அதை பிணம் என்றுதானே சொல்வோம். அதே போல பிராமண வாழ்க்கையிலிருந்து நினைவு நீங்கி

விட்டது எனில் அந்த வாழ்க்கை என்ன ஆனது? எனவே அப்படி நினைவு சொரூபமாக வேண்டும். எனவே பிராமண வாழ்வின் கடமை நினைவு சொரூபம் ஆவதுதான்.

**6) தசராவின் போது ராவணனின் கொடும்பாவி எரிக்கின்றனர் ஆனால் இப்போது நாங்கள் செய்ய வேண்டியது என்ன?**
உங்களிடம் உள்ள ராவணனுடைய சம்ஸ்காரங்களை இப்போது எரிக்க வேண்டும். அதாவது ராவண சம்ஸ்காரங்களை சதா காலத்திற்கும் விடை கொடுத்து அனுப்பி விட வேண்டும். எலும்பையும் சாம்பலையும் எடுத்து வரக்கூடாது. சாம்பல் என்றால் சங்கல்ப ரூபத்தில் உள்ள ராவண சம்ஸ்காரங்கள் எடுத்துச் செல்லக்கூடாது.

**டீச்சர்களுடன்: ஒவ்வொரு நேரமும் தன்னை பொறுப்பாளர் ஆகியிருப்பவர் என்று நினைக்கிறீர்களா?** யார் தன்னை பொறுப்பாளர் ஆகியிருப்பவர் என்று நினைக்கிறாரோ அவரிடம் முக்கியமாக எவ்வளவு மகான் நிலையோ அந்த அளவு பணிவு என்ற இந்த விசேஷம் இருக்கும். அப்பொழுது தான் பொறுப்பாளர் ஆகியிருப்பவர் தான் செய்யும் காரியத்திலும் வெற்றி அடைபவராக ஆவார். எங்கு பணிவிற்குப் பதிலாக மகான் நிலை அதிகமாக இருக்கிறது அல்லது மகான் நிலைக்குப் பதிலாக பணிவுத்தன்மை அதிகமாக இருக்கிறது என்றாலும் வெற்றி அடைபவராக ஆக முடியாது. வெற்றி அடைபவராக ஆவதற்காக இந்த இரண்டு விஷயங்களிலும் சமநிலை வேண்டும். யார் எப்பொழுதும் தன்னை தந்தைக்குச் சமமாக உலக சேவகன் என்று புரிந்து நடந்து கொள்கிறாரோ அவர் தான் டீச்சர் ஆவார். உலக சேவகன் தான் உலக நன்மைக்கான காரியம் செய்ய முடியும். டீச்சருக்கு தன்னைத் தானே நான் ஒரு டீச்சர் என்று நினைக்கக்கூடாது என்பது டீச்சர்களுக்கு எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். ஒருவேளை டீச்சர் என்பதின் போதை வைத்தீர்கள் என்றால் ஆன்மீக போதை இருக்காது. இந்த போதையும் தேக அபிமானத்தினுடையது. எனவே நான் உலகிற்கு நன்மை செய்யும் தந்தையின் சகயோகி, உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மா ஆவேன் என்பதில் தான் எப்பொழுதும் ஆன்மீக போதை இருக்கிறது. எப்பொழுது சுயம் தானே சம்பன்னமாக (நிரம்பியவராக) இருப்பீர்களோ அப்பொழுது தான் நன்மை செய்ய முடியும். எதுவரை தான் சம்பன்னமாக இல்லையோ

அதுவரை உலக நன்மை செய்ய முடியாது. எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட பார்வை வைக்க வேண்டும். எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்காக எப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட போதை இருக்குமோ அப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட இராஜ்யத்தை பிராப்தி செய்ய முடியும். வெற்றி டீச்சர் என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியினால் முகம் மலர்ந்து இருப்பது மற்றும் அனைவரையும் மலர்ந்த முகமுடையவராக ஆக்குவது, வெற்றி அடைபவரின் அடையாளம் என்னவென்று புரிந்து கொண்டீர்களா? டீச்சருக்கு வெற்றி அடைபவராக ஆகவே தான் வேண்டும். தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்த விஷயமும் அவருடைய நினைவில் இருக்க வேண்டாம். அந்த மாதிரி நினைவில் இருக்கும் டீச்சர் எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பார், பலஹீனமாக இருக்க மாட்டார். நீங்கள் அந்த மாதிரி டீச்சரா? அந்த மாதிரி சக்தி நிறைந்தவர் என்று தன்னை நினைக்கிறீர்களா? சக்திசாலியான டீச்சர் தான் வெற்றி அடைபவராக ஆகுகிறார். நீங்களும் அந்த மாதிரியானவர்களே தான் இல்லையா.? டீச்சருக்கு பலஹீனமான வார்த்தை பேசுவது அழகில்லை. சம்ஸ்காரங்களின் வசமானவராகவோ இல்லை தானே? சம்ஸ்காரங்களை தன்னுடைய வசமாக்குபவர்களாக ஆகி இருக்கிறீர்களா? புகார் செய்யும் டீச்சராகவோ இல்லை தானே? டீச்சர்களோ அனேகர்களின் புகார்களை அழிப்பவராக இருப்பார். பின்போ தன்னுடைய புகாரோ இருக்கக்கூடாது. டீச்சர்களுக்கு வாய்ப்பு அதிகமாக கிடைக்கிறது. புகார்கள் முடிவடைந்து விட்டது என்றால் பின்போ முழுமையானவர்களாக ஆகி விட்டீர்கள், வேறு என்ன வேண்டும்? நல்லது.

**வரதானம்: மனம், புத்தியால் எந்தவொரு தீயதையும் தொடாத சம்பூர்ண வைஷ்ணவன் மற்றும் வெற்றி நிறைந்த தபஸ்வி ஆகுக!**

தூய்மையின் தனித்தன்மை மற்றும் ராயல் தன்மை உள்ளவர்கள் மனம், புத்தியால் எந்தவொரு தீயதையும் தொட முடியாது. எப்படி பிராமண வாழ்க்கையில் உடலின் கவர்ச்சி மற்றும் உடலைத் தொடுவது தூய்மையின்மை, அதே போல் மனம், புத்தியில் ஏதாவது விகாரம் எண்ண அளவில் கூட ஈர்க்கிறது மற்றும் தொடுகிறது என்றால் அது தூய்மையின்மையாகும். எனவே எந்தவொரு தீயதையும் எண்ணத்தின்

அளவில் கூட தொடாதீர்கள். இது தான் சம்பூர்ண வைஷ்ணவன் மற்றும் வெற்றி அடையும் தபஸ்வியின் அடையாளம் ஆகும்.

**சுலோகன்: மனதின் குழப்பங்களுக்கு முடிவுகட்டி, நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை ஒளிமயமானதாக ஆக்குங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 12.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புகார்களை முடிவுகட்டி முழுமையாக ஆவதற்கான பிரேரணை (தூண்டுதல்)!

தந்தைக்குச் சமமாக நிராகார நிலையிலிருந்து உடலின் நினைவிலிருந்து விலகி, ஆத்மீக சொரூபத்தில் நிலைத்திருந்து, சாட்சியாகி, தன்னுடைய மற்றும் அனைத்து ஆத்மாக்களின் வாழ்க்கைப் பங்கை பார்ப்பதற்கான பயிற்சி உறுதியாகிக் கொண்டே இருக்கிறதா? எப்பொழுதும் சாட்சி நிலை நினைவில் இருக்கிறதா? எதுவரை சாட்சி சொரூபத்தின் நினைவு எப்பொழுதும் நிரந்தரமாக இல்லையோ பாப்தாதாவையும் தன்னுடைய துணைவனாக ஆக்க முடியாது. சாட்சி நிலையின் அனுபவம் தந்தையின் துணையின் அனுபவம் செய்விக்கும். தன்னை இறைவனின் நண்பன் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? அதாவது தனது மனதிற்குப் பிரியமானவராக பாப்தாதாவை ஆக்கியிருக்கிறீர்களா? தில்வாலா (இதயத்தை கொள்ளை கொண்ட) தந்தையைத் தான் தில்-ல் (இதயத்தில்) இருப்பவராக ஆக்கியிருக்கிறீர்களா? ஒரு தில்வாலா தந்தையைத் தவிர வேறு யாருடனும் இதயத்தின் கொடுக்கல் வாங்கல் செய்வது எண்ண அளவில் கூட இல்லை என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை ஒரு தந்தையுடன் அனைத்து உறவுகளின் சுகம், அனைத்து உறவுகளின் அன்பின் பிராப்தியை அனுபவம் செய்கிறீர்கள் என்றால், வேறு எங்கும் எந்த சம்மந்தத்திலும் புத்தி போக முடியாது. ஒவ்வொரு மூச்சு, ஒவ்வொரு எண்ணத்தில் எப்பொழுதும் புத்தி தந்தையின் அனைத்து சம்மந்தங்களில் மூழ்கியிருக்க வேண்டும் அனேக குழந்தைகளின் புகாராக, வீணான எண்ணங்கள் அதிகம் வருகிறது, புத்தி தந்தை மேல் ஈடுபடுவதில்லை என்பது இருக்கிறது. விரும்பாவிட்டாலும் கூட எங்காவது புத்தியின் லயிப்பு சென்று விடுகிறது மற்றும் ஸ்தூலமான இல்லறத்தின் பொறுப்புக்கள் புத்தியின் நினைவை ஒருமுனைப்படுத்த விடுவதில்லை. பழைய உலகத்தின் தொடர்பு மற்றும் சூழ்நிலை உள்உணர்வை சஞ்சலமாக்கி விடுகிறது.

எவ்வளவு தீவிரமாக முயற்சி செய்ய விரும்புகிறோமோ அவ்வளவு செய்ய முடிவதில்லை. ஹை ஜம்ப் (இடைவெளியை உயரே தாண்டுதல் மாதிரி) முயற்சி செய்து நிரப்ப முடியவில்லை. முழு நாளில் இந்த விதமான புகார்கள் பாப்தாதாவிடம் மிக அதிகமாக வருகின்றன.

மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறிக் கொண்டு தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரத்திற்கே வசப்பட்டு விடுகிறார்கள் என்றால் பாப்தாதாவிற்கும் அந்த மாதிரி விஷயங்களைக் கேட்டு இனிமையான புன்சிரிப்புத் தான் வருகிறது. மேலும் இரக்கமும் வருகிறது. எப்பொழுது தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரத்தை அகற்ற முடியவில்லை என்றால் முழு உலகத்திலிருந்து தமோபிரதான அசுர சம்ஸ்காரத்தை அகற்றுபவராக எப்படி ஆவீர்கள்? யார் தன்னுடைய சம்ஸ்காரத்திற்கே வசமாகி விடுகிறாரோ அவர் வசப்பட்டு இருக்கும் அனைத்து ஆத்மாக்களை எப்படி விடுவிக்க முடியும்? தன்னுடைய சம்ஸ்காரங்களினால் யார் அவரே பிரச்சனையுள்ளவராக ஆகியிருக்கிறாரோ அவர் மற்றவர்களின் பிரச்சனைகளை எப்படி அகற்ற முடியும்? அந்த மாதிரி சம்ஸ்காரங்களில் இருந்து விடுபடுவதற்கான சரளமான வழி எது? காரியத்தில் வருவதற்கு முன்பு சம்ஸ்காரம், எண்ணத்தில் வருகிறது - இதைச் செய்து விடுவேன், அந்த மாதிரி ஆக வேண்டும், இவர்களுக்கு என்ன தெரியும், நானும் இவை அனைத்தையும் செய்ய தெரிந்திருக்கிறேன்" என்று இந்த மாதிரியான எண்ணங்களில் சம்ஸ்காரம் உற்பத்தி ஆகின்றன. எப்பொழுது இந்த நேரம் சம்ஸ்காரம் எண்ண ரூபத்தில் தன்னுடைய ரூபத்தை காண்பித்துக் கொண்டு இருக்கிறது என்று தெரிந்திருக்கிறீர்கள் என்றால் ஒவ்வொரு எண்ணத்தை, இந்த எண்ணம் தந்தைக்குச் சமமானதா என்று சோதனை செய்யும் பழக்கத்தை மற்றும் பயிற்சி செய்வதை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

எப்படி அனேக பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள், அவர்கள் எதையாவது ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால் முதலில் அந்தப் பொருளின் சோதனை செய்யப்படும். எப்படி ஜனாதிபதி இருக்கிறார் அல்லது ஏதாவது முக்கியமான நபர் இருக்கிறார் அல்லது பெரிய பெரிய ராஜாக்கள் இருக்கிறார்கள் அவருடைய ஒவ்வொரு உணவும் முதலில் சோதனை செய்யப்படுகிறது. அதன் பிறகு அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அவர்களுக்கு ஏதாவது பொருள் கொடுத்தீர்கள் என்றால்

முதலில் அதில் ஏதாவது அசுத்தமானது அல்லது கலப்படமோ இல்லையே என்று அவற்றின் சோதனை நடக்கும், அந்த பெரிய மனிதர்கள் உங்கள் எதிரில் ஒன்றுமே இல்லை. உங்களுடைய இராஜ்யத்தில் இந்த பெரிய மனிதர்கள் கால்கள் கூட வைக்க முடியாது. இப்பொழுது கூட உங்களுடைய காலில் விழுபவர்கள். எப்பொழுது ராஜாக்களுக்கும் ராஜா ஆகிறீர்களோ மற்றும் உலகின் மத்தியில் உயர்ந்த ஆத்மா என்று கூறப்படுகிறீர்கள் என்றால் விசேஷ ஆத்மாக்கள் உங்களுடைய இந்த எண்ணம் என்ற புத்தியின் உணவும் சோதனை செய்யப்பட வேண்டும். எப்பொழுது சோதனை செய்யாமல் ஏற்றுக் கொள்கிறீர்களோ அப்பொழுது ஏமாற்றத்தை அடைகிறீர்கள். எனவே ஒவ்வொரு எண்ணத்தையும் முதலில் சோதனை செய்யுங்கள். எப்படி தங்கத்தை எவ்வளவு உண்மை அல்லது கலப்படம் எவ்வளவு, உண்மையான தங்கமா அல்லது போலி நகையா என்று இயந்திரம் மூலமாக சோதனை செய்கிறார்கள். அதே போலவே இந்த எண்ணம் பாப்தாதாவிற்குச் சமமானதாக இருக்கிறதா அல்லது இல்லையா என்று சோதனை செய்யுங்கள். இதன் ஆதாரத்தில் சோதனை செய்யுங்கள் பிறகு வார்த்தையில், காரியத்தில் கொண்டு வாருங்கள். ஆதாரத்தை மறந்து விடுகிறீர்கள். அப்பொழுது தான் சூத்திரத்தன்மையின் மற்றும் விகாரத்தின் சம்ஸ்காரம் கலந்து விடுகிறது. எப்படி உணவில் விஷம் கலந்து விட்டது என்றால் அது மயக்கம் அடையச் செய்து விடும், அதே போலவே எண்ணம் என்ற ஆகாரம் மற்றும் உணவில் பழைய சூத்திரத்தன்மையின் விஷம் கலந்து விட்டது என்றால் தந்தையின் நினைவு மற்றும் சக்தி சொரூபத்திலிருந்து மயக்கமடையச் செய்து விடுகிறது. எனவே தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து கொண்டு தனக்குத் தானே சுயம் சோதனையாளர் ஆகுங்கள். புரிந்ததா? தன்னுடைய, விசேஷ ஆத்மாவின் உயர்ந்த மரியாதை நிலையில் இருந்தீர்கள் என்றால் பிரச்சனைகள் இருக்காது. நல்லது. இது தான் சம்ஸ்காரங்களை அகற்றுவதற்கான யுக்தியாகும். ஒருவேளை இந்தக் காரியத்தில் எப்பொழுதும் பிஸியாக இருந்தீர்கள் மற்றும் எப்பொழுதும் புனித அன்னப்பறவை சொரூபத்தில் நிலைத்திருந்தீர்கள் என்றால் சுத்தம் மற்றும் அசுத்தம், சூத்திரத்தன்மை மற்றும் பிராமணத்தன்மையை சுலபமாகவே சோதனை செய்ய முடியும் மற்றும் புத்தி இதே காரியத்தில் பிஸியாக இருக்கும் காரணத்தினால் வீணான எண்ணங்களின் புகாரில் இருந்து விடுபட்டு விடுவீர்கள்.

இன்னொரு விஷயம் -முழு நாளும், ஒவ்வொரு நேரத்திற்கு தகுந்தாற்போல் தந்தையின் அனைத்து உறவுகளின், சுகத்தைப் பெற முடிவதில்லை. தந்தையிடமிருந்து அனைத்து உறவுகளின் சுகத்தைப் பெறுவது மற்றும் மூழ்கியிருப்பது மேலும் அனைத்து உறவுகளின் அன்பில் ஐக்கியமாக இருப்பது என்று கோபிகள் மற்றும் பாண்டவர்களின் சரித்திரமாக வர்ணனை செய்யப்பட்டு இருக்கிறது. அந்த அனுபவத்தை இப்பொழுது இன்னும் செய்யவில்லை. தந்தை மற்றும் ஆசிரியர் இந்த விசேஷ மந்தங்களின் சுகத்தை அனுபவம் செய்கிறீர்கள் ஆனால் அனைத்து சம்மந்தங்களின் சுகங்களின் பிராப்தியின் அனுபவத்தை குறைவாகச் செய்கிறீர்கள். எனவே எந்த சம்மந்தங்களின் சுகங்களின் அனுபவம் செய்யவில்லையோ அந்த சம்மந்தங்களில் புத்தியின் ஈர்ப்பு செல்கிறது மேலும் அது ஆத்மாவின் ஈடுபாடு மற்றும் புத்தியின் ஈர்ப்பு இவ்விரண்டும் தடை ரூபம் ஆகி விடுகிறது. எனவே முழு நாளில் விதவிதமான சம்மந்தங்களின் அனுபவம் செய்யுங்கள். ஒருவேளை இந்த நேரம் தந்தையிடமிருந்து அனைத்து சம்மந்தங்களின் சுகத்தை பெறவில்லை என்றால் அனைத்து சுகங்களின் பிராப்தியில், அனைத்து சம்மந்தங்களின் ரசனையைப் பெறுவதில் குறை இருந்து விடும். இப்பொழுது ஒருவேளை இந்த சுகத்தைப் பெறவில்லை என்றால் பின்பு எப்பொழுது பெறுவீர்கள்? ஆத்மாக்களுடன் அனைத்து சம்மந்தங்களையோ முழுக் கல்பத்தில் அனுபவம் செய்வீர்கள், ஆனால் தந்தையோடு அனைத்து சம்மந்தங்களின் அனுபவத்தை இப்பொழுது செய்யவில்லை என்றால் ஒருபொழுதும் செய்ய மாட்டீர்கள். எனவே இந்த அனைத்து சம்மந்தங்களின் சுகங்களில் இரவு பகலாக முழுமையாக தன்னை பிஸியாக வையுங்கள். இந்த சுகங்களில் நிரந்தரமாக இருப்பதினால் மற்ற அனைத்து சம்மந்தங்களும் சாரமற்றதாக, சுவையற்றதாக அனுபவமாகும். எனவே புத்தி ஒரு இடத்தில் நிலைத்திருந்து விடும். மேலும் அது அலைபாய்வது முடிவடைந்து விடும். மேலும் நீங்கள் இந்த சுகங்களின் ஊஞ்சலிலேயே எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். அந்த மாதிரி நிலையை உருவாக்குவதினால் தீவிர முயற்சி யாளராக இயல்பாக மற்றும் சுலபமாக ஆகி விடுவீர்கள், மேலும் அனைத்து புகார்களும் முடிந்து முழுமையானவர் ஆகி விடுவீர்கள். புரிந்ததா? உங்களுடைய புகார்களுக்கான பதில் இது தான். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் அதீந்திரிய சுகங்களின் ஊஞ்சலில் ஆடக்கூடிய, எப்பொழுதும் தந்தையுடன் அனைத்து உறவுகளை அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் தன்னை சாட்சி மற்றும் தந்தையை துணைவராகப் புரிந்து கொள்ளும் அந்த மாதிரி இறைவனின் நண்பர்களுக்கு, எப்பொழுதும் இறைசேவையில் இருக்கக்கூடிய மற்றும் அந்த மாதிரி தந்தைக்குச் சமமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

கேட்கும்பொழுது குஷி அடைகிறீர்கள் ஆனால் அதன்படி நடப்பதில் சில நேரம் வேறு கட்டாயத்தில் வந்து விடுகிறீர்கள். கேட்கும்பொழுதே இவ்வளவு குஷி அடைகிறீர்கள் என்றால் சொரூபம் ஆகும்போது எவ்வளவு குஷி இருக்கும்? இந்த நேரம் அனைவரும் மகிழ்ச்சி நிறைந்த மலர்ந்த முகமுடையவர்களாக இருக்கிறீர்கள், இதே போலவே எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த முகம் உடையவராக இருந்தீர்கள் என்றால் தன்னுடைய நேரத்தையும் சேமிப்பீர்கள் மற்றும் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களின் நேரத்தையும் வீணாக்கமாட்டீர்கள். இதுவரை விழுவது மற்றும் எழுவது, தன்னையே பாதுகாட்டாக வைப்பது மற்றும் புத்தியை ஒருநிலைப்படுத்துவதில் 25-சதவிகிதம் நேரம் செல்கிறது. அது இப்பொழுது மிச்சப்பட்டுவிடும், மேலும் சம்பாதிப்பதில் சேமிப்பாகி விடும். இப்பொழுது சேமிப்பதைக் கற்றுக்கொள்ளுங்கள். புரிந்ததா?

**வரதானம்: எப்பொழுதும் அனைத்து பிராப்திகளின் நினைவு மூலமாக யாசிப்பதின் சம்ஸ்காரங்களிலிருந்து விடுபட்டிருக்கக்கூடிய முழுமையான மற்றும் நிரம்பியவர் ஆகுக!**

ஒரு நிரம்பிய நிலை ஸ்தூல பொருட்களினால், ஸ்தூல சாதனங்களினால் வெளிப்படையாக நிரம்பி இருப்பது ஆனால் இன்னொன்று மனதின் நிரம்பிய நிலை. யார் மனதால் நிரம்பியிருக்கிறாரோ அவரிடம் ஸ்தூல பொருள் அல்லது சாதனம் இல்லை என்றாலும் மனம் நிரம்பியிருக்கும் காரணத்தினால் அவர் ஒருபொழுதும் தன்னுள் குறையை அனுபவம் செய்ய மாட்டார். அவர் அனைத்தையும் அடைந்து விட்டோம் என்ற பாடலைத் தான் பாடிக்

கொண்டிருப்பார். அவரிடம் யாசிப்பதற்கான சம்ஸ்காரம் அம்ச அளவிலும் இருக்காது.

**சுலோகன்: தூய்மை அந்த மாதிரியான அக்னி ஆகும் அதில் அனைத்து தீயவைகளும் எரிந்து சாம்பலாகி விடுகின்றன!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்தில் சேர்ந்தே இருப்பது என்பது முழு கல்பத்திற்கும் ஆதாரம் ஆகி விடுகிறது!

தனது புது உலகில் கிருஷ்ணருடன் கூடவே யார் ஊஞ்சலாடுவீர்கள்? ஊஞ்சலாடுவது வேடிக்கையானதுதானே. ஊஞ்சல் ஆட்டுபவர்களுடைய பாகமோ தனிப்பட்டது. யார் இங்கு தனது வாழ்க்கையில், வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை தந்தையுடன் கூடவே இருக்கிறார்களோ, அதாவது புத்தி யோகத்தின் மூலம் கூடவே இருக்கிறார்களோ -சாகார ரூபத்தில் கூடவே இருப்பது, இதுவோ அதிர்ஷ்டம்தான்! ஆனால் சாகாரத்துடன் கூடவே புத்தியும் கூடவே இருந்தது என்றால், வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை கூடவே இருந்தீர்கள் என்றால், அவர் அங்கும் கூட ஒவ்வொரு பிறப்பிலும் விதவிதமான பாகத்தில், குழந்தைப் பருவத்திலிருந்தே கூடவே இருப்பார், பள்ளியிலும் கூடவே இருப்பார், விளையாடும்போதும் கூடவே இருப்பார் மற்றும் பின்பு ராஜ்யம் செய்வதிலும் கூடவே இருப்பார். ஆகவே இங்கு சதா கூடவே இருப்பவர்தான் அங்கும் கூடவே இருப்பார்.

எப்படி அந்த முதல் ஆத்மாவிற்குப் போதையும் குஷியும் இருக்குமோ, அப்படி கூடவே இருக்கும் ஆத்மாக்களுக்கும் அத்தகைய போதையும் குஷியும் இருக்கும். யார் இப்போது தந்தைக்குச் சமம் ஆகிறாரோ, அவருக்கு அங்கும் சமமான போதை இருக்கும். எனவே சர்வ சொரூபங்களிலும் கூடவே இருப்பது -இதுவும் கூட விசேஷ பாகம் ஆகும். பாலகன், வாலிபன், வானப்ரஸ்தம் என்ற எல்லா நிலைகளிலும் கூடவே இருப்பார். இதற்கான ஆதாரம் இப்போதுள்ள வாழ்க்கையில் முதல், இடை, இறுதி வரை கூடவே இருப்பது, வேடிக்கையாக இருக்கிறது அல்லவா? யார் முதலில் கூட இருப்பாரோ, அவர் பிறகு 84-ஜென்மமும், பக்தி காலத்திலும் அல்ப கால ராஜா ஆவதிலும் அல்லது ஏதாவது பாகம்

நடிப்பதிலும்கூட ஏதாவது ஒரு விதத்தில் கூடவே நிரந்தர சம்பந்தத்தில் இருப்பார். பக்தியும் சேர்ந்தே செய்வார். ஏறுவதும் கூடவே, பின் இறங்குவதும் கூடவே என்றால் இப்போது கூடவே இருப்பதன் ஆதாரம்தான் முழு கல்பமும் கூடவே இருப்பதற்கான ஆதாரமாகிறது. நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆத்மாவை வதை செய்யும் மகாபாவியாக ஆகாமல் இரட்டை அஹிம்சைவாதியாக ஆவதற்கான யுக்திகள்!

இன்று பாப்தாதா குழந்தைகளை மகிமை செய்து கொண்டிருந்தார். மகிமை செய்து கொண்டே இந்த நாடகத்திற்குள் குழந்தைகளின் இவ்வளவு உயர்ந்த மற்றும் அனைத்தையும் விட சிரேஷ்டமான பங்கு இருக்கிறது என்றும் பார்த்தோம். அதுவும் முழுக் கல்பத்தில் இந்த சங்கமயுகத்தில் தான் மகிமைக்குத் தகுதியானவராக ஆகிறார்கள். இதே யுகத்தில் தான் சுயம் பரமாத்மா கூட உயர்ந்த ஆத்மாக்கள் உங்களின் மகிமை பாடுகிறார். இந்த நேரம் தான் நீங்கள் இரட்டை மகிமைக்கு உரியவர்களாக ஆகுகிறீர்கள். ஒரு தந்தைக்குச் சமமாக மாஸ்டர் கடல் ஆகிறீர்கள். மேலும் எது தந்தையின் குணம் மற்றும் சக்திகளாக இருக்கின்றனவோ அந்த இரண்டின் மாஸ்டர் ஆகிறீர்கள். கூடவே ஆத்மாவின் உயர்ந்த நிலைக்கும் மஹிமை இருக்கிறது. சர்வ குண சம்பன்னம், 16-கலைகள் நிரம்பிய என்ற இந்த மகிமையையும் நடைமுறையில் இந்த நிலையின் அனுபவத்தையும் இப்பொழுது செய்கிறீர்கள். 16-கலைகள் என்றால் என்ன. மரியாதைகள் எவை, இந்த அனைத்து விஷயங்களின் ஞானத்தை இந்த நேரம் தான் தாரணை செய்கிறீர்கள். அப்படி இரட்டை மகிமைக்குத் தகுதியானவர்கள் ஆகிறீர்கள். உலகின் அதிபதியாக ஆகிறீர்கள், இரட்டை பூஜைக்குத் தகுதியானவர் ஆகிறீர்கள். இரட்டை ஆஸ்தியாக முக்தி மற்றும் ஜீவன்முக்தி இந்த இரண்டிற்கும் உரியவர்களாக ஆகிறீர்கள், இரட்டை கிரீடம் உள்ளவர்களாக ஆகிறீர்கள், இரட்டை அஹிம்சாவாதி ஆகிறீர்கள் மற்றும் இரட்டை தந்தையின் செல்லமான மற்றும் காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளாக ஆகிறீர்கள். அந்த மாதிரிக்

குழந்தைகள் எப்படி குழந்தையாக இருப்பவர்கள் பின்பு உலகத்திற்கே அதிபதிகளின் அதிபதியாக ஆகி விடுகிறார்கள் என்று அவர்களுடைய உயர்ந்த நிலையின் மஹிமை செய்து கொண்டிருந்தோம். அப்படி தன்னுடைய மகிமை என்ன என்று தெரிந்து நீங்களே மனதில் நினைவு செய்து மகிழ்ச்சி அடைகிறீர்களா? இந்த நினைவில் ஒருபொழுதும் மாயா தாக்குதல் செய்ய முடியாது.

எந்த எந்த குழந்தைகள் எந்த நிலை வரை வந்தடைந்திருக்கிறார்கள் என்று பாப்தாதா இன்று பார்த்துக் கொண்டிருந்தார். அதில் முக்கியமான விஷயமாக தந்தைக்குச் சமமாக அனைத்து குணங்களில் மாஸ்டர் கடலாக எந்த நிலை வரை ஆகியிருக்கிறார்? அனைத்து சக்திகளின் ஆஸ்தியை நடைமுறை வாழ்க்கையில் எந்த அளவு அனுபவம் செய்திருக்கிறார்? கூடவே ஆத்மாவின் உயர்ந்த மற்றும் மகான் நிலையான சம்பூர்ண நிர்விகாரி, சர்வ குண சம்பன்னம், 16-கலைகள் நிரம்பிய, மரியாதா புருஷோத்தம் மற்றும் சம்பூர்ண அஹிம்சைவாதி என்ற இந்த மகான் நிலைகளை எதுவரை வாழ்க்கையில் கொண்டு வந்திருக்கிறார்? குணம் நிறைந்த நிலையின் மகிமை மட்டும் இல்லை. மேலும் அனைத்து குணங்கள் நிரம்பிய நிலையில் ஒருவேளை ஒரு குணத்தின் குறை கூட இருக்கிறது என்றால் அவரை முழுமையான மகிமைக்குத் தகுதியானவர் என்று கூற முடியாது. எனவே அனைத்து குணங்களிலிருந்தும் எத்தனை குணங்களில் மற்றும் எத்தனை சதவிகிதத்தில் தன்னில் குணங்களின் குறை இருக்கிறது என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். 16-கலைகள் என்றால் அனைத்து விசேஷங்கள் நிரம்பிய நிலை அதாவது எப்படி நேரமோ அப்படி சொரூபத்தை உருவாக்க வேண்டும் மற்றும் எப்படி எண்ணமோ அப்படி சொரூபத்தைக் கொண்டு வர வேண்டும். தந்தையிடமிருந்து கிடைத்திருக்கும் முயற்சி செய்வதின் விதி மூலமாக அனைத்து சித்திகளை நேரத்திற்கு ஏற்றாற்போல் தனக்காக மற்றும் அனைத்து ஆத்மாக் களின் சேவைக்காக காரியத்தில் ஈடுபடுத்த முடிய வேண்டும். அனைத்து சக்திகளை அனுபவத்தில் கொண்டு வந்து கொண்டே அனைத்து ஆத்மாக்களுக்காக அவர்களின் தேவைக்கு ஏற்றபடி வரதானி ரூபத்தில் கொடுக்க முடிய வேண்டும். அனைத்து விஷயங்களில் சமநிலை வைக்க முடிய வேண்டும் அதாவது ஒரு நேரம் அன்பு நிறைந்த மற்றும் வேறொரு நேரம் சட்டம் நிறைந்தவராக ஆக முடிய வேண்டும்.

இந்த நேரம் மகாகாளி ரூபம் மற்றும் அடுத்த நேரம் சீதளா தேவி ரூபம் ஆக முடிய வேண்டும். அந்த மாதிரி அனைத்து விசேஷங்கள் என்றால் 16-கலைகள் நிரம்பியவர். இதற்காக அனைத்து கர்மேந்திரியங்கள் மற்றும் அனைத்து ஆத்மீக சக்திகள், மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரம் இவை அனைத்தின் மீது அதிகாரம் (கட்டுப்பாடு) வேண்டும். அந்த மாதிரியான அதிகாரி தான் 16-கலைகள் நிரம்பியவர் ஆக முடியும்.

எந்தவொரு பலஹீனமானவரும் கலையைக் காண்பிக்க முடியாது அதாவது விசேஷங்களைக் காண்பிக்க முடியாது, மேலும் அனுபவமும் செய்விக்க முடியாது. இந்த முறையில் நான் அனைத்து சக்திகளை தாரணை செய்திருக்கிறேனா அதாவது 16 கலைகள் நிரம்பியவனாக ஆகியிருக்கிறேனா என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். சம்பூர்ண நிர்விகாரி என்றால் அனைத்து விகாரங்கள், அனைத்து வம்சத்தையும் சேர்த்து, அம்ச அளவிலும் மாத்திரமும் அதாவது எண்ணம் மற்றும் கனவு அளவில் கூட இல்லாத நிலை. அதைத் தான் சம்பூர்ண நிர்விகாரி என்று கூறுவது. மரியாதா புருஷோத்தமன் என்றால் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு நொடி மற்றும் ஒவ்வொரு அடியில் ஸ்ரீமத்படி அதாவது மரியாதைப்படி இருக்க வேண்டும். எண்ணமும் மற்றும் ஒரு அடியும் ஈஸ்வரிய மரியாதைக் கோட்டிற்கு வெளியில் இருக்க வேண்டாம். அமிர்தவேளையில் தொடங்கி இரவு தூங்கும் வரை ஒவ்வொரு அடியும் மரியாதைக்கு (ஸ்ரீமத்துக்கு) அனுகூலமானதாக இருக்கட்டும். நினைவு, உள்உணர்வு மற்றும் பார்வையும் எப்பொழுதுமே மரியாதைக்கு ஏற்றபடி இருக்க வேண்டும் அந்த மாதிரி மரியாதா புருஷோத்தமனாக எதுவரை ஆகியிருக்கிறீர்கள்?

இரட்டை அஹிம்சைவாதி என்றால் தூய்மையின்மை அதாவது காமம் என்ற மஹா எதிரி கனவில் கூட தாக்கக்கூடாது. எப்பொழுதும் சகோதரன் சகோதரனின் நினைவு சுலபமாக மற்றும் இயல்பாக அதாவது நினைவு சொரூபத்தில் இருக்கட்டும். அந்த மாதிரியான இரட்டை அஹிம்சைவாதிகள் ஆத்ம வதையின் மகாபாவத்தையும் செய்வதில்லை. ஆத்ம வதை என்றால் தன்னுடைய சம்பூர்ண சதோபிரதான நிலையிலிருந்து கீழே இறங்கி தன்னுடைய வதையைச் செய்வதில்லை. உயர்ந்த நிலை யிலிருந்து கீழே இறங்குவது தான் வதை ஆகும். ஆத்மாவின் உண்மையான குணசொரூபம் மற்றும் சக்தி

சொரூபத்தின் நிலையிலிருந்து கீழே வருவது என்றால் நினைவிழந்ததாக ஆவது. இதுவும் பாவக் கணக்கில் சேருகிறது. எனவே தான் ஆத்ம வதை செய்பவர் மகாபாவி என்று கூறப்படுகிறது. கூடவே அஹிம்சையான ஆத்மா ஒருபொழுதும் கொலை செய்வதில்லை. கொலை செய்வது என்றால் ஹிம்சை செய்வது என்றால் உங்களில் யாராவது கொலை செய்கிறீர்களா? தந்தை மூலமாக என்ன தெய்வீக புத்தி, தெய்வீக விவேகம் மற்றும் ஈஸ்வரிய விவேகம் கிடைத்திருக்கிறதோ அதை மாயா வசமாகி, மற்றவர்கள் கூறும் வழியின் வசமாகி, தீய சேர்க்கையின் வசமாகி அல்லது சூழ்நிலைகளின் வசமாகி ஒருவேளை ஈஸ்வரிய விவேகத்தை அமுக்கி வைக்கிறீர்கள் என்றால் ஈஸ்வரிய விவேகத்தைக் கொலை செய்கிறீர்கள் அல்லது தெய்வீக புத்தியின் கொலை செய்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். பின்பு நான் விரும்பவில்லை, ஆனால் செய்து விட்டேன், விரும்பாவிட்டாலும் கூட நடந்து விட்டது என்று கதறுகிறீர்கள். அதாவது இது ஈஸ்வரிய விவேகத்தைக் கொலை செய்வது. பொய் சொல்வது, திருடுவது, வஞ்சகம் செய்வது மற்றும் ஏமாற்றுவது என்ற இதைத் தான் ஹிம்சை மற்றும் மகாபாவம் என்று கூறுவது. அப்படி பிராமணர்கள் எந்த திருட்டை செய்கிறீர்கள். சூத்திரதன்மையின் சம்ஸ்காரம் சுபாவம் மற்றும் வார்த்தை, மேலும் யார் மேலேயாவது தீய பாவனை வைப்பது ஆகியவற்றை பிராமணன் ஆன பிறகு காரியத்தில் கொண்டு வருகிறீர்கள் என்றால் சூத்திரனின் பொருளைத் திருடுகிறீர்கள் என்றாகி விட்டது. எப்பொழுது இது பிராமணர்களினுடையதே இல்லையோ, மற்றவர்களின் பொருளை உபயோகிப்பது அதாவது பிராமணன் ஆன பிறகு அசுர மற்றும் சூத்திரத்தன்மையின் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை தாரணை செய்வது என்றால் திருடுவது. அதே போலவே எப்படி பொய் சொல்கிறீர்கள்? நான் டிரஸ்டி, அனைத்தையும் உங்களுடையது என்று கூறுகிறீர்கள். உடல், மனம் மற்றும் பொருள் அனைத்தும் உன்னுடையது. பின்பு என்னுடையதில் பற்றுதல் வசமாகி நடக்கிறீர்கள் என்றால் என்னுடையது என்பதைக் கொண்டு வருவது அல்லது என்னுடையது என்று புரிந்து கொள்வது இதுவும் பொய் ஆனது இல்லையா? சொல்வது உன்னுடையது என்று மற்றும் செய்வது தன்னுடையது என்றால் இது பொய்யாக ஆனது இல்லையா? உன்னிடமிருந்து தான் அருந்துவேன், உன்னோடு தான் அமருவேன், உன்னோடு தான் பேசுவேன் மற்றும் உன்னோடு தான் அனைத்து

உறவுகளையும் வைத்துக் கொள்வேன் என்று உறுதிமொழி கொடுக்கிறீர்கள் ஆனால் நடைமுறையில் மற்ற ஆத்மாக்களுடனும் உறவு நெருக்கத்தை வைக்கிறீர்கள். தந்தையின் நினைவிற்குப் பதிலாக மற்ற நினைவையும் சேர்த்தே வைக்கிறீர்கள். அப்படி இதுவும் லை நடந்தது இல்லையா. என்னுடையவரோ ஒரு தந்தையைத் வேறு யாரும் இல்லை என்பது தான் உறுதிமொழி, ஒருவேளை அதை கடைபிடிக்கவில்லை என்றால் இதுவும் பொய் ஆனது. அதே போலவே ஏமாற்றுதலும், வஞ்சகமுமாக என்ன செய்கிறீர்கள். அனைத்தையும் விட பெரிய ஏமாற்றத்தை தனக்கே செய்கிறீர்கள். என்ன கேட்கிறீர்கள் மற்றும் ஏற்றுக்கொள்கிறீர்களோ அவற்றின் உயர்ந்த பிராப்தியிலிருந்து தன்னை வஞ்சித்து விடுகிறீர்கள். இது தான் தனக்கு ஏமாற்றம் கொடுப்பது ஆகும். ஏமாற்றத்தின் அடையாளமாவது அதன் மூலம் துக்கம் ஏற்படும். கூடவே பிராமண பரிவாரத்திலும் ஏமாற்றம் செய்கிறீர்கள். சொல்வது ஒன்று மற்றும் செய்வது இன்னொன்று. தன்னுடைய பலஹீனத்தை மறைத்து வெளிமுகமாக தன்னுடைய பெயரை நன்றாக வைத்துக் கொள்வது அல்லது தன்னை நல்ல முயற்சி செய்பவராகக் (புருஷார்த்தி) காண்பித்துக் கொள்வது. இப்படி ஒவ்வொருவரையும் ஏமாற்றுகிறீர்கள். ஏதாவது தவறு செய்து மறைப்பது இதுவும் ஏமாற்றுவது மற்றும் வஞ்சகம் செய்வதாகும். அப்படி இரட்டை அஹிம்சைவாதி என்றால் புண்ணிய ஆத்மா, மஹான் ஆத்மா அவர் மூலமாக எந்தவிதமான பாவ காரியமும் நடக்காது. அந்த மாதிரி ஆத்மாவின் மிக உயர்ந்த நிலையாக என்ன இப்பொழுது கூறினோமோ அதை எதுவரை தாரணை செய்திருக்கிறேன் என்று தன்னை சோதனை செய்யுங்கள். அந்த மாதிரி அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களை தந்தையும் மகிமை செய்கிறார், அப்படி இன்று அந்த மாதிரி குழந்தைகளின் குணமகிமை செய்து கொண்டிருந்தோம் மற்றும் மாலையை உருட்டிக் கொண்டிருந்தோம். நல்லது.

அந்த மாதிரி அனைத்து மகான், அனைத்து தகுதிகள் நிரம்பிய மகிமை மற்றும் பூஜைக்குத் தகுதியான மேலும் இரட்டை அஹிம்சைவாதி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# டீச்சர்கள் ஆவது என்றால் சௌபாக்கியத்தின் லாட்டரியை அடைவது!

டீச்சர்கள் ஒவ்வொரு காரியத்தையும் செய்து காண்பிப்பதற்கு பொறுப்பாளராக இருக்கிறார்கள். ஒவ்வொரு டீச்சருக்கும் பின்னால் அவரைப் பார்த்து நடந்து கொள்பவர்கள், செய்பவர்கள், முன்னேறிச் செல்பவர்களின் எவ்வளவு பெரிய வரிசை இருக்கிறது? அப்படி டீச்சர் சரியான வரிசையில் நடத்துவிப்பதற்கு பொறுப்பாளராக இருக்கிறார். அவர் நிற்கிறார் என்றால் முழு வரிசையும் நின்று விடுகிறது, முழு வரிசையின் பொறுப்பு அவருக்கு இருக்கிறது. அந்த மாதிரி பொறுப்பை உணர்ந்து நடந்தீர்கள் என்றால் ஒவ்வொரு காரியத்தையும் எப்படிச் செய்வீர்கள்? பொறுப்பு பெரியதிலும் பெரிய ஆசிரியர் என்று பொதுவாக கூறப்படுகிறது. எப்படி ஆசிரியர் வாழ்க்கையை உருவாக்குகிறார் இல்லையா? அதே போல் பொறுப்பும் வாழ்க்கையை உருவாக்குவதற்கான அறிவுரை கொடுக்கிறது. அப்படி ஒவ்வொரு டீச்சரின் மீதும் இவ்வளவு விசாலமான பொறுப்பு இருக்கிறது. அந்த மாதிரி புரிந்து கொள்வதினால் கூட தன் மேல் கவனம் இருக்கும். கவனம் இருக்கிறது என்றால் தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எதுவுமே புத்தியில் இருக்கவே இருக்காது. பொறுப்பு பெரியதன்மையை கொண்டு வருகிறது. ஒருவேளை பொறுப்பு இல்லை என்றால் குழந்தைத்தனம் ஆகி விடுகிறது. பொறுப்பு இருப்பதினால் அலட்சியம் விலகி விடுகிறது. டீச்சரானவர் எனக்குப் பின்னால் எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்று ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு அடிக்கு பின்னால் யோசிக்க வேண்டும். இந்த பொறுப்பு சுமையாக்கும், பாரம் இருக்கும் என்று அப்படியும் இல்லை. எவ்வளவு இந்த பொறுப்பை எடுத்துக் கொள்வீர்களோ அந்த அளவு அனேகரின் ஆசீர்வாதம் என்ன கிடைக்கிறதோ அந்த சுமை குஷியில் மாறி விடுகிறது. அதனால் அந்த சுமை அனுபவம் ஆவதில்லை, லேசாக இருப்பார்கள். எப்படி பிரம்மாபாபா பொறுப்பாளராக ஆனார், அதே போல் நீங்கள் அனைவரும் பொறுப்பாளர்கள் ஆவீர்கள். எனவே நீங்கள் அனைவரும் பிரம்மாபாபாவைப் பின்பற்றி நடக்க வேண்டும். அவரிடம் பொறுப்பு

மற்றும் லேசான நிலை இரண்டின் சமநிலை இருந்தது, அதே போல் தந்தையைப் பின்பற்றி நடங்கள். டீச்சர்களின் சுலோகன் "ஃபாலோ ஃபாதர். ஃபாலோ ஃபாதர் இல்லையென்றால் வெற்றியடையும் டீச்சர் இல்லை.

டீச்சரின் முதல் சான்றிதழ் சுயம் தான் திருப்தியாக இருப்பது, மேலும் மற்றவர்களையும் திருப்திப்படுத்துவது. முதல் நம்பரில் இருக்கும் டீச்சரின் அடையாளம் திருப்தியாக இருப்பது மற்றும் திருப்திப்படுத்துவது. டீச்சர் ஏன் திருப்தியாக இருக்க மாட்டார்? டீச்சருக்கு எவ்வளவு வாய்ப்பு இருக்கிறது. ஒரு வாய்ப்பு சமர்ப்பணம் ஆவதற்கு, இரண்டாவது சேவைக்கான வாய்ப்பு மூன்றாவது பொறுப்பாளர் ஆவதினால் தன் மேல் கவனத்திற்கான வாய்ப்பு மற்றும் நான்காவது எத்தனை பேரை உங்களுக்குச் சமமாக ஆக்குவீர்களோ அதில் முயற்சியின் வெற்றிக்கான வாய்ப்பு இருக்கிறது. அனைத்தையும் விட அதிகமாக முயற்சி செய்வதில் வரிசை எண் முன்னுக்கு பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. வரக்கூடிய மாணவர்களுக்கோ அன்னப்பறவையும், கொக்கும் சேர்ந்தே இருக்க வேண்டியதாக இருக்கிறது. டீச்சர்களுக்கு நல்ல சூழ்நிலையின் வாய்ப்பும் கிடைக்கிறது. அப்படி டீச்சர் ஆவது என்றால் லாட்டரி அடைவது. டீச்சர்களுக்கு நாடகத்தில் மிக நல்ல பங்கு இருக்கிறது. டீச்சர்களுக்கு தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து குஷி அடைய வேண்டும். தன்னுடைய பிராப்தியின் பட்டியலை என்னென்ன கிடைத்திருக்கிறது என்று எதிரில் வையுங்கள். எவ்வளவு கிடைத்திருக்கிறது? அதைப் பார்க்கிறீர்களா? அமிர்தவேளையில் அனைவரும் ஆன்மீக உரையாடல் செய்கிறீர்களா? யார் ஆன்மீக உரையாடல் செய்வதின் ரசனையை அனுபவம் செய்து விடுகிறார்களோ அவர்கள் முழு நாளில் வெற்றி அடைபவராக இருப்பார். அலட்சியமானவராகவோ இருப்பதில்லையே. எப்பொழுதும் தன் மேல் கவனம் இருக்கிறதா? மேலும் ஆர்வமும் வருகிறதா? ஒன்று நியமத்தை கடைபிடிப்பவர்கள், இரண்டாவது பிராப்தி செய்பவர்கள். நீங்கள் அனைவருமோ பிராப்தி செய்பவர்கள் தான் இல்லையா? நல்லது.

**வரதானம்: எஜமான நிலையின் நினைவு மூலமாக சக்திகளை கட்டளைப்படி நடத்து விக்க கூடிய சுயராஜ்ய அதிகாரி ஆகுக!**

தந்தை மூலமாக என்னென்ன சக்திகள் கிடைத்திருக்கின்றனவோ அந்த அனைத்து சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். தேவையான நேரத்தில் சக்திகளை உபயோகியுங்கள். எஜமான நிலையின் நினைவிலிருந்து மட்டும் கட்டளையிட்டீர்கள் என்றால் சக்திகள் உங்களுடைய கட்டளைப்படி நடக்கும். ஒருவேளை பலஹீனமானவராகி கட்டளை இட்டீர்கள் என்றால் ஏற்றுக் கொள்ளாது. பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் பலஹீனமானவர்களாக அன்றி எஜமானர்களாக ஆக்குகிறார். அனைத்து குழந்தைகளும் ராஜா குழந்தைகள், ஏனென்றால் சுயராஜ்யம் உங்களுடைய பிறப்புரிமை ஆகும். இந்த பிறப்புரிமையை யாரும் பரிக்க முடியாது.

**சுலோகன்: மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியத்தை செய்தீர்கள் என்றால் வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 16.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எண்ணத்தின் சக்தியைக் கட்டுப்படுத்தி சித்தி சொரூபம் (வெற்றி நிறைந்தவர்) ஆவதற்கான யுக்திகள்!

எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக நிராகார நிலையில் நிலைத்திருந்து கொண்டே இந்த சாகார உடலின் ஆதாரத்தை எடுத்து இந்த கர்மஷேத்திரத்தில் கர்மயோகியாகி ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களா? எப்பொழுது பெயரே கர்மயோகி என்றிருக்கும் போது இந்தப் பெயரே. யோகி அதாவது நிராகார ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருந்து காரியம் செய்பவர் என்பதை நிரூபிக்கிறது. காரியம் செய்யாமலோ ஒரு விநாடி கூட இருக்க முடியாது. கர்ம இந்திரியங்களின் ஆதாரம் எடுப்பதின் அர்த்தமே நிரந்தரமாக காரியம் செய்வது என்பதாகும். எப்படி காரியம் இல்லாமல் இருக்க முடியாதோ அதே போல் நினைவு அதாவது யோகா இன்றியும் ஒரு விநாடி கூட இருக்க முடியாது. எனவே கர்மத்தின் (காரியத்தின்) கூடவே யோகி என்ற பெயரும் சேர்ந்தே தான் இருக்கிறது. எப்படி காரியங்கள் இயல்பாகவே நடந்து கொண்டிருக்கின்றன. இது கர்ம இந்திரியங்களுக்கு இயற்கையான பயிற்சி ஆகும். அதே போலவே புத்திக்கு நினைவின் இயற்கையான பயிற்சி இருக்க வேண்டும். இந்த கர்ம இந்திரியங்களுக்கு தொடக்கத்திலிருந்து அவை அவைகளுக்கு என்று காரியங்கள் உள்ளன. கையை அசைப்பது மற்றும் கால்கள் நடப்பதில் எந்தக் கடினமும் இல்லை, அதன்படி பிராமண வாழ்க்கைக்கான மற்றும் இந்த சங்கமயுக வாழ்க்கையில் புத்தியின் உண்மையான காரியம் மற்றும் இந்த ஜென்மத்தின் காரியம் நினைவு ஆகும். எது வாழ்க்கையின் உண்மையான, இயற்கையான காரியமாக இருக்கிறதோ அது தானாக, இயல்பாக மற்றும் சுலபமானதாகத் தான் இருக்கும். அப்படியானால் தன்னை அந்த மாதிரியான சகஜ கர்ம யோகியாக அனுபவம் செய்கிறீர்களா? அல்லது இதுவும் கடினமாக அனுபவம் ஆகிறதா?

தன்னுடைய சொந்தக் காரியம் ஒருபொழுதும் கடினமானதாக இருக்காது, மற்றவர்களின் காரியம் கடினமாக இருக்கும். இதுவோ ஒவ்வொரு கல்பத்திலும் நம்முடைய காரியம் ஆகும். இருந்தும் ஒருவேளை கடினமாக இருக்கிறது என்றால், நிரந்தரமாக கர்ம யோகி நிலை அனுபவம் ஆவதில்லை. இதற்கான காரணம் என்ன? ஒருவேளை யோகா செய்ய முடியவில்லை என்றால் கண்டிப்பாக இந்திரியங்கள் மூலமாக அற்பகால சுகம் பிராப்தி செய்விக்கக்கூடிய, நிரந்தரமான பிராப்தியிலிருந்து வஞ்சிக்கக்கூடிய ஏதோவொரு அனுபவத்தை அனுபவம் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே தன்னுடைய உண்மையான காரியத்தை மறந்திருக்கிறார்கள். எப்படி இன்றைய நாட்களின் செல்வந்தர்கள் மற்றும் கலியுக ராஜாக்கள் எப்பொழுதும் உடல் மற்றும் உலகியல் சுகங்களை அனுபவிப்பதிலேயே முழுமையாக ஈடுபட்டுக் கொண்டு தன்னுடைய உண்மையான கடமையையும், இராஜ்யம் செய்வதையும் மற்றும் தன்னுடைய அதிகாரத்தையும் மறந்து விடுகிறார்கள், அதே போலவே ஆத்மாவும் இந்த மாதிரியான சுகங்களின் அனுபவத்திலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் காரணத்தினால் யோகா மறந்து விடுகிறது. அதாவது, தன்னுடைய அதிகாரம் மறந்து விடுகிறது. எதுவரை அற்பகாலத்து சுகங்களை அனுபவிப்பதிலேயே மூழ்கியிருக்கிறார்களோ அங்கு யோகா இருப்பதில்லை. இந்தக் காரணத்தினால் கடினமாக அனுபவம் ஆகிறது.

தற்சமயம் மாயா பிராமண குழந்தைகளின் புத்தியைத் தான் முதலில் தாக்குகிறது. முதலில் புத்தியின் தொடர்பை அதுவரை துண்டித்து விடுகிறது. யாராவது எதிரி தாக்குதல் செய்கிறார் என்றால், முதலில் டெலிஃபோன், ரேடியோ ஆகிய தொடர்புகளைத் துண்டித்து விடுவார்கள். மின்சாரம் மற்றும் தண்ணீரின் தொடர்பினைத் துண்டித்து விடுகிறார்கள். பின்பு தாக்குதல் செய்கிறார்கள். அதே போல் மாயாவும் புத்தியின் தொடர்பைத் துண்டித்து விடுகிறது. அதன் காரணமாக லைட், மைட், சக்திகள் மற்றும் ஞானத்தின் தொடர்பு இயல்பாகவே மூடப்பட்டு விடுகின்றன. அதாவது மயக்கமுற்றவராக ஆக்கி விடுகிறது. அதாவது தன்னுடைய சொரூபத்தின் நினைவிலிருந்து வஞ்சித்து விடுகிறது மற்றும் உணர்விழக்கச் செய்து விடுகிறது. அதற்காக புத்தி மேல் கவனம் என்ற காவல் இருக்க வேண்டும் அப்பொழுது தான் நிரந்தர கர்மயோகியாக சுலபமாக ஆகி விடுவீர்கள்.

எங்கு புத்தியை ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ அங்கே நிலைத்து விட வேண்டும். அந்த மாதிரி பயிற்சி செய்யுங்கள். நினைத்தீர்கள் மற்றும் நிலைத்து விட்டீர்கள் என்று அப்படி இருக்க வேண்டும். இந்த ஆன்மீக டிரில்லை (பயிற்சியை) எப்பொழுதும் புத்தி மூலமாக செய்து கொண்டே இருங்கள். ஒரு நேரம் பரம்தாம நிவாசியாக, அடுத்த நேரம் சூட்சும அவ்யக்த பரிஷ்தா ஆகி விடுங்கள். மேலும் இந்த நேரம் சாகார கர்ம இந்திரியங்களின் ஆதாரத்தை எடுத்து கர்ம யோகி ஆகி விடுங்கள். இதைத் தான் சங்கல்ப சக்தியை (எண்ணத்தின் சக்தியை) கன்ட்ரோல் செய்வது (கட்டுப்படுத்துவது) என்று கூறுவதாகும். எண்ணத்தை படைப்பு என்று கூறுவோம், மேலும் நீங்கள் அதன் படைப்பாளர் ஆவீர்கள். எவ்வளவு நேரம் எந்த எண்ணம் வேண்டுமோ அந்த நேரம் மட்டுமே அது இருக்க வேண்டும். எங்கே புத்தியை ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ அங்கு ஈடுபடுத்தி விட வேண்டும். இதைத் தான் அதிகாரி என்று கூறுவது. இந்தப் பயிற்சி இப்பொழுது குறைவாக இருக்கிறது. எனவே இந்தப் பயிற்சியை செய்யுங்கள். நீங்களே உங்களுக்கான தன்னுடைய நிகழ்ச்சியினை தயாரியுங்கள். மேலும் எவ்வளவு நேரம் நிர்ணயம் செய்திருந்தீர்களோ அந்தளவு நேரமே அந்த நிலை இருந்ததா என்று சோதனை செய்யுங்கள்.

ஹடயோகி தன்னுடைய ஏதாவது கர்ம இந்திரியத்தை, சிலர் காலை அல்லது கைகளை ஒரே நிலையில் நிலைத்திருக்க வேண்டும் என்றும் சிலர் இவ்வளவு நேரம் ஒரு கால் அல்லது ஒரு கையை கீழே கொண்டு வருவோம் மற்றும் மேலே கொண்டு செல்வோம், பிறகு கீழே கொண்டு வருவோம் மற்றும் மேலே கொண்டு செல்வோம் என்று நிர்ணயம் செய்கிறார்கள் ஆனால் இதைத் தப்பாக காப்பி செய்திருக்கிறார்கள். புத்தியை ஒரு எண்ணத்தில் வைத்து அமருங்கள் என்று தந்தை கற்றுக் கொடுத்திருந்தார் அதைத் தப்பாக காப்பி செய்து ஒரு காலை மேலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு எண்ணத்தில் நிலைத்து விடுங்கள் என்று தந்தை கூறுகிறார். பின்பு அவர்கள் ஒரு காலில் நின்று கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் ஞான சூரியனின் எதிரில் இருங்கள், மறுபக்கம் திரும்பாதீர்கள் என்று தந்தை கூறுகிறார். பிறகு அவர்கள் ஸ்தூல சூரியனின் பக்கம் பார்த்து அமருகிறார்கள். அப்படி தப்பாக காப்பி செய்திருக்கிறார்கள் தான் இல்லையா, யதார்த்த

புத்தியின் நினைவின் பயிற்சியை இப்பொழுது நீங்கள் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அதிகாரத்துடன் செய்கிறீர்கள். அவர்கள் பிடிவாதத்துடன் செய்கிறார்கள். எனவே அது கடினமாகும். இது சுலபமாகும். இப்பொழுது இந்தப் பயிற்சியை அதிகரித்துக் கொண்டே இருங்கள். ஒரு நொடியில் அனைவரும் ஒரே வழியில் நடப்பவர்களாக ஆகி விட வேண்டும். எப்பொழுது குழுவினருக்கு ஒரே எண்ணம், ஒரே நினைவு இருக்குமோ மேலும் அனைவருடைய ஒரு சொரூபமாக ஆகி விடுமோ அப்பொழுது இந்த குழுவின் வெற்றி அடைந்ததற்கான பெயர் நாலாபுறமும் பரவும்.

எப்படி ஸ்தூல காரியம் மற்றும் சேவையில் கருத்துக்களின் ஒருங்கிணைப்பை செய்கிறீர்கள் அதாவது அனைவரும் ஒரு கருத்துள்ளவர்களாக ஆகி விடுகிறார்கள். அப்பொழுது தான் காரியம் வெற்றி அடைகிறது. அதே போலவே குழுவின் ரூபத்தில் அனைவரும் ஒரு எண்ணத்தின் சொரூபம் ஆகி விட வேண்டும். விதை ரூப நினைவோ அல்லது நிலையோ, அனைவரும் விதை ரூப நிலையில் நிலைத்து விட வேண்டும். அப்படி எப்பொழுது ஒரு நினைவு சொரூபம் ஆகி விடுவீர்களோ அப்பொழுது ஒவ்வொரு எண்ணத்தின் சித்தியை அனுபவம் செய்வீர்கள் மற்றும் சித்தி சொரூபம் ஆகி விடுவீர்கள். என்ன நினைப்பீர்களோ மற்றும் என்ன கூறுவீர்களோ அதையே நடைமுறையில் பார்ப்பீர்கள். இதைத் தான் சித்தி சொரூபம் என்று கூறுவது. இது தான் வெற்றி அடைவதின் அடையாளமாகும். இதனுடைய நினைவுச்சின்னம் தான் கலியுக (கோவர்த்தன) மலை. அதற்கு அனைவரும் ஒன்றாக இணைந்து விரல் கொடுக்க வேண்டும். இந்த எண்ணம் தான் விரல் ஆகும். இப்பொழுது அந்த மாதிரியான முன்னேற்றத்தை உருவாக்குங்கள்.

குழு ரூபத்தில் ஒரு நினைவு சொரூபம் ஆவதினால் வாயுமண்டலம் சக்திசாலியானதாகி விடும். முழு ஈடுபாட்டின் அக்னியின் பட்டி அனுபவம் ஆகும். அதன் எண்ண அலைகள் நாலாபுறமும் பரவும். எப்படி அணுகுண்டை ஒரு இடத்தில் போடுவதினால் நாலாபுறங்களிலும் அதனுடைய துகல்கள் பரவி விடுகின்றன. அது அணுகுண்டாகும் மற்றும் இது ஆத்மீக குண்டாகும். இந்த பிரபாவம் அனேக ஆத்மாக்களைக் கவர்ந்திழுக்கும் மற்றும் சுலபமாகவே பிரஜைகளின் வளர்ச்சி ஆகி

விடும். எப்படி அந்த அணுகுண்டிற்கு நீண்டகாலத்திற்கு பூமியில் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறதோ, அதே போலவே சைத்தன்ய வாழ்க்கையின் பூமியில் அதிகமாக எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் பாதிப்பு ஏற்படும். எனவே சகஜமாக பிரஜைகள் உருவாகி விடுவார்கள். நல்லது.

அந்த மாதிரி ஆன்மீக டிரில்லின் பயிற்சியுடைய, எப்பொழுதும் அதிகாரி. உலகிற்கு நன்மை செய்பவர், ஒவ்வொரு எண்ணத்தை நிரூபித்து சித்தி சொரூபம் ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக இயற்கையை அடிமையாக்கி நடத்து விக்கக்கூடிய மற்றும் அந்த மாதிரியான அனைத்து சக்தி நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். நல்லது.

## தனிப்பட்ட சந்திப்பு: பிரஸித்தி -எண்ணம் மற்றும் சொல்லின் ஸித்தியின் ஆதாரத்திலிருக்கிறது!

மகாரதி குழந்தைகளுக்கு தற்சமயம் எந்த வரவு செலவு கணக்கை வைக்க வேண்டும்? இப்பொழுது மகாரதிகள் சித்தி சொரூபம் ஆவதற்கான சீசன் ஆகும். அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் மற்றும் ஒவ்வொரு எண்ணமும் சித்தி ஆக வேண்டும். அது எப்பொழுது ஆகும் என்றால், எப்பொழுது அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு எண்ணமும் நாடகப்படி சத்தியமானதாகவும் சக்திசாலியானதாகவும் இருக்குமோ அப்பொழுது தான் ஆகும். எனவே மகாரதிகளுக்கு இப்பொழுது முழு நாளில் என்னென்ன அனேக எண்ணங்கள் ஓடுகின்றன அல்லது வாயிலிருந்து என்னென்ன வார்த்தைகள் வெளியாகின்றன அவற்றில் எத்தனை சித்தி ஆகின்றன என்ற இந்தக் கணக்கை வைக்க வேண்டும். எண்ணம் தான் விதை ஆகும், நல்ல சக்தி நிறைந்த விதை இருக்கும் என்றால் அதனுடைய பழமும் நல்லதாக உருவாகும். அதைத் தான் எண்ணம் சித்தி ஆவது என்று கூறுவது. அப்படி முழு நாளில் எத்தனை எண்ணம் மற்றும் வார்த்தை சித்தி ஆகின்றன? என்ன கூறினீர்களோ நாடகப்படி என்ன நடக்க வேண்டியதாக இருந்ததோ அதைத் தான் கூறினீர்கள். இதற்காக

ஒவ்வொரு வார்த்தை மற்றும் எண்ணத்தை சக்தி நிறைந்ததாக ஆக்குவதில் கவனம் கொடுக்க வேண்டும். அப்படி மகாரதிகளின் வரவு செலவு கணக்காக இப்பொழுது இது இருக்க வேண்டும். எப்படி இவர் சித்தி அடைந்தவர் என்று பக்தியிலும் கூறப்படுகிறது. அப்படி இங்கேயும் யாருடைய எண்ணம் மற்றும் வார்த்தைகள் சித்தி ஆகிறது என்றால் அந்த சித்தியின் ஆதாரத்தில் அவர் பிரசித்தியானவர் ஆகிறார். ஒருவேளை சித்தி இல்லை என்றால் பிரசித்தியும் இல்லை. பக்தியில் அனேக தேவிகள் மற்றும் தேவதைகள் பிரசித்தி ஆகிறார்கள். சிலர் பிரசித்தி ஆவதில்லை. அவர்களும் தேவதை மற்றும் தேவி என்றோ ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள் ஆனால் பிரசித்தி ஆவதில்லை. அப்படி எண்ணம் மற்றும் வார்த்தைகள் சித்தி ஆவது தான் பிரசித்தி ஆவதற்கான ஆதாரம், இதனால் தானாகவே அவ்யக்த பரிஷ்தா ஆகி விடுவீர்கள் மற்றும் நேரம் மிச்சம் ஆகி விடும். வார்த்தையில் வருவது தானாகவே முடிவடைந்து விடும். ஏனென்றால் அமைதியான வீட்டிற்குச் செல்ல வேண்டும் இல்லையா? அப்படி இந்த அமைதியின் மற்றும் ஒளிவடிவ உடலின் பரிஷ்தா நிலையின் சம்ஸ்காரம் தன் பக்கம் ஈர்க்கும். வாய்மொழி மூலம் சேவை செய்வதற்கான வாய்ப்பே இல்லாத மாதிரி சேவை அந்த அளவு அதிகரித்து விடும். அவசியம் கண்கள் மூலமாக மற்றும் புன்சிரித்த தன்னுடைய முகம் மூலமாக, நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணி மூலமாக சேவை செய்ய முடியும். மாற்றம் ஏற்படும் இல்லையா? எப்பொழுது இந்த வரவு செலவு கணக்கை வைப்பீர்களோ அப்பொழுது இந்தப் பயிற்சியும் அதிகரிக்கும். இது தான் மகாரதிகளின் கணக்கு. மகாரதிகள் யாருக்கு துக்கம் கொடுத்தோம் மற்றும் எந்த விகாரத்தின் வசம் ஆனோம் என்ற இந்த கணக்கை வைக்க மாட்டார்கள் இல்லையா? இதுவோ குதிரைப்படையினரின் வேலை ஆகும். மகாரதிகளின் வரவு செலவு கணக்கும் மகான் ஆகும். அந்த மாதிரி உங்களுக்குள் இந்த மாதிரி ஆழமாக முயற்சி செய்ததற்கான திட்டத்தை உருவாக்குங்கள். எனவே இடையிடையே நேரம் கிடைக்கிறது. மேளாவிலோ (விழா நிகழ்ச்சியிலோ) நேரம் கிடைப்பதில்லை தான் இல்லையா? மேளாவில் பிறகு இன்னொரு விதமான சேவையில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். மேளாவில் கொடுப்பதற்கான நேரம் இருக்கிறது மற்றும் மேளாவிற்குப் பிறகு தன்னை நிரப்புவதற்கான நேரம் கிடைக்கிறது. மேளாவில் கொடுப்பதிலேயே இரவும் பகலும் முடிவடைந்து விடுகிறது இல்லையா?

எப்பொழுது இத்தனை ஆத்மாக்களுக்கு கொடுப்பதற்கான பொறுப்பாளர் ஆகிறீர்கள் என்றால் அவசியம் கொடுப்பதற்கான திட்டம் மற்றும் எண்ணம் ஓடும். அப்பொழுது தான் திருப்தியின் சான்றிதழ் தானாக கிடைத்து விடுகிறது. அனைவரின் திருப்தி இதுவும் தன்னுடைய முயற்சிக்கு ஹை ஜம்ப் கொடுப்பதில் சகயோகம் கொடுக்கிறது. இதையோ செய்து தான் ஆக வேண்டும் ஆனால் இவை அனைத்துமே பின்னால் நடக்க வேண்டிய விஷயங்கள். குறிப்போ அனைவரும் எடுக்கிறீர்கள் தான் இல்லையா? பிறகு உட்கார்ந்து அதை ரிவைஸ் செய்ய வேண்டும். இப்பொழுதோ என்ன கிடைக்கிறதோ அதை புத்தியில் நிரப்பிக் கொண்டே இருக்கிறீர்கள். பிறகு அமர்ந்து எப்பொழுது அதை ரிவைஸ் செய்கிறீர்கள் என்றால் அதனுடைய நுண்ணியம் மற்றும் ஆழத்தில் செல்கிறீர்கள், அப்பொழுது தான் மற்றவர்களையும் ஆழத்தில் அழைத்துச் செல்ல முடியும். இப்பொழுது என்னென்ன நடந்து கொண்டிருக்கிறது. எப்படி நடந்து கொண்டிருக்கிறதோ அதில் பாப்தாதா திருப்தியாக மற்றும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார். நல்லது.

**வரதானம்: ஒரு தந்தையின் நினைவு மூலமாக ஒரே சீரான நிலையை அனுபவம் செய்யக்கூடிய சார சொரூபமானவர் ஆகுக!**

ஒரே சீரான நிலையில் இருப்பதற்கான சகஜ விதி ஒருவரின் நினைவில் இருப்பது. ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை. எப்படி விதையில் அனைத்தும் அடங்கியிருக்கிறது அதே போல் தந்தையும் விதை ஆவார், அவரில் அனைத்து உறவுகளின், அனைத்து பிராப்திகளின் சாரம் நிரம்பியிருக்கிறது. ஒரு தந்தையை நினைவு செய்வது என்றால் சார சொரூபம் ஆவது. அப்படி ஒரு தந்தையைத் தவிர வறு யாரும் இல்லை ன்ற இந்த ஒருவரின் நினைவு ஒரே சீரான நிலையை உருவாக்குகிறது. யார் ஒரு சுகம் கொடுக்கும் வள்ளல் தந்தையின் நினைவில் இருக்கிறாரோ அவரிடம் துக்கத்தின் உணர்வுகள் ஒருபொழுதும் வர முடியாது. அவர்களுக்கு கனவு கூட சுகத்தின், குஷியின், சேவையின் மற்றும் பாபாவை சந்திப்பவைகளாகத் தான் வரும்.

**சுலோகன்: உயர்ந்த நம்பிக்கைகளின் தீபத்தை ஏற்றுபவர் தான் உண்மையான குலதீபம் ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விருக்ஷபதி கல்ப-விருக்ஷத்தினுடைய அவல நிலையைப் பார்த்தார்!

இன்று விருக்ஷபதி மற்றும் ஆதி தேவ் இருவரும் தனது விருக்ஷத்தைப் பார்க்கச் சென்றனர். ஆதி தேவ், அதாவது சாகார மனித சிருஷ்டியின் படைப்பாளர் தந்தை (பிரஜா பிதா பிரம்மா) விருக்ஷத்தை நாலா பக்கத்திலிருந்தும் பார்த்தார் எனில் என்ன பார்த்தார்? ஒவ்வொரு மனித ஆத்மா ரூப இலை பழையதாகவோ ஆகி விட்டது ஆனால் பெரும்பான்மையான இலைகள் நோயுற்று இருந்தன, இதனால் அந்த இலையின் நிறம், சொரூபம் மாறி இருந்தது, அதாவது பிரகாசம் மாறி இருந்தது. ஒருபக்கம் ராஜ்ய அதிகாரத்தைப் பார்த்தார், இரண்டாம் பக்கம் மதங்களின் அதிகாரத்தைப் பார்த்தார், மூன்றாம் பக்கம் பக்தர்களின் அதிகாரத்தைப் பார்த்தார், நான்காம் பக்கம் பிரஜைகளின் அதிகாரத்தைப் பார்த்தார்; உள்ளே காலியாக இருந்தது, வெளியில் உருவம் மட்டும் இருந்தது. எப்படி கறையான் பிடித்திருந்தால் உள்ளே இருப்பதை அரித்துத் தின்று விடும், பின்பு வெளியிலிருந்தே அதைத் தெரிந்து கொள்ள முடிகிறது, அது போல ராஜ்யத் தலைவர்களிடம் ராஜ்யத்தின் சக்தி இல்லை. பெயரோ ராஜ்யம் ஆனால் உள்ளே இரவுபகலாக ஒருவர் மற்றவர் மீது இழுபறி அதாவது பொறாமையின் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. ராஜ்யத்தில் சுகத்தின் பிராப்திதான் என்ன ஆனால் ஒரு நிமிடம் கூட அமைதியில்லை, தூக்கத்திலும் அமைதியில்லை. மனித வாழ்க்கையில் முழு நாளினுடைய களைப்பை, சங்கல்பங்களை, போக்குவதற்கான சாதனம் உறக்கம் என்ற நியமம் உருவாக்கியிருந்தபோதும் அந்த அல்ப கால அமைதியின் பாக்கியம் கூட இல்லை. அதாவது, துரதிருஷ்டவசமான ராஜ்யம்! ராஜ்ய தலைமையும் இல்லை, அல்ப காலத்திற்கு ராஜ்யத்தில் பெறப்படும் அதிகாரமும் இல்லை, அத்தகைய சக்தியற்ற ராஜ்யத்தைப் பார்த்தார. நிலையை காணவில்லை. சதா பயம் எனும் பூதங்களுக்கு நடுவில் நாற்காலியில்

அமர்ந்திருப்பதைப் பார்த்தார். இதை பார்த்தவாறே பின்பு மறு பக்கம் என்ன பார்த்தார்?

தர்மத்தின் (மதம்) அதிகாரம் -இங்கு சில கொஞ்சம் அதிகமான சின்னச்சின்ன புதிய இலைகள் தென்பட்டன ஆனால் அந்த இலைகளுக்கு மிக சீக்கிரமாகவே அகங்காரம், அதாவது தற்பெருமை மற்றும் வெற்றி எனும் குருவி தின்று கொண்டிருந்தது. மறுபக்கம் பார்த்தால், பெயரோ தர்மம் ஆனால் இருப்பதோ அதிகமாக தவறான நடத்தைகள் அதாவது விகர்மத்தின் புழு அவர்களின் மத அதிகாரத்தை, அதாவது சக்தியை முடித்துக் கொண்டிருந்தது. அநேக விதமாக தலைகீழான போதையில் தூள்தூளாகி (அழிவு), மத உணர்வினால் உணர்விழந்திருந்தனர். எனவே மதத் தலைமையும் வெளிப்புறத்தில் ஆடம்பரமாகத் தெரிந்தது. தியாகம், தபஸ்யா, வைராக்கியத்திற்குப் பதிலாக மக்களை ரித்தி-ஸித்திகளினால் விளையாடச் செய்வதைப் பார்த்தோம். வைராக்கியத்திற்குப் பதிலாக வெறுப்பு, கோபத்தைப் பார்த்தோம். எவ்வாறு பெரும்பான்மையான ராஜ்ய தலைவர்கள் லாட்டரியின் சூதாட்டம் விளையாடிக் கொண்டிருந்தனரோ, அதே போல மதத் தலைவர்கள் நாம் என்பதை மறந்து, பக்தர்களிடம் அல்ப கால ஸித்திகளின் சூதாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். பெரிய பெரிய சவால் விட்டுக் கொண்டிருந்தனர் -உங்களுக்கு இந்த பிராப்தியை செய்வித்தால், நீங்கள் இவ்வளவு கொடுக்க வேண்டும், நோயிலிருந்து விடுபட வைத்தால் நீங்கள் இவ்வளவு தான் புண்ணியம் செய்ய வேண்டும். இத்தகைய ஸித்திகளினுடைய சூதாட்டத்தின் சவால் விட்டுக் கொண்டிருந்தனர். பிறகு என்ன பார்த்தோம்?

பக்தர்களின் அதிகாரம் -இதில் என்ன பார்த்தார்? குருட்டு நம்பிக்கையின் துணிகளைக் கண்களில் கட்டியிருந்தனர் மற்றும் குறிக்கோளைத் தேடிக் கொண்டிருந்தனர். இந்த விளையாட்டைப் பார்த்தீர்களா! கண்களை கட்டியிருந்தவர்கள் எப்படி பாதையைத் தேடுவார்கள்? எங்கிருந்து ஓசை வருகிறதோ அந்தப் பக்கம் செல்ல வேண்டியது தான். கண்கள் கட்டியிருப்பதால் உள்ளுக்குள் பீதியில் இருந்தனர். எனவே பக்தர்களும் உள்ளுக்குள் துக்கம் அசாந்தியால் பயந்து கொண்டிருந்தனர். இதோ இங்கு ஒரு ஆத்மா மிக விரைவாக பிராப்தி செய்விக்கிறார் என்று எங்கிருந்தாவது குரல் வந்தது எனில் உடனே அந்தக் குரலுக்குப் பின்னே

குருட்டு நம்பிக்கையில் ஓடிக் கொண்டிருந்தனர். தங்குவதற்கு எந்த இடமும் இல்லை. இன்னொரு பக்கம் பொம்மை விளையாட்டில் அவ்வளவு போதையுடன் ஈடுபட்டிருந்தனர்; யாராவது பரந்தாமம் வீட்டிற்குச் செல்லும் சரியான வழியைக் கூறினாலும், யாரும் கேட்பதற்குத் தயாராக இல்லை. பக்தியின் அதிகாரம் அதீத சிநேகத்தின் சக்தி ஆனால் சிநேகத்தின் அதிகாரம் சுயநலமாக மாறி விட்டது. சுயநலம் மேலோங்குகிறது! எல்லோரும் சுயநலத்தில் பிச்சைக்காரர்களாக காட்சியளித்தனர் -சாந்தி கொடுங்கள், சுகம் கொடுங்கள், உறவினருக்கு நீண்ட ஆயுளைக் கொடுங்கள், செல்வம் அதிகம் கிடைக்கட்டும், இதைக் கொடுங்கள், அதைக் கொடுங்கள்,... என இவ்வாறு பிச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் பிச்சைக்காரர்கள் இருந்தனர். எனவே பக்தர்களையும் பிச்சைக்கார ரூபத்தில் பார்த்தோம். அடுத்து முன்னே செல்லுங்கள்.

பிரஜைகளின் அதிகாரம் -பிரஜைகளில் என்ன பார்த்தார்? எல்லோரும் கவலை என்ற சிதை மீது அமர்ந்திருந்தனர். சாப்பிட்டுக் கொண்டுமிருந்தனர், போய்க் கொண்டுமிருந்தனர், ஏதோ காரியம் செய்து கொண்டுமிருந்தனர் ஆனால் இப்போது நெருப்பு பற்றிக் கொண்டு விடும் என்ற இந்த பயத்தின் சங்கல்பம் சதா இருந்தது. எண்ணத்தில் கனவைப் போல இது தெரிந்து கொண்டே இருந்தது, இப்போது பிடிபட்டே விட்டோம் -சில சமயம் ராஜ்ய அதிகாரம் மூலம், சில சமயம் இயற்கையின் ஆபத்துகள் மூலம், சில சமயம் கொள்ளைக்காரர்கள் மூலம் -இப்படிப்பட்ட எண்ணங்களின் கனவு கண்டு கொண்டிருந்தனர். இத்தகைய கவலைகளின் சிதையில் சவாரி செய்தவாறே, தங்களைக் காப்பாற்றுவதற்கான எந்த வழியையும் காண முடியாமல் கவலையும், சோகமும், அமைதியற்றவர்களுமாக இருந்தனர். அங்கு சென்றால் நெருப்பு இருந்தது, அங்கு சென்றால் தண்ணீர் இருந்தது. இப்படி நாலா புற பதற்றத்திற்கு நடுவில் பீதியடைந்தவர்களாகத் தெரிந்தனர், இதுதான் இன்றைய சுற்று.

இப்படி சுற்றிப் பார்த்து விட்டு வரும்போது புதிய மரக்கன்றைப் பார்த்தார். அதில் யார் இருந்தார்கள்? நீங்கள் அனைவரும் உங்களை நாற்று என நினைக்கிறீர்களா? எப்போது பழைய மரம் நோயுற்று, இற்றுப் போய் விட்டது எனில் இப்போது புதிய மரம் நடுவது என்பது ஆதார மூர்த்திகள்

உங்கள் மூலமாகத்தான் நடக்க வேண்டும். பிராமணர்கள்தான் புதிய விருக்ஷத்தினுடைய அஸ்திவாரம் ஆவார்கள், நீங்கள்தான் அந்த அஸ்திவாரம். எனவே அஸ்திவாரம் எவ்வளவு சக்திசாலியாக நிமித்தமாகி ஆகி இருக்கிறது என்பதைப் பார்த்தார். பிரம்மாதந்தைக்கு நாலா புறத்தினுடைய அவல நிலையைப் பார்த்தவாறே சங்கல்பம் வந்தது, இப்போதே குழந்தைகளுடைய தபஸ்வி ரூபம் மூலம் யோக அக்னி மூலம் இந்த பழைய விருக்ஷத்தை எரித்து விட வேண்டும் என. இந்தளவு தபஸ்வி ரூப பிராமணன் அல்லது ஆன்மீக சேனை வெளிப்பட்டு இருந்தது. எல்லோரும் தபஸ்வி ரூபத்தில் அவரவர் சக்திக்கேற்றவாறு சக்தி கொடுத்துக் கொண்டிருந்தனர். யோக அக்னி கொழுந்து விட்டு எரிவது தெரிந்தது. குழு ரூபத்தில் யோக அக்னியின் பிரபாவம் மிக நன்றாக இருந்தது ஆனால் உலக விநாசத்திற்காக பரந்த ரூபத்தில் இல்லை. வேகம் இருந்தது ஆனால் முழு வீச்சில் இல்லை. அதாவது எல்லா பிராமணர்களும் நம்பர்படி அவரவர் சக்திக்கேற்றவாறு சம்பூர்ணம், அதாவது முழுமை நிலை அடைந்திருக்க வேண்டும்; சம்பன்னம் ஆகவில்லை ஆதலால் ஒரே அடியில் விநாசமாகி, பழைய விருக்ஷமும் சாம்பலாகும் அளவுக்கு முழு வேகம் இல்லை. இப்போது என்ன செய்ய வேண்டும்? பிரம்மாதந்தையுடைய சங்கல்பத்தை சாகாரத்தில் கொண்டு வாருங்கள். தந்தையின் சிநேகியாகி இந்த பரந்த காரியத்தில் சகயோகி ஆகுங்கள் ஆனால் எப்போது அல்ல, இப்போதிருந்தே தன்னை சம்பன்னமாக்குங்கள். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி சங்கல்பத்தை சாகாரமாக்கக்கூடிய, சிநேகத்தின் கைம்மாறாக சகயோகத்தைத் தரக்கூடிய, சதா இருக்க மனம் விஷ்வ கல்யாண்காரி ஸ்திதியில் நிலைத்திருக்கக்கூடிய, ஆடாத அசையாமல் இருக்கக்கூடிய, சதா சுப சிந்தனையில் இருக்கக்கூடிய சுப சிந்தனையாளர் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு, நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

# மாயாவுக்கு சவால் விடும் சேனையால் மட்டுமே தனது கொடியை ஏற்ற முடியும்!

இன்று பிரம்மாதந்தை விரும்புவதை கேட்டீர்களா? சேனை தயாராக இருக்க விரும்புகிறார்; எனவே சாகாரத்தில் நிமித்தமாகியுள்ள ஆத்மாக்களுக்கு இப்போது சேவை தயார் செய்வதில் தீவிர வேகம் தேவை. தீவிர வேகம் என்றால் சீக்கிரமாக (quick) ஆக வேண்டும். சீக்கிரம் என்றால் நினைத்தவுடன் செய்வது. எண்ணம் மற்றும் செயலில் சமநிலை இருக்க வேண்டும், திட்டம் மற்றும் நடைமுறையில் சமநிலை இருக்க வேண்டும். அத்தகைய வேகம் உள்ளதா? அல்லது நிறைய திட்டங்களை உருவாக்குகிறீர்கள், நடைமுறையில் குறைவாக உள்ளதா? நிறைய சிந்திக்கிறீர்கள் ஆனால் செயல்களில் குறைவாக வருகிறீர்களா? எண்ணம் மற்றும் செயல் சமநிலையில் இருப்பதுதான் சம்பூரணத்தின் அடையாளம்! இந்த அடையாளத்தால் மட்டுமே உங்கள் இலக்கை தீர்மானிக்க முடியும், அவை எவ்வளவு நெருக்கமாக உள்ளன? எனவே பார்ப்பவர்களும் தைரியம் மற்றும் மகிழ்ச்சி அடைந்து பின்பற்றக்கூடிய அத்தகைய தனது குழுவைத் தயார் செய்யுங்கள். எப்படி சாகார தந்தையின் முன்மாதிரி (sample) புருஷார்த்திகளுடைய முயற்சியை இயல்பானதாக்கி (simple) ஆக்கி விடுகிறது, அது போல முன்மாதிரியை தயார் செய்யுங்கள், அவரைப் பார்த்து மற்றவருடைய முயற்சி இயல்பானதாகி விடட்டும் -அப்படிப்பட்ட குழுவைத் தயார் செய்யுங்கள். அத்தகைய சக்திகளுக்கு சவால் விடக்கூடிய குழு இருக்க வேண்டும், அது மாயாவிற்குக் கூட சவால் விட வேண்டும் -அந்த மாயா எந்த விதமான அதிகாரம் உடையவர்களாகவும் கூட இருக்கலாம்.

சூதாட்டத்தில் தோல்வி அவர்களுக்குத்தான் -கல்பத்திற்கும் முன்பும் கூட நினைவுச்சின்னத்திலும் சூதாட்டத்தைக் காட்டியுள்ளனர் ஆனால் சரியான ரூபத்தில் காட்டவில்லை. கௌரவர்கள் தனது சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் மற்றும் தர்மாதிகாரிகள் தனது சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்; சூதாட்டத்தில் அவர்கள் தோற்றுப் போக வேண்டும் மற்றும் பாண்டவர்களுடைய கொடி ஏற்றப்பட வேண்டும் -இப்படி சவால் விடக்கூடிய பயமற்ற, மாயாவின் புயலுக்கும்கூட பயப்படாத, நிரந்தர

வெற்றிக்கு சவால் விடுகின்ற அத்தகைய சேனைக்குப் பொறுப்பாளர் ஆகுங்கள், அப்போது மற்றவர்களும் பின்பற்றுவார்கள். நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பத்தியம் இருப்பதன் மூலம் சங்கமயுகத்தின் அனைத்து சுகங்களின் அனுபவம்!

தன்னை மாஸ்டர் ஆல்மைட்டி அத்தாரிட்டி (அனைத்து சக்திகள் நிறைந்த அதிகாரம் உள்ளவர்) என்று நினைக்கிறீர்களா? தந்தை மூலமாக அனைத்து சக்திகளின், அனைத்து ஞானத்தின், தன் மேல் இராஜ்யம் செய்வதற்கு மற்றும் உலகத்தின் மேல் இராஜ்யம் செய்வதற்கான அதிகாரம் என்ன கிடைத்திருக் கிறதோ அந்த அதிகாரத்தை எவ்வளவு சொரூபத்தில் கொண்டு வந்திருக்கிறீர்கள்? இந்த ஆன்மீகப் போதை நிரந்தரமாக புத்தியில் இருக்கிறதா? முழு நாளிலும் உள்ளே தன் மேல் இராஜ்யம் செய்வதற்கான அதிகாரம் நடைமுறையில் எவ்வளவு இருக்கிறது என்று இந்த சோதனை செய்கிறீர்களா? ஞானத்தின் அதிகாரத்தினால் சக்தி நிறைந்த சொரூபம் எவ்வளவு இருக்கிறது? கிடைத்திருக்கும் அனைத்து சக்திகளின் அதிகாரம் மாயாவை வென்ற மற்றும் இயற்கையை வென்றவர் ஆவதில் எவ்வளவு நடைமுறையில் அனுபவம் ஆகிறது? எப்பொழுது எந்த சக்தி மூலமாக என்ன காரியம் செய்விக்க விரும்புகிறீர்களோ அதே காரியம் வெற்றி ரூபத்தில் தென்பட வேண்டும். அந்த மாதிரி அதிகாரம் உள்ளவராக அனுபவம் செய்கிறீர்களா? எல்லைக்கப்பாற்பட்ட தந்தை அனைத்து குழந்தைகளையும் தனக்குச் சமமாக ஆல்மைட்டி அத்தாரிட்டி ஆக்குகிறார் என்றால் தந்தைக்குச் சமமாக ஆகியிருக்கிறீர்களா? எவ்வளவு ஆகியிருக்கிறேன் என்ற இந்த சோதனை செய்யத் தெரியுமா?

அனேக குழந்தைகள் பாப்தாதாவுடன் ஆன்மீக உரையாடல் செய்யும் பொழுது, நாங்கள் சோதனை செய்கிறோம், ஆனால் எங்களை மாற்றம் செய்ய முடிவதில்லை என்ற இந்த ஒரு விஷயத்தை அடிக்கடி கூறுகிறார்கள். தெரிந்திருக்கிறார்கள், ஏற்றுக் கொள்கிறார்கள் மற்றும்

யோசிக்கிறார்கள், ஆனால் செய்ய முடிவதில்லை. யுக்தியைப் பயன்படுத்துகிறார்கள் ஆனால் முக்தியை அடைவதில்லை, அதற்காக என்ன செய்யலாம்? இதற்கான காரணம் ஒரு சின்ன தவறாகும். அது தான் இந்த புரியாத புதிரின் (பூல் பூலையா சுழற்சியில் கொண்டு வந்து விடுகிறது. அது என்ன? எப்படி மருந்து எவ்வளவு தான் நல்லதாக இருந்தாலும், மேலும் நீங்கள் எந்த அளவில் எடுக்க வேண்டுமோ அதை எடுத்துக் கொண்டும் இருக்கிறீர்கள், ஆனால் ஒரு தடவை பத்தியத்தில் இருந்து விலகி, ஏதாவது ஒரு அருந்தக் கூடாத பொருளை அருந்தி விட்டீர்கள் அல்லது என்ன அருந்த வேண்டுமோ அதைச் செய்யவில்லை என்றாலும் மருந்தின் மூலம் வியாதியிலிருந்து முக்தி அடைய முடியாது. இதே விதமாக இங்கேயும் ஞானம் என்ற மருந்தை எடுக்கிறீர்கள் அதாவது ஞானத்தை புத்தியில் இது யதார்த்தமானது அல்லது இது யதார்த்தமற்றது, இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது, இது தவறு அல்லது இது சரி மற்றும் இது தோல்வி அல்லது வெற்றி என்று புத்தியில் ஓட வைக்கிறீர்கள். இந்த அறிவு புத்தியில் இருக்கிறது அதாவது நேரத்திற்குத் தகுந்தாற்போல் மருந்தை எடுத்துக் கொள்கிறீர்கள். ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள். வகுப்பு எடுக்கிறீர்கள், சேவை செய்கிறீர்கள், இந்த அனைத்து டோஸ் என்ற மருந்தின் குறிப்பிட்ட அளவை எடுக்கிறீர்கள் ஆனால் "ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, இதே நினைவில் மற்றும் சக்தி நிறைந்த நிலையில் இருக்க வேண்டும்" என்ற முதல் பத்தியத்தை, மரியாதையை முக்கியமான பத்தியத்தை நிரந்தரமாக கடைபிடிப்பதில்லை. மேலும் நானோ சிவபாபாவினுடையவனே தான், மேலும் என்னுடையவர் என்று வேறு யார் இருக்கிறார்கள்? என்று எப்பொழுதாவது கூறி, தன்னை ஏமாற்றத்தில் வைக்கிறீர்கள் ஆனால் நடைமுறையில் எண்ணத்தில் கூட வேறு எந்தவொரு நபர், வைபவம், உறவு, நெருக்கம் மற்றும் எந்த சாதனமும் நினைவில் வராத அளவிற்கு அந்த மாதிரி நினைவு சொரூபம் இருக்க வேண்டும். இது தான் கடுமையான அதாவது முக்கிய பத்தியம் ஆகும். இந்த பத்தியத்தைக் கடைப்பிடிப்பதில் அலட்சியம் இருக்கும் காரணத்தினால், மனம் சொல்லும் வழிப்படி நடக்கும் காரணத்தினால், சூழ்நிலையின் பிரபாவத்தின் காரணத்தினால் அல்லது தீய சேர்க்கையின் காரணத்தினால் நிரந்தரமாக நினைவு சொரூபத்தில் இருக்க முடிவதில்லை. எவ்வளவு கவனம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு கொடுப்பதில்லை. அற்பகாலத்திற்காக முழு கவனம்

வைக்கிறார்கள். பின்பு மெது மெதுவாக முழு கவனம் என்பதிலிருந்து மெது மெதுவாய் வெறும் கவனம் என்பதாகி விடுகிறது. இதற்குப் பிறகு அடென்ஷன் அதாவது கவனம் பலவிதமான டென்ஷனில் சென்று விடுகிறது. சூழ்நிலைகள் மற்றும் சோதனைகளின் வசமாகி அடென்ஷன் மாறி டென்ஷனின் ரூபமாகி விடுகிறது. இதே காரணத்தினால் எப்படி நினைவு மாறிக் கொண்டே இருக்கிறதோ அப்படி சக்தி நிறைந்த நிலையும் மாறிக் கொண்டே இருக்கிறது. ஆல்மைட்டி அத்தாரிட்டிக்குப் பதிலாக மாயாவின் வசமாகியிருக்கும் காரணத்தினால் வசப்படுத்தும் மந்திரம் காரியம் செய்வதில்லை. அதாவது யுக்தி, முக்தியைப் கொடுப்பதில்லை. பிறகு விரும்பவும் செய்கிறோம் இருந்தும் ஏன் நடப்பதில்லை என்று பின்பு கதறுகிறார்கள். அப்படி முக்கியமான பத்தியம் தேவையாக இருக்கிறது. இந்த ஒரு விஷயத்தின் மேல் நிரந்தரமான கவனம் வையுங்கள்.

இரண்டாவது பத்தியம்: தந்தையோ தனக்குத் தானே எஜமானன் ஆவதற்கான மற்றும் படைப்பவர் என்ற உணர்வில் இருப்பதற்கான அதிகாரத்தையோ கொடுத்து விட்டார் ஆனால் படைப்பவர் ஆவதற்குப் பதிலாக தன்னை படைப்பு அதாவது உடல் என்று நினைத்து விடுகிறார்கள். எப்பொழுது படைப்பவர் என்ற உணர்வை மறக்கிறீர்களோ அப்பொழுது மாயா அதாவது தேக அபிமானம் படைப்பவர் உங்கள் மேல் படைப்பவர் ஆகி விடுகிறது. அதாவது தன்னுடைய அதிகாரத்தை வைக்கிறது. படைப்பவர் மேல் யாரும் அதிகாரம் செய்ய முடியாது, உலகத்தின் அதிபதிக்கு மேலே யாரும் அதிபதி ஆக முடியாது. மாயாவின் எதிரில் படைப்பாக ஆகி விடுகிறீர்கள். மேலும் அடிமை ஆகி விடுகிறீர்கள். இதற்கான காரணம் எஜமானத் தன்மையின் மற்றும் அதிகாரத்தன்மையின் நினைவு சொரூபத்தில் இருப்பதற்கான பத்தியத்தை நிரந்தரமாக கடைப்பிடிப்பதில்லை.

மூன்றாவது பத்தியம்: தந்தை மூலமாக அனைத்தின் / அனைவரின் டிரஸ்டியாகி இருக்க வேண்டும். இந்த உடலுக்கும் டிரஸ்டி, மனம் அதாவது எண்ணத்திற்கும் டிரஸ்டி, லௌகீகம் மற்றும் அலௌகீகம் இரண்டிலும் என்ன குடும்பம் கிடைத்திருக்கிறதோ அதிலேயும் டிரஸ்டி ஆகியிருக்க வேண்டும் ஆனால் டிரஸ்டிக்குப் பதிலாக குடும்பஸ்தன் ஆகி

விடுகிறீர்கள். குடும்பஸ்தனின் தீய திசையின் மாடலை நீங்கள் உருவாக்குகிறீர்கள். என்ன மாடலை உருவாக்குகிறீர்கள்? அது அனைத்து பக்கங்களிலிருந்தும் இழுத்துக் கொண்டே இருக்கிறது, மேலும் இன்னொன்று குடும்பஸ்தனை கழுதையின் ரூபத்தில் காண்பித்திருக்கிறார்கள். அனேக விதமான சுமை காண்பிக்கப்பட்டிருக்கிறது - அந்த மாதிரி மாடலை உருவாக்குகிறீர்கள் தான் இல்லையா? எப்பொழுது குடும்பஸ்தன் ஆகி விடுகிறீர்களோ அப்பொழுது என்னுடையது என்ற அனேக விதமான சுமை ஏற்பட்டு விடுகிறது. அனைத்தையும் விட ராயல் ரூபத்தின் சுமையானது இது என்னுடைய பொறுப்பாகும். இதை நான் தான் நிறைவேற்றியாக வேண்டும், மேலும் யாராவது குடும்பஸ்தனாக இல்லை என்றாலும் தன்னுடைய கர்ம இந்திரியங்களின் வசமாகி அனேக ரசனைகளில் நேரத்தை இழக்கும் குடும்பஸ்தர்களாக அதிகமாக இருக்கிறார்கள். இன்று கேட்பதின் ரசனையின் வசமாகி (காதின் ரசனை) நேரத்தை இழந்தீர்கள், நாளை நாக்கின் ரசனையின் வசமாகி (பேசுவது, சாப்பிடுவது) நேரத்தை இழந்தீர்கள். அந்த மாதிரி குடும்பஸ்தனாக மாட்டிக் கொள்ளும் காரணத்தினால் தான் ஒரு டிரஸ்டி என்பதை மறந்து விடுகிறீர்கள். இந்த உடலும் என்னுடையது அல்ல. இந்த உடலுக்கும் நான் ஒரு டிரஸ்டி ஆவேன். அப்படியானால் டிரஸ்டி உரிமையாளரின் அனுமதியின்றி எந்தவொரு பொருளையும் தனக்காக உபயோகப்படுத்த முடியாது. அப்படி கர்ம இந்திரியங்களின் ரசனையின் மகிழ்ச்சியிலேயே மூழ்கி விடுவது அவரையும் குடும்பஸ்தர் என்று தான் கூறுவோமே அன்றி டிரஸ்டி இல்லை. ஏனென்றால் உயர்ந்ததிலும் உயர்ந்த எஜமானன் அவருடைய டிரஸ்டியாக நீங்கள் இருக்கிறீர்கள். அவருடைய ஸ்ரீமத் ஒருவரின் ரசனையில் எப்பொழுதும் ஒரே சீரான நிலையில் இருக்க வேண்டும் என்பது தான். இந்த கர்ம இந்திரியங்கள் மூலமாக ஒருவரின் ரசனையைத் தான் பெற வேண்டும். பின்பு ஏன் கர்ம இந்திரியங்கள் மூலமாக அனேக விதவிதமான ரசனைகளை எடுத்துக் கொள்கிறீர்கள்? அப்படி லௌகீகம் மற்றும் அலௌகீக குடும்பத்தில் குடும்பஸ்தன் ஆகி விடு கிறீர்கள் எனவே அனேக விதமான சுமை. அதற்காக தந்தை அனைத்தையும் என்னிடம் கொடுத்து விடு என்று வழிகாட்டுகிறார். அந்த சுமையை வீணாகவே தன் மேல் தூக்கி வைத்திருக்கிறீர்கள், சுமையை வைத்துக் கொண்டே மேலே செல்ல விரும்புகிறீர்கள் ஆனால் எப்படி மேலே செல்ல முடியும்? எனவே தான்

தெரிந்திருக்கிறோம், ஏற்றுக் கொள்கிறோம், மேலும் யோசிக்கிறோம், ஆனால் செய்ய முடிவதில்லை என்று கூறுகிறீர்கள். அப்படி இந்த பத்தியத்தைக் கடைப்பிடிப்பதில் குறை இருக்கும் காரணத்தினால் யுக்தியைக் கடைப்பிடித்தும் முக்தியை அடைய முடிவதில்லை.

பாப்தாதாவிற்கும் அந்த மாதிரி குழந்தைகள் மேல் இரக்கம் வருகிறது. மாஸ்டர் கடலாக இருப்பவர் ஒரு அஞ்சலிக்கு தாகம் உள்ளவராக இருக்கிறார். அதாவது யோகா மற்றும் ஞானம் மூலமாக என்ன அனுபவத்தின் பிராப்தி ஆகுமோ அந்த அனுபவத்தின் அஞ்சலியின் தாகம் உள்ளவராக இருக்கிறார். எனவே இப்பொழுது பத்தியத்தைக் கடைபிடித்தீர்கள் என்றால், அனைத்து பிராப்திகளும் எப்பொழுதும் அனுபவம் ஆகும். அனைத்து பிராப்திகளின் ஆஸ்தியின் அதிபதி. அந்த மாதிரி குழந்தையிலிருந்து எஜமானன் ஆகுபவர், பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டால் இதை தந்தையாலும் பார்க்க முடிவதில்லை. எனவே இப்பொழுது 63 ஜென்மங்களின் குடும்பஸ்தன் என்ற சம்ஸ்காரத்தை விடுங்கள். உடலின் மற்றும் மனதின் டிரஸ்டியாக ஆகுங்கள். அனைத்தும் தந்தையின் பொறுப்பு, என்னுடைய பொறுப்பு அல்ல என்ற இந்த நினைவு மூலம் லேசானவர் ஆகி விட்டீர்கள் என்றால் பின்பு என்ன நினைப்பீர்களோ அது தான் நடக்கும். அதாவது ஹை ஜம்ப் செய்து (உயரமாகத் தாண்டி சென்று விடுவீர்கள். எனவே இந்த அழுவது, கதறுவது, ஆன்மீக உரையாடலில் மாறிவிடும். ஆன்மீக உரையாடல் மூலமாக ஆத்மாவில் ஆறுதலை நிரப்ப முடியும். இல்லை என்றால் சில நேரம் தன்னுடைய புகார்கள் மற்றும் சில நேரம் சூழ்நிலைகளின் புகார்கள், இதிலேயே ஆன்மீக உரையாடலின் நேரத்தை முடித்து விடுவீர்கள். எனவே இப்பொழுது புகார்களை ஆன்மீகத்தில் மாற்றம் செய்யுங்கள். அப்பொழுது தான் சங்கமயுகத்தின் சுகங்களை அனுபவம் செய்ய முடியும். புரிந்ததா.

அந்த மாதிரி எப்பொழுதும் ஆன்மீகத் தன்மையில் இருக்கக்கூடிய, ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடக்கக்கூடிய, அந்த மாதிரி கட்டளைப்படி நடக்கும், சொற்படி நடக்கும், மேலும் ஒவ்வொரு கட்டளையையும் சொரூபத்தில் கொண்டு வரக்கூடிய அந்த மாதிரி தந்தைக்குப் பிரியமான ஞான சொரூப ஆத்மாக்கள் மற்றும் யோக

சொரூப ஆத்ம குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# தியாகம் நிறைந்த டீச்சர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:

டீச்சர்கள் என்றால் சேவாதாரிகள். சேவாதாரி என்றால் தியாகம் மற்றும் தபஸ்யா நிறைந்தவர்கள். டீச்சர்களுக்கு தனக்குள் நுண்ணிய ரூபத்தில் சோதனை செய்ய வேண்டும். மேலோட்டமான ரூபத்தில் இல்லாமல் மாறாக மிக நுண்ணிய ரூபத்தில் சோதனை செய்ய வேண்டும். அதாவது முழு நாளில் அனைத்து விதமான தியாகம் நிறைந்தவராக இருந்தோமா மேலும் எங்காவது தியாகம் நிறைந்தவருக்குப் பதிலாக ஏதாவது சாதனம் மற்றும் ஏதாவது பொருளை ஏற்றுக் கொள்பவராக இருந்தோமா என்று சோதிக்க வேண்டும். யார் தியாகம் நிறைந்தவராக இருப்பாரோ அவர் ஒருபொழுதும் எந்தவொரு பொருளையும் ஏற்றுக் கொள்ள மாட்டார். எங்கு ஏற்றுக்கொள்வதற்கான எண்ணம் வருகிறது என்றால் அங்கு தபஸ்யா முடிவடைந்து விடும். தியாகம் அவசியம் தபஸ்யா நிறைந்தவராக ஆக்கும். எங்கு தியாகம் மற்றும் தபஸ்யா இல்லையோ அங்கு சேவையும் இல்லை. வெளிப்படையாக யாராவது எவ்வளவு ரூபத்தில் சேவை செய்தாலும் ஆனால் தியாகம் மற்றும் தபஸ்யா இல்லை என்றால் சேவையின் வெற்றியும் இல்லை. சேவையில் வெற்றி ஏன் இல்லை என்று அனேக டீச்சர்கள் நினைக்கிறார்கள். சேவையில் வளர்ச்சி இல்லாமல் இருப்பது என்பதோ வேறு விஷயம் ஆனால் விதிப்பூர்வமாக நடந்து கொள்வது இது தான் சேவையின் வெற்றியாகும். அது எப்பொழுது தியாகம் மற்றும் தபஸ்யா இருக்குமோ அப்பொழுது தான் ஏற்படும். நான் டீச்சர், நான் இன்சார்ஜ் (பொறுப்பாளர்) ஆக இருக்கிறேன், நான் ஞானம் நிறைந்தவள் அல்லது யோகி ஆவேன் என்று இவ்வாறு நினைத்துக் கொள்வதை தியாகம் என்று கூறமாட்டோம். மற்றவர்கள் வேண்டுமானால் கூறட்டும், ஆனால் தன்னையே தான் கூற வேண்டாம். ஒருவேளை தன்னையே தான் கூறுகிறீர்கள் என்றால் இதையும் சுய அபிமானம் என்று தான் கூறுவோம். அப்படி தியாகத்தின்

சூத்திரம்-விளக்கம் சாதாரணமானது அல்ல. இந்த மேலோட்டமான தியாகத்தையோ பிரஜையாகும் ஆத்மாக்களும் செய்கிறார்கள், ஆனால் யார் பொறுப்பாளர் ஆகிறாரோ அவர்களுடைய தியாகம் நுண்ணிய ரூபத்தில் இருக்கும். எந்தவொரு பதவியையும் அல்லது எந்தவொரு பொருளையும் யார் மூலமாகவும் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது என்பது தான் தியாகம் ஆகும். அதனால் தான் பழமொழி இருக்கிறது யார் வெற்றியை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர் தெய்வீக அதிசயக் காரியம் செய்பவர் என்று கூறப்படுகிறது. அப்படி இங்கேயும் யார் ஞானம், யோகத்தினால் பிராப்தியான வெற்றியை ஏற்றுக் கொள்கிறார் என்றால் பெயர், புகழ் இதுவும் விதியின் சித்தி சொரூபத்தின் பிராப்தி ஆகும். அப்படி இவற்றிலிருந்து எதையாவது ஏற்றுக் கொள்வது என்றால் சித்தியை ஏற்றுக் கொள்வது என்பதாகும். யார் சித்தியை ஏற்றுக் கொள்கிறாரோ அதனுடைய பிராப்தி இங்கேயே முடிந்து விடுகிறது. பின்பு அதன் எதிர்காலம் உருவாவதில்லை. எனவே டீச்சர்களின் (சுய) சோதனை மிக நுட்பமான ரூபத்தில் இருக்கட்டும். என்பதினால் தியாகம் தபஸ்யாவும் நிரந்தரமாக இருக்கட்டும். தபஸ்யா என்றால் ஒரு தந்தையின் அன்பிலேயே மூழ்கியிருப்பது, ஏதாவது பிராப்தியாகியிருக்கும் அற்பகாலத்து பாக்கியத்தில் ஒருவேளை புத்தியின் ஈர்ப்பு இருக்கிறது என்றால் அவர் சேவையில் வெற்றி அடைபவராக ஆக முடியாது. வெற்றி அடைபவராக ஆவதற்காக தியாகம் மற்றும் தபஸ்யா வேண்டும். தியாகம் என்றால் உறவுகளை விட்டு விட்டு இங்கே வந்து அமர்ந்து விடுங்கள் என்று அர்த்தமில்லை. மகிமையின் தியாகம், மரியாதையையும் தியாகம், தாசியாக இருக்கும் இயற்கையையும் தியாகம் செய்வது தான் தியாகம் ஆகும். பின்பு உழைப்பு குறைவு, வெற்றி அதிகம் கிடைப்பதாக பார்ப்பீர்கள். இப்பொழுது உழைப்பு அதிகம், வெற்றி குறைவாக ஏன் இருக்கிறது? ஏனென்றால் இப்பொழுது இந்த இரண்டு விஷயங்கள் அதாவது தியாகம் மற்றும் தபஸ்யாவின் குறை இருக்கிறது, யாரிடம் தியாகம், தபஸ்யா இரண்டும் இருக்கிறதோ அவர் தான் யதார்த்தமான டீச்சர் ஆவார். அதாவது காரியம் செய்யும் டீச்சர். இல்லை என்றால் பெயர் அளவிற்கான டீச்சர் என்று தான் கூறுவோம்.

டீச்சர்கள் எந்தவொரு பாடத்திலும் பலஹீனமானவராக இருக்கக்கூடாது, ஒருவேளை டீச்சர் பலஹீனமானவராக இருக்கிறார் என்றால் அவர்

எவர்களுக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறாரோ அவர்களும் பலஹீனமானவர்களாக இருப்பார்கள். எனவே டீச்சர்களுக்கு அனைத்து பாடங்களில் மிகச் சரியானவராக இருக்க வேண்டும். என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று இந்த மாதிரி கூறுவது டீச்சர்கள் செய்யும் காரியம் இல்லை. அல்லது இது தெரியாது என்று கூறுவது டீச்சர்களின் வார்த்தை இல்லை. இது பிரஜைகளின் வார்த்தை ஆகும். அப்படி தன்னை வெற்றி நிறைந்தவர் என்று நினைக் கிறீர்களா? ஏதோ ஒரு விஷயத்தில் தடை இருக்கிறது. எனவே தான் வெற்றி நிறைந்தவர் ஆக முடிவதில்லை, இதை சோதனை செய்யுங்கள். எங்கு தியாகம், தபஸ்யாவின் ஈர்ப்பு இருக்குமோ அங்கு சேவையும் ஈர்க்கப்பட்டு பின்னாலேயே வரும். புரிந்ததா? அந்த மாதிரி வெற்றி நிறைந்த டீச்சர் ஆகுங்கள். சேவையில் வளர்ச்சிக்கான ஆதாரம் அந்த மாதிரி டீச்சரின் பின்னால் இருக்கிறது. அந்த மாதிரியானவர்களைத் தான் அதிர்ஷ்டசாலிகள் (பாக்கியவான்) என்று கூறுவது. இதனால் தான் "மண்ணும் பொன்னாகி விடுகிறது என்ற பழமொழி இருக்கிறது. மண்ணும் பொன்னாகி விடுவது என்றால் வெற்றி நிறைந்தவர் ஆகி விடுவீர்கள். டீச்சர்கள் அந்த மாதிரி வெற்றி நிறைந்தவர்களா? வரிசைக்கிரமமாகவோ இருப்பார்கள். டீச்சர்களின் வரிசை எண்ணோ முன்னுக்கு இருக்கிறது. நல்லது, ஒருவேளை அந்த மாதிரி வெற்றி நிறைந்தவர் ஆகவில்லை என்றால் இப்பொழுதிலிருந்தே ஆகி விடுங்கள்.

**தந்தையோடு அன்பு கொண்டு நடந்து கொள்பவர்களின் முக்கிய லட்சணங்கள்:** தந்தையை வாழ்க்கைத் துணைவனாக ஆக்கியிருக்கிறீர்களா? துணைவனின் துணையை எப்பொழுதும் வைத்து நடந்து கொள்கிறீர்களா? துணையை வைத்து நடந்து கொள்வது என்றால் ஒவ்வொரு அடியிலும் அவருடைய வழிப்படி நடக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு அடியிலும் அவருடைய வழிப்படி நடப்பது என்றால் அவருடைய துணையோடு நடந்து கொள்வது. அந்த மாதிரி நடந்து கொள்பவரா? அல்லது அன்பை மட்டும் செய்பவர்களா? சிலரோ இன்று வரையில் அன்பை ஏற்படுத்வதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே தான் யோகா வரவில்லை என்று கூறுகிறார்கள். யாருக்கு சிறிது நேரம் யோகா வருகிறது பின்பு துண்டிக்கப்பட்டு விடுகிறதோ அந்த மாதிரியானவரை வெறும் அன்பு

செய்பவர்கள் என்று கூறுவது ஆனால் யார் பாபா மீது அன்பை வைத்து நடந்து அவரது அன்பிலேயே மூழ்கியிருப்பவர்களாக இருப்பார்களோ அவர்களுக்கு உடலின் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உறவினர்களின் உணர்வே மறந்து போய் விட்டிருருக்கும். எனவே நீங்களும் தந்தையோடு அந்த மாதிரி அன்பை வைத்து நடந்து கொள்ளுங்கள். பின்பு உடல் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உறவினர்களின் நினைவு எப்படி வர முடியும்?

**கேள்வி -தந்தை மூலமாக பிராப்தியாகியிருக்கும் சக்திகளின் நடைமுறை அடையாளமாக என்ன தென்படும்?**

பதில்: யாருடைய வாழ்க்கையில் சக்திகள் இருக்கின்றனவோ அவருக்கு எங்கேயும், எதன் மேலும் ஆசை இருக்க முடியாது, சேவையில் இருப்பவர்களுக்கு எங்கேயும் ஆசை இருக்காது. சேவை செய்பவர்கள் தியாகம் மற்றும் தபஸ்யா நிறைந்தவர்களாக இருப்பார்கள். எனவே அவர்களுக்கு எதன் மீதும் ஆசை இருக்காது அதாவது அவர்களுக்கு தேக உணர்வு இருக்காது. மூன்றாவது அவர்களுக்கு சக்திகள் கொடுப்பவர் தந்தை, அவர் மூலமாக கிடைத்த சக்திகள் தான் நினைவிருக்கும். அந்த மாதிரி சக்தி அவதாரம் தான் மாயாவை வென்றவர் ஆகிறார். நல்லது.

**வரதானம்: தந்தையைப் பின்பற்றி அடிமேல் அடியெடுத்து வைத்துக் கொண்டே பரமாத்ம ஆசீர்வாதங்களைப் பெறக்கூடிய கட்டளைப்படி நடப்பவர் ஆகுக!**

கட்டளைப்படி நடப்பவர் என்றால் பாப்தாதாவின் கட்டளை என்ற அடி மேல் அடியெடுத்து வைப்பவர், அந்த மாதிரி கட்டளைப்படி நடப்பவருக்குத் தான் அனைத்து சம்மந்தங்களினால் பரமாத்ம ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. இதுவும் நியமம் ஆகும். சாதாரண முறையில் கூட யாராவது யாருடைய வழிகாட்டுதல் படி, சரி ஐயா! என்று கூறி காரியத்தை செய்கிறார்கள் என்றால் யாருடைய காரியம் செய்கிறார்களோ அவர்களுடைய ஆசீர்வாதம் அவருக்கு அவசியம் கிடைக்கிறது. இதுவோ பரமாத்மாவின் ஆசீர்வாதங்கள். இது கட்டளைப்படி நடக்கும் ஆத்மாக்களை எப்பொழுதும் டபுள் லைட் ஆக்கி விடுகிறது.

**சுலோகன்: தெய்வீகத் தன்மை மற்றும் ஆன்மீக தன்மையை தன்னுடைய வாழ்க்கையின் அலங்காரமாக ஆக்கிக் கொண்டீர்கள் என்றால், சாதாரணத்தன்மை முடிவடைந்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு தான் உலக மாற்றத்திற்கான ஆதாரம்!

அனைவரும் புது உலகிற்கான பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்களா? புது உலகம் எப்பொழுது வரும் என்று அனைவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அனைவரின் மனதில் புது உலகம் எப்பொழுது வரும் என்ற தேதி தெரிந்தால் நல்லது என்பது தான் எண்ணமாக இருக்கிறது. தேதி, கிழமை தெரிய வருமா? எப்பொழுது திரிகாலதரிசியாக இருக்கிறீர்களோ அப்பொழுது அவசியம் தெரிய வேண்டும். மூன்று காலத்தையும் தெரிந்தவர் என்றால், எதிர்காலத்தையும் எப்படி தெரிந்திருக்கிறீர்களோ அதே போலவே நிகழ்காலத்தையும் தெரிந்தவர்களாக இருப்பார்கள். மேலும் எதிர்காலத்தை தெரிந்து கொள்வதற்கான ஆதாரமும் நிகழ்காலமாகத் தான் இருக்கும். புது உலகில் வருபவர்களுமே பிராமணர்களே தான். அப்படி புது உலகில் வரக்கூடியவர்களுக்கு நிகழ்காலத்தின் மூலமாகவே எதிர்காலத்தின் தேதி, கிழமை தானாகவே தெரிந்தே விடும். எப்பொழுது புது உலகம் என்று கூறுகிறீர்கள், என்றால் புது உலகத்தின் அதிகாரி ஆத்மாக்களிலும் புதுமை இருக்க வேண்டும். எந்தவொரு பழைய சம்ஸ்காரம், எண்ணம், சொல் மற்றும் எந்த செயலிலும் பழைய தன்மை இருக்க வேண்டாம். இப்படி இப்பொழுது சிலரிடம் பழைய நடத்தையைப் பார்த்து இவருடைது பழைய நடத்தை மற்றும் இந்த பழைய பழக்கம் மற்றும் நடத்தை இவரிடமிருந்து இதுவரை போகவில்லை என்று கூறுகிறீர்கள். எந்த விஷயத்திலும் பழைய தன்மை இருக்க வேண்டாம். எண்ணமும் பழைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தின் வசம் ஆக வேண்டாம். எப்பொழுது பெரும்பான்மையான மற்றும் முக்கிய ஆத்மாக்களில் அந்த மாதிரி புதுமை தென்படுகிறதோ அப்பொழுது புது உலகம் வருவதற்கான தேதி மற்றும் கிழமை தெளிவாகிவிடும். யார்

பொறுப்பாளராக இருக்கிறார்களோ அந்த முக்கிய ஆத்மாக்களில் புதுமையின் மற்றும் மாற்றத்தின் அனுபவம் இருக்கும். அவர்களுடைய மாற்றத்தின் ஆதாரத்தில் உலக மாற்றத்தின் தேதி வெளிப்படும். உலக மாற்றம் ஆவதற்கு முன்பு உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களில் வைராக்கிய உள்ளுணர்வு இருக்கும். மேலும் வைராக்கிய உள்உணர்வினால் தான் தந்தையின் அறிமுகத்தை, "ஆம் ஆத்மாக்களின் தந்தை வந்து விட்டார்" என்று தாரணை (ஏற்றுக் கொள்ளச்) செய்ய முடியும். அப்படி உலகின் ஆத்மாக்களில் இருக்கும் வைராக்கிய உள்உணர்வு தான் பரிவர்த்தனைக்கான ஆதாரமாக இருக்கும். அதே போலவே பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்களிலும் சம்பூர்ண பரிவர்த்தனைக்கான ஆதாரம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியமாக இருக்கும். எனவே சங்கடனிலும் (குழுவாக, கூட்டாக) எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வை கொண்டு வருவதற்கு முயற்சி செய்யுங்கள். ஒவ்வொருவரின் துணைவர்களாக மற்றும் சகயோகிகளாக ஆகுங்கள். எப்பொழுது வைராக்கிய உள்உணர்வு வெளிப்படும் ரூபத்தில் இருக்கும் என்றால் பழைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் வெகு விரைவில் மற்றும் சுலபமாகவே வைராக்கிய உள்உணர்வின் உள்ளே அடங்கிப்போய் விடும். என்ன ஆகும்? என்ன ஆகும்? என்று அனைவரும் யோசிக்கிறீர்கள் தான் இல்லையா இந்த பழமைத்தன்மை அனைத்தும் மறந்து விடும். மனிதர்களுக்கு எப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் இருக்குமோ அப்பொழுது பழைய ஈர்க்கும் சம்ஸ்காரம் அனைத்தும் சுலபமாகவே அகன்று விடும். அதே போலவே குடும்பத்தின் விதவிதமான ஈர்க்கக்கூடிய பழைய சம்ஸ்காரம் மற்றும் சுபாவம் ஆகியவற்றை அகற்றுவதற்கு வைராக்கிய உள்உணர்வு தான் ஆதாரமாக ஆகும். இதன் மூலமாகத் தான் மாற்றம் வரும். இப்பொழுது அந்த மாதிரி பூமியை தயார் செய்யுங்கள் மற்றும் அந்த மாதிரி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியமுடையவர்களின் சங்கடனை (குழுவை) உருவாக்குங்கள். அவர்களுடைய எண்ண அலைகள் மற்றும் வாயுமண்டலம் மூலமாக மற்ற ஆத்மாக்களிலும் அந்த சம்ஸ்காரம் வெளியாகிவிட வேண்டும். எப்படி சேவாதாரிகளின் கூட்டு, ஒற்றுமை இருக்கிறதோ அதே போல் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உள்ளவர்களின் சங்கடன் உறுதியாக இருக்க வேண்டும். அவர்களைப் பார்த்தவுடனேயே மற்ற ஆத்மாக் களுக்கும் அந்த மாதிரி வைப்ரேஷன்

(எண்ண அலைகள்) வர வேண்டும். ஒரு பக்கம் எல்லைக்கப் பாற்பட்ட வைராக்கியம் இருக்கும். இன்னொரு பக்கம் தந்தைக்குச் சமமாக தந்தையின் அன்பில் ஐக்கியமாகி இருப்பார்கள். அப்பொழுது தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் வரும். ஒரு விநாடி கூட மற்றும் ஒரு எண்ணம் கூட இந்த அன்பிலேயே ஐக்கியமாகியிருக்கும் நிலையிலிருந்து கீழே வராது. அந்த மாதிரி அன்பான தந்தையின் அன்பான குழந்தைகளின் சங்கடன் இருக்கட்டும். அவர்களை அன்பான சங்கடன் என்று கூறுவோம். ஒரு பக்கம் மிகுந்த அன்பு இன்னொரு பக்கம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் இரண்டின் சங்கடன் சேர்ந்தே சமமாகத் தென்படும். அந்த மாதிரி சங்கடனை உருவாக்கினீர்கள் என்றால், அந்த தேதி தெளிவாகத் தென்படும். இந்த சங்கடன் தான் தேதியை வெளிப்படுத்தும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எதிர்பார்த்திருத்தலை விட்டு விட்டு ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!

இன்று பாப்தாதா உலகின் எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளின் பிரதிபிம்பத்தை எந்த எந்த ஆத்மாவில் என்னென்ன அதிர்ஷ்டத்தின் ரேகை தென்படுகிறது, மேலும் எது எது இப்பொழுது தெளிவாகக் கூடியவை என்று பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவரின் அதிர்ஷ்டத்தின் ரேகை வேறு வேறாக தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிர்ஷ்டத்தின் ரேகைகளில் முக்கியமாக நான்கு பாடங்களின் நான்கு ரேகைகள் தென்படுகின்றன. நான்கு ரேகைகளும் தெளிவாக இருப்பது அதாவது நான்கு பாடங்களிலும் முயற்சி மூலமாக தன்னுடைய உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்கி இருப்பவர்கள் மிகக் குறைவாகவே தென்படுகிறார்கள். இதன் பிரகாரம் மதிப்போடு தேர்ச்சி பெறுபவர்கள் மற்றும் முதல் தரத்தில் தேர்ச்சி பெறுபவர்களாக யாருடைய நான்கின் அதிர்ஷ்டத்தின் ரேகைகள் தெளிவாக இருக்கின்றனவோ அவர்கள் தான் வருவார்கள். மதிப்புடன் தேர்ச்சி பெறுபவர்களின் ரேகைகள் நான்கிலுமே ஒரே சமமாக பிரகாசமாக, தெளிவாக இருப்பதாகத் தென்படுகிறது. அவர்கள் தான் அஷ்ட ரத்தினங்கள். இரண்டாவது நிலையில் உள்ள முதல் தரத்தில் வரும் 100 ரத்தினங்கள். அவர்களுடைய நான்கு பாடங்களின் ரேகைகள் தென்படுகின்றன ஆனால் சமமானதாகவும் தெளிவான ரூபத்தில் இல்லை. அவற்றில் சில அதிக பிரகாசமாகவும், சில கொஞ்சம் குறைவாகவும் தென்பட்டன. இரண்டாவது தரத்தில் பதினாராயிரம் ஆத்மாக்கள் இருக்கின்றன. அந்த பதினாராயிரத்தில் இருந்து முதலில் உள்ள இரண்டு, மூன்று ஆயிரம் பேர்களின் ரேகைகளில் நான்கு பாடங்களிலிருந்து மூன்று பாடங்களில் ஐம்பது சதவிகித மதிப்பெண்களில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் மற்றும் ஒரு பாடத்தில் 25 சதவிகிதத்தில் தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள் அதாவது இல்லை

என்பதற்குச் சமமாகும். அந்த மாதிரி அனைத்து அதிர்ஷ்டம் நிறைந்தவர்களின் அதிர்ஷ்டத்தைப் பார்த்தோம்.

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள பிராமண குழந்தைகளின் ஜாதகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். தகத்தைப் பார்த்த போது தற்சமயம் பெரும்பான்மையோரின் மனதில் ஒரு முக்கியமான எண்ணம் ஓடுவதாகப் பார்த்தோம். அது என்ன? உலகத்தின் ஆதாரமாக இருக்கும் ஆத்மாக்களும் ஏதோ ஆதாரத்தில் நின்று கொண்டிருப்பதாகப் பார்த்தோம். அந்த ஆதாரம் எது? உலகின் வினாஷம் செய்யும் சாதனங்களைப் பார்க்கிறார்கள் அல்லது இயற்கையின் சீற்றம் எப்பொழுது இருக்கிறதோ அப்பொழுது எங்கு ஏற்படுகிறது. ஏற்படுகிறதா அல்லது இல்லையா? -இந்த ஆதாரத்தில், ஆதாரமானவர்கள் நின்று கொண்டிருப்பதாகப் பார்த்தோம். அந்த மாதிரி ஆதாரத்தில் நின்று கொண்டிருக்கும் குழந்தை களிடமிருந்து பாப்தாதாவிற்கு ஒரு கேள்வி இருக்கிறது. முதலில் ஸ்தாபனை செய்பவர்கள் வினாஷத்தின் ஆதாரத்தில் இருப்பார்கள் என்றால், ஸ்தாபனை செய்பவர்களுடைய எதிர்காலம் என்னவாக இருக்கும்? வினாச ஜுவாலையை கொழுந்து விட்டு எரியச் செய்வதற்கு ஆதாரமானவர்கள் யார்? இயற்கையை மாற்றம் செய்பவர்கள் யார்? இயற்கை மற்றும் வினாசத்தின் சாதனங்களின் ஆதாரத்தில் நின்று கொண்டி ருப்பவர்கள் அனைத்து ஆத்மாக்களையும் விட உத்தமமான ஆத்மாக்களாக ஆக முடியுமா, மேலும் உத்தமமானவர்களின் கட்டளைப்படி அதாவது உயர்ந்த எண்ணத்தின் ஆதாரத்தில், அனைத்து ஆதார மானவர்களின் சம்பூர்ணம் ஆவதின் ஆதாரத்தில் வினாசம் செய்யும் சாதனம் மற்றும் இயற்கை தன்னுடைய காரியத்தை செய்யுமா? கட்டளை இடுபவர் யார்? அதிகாரி இயற்கையா அல்லது உத்தமமான ஆத்மாக்களா, யார்? ஆதாரமானவர்களே ஏதாவது ஆதாரத்தில் இருக்கிறார்கள் என்றால், அவர்களை அதிகாரி என்று கூறுவோமா? அப்படி என்ன பார்த்தோம்? ஏற்பாடு செய்பவர்கள் காத்திருப்பதில் இருக்கிறார்கள். ஏற்பாடுகள் செய்வதில் அலட்சியம் மற்றும் காத்திருப்பதில் அலர்ட் (எச்சரிக்கை) ஆக இருக்கிறார்கள். இதைப் பார்த்து பாப்தாதாவிற்கு சிரிப்பும் வந்தது. மேலும் இரக்கமும் வந்தது, ஏன்? மாயாவின் சாதுர்யத்தை இதுவரை குழந்தைகள் தெரிந்து கொள்ள முடியவில்லை. காத்திருப்பதின் இனிமையான தூக்கத்தில் மாயா தூங்க

வைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் குழந்தைகள் அரைக் கல்பத்தின் தூங்கும் சம்ஸ்காரவசமாகி, சிலரோ ஒரு நொடியில் தூங்கி விழுகிறார்கள் மற்றும் பிறகு உணர்வில் வருகிறார்கள், பிறகு ஏற்பாடு செய்வதற்கான வேகத்தில் வந்து விடுகிறார்கள். மேலும் சிலரோ சில நிமிடங்களுக்காக தூங்கியும் விடுகிறார்கள். பின்பு உணர்வில் வேகத்தில் வந்து விடுகிறார்கள். மூன்றாவது விதமான குழந்தைகள் மிக ஓய்வாக தூங்கிக் கொண்டே இடையிடையே கண்விழித்து இப்பொழுது ஏதாவது நடந்ததா, இதுவரையிலும் ஒன்றுமே நடக்கவில்லையா என்று பார்த்துக் கொண்டே இருந்தார்கள். எப்பொழுது நடக்குமோ அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்றும் இருந்தார்கள். இந்தக் காட்சியைப் பார்த்து சிரிப்பு வராதா என்ன?

மூன்றாவது கண் கிடைத்திருந்தும் மாயாவைத் தெரிந்து கொள்ள முடியவில்லை, எனவே மாயாவை மிக நல்ல முறையில் பகுத்தறிந்து கொள்வதற்காக பகுத்தறியும் சக்தியை விசேஷமான ரூபத்தில் தன்னில் தாரணை செய்யுங்கள். இரண்டு மாதங்கள் இருக்கின்றன அல்லது நான்கு மாதங்கள் இருக்கின்றன என்று இப்படி நேரத்தை எண்ணிக் கொண்டிருக்காதீர்கள் ஆனால் தன்னை சக்தி நிறைந்தவராக ஆக்குங்கள். ஆகுமா அல்லது ஆகாதா, என்னவாகும் மற்றும் எப்பொழுது ஆகும் என்ற இந்த எண்ணங்களுக்குப் பதிலாக புருஷோத்தம நிலையில் நிலைத்திருந்து குழுவினை சம்பூர்ணம் ஆக்கும் எண்ணத்தின் ஆதாரத்தினால் இயற்கைக்கு கட்டளை இடுவதின் அதிகாரி ஆகுங்கள். ஆகத்தான் வேண்டும், ஆனால் என்ன ஆகும் என்று தெரியவில்லை, ஒருவேளை ஆகலாம், இரண்டு, நான்கு மாதங்களில் ஒன்றும் தென்படவில்லை. சங்கமயுகம் நாற்பது வருடங்களுக்கானதா அல்லது ஐம்பது வருடங்களுக்கானதா என்ற இந்த விதமான எண்ணமும் சம்பூர்ண நிச்சயத்தின் எதிரில் தந்தையின் மற்றும் தன்னுடைய ஸ்தாபனையின் காரியத்தில் தடை ஏற்படுத்தக்கூடிய மிக சூட்சும ரூபத்தின் ராயல் சந்தேகம் ஆகும். எதுவரை இந்த சந்தேகம் இருக்கிறதோ அது வரை முழுமையான வெற்றி அடைபவர் ஆக முடியாது. நிச்சயபுத்தி உடையவர் வெற்றி அடைவார் என்ற வர்ணனையும் இருக்கிறது. எனவே வெற்றி அடையும் ஆத்மாவிற்கு சந்தேகத்தின் ராயல் ரூபத்தின் எண்ணம் இருக்க முடியாது.

சம்பூர்ண நிச்சயபுத்தி உடையவர் தன்னுடைய உலக மாற்றத்தின் காரியத்தில் இரவு பகலாக பிஸியாக இருப்பார். எப்படி ஏதாவது விசேஷ காரியத்தின் பொறுப்பு இருக்கிறது என்றால் இரவு பகலாக ஏற்பாடு செய்வதிலேயே ஈடுபட்டு விடுவார்களேயன்றி எப்பொழுது நேரம் கிடைக்குமோ அப்பொழுது மேடையை அலங்கரிப்போம் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்துவோம் என்று காத்திருக்க மாட்டார்கள். நேரத்திற்கு முன்பே ஏற்பாடுகள் செய்யப்பட்டு விடும். அப்படி உலக மாற்றத்தின் பொறுப்பு என்ற இந்த மாற்ற விழாவையும் இப்பொழுது கொண்டாட வேண்டுமாகும். அனைத்து ஆத்மாக்களையும் அவரவர்களின் அனுசாரம் சதோபிரதானம் ஆக்குவதின் மற்றும் தந்தையின் அறிமுகம் கொடுப்பதின் விசாலமான உலக மகாநாட்டைக் கூட்ட வேண்டும். இதற்காக முன்பாகவே உங்களுக்கு உங்களுடைய மனநிலை என்ற மேடையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் அல்லது அந்த நேரம் செய்வீர்களா? எப்படி ஸ்தூல மேடையின்றி சொற்பொழிவு நிகழ்த்துவது மற்றும் செய்தி கொடுப்பது நடக்க முடியாதோ அதே போலவே கடைசி நேரத்தில் தன்னுடைய சம்பூர்ண நிலை என்ற மேடை இன்றி விசாலமான உலக மகாநாட்டில் செய்தி எப்படி கொடுக்க முடியும்? அதாவது தந்தையை வெளிப்படுத்துவது எப்படி செய்ய முடியும்? அப்படியானால் மேடையை முன்பாகவே தயார் செய்வீர்களா அல்லது அந்த நேரம் செய்வீர்களா? எனவே எதிர்பார்த்திருத்தலை விட்டு விட்டு ஏற்பாடுகளில் ஈடுபட்டு விடுங்கள். இந்த எண்ணமே எதிர்பார்த்திருத்தல் எண்ணம் ஆகும். இந்த ளானதையும் சக்தி நிறைந்ததாக மாற்றம் செய்யுங்கள். அதிகாரி ஆகுங்கள். இயற்கைக்குக் கட்டளை வீணா இடுவதற்கான சக்திசாலியான மேடையை உருவாக்குங்கள். குழு ரூபத்தில் அனைத்து பிராமணர்களின் மனதில் இரக்க பாவனை, உலகிற்கு நன்மை செய்யும் பாவனை, அனைத்து ஆத்மாக்களை துக்கத்தில் இருந்து விடுவிப்பதற்கான நல்ல விருப்பங்கள் எதுவரை உள்ளத்தில் உற்பத்தி ஆகவில்லையோ அதுவரை உலக மாற்ற காரியம் தாமதிருக்கிறது. இப்பொழுது குழப்பத்தில் இருக்கிறீர்கள் ஒரு எண்ணத்தில் கூட ஆடாத அசையாதவராக இல்லை. அங்கதனுக்குச் சமமாக ஆடாதவராக ஆவது என்றால் கடைசி நேரத்தைக் கொண்டு வருவது, அப்படி குழு ரூபத்தில் அந்த மாதிரி ஒரு எண்ணத்தை உருவாக்குங்கள் அதாவது உறுதியான எண்ணத்தின் விரலை அனைவரும் சேர்ந்தே கொடுங்கள். அப்பொழுது

இந்த கலியுகம் என்ற மலை மாறி பொன்னுலகத்தைக் கொண்டு வர முடியும். புரிந்ததா? என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும்? நல்லது.

எப்பொழுதும் ஒரு எண்ணத்தில் அங்கதனுக்கு சமமாக ஆடாதவராக இருக்கக்கூடிய, சம்பூர்ண நிச்சயபுத்தி உடைய, ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியத்தில் எப்பொழுதும் வெற்றி அடையக்கூடிய அந்த மாதிரி அதிகாரி குழந்தைகளுக்கு, அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தீதிஜியுடன்: குழுவின் பலம் என்றால் ஒரே எண்ணம்!** இரட்டை யாத்திரை அதாவது ஒன்று மதுபன்னின் யாத்திரை, இன்னொன்று விசேஷமாக மதுபன்னில் ஆன்மீக யாத்திரை. அப்படி இரண்டு யாத்திரை செய்வதற்கு வரும் ஆன்மீக யாத்திரிகர்கள் சௌகரியமாக தன்னுடைய யாத்திரையை வெற்றிகரமாக முடித்துச் செல்கிறார்களா? அனைவரும் திருப்தியாக இருக்கிறார்களா? ஒருவேளை இதயம் பெரியதாக இருக்கிறது என்றால் இடமும் பெரியது என்று வர்ணிக்கப்பட்டது. ஏற்கனவே ஸ்தூல இடம் குறைவாக இருக்கிறது ஆனால் வரக்கூடியவர்களின், வரவேற்பு செய்பவர்களின் மற்றும் அமைத்துக் கொடுப்பவர்களின் இதயம் பெரியதாக இருக்கிறது என்றால் இடத்தின் குறை, உணரப்படமாட்டாது. பின்பு 63-ஜென்மங்களாக செய்த யாத்திரைகளை விடவோ சங்கமயுகத்தின் யாத்திரையில் அனைத்து வசதிகளும் அதிகமாகக் கிடைக்கிறது. அந்த ஜடச்சிலைகளின் யாத்திரை எவ்வளவு கடினமாக இருக்கிறது. நமது குழு ஒரே எண்ணம் உடையதாக எதுவரை ஆகியிருக்கிறது என்று நீங்களும் மேற்பார்வை செய்கிறீர்களா? பிரம்மாவுக்கு படைப்பை படைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது, எனவே படைப்பு படைக்கப்பட்டது என்று சாஸ்திரங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இங்கு தனியாக பிரம்மாவின் விஷயமோ இல்லை ஆனால் பிரம்மாவையும் சேர்த்து அனைத்து பிராமணர்களுக்கும் எப்பொழுது நாம் அனைவரும் தயாராக இருக்கிறோம் மேலும் புது உலகத்தின் ஸ்தாபனை ஆகத் தான் வேண்டும் அல்லது ஆகியே தீரும், அப்படி ஒன்றாக சேர்ந்து திடமான எண்ணம், எப்பொழுது பிராமணர்களின் மனதில் உருவாகுமோ அப்பொழுது தான் உலகத்தின் மாற்றம் ஏற்படும். அதாவது புது உலகத்தின் படைப்பு நடைமுறையில் தென்படும். இதிலேயும் குழுவின்

பலம் வேண்டும். ஒவ்வொருவரின், எட்டு பேரின் மட்டுமின்றி, முழு குழுவின் ஒரே எண்ணம் வேண்டும். எண்ணத்தின் மூலம் படைப்பைப் படைக்க வேண்டும். இதனுடைய ரகசியம் இந்த விதமாக இருக்கிறது - எண்ணம் உருவாகும். மேலும் ஒரு நொடியில் முடிவின் முரசு கொட்டத் தொடங்கி விடும். ஒரு பக்கம் முடிவின் முரசொலி, இன்னொரு பக்கம் புது உலகத்தின் காட்சி சேர்ந்தே தென்படும். அங்கேயே வினாசத்தின் தீவிரம் இருக்கும். மேலே அங்கேயே தண்ணீர் சூழ்ந்த நிலையின் நடுவில் நாலாபுறங்களிலும் வினாசத்தில் ஒரு பகுதி நிலமாகவும் மற்றும் மீதி மூன்று பகுதி தண்ணீர் நிறைந்ததாகவும் இருக்கும் இல்லையா? இந்த அனேக மதங்களின் காரணமாக பிற்காலத்தில் அனேக தேசங்கள் உருவாகின இல்லையா? அந்த அனைத்து மதங்களும் எப்பொழுது அழியுமோ அப்பொழுது அனேக தேசங்களும் தண்ணீரின் நடுவில் ஒரு தீவு மாதிரி ஆகி விடும். அப்படி ஒரு பக்கம் வினாசத்தின் தீவிரம் இருக்கும் மற்றும் இன்னொருபுறம் முதல் இளவரசனின் (ஸ்ரீகிருஷ்ணரின்) ஜென்மம் ஏற்பட்டதின் ஓசை நாலாபுறமும் பரவும், அவர் இலையில் மிதந்து வரமாட்டார். தண்ணீரால் சூழ்ந்த பிறகு இலையில் ஸ்ரீகிருஷ்ணர் மிதந்து வந்தார் என்று காண்பிக்கிறார்கள் இல்லையா? மூன்று பகுதி தண்ணீர் சூழ்ந்ததின் காரணமாக எப்பொழுது பாரதம் சொர்க்கமாக ஆகிறது அதை தண்ணீரால் சூழ்ந்ததாக காண்பித்திருக்கிறார்கள். அந்த மாதிரி தண்ணீர் சூழ்ந்ததின் நடுவில் முதல் இலை அதாவது யார் முதல் ஆத்மாவோ அவருடைய ஜென்மத்தின் செய்தி முதல் இளவரசன் பிறந்து விட்டார் என்று நாலாபுறமும் பரவும். தங்க துவாரகை தண்ணீரிலிருந்து வெளிப்பட்டது என்று காண்பிக்கிறார்கள் இல்லையா? ஆனால் தண்ணீரிலிருந்து இல்லை, உலகத்தின் மூன்று பகுதி தண்ணீரில் இருக்கும். எனவே தண்ணீரின் நடுவே தங்க துவாரகையைக் காண்பித்திருக்கிறார்கள். எனவே தான் தங்க துவாரகை தண்ணீரிலிருந்து வெளியானது என்று கூறுகிறார்கள். அந்த விஷயத்தின் முழு வர்ணனை மட்டும் செய்யமுடியவில்லை. அப்படி அதே நேரம் முதல் ஆத்மாவின் ஜென்மத்தின் கொண்டாட்டம் இருக்கும். அந்த மாதிரி காட்சிகள் எதிரில் வருகிறது என்றால் பழைய உலகத்தின் மகா வினாசத்தின் முரசொலி மற்றும் புது முதல் இளவரசனின் ஜென்மத்தின் காட்சிகள் சேர்ந்தே தென்படும். எப்படி முரசு கொட்டுவதற்கு முன்பு முரசு சூடு செய்யப்படுகிறது. அப்பொழுது தான் ஓசை நன்றாக வெளிப்படும்.

இதுவும் யோக அக்னியினால் முரசொலிப்பதற்கு முன்பு தயார் செய்ய வேண்டும். அப்பொழுது தான் முரசின் ஒலி அனைத்துப் பக்கங்களிலும் பரவும். அப்படி ஏற்பாடு செய்வதிலேயே முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? எதிர்பார்த்திருப்போரையும் ஏற்பாடு செய்வதில் ஈடுபடுத்தி விட்டீர்கள் என்றால், அப்பொழுது வெற்றி முரசு கொட்டும்.

எப்பொழுது உடலை நடத்து விப்பது வந்து விடுமோ அப்பொழுது இராஜ்யத்தை நடத்து விப்பதும் வந்து விடும். உடலை நடத்து விப்பது என்றால் இராஜ்யம் செய்வது அப்படி இராஜ்யம் செய்வதின் சம்ஸ்காரத்தை நிரப்ப வேண்டும் இல்லையா? ஞானம் நிறைந்தவர் என்று கூறப்படுகிறது என்றால் முழு ஞானத்தில் உடல், மனம், பொருள் மற்றும் மனிதர்கள் அனைத்தும் வந்து விடுகிறது, ஒருவேளை இவற்றில் ஒன்றின் ஞானம் குறைவாக இருக்கிறது என்றால் கூட ஞானம் நிறைந்தவர் என்று கூறமாட்டோம். புரிந்ததா? எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆவதற்கான ஆதாரமும் ஞானம் நிறைந்த நிலை தான். ஞானம் இல்லை என்றால் வெற்றி அடைபவராகவும் ஆக முடியாது. நேரத்திற்கு ஏற்றபடி முயற்சி செய்வதின் வேகமும் அதிகமாக வேண்டும். நேரத்தின் வேகம் அதிகமாக இருக்கிறது, மேலும் செல்பவர்களின் வேகம் குறைவாக இருக்கிறது என்றால் எப்படி நேரத்திற்குள் சென்றடைவார்கள்? ஒரே பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை இது முக்கியமான விஷயமாகும். ஒவ்வொரு நேரமும் ஒருவரின் நினைவிலேயே ஒரே ரசனையில் இருக்க வேண்டும். இந்த முயற்சியில் எப்பொழுது வெற்றி அடைந்தீர்கள் என்றால் இலக்கை சென்றடைந்து விடுவீர்கள். யார் பிரிக்க முடியாத அன்பிலேயே இருக்கிறார்களோ அவர்களுக்கு உதவியும் தானாகவே கிடைத்து விடுகிறது.

முரளி தான் ஊன்றுகோல், இந்த ஊன்றுகோலின் ஆதாரத்தினால் ஏதாவது குறை இருந்தால் கூட அது நிரம்பிவிடும். இந்த ஆதாரம் தான் நம்முடைய வீடு வரை மற்றும் நம்முடைய இராஜ்யம் வரை கொண்டு சேர்க்கும் ஆனால் நியமப்படி என்று மட்டும் இல்லாமல் முழு ஈடுபாட்டோடு இருக்க வேண்டும். அப்படி ஈடுபாட்டோடு முரளி படிப்பது மற்றும் கேட்பது என்றால் முரளிதரனின் அன்பிலேயே மூழ்கியிருப்பது. முரளிதரன் மேல் உள்ள அன்பின் அடையாளம் முரளி ஆகும். எவ்வளவு

# 1975 அவ்யக்த முரளி

முரளி மேல் அன்பு இருக்கிறதோ அந்த அளவே முரளிதரன் மேலும் அன்பு இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். உண்மையான பிராமணனை முரளி மூலம் பகுத்தறிந்து கொள்ளலாம். முரளி மேல் ஈடுபாடு இருக்கிறது என்றால் உண்மையான பிராமணன் ஆவார். முரளி மேல் ஈடுபாடு குறைவாக இருக்கிறது என்றால் அரைகுறை பிராமணன் என்பதாகும். நல்லது.

**வரதானம்: ஆன்மீகத்தன்மையின் சக்தி மூலம் தூரத்திலிருக்கும் ஆத்மாக்களுக்கு அருகாமையின் அனுபவம் செய்விக்கக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!**

எப்படி அறிவியலின் சாதனங்கள் மூலமாக தூரத்திலிருக்கும் ஒவ்வொரு பொருளும் அருகில் இருப்பதாக அனுபவம் ஆகிறதோ. அதே போல் தெய்வீக புத்தி மூலமாக தூரத்திலிருக்கும் பொருளை அருகில் அனுபவம் செய்ய முடியும். எப்படி உடன் இருக்கக்கூடிய ஆத்மாக்களை தெளிவாகப் பார்க்கிறீர்கள். பேசுகிறீர்கள், சகயோகம் கொடுக்கிறீர்கள் மற்றும் பெறுகிறீர்கள், அந்த மாதிரி ஆன்மீக நிலையின் சக்தி மூலமாக தூரத்திலிருக்கும் ஆத்மாக்களுக்கு அருகாமையின் அனுபவம் செய்விக்க முடியும். இதற்காக மாஸ்டர் சர்வ சக்திவான், நிரம்பிய மற்றும் முழுமையான நிலையில் மட்டும் நிலைத்திருங்கள் மற்றும் எண்ண சக்தியை சுத்தமானதாக ஆக்குங்கள்.

**சுலோகன்: தன்னுடைய ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் மூலமாக மற்றவர்களுக்கு பிரேரணை (தூண்டுதல்) கொடுப்பவர் தான் பிரேரணை மூர்த்தி (தூண்டுதல் செய்பவர்) ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு பிரம்மா வாய் வழி ஞானம் பெற்ற பிராமணரும் சைத்தன்ய சாலிகிராமத்தின் கோயில் ஆவார்!

தன்னை தாமரை மலருக்குச் சமமாக மிகவும் விலகிய மற்றும் எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரியவராக அனுபவம் செய்கிறீர்களா? தாமரை மலர் ஒன்று லேசாக இருக்கும் காரணத்தினால் நீரில் இருந்தபொழுதும் விலகி இருக்கிறது. அடுத்து, குடும்பம் இருந்தபொழுதிலும் சுயம் அது விலகி இருக்கிறது. அதே போலவே நீங்கள் அனைவரும் கூட லௌகீக மற்றும் அலௌகீக குடும்பத்தில் இருந்து கொண்டே விலகியவராக இருக்கிறீர்களா? விலகியிருப்பதற்கு முக்கியமாக தன்னுடைய உள்ளுணர்வை சோதனை செய்யுங்கள். எப்படி உள்ளுணர்வோ அப்படி குடும்பம் உருவாகிறது. என்ன உள்ளுணர்வு வைக்க வேண்டும் - ஆத்மீக உள்ளுணர்வு மற்றும் தெய்வீக உள்ளுணர்வு. இந்த உள்ளுணர்வு மூலமாக குடும்பத்திலும் ஆன்மீகம் நிரம்பிவிடும். அதாவது குடும்பத்தில் ஆன்மீக நிலையின் காரணமாக இவை அனைத்தும் என்னுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டவை என்று புரிந்து நடந்து கொள்வீர்கள். அப்படி என்னுடையது என்பது சுலபமாகவே அகன்று விடும். பொறுப்பில் கொடுக்கப்பட்டவை மேல் ஒருபொழுதும் என்னுடையது என்ற உணர்வு இருக்காது. என்னுடையது என்பதில் தான் பற்றுதலின் கூடவே மற்ற விகாரங்களின் பிரவேசமும் ஆகிறது. என்னுடையது என்பது முடிய வேண்டும் அதாவது விகாரங்களிலிருந்து விடுபட்டு விகாரமற்றவராக அதாவது தூய்மை ஆக வேண்டும். அதன் மூலம் குடும்பமும் தூய்மையான குடும்பமாகி விடும். விகாரங்களின் அழிவு ஏற்படுவது என்றால் உயர்ந்தவர் ஆவது. அப்படி தன்னை விகாரங்களை அழிக்கக்கூடிய உயர்ந்த ஆத்மா என்று நினைக்கிறீர்களா?

இல்லறத்தை தூய்மையான இல்லறமாக ஆக்கியிருக்கிறீர்களா? அனைத்தையும் விட முதல் குடும்பம் தன்னுடைய உடல் என்ற குடும்பம். பிறகு உடலின் சம்மந்தங்களின் குடும்பம். அப்படி முதல் குடும்பமான உடலின் ஒவ்வொரு கர்மேந்திரியங்களை தூய்மையாக்க வேண்டும். எதுவரை உடலின் குடும்பத்தை தூய்மையாக்கவில்லையோ அதுவரை உடலின் சம்மந்தங்களின் குடும்பம் அது எல்லைக்குட்பட்டதாக அல்லது எல்லைக்கப்பாற்பட்டதாக இருந்தாலும் அதையும் கூட தூய்மையான குடும்பமாக ஆக்க முடியாது. பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரிகளின் குடும்பம் எது? எப்படி எல்லைக்குட்பட்ட சம்மந்தங்களின் குடும்பம் இருக்கிறதோ, அதே போல் பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் என்பதினால் முழு உலகத்தின் ஆத்மாக்களுடன் சாகாரத்தில் சகோதரன், சகோதரிக்கான சம்மந்தம். அந்த அளவு மிகப் பெரிய குடும்பம் ஆகும் ஆனால் முதலில் தன்னுடைய உடலின் குடும்பத்தை தூய்மையாக்குங்கள். அப்பொழுது தான் எல்லைக்கப்பாற்பட்ட குடும்பத்தையும் தூய்மையாக்க முடியும். தானம் செய்வது முதலில் தன் வீட்டில் தொடங்குகிறது என்ற பழமொழி இருக்கிறது. அதாவது முதலில் தன்னுடைய உடலின் குடும்பம் அதாவது வீட்டை தூய்மையாக்கும் சேவை செய்ய வேண்டும். பிறகு எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்ய வேண்டும். எனவே தன்னுடைய உடல் என்ற வீட்டை தூய்மையாக்கி இருக்கிறேனா என்று முதலில் தன்னைத் தானே கேளுங்கள். எண்ணத்தை, புத்தியை, கண்களை மற்றும் வாயை ஆன்மீகமானதாக அதாவது தூய்மையாக ஆக்கியிருக்கிறேனா? எப்படி தீபாவளி அன்று வீட்டின் ஒவ்வொரு மூலையையும் சுத்தம் செய்கிறார்கள், ஒரு மூலை கூட விட்டுப் போகக்கூடாது என்று அந்தளவு கவனம் வைக்கிறார்கள். அந்த மாதிரி ஒவ்வொரு கர்மேந்திரியத்தையும் தூய்மையாக்கி ஆத்மாவின் தீபத்தை நிரந்தரமாக எரிய வைத்திருக்கிறீர்களா? அந்த மாதிரி ஆன்மீகத் தீபாவளியை கொண்டாடி விட்டீர்களா அல்லது இனி மேல் தான் கொண்டாட வேண்டுமா? அனைவரின் தீபம் இடைவிடாது ஒளி வீசிக் கொண்டிருக்கிறது தான் இல்லையா? எப்படி ஒவ்வொரு வீட்டையும் கோவிலாக்குவோம் என்ற வர்ணனை இருக்கிறது. அப்படி தன்னுடைய உடல் என்ற வீட்டை கோவிலாக ஆக்கியிருக்கிறீர்களா? எப்பொழுது ஒவ்வொரு வீட்டையும் கோவிலாக்குவீர்களோ அப்பொழுது தான் உலகத்தையும் சைத்தன்ய தேவதைகள் வசிக்கும் கோவிலாக ஆக்குவீர்கள்.

எத்தனை பிராமணர்கள் இருக்கிறார்களோ, அந்த ஒவ்வொரு பிராமணனும் சைத்தன்ய சாலிகிராமத்தின் கோவில் ஆவார்கள், சைத்தன்ய சக்தியின் கோவில் ஆவார்கள், அந்த மாதிரி கோவில் என்று புரிந்து கொண்டு அதை சுத்தமாக தூய்மையாக ஆக்கியிருக்கிறீர்களா? இப்பொழுதைய புருஷார்த்த (முயற்சி) நேரத்திற்கு தகுந்தாற்போல் மற்றும் உலகின் முழுமையான பரிவர்த்தனையின் நேரத்திற்குத் தகுந்தாற்போல், தற்போது எந்தவொரு கர்மேந்திரியத்தின் மூலமாகவும் இயற்கை மற்றும் விகாரங்களின் வசம் ஆகக்கூடாது. எப்படி கோவிலுக்குள் பூதம் பிரவேசம் செய்வதில்லை அதே போன்று, ஒவ்வொரு வீட்டையும் கோவிலாக ஆக்கியிருக்கிறீர்களா? எங்கு அகத்தம் இருக்கிறதோ அங்கே தான் அசுத்த விகாரம் மற்றும் பூதம் பிரவேசம் ஆகிறது. சைத்தன்ய சாலிகிராமத்தின் கோவிலில் மற்றும் சைத்தன்ய சக்தி சொரூபத்தின் கோவிலில், அசுரனை சம்ஹாரம் செய்பவளின் கோவிலில், அசுர எண்ணம் மற்றும் அசுர சம்ஸ்காரம் ஒருபொழுதும் பிரவேசிக்க முடியாது. ஒருவேளை பிரவேசம் ஆகிறது என்றால் ஏதோ விதமான தூய்மையின்மை இருக்கிறது. அந்த மாதிரி தன்னை சோதனை செய்யுங்கள். எங்காவது எந்த விதமான அசுத்தம் இருந்து விட்டது என்றால் அதையும் அழித்து விடுங்கள். அதாவது உண்மையான தீபாவளியைக் கொண்டாடுங்கள். எப்பொழுது அந்த மாதிரி தூய்மையான குடும்பத்தை உருவாக்குவீர்களோ அப்பொழுது தான் உலகமாற்றம் ஏற்படும்.

இங்கு மதுபனிலும் ஆன்மீக யாத்திரை செய்ய வருகிறீர்கள் என்றால், ஆன்மீக யாத்திரையில் தன்னுடைய பலஹீனங்களை விட்டு விட்டுச் செல்ல வேண்டும். மதுபனே பரிவர்த்தனை (மாற்றம் கொண்டு வரும்) பூமியாகும். பரிவர்த்தனை பூமியில் வந்து பரிவர்த்தனை செய்யவில்லை என்றால், பரிவர்த்தனை பூமியிலிருந்து என்ன லாபத்தை எடுத்தீர்கள்? பரிவர்த்தனை பூமியில் இருக்கும் பொழுது மட்டும் பரிவர்த்தனை கொண்டு வருவது என்பதல்ல, நிரந்தரமான பரிவர்த்தனையைக் கொண்டு வர வேண்டும். மதுபனை மகாயக்ஞம் மற்றும் ராஜஸ்வ அஸ்வமேத் யக்ஞம் என்று கூறுகிறார்கள் என்றால், யக்ஞத்தில் ஆஹுதி போடப்படுகிறது. மகா யக்ஞத்தில் மகான் ஆஹுதியை போட்டுச் செல்கிறீர்களா? அல்லது போட்ட ஆஹுதியை மீண்டும்

திருப்பி எடுத்துக் கொள்கிறீர்களா? எப்படி பெயர் கொடுக் கிறீர்களோ அதே போல் காரியமும் செய்கிறீர்களா அல்லது இல்லையா? பெயர் மகாயக்ஞம், பரிவர்த்தனை பூமி மற்றும் வரதான பூமி என்றால் எப்படி பெயரோ அப்படி காரியம் செய்யுங்கள். என்ன உறுதிமொழி கொடுத்துச் செல்கிறீர்களோ அதை நிறைவேற்றிக் கொண்டே இருங்கள் அல்லது நிறைவேற்றுவது கடினமாக இருக்கிறதா? நிறைவேற்றுவதில் மூன்று விதமான ஆத்மாக்கள் உருவாகி விடுகிறார்கள். சிலரோ நிறைவேற்றுவதில் உண்மையான விட்டில் பூச்சி மாதிரி தன்னை தந்தை மேல் பலியாக்கி விடுகிறார்கள் அதாவது கட்டளை மேல் பலியாகி விடுகிறார்கள். மேலும் சிலர் பக்தர்கள் ஆகி விடுகிறார்கள் அதாவது தந்தையிடமிருந்தே அடிக்கடி சக்தியை எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள் அதாவது சகித்துக் கொள்ளும் சக்தியைக் கொடுத்தீர்கள் என்றால் என்னால் அப்படி நடந்து கொள்ள முடியும். மேலும் எதிர்கொள்ளும் சக்தி கொடுத்தீர்கள் என்றால் என்னால் அப்படி நடந்து கொள்ள முடியும் என்று யாசித்துக் கொண்டே இருக்கிறார்கள். அந்த மாதிரி பிச்சையை யாசித்துக் கொண்டே இருக்கிறார்கள் என்றால் பக்தர்கள் ஆகி விடுகிறார்கள். மேலும் சிலர் ஏமாற்றுப் பேர்வழிகளாகவும் ஆகி விடுகிறார்கள், சொல்வது ஒன்று மேலும் எழுதுவது ஒன்று, பின்பு செய்வது இன்னொன்று. தந்தையின் எதிரிலும் ஏமாற்றுகிறார்கள், தன்னுடைய தவறை மறைப்பதற்கான மோசடி செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஏமாற்றுப்பேர் வழிகளாகவும் ஆகி விடுகிறார்கள். அனேகருக்கு அப்படி நடந்து கொள்வதற்கான சக்தி இல்லை ஆனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பின்பு சாக்கு போக்கு கூறுகிறார்கள். தன்னுடைய பலஹீனத்தை மறைத்து இந்த சம்மந்தம் இப்படிப்பட்டது அதனால் தான் இப்படி ஆனது மற்றும் சுற்றுப்புறம், சூழ்நிலை அந்த மாதிரி இருந்தது, எனவே இந்த மாதிரி நடக்கிறது, சூழ்நிலைக்கேற்ற மாதிரி நடந்து கொண்டிருக்கிறது அந்த மாதிரி மற்றவர்களின் காரணங்களைக் காட்டி சாக்குப்போக்குகளை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள். எனக்கு இருப்பதோ ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, அவர் என்ன கூறுவாரோ மற்றும் என்ன செய்விப்பாரோ அதைத் தான் செய்வோம் என்று அனைவரும் கூறுகிறார்கள், ஆனால் செய்வதில் மற்றும் நடைமுறையில் வருவதில் அனேக விதமானவர்களாக ஆகி விடுகிறார்கள். எனவே இதுவரை சாதாரணம் என்று நினைத்து என்ன செய்திருக்கிறீர்களோ

அதைக் கடந்ததை கடந்ததாக்குங்கள். அதாவது தன் மேல் இரக்கப்படுங்கள். இந்த பூமியின் மகத்துவத்தையும் நல்ல முறையில் தெரிந்து கொள்ளுங்கள். இந்த பூமியை சாதாரண பூமி என்று நினைக்காதீர்கள். மகான் ஸ்தானத்தில் தன்னை மகானாக ஆக்குவதற்காக வருகிறீர்கள். மகான் ஆவது என்றால் மகத்துவத்தைத் தெரிந்து கொள்வது. புரிந்ததா?

அப்படி நேரத்திற்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றம் செய்யக்கூடிய, உலக மாற்றக் காரியத்திற்கு பொறுப்பாளர் ஆகியிருக்கக்கூடிய, தந்தைக்கு அன்பின் பிரதி உபகாரத்தை செய்யக்கூடிய, தந்தையை எப்பொழுதும் தன்னுடைய துணைவனாக ஆக்கக்கூடிய, மேலும் எப்பொழுதும் தாமரை மலருக்குச் சமமாக சாட்சியாக இருக்கக்கூடிய அந்த மாதிரி எப்பொழுதும் அன்பிற்குரிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# தனிப்பட்ட சந்திப்பு -சகோதரிகளுடன்: சக்திகளின் விசேஷ குணமாக பயமின்மையை மகிமையாக பாடியிருக்கிறார்கள்!

அதை தன்னில் அனுபவம் செய்கிறீர்களா? பயமற்றவர் என்றால் ஏதாவது மனித ஆத்மாவிடமிருந்து மட்டும் பயமற்ற நிலை என்பதல்ல ஆனால் மாயாவின் தாக்குதலிலிருந்தும் பயமற்ற நிலை. யார் மாயாவைக் கண்டு பயப்படுவதில்லையோ அவரை சக்தி என்று கூறப்படுகிறது. மாயாவைக் கண்டு பயப்படவில்லையே? யார் பயப்படுகிறாரோ அவர் தோல்வி அடைகிறார். யார் பயமற்றவராக இருக்கிறாரோ அவரைக் கண்டு மாயா மிகவும் பயந்து விடும். ஏனென்றால் பயத்தின் காரணமாக சக்தியை இழந்து விடுகிறது. மேலும் விவேகத்தையும் இழந்து விடுகிறது. பொதுவாகவே எப்பொழுது யாரிடமாவது பயம் ஏற்படுகிறது என்றால், அவர்கள் நினைவு, உணர்வுகளை இழந்து விடுகிறார்கள். எனவே அவர்களால் மாயாவை வெற்றி அடைய முடிவதில்லை. எனவே எப்படி சக்தி சேனை என்ற பெயர்

இருக்கிறதோ அதன்படி சக்தி என்பதின் விசேஷம் பயமற்ற நிலை நடைமுறையில் தென்பட வேண்டும் அப்பொழுது தான் சக்திகள் என்று கூறுவோம். ஏதாவது விதமான பயம் இருக்கிறது என்றால் அவரை சக்தி என்று கூறமாட்டோம். அபலையாக இருப்பவர் எப்பொழுதும் அடிமையாக இருப்பார், அவரால் அதிகாரி ஆக முடியாது. நீங்களோ அதிகாரிகள் தான் இல்லையா? பயத்தின் காரணமாக அடிமையாக ஆகி விடு வதில்லையே அப்படி பஞ்சாபைச் சேர்ந்த சக்தி சேனைகள் நீங்கள் பயமற்றவர்களாக இருக்கிறீர்களா? எப்பொழுதிலிருந்து பிராமணர் ஆகியிருக்கிறீர்களோ அப்பொழுதிலிருந்து நான் சிவசக்தி ஆவேன், மாயாவே வா, எவ்வளவு தாக்க வேண்டுமோ அவ்வளவு தாக்கு என்று சவால் விட்டிருக்கிறீர்களா? மாயாவின் வசம் ஆவது தன்னுடைய ஏதாவது பலஹீனத்தின் காரணமாக ஆகிறது. எங்கு பலஹீனம் இருக்கிறதோ அங்கு மாயா இருக்கிறது. எங்கு அசுத்தம் இருக்கிறதோ அங்கு அவசியம் கொசு உற்பத்தி ஆகும். அதே போலவே மாயாவும். எங்கு பலஹீனம் இருக்கிறதோ அங்கே தான் அது பிரவேசம் ஆகிறது, அப்படி பலஹீனம் ஆவது என்றால் மாயாவை வரவழைப்பது. நீங்களே வரவழைத்து பின்பு நீங்களே பயப்படுகிறீர்கள் என்றால் பின்பு ஏன் வரவழைக்கிறீர்கள்? நாமே தான் சிவசக்தி சேனை என்ற இந்த போதையை வையுங்கள். சென்ற கல்பத்திலும் மாயா மேல் வெற்றி அடைந்திருந்தேன், இப்பொழுதும் அதே பங்கை மீண்டும் செய்து கொண்டிருக்கிறேன். எத்தனை தடவைகள் வெற்றி அடைந்தவர்கள் நீங்கள்? யார் அனேக தடவை வெற்றி அடைந்திருப்பாரோ அவர் எவ்வளவு பயமற்றவராக இருப்பார்? அவர் பயப்படுவாரா என்ன? சக்திகள் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்காக எந்த முரசு கொட்டியிருக்கிறார்கள்? கும்பகர்ணனை எழுப்புவதற்காக பெரிய முரசைக் கொட்டுங்கள். சின்ன முரசை கொட்டுகிறீர்கள் என்றால் கும்பகர்ணன் திரும்பி படுக்கிறானே அன்றி, அதாவது நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என்று கூறுகிறார்கள் ஆனால் மீண்டும் தூங்கி விடுகிறார்கள். எனவே அவர்களுக்காக இப்பொழுது சிறு சிறு முரசு கொட்டுவது காரியத்திற்கு உதவாது. எனவே அடிக்கடி நெருக்கத்தை அதிகரிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களை குறை சொல்ல முடியாது, அவர்களோ ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார்கள். உங்களுடைய வேலை ஏதாவது விசேஷ நிகழ்ச்சி நடத்தி அவர்களை எழுப்ப வேண்டும்.

**பஞ்சாபின் சகோதரர்களுடன் தனிப்பட்ட சந்திப்பு:** எப்படி ஸ்தானம் இருக்கிறதோ அந்த ஸ்தானத்தின் நினைவின் மூலமும் நிலையில் பலம் வந்து விடுகிறது. மதுபன் நிவாசி என்று கூறுவதினால் பரிஷ்தா தன்மையின் நிலை தானாகவே ஏற்பட்டு விடுகிறது. பரிஷ்தா என்றால் யாருக்கு உடலுடன் எந்த ரிஷ்தாவும் (உறவும்) இல்லையோ அவர் தான். அப்படி தேகத்தின் உறவுகள் என்னென்ன இருக்கின்றனவோ அவை அனைத்தையும் இங்கு மறந்து விடுகிறார்கள். இந்த அனுபவத்தை கொஞ்ச நேரத்திற்காவது செய்கிறீர்கள் இல்லையா? இடையிடையே மதுபன்னில் வருவது இவ்வளவு கடினமாக இருந்த போதிலும் அடிக்கடி ஏன் வருகிறீர்கள்? ஏனென்றால், இங்குள்ள அனுபவம் அங்கு நினைவில் மாறி விடுகிறது. எனவே மதுபன்னில் வருவது அவசியமாகும். அங்கே குடும்பத்தில் இருக்கிறீர்கள் அதுவும் சேவைக்காகத் தான் இருக்கிறீர்கள். வீடு என்று நினைத்தீர்கள் என்றால் குடும்பஸ்தன், சேவாதாரி என்று நினைத்தீர்கள் என்றால் டிரஸ்டி, குடும்பஸ்தனில் நாலாபுறங்களில் உள்ள கர்ம பந்தனம் இழுக்கும். சேவாதாரி என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் டிரஸ்டி என்ற நிலையில் என்னுடையது முடிவடைந்து விடும். குடும்பஸ்தனில் என்னுடையது என்பது இருக்கும். என்னுடையது என்பது மிக நீளமானது. எங்கு என்னுடையது இருக்கிறதோ அங்கு தந்தை இருக்க முடியாது. எங்கு என்னுடையது இல்லையோ அங்கு தந்தை இருக்கிறார். குடும்பத்தில் "என்னுடையதை ஏற்றுக் கொள்ள வேண்டும், என்னுடையதைக் கேட்க வேண்டும் மேலும் என்னுடைய சொற்படி நடக்க வேண்டும்" என்று எல்லைக்குட்பட்ட அதிகாரி ஆகி விடுகிறீர்கள். எங்கு எல்லைக்குட்பட்ட அதிகாரம் இருக்கிறதோ அங்கு எல்லைக்கப்பாற்பட்ட அதிகாரம் முடிவடைந்து விடுகிறது. இப்பொழுது கடந்ததை கடந்ததாக்கி முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டே செல்லுங்கள். முற்றுப்புள்ளி என்றால் அது புள்ளியாகும். முற்றுப்புள்ளி இடவில்லை என்றால் அதாவது புள்ளி ரூபத்தில் நிலைத்திருக்கவில்லை என்றால் ஆச்சரியக்குறியையோ அல்லது கமாவோ அல்லது கேள்விக்குறியோ இட்டு விடுகிறீர்கள். ஆச்சரியத்தின் அடையாளம் என்ன? அப்படியும் நடக்குமா என்ன? பிராமணர்களிலும் இந்த விஷயம் இருக்கிறதா? என்ற இது ஆச்சரியத்தின் அடையாளம் ஆகி விட்டது. இதுவும் நடக்கக்கூடாது. இது ஏன் நடந்தது? ஏன், என்ன என்று கூறுவது கேள்வியாகி விட்டது. இதுவும் கூட வீணான எண்ணம் உற்பத்தி ஆவதற்கான ஆதாரமாகும். என்ன நடக்கிறதோ அதை

சாட்சியாகிப் பாருங்கள். சாட்சிக்குப் பதிலாக ஆத்மாவின் துணைவனாகி விடுகிறீர்கள், தந்தையின் துணைவனுக்குப் பதிலாக ஆத்மாவின் துணைவன் ஆகி விடுகிறீர்கள். அப்படியா விஷயம், நானும் அதே போல் தான் நினைக்கிறேன். இது தான் கேட்பதற்கு மற்றும் சொல்வதற்கு துணை போவதாகும். அப்படி ஆத்மாவின் துணைவன் ஆனீர்கள் என்றால், பரமாத்மாவின் துணைவனாக எப்படி ஆவீர்கள்? எவ்வளவும் ஆத்மாவின் துணைவனாக இருக்கிறீர்களோ அவ்வளவு நேரம் தந்தையின் துணைவனாக ஆக மாட்டீர்கள். இதை துண்டிக்கப்பட்ட யோகா என்று கூறுவது. உடைந்த பொருளை வீச வேண்டியதாக இருக்கும். அதே சிலை எது பூஜைக்குத் தகுதியானதாக இருக்கிறதோ அதுவே உடைந்து விட்டது என்றால், அதற்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. அப்படி இங்கேயும் எப்பொழுது யோகா துண்டித்துப்போனது என்றால், உயர்ந்த பிராப்தி இல்லை. அதாவது மதிப்பில்லை. நிரந்தரமான துணைவர்களாக இருப்பவர்கள் உடையாத யோகிகள் இடைவிடாத யோகி மற்றும் நிரந்தரமாக பாப்தாதாவின் துணைவர்களாக பஞ்சாபை சேர்ந்தவர்கள் இருக்கிறீர்களா? நல்லது.

**வரதானம்: வெளிமுகமான ரசனைகளின் கவர்ச்சியின் பந்தனத்திலிருந்து விடுபட்டு இருக்கக்கூடிய பந்தனமற்ற (ஜீவன் முக்த்) வாழ்க்கை உள்ளவர் ஆகுக!**

வெளிமுகமானது என்றால் மனிதனின் சுபாவம் மற்றும் உணர்வுகள், தேக உணர்வின் வைப்ரேஷன், எண்ணம், வார்த்தை மற்றும் சம்மந்தம், நெருக்கம் மூலமாக ஒவ்வொருவரையும் வீணானதின் பக்கம் தூண்டக்கூடிய, எப்பொழுதும் ஏதாவது விதமான வீணான சிந்தனையில் இருக்கக்கூடிய, உள்மனதின் சுகம், சாந்தி மற்றும் சக்தியிலிருந்து விலகியிருக்கக்கூடிய இந்த மாதிரியான வெளிமுகமான ரசனையில் வெளியிலிருந்து மிகவும் கவர்ச்சி செய்கிறது. எனவே முதலில் இதை வெட்டி எடுங்கள். இந்த ரசனை தான் சூட்சும பந்தனமாகி வெற்றியின் லட்சியத்திலிருந்து தூரமாக்கி விடுகிறது. எப்பொழுது இந்த பந்தனங்களிலிருந்து விடுபட்டவர் ஆவீர்களோ அப்பொழுது தான் பந்தனமற்ற வாழ்க்கை உள்ளவர் என்று கூறுவோம்.

**சுலோகன் :யார் நல்ல மற்றும் தீய காரியம் செய்பவர்களின் பிரபாவத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்டு, சாட்சியாக மற்றும் இரக்க மனமுடையவராக இருக்கிறாரோ அவர் தான் தபஸ்வி ஆவார்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 25.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லையற்ற ஆசிரியர் என நினைத்து வைராக்கிய உள்ளுணர்வை தாரணை செய்யுங்கள்!

பஞ்சாப், குஜராத் மண்டலங்களின் டீச்சர்களுடன்: தன்னை மாஸ்டர் உலகத்தினுடைய ஆசிரியர் என நினைக்கிறீர்களா அல்லது அவரவர் சேவை நிலையத்தினுடைய, நான் இந்த இடத்தினுடைய டீச்சராக இருக்கிறேன் என்பது புத்தியில் இருக்கிறதா? நான் உலகத்திற்கு நிமித்தமாகியுள்ள மாஸ்டர் விஷ்வ டீச்சர் ஆக இருக்கிறேன் என்பது புத்தியில் இருக்க வேண்டும். எல்லைக்குட்பட்ட நினைவு இருக்கிறதா அல்லது எல்லையற்றதா? எல்லையற்ற போதை மற்றும் எல்லையற்ற சேவையின் திட்டம் நடந்து கொண்டுள்ளதா அல்லது தனது இடத்தினுடையதா? எல்லையற்ற போதை இருந்தால் உலகின் எஜமானன் ஆக முடியும். ஒருவேளை எல்லைக்குட்பட்ட போதை மற்றும் எல்லைக்குட்பட்ட நினைவு இருந்தது என்றால் உலகின் எஜமானன் என்ற சம்ஸ்காரம் வராது, பின்பு சிற்றரசர்கள் ஆவீர்கள். விஷ்வ மகாராஜன் ஆகப் போகின்ற அறிகுறிகள் இப்போதிருந்தே காட்டத் தொடங்கும். எப்படி ஏதாவது புதிருக்கு விடை கண்டுபிடிக்க வேண்டுமெனில் அதனுடைய அடையாளங்களைக் கேட்கிறார்கள் அதன் மூலம் எப்பேர்பட்ட கடினமான புதிராயினும் சீக்கிரமாக விடை கண்டுபிடிக்க முடிகிறது. எனவே இங்கும் கூட யார் என்னவாக ஆகப் போகிறார்கள், இந்த புதிர் உள்ளது, எனில் இதனை அறிகுறிகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும். தனக்குத்தானே தெரிய வரும் நான் எனது முயற்சிற்கேற்றவாறு என்னவாக ஆவேன் என்பது.

டீச்சர்கள் சுதந்திரமானவர்கள், எந்த கர்ம பந்தனமும் இல்லை, சேவையின் பந்தனம் மட்டுமே உள்ளது. அந்த பந்தனம் பந்தனமே இல்லை ஆனால் பந்தன்முக்த் ஆக்கக் கூடியது. எப்போது எல்லா

விஷயங்களிலும் சுதந்திரம் உள்ளது எனில் டீச்சர்களுக்கு எல்லையற்ற புத்தி இருக்க வேண்டும். எது வரை முடியுமோ அது வரை எல்லையற்ற சேவையில் சகயோகம் தருவதற்கான வாய்ப்பை நீங்களாகவே முன் வந்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் எந்தளவு சுயம் எல்லையற்ற சேவையினுடைய அனுபவம் செய்கிறீர்களோ அந்தளவு அனுபவிமூர்த்தி என அழைக்கப்படுவீர்கள். அனுபவிமூர்த்திக்குத்தான் மதிப்பு உண்டாகிறது; எப்படி யார் பழங்காலத்து அனுபவஸ்தராக உள்ளாரோ, இவர் அனுபவமிக்கவர் எனக் கருதி, அவருடைய கருத்துக்கு மதிப்பு அளிக்கின்றனர். எனவே இங்கும் கூட அனுபவமிக்கவராக வேண்டும். தானே வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சியின்படி செய்வதால் அதில் பாதி கணக்கு தன்னுடையதாகவும், பாதி இன்னொருவருடையதாகவும் ஆகி விடுகிறது, வருவாய் பங்கிடுவதைப் போல. எனவே நிகழ்ச்சியின்படி செய்வதால் பாதி ஆகி விடுகிறது. என்னைத் தகுதியானவனாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லக் கூடாது. நான் சுயம் ஆகிக் காட்டுவேன். யார் தானாகவே முன்வருகிறாரோ, அவருக்கு பாராட்டுகள் கிடைக்கிறது. எனக்கு வாய்ப்பு கிடைத்தால் செய்வேன் அல்லது என்னை முன்னேற விட்டால் நான் முன்னேறுவேன் என்று இப்படி ஒருபோதும் நினைக்கவோ, காத்திருக்கவோ கூடாது. 'இதுவும் ஆதாரமாகி விடுகிறது. டீச்சர்களோ சுயம் ஆதாரமூர்த்திகள், ஆகவே யார் ஆதாரமூர்த்திகளோ அவர்கள் யாருடைய ஆதாரத்தையும் எடுத்துக் கொள்ள மாட்டர்கள். இந்த லாட்டரியை இழந்து விடக்கூடாது. தாமாகவே முன் வர வேண்டும் மற்றும் எல்லையற்ற அனுபவி ஆகுங்கள். எல்லையற்ற புத்திவான் ஆகுங்கள் வாய்ப்பை எடுத்துக் கொண்டே சென்றீர்கள் என்றால் வாய்ப்பு கிடைத்துக் கொண்டே இருக்கும். இவருக்குத்தான் மாஸ்டர் விஷ்வ டீச்சர்! எனக் கூறப்படுகிறது, மற்றபடி அவரவர் சென்டரின் டீச்சர்கள். எப்படி தந்தை ஒரு இடத்தில், மதுபனில் இருந்தவாறே, மதுபனிற்கு மட்டுமின்றி நாலாபுறத்திற்கான திட்டம் உருவாக்கிக் கொண்டிருந்தார், அப்படி நிமித்தமானவர் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் எல்லையற்ற திட்டமிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். எல்லா எல்லையற்ற புத்திசாலி டீச்சர்களும் இப்படியிருக்கிறீர்களா? நாலாபுறமும் சுற்றி வருகிறீர்களா அல்லது தனது இடத்தில் மட்டும் சுற்றி வருகிறீர்களா? யார் எந்தளவு ஈஸ்வரிய சேவையில், அதாவது சுற்றி வருகிறாரோ அந்தளவு அவர் சக்ரவர்த்தி ராஜா ஆவார். நல்லது,

இதுவோ எல்லையற்ற டீச்சர்களுக்காக நடந்தது. இப்போது எதிர்கால திட்டத்தைக் கூறினார்.

எல்லையற்ற வைராக்கிய உள்ளுணர்வை டீச்சர்கள் தங்களுக்குள் அனுபவம் செய்கிறீர்களா? தனது சென்டர் அல்லது ஆர்வம் உள்ளவரிடம் ஈர்ப்பின்றி இருப்பதுவே எல்லையற்ற வைராக்கிய உள்ளுணர்வு. எப்போது இந்த ஈர்ப்பிலிருந்து எல்லையற்ற வைராக்கியம் இருக்குமோ அப்போது வெற்றி முழக்கம் ஏற்படும். எல்லா வித ஸ்தூல, சூட்சும சாதனங்களிலும் எல்லையற்ற வைராக்கிய உள்ளுணர்வு. அத்தகைய நிலத்தைத் தயார் செய்துள்ளீர்களா அல்லது கொஞ்சம் சென்டரிலிருந்து மாற்றினால் ஆடிப்போய் விடுவீர்களா? ஆர்வம் உள்ளவர்கள் மீது இரக்கம் வராதல்லவா? அவர்களைப் பற்றிய எண்ணம் கொஞ்சம் கூட வராதா? இத்தகைய பேப்பர் வந்தால் நான் நஷ்டோமோகாவாக இருக்கிறேனா? என்று இந்த மாதிரி தன்னை சோதிக்க வேண்டும். ஒருவேளை அந்த சம்பந்தத்தில் மோகம் இருந்தால், நீங்கள் முரளி வகுப்பு எடுக்கிறீர்கள்! இது அலௌகீக சேவையின் சம்பந்தம், இதில் உங்களுக்குள் மோகம் இருந்தது என்றால் வருகின்ற மாணவர்கள் இதைப் பற்றி பேசுவார்கள். ஆகவே, இப்போது ஏதாவது உத்தரவு வந்தது எனில் நான் எவர் ரெடியா? என கவனமாக சோதியுங்கள். இந்த சென்டரின் சேவை நன்றாக இருக்கிறது எனில் சேவையின் மீது கூட ஈர்ப்பு இல்லையே? எப்போது எல்லாவற்றிலிருந்து விலகி இருக்கிறீர்களோ அப்போதுதான் எல்லையற்ற வைராக்கிய உள்ளுணர்வு எனக் கூறுவோம். தனது சரீரத்திலிருந்தும் விலகிய நிலை, நிமித்தமாகி சேவைக்காக நடத்துகிறேன்.

ஈர்ப்பின் அடையாளம் -புத்தி அடிக்கடி தந்தையிடமிருந்து துண்டித்து அந்தப் பக்கம் சென்று விடுவது! தன் மீதான ஈர்ப்பும் கூடாது, எனது விசேஷம் -சிலரிடம் கையாளும் சக்தியோ அல்லது வார்த்தையின் சக்தியோ நன்றாக இருந்தால், நான் இப்படிப்பட்டவர் என கூறுவார் ஆனால் இதுவோ பாப்தாதா அளித்தது. தனது ஞானத்தின் விசேஷம், எந்த விசேஷமானாலும் சரி, அதன் மீது ஈர்ப்பு கூடாது. இதிலும்கூட கர்வம் வந்து விடுகிறது, எனவே இதை புத்தியில் வையுங்கள் -இது தந்தையிடமிருந்து கிடைத்த ஆஸ்தி! இது எல்லா ஆத்மாக்களுக்காகவும் எனக்கு கிடைத்துள்ளது -அவர் கொடுத்துக் கொண்டிருக்கிறார் நான்

நிமித்தம் மட்டுமே! போகும்போதும் வரும்போதும், பார்க்கும்போதும், பேசும்போதும் அனைவருக்கும் இவர் எல்லையற்ற வைராகி என்ற உணர்வு ஏற்பட வேண்டும். ஞானத்தின் சேவை செய்வதில் புத்திசாலிகள், இதுவோ எல்லோரும் அனுபவம் செய்கின்றனர். இப்போது எல்லையற்ற வைராக்கியத்தின் அனுபவம் செய்யுங்கள், இதை மற்றவர்களும் அனுபவம் செய்யட்டும். நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விகார உடல் என்ற பாம்பு மூலம் அனைத்து வருமானத்தின் அழிவு!

ஒவ்வொருவரும் இங்கு வந்ததும் கோர்ஸ் (பாடம்) எடுத்தார்களா என்று அனைத்து குழந்தைகளையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். கோர்ஸ் எடுத்தீர்கள் தான் இல்லையா? கோர்சுக்கு பிறகு ரிவைஸ் கோர்ஸ் (அதையே மீண்டும் படிப்பது) நடந்தது. ரிவைசுக்குப் பிறகு இப்பொழுது கடைசி கோர்ஸ் ஆக அரியலைசேஷன் (உணர்ந்து புரிவது) கோர்ஸ். அதாவது என்னென்ன கேட்டீர்களோ, என்னென்ன அடைந்தீர்களோ, தந்தையின் சரித்திரமாக என்ன பார்த்தீர்களோ அதன் பிரகாரம் தனக்குள் எவ்வளவு நிரப்பினீர்கள் மற்றும் எவ்வளவு இழந்தீர்கள் என்பதாகும். கேட்பவர்களாக மட்டும் ஆகியிருக்கிறீர்களா அல்லது நீங்கள் நிரம்பியவர்களாகவும் ஆகியிருக்கிறீர்களா? சக்தி நிரம்பியவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது மற்ற உயர்ந்த ஆத்மாக்களின் மற்றும் பாப்தாதாவின் குணங்களின் மகிமை பாடுபவராக மட்டும் ஆகியிருக்கிறீர்களா? ஞான சொரூபம், நினைவு சொரூபம், தெய்வீக குணம் நிரம்பிய சொரூபம் மற்றும் நிரந்தர சேவாதாரி சொரூபமாக ஆனீர்களா? அல்லது இவை அனைத்தையும் நினைவு செய்பவர்களாக மட்டும் ஆகியிருக்கிறீர்களா? ஞானமோ மிக உயர்ந்தது, யோகா அதி சிரேஷ்டமானது, தெய்வீக குணம் தாரணை செய்வது அவசியமாகும் மற்றும் சேவை செய்வது பிராமணன் என்னுடைய கடமை ஆகும் என்று அந்த மாதிரி நினைவு மட்டும் செய்கிறீர்களா அல்லது சொரூபமாகவும் ஆகியிருக்கிறீர்களா? இதே விதமாக தன்னைத்தானே ரியலைஸ் செய்வது அதாவது உணருவது இது தான் கடைசி பாடமாகும். எப்படி தீபாவளி அன்று பழைய கணக்கை முடித்து புதியதை தொடங்குகிறார்கள். மேலும் தமது கணக்கு பதிவேட்டை சோதனை செய்கிறார்கள். அதே போல் நீங்கள் அனைவரும் தொடக்கத்திலிருந்து கடைசி வரை அதாவது இன்று வரை தன்னுடைய பதிவேட்டை ஒவ்வொரு பாடத்திலும் எத்தனை மதிப்பெண்கள்

பெற்றிருக்கிறேன் என்று சோதனை செய்ய வேண்டும். நேரத்திற்குச் தகுந்தாற்போல் எப்பொழுது அடைய வேண்டிய இலக்கு எதிரில் தென்படுகிறது. மேலும் இரண்டு லட்சியமும் அதாவது ஒன்று தற்சமய சங்கமயுகத்தின் பரிஷ்தா நிலையை அடையும் லட்சியம் மற்றும் எதிர்காலத்தில் தேவதா சொரூபத்தின் லட்சியம். அப்படி இந்த லட்சியம் எப்படி தெளிவாக இருக்கிறதோ அதே போல் லட்சணமும் தெளிவாகத் தென்படுகிறதா? உலகமாற்றத்திற்கு முன்பு தன்னில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று அனுபவம் ஆகிறதா? அந்த மாதிரி சோதனை செய்தீர்களா?

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் பதிவேட்டை சோதனை செய்தார். மேலும் யார் தன்னுடைய கர்ம கதையை எழுதியிருக்கிறார்களோ அவர்களுடைய ரிசல்ட்டையும் பார்த்தோம். அப்படி என்ன பார்த்தோம்? அனேக ஆத்மாக்கள் பயம் மற்றும் வெட்கத்தின் வசப்பட்டு எழுதவேயில்லை ஆனால் பாப்தாதாவிடம் நிராகார மற்றும் சாகார தந்தையின் ரூபத்தில் ஒவ்வொரு குழந்தையின் பதிவேடு தொடக்கத்திலிருந்து இன்று வரை தெளிவாக இருக்கிறது. இதை யாரும் அழிக்கவே முடியாது. இதுவரையிலுமான பதிவேட்டின் ரிசல்ட்டில் முக்கியமாக மூன்று விதமான ரிசல்ட் இருக்கிறது. ஒன்று மறைப்பது, இரண்டாவது எங்காவது மாட்டிக் கொள்வது, மூன்றாவது அலட்சியம் காரணமாக சாக்குப்போக்கை உருவாக்குவது சாக்குப்போக்கு கூறுவதில் மிகவும் திறமை நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். தன்னைத்தானே மற்றும் தன்னுடைய தவறை மறைப்பதற்காக மிகவும் அதிசயமான விஷயங்களை உருவாக்குகிறார்கள். தொடக்கத்திலிருந்து இதுவரையிலுமான அந்த மாதிரி விஷயங்களை ஒன்றாகச் சேர்த்தோம் என்றால், இன்றைய நாட்களின் சாஸ்திரங்களுக்குச் சமமாக பெரிய சாஸ்திரம் ஆகி விடும். தன்னுடைய தவறை தவறு என்று ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அதை சரி என்று நிரூபிப்பதில் மற்றும் பொய்யை உண்மை என்று நிரூபிப்பதில் இன்றைய நாட்களின் கருப்பு கோட்டு அணிந்த வக்கீல்களுக்குச் சமமாக இருக்கிறார்கள், மாயாவுடன் சண்டையிடுவதற்குப் பதிலாக இந்த மாதிரி வழக்கில் போராடுவதில் மிகவும் திறமை நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது தன்னை நிரூபிப்பது என்றால் தந்தை மூலமாக கிடைக்கும் பல ஜென்மங்களின் அனைத்து வெற்றிகளின் பிராப்தியிலிருந்து

வஞ்சிக்கப்படுவது என்ற இது நினைவில் இருப்பதில்லை. நிரூபணம் செய்பவரில் பிடிவாதம் செய்யும் சம்ஸ்காரம் அவசியம் இருக்கும். அந்த மாதிரியான ஆத்மா சத்கதியை அடைய முடியாது. இதுவரையிலும் பெரும்பான்மையோர் முதல் பாடம் அதாவது முதல் விஷயமான தூய்மையான பார்வை மற்றும் சகோதரன்-சகோதரன் என்ற உள்ளுணர்வில் தோல்வியுற்று இருக்கிறார்கள். இதுவரையிலும் இந்த முதல் கட்டளைப்படி நடக்கக்கூடிய கீழ்ப்படிவானர்வகள் மிகக்குறைவாக இருக்கிறார்கள். அடிக்கடி இந்தக் கட்டளையை மீறி நடக்கும் காரணத்தினால் தன் மேல் சுமையை எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். இதற்கான காரணம் தூய்மையின் முக்கிய பாடத்தின் மகத்துவத்தைத் தெரிந்திருக்கவில்லை, அதனுடைய நஷ்டத்தின் ஞானத்தையும் தெரிந்திருக்கவில்லை.

ஏதாவது தேகதாரியிடம் எண்ணத்தினால் மற்றும் செயலினால் மாட்டிக் கொள்வது, இந்த விகாரம் நிறைந்த உடல் என்ற பாம்பைத் தொடுவது என்பதாகும். அதாவது இதுவரை தான் செய்த வருமானத்தை அழிப்பது என்பதாகும். எவ்வளவு தான் ஞானத்தின் அனுபவம் இருந்தாலும் அல்லது நினைவு மூலம் சக்திகளின் பிராப்தியின் அனுபவம் செய்திருந்தாலும் அல்லது உடல், மனம், பொருளால் சேவை செய்திருந்தாலும் ஆனால் அனைத்து பிராப்திகளும் இந்த உடல் என்ற பாம்பை தொடுவதினால் இந்த பாம்பின் விஷத்தின் காரணமாக எப்படி விஷம் மனிதனை அழித்து விடுகிறதோ, அதே போல் இந்த பாம்பும் அதாவது உடலில் மாட்டிக்கொள்வது என்ற விஷமும் அனைத்து வருமானத்தையும் அழித்து விடுகிறது. ஏற்கனவே சம்பாதித்திருந்த பதிவேட்டில் கருப்புக் கறை ஏற்பட்டு விடுகிறது, அதை அழிப்பது மிகக் கடினமாகும். எப்படி யோக அக்னி கடந்த கால பாவங்களை பஸ்பம் செய்கிறதோ, அதே போல் இந்த விகார அனுபவத்தை அனுபவிப்பதின் அக்னி கடந்த கால புண்ணியத்தை பஸ்பம் செய்து விடுகிறது. இதை சாதாரண விஷயம் என்று நினைக்காதீர்கள். இது ஐந்தாவது மாடியிலிருந்து கீழே விழுவதற்கான விஷயம் ஆகும். அனேக குழந்தைகள் இதுவரையிலும் அலட்சியத்தின் சம்ஸ்கார வசமாகி, இந்த விஷயத்தை கடுமையான தவறு மற்றும் பாவச்செயல் என்று நினைப்பதில்லை. மேலும் மிக சாதாரண ரூபத்தில் என் மூலம் நான்கு, ஐந்து தடவைகள் இந்த மாதிரி ஆகி விட்டது, இனி மேல் செய்ய மாட்டேன்

என்று வர்ணனை செய்கிறார்கள். வர்ணனை செய்யும் நேரத்தில் கூட வேதனைப்படும் ரூபம் இல்லாமல் சாதாரண செய்தியைக் கூறுவது போல கூறுகிறார்கள். உள்மனதில் இது நடக்கத்தான் செய்கிறது, இலக்கோ மிக மிக உயர்ந்தது. இப்பொழுது அதை எப்படி அடைய முடியும் என்று நினைக்கிறார்கள் ஆனால் இருந்தாலும் இன்று அந்த மாதிரி பாவ ஆத்மா, ஞானத்தை நிந்தனை செய்யக்கூடியவர்களுக்கு, இன்றிலிருந்து கூட இந்தத் தவறை மிகப் பெரிய தவறு என்று புரிந்து கொண்ட பின்னும் ஒருவேளை அகற்றவில்லை. என்றால் மிகக் கடுமையான தண்டனைக்கு உரியவர்களாக ஆகி விடுவார்கள் என்று பாப்தாதா எச்சரிக்கை செய்கிறார். அடிக்கடி மீறி நடப்பதின் சுமை காரணமாக உயர்ந்த நிலை வரை சென்றடைய முடியாது. பிராப்தி செய்பவர்களின் வரிசைக்குப் பதிலாக வேதனைப்படுபவர்களின் வரிசையில் நின்று கொண்டிருப்பார்கள். பிராப்தி செய்பவர்களுக்கு வெற்றி முழக்கம் இருக்கும். மேலும் மீறி நடப்பவர்களின் கண் மற்றும் முகத்தில் ஐயோ, ஐயோ என்ற ஓசையை எழுப்பும். மேலும் அனைத்து பிராப்தி செய்து கொண்டிருக்கும் பிராமணர்கள் அந்த மாதிரி ஆத்மாக்களை, குலத்தை களங்கப்படுத்தியவர்களின் வரிசையில் பார்ப்பார்கள். அவர்கள் செய்த பாவத்தின் கருமை முகத்தில் தெளிவாகத் தென்படும். எனவே இப்பொழுதிலிருந்து இந்த கொடூரமான தவறை அதாவது மிகப் பெரிய தவறு என்று புரிந்து இப்பொழுதே தன்னுடைய கடந்த கால தவறுகளின் வேதனைப்படுதலை உள்ளப்பூர்வமாகச் செய்து தந்தையிடம் தெளிவாகக்கூறி தன்னுடைய சுமையை அகற்றுங்கள். தனக்குத் தானே கடுமையான தண்டனையை கொடுத்துக் கொள்ளுங்கள், அதனால் வருங்காலத்தில் தண்டனைகளிலிருந்து விடுபட்டுவிடுவீர்கள்.

ஒருவேளை இப்பொழுது கூட தந்தையிடம் மறைத்தீர்கள் மற்றும் தன்னை உண்மையானவர் என்று நிரூபணம் செய்து நடந்து கொள்வதற்கு முயற்சி செய்தீர்கள் என்றால் இப்பொழுது சமாளித்து நடந்து கொள்வது என்றால் கடைசியில் மேலும் இப்பொழுது கூட தன்னுடைய மனதில் என்ன செய்வேன், குஷி ஏற்படுவதில்லை, வெற்றி கிடைப்பதில்லை என்று கதறிக் கொண்டே இருப்பீர்கள். அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆவதில்லை என்று இப்பொழுதும் கதறுவீரர்கள் மேலும் கடைசியில் ஐயோ, என்னுடைய பாக்கியமே! என்று கூறி கதறுவீர்கள். அப்படி இப்பொழுது சமாளித்து நடந்து கொள்வது

என்றால் அடிக்கடி கதறுவது ஆகும். ஒருவேளை இப்பொழுது அந்த விஷயத்தை சமாளித்து நடந்து கொள்கிறீர்கள் என்றால் தன்னுடைய பல ஜென்மங்களின் உயர்ந்த எதிர்காலத்தை எரிக்கிறீர்கள். எனவே இந்த முக்கியமான விஷயத்தின் மேல் முக்கிய கவனம் வையுங்கள். எண்ணத்தில் கூட இந்த விஷம் நிரம்பிய பாம்பைத் தொடாதீர்கள். எண்ணத்தில் கூட தொடுவது என்றால் தன்னை மயக்கமடையச் செய்வது அப்படி பதிவேட்டில் விசேஷமாக அலட்சியத்தைப் பார்த்தோம். மேலும் இன்னொரு ரிசல்ட்டில் நேற்று எந்தெந்த விஷயங்களில் ஏறும் கலைக்குப் பதிலாக நின்று விடுகிறார்கள் என்பதைக் கூறியிருந்தோம். அதிவேகத்திற்குப் பதிலாக மத்தியமான வேகம் ஆகி விடுகிறது. இது தான் பெரும்பான்மையோரின் ரிசல்ட் ஆகும். எனவே இப்பொழுது தன்னைத் தானே உணருங்கள். அதாவது கடைசி ரியலைசேஷன் கோர்ஸை முடியுங்கள். தன்னைத்தானே இந்த விதமாக ஒவ்வொரு முறையிலும் அனைத்து பாடங்களிலும் சோதனை செய்யுங்கள். அனைத்து மரியாதைகள், தந்தையின் கட்டளைகள். மேலும் உயர்ந்த வழியை எவ்வளவு நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறேன் என்று அதை சோதனை செய்யுங்கள். மேலும் கூடவே மதுபன் மகாயக்ஞத்தில் நிரந்தரமாக கடைசி ஆகுதியை போடுங்கள். புரிந்ததா? இப்பொழுது தந்தையின் அன்பு சொரூபத்தின் தவறான லாபத்தை எடுக்காதீர்கள். இல்லையென்றால் கடைசி மகாகாலன் ரூபத்தின் எதிரில் ஒரு தவறுக்கு ஆயிரம் மடங்கு வேதனைப்பட வேண்டியதாக இருக்கும்.

அந்த மாதிரி சமிக்ஞை மூலம் புரிந்து கொள்ளக்கூடிய பிராமணனிலிருந்து தேவதை ஆகுபவர்களுக்கு அனைத்து பிராப்திகளின் அதிகாரத்தை அடையக்கூடிய அதிகாரி ஆத்மாக்களுக்கு, கடந்ததை கடந்ததாக்கி எதிர்காலம் மற்றும் நிகழ்காலத்தின் ஒவ்வொரு எண்ணத்தை உயர்ந்ததாக ஆக்கக்கூடிய, அந்த மாதிரி பிராமண குல தீபங்களுக்கு, நம்பிக்கை நட்சத்திரங்களுக்கு, தன்னுடைய மற்றும் உலகின் அதிர்ஷ்டத்தை எழுப்பிவிடக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: கவனம் மற்றும் சோதனை செய்வதின் விதி மூலமாக வீணானவற்றின் கணக்கை முடிக்கக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!**

பிராமண வாழ்க்கையில் வீணான எண்ணம், வீணான வார்த்தை, வீணான செயல் மிக அதிக நேரத்தை வீணாக இழக்கச் செய்து விடுகிறது. எவ்வளவு வருமானம் செய்ய விரும்புகிறார்களோ அவ்வளவு செய்ய முடிவதில்லை. வீணானதின் கணக்கு சக்தி நிறைந்தவர் ஆகவிடுவதில்லை. எனவே நான் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவேன் என்ற இந்த நினைவிலேயே எப்பொழுதும் இருங்கள். சக்தி இருக்கிறது என்றால் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். அடிக்கடி கவனம் மட்டும் கொடுங்கள். எப்படி வகுப்பின் நேரத்தில் மற்றும் அமிர்தவேளையின் நினைவில் கவனம் கொடுக்கிறீர்கள். அந்த மாதிரி இடையிடையில் கூட கவனம் மற்றும் சோதனை செய்வதின் விதியைக் கடைபிடித்தீர்கள் என்றால் வீணானவற்றின் கணக்கு முடிவடைந்து விடும்.

**சுலோகன்: இராஜ ரிஷியாக ஆக வேண்டும் என்றால் பிராமண ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களினால் தன்னுடைய மனநிலையை தடையற்றதாக ஆக்குங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 27.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கேள்வி, திருத்துதல் மற்றும் உவமானம் கூறுதல் காரணமாக முயற்சி செய்வதில் தொய்வு நிலை!

இன்று பாப்தாதா எல்லைக்கப்பாற்பட்ட மலர்த்தோட்டத்தை, ஒவ்வொரு மலருக்குள் ரூபம், வண்ணம் மற்றும் நறுமணம் எவ்வளவு இருக்கிறது என்று விசேஷ ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தார். ரூபம் என்றால் சாகார சொரூபத்தில் கண் மற்றும் தோற்றத்தில் அதாவது முகத்தில் பிராமணத்தன்மையின் மற்றும் பரிஷ்தா தன்மையின் சிரேஷ்ட பங்கு உள்ள ஆத்மா என்ற நினைவின் போதை மற்றும் குஷி பிரத்யக்ஷ ரூபத்தில் எவ்வளவு தென்படுகிறது? வண்ணம் என்றால் நிரந்தரமாக தந்தையின் தொடர்பினால் ஏற்பட்ட பிரபாவம் அதாவது எப்பொழுதும் துணைவன் ஆவதற்கான பிரபாவம் எவ்வளவு ஏறியிருக்கிறது? நறுமணம் என்றால் எப்பொழுதும் ஆன்மீக உள்உணர்வு மற்றும் பார்வையை எதுவரை கடைபிடித்திருக்கிறார்? ஒவ்வொருவரிலும் இந்த மூன்று விசேஷங்களைப் பார்த்தோம். இந்த விசேஷத்தைப் பார்த்துக் கொண்டே இன்னொரு விசித்திரமான விசேஷத்தையும் பார்த்தோம். அப்படி என்ன பார்த்தோம் என்றால், எந்த விசேஷ மலர்கள் மேல் பாப்தாதாவின் பார்வை இருக்கிறதோ, ஊக்கம் மற்றும் உற்சாகத்தின் பொலிவும் இருக்கிறதோ, அவர் நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கிறார். அனைத்து பிராமண பரிவாரத்தின் அன்பும் இருக்கிறது, அவரது லட்சியமும் மிக உயர்ந்ததாக இருக்கிறது; மேலும் ஒவ்வொரு அடியும் அதிவேகமுடையதாக இருக்கிறது; ஆனால் சில நேரம் இந்த ரூபத்தில் தென்படுகிறார்கள் (மேலே என்ன வர்ணனை செய்தோமோ) சிறிது நேரத்திற்குப் பிறகு தந்தையின் பார்வையில் இருக்கக்கூடியவர்களின் மேல் மாயாவின் இராயல் ரூபத்தின் பார்வை விழும் காரணத்தினால் ரூபம், வண்ணம் மாறி விடுகிறது. அடிகளின் அதிவேகம் யதார்த்த மார்க்கத்திற்குப் பதிலாக வீணான மார்க்கத்தில்

அதிவேகத்தில் செல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். பரிஷ்தா தன்மையின் போதைக்குப் பதிலாக மற்றும் ஈஸ்வரிய குஷிக்குப் பதிலாக அனேக விதமான அழியும் போதையின் கூடவே சாதனங்களின் ஆதாரத்தினால் பிராப்தியாகியிருக்கும் குஷி மற்றும் போதையில் மூழ்கிப்போய் விடுகிறார்கள். எப்பொழுதும் தந்தையின் தொடர்பின் வண்ணத்திற்குப் பதிலாக அதாவது ஒரு தந்தையின் ஆதாரத்தை எடுப்பதற்குப் பதிலாக அவ்வப்பொழுது ஆத்மாக்களையே சாகார ஆதாரமாக ஆக்கி விடுகிறார்கள்; அதாவது அவர்களுடைய தொடர்பின் பிரபாவத்திலேயே மூழ்கி விடுகிறார்கள். இதில் கூட பெரும்பான்மையான குழந்தைகளில் ஒரு விஷயம் தென்பட்டது.

பெரும்பான்மையோர் இந்த பிராமண வாழ்க்கையின் தொடக்கத்தில் அதாவது முதன் முதலில் எப்பொழுது தந்தை மூலமாக தந்தையின் அறிமுகம், ஞானத்தின் பொக்கிஷம் பிராப்தி ஆகிறது, தன்னுடைய பிறப்புரிமை தெரிய வந்து விடுகிறது, நினைவு மூலமாக அனுபவம் பிராப்தி ஆகிறது, துக்கம் சுகத்தில் மாறி விடுகிறது, அமைதியின்மை அமைதியில் மாறி விடுகிறது. மேலும் அலைந்து திரிவது முடிவடைந்து விடுகிறது, புகலிடம் கிடைத்து விடுகிறது. அந்த தொடக்கத்தின் நிலையை மிக நல்ல தீவிர ஊக்கம் உற்சாகம் உடையவராக, குஷியில் ஆடக் கூடியவராக, சேவையில் இரவையும் பகலையும் ஒன்றாக ஆக்கக்கூடியவராக, சம்மந்தம் மற்றும் உடலின் உணர்வுகளை மறப்பவராக, அந்த மாதிரி ஃபர்ஸ்ட் க்ளாஸ் சேவைக்கு தகுதியான ஞானம் நிறைந்த மற்றும் சக்தி நிறைந்தவராக தானும் அனுபவம் செய்கிறார் மற்றும் மற்ற பிராமணர்களும் அவரை அந்த மாதிரியே அனுபவம் செய்கிறார்கள் ஆனால் தொடக்கத்திற்குப் பிறகு எப்பொழுது மத்திய காலத்தில் வருகிறார்கள் என்றால் தான் செய்யும் முயற்சியில், தன்னுடைய சேவையில், குஷி மற்றும் ஊக்கத்தில் திருப்தியாக இருப்பதில்லை. முதலில் அப்படி இருந்தது, இப்பொழுது ஏன் இப்படி, முதலில் இருந்த ஊக்கம் எங்கே சென்று விட்டது என்று தனக்குத் தானே கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். முதலில் இருந்த குஷி ஏன் மறைந்து விட்டது, ஏறும் கலைக்குப் பதிலாக நின்று விட்ட நிலை ஏன் வந்தது, ஞானம் மிகவும் ஆழமானதாக ஆகிக் கொண்டே இருக்கிறது, நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது, சேவைக்கான சாதனமும் அதிகமாக பிராப்தி ஆகின்றன. இருந்தும் முன்பு இருந்த

மாதிரியான அனுபவத்தையே ஏன் ஆவதில்லை? பெரும்பான்மையோரின் இந்த அனுபவமாக பார்த்தோம். இதற்கான காரணம் என்ன?

எப்பொழுது சேவையில் மற்றும் பிராமண பரிவாரத்தின் நெருக்கத்தில் மற்றும் சேவை மூலமாக பிரத்யக்ஷ பலனாக என்ன கிடைக்கிறதோ அதில் இருந்து கொண்டிருக்கும்பொழுது எல்லைக்குட்பட்ட பொசிஷனில் வந்து விடுகிறார்கள் என்பதைக் காரணமாகப் பார்த்தோம். தனக்குச் சமமான ஏதாவது உடனிருக்கும் சேவாதாரிகளை மற்றும் நெருக்கத்தில் வரும் தன்னுடன் இருப்பவர்களை ஆப்போசிஷன் (எதிர்க்க) தொடங்கி விடுகிறார்கள். ஏதாவது ஸ்தூல சால்வேஷன் (பிராப்தி) பெறுவதில் ஈடுபட்டு விடுகிறார்கள் அதாவது சால்வேஷனின் ஆதாரத்தில் சேவை மற்றும் முயற்சி செய்கிறார்கள். ஏதாவது கொஷ்ட்யன் (கேள்வி) மற்றும் கரெக்ஷன் (திருத்துதல்) செய்யத் தொடங்கி விடுகிறார்கள். மேலும் பின்பு வேறு யாருடைய கொட்டேஷன் (உதாரணம்) கொடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதாவது மற்றவர்களின் உவமானத்தினால் தன்னுடைய சித்தாந்தத்தை ஏற்படுத்தத் தொடங்கி விடுகிறார்கள் - இந்த ஐந்திலிருந்து ஏதாவது ஒரு தவறான மார்க்கத்தை கடைபிடித்து விடுகிறார்கள். எப்பொழுதும் தபஸ்வி ஆகி தன்னுடைய ஈஸ்வரிய பிராமணத்தன்மையின், அனைத்தையும் தியாகம் செய்த பொசிஷனில் நிலைத்திருங்கள் என்று தந்தை கூறினார் ஆனால் எல்லைக்குட்பட்ட பொசிஷனாகிய நான் அனைவரையும் விட அதிக சேவைக்குத் தகுதியானவன். திட்டமிடும் புத்தி உள்ளவன், கண்டுபிடிப்பவன், செல்வத்தினால் சகயோகம் செய்பவன். இரவு பகலாக உடலை சேவையில் ஈடுபடுத்துபவன் அதாவது கடுமையான உழைப்பாளி அல்லது இன்சார்ஜ் ஆவேன். அந்த மாதிரி அனேக விதமான எல்லைக்குட்பட்ட பெயர், புகழின் தலைகீழான பொசிஷனை பிடித்து விடுகிறார்கள். அதாவது யதார்த்த லட்சியத்தை விட்டு விலகி வீணான மார்க்கத்தில் அதிவேகமாக செல்ல ஆரம்பித்து விடுகிறார்கள்.

நீங்கள் சால்வேஷன் ஆர்மி (மீட்பு படை) என்று தந்தை கூறினார் அதாவது மற்ற ஆத்மாக்களுக்கு சால்வேஷன் கொடுப்பதற்காக இருக்கிறீர்கள் என்பதாகும் ஆனால் எல்லைக்குட்பட்ட சால்வேஷனாகிய

இந்த சாதனம் இருந்தது என்றால் சேவை செய்வோம், முதலில் சாதனம் கொடுங்கள் பின்பு சேவை செய்வோம். சாதனத்தையும் சேவைக்காக இன்றி தன்னுடைய சுகத்திற்காக கேட்கிறார்கள். ஒருவேளை இது செய்யப்பட்டது என்றால் மிகுந்த சேவை செய்ய முடியும். அதிகப்படியான அன்பு, மரியாதை கொடுக்கப்பட்டால், அதிகப்படியான உபச்சாரம் செய்யப்பட்டால் மேலும் விசேஷமாக தன்னுடைய பெயர் எடுக்கப்பட்டால் இந்த விதமான சால்வேஷனின் ஆதாரத்தில் தன்னுடைய முயற்சியை செய்யத் தொடங்கி விடுகிறார்கள்; எனவே ஆதாரம் தவறாக இருக்கும் காரணத்தினால் அவர்களுக்கு என்னுடைய முன்னேற்றம் அனுபவம் ஆவதில்லை.

மாயா மேல் ஆப்போசிஷன் செய்யுங்கள் என்று பாபா கூறினார் ஆனால் மாயாவோடோ நண்பர்களாகி விடுகிறார்கள் அதாவது ஈஸ்வரிய சம்பிரதாயத்திற்கு பதிலாக அசுர சம்ஸ்காரம் என்ற அசுர சம்பிரதாயத்தில், இவர் இப்படிச் செய்கிறார் என்றால் நான் இதை விட அதிகமாக செய்து காண்பிப்பேன். இவர் சேவைக்குத் தகுதியானவர் என்றால் நானும் சேவைக்குத் தகுதியானவன் தான் என்று ஒவ்வொருவரையும் ஆப்போசிஷன் (எதிர்ப்பு) செய்து கொண்டே இருக்கிறார்கள். இவர் முன்னுக்கு இருக்கிறார் என்றால் நான் ஏன் பின்னுக்கு இருக்க வேண்டும்? நான் குப்தமான முயற்சி செய்பவன், என்னைத் தெரிந்து கொள்ளவே இல்லை மேலும் பொறுப்பிலிருக்கும் டீச்சரை விடவும் நான் மிகுந்த சேவைக்குத் தகுதியானவன். டீச்சருடனும் அப்போசிஷன் செய்கிறார்கள். நீ அனுபவி அல்ல, நானோ அனுபவி, நீ படிக்காதவள், நானோ படித்தவள் அப்படி ஒவ்வொருவரையும் அப்போசிஷன் செய்வதினால் தன்னுடைய நிரந்தரமான சிரேஷ்ட பொசிஷனை இழந்து விடுகிறார்கள். அவர்களுக்குள் அப்போசிஷன் இருக்கும் காரணத்தினால் மாயாவோடு அப்போசிஷன் செய்வதில் பலஹீனமானவராக ஆகி விடுகிறார்கள்; அதாவது வெற்றி அடைபவர் ஆக முடிவதில்லை.

இந்த விதமாக கொஷ்ட்யன், கரெக்ஷன் மற்றும் கொட்டேஷன் கொடுப்பதிலோ மிகவும் திறமை சாலியாக, வக்கீல் மற்றும் ஜட்ஜ் ஆகி விடுகிறார்கள். தந்தைக்கும் கரெக்ஷன் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். தன்னைத் தானே விடுவித்துக் கொள்வதற்காக

அதாவது தன்னுடைய தவறை மறைப்ப தற்காக கொட்டேஷன் (உதாரணம்) கொடுப்பார்கள். என்னை விட பெரிய மகாரதியும் அந்த மாதிரி செய்கிறார். இந்தப் பிரச்சனை மேல் இன்னாருக்கு பாப்தாதாவும் அந்த மாதிரி கூறினார். எனவே நானும் அந்த ஸ்ரீமத்தை ஏற்றுக் கொண்டேன். இந்த தேதியில் முரளியில் இந்த விஷயம் கூறப்பட்டிருக்கிறது - அதன் பிரகாரம் நான் இதைச் செய்கிறேன். நேரம் மற்றும் சூழ்நிலையைப் பார்ப்பதில்லை ஆனால் வார்த்தையைப் பிடித்துக் கொள்கிறார்கள். இதே தவறுகளின் காரணமாக ஒரு தவறு மூலம் அனேக தவறுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அலட்சியத்தின் சம்ஸ்காரம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. முயற்சி செய்வதின் வேகம் தீவிரமான நிலையிலிருந்து மத்தியமாகி விடுகிறது. மாஸ்டர் திரிகாலதரிசி என்றால் மூன்று காலங்களையும் தெரிந்தவர்கள் நீங்கள் என்று தந்தை கூறினார். இந்த தாரணையைக் கடைபிடிக்கும் காரணத்தினால் தன்னைத் திருத்துவதற்குப் பதிலாக மற்றவர்களை திருத்திக் கொண்டே இருக்கிறார்கள். மற்றவர்களை திருத்துவதில் தந்தையோடு உள்ள தொடர்பை துண்டித்து விடுகிறார்கள். எனவே சக்தியற்றவர்களாக இருக்கும் காரணத்தினால் குழம்பிக் கொண்டே இருக்கிறார்கள். சுகம், சாந்தி மற்றும் அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தின் புகலிடம் தென்படுவதே இல்லை. மற்றவர்களின் சிந்தனை, பறக்கும் பட்டத்தைப் போல் எடுத்துச் செல்கிறது. புரிந்ததா? இந்த விஷயங்களில் வரும் காரணத்தினால் தொடக்கத்தில் என்ன போதை மற்றும் குஷியின் அனுபவம் இருந்ததோ அது முடிவடைந்து விடுகிறது. எனவே இந்த 5-விஷயங்களிலிருந்து ஏதாவது ஒரு தவறான மற்றும் வீணான மார்க்கத்தில் சென்று நேரத்தை வீணாக்கவோ இல்லையே என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். சோதனை செய்யுங்கள் பிறகு தன்னை மாற்றுங்கள். பிறகு ஏறும் கலையின் பக்கம் செல்ல ஆரம்பிப்பீர்கள். அந்த மாதிரி பெரும்பான்மையான ஆத்மாக்களின் அனுபவத்தை பாப்தாதா பார்த்தார். இப்பொழுது மேளாவின் இறுதி என்றால் முடிவில் கடைசி ஆகுதியைப் போடுங்கள் அதாவது நிரந்தரமாக தன்னை சக்திசாலியாக ஆக்குங்கள். ரிசல்ட்டையோ கூறுவோம் இல்லையா? அப்படி தற்சமயத்தில் முயற்சி செய்பவர்கள் சென்று கொண்டிருக்கும்போதே நின்று விடுவதின் செய்தியைக் கூறினோம். இனிமேல் பரிவர்த்தனை (மாற்றம்) பூமியின் பரிவர்த்தனையை எப்பொழுதும் உடன் வைத்துக்

கொள்ளுங்கள். இதைத் தான் மேளாவைக் கொண்டாடுவது; அதாவது தன்னை நிரம்பியவர் ஆக்குவது என்று கூறுவது, நல்லது.

அந்த மாதிரி ஒரு நொடியில் உறுதியான எண்ணத்தினால் தன்னை மாற்றம் செய்யக்கூடிய, தன்னுடைய உள்உணர்வு மூலமாக சூழ்நிலையை சதோபிரதானமாக ஆக்கக்கூடிய மேலும் பார்வையாலேயே நன்மை செய்யக்கூடிய அந்த மாதிரி தந்தையின் நிரந்தர துணைவர்கள், சகயோகி மற்றும் சக்திசாலி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

## சில முக்கிய சகோதர சகோதரிகளுடன்: மஹாதானி மற்றும் வரதானி தான் மஹாரதி!

பிரம்மாபாபாவிற்குச் சமமாக மகாரதிகள் கூட தந்தைக்குச் சமமாக தன்னை கருவி மட்டும் தான் என்று அனுபவம் செய்கிறீர்களா? அவர்களில் நான் என்ற உணர்வு இருக்காது என்ற இது தான் மகாரதிகளின் விசேஷம் ஆகும். நான் பொறுப்பாளராக இருக்கிறேன் மற்றும் சேவாதாரியாக இருக்கிறேன் என்ற இந்த இயற்கையான சுபாவம் இருக்கும். சுபாவத்தை உருவாக்க வேண்டியதிருப்பதில்லை. சுபாவ வசமாகி எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் தானாகவே நடந்து கொண்டிருக்கும். மகாரதிகளின் ஒவ்வொரு காரியத்திலும் உலக நன்மைக்கான பாவனை தெளிவான ரூபத்தில் தென்படும். அதனுடைய நடைமுறை நிரூபணமாக ஒவ்வொரு விஷயத்திலும் மற்ற ஆத்மாக்களை முன்னேற்றம் செய்விப்பதற்காக முதலில் நீங்கள் என்ற பாடம் அவர்களிடம் மிக உறுதியாக இருக்கும். முதலில் நான் என்பது இருக்காது. நீங்கள் என்று சொல்வதினாலேயே அந்த ஆத்மாவிற்கு நன்மை ஏற்படுவதற்கான காரணமானவராக ஆகி விடுவார். அந்த மாதிரி மகாரதி யாருக்கு அந்த மாதிரி உயர்ந்த பாவனை மற்றும் அந்த மாதிரி உயர்ந்த சுபாவம் இருக்கிறதோ அவர் தான் தந்தைக்குச் சமமானவர் என்று வர்ணனை செய்யப்படுகிறார். மகாரதி என்றால் மகாதானி, தன்னுடைய நேரத்தின், தன்னுடைய சுகத்தின்

சாதனங்களின், தன்னுடைய குணங்களின் மற்றும் தான் பிராப்தி செய்திருக்கும் அனைத்து சக்திகளையும் மற்ற ஆத்மாக்களின் முன்னேற்றத்திற்காக தானம் செய்பவர். அவரைத் தான் மகாதானி என்று கூறுவது. அந்த மாதிரி மகாதானியின் எண்ணம் மற்றும் சொல் இயல்பாகவே வரதானத்தின் ரூபம் ஆகி விடுகிறது. எந்த ஆத்மாவிற்காக என்ன எண்ணம் வைப்பார்களோ அல்லது என்ன வார்த்தை கூறுவார்களோ அது அந்த ஆத்மாவிற்காக வரதானம் ஆகி விடும். ஏனென்றால் மகாதானி என்றால் தியாகம் மற்றும் தபஸ்யா நிரம்பியவராக இருப்பது. இதே காரணமாக தியாகம், தபஸ்யா மற்றும் மகாதானத்தின் உடனடி பலனாக அவருடைய ஒவ்வொரு எண்ணமும் வரதான ரூபம் ஆகி விடுகிறது. எனவே மகாரதியின் மகிமையாக மகாதானி மற்றும் வரதானி என்று வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி மகாரதிகளின் குழு லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸின் காரியம் செய்யும். அந்த மாதிரி ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா? அந்த மாதிரி குழு தயார் ஆவது என்றால் வெற்றி முழக்கம் ஏற்படுவது அதன் பின்பு ஐயோ, ஐயோ என்று அலறுவது இந்த காட்சி கூட அதிசயமானதாக இருக்கும். ஒரு பக்கம் மிக அதிகமான ஐயோ, ஐயோ என்று அலறுவது மற்றும் இன்னொரு பக்கம் ஆஹா, ஆஹா என்று வெற்றி முழக்கமிடுவது. நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் நிரம்பிய நிலையின் அனுபவம் மூலமாக வளைந்திருக்கும் பாதையை நேராக ஆக்கக்கூடிய சக்தி அவதாரம் ஆகுக!**

எப்பொழுதும் சக்தியின், குணத்தின், ஞானத்தின், குஷியின் பொக்கிஷத்தினால் நிரம்பியவராக இருந்தீர்கள் என்றால் நிரம்பிய நிலையின் போதை மூலம் வளைந்த பாதையும் நேராக ஆகி விடும். ஒருவேளை காலியாக இருந்தீர்கள் என்றால் குழியாகி விடும். மேலும் குழியில் விழுவதினால் காயம் ஏற்படும். யார் பலஹீனமானவராக மற்றும் காலியாக இருக்கிறாரோ அவர்களுக்கு எண்ணங்களின் காயம் ஏற்பட்டு விடுகிறது. சக்தி அவதாரம் என்றால் வளைந்திருப்பதை நேராக ஆக்கும் கான்டிராக்ட்டை எடுப்பவர். அந்த மாதிரி கான்டிராக்ட் எடுப்பவர் ஒருபொழுதும் பாதை வளைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது.

யாராவது ஒருவர் கீழே விழுந்தார் என்றால் கவனத்தின் குறைவு அல்லது புத்தி நிரம்பியிருக்கவில்லை என்பதாகும்.

**சுலோகன்: ஆன்மீக அன்பை தாரணை செய்பவர் தான் ஆன்மீக ரோஜா மலர் ஆவார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 28.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நூறு பிராமணர்களை விட உத்தம கன்யா ஆவதற்கான தாரணைகள்!

குமாரிகளுக்காக கூறப்பட்ட அவ்யக்த மகாவாக்கியங்கள்: அனைத்து குமாரிகளும் தந்தையிடம் முதலில் செய்த உறுதிமொழியாகிய "ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை" என்பதைக் கடைப்பிடிக்கிறீர்களா? இந்த உறுதிமொழியை எப்பொழுதும் கடைபிடிக்கக்கூடிய குமாரி உலக நன்மை காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகிறார். குமாரிகளுக்கு பூஜை நடக்கிறது, பூஜைக்கான ஆதாரம் சம்பூர்ண தூய்மை ஆகும். அப்படி குமாரிகளின் மகத்துவம் தூய்மையின் ஆதாரத்தில் இருக்கிறது. ஒருவேளை குமாரிகுமாரியாக இருந்தபோதிலும் தூய்மையாக இல்லை என்றால் குமாரி வாழ்க்கையின் மகத்துவம் இல்லை. அப்படி குமாரித்தன்மையின் விசேஷமாக என்ன இருக்கிறதோ அதை எப்பொழுதும் உடன் வைத்துக்கொள்ள வேண்டும். அதை விடக்கூடாது. இல்லையென்றால் தன்னுடைய விசேஷத்தை விடுவதினால் தற்சமயத்து வாழ்க்கையின் அதீந்திரிய சுகம் மற்றும் எதிர்காலத்து ராஜ்யத்தின் சுகம் இரண்டிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டு விடுவீர்கள். குமாரியாக இருந்தபோதிலும் அதீந்திரிய சுகம் சங்கமயுகத்தின் ஆஸ்தி என்று மற்றவர்கள் கூறுவதைக் கேட்பீர்கள் மற்றும் நீங்களும் கூறுவீர்கள், ஆனால் அனுபவம் ஆகாது. எப்பொழுது நிரந்தரமாக குமாரி வாழ்க்கையின் மகத்துவத்தை நினைவில் வைப்பீர்கள் என்றால் வெற்றிகரமான டீச்சர் மற்றும் பிரம்மாகுமாரி ஆக முடியும். எப்பொழுது அந்த மாதிரி லட்சியம் இருக்கிறது என்றால், குமாரித் தன்மையின் விசேஷத்தின் லட்சணம் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும். இந்த விசேஷத்தை எவ்வளவு தான் மாயா அசைக்க முயன்றாலும் கூட அங்கதனுக்குச் சமமாக நிலைத்திருக்க வேண்டும். குமாரி பந்தனமற்றவர்களாக இருக்கிறார்கள் ஆனால் குமாரியாக இருந்து கொண்டே எங்காவது மாயாவின் வசம் ஆகிவிடக்கூடாதே என்ற பயம்

இருக்கிறது. ஒருவேளை இந்தக் காரணத்தை குமாரி அகற்றி விட்டார் என்றால் பார்ப்பதற்கு மற்றும் ட்ரையல் (பரிசோதனை) செய்வதற்கு அவசியம் இல்லை. இரண்டாவது பரிவர்த்தனை செய்வதற்கு சக்தி வேண்டும். எந்த ஆத்மாவாக இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் ஆனால் தன்னை பரிவர்த்தனை செய்வதற்கு சக்தி இருந்தால் தான் வெற்றி அடையும் டீச்சர் மற்றும் சேவாதாரி ஆக முடியும். சம்பூர்ணத் தூய்மை மற்றும் பரிவர்த்தனை சக்தி இந்த இரண்டு விசேஷங்களினால் சேவை, அன்பு மற்றும் சகயோகத்தில் விசேஷ ஆத்மா ஆக முடியும். இல்லையென்றால் ட்ரையலில் இருப்பவர் என்ற பட்டியலில் இருப்பீர்கள். சமர்ப்பணத்தின் பட்டியலில் வர முடியாது. இந்த இரண்டு விசேஷங்களையும் நிலைத்திருக்கச் செய்யும் குமாரி தான் மகிமை, பூஜைக்குத் தகுதியானவர் ஆகிறார். அற்பகாலத்து வைராக்கியம் இன்றி நிரந்தரமான வைராக்கியம் அதாவது தியாகம் மற்றும் தபஸ்யா இருக்க வேண்டும். அப்பொழுது தான் விசேஷ குமாரி என்று கூறுவோம். இப்பொழுது பொறுப்பில் இருப்பவருக்கு கவனம் வைக்க வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால், இதுவரையிலும் விசேஷம் தென்படவில்லை எனவே சேவையை நிறுத்தி வைக்க வேண்டியதாக இருக்கிறது. யார் மூலமாகவும் எந்தவொரு புகாரும் கேட்கப்படக்கூடாது. அப்பொழுது தான் முழுமையான (complete) டீச்சர் மற்றும் நூறு பிராமணர்களை விட உத்தமமான கன்யா ஆக முடியும். நல்லது.

## மாஸ்டர் எல்லாம் தெரிந்தவர் என்ற நிலை மூலம் சர்வ சக்திவானின் பிரத்யக்ஷம்!

**தீதியுடன்**: எந்த விசேஷ பலவீனத்தை அழிப்பதற்காக விசேஷ குழு தேவை? ஏதாவது பலஹீனத்தை அகற்றுவதற்காக விசேஷமாக மகா காளி சொரூப சக்திகளின் குழு தேவையாக இருக்கிறது! அவர்கள் தன்னுடைய யோக அக்னியின் பிரபாவத்தினால் இந்த சூழ்நிலையை மாற்றம் செய்ய வேண்டும். இப்பொழுதோ நாடகப்படி ஒவ்வொரு நடத்தை என்ற கண்ணாடியில் கடைசி ரிசல்ட் தெளிவாகப்போகிறது.

வரும் நாட்களில் மகாரதி குழந்தைகள் தன்னுடைய ஞானத்தின் சக்தி மூலமாக ஒவ்வொருவரின் முகத்தின் மூலமாக அவர்களுடைய கர்மக் கதையை தெளிவாகப் பார்க்க முடியும். எப்படி கெட்டுப்போன உணவின் துர்நாற்றத்தை உணர்ந்து கொள்ள முடிகிறதோ அதே போல் அசுத்த எண்ணம் என்ற ஆஹாரம் ஸ்வீகாரம் செய்யும் ஆத்மாக்களின் வைப்ரேஷன் மூலம் புத்தியில் தெளிவாக உணருதல் ஏற்படும். இதற்கான இயந்திரம் புத்தியின் லைன் தெளிவாக இருக்க வேண்டும். யாருக்கு இந்த இயந்திரம் சக்திசாலியாக இருக்கிறதோ அவர் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். சக்திகள் மற்றும் தேவதைகளின் ஜடச்சிலைகளிலும் இந்த விசேஷம் இருக்கிறது. எந்தவொரு பாவ ஆத்மாவும் தன்னுடைய பாவத்தை அவர்களுடைய எதிரில் சென்று மறைக்க முடியாது. நாங்கள் அப்படி இருந்தோம் என்று நீங்கள் தான் வர்ணனையை செய்து கொண்டே இருக்கிறீர்கள். அப்படி ஜட நினைவுச் சின்னங்களிலும் இந்தக் கடைசி நேரம் வரை இந்த விசேஷம் தென்படுகிறது. சைத்தன்ய ரூபத்தில் சக்திகளின் இந்த விசேஷம் பிரசித்தி ஆகியிருக்கிறது. அதனால் தான் நினைவுச்சின்னத்திலும் இருக்கிறது. இது தான் மாஸ்டர் அனைத்தையும் தெரிந்தவரின் நிலை அதாவது ஞானம் நிறைந்த நிலையின் அடையாளம். இந்த நிலையும் கூட நடைமுறையில் அனுபவம் ஆகும், ஆகிக் கொண்டிருக் கிறது மேலும் ஆகவும் செய்யும். அந்த மாதிரி குழுவை உருவாக்கியிருக்கிறீர்களா? ஆக்க வேண்டும் தான். அந்த மாதிரி தந்தை சொரூப குழு தேவையாக இருக்கிறது. அவர்களுடைய ஒவ்வொரு அடி மூலம் தந்தையின் பிரத்யக்ஷதா (வெளிப்பாடு) ஆக வேண்டும். யார் எப்பொழுதும் தந்தை மேல் அன்பில் ஐக்கியமான அதாவது நினைவில் மூழ்கியிருக்கிறார்களோ அந்த மாதிரி ஆத்மாக்களின் கண்களில் மற்றும் வாயில் அதாவது வாயின் ஒவ்வொரு வார்த்தையில் தந்தை நிரம்பியிருக்கும் காரணத்தினால் சக்தி சொரூபத்திற்குப் பதிலாக சர்வ சக்திவான் தென்படுவார். எப்படி தொடக்க ஸ்தாபனை காலத்தில் பிரம்மா ரூபத்தில் எப்பொழுதும் ஸ்ரீகிருஷ்ணர் தென்பட்டார். அதே போல் சக்திகளின் மூலம் சர்வ சக்திவான் தென்பட வேண்டும். அந்த மாதிரி அனுபவம் ஆகிக் கொண்டிருக்கிறது இல்லையா? யார் எப்பொழுதும் தந்தையின் நினைவில் இருப்பார் களோ மேலும் நான் என்பதை விலக்கி தியாக உள்உணர்வில் இருப்பார்களோ, அவர்கள் மூலமாகத்தான் தந்தை தென்படுவார். எப்படி நீங்களே நான் என்பதை

மறந்திருக்கிறீர்கள். அதே போல் மற்றவர்களுக்கு அந்த ரூபம் தென்படாது ஆனால் சர்வ சக்திவானின் ரூபம் தென்படும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.10.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாரதியினுடைய எல்லா விசேஷங்களையும் இந்த வருடத்தில் தாரணை செய்யுங்கள்!

**மீட்டிங்'கிற்கு வந்துள்ள எல்லா ஜோன்களின் மஹாரதி சகோதர-சகோதரிகளுடன்:** திட்டமிடும் புத்தி உள்ளவர்கள், கூடவே வெற்றி மூர்த்திகளாகவும் இருக்கிறார்கள். திட்டமிடும் புத்திக்கு பிறகு வெற்றி அடைபவராக ஆவதற்காக என்ன நேரம் கொடுக்கிறீர்களோ, உழைக்கிறீர்களோ அது முடிவைப் பெறுவதற்காக. மஹாரதிகளின் வெற்றி முக்கியமாக ஒரு விஷயத்தில் இருக்கிறது -அந்த ஒரு விஷயம் எது? மஹாரதிகளின் விசேஷமாக என்ன இருக்கிறது? அந்த விசேஷத்தினால் ஒருவர் மஹாரதி ஆகிவிட வேண்டும், அது என்ன? அனைவரிடமிருந்து திருப்தியின் சான்றிதழை பெற்று விட வேண்டும். அப்பொழுது தான் மஹாரதி என்று கூறுவோம், இது தான் மஹாரதிகளின் விசேஷம் ஆகும். திருப்தியாக இருப்பது தான் உயர்ந்தது மற்றும் மஹான் ஆனது. இதன் ஆதாரத்தில் தான் பிரஜைகளும் உருவாகுவார்கள். திருப்தியாக இருக்கும் ஆத்மாக்கள் அவரை ராஜா என்று ஏற்றுக் கொள்வார்கள். ஏதாவது சேவை, சகயோகம் மூலமாக பிராப்தி செய்வித்திருக்கிறார், அன்பின், சகயோகத்தின், தைரியம் உற்சாகத்தின் மற்றும் சக்தி கொடுப்பதற்கான பிராப்தி செய்வித்திருக்கிறார் என்றால் மஹாரதியாக இருக்கிறார். மேலும் ஒருவேளை திருப்திப்படுத்தவில்லை என்றால் பெயருக்குத் தான் மஹாரதி, செய்யும் காரியத்தினால் அல்ல. மூத்த சகோதர சகோதரிகளோ தாய் தந்தைக்குச் சமமாக இருக்கிறார்கள். தாய், தந்தை அனைவரையும் திருப்திப்படுத்துவார்கள். அப்படி மஹாரதிகளுக்கு முதலில் இதன் மேல் கவனம் கொடுக்க வேண்டும். இதற்காக தன்னை மாற்றம் செய்ய வேண்டியதாக இருக்கும் ஆனால் இந்த திருப்தியின் சான்றிதழை அவசியம் பெற வேண்டும். எத்தனை ஆத்மாக்கள் என் மேல்

திருப்தியாக இருக்கிறார்கள் என்ற இந்த சோதனை செய்ய வேண்டும். என் மேல் அனைவரும் திருப்தியாக இருப்பதற்காக நான் என்ன செய்ய வேண்டும்? மஹாரதிகளில் தன்னை வளைத்துக் கொள்ளும் சக்தி இருக்க வேண்டும். வளைத்துக் கொள்பவர் தான் தங்கம் ஆகிறார். யார் தன்னை வளைத்துக் கொள்ள முடியாதோ அவர் உண்மையான தங்கம் அல்ல, கலப்படமானது. கலப்படமாவது என்றால் குதிரைப்படை மஹாரதி (யானைப்படை) வளைந்து கொடுப்பார். திட்டத்தை உருவாக்குவது என்றால் விதை விதைப்பது. விதை சக்திசாலியானதாக இருக்க வேண்டும். அனைவரின் திருப்தியின் மற்றும் அன்பின் ஆசீர்வாதங்கள், ஆசீர்வாதம் மற்றும் அன்பின் தண்ணீர் அவசியம் வேண்டும். இல்லை என்றால் திட்டமிடுதல் என்ற விதை என்னவோ சக்திசாலியாக இருக்கிறது, ஆனால் அன்பு மற்றும் சகயோகம் என்ற தண்ணீர் கிடைக்காததினால் மரம் முளைப்பதில்லை. சில நேரம் மரம் வளர்ந்தது என்றால் பூத்து, காய்த்து, பழுப்பதில்லை, ஒருவேளை பழம் உருவாகிறது என்றாலும் இரண்டாம் அல்லது மூன்றாம் தரத்தினுடையதாக இருக்கும். இதற்கான காரணம் தண்ணீர் கிடைக்காதது தான். மஹாரதிகளிடம் அனைத்து குணங்கள், அனைத்து கலைகள் மற்றும் அனைத்து சக்திகள் நிரம்பி இருக்க வேண்டும், ஒருவேளை ஓரிரு கலை குறைவாக இருக்கிறது என்றால் அனைத்து கலைகள் நிரம்பியவராக இல்லை, அனைத்து குணங்கள் இல்லை என்றாலும் மஹாரதியின் பட்டத்திலிருந்து வெளிவந்து விடுவார்கள். இந்த குரூப் மஹாரதிகளினுடையதா? மஹாரதிகளுக்குத் தான் அழைப்பிதழ் கிடைத்திருக்கிறது. வெற்றிமூர்த்தி ஆவதற்காக முக்கியமாக இரண்டே விசேஷங்கள் தான் தேவையாக இருக்கிறது ஒன்று தூய்மை, இன்னொன்று ஒற்றுமை. ஒருவேளை தூய்மையிலும் குறை இருக்கிறது என்றால் ஒற்றுமையிலும் குறை இருக்கும். தூய்மை என்று பிரம்மச்சர்ய விரதத்தை மட்டும் கூறுவதில்லை. எண்ணம், சுபாவம், சம்ஸ்காரத்திலும் தூய்மை உதாரணமாக ஒருவருக்கு இன்னொருவர் மேல் பொறாமை அல்லது வெறுப்பு எண்ணம் இருக்கிறது என்றால் தூய்மையிருக்கவில்லை, தூய்மையின்மை இருக்கிறது. தூய்மையின் விளக்கத்தில் அனைத்து விகாரங்களின் அம்சம் மாத்திரம் வரை கூட இருக்காது. எண்ணத்திலும் எந்த விதமான தூய்மையின்மை இருக்கலாகாது. மிக உயர்ந்த காரியத்தை நிறைவேற்றுவதற்காக நீங்கள் குழந்தைகள் பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள்.

பொறுப்பாளராகவோ மஹாரதி ரூபத்தில் ஆகியிருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒருவேளை பட்டியலை எடுத்தீர்கள் என்றால் பட்டியலிலும் கூட சேவைக்குத் தகுதியான மற்றும் சேவைக்குப் பொறுப்பாளர் ஆகியிருக்கும் பிரம்மா குழந்தைகள் தான் மஹாரதியின் பட்டியலில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். மஹாரதிகளின் விசேஷம் எவ்வளவு வந்திருக்கிறது. அதையோ ஒவ்வொருவரும் அவர்களே தெரிந்து கொள்ள முடியும். யர் மஹாரதி பட்டியலில் எடுத்துக் கொள்ளப்படுகிறாரோ அவர் வரும் நாட்களில் மஹாரதி ஆவார் மற்றும் தற்சமயத்தின் பட்டியலில் மஹாரதியாக இருக்கிறார். இந்த இரண்டு விஷயங்களின் மேல் இப்பொழுது கவனம் கொடுக்க வேண்டும். ஒற்றுமை என்றால் சுபாவம், சம்ஸ்காரத்தின் இணைதலில் ஒற்றுமை. யாருடைய சம்ஸ்காரம் சுபாவமும் இணையவில்லை என்றாலும் முயற்சி செய்து இணைய வையுங்கள். இது தான் ஒற்றுமை. ஒன்றாகக் கூடியிருப்பதினால் மட்டும் ஒற்றுமை என்று கூறமாட்டோம். சேவைக்குத் தகுதியான பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் இந்த இரண்டு விஷயங்களின்றி எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்கு பொறுப்பாளர் ஆக முடியாது. எல்லைக்குட்பட்டதற்கோ ஆக முடியும், எல்லைக்கப் பாற்பட்ட சேவைக்காக இந்த இரண்டு விஷயங்கள் தேவையாக இருக்கிறது. நடனத்தில் தாளம் ஒத்துப்போனால் தான் பாராட்டுக்கள் கிடைக்கும் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். இங்கேயும் தாளம் ஒத்துப்போவது என்றால் சம்ஸ்காரம் ஒத்துப்போவது. ஞானத்தை வர்ணனை செய்யும் இவ்வளவு ஆத்மாக்களின் வாயிலிருந்து என்ன வெளியாகிறது. இவர்கள் ஒரே விஷயத்தைத் தான் பேசுகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் ஒரே தலைப்பு தான், ஒரே வார்த்தை தான் என்று அனைவரும் கூறுகிறார்கள் தான் இல்லையா? இதே விதமாக அனைவரின் சுபாவம், சம்ஸ்காரம் ஒவ்வொருவருடன் இணைகிறது என்றால் தான் ஒத்துப்போவது என்பதாகும். இதற்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? திட்டம் கூறப்பட்டது! ஸ்தாபனையின் காரியத்தை வெளிப்படுத்துவதற்கான நோக்கத்தை வைத்திருக்கிறீர்கள். வெளிப்படுத்துவதற்கான திட்டமாக என்ன உருவாக்கியிருக்கிறீர்களோ அது நன்றாக இருக்கிறது. வெளிப்படுத்துவதற் கான திட்டத்தையோ அடுத்த வருடத்திற்காக உருவாக்கியிருக்கிறீர்கள் ஆனால் இந்த வருடத்தின் கொஞ்சம் மிச்சமிருக்கும் காலத்தில் ஒவ்வொரு இடத்தில் தற்சமய சூழ்நிலைக்கு

ஏற்றபடி நெருக்கத்தில் வரும் நபர்கள் அவசியம் வேண்டும். அடுத்த வருடத்தின் சேவையின் வெற்றி இந்த வருடத்தின் ஆதாரத்தில் இருக்கும். எந்தவொரு பிரச்சாரத்திற்கும் அந்த மாதிரி சகயோகி ஆத்மாக்களின் சகயோகம் தேவையாக இருக்கிறது. அதன் மூலம் ஒன்றோ குறைந்த செலவில் பலன் அதிகம், அதனால் உழைப்பு குறைவு வெற்றி அதிகமாக இருக்கும். தேவையான நேரத்தில் நீங்கள் அவர்களுக்கு சேவை செய்தீர்கள் என்றால் சகயோகம் கிடைக்க முடியாது ஆனால் நேரத்திற்கு முன்பாகவே சேவை செய்து சகயோகம் பெறுவதற்கான பிரபாவம் ஏற்படுகிறது. திட்டமோ மிகவும் நன்றாக இருக்கிறது. அனைத்து திட்டங்களையும் கூறினீர்கள், ஒவ்வொரு துறையின் நபர் அவசியம் நெருக்கத்தில் வர வேண்டும். எப்படி கல்வித்துறையின் நபர் நெருக்கத்தில் வருவதினால் ஏற்கனவே தயாராக இருக்கும் மேடை கிடைக்கும். எந்தவொரு திட்டத்தின் விஸ்தாரமான மார்க்கத்தின் சேவைக்காக இது அவசியமாகும். கீதையின் விஷயத்தினால் ஒன்றோ ஐயோ, ஐயோ என்று வேதனை ஏற்படும் அல்லது வெற்றி முழக்கம் இருக்கும் ஆனால் முதலில் குழப்பம் ஏற்படும், பின்பு வெற்றி முழக்கம் இருக்கும். அந்த மாதிரி விஷயத்தைத் தெளிவுபடுத்துவதற்காக அனைவரின் சகயோகம் தேவையாக இருக்கிறது. மந்திரி, வக்கீல் மற்றும் நீதிபதி அனைவரும் தேவையாக இருக்கிறார்கள். எப்படி இங்கேயும் அனைவரும் வந்து கொண்டு இருக்கிறார்கள். டாக்டர், வக்கீல், ஆகியோர் அனைவரின் நெருக்கம் கூட அவசியம் தேவையாக இருக்கிறது. அமைச்சகம், சங்கங்கள் ஆகியவற்றில் இப்பொழுது அனைவரும் கேட்பதற்கு விருப்பப்படுகிறார்கள் வைக்கிறார்கள் ஆனால் அவர்களிடம் நடைமுறையில் அதன்படி நடந்து கொள்வதற்கு தைரியம் இல்லை. சகயோகி ஆக முடியும். முதலில் அவருடைய சேவை மூலம் நிலத்தை தயார் செய்து பின்பு விசால காரியத்திற்கான விதை போடுங்கள். திட்டம் நன்றாக இருக்கிறது. இந்த வருடத்தில் ஏதாவது ஒரு புது விஷயம் அவசியம் நடக்க வேண்டும். அதற்கு பொறுப்பாளர் ஆக வேண்டியதாக இருக்கிறது ஆனால் நடப்பதோ நாடகப்படி தான் நடக்கும் ஆனால் யார் பொறுப்பாளர் ஆகிறாரோ அவருக்கு முழு பிராமண குலத்தில் பெயர் கிடைக்கிறது. இதுவும் பரிசு தான். ஒவ்வொருவரும் அவரவர்களின் மண்டலத்தின் தரப்பில் மீட்டிங்கின் ரிசல்ட்டை எடுங்கள். திட்டத்தை முடிவு செய்து பிறகு அதற்கான ரிசல்ட்டிற்காக கூட்டம் (மீட்டிங்)

கூட்டுங்கள். திட்டத்திற்காக அனைவரும் சரி, சரி என்று கூறுகிறார்கள். ரிசல்ட்டில் பார்த்தால் ஐவர் மட்டும் தான் வெளிப்படுகிறார்கள், எனவே ரிசல்ட்டிற்காகவும் மீட்டிங் வையுங்கள். உற்சாகத்தை அதிகரிப்பதற்கான லட்சியத்தையும் வையுங்கள். அனைவரையும் பிஸியாக வையுங்கள், அதன் காரணமாக நானும் விரல் கொடுத்தேன் என்று அவர்களுக்கு குஷி இருக்கட்டும். கடுமையான உடல் உழைப்பாளியாக இருந்தாலும், திட்டமிடும் புத்தி உள்ளவராக இருந்தாலும், சிறியவர்களையும் கூட முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். இல்லை என்றால் ஒருவர் ஊக்கம் உற்சாகத்தில் சேவை செய்கிறார் மற்றும் மற்றவர்களின் வைப்ரேஷன் வெற்றி அடைவதில் தடை ஏற்படுத்துகிறது. அப்படி அனைவரின் உதவி தேவையாக இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஏதாவது ட்யூட்டியைப் பிரித்துக் கொடுங்கள். எப்படி பிரசாதத்தை அனைவருக்கும் கொடுக்கிறார்கள் என்றால் இங்கு சேவை என்ற பிரசாதத்தையும் அனைவருக்கும் கொடுங்கள். அனைவரின் உற்சாகத்தின் வாயுமண்டலம் இருக்கிறது என்றால் வாயுமண்டலத்தின் பிரபாவத்திலிருந்து யாரும் வெளியில் செல்ல முடியாது. சுற்றி அடிப்பவராக இருந்தாலும் சரி, மேலும் விழுந்து பலியாகுபவராக இருந்தாலும் சரி இந்த வருடத்தில் எப்படி அனைவரும் என்னுடைய பாபா என்று கூறுகிறார்கள் அப்படி என்னுடைய சேவை என்று கூறட்டும், இந்த விசேஷம் இருக்கட்டும். என்னுடைய புரோகிராம் உருவாகியிருக்கிறது. பெரியவர்கள் உருவாக்கிய புரோகிராம் என்று அப்படி சொல்ல வேண்டாம். நடக்குமா அல்லது நடக்காதா? என்று அப்படி இருக்க வேண்டாம். இது என்னுடைய புரோகிராம் என்று அனைவரும் கூறட்டும். அப்பொழுது வெற்றி கிடைக்கும். அனைவருக்கும் சேவைக்கான வாய்ப்பைக் கொடுங்கள். நல்லது

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 06.12.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக விளக்கில் ஆன்மீக விட்டில் பூச்சிகளாகி பலி ஆகி விடுங்கள்!

**(நினைவில் மூழ்கி விடுவது என்றால் அன்பில் ஐக்கியமாவது!)**

தன்னை முழு உலகின் நடுவில் பிரகாசமாக இருக்கும் விசேஷமான அதிர்ஷ்ட நட்சத்திரம் என்று அனுபவம் செய்கிறீர்களா? அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவர்களை சுயம் தந்தை மகிமை செய்கிறார். இதைவிட உயர்ந்த பாக்கியம் வேறு யாருக்காவது இருக்க முடியுமா? எப்பொழுதும் அந்த மாதிரி குஷி இருக்கிறதா? உங்களுடைய குஷியைப் பார்த்து. பார்ப்பவர்களின் வேதனை மற்றும் துக்கம் என்ற மேகக் கூட்டங்கள் கலைந்து விட வேண்டும், துக்கத்தை மறந்து சுகத்தின் ஊஞ்சலில் ஆடி விடவேண்டும் அந்த மாதிரி தன்னை அனுபவம் செய்கிறீர்களா? எப்படி பாரஸ் என்ற உலோகத்துடன் இரும்பும் இணையும் போது தங்கமாகி விடுகிறது என்ற வர்ணனை இருக்கிறது, அப்படி தங்க மணிகள் உங்களுடைய தொடர் பினால் மற்ற இரும்பு உலகத்து ஆத்மாக்களும் தங்கமாகி விட வேண்டும். அந்த மாதிரி நிலையை தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா? எந்தவொரு ஆத்மாவும் பிச்சைக்காரன் ஆகி வருகிறார் என்றால், பின்பு அவர் அனைத்தும் நிறைந்தவராகிச் செல்ல வேண்டும். அந்த மாதிரி தன்னுடைய எதிர்காலத்தின் உருவத்தை தினசரி தன்னுடைய கண்ணாடியில் பார்க்கிறீர்களா? எந்த நேரம் பார்க்கிறீர்கள்? அமிர்த வேளையிலா? பார்ப்பதற்கான நேரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது நடைமுறையில் எப்பொழுது எண்ணம் வருகிறதோ அப்பொழுது பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களா? முழு நாளில் எத்தனை தடவை பார்க்கிறீர்கள்? அடிக்கடி பார்க்கிறீர்களா அல்லது ஒரு தடவை தான் பார்க்கிறீர்களா? இக்காலத்தின் நாகரீகமாக அடிக்கடி தன்னுடைய முகத்தை பார்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் தன்னுடைய லட்சணங்களை பார்க்கிறார்கள். மேலும் நீங்கள் தன்னுடைய எதிர்காலத்தைப் பார்க்கிறீர்கள். உங்களுக்கு லட்சணங்களின் பக்கம்

கவனம் இல்லை ஆனால் ஒவ்வொரு நேரமும் எதிர்காலத்தை உயர்ந்ததாக ஆக்குவதற்கான கவனம் இருக்கிறது. அப்படி தன்னுடைய உருவத்தில் எவ்வளவு ஆன்மீகத்தன்மை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்று தன்னுடைய எதிர்காலத்தின் உருவத்தைப் பார்க்கிறீர்களா? எப்படி அந்த மனிதர்கள் லௌகீக பார்வையினால் உருவத்தில் மற்றும் முகத்தில் தன்னுடைய அழகைப் பார்க்கிறார்கள். எவ்வளவு நான் அழகாக ஆகியிருக்கிறேன். மேலும் நீங்கள் அனைவரும் ஆன்மீக உருவத்தைப் பார்க்கிறீர்கள். ஆன்மீகத் தன்மை என்ற அழகைப் பார்க்கிறீர்கள்.

இன்றோ விசேஷமாக தூர தேசத்தைச் சேர்ந்த மற்றும் இரட்டை வெளிநாட்டினர் அதாவது திரிகாலதரிசி குழந்தைகளோடு விசேஷமாக சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். இதுவும் விசேஷ அதிர்ஷ்டம் தான் ஆனது இல்லையா? அந்த மாதிரி அதிர்ஷ்டசாலி என்று தன்னை நினைக்கிறீர்களா? பல கோடி மடங்கு பாக்கியசாலி என்று தன்னை நினைக்கிறீர்களா? அல்லது சௌபாக்கியசாலி என்று நினைக்கிறீர்களா அல்லது பலகோடி மடங்கு என்ற வார்த்தையும் ஒன்றும் இல்லையா? தன்னை என்னவென்று நினைக்கிறீர்கள்? பலகோடி மடங்கோ நம்முடைய கால் அடிகளில் நிரம்பியிருக்கிறது என்று கூறுங்கள். யாருடைய அடிகளில் அனேக கோடிகள் நிரம்பியிருக்கிறதோ அவர் சுயம் என்னவாக ஆனார்? எப்படி ஏதாவது விசேஷத்தைக் கூறுகிறார்கள் அல்லது தன்னுடைய உயர்ந்த நிலையை வர்ணனை செய்கிறார்கள் என்றால், அவரோ என் காலடியில் இருக்கிறார், என் முன்பு இவர் என்ன? ஒன்றுமே இல்லை என்று கூறுவார்கள். அது போலவே பல கோடியோ உங்கள் காலடிகளின் கீழே இருக்கிறது. அந்த மாதிரி உயர்ந்த அதிர்ஷ்டசாலியா நீங்கள்? தன்னுடைய பாக்கியத்தை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் என்னவாக ஆகி விடுவீர்கள். பாக்கியத்தை நினைவு செய்து செய்து தந்தையையும் விட மிக உயர்ந்த மற்றும் தந்தையின் தலைக்கும் கிரீடமாகி விடுவீர்கள். தன்னுடைய மிக உயர்ந்த நிலையின் நினைவுச் சின்னத்தைப் பார்த்திருக்கிறீர்களா? உங்களுடைய மிக உயர்ந்த பாக்கியத்தின் அடையாளத்தின் நினைவுச் சின்னமாக எது இருக்கிறது? அதன் மூலம் அனைவரையும் விட மிக உயர்ந்த பிரசித்தி உள்ளவராக ஆகுகிறீர்கள். விராட சொரூபத்தில் பிராமணர்களின் மிக உயர்ந்த நினைவுச் சின்னமாக குடுமியைக்

காண்பித்திருக்கிறார்கள். குடுமியை விட உயர்ந்தது ஏதாவது இருக்கிறதா? சக்தி சேனையும் தங்களை அந்த மாதிரி அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள் என்று நினைக்கிறீர்களா?

தந்தையும் இன்று விசேஷமாக குழந்தைகளின் விசேஷ பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். எப்படி மூலை முடுக்குகளிலிருந்தும் வெளிநாட்டின் மூலைகளிலிருந்தும் வெளிப்பட்டு தன்னுடைய வீட்டை வந்து சேர்ந்து விட்டார்கள். தந்தையும் வீட்டில் வந்திருக்கும் குழந்தைகளுக்கு அரைக்கல்பமாக ஆசை வைத்திருந்தவர்கள் இங்கு வரை வந்து சேர்ந்து விட்டார்கள் என்றால், குழந்தைகள் அவ்வாறு அவர்கள் வந்து சேர வேண்டிய இடத்திற்கு வந்ததைப் பார்த்து மற்றும் அனைத்து ஆசைகளும் நிறைவேறியதைப் பார்த்து தந்தையும் மகிழ்ச்சி அடைகிறார்.

வெளிநாட்டு குரூப்பில் விசேஷமாக என்ன இருக்கிறது? வெளிநாட்டினரைப் பார்த்து தந்தையும் வெளிநாட்டினரின் விசேஷத்தைப் பார்த்துக் கொண்டே விசேஷமாக மகிழ்ச்சி அடைகிறார். ஏனென்றால் பெரும்பான்மையோர் பாரதவாசிகளாக இருந்தாலும், இப்பொழுது வெளிநாட்டினர் என்று கூறப்படுகிறார்கள். அப்படி பெரும்பான்மையோரில் யார் முதல் தரமானவர்களோ அவர்கள், வந்ததுமே விட்டில் பூச்சிக்குச் சமமாக விளக்கு ஒளியில் விழுந்து எரிந்து இறந்து விடுவது, அதில் பிறகு யோசிப்பதற்கு ஒன்றும் இல்லை. கேட்டார்கள். அனுபவம் செய்தார்கள். பிறகு அதன்படி நடக்க ஆரம்பித்தார்கள். அப்படி வெளிநாட்டினரில் இந்த சிறப்பு பாரதவாசிகளைவிட விசேஷமாக உள்ளது. பாரதவாசி முதலில் கேள்வி கேட்பார்கள், பின்பு யோசிப்பார்கள். பிறகு சுவாஹா ஆவார்கள். வெளிநாடுகளிலிருந்து வெளியாகியிருக்கும் ஆத்மாக்களில் விளக்கொளியில் விட்டில் பூச்சிக்குச் சமமாக சுவாஹா ஆவதற்கான விசேஷம் இருக்கிறது. புரிந்ததா? எப்படி வெகுதூரத்தில் அமர்ந்து மிகவும் துடிப்பில் இருக்கிறார்கள். மேலும் அந்த மாதிரி துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவிற்கு இருப்பிடம் கிடைத்து விட்டது என்றால் அந்த மாதிரி துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் பெரும்பான்மையோரின் ரூபத்தில் குரூப்பில் தென்படுகிறார்கள். புரிந்ததா? தன்னுடைய விசேஷத்தைத் தெரிந்து கொண்டீர்களா?

விட்டில் பூச்சியாக இருக்கும் காரணத்தினால் தானாகவே அவர்களுடைய முயற்சியில் நினைவு மற்றும் சேவையைத் தவிர வேறு எதுவும் இருப்பதில்லை. எனவே வேகமாகச் செல்கிறார்கள்.

நீங்கள் எப்பொழுது, ஏன் மற்றும் என்ன என்ற கேள்வி கேட்கிறீர்களா? மாயாவின் தாக்குதலில் தோல்வி அடைபவர்களா அல்லது எப்பொழுதும் வெற்றி அடைபவர்களா? மாயாவிற்கு தோல்வியைத் தருபவர்களா அல்லது தோல்வி அடைபவர்களா? அப்படி வெளிநாட்டினருக்கு தந்தையின் விசேஷ லிஃப்ட்டும் இருக்கிறது. அந்த லிஃப்டின் கிஃப்டின் காரணமாக வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த விசேஷத்தை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்யுங்கள். ஏன் மற்றும் என்ன என்ற கேள்விக்குப் பதிலாக எப்பொழுதும் மாஸ்டர் திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியம் மற்றும் எண்ணத்தை அதன் பிரகாரமே சொரூபத்தில் கொண்டு வாருங்கள். எப்பொழுது திரிகாலதரிசியாக இருக்கிறீர்கள் என்றால் ஏன் மற்றும் என்ன என்ற கேள்வி முடிவடைந்து விடும் இல்லையா? எனவே எப்பொழுதும் மாஸ்டர் திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருங்கள், எப்பொழுதும் தன்னை ஒரு தந்தையின் நினைவில் மூழ்கியிருந்து தந்தைக்குச் சமமானவர் என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். எப்படி தத்துவ யோகி நான் தத்துவத்தோடு சேர்ந்து விடுவேன் மற்றும் ஐக்கியமாகி விடுவேன் என்ற இந்த லட்சியத்தைத் தான் வைக்கிறார்கள் ஆனால் இந்த அனுபவம் செய்வதில்லை. இந்த நேரம் ஞானத்தின் ஆதாரத்தில் தந்தையின் நினைவில் மூழ்கி விடுவது மற்றும் அன்பில் ஐக்கியமாகி விடுவது, தன்னைத் தானே மறந்து விடுவது என்ற இதைத் தான் அவர்கள் ஒன்றரக்கலந்து விடுவது என்று கூறுகிறார்கள் என்று நீங்கள் புரிந்து கொண்டீர்கள். எப்பொழுது அன்பில் ஐக்கியமாகி விடுகிறீர்களோ அதாவது அன்பில் முழுமையாக மூழ்கி விடுகிறீர்களோ அப்பொழுது தந்தைக்குச் சமமாக ஆகி விடுகிறீர்கள். இதைத் தான் அவர்கள் ஒன்றரக்கலந்து விடுவது என்று கூறுகிறார்கள். அப்படியானால் அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? ஆத்மா தந்தையின் அன்பில் தன்னை முற்றிலும் மறந்த நிலையில் அனுபவம் செய்ய வேண்டும், அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? எப்படி யாராவது கடலில் மூழ்கி விட்டார் என்றால் அந்த நேரம் அவருக்கு என்ன அனுபவம் ஆகும்? கடலைத் தவிர வேறு எதுவுமே தென்படாது. அப்படி தந்தை அதாவது சர்வ குணங்களின்

கடலில் மூழ்கி விடுவது என்ற இதைத் தான் அன்பில் ஐக்கியமாகி விடுவது என்று கூறுவது அதாவது தந்தையின் அன்பில் மூழ்கி விடுவது தந்தையில் மூழ்கி விடுவதில்லை, ஆனால் தந்தையின் நினைவில் மூழ்கி விடுவது. அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா?

வெளிநாட்டு பார்ட்டியைப் பார்த்து அவர்களுடைய எதிர்காலத்தைப் பாப்தாதா பார்க்கிறார். வெளி நாட்டுப் பார்ட்டியின் எதிர்காலமாக என்ன இருக்கிறது? சத்யுகத்தின் எதிர்காலம் அல்ல, சத்யுகத்தின் எதிர் காலமோ இராஜா இராணி ஆகும் ஆனால் சங்கமயுகத்தின் எதிர்காலம் என்ன? (தந்தையை வெளிப்படுத்து வதற்கானது) ஆனால் அதை எப்பொழுது செய்வீர்கள்? அதனுடைய தேதி என்ன? எதுவரை தேதியை நிர்ணயம் செய்யவில்லையோ அதுவரை சக்திசாலியான திட்டம் உருவாகாது. வெளிநாட்டினர் மூலமாகத்தான் பாரதத்தின் கும்பகர்ணன் எழ வேண்டும். ஒருவேளை செய்து விடுவோம் என்று நீங்களும் யோசித்தீர்கள் என்றால் அவர்களும் எழுந்து விடுவோம் என்று கூறுவார்கள். எனவே எழுப்புபவர்களுக்கு முழு சக்தியுடன் தன்னுடைய சக்திசாலியான திட்டத்தை உருவாக்க வேண்டியதாக இருக்கும். இந்த வருடம் இதை இதை செய்யத் தான் வேண்டும் என்று நீங்கள் முடிவெடுத்தால் தான் அவர்களும் இந்த வருடத்திற்குள் எழத்தான் வேண்டும் என்று யோசிப்பார்கள். இப்பொழுது எழுப்புபவர்களிடமும் காலம் நிச்சயிக்கப்படவில்லை. எனவே எழுபவர்களிடமும் காலம் நிச்சயிக்கப்படவில்லை. எப்படி செய்யவோ வேண்டும் என்று எழுப்புபவர்கள் யோசிக்கிறார்கள் என்றால் அதே போல் எழவோ வேண்டும். கடைசியில் எழுந்து விடுவோம் என்று எழ வேண்டியவர்களும் யோசிக்கிறார்கள். எனவே வெளிநாட்டினரின் எதிர்காலமாக என்ன இருந்தது? பாரதத்தின் பெயர், புகழ் பெற்றவர்களை எழுப்ப வேண்டும். இது தான் வெளிநாட்டினரின் எதிர்காலம். சாதாரண கும்பகர்ணனை அல்ல, ஆனால் பெயர், புகழ் பெற்ற கும்பகர்ணர்களை எழுப்ப வேண்டும். அந்த ஒருவர் எழுவதினால் அனேகர் எழுந்து விடுவார்கள், அவரைத் தான் பெயர், புகழ் பெற்றவர் என்று கூறுவது. பூமி மற்றும் மேடையோ தயாராகிக் கொண்டே இருக்கிறது. நடிகர்களுக்கு இப்பொழுது தன்னுடைய பாகத்தை மட்டும் செய்ய வேண்டும் ஆனால் பாத்திரம் கூட கதாநாயக பாத்திரம். சாதாரண பாத்திரத்தினால் ஒன்றும் நடக்காது.

கதாநாயக பாத்திரம் செய்வதினால் கும்பகர்ணர்களும் எழுந்து ஹியர், ஹியர் (கேட்டீர்களா, கேட்டீர்களா) என்று கூறுவார்கள். நல்லது.

அந்த மாதிரி எதிர்காலத்தை உருவாக்குவதற்கு பொறுப்பாளராகியிருக்கும் பிரகாசித்து கொண்டிருக்கும் ஜோதி, எப்பொழுதும் தன்னுடைய மற்றும் நேரத்தின் மதிப்பை தெரிந்திருக்கக்கூடிய, அந்த மாதிரி விலைமதிக்க முடியாத ரத்தினம், உலகத்தின் ஷோ கேஸ் (காட்சிப் பெட்டகத்தில்) விசேஷமாக பிரசித்தி ஆகக்கூடிய அனைத்து சித்தி சொரூபமானவர்களுக்கு, ஒவ்வொரு எண்ணத்தை சொரூபத்தில் கொண்டு வரக்கூடிய தந்தைக்குச் சமமாக அனைத்து குணங்களை, சேவை மற்றும் சொரூபத்தில் கொண்டு வரக்கூடிய அந்த மாதிரி விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு**:

**(1) ஒவ்வொரு அடியிலும் எப்பொழுதும் வெற்றி நிரம்பியிருக்கட்டும் என்பது தான் நேரத்தின் அருகாமையின் அடையாளமாகும்!** வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்ற இது கனவிலும், எண்ணத்திலும் கூட வராது. ஒவ்வொரு காரியம் செய்வதற்குப் பின்னால் நிச்சயமான ரூபத்தில் வெற்றி தென்படும். செய்யலாமா அல்லது வேண்டாமா மேலும் நடக்குமா அல்லது நடக்காதா. என்ற இந்த எண்ணமும் எழாது. என்ன நடக்க வேண்டுமோ அது தானாகவே நடந்து கொண்டே இருக்கும். பாதையில் கிடக்கும் மலர்களுக்குச்சமமாக வெற்றி பிராமணர்களை மண்டியிட்டு வரவேற்கிறது வெற்றிமூர்த்தி இவர் என்னை பயன்படுத்தட்டுமே என்று ஆவாஹனம் செய்கிறது. வெற்றியை, தான் ஆவாஹனம் செய்ய வேண்டியதாக இருக்காது ஆனால் வெற்றிமூர்த்தியை வெற்றி ஆவாஹனம் செய்கிறது. இந்த வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

**(2) மாஸ்டர் சர்வ சக்திவானின் நினைவின் மூலமாக விக்ன வினாஷக் ஆகுங்கள்!** எப்பொழுதும் எஜமானத்தன்மை மற்றும் குழந்தை என்பதின் போதையில் இருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களாக அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது விரும்புகிறீர்களோ எஜமானத்தன்மையின் நிலையில் நிலைத்து

விடுங்கள் மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ குழந்தைப் பருவத்தின் நிலையில் நிலைத்து விடுங்கள், அந்த மாதிரி அனுபவம் இருக்கிறதா? அல்லது நேரம் குழந்தையாக ஆவதற்காக இருந்து. அந்த நேரத்தில் எஜமானன் ஆகி விடுகிறீர்களா? மேலும் நேரம் எஜமானனாக ஆவதற்காக இருந்து. அந்த நேரம் குழந்தையாக ஆகி விடுகிறீர்களா? எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அந்த நிலையில் நிலைத்து விடுகின்ற மாதிரி நிலை இருக்கிறதா? ஏனென்றால் இந்த இரட்டை போதை எப்பொழுதுமே தடையற்றவராக ஆக்கக்கூடியது. எப்பொழுது ஏதாவது தடை வருகிறது என்றால் அந்த நேரத்தில் எந்த நிலையில் நிலைத்திருக்க வேண்டுமோ அதில் நிலைத்திருக்காத காரணத்தினால் தடை வருகிறது. நீங்கள் விக்ன வினாசக் ஆத்மாக்களா? அல்லது விக்னத்திற்கு வசமாகும் ஆத்மாக்களா? என்னுடைய பட்டமே 'விக்ன வினாசக்' தான் என்று எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். விக்ன வினாசக் ஆத்மா எப்படி சுயம் தானே விக்னத்தில் வர முடியும்? ஏதாவது எவ்வளவு தான் விக்ன ரூபமாக ஆகி வந்தாலும் நீங்கள் விக்னத்தை வினாசம் செய்வீர்கள். நீங்கள் உங்களுக்காக மட்டும் விக்ன வினாசக் இல்லை ஆனால் முழு உலகிற்குமே நீங்கள் விக்ன வினாசக். உலகை மாற்றுபவர்கள் நீங்கள். சக்தியின் எதிரில் யாராவது எவ்வளவு தான் சக்திசாலியாக இருந்தாலும் அவர் பலஹீனமானவராக ஆகி விடுகிறார். விக்னத்தை பலஹீனமானதாக ஆக்கக்கூடியவர் நீங்கள் பலஹீனமாகுபவர்கள் இல்லை. எனவே எப்பொழுதும் தன்னுடைய மாஸ்டர் சர்வ சக்தி வான் சொரூபத்தின் நினைவில் இருங்கள். கேட்டதோ அதிகம், வேறென்ன செய்ய வேண்டும்? ஆக வேண்டும். கேட்பதின் அர்த்தமே ஆவது. அப்படியானால் ஆகி விட்டீர்களா? தந்தை கூட அந்த மாதிரி சக்திசாலிக் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். குடும்பத்தில் கூட தந்தைக்கு எந்த குழந்தைகள் பிரியமானவர்களாக இருக்கிறார்கள்? யார் சொற்படி நடப்பவராகவும் தந்தையைப் பின்பற்றுபவராகவும் இருக்கிறாரோ அவர் தான். அப்படியானால் நீங்கள் யார்? தந்தையைப் பின்பற்றி நடப்பவர்களா? பின்பற்றி நடப்பது சுலபமாக இருக்கிறது இல்லையா? தந்தை கூறினார் மேலும் குழந்தைகள் செய்தார்கள். யோசிப்பதற்கே அவசியம் இல்லை. செய்யவர், செய்ய வேண்டாமா? நல்லது ஏற்படுமா? அல்லது ஏற்படாதா? இப்படி யோசிப்பதற்கே அவசியம் இல்லை. பின்பற்றி செய்வது சுலபம்

தான் இல்லையா? ஒவ்வொரு காரியத்திலும் எதை எதை பின்பற்ற வேண்டும் மேலும் எப்படி செய்ய வேண்டும் என்பது அனைவருக்கும் தெளிவாக இருக்கிறது. யார் ஒவ்வொரு அடியிலும் பின்பற்றி நடப்பவராக இருக்கிறாரோ அவருக்கு என்ன போதை இருக்கிறது? ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்ற நிச்சயத்தின் போதை இருக்கிறது. ஆகுமா? அல்லது ஆகாதா? என்பதே இல்லை. நிச்சயிக்கப்பட்டது. ஏனென்றால் சென்ற கல்பத்திலும் பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது இல்லையா. பாண்டவர்கள் என்ன செய்தார்கள்? பகவானின் வழிப்படி நடந்தார்கள். அதாவது பின்பற்றி நடந்தார்கள் அதனால் வெற்றி கிடைத்தது. அதே சென்ற கல்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் இல்லையா. இந்த நிச்சயம் இயல்பாகவே போதையை ஏற்படுத்துகிறது. எந்த விஷயமும் கடினமாக இருக்காது. அப்படி எப்பொழுதுமே சகஜமாக மற்றும் உயர்ந்த பிராப்தியின் அனுபவம் செய்து கொண்டே இருங்கள். எஜமானன் நான் தான் குழந்தையாகவும் இருக்கிறேன் என்ற இரட்டை போதையை நேரத்திற்கு ஏற்றவாறு நடைமுறையில் கொண்டு வாருங்கள். எப்பொழுதாவது ஏதாவது பிரச்சனை ஏற்பட்டாலும் கூட குஷி குறைய வேண்டாம். எப்பொழுதும் குஷியாக இருங்கள். நல்லது.

**வரதானம்: ஆன்மீக போதை மூலமாக துக்கம் - அமைதியின்மையின் பெயர், அடையாளத்தையும் முடிவுகட்டக்கூடிய அனைத்து பிராப்தி சொரூபமானவர் ஆகுக!**

ஆன்மீக போதையில் இருப்பது என்றால் காரியங்கள் செய்து கொண்டே, போகும் பொழுதும் வரும்பொழுதும் ஆத்மாவைப் பார்ப்பது மற்றும் ஆத்ம அபிமானியாக இருப்பது. இந்த போதையில் இருப்பதினால் அனைத்து பிராப்திகளின் அனுபவம் ஆகும். பிராப்தி சொரூபமாக, ஆன்மீக போதையில் இருக்கக்கூடிய ஆத்மாவின் அனைத்து துக்கமும் விலகி விடும். துக்கம் - அமைதியின்மையின் பெயர், அடையாளமும் இருக்காது. ஏனென்றால் துக்கம் மற்றும் அமைதியின்மையின் உற்பத்தி தூய்மையின்மை யினால் ஏற்படுகிறது. எங்கு தூய்மையின்மை இல்லையோ அங்கு துக்கம், அமைதியின்மை எங்கிருந்து வரும். யார் தூய்மையான ஆத்மாக்களோ அவர்களிடம் சுகம் மற்றும் அமைதி இயல்பாகவே இருக்கிறது.

**சுலோகன்: யார் எப்பொழுதும் ஒருவரின் அன்பிலேயே மூழ்கியிருக்கிறாரோ அவர் தான் தடையற்றவராக ஆகிறார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 08.12.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# குழந்தைகளின் விதவிதமான நிலைகள்! (சம்பூர்ணத்தின் அடையாளங்கள்!).

அசரீரி பவ என்ற இந்த வரதானத்தை பிராப்தி அடைந்து விட்டீர்களா? எந்த நேரம் "நான் அசரீரி ஆவேன்" என்று நினைக்கிறீர்களோ, அதே விநாடி சொரூபமாகி விடுங்கள். அந்த மாதிரியான பயிற்சி சகஜமாகி விட்டதா? சகஜமாக அனுபவம் ஆவது - இது தான் சம்பூர்ணத்தின் அடையாளம் ஆகும். சில நேரம் சுலபமாக மற்றும் சில நேரம் கடினமாக, சில நேரம் ஒரு நொடியில் மற்றும் சில நேரம் ஒரு நிமிடத்தில் அல்லது அதை விட அதிகமான நேரத்தில் அசரீரி சொரூபத்தின் அனுபவம் ஆவது என்றால் சம்பூர்ண நிலையிலிருந்து இப்பொழுது தூரமாக இருக்கிறீர்கள் என்பதாகும். எப்பொழுதும் சகஜமாக அனுபவம் ஆவது என்பது தான் சம்பூர்ணத்தின் பகுத்தறிதல் ஆகும். இப்பொழுது உடனே பாப்தாதா வெளிநாடு மற்றும் தன்னுடைய பாரத தேசத்தின் அனைத்து குழந்தைகளை மேற்பார்வை செய்வதற்காக சுற்றி வரச் சென்றார். சுற்றி வந்து விசேஷமான விஷயமாக என்ன பார்த்தார்? மூன்று விதமான குழந்தைகளைப் பார்த்தார்.

1) ஞான ரத்தினங்கள் மற்றும் நினைவின் சக்தியின் மூலம் அனைத்து சக்திகளை தன்னில் நிரப்பக் கூடிய நிரந்தரமாக சாதகப் பறவை மாதிரி இருப்பவர்கள். யார் ஒவ்வொரு நொடியும் எடுப்பவர்கள் அதாவது தாரணை செய்பவர்கள், யாருக்கு பிராப்தியின் அல்லது தன்னை சம்பன்னம் ஆக்குவதைத் தவிர வேறு எந்த ஈடுபாடும் இல்லையோ. இரவானாலும் அல்லது பகலானாலும் ஈடுபாடு ஒரே சீராக இருக்கிறதோ. அந்த மாதிரியான சைத்தன்ய சாதகப் பறவைகளை வெளிநாட்டில் மற்றும் பாரதத்தில் இரண்டு இடங்களிலும் பார்த்தோம்.

2) சேவையின் முழு ஈடுபாட்டில் மூழ்கி, இரவு பகலாக சேவைக்கான திட்டங்களை உருவாக்குவதில் மிகவும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சேவையின் பலன் சொரூபமாக தன்னில் குஷியை அனுபவம் செய்பவர்கள் ஆனால் அனைத்து சக்திகளை, ஒவ்வொரு எண்ணத்தில் மாயாவை வென்றவர் ஆவதற்கான சக்தியை மற்றும் "அசரீரி ஆகுக" என்ற வரதானத்தின் பிராப்தியின் அனுபவம் செய்வதில் எப்பொழுதும் ஒரே சீரான நிலை இல்லை. குஷியின் அனுபவத்தை விசேஷமாகச் செய்பவர்கள், ஆனால் சக்தியின் அனுபவத்தை குறைவாகச் செய்பவர்கள், ஞானம் நிறைந்ததின் அனுபவம் அதிகமாக மற்றும் சக்தி நிறைந்த நிலையின் அனுபவம் குறைவாகச் செய்பவர்கள், ஞானத்தின் சிந்தனை அதிகமாக, சக்தி நிறைந்த சொரூபம் குறைவாக - அந்த மாதிரி குழந்தைகளையும் பார்த்தோம்.

3) இரவு பகலாக லட்சியத்தை எதிரில் வைத்துக் கொண்டு, சம்பூர்ணம் ஆவதின் நல் ஆசைகளை வைத்துக் கொண்டு, எப்பொழுதும் முயற்சி செய்வதில் ஈடுபட்டிருக்கும், முயற்சி செய்வதில் அதிக நேரம் மற்றும் பிராப்தியின் நேரம் குறைவாக அனுபவம் செய்யக்கூடிய ஏதாவது பிரச்சனையை எதிர்நோக்குவதில் அதிக நேரத்தை ஈடுபடுத்தக்கூடிய, கடினத்தை சுலபமாக்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் -அந்த மாதிரியான குழந்தைகள் அதிக நேரம் யுத்த மைதானத்திலேயே தன்னை அனுபவம் செய்பவர்கள். அந்த மாதிரியானவர்களையும் அதிகமாகப் பார்த்தோம்.

முதல் நம்பரின் சாதகப்பறவைகளின் நிலையாக என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்பது தான் இருந்தது. இப்பொழுது நேரமும் இன்னும் கொஞ்சம் தான் இருக்கிறது. இரண்டாம் நம்பரில் உள்ள சேவைக்குத் தகுதியான, அதிகம் ஞானம் நிறைந்த, குறைவாக சக்தியுள்ள குழந்தைகளின் நிலையாக 'அடைந்து விட்டோம், கிடைத்துக் கொண்டிருக்கிறது, மேலும் அடைந்தே விடுவோம்' என்ற நிச்சயம் இருக்கிறது. குஷி என்ற ஊஞ்சலில் ஆடுகிறார்கள் ஆனால் இடையிடையே ஊஞ்சலை வேகமாக ஆட வைப்பதற்காக ஏதாவது ஆதாரத்தின் அவசியம் இருக்கிறது. அந்த ஆதாரம் என்ன? வேறு யாராவது சேவைக்காக தைரியம், உற்சாகம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் அதாவது 'மிகவும் நன்றாக இருந்தது. மிகவும் நன்றாக

இருந்தது' என்று சொல்பவர்கள் இருக்க வேண்டும். இல்லை என்றால் குஷி என்ற ஊஞ்சல் ஆடி ஆடி நின்று விடுகிறது. அப்படி நின்று விட்டதை ஆட்ட வேண்டியதாக இருக்கிறது. முதல் ஸ்டேஜில் உள்ளவர்களுக்கு தானியங்கி ஊஞ்சல் ஆகும்.

மூன்றாவது ஸ்டேஜில் உள்ளவர்களின் நிலை சில நேரம் பிராப்தி மற்றும் வெற்றியின் ஆதாரத்தில் அதிக மகிழ்ச்சி மற்றும் சில நேரம் அடிக்கடி யுத்தத்தின் சூழ்நிலையில் களைப்பை அனுபவம் செய்பவர்கள். ஏதாவது சாதனத்தின் ஆதாரத்தில் தன்னை கொஞ்ச நேரத்திற்காக குஷியாக இருப்பதாக அனுபவம் செய்பவர்கள். சில நேரம் குஷியானவர்கள், சில நேரம் புகார் சொல்பவர்கள். என்ன செய்வேன், எப்படிச் செய்வேன் செய்து கொண்டே இருக்கிறேன். இவ்வளவு கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய தலையெழுத்தே அப்படித் தான். நாடகத்தில் என்னுடைய பங்கே அப்படித் தான் நிரம்பியிருக்கிறது. மேலும் சென்ற கல்பத்திலும் இவ்வளவு தான் என்னால் முடிந்தது என்று சில நேரம் உயர்ந்த நிலை மற்றும் சில நேரம் தாழ்ந்த நிலை என்று நேரத்திற்கு ஏற்றபடி ஒவ்வொரு நேரமும், தற்சமயத்து நிலை அனைத்து பிராப்திகளின் அனுபவத்தினுடையதாக இருக்க வேண்டும். இப்பொழுது இந்தக் கடைசி நேரத்தில் யுத்தத்தில் இல்லாமல், எப்பொழுதும் வெற்றியடைந்த நிலையின் போதையில் இருக்க வேண்டும். ஏனென்றால் தந்தையோ அனைத்து சக்திகளுக்கும் உரியவராக ஆக்கி விட்டார். தன்னையும் விட உயர்ந்த பிராப்தியின் அதிகாரியாக ஆக்கி விட்டார். அந்த மாதிரி மாஸ்டர் மற்றும் அனைத்து அதிகாரி இரண்டாவது மற்றும் மூன்றாவது ஸ்டேஜின் அனுபவத்திலின்றி ஆனால் முதல் ஸ்டேஜின் அனுபவத்தில் இருக்க வேண்டும். வெளிநாட்டினரை கடைசியில் வந்தாலும் வேகமாக முன்னேறுபவர்கள் என்று கூறுகிறார்கள். வேகமாக முன்னேறுபவர்கள் முதல் நம்பரில் வருபவர்கள் என்று கூறப்படுகிறது. யார், யார் வெளிநாட்டு குரூப் வந்திருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் முதல் ஸ்டேஜில் இருப்பவர்கள் தான் இல்லையா? முதல் ஸ்டேஜ் என்றால் எப்பொழுதும் அனுபவம் நிறைந்தவர். ஒவ்வொரு நொடியும் அனுபவத்தில் மூழ்கியிருப்பவர், அப்படித் தான் இல்லையா? சில நேரம் மற்றும் இந்த நேரம் என்று சொல்பவர்கள் இல்லை. சில நேரம் அப்படி யாகிறது மற்றும் சில நேரம் இப்படியாகிறது என்பதும் இல்லை,

# 1975 அவ்யக்த முரளி

எப்பொழுதும் ஒருவரின் ரசனையில் இருக்கக்கூடிய மற்றும் ஒருவர் மூலமாக அனைத்து அனுபவத்தையும் அடையக்கூடியவர், அவரைத் தான் ஃபர்ஸ்ட் என்று சொல்லப்படுவது. பாப்தாதாவிற்கும் அந்த மாதிரியான கடைசியில் வந்தும் முதலில் இருக்கும் குழந்தைகள் மேல் பெருமிதம் இருக்கிறது. ஒவ்வொருவரின் நெற்றியில் ஒவ்வொரு குழந்தையின் எதிர்காலம் என்ன? என்ற அதிர்ஷ்டத்தின் ரேகையையோ பாப்தாதா பார்க்கிறார் இல்லையா? எதிர்காலத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். இப்பொழுது வந்திருக்கும் குரூப்பில் கூட நல்ல நம்பிக்கைக்குரிய குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் உலகிற்கு விளக்காகி தந்தைக்குச் சமமாக அனேகர்களுக்கு வழிகாட்டுவதற்கு பொறுப்பாளர் ஆவார்கள். இப்பொழுதோ விசேஷமாக வெளிநாட்டினருக்காகத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம் இல்லையா? சிலர் இங்கு எதிரில் அமர்ந்திருக்கிறார்கள். மேலும் சிலர் வெளிநாட்டில் இரவு பகலாக இதே நினைவில் இருக்கிறார்கள். அவர்கள் என்ன அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சியில் ஏதாவது முக்கியமான நிகழ்ச்சி வருவதாக இருந்தால் அனைவரும் தங்களுடையதை ஸ்விட்ச் ஆன் செய்து வைத்திருப்பார்கள். அனைவரின் கவனம் அந்த ஒன்றின் பக்கம் தான் இருக்கும். அதே போலவே வெளிநாட்டில் நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் தங்களுடைய நினைவு என்ற ஸ்விட்சை ஆன் செய்து அமர்ந்திருக்கிறார்கள். அனைவரின் எண்ணத்தில் இந்த மதுபனின் நினைவு ஒன்று தான் இருக்கிறது. தூரத்தில் இருந்த போதிலும் அனேக குழந்தைகள் தந்தைக்கு இந்த சபையில் எதிரில் தென்படுகிறார்கள். நல்லது.

அந்த மாதிரி சாகார ரூபத்தில் எதிரில் அமர்ந்திருக்கக்கூடிய மற்றும் ஆகார ரூபத்தில் புத்தியின் நினைவு மூலம் எதிரில் அமர்ந்திருக்கக்கூடிய அந்த மாதிரியான எப்பொழுதும் வெற்றி சொரூபம், அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடக்கூடிய, பிராப்தி சொரூபமான, அனைத்து வரதானங்களின் அதிகாரி உலகம் மூலமாக எப்பொழுதும் மரியாதை கிடைக்கும் மற்றும் உலகிற்காக எப்பொழுதும் நன்மை செய்யும் அந்த மாதிரியான உலகத்தின் விளக்குகளுக்கு பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# சக்திகளின் ஸித்தி மூலம் மகாரதியை பகுத்தறிதல்!

ஒவ்வொருவரின் நெற்றி மூலமாக நெற்றியின் மணியைப் பார்த்துக் கொண்டே அதிர்ஷ்ட ரேகையைத் தெரிந்து கொள்ள முடியுமா? நெற்றியின் இடையில் பிரகாசமாக இருக்கும் மணி அதாவது உயர்ந்த ஆத்மாவின் எண்ண அலைகள் மூலமாக சுலபமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஒவ்வொரு ஆத்மாவின் முயற்சி மற்றும் பிராப்தியின் அனுபவத்தை எண்ண அலைகள் மூலமாக சுலபமாகவே தெரிந்து கொள்ள முடியும். எப்படி ஏதாவது நறுமணமான பொருள் இருக்கிறது என்றால் உடனேயே சுற்றுப்புறத்தில் பரவி விடுகிறது. மேலும் சுலபமாகவே இது நல்லதா அல்லது இல்லையா என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது. இதே விதமாக எவ்வளவிற்கு எவ்வளவு பகுத்தறியும் சக்தி அதிகரித்துக் கொண்டே இருக்குமோ அப்பொழுது எந்தவொரு ஆத்மா எதிரில் வந்தாலும் அவர் எவ்வளவு ஆன்மீகத்தின் அனுபவியாக இருக்கிறார் என்பது அவருடைய எண்ண அலைகள் மூலமாக உடனேயே தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். எத்தனை சதவிகிதத்தில் ஆன்மீக நிலையில் நிலைத்திருப்பவர் என்று சதவிகிதத்தின் அறிதலும் சுலபமாகவே தெரிய வந்து விடும். எப்படி அறிவியலின் இயந்திரங்கள் மூலமாக சதவிகிதம் தெரிய வந்து விடுகிறதோ, அது போலவே அமைதியின் சக்தி மூலமாக அதாவது ஆத்மாவின் நிலை மூலமாக இதுவும் தெரிய வந்து விடும். இதைத் தான் பகுத்தறியும் சக்தி என்று கூறுவது. சம்ஸ்காரங்கள் மூலமாக, வார்த்தை மூலமாக மற்றும் நடத்தை மூலமாக பகுத்தறிவது என்பது பொதுவான விஷயம், ஆனால் எண்ணங்களின் அலைகள் மூலமாக பகுத்தறிவது என்ற இதைத் தான் பகுத்தறியும் சக்தி என்று கூறுவது. புரிந்ததா? இது தான் மகாரதிகளின் பகுத்தறியும் சக்தி, இந்த சக்தி எப்பொழுது இவ்வளவு அதிகரிக்குமோ அப்பொழுது யாராவது எதிரில் இல்லாவிட்டாலும் கூட ஆனால் வருபவராக இருந்தாலும் மற்றும் தூரத்திலிருந்தாலும் ஆனால் தூரத்திலிருந்த போதிலும் பகுத்தறியும் சக்தியின் ஆதாரத்தினால் எப்படி எதிரில் இருப்பவரை பகுத்தறியப்படுகிறதோ அதே போல் அவரையும் பகுத்தறிய முடியும். இதைத்தான் வேறு வார்த்தைகளில் சக்திகளின் சித்தி என்று கூறப்பட்டது. இந்த சித்தி பிராப்தியாகும். எப்படி

# 1975 அவ்யக்த முரளி

ஆத்ம ஞானிகளுக்கு யாராவது வாயினால் எந்த வார்த்தையும் சொல்லாவிட்டாலும் அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்று புரிந்து கொள்ள முடியும் என்ற இந்த சித்தி இருக்கிறது. என்ன செய்யக்கூடியவர் என்பதை முன்பாகவே தெரிந்து விடுவார்கள். அப்படி இங்கேயும் இந்த பகுத்தறியும் சக்தி, சித்தியின் ரூபத்தில் பிராப்தி ஆகும் ஆனால் இந்த சக்திகளை யதார்த்த முறையில் மட்டும் காரியத்தில் கொண்டு வர வேண்டும் -வீணாக இழக்கக்கூடாது வீணான காரியத்தில் ஈடுபடுத்தக் கூடாது. பின்பு இந்த சித்தி மற்றும் சக்தி, மிகுந்த நன்மை காரியம் நடப்பதற்குக் காரணமாகி விடும். இந்த நிலையும் வரும். அதைப் பார்த்து அனைவர்களின் வாயிலிருந்து சக்திகளின் மகிமையாக பக்தியில் என்ன கூறுகிறார்களோ "நீங்கள் இதுவாகும். நீங்கள் இதுவாகும்" என்ற இந்த அனைத்து மகிமையும் முதலில் பிரத்யக்ஷ ரூபத்தில் இருக்கும், அது பின்பு நினைவுச்சின்னமாக வந்து கொண்டே இருக்கும். இந்த நிலை வர வேண்டும் ஆனால் கொஞ்ச காலத்திற்காக மேலும் கொஞ்சம் பேர்களுக்காக, கொஞ்சம் பேர்களுக்காக என்று ஏன் கூறுகிறோம் என்றால் யார் கடைசி வரை இருப்பார்களோ அவர்களுக்கு இந்த அனைத்து காட்சிகளும் பார்ப்பதற்கு மற்றும் அனுபவம் செய்வதற்கு பிராப்தியாகும். கடைசி வரை விரல் கொடுப்பதற்கான பங்கும் அந்த மாதிரி சக்திகளில் இருக்கும் இல்லையா? சக்தி மற்றும் பாண்டவர்கள் ஆனால் சக்தி சொரூபமாக இருப்பார்கள், பலஹீனமானவர்களாக இருக்க மாட்டார்கள். முற்றிலும் சேர்ந்தே இருக்கும். ஒருபக்கம் ஐயோ. ஐயோ என்ற அலறல் மற்றும் இன்னொரு பக்கம் வெற்றி முழக்கம். இதுவும் மிக அதிக அளவில் மேலும் அதுவும் மிக அதிக அளவில் இருக்கும். நல்லது.

**வரதானம்: நினைப்பது, சொல்வது மற்றும் செய்வது இந்த மூன்றையும் சமமாக ஆக்கக்கூடிய தந்தைக்குச் சமமான சம்பன்னமானவர் ஆகுக!**

இப்பொழுது அனைத்து குழந்தைகளையும் பாப்தாதா சமமானவராகவும் சம்பன்னமானவராகவும் பார்க்க. விரும்புகிறார். சம்பன்னம் ஆவதற்காக நினைப்பது, சொல்வது மற்றும் செய்வது மூன்றும் சமமாக இருக்கட்டும். இதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறீர்கள், நினைக்கவும் செய்கிறீர்கள், இச்சையும் இதுவாகத் தான் இருக்கிறது, ஆனால்

எப்பொழுது மற்ற அனைத்து இச்சைகளிலிருந்து இச்சை என்றால் என்னவென்று தெரியாத நிலை உள்ளவராக ஆவீர்களோ அப்பொழுது தான் இந்த இச்சையும் நிறைவேறும். சின்ன சின்ன அனேக விதமான இச்சைகள் தான் இந்த ஒரு இச்சையை நிறைவேற விடுவதில்லை.

**சுலோகன்: அவ்யக்த மற்றும் கர்மாதீத் நிலையின் அனுபவம் செய்ய வேண்டும் என்றால் சொல்வது, செய்வது மற்றும் நடந்து கொள்வதை சமமாக ஆக்க வேண்டும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.12.1975 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாவீர் என்றால் விசேஷ ஆத்மாக்களின் விசேஷங்கள்!

மகாரதி என்றால் மகாவீரர்களின் குழு. மகாவீர் என்றால் விசேஷ ஆத்மா. அத்தகைய மகாவீர், விசேஷ ஆத்மாக்களுடைய குழுவின் விசேஷங்கள் என்னவாக இருக்கும்? ஒரே நேரத்தில் எல்லோருக்கும் ஏக்ரஸ், உறுதியான ஸ்திதியாக தற்சமயம் விசேஷ ஆத்மாக்களின் விசேஷமாக இருக்க வேண்டும். அதாவது எவ்வளவு நேரம், எந்த ஸ்திதியில் இருக்க வேண்டுமா, அவ்வளவு நேரம், அந்த ஸ்திதியில் குழுவின் ரூபத்தில் நிலைக்க வேண்டும் -குழுவின் ரூபத்தில் அனைவருடைய சங்கல்ப ரூப விரலும் ஒன்றாக இருக்க வேண்டும். எதுவரை குழுவில் இந்த பழக்கம் இல்லையோ, அதுவரை வெற்றி கிடைக்காது. வெற்றியின் ஞானம் உள்ளது ஆனால் சொரூபத்தில் வரவில்லை. உத்தரவு கிடைத்தது, உடனே தயார். விசேஷமாக நிமித்தமாகியுள்ள விசேஷ ஆத்மாக்கள் இதை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இப்போது ஐந்து நிமிடத்திற்காக, வீண் சங்கல்பங்கள் முழுவதும் முடித்து விட்டு விதை ரூபத்தில் சக்திசாலி ஸ்திதியில் ஒரே மனநிலையில் நிலைத்து விடுங்கள் என்ற உத்தரவிட்டால்? -இத்தகைய பயிற்சி தேவை? சிலர் சிந்தித்து கொண்டு, சிலர் ஆன்மீக உரையாடல் செய்து கொண்டு, சிலர் அவ்யக்த ஸ்திதியில் இருப்பது என இப்படி இல்லை. விதை ரூபம் ஆக வேண்டும் என்பது கட்டளை ஆனால் செய்வதோ ஆன்மீக உரையாடல் என்றால் கட்டளையை ஏற்கவில்லைதானே. முதலில் வீண் சங்கல்பங்களை முடிக்கும்போது இந்த பயிற்சி செய்ய முடியும். குழப்பம் உண்டாவதே வீண் சங்கல்பத்தால்தான். எனவே குழு சக்திசாலியாகவும், ஒரு வழிப்படி நடப்பதற்காகவும் மற்றும் வீண் சங்கல்பத்தையும் முடித்து விடுவதற்காகவும் எந்த சக்தி வேண்டும்?

இதற்காக ஒன்று நம்பிக்கை மற்றும் உள்ளடக்கும் சக்தி தேவை. குழுவை ஒன்று சேர்க்கும் நூல்தான் நம்பிக்கை! யாராவது ஏதாவது செய்தாலும்,

தவறு செய்தாலும்கூட, ஆனால் குழுவின்படி அல்லது தனது சம்ஸ்காரங்களின்படி அல்லது நேரத்தின்படி அவர் செய்ததற்கும் நிச்சயமாக ஏதாவது ஒரு நோக்கம் இருந்திருக்கும். குழுவாக எங்கு சேவை உள்ளதோ அங்கு அவருடைய சமஸ்காரங்களையும் இரக்க மனதின் பார்வை மூலம் பார்த்தபடியே, சமஸ்காரங்களை முன்னால் வைக்காமல் இதிலும் ஏதோ நன்மை இருக்கும் மற்றும் அவருடன் சேர்ந்தே செல்வதில்தான் நன்மை உண்டு, என இத்தகைய நம்பிக்கையுடன் குழுவில் ஒருவர் மற்றவருடன் இணைந்தே செயல்படும் போதுதான் வெற்றி ஏற்பட முடியும். ஆரம்பத்திலிருந்தே வீண் எண்ணங்களை உருவாக்கக் கூடாது. எப்படி யாராவது தனது தவறை உணர்ந்தாலும் ஆனால் அதை ஒருபோதும் பரப்பாமல் ஆனால் அதை உள்ளடக்கி விடுகிறார். வேறு யாராவது அதைப் பரப்பினாலும் நன்றாக இருக்காது. இவ்விதமாக பிறரது தவறையும் தனது தவறு என நினைத்து பரப்பாமல் இருக்க வேண்டும். வீண் சங்கல்பம் எழக் கூடாது ஆனால் அதையும் உள்ளடக்கி விட வேண்டும். சிநேகத்தின் சக்தி மூலம் சரி செய்து விட வேண்டும். எப்படி லௌகீகத்திலும்கூட வீட்டு விஷயங்களை வெளியில் சொல்வதில்லை, இல்லையேல் இதனால் குடும்பத்திலும் குழப்பம் உண்டாகி விடுகிறது. எனில் குழுவிலும்கூட உடன் இருப்பவர் ஏதாவது செய்து விட்டால் அதில் நிச்சயம் ரகசியம் இருக்கும், ஒருவேளை அவர் தவறே செய்திருந்தாலும்கூட, அதை மாற்றம் செய்து விட வேண்டும். இந்த இரு வித நம்பிக்கைகளையும் வைத்து ஒருவர் மற்றவருடைய தொடர்பில் செல்வதால், குழுவிற்கு வெற்றி கிடைக்கும். இதில் உள்ளடக்கும் சக்தி அதிகம் தேவை. வீண் எண்ணங்களை உள்ளடக்க வேண்டும். நடந்து முடிந்த சம்ஸ்காரங்களை ஒருபோதும் நிகழ்காலத்துடன் சரி பார்க்கக்கூடாது, அதாவது 'பாஸ்ட்'ஐ (past) 'பிரசன்ட்' (present) ஆக்கக் கூடாது! எப்போது இவ்வாறு செய்கிறீர்களோ, அப்போது எண்ணங்களின் வரிசை நீண்டு விடுகிறது மற்றும் எது வரை இந்த வீண் சங்கல்பங்களின் வரிசை உள்ளதோ, அது வரை குழு ரூபத்தில் ஏக்ரஸ் நிலை ஏற்படவே முடியாது.

பிறரது தவறு மூலம் தனது தவறை உணர்வது -இதுதான் குழுவை உறுதியாக்குவது என்பதாகும். எப்போது ஒருவர் மற்றவர் மீது நம்பிக்கை வைக்கிறாரோ அப்போது இது சாத்தியமாகும். மாற்றம் செய்வதற்கான நம்பிக்கை அல்லது நன்மை செய்வதற்கான நம்பிக்கை! எப்படி

ஆத்ம-ஞானிகளுடைய ஸித்திகளுக்கு மகிமை உள்ளதோ, அது போல உங்கள் அனைவரது குழுவிலும் ஒரே சங்கல்பம் இருக்கட்டும். ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட ரூபத்தில் சங்கல்ப சக்தி இல்லாததால் அவை கெட்டுப் போகின்றன. கெட்டுப்போன சக்தியின் விளைவும் கெட்டுப் போய்தான் இருக்கும். இதில் உள்ளடக்கும் சக்தி அவசியம் தேவை. பார்த்தும், கேட்டும் இருப்பீர்கள் -அதை முற்றிலுமாக உள்ளடக்கி விட்டு, உடனே ஆத்மீக பார்வை மற்றும் நன்மையின் பாவனை இருக்கட்டும். எப்போது அஞ்ஞானிகளுக்காக கூறுகிறீர்கள் -அபகாரம் செய்பவர்களுக்கும் உபகாரம் செய்யுங்கள் என! எனில் குழுவில் ஒருவர் மற்றவர் மீது இரக்க பாவனை வையுங்கள். இப்போது இரக்க பாவனை குறைவாக உள்ளது ஏனெனில் ஆத்மீக ஸ்திதியினுடைய பயிற்சி குறைவாக உள்ளது. அத்தகைய சக்திசாலியான குழுவாக இருந்தால்தான் வெற்றி கிடைக்கும். இப்போது நீங்கள் வெற்றியை அழைக்கிறீர்கள் ஆனால் பின்னர் உங்கள் முன் வெற்றி தானாகவே வந்து தலைகுனியும். எப்படி சத்யுகத்தில் இயற்கை தாசி ஆகி விடுகிறது, அதே போல வெற்றி உங்கள் முன் தலைகுனியும். வெற்றி உங்களை அழைக்கும்! எப்போது சிரேஷ்ட ஞானம் உள்ளது, நிலையும் சக்திசாலியாக உள்ளது என்றால், வெற்றி என்ன பெரிய விஷயம்? அல்ப காலத்தவருக்கு வெற்றி கிடைக்கிறது மற்றும் சதா கால ஸ்திதியில் இருப்பவர்களுக்கு வெற்றி கிடைக்காதா என்ன, இவ்வாறு ஒருபோதும் நடக்க முடியாது. எனவே குழுவின் சக்தி தேவை. ஒருவர் ஒன்று சொன்னார், மற்றவர் ஏற்றுக் கொண்டார். எதிர்க்கும் சக்தியை பிராமண பரிவாரத்தின் முன் உபயோகப்படுத்தக் கூடாது, அதை மாயாவிற்கு முன் உபயோகப்படுத்த வேண்டும். பரிவாரத்தில் எதிர்க்கும் சக்தியை உபயோகப்படுத்துவதால் குழு சக்திசாலி ஆவதில்லை. எந்த ஒரு விஷயமும் நல்லதாகப் படவில்லை என்றாலும்கூட ஒருவர் மற்றவருக்கு மரியாதை தர வேண்டும். அந்த நேரம் யாருடைய எண்ணம் அல்லது சொல்லையும் வெட்டி விடக்கூடாது. ஆதலால் இப்போது உள்ளடக்கும் சக்தியை தாரணை செய்யுங்கள்.

சாகார தந்தையைப் பார்த்தீர்கள்தானே. அதிகாரம் இருந்தும்கூட தந்தை குழந்தைகளுக்கு முன் சிறியவராகி விடுவார், படைப்புதான் -ஆனால் படைப்பாக இருந்தாலும்கூட குழந்தைகளிடம் மரியாதையான வார்த்தைகளையேக் கூறினார். எப்போதும் யாரையும் எதையும்

சொன்னதில்லை, அதிகாரம் இருந்தபோதிலும் அதிகாரத்தை அவர் உபயோகப்படுத்தவில்லை என்றால் தங்களுக்குள் சகோதரன்-சகோதரி என்ற தொடர்பு எப்படி இருக்க வேண்டும்? குழு ரூபத்தில் பிராமணக் குழந்தைகள் உங்களுடைய தொடர்பினுடைய மொழியும் அவ்யக்த உணர்வுடன் இருக்க வேண்டும் -அதாவது பரிஷ்தா அல்லது ஆத்மாக்கள் ஆத்மாக்களுடன் பேசிக் கொண்டிருப்பதுபோல்! யாராவது சொல்லக் கேட்ட பிறரது தவறுகளை எண்ணத்தால்கூட சுவீகாரம் செய்யக்கூடாது மற்றும் செய்விக்கவும் கூடாது. எப்போது இத்தகைய ஸ்திதி இருக்குமோ அப்போதுதான் தந்தைக்கு குழுவின் மீது என்ன சுப விருப்பமுள்ளதோ, அது நடைமுறையில் சாத்தியமாகும். ஒருவழியின் நூலாக இருக்கட்டும் மற்றும் சம்ஸ்காரங்களும் அருகில் வரட்டும் -அப்போதுதான் மாலையும் அழகாக இருக்கும். மணி தனியானது அல்லது நூல் தனித்தனியானது என்றால் மாலை அழகாக இருக்காது.

இப்போது பிரத்யக்ஷதாவின் வருடத்தை கொண்டாடுவது மூலம் முதலில் தனக்குள் அல்லது நிமித்தமான சேவாதாரிகளுடைய குழு ரூபம் மூலம் இந்த சக்தியும் பிரத்யக்ஷம் ஆக வேண்டும். ஒருவேளை தனக்குள் இந்த சக்தி பிரத்யக்ஷம் ஆகவில்லை எனில் தந்தையின் பிரத்யக்ஷம் செய்வதில் எந்தளவு வெற்றி பெற விரும்புகிறீர்களோ அந்தளவு ஆக முடியாது. டிராமாவின்படி ஆக வேண்டும், அதுவோ ஆகியேத் தீரும் ஆனால் நிமித்தமாகியுள்ளவர்களுக்கு நிமித்தமானதன் பலன் தெரியட்டுமே, அது நடக்கவில்லை. விதி செய்து கொண்டுள்ளது. ஆதலால் குழு ரூபத்தில், அத்தகைய விசேஷ முயற்சியின் கொடுக்கல்-வாங்கல் மற்றும் நினைவு யாத்திரையின் நிகழ்ச்சி நடத்த வேண்டும். விசேஷ முயற்சி அல்லது விசேஷ அனுபவங்களை தங்களுக்குள் கொடுக்கல்-வாங்கல் நடக்கட்டும். இந்த மாதிரியான விசேஷ யோகத்தின் நிகழ்ச்சி நடந்து கொண்டே இருந்தால், பின்னர் பாருங்கள் விநாச ஜ்வாலை எப்படி பரவும் என்பதை. யோக அக்னி மூலம் விநாசத்தின் அக்னி எரியும். அதுவோ விநாச ஜ்வாலை, இதுவோ யோக ஜ்வாலை! ஜ்வாலை மூலம் ஜ்வாலை கொழுந்து விட்டு எரியும். உங்களுடைய யோகம் சாதாரண ரூபத்தில் இருந்தது என்றால் ஜ்வாலையும் கூட சாதாரணமாகத்தான் இருக்கும். குழு சக்திசாலியாகட்டும். எப்படி ஏதாவது ஒரு பொருள் செய்வதானால், அதில் தண்ணீர் வேண்டும், நெய் வேண்டும், உப்பு வேண்டும்,

இல்லையேல் அதைச் செய்ய முடியாது. அதே போல ஒவ்வொருவருக்குள்ளும் அவரவர் விசேஷம் உள்ளது ஆனால் இங்கோ எல்லா விசேஷங்களின் குழு வேண்டும், ஏனென்றால் நேரமும் இப்போது சவால் விட்டுக் கொண்டிருக்கிறது. நல்லது!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂